தொல்குடி வேட்டுவர்

வாழ்வும் வரலாறும்

தொகுதி -1

பதிப்பாசிரியர்கள் :

திரு.கோபிநாத் ஸ்டாலின்
முனைவர் கா.காமராஜ்,
மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன்
திரு.க.மல்லீஸ்வரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை,
ஈரோடு.

நூல் விவரக்குறிப்பு

நூல் தலைப்பு	:	**தொல்குடி வேட்டுவர் வாழ்வும் வரலாறும்** தொகுதி -1
பதிப்பாசிரியர்கள்	:	திரு.கோபிநாத் ஸ்டாலின் முனைவர் கா.காமராஜ், மருத்துவர் தே.வாழை பரமேஸ்வரன் திரு.க.மல்லீஸ்வரன்
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை- 600 113 தொலைபேசி எண்: 044-22542992
வெளியீட்டு எண்	:	**1164**
பதிவு எண் (ISBN)	:	978-81-983429-3-5
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2025
பயன்படுத்திய தாள்	:	70 ஜி.எஸ்.எம் என்.ஸ் தாள்
நூலின் அளவு	:	1/8 டெமி
எழுத்தின் அளவு	:	11 புள்ளிகள்
பக்க எண்ணிக்கை	:	460
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	500
விலை	:	ரூபாய் : 350
அச்சகம்	:	**ASX** பிரிண்டர்ஸ், சென்னை
பொருண்மை	:	**வேட்டுவர் வரலாறு**

கோபிநாத் ஸ்டாலின், எம்.ஏ.,
இயக்குநர் (கூ.பொ.)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

வேட்டை, வேளாண்மைக் காலம் முதல் சங்க காலம் வரையிலும் தமிழ்நாட்டு இலக்கியங்களிலும் வேட்டுவர்களைப் பற்றி வாழ்வியல் வரலாற்றுக் குறிப்புகள் பரவிக்கிடக்கின்றன. சங்க காலம் முதலாக விஜயநகர அரசர்கள் காலம் வரையிலும் வேட்டுவர் அரசர்கள் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பொ.ஆ. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்லாள இனய நாயக்க அரசன் தன் அரசுக்கு உள்பட வேளாளர் மக்களின் வனத்தைக் கருதி இராஜ வாய்க்கால் எனும் பெயரில் நீர்வழித் தடத்தை அமைத்துப் பல்லாயிரம் நிலங்களை வளமைப்படுத்தி உள்ளான்.

மாண்புமிகு தமிழ் நாட்டு முதலமைச்சர் திரு.மிகு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அல்லாள இனயை நாயக்கரின் சமூகப் பணிகளை அறிந்து 14-01-2025 தை நாள் 1-ஆம் நாள் அரசு விழாவாக நடத்தப்படும் என்று ஆணையை வழங்கி, தமிழ் நாட்டு வரலாற்றில் பெரு முத்திரைப் பதித்துள்ளார். அவர்களுக்கு நிறுவனத்தின் சார்பாகப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பழங்குடிகள் குறித்த ஆய்வேடுகளையும் வழங்கி உள்ளது. மேலும், கருத்தரங்குகளையும் நடத்திச் சிறப்பைச் சேர்த்துள்ளது. ஈரோடுஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையினர், தங்கள் கல்வி நிறுவனத்தில் 25-ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், வேட்டுவ அரசன் அல்லாள இனைய நாயக்கன் அவர்களின் பெயரில் நடத்தப்பெற இருக்கும் முதல் அரசு விழாவில் தொல்குடி வேட்டுவர் வரலாறும் வாழ்வியிலும் எனும் பொருண்மையில் ஊஞ்சலூரில் ஒரு கருத்தரங்கம் நடத்த இருப்பதாகவும் தெரிவித்தனர். வேட்டுவர் குறித்து மட்டும் ஒரு கருத்தரங்கம் நடைபெற வேண்டுமென அவர்களின் ஆர்வத்தை அறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

அண்மைக் கால பல ஆய்வுகளில் இந்த ஆய்வும் விழாவும் அதையொட்டி ஆய்வாளர்களின் கட்டுரைகளின் தொகுப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலமாக வெளியிடவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

எண்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எதிர்ப்பாக்கிறோம் என்றனர் தற்பொழுது 100 கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன. அக்கட்டுரைகளைத் தொகுப்பாக நிறுவனத்தின்மூலம் வெளியிட அனுமதி அளித்த தமிழ் நாட்டு தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு நன்றி.

இக்கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியீட அனைத்து முயற்சிகளையும் சிறப்பாகச் செய்த நிறுவனப் பணியாளர்கள், நூலின் மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் திரு. காமராசு அவர்களுக்கு கணிப் பொறியாளர் திரு... ஆகியோர்களும் என் நன்றிகள் இத்தொகுப்பை அழகுற அச்சிட்டு அளித்த........ அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

மாணவர்களும், பழங்குடி ஆய்வு ஆர்வலர்களும் படித்துப் பயன் பெற வேண்டும்.

முத்தமிழறிஞர் அவர்கள், தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்நாட்டின் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டிருந்த அன்பும் கருணையும் அளப்பரியது. அந்தவகையில், தமிழ் வளர்ச்சிக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்த தமிழ்நாட்டின் மேனாள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றியைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழ் மீது அளவற்ற அன்பும், ஆழ்ந்த அறிவும் கொண்டு, தமிழ் வளர்ச்சித் துறை மூலமும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூலமும் எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமான திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்தி வரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு வே. ராஜாராமன் இ.ஆ.ப மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்களுக்கும் என் இனிய நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இயக்குநர் (கூ.பொ)

வாழ்த்துரை

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக்குடி வேட்டுவர் போர்க்குடி. வேட்டுவர் குடியானது அரசு உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தது. இவர்கள் ஆநிரை கவர்தல் ஆநிரை மீட்டல் எயில் காத்தல் போன்ற வீரச் செயல்களை தொல்காப்பியர் காலத்தில் இருந்தே வீரமுடனும், தீரமுடனும் செயல்பட்டு வாழ்ந்து வருகின்றனர் இந்த நிகழ்வில் உயிர் நீத்தோர் புகழை நிலைபெறச் செய்ய நடுகல்நட்டு வழிபடத் தொடங்கினர். இந்த வழிபாட்டு முறை வளர்ந்து ஐயன் கருப்பணசாமி என்ற குலதெய்வமாக வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சி போர்த் தெய்வமான கொற்றவைத் தெய்வத்தையும் இணைக்கும் குலதெய்வ வழிபாடாக கொங்கு மண்ணில் வேட்டுவர் வழிபட்டு வந்தனர். மக்களிடையே நாகரிக வளர்ச்சி அடையத் தொடங்கியது சிறுகுடித் தலைவன் வேளீர்சிற்றரசன் அரசர் வேந்தன் என்று வளர்ச்சி அடைந்தனர். தமிழ்நாடு 5 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு சேர, சோழ, பாண்டிய தொண்டை மண்டலங்கள் மற்றும் கொங்கு மண்டலங்கள் என்று உருவானது சேர, சோழ, பாண்டியர் மற்றும் பல்லவர்கள் பெரும் வேந்தர்களாக உருவான நிலையில் கொங்கு மண்டலத்தில் வேட்டு அரசர்கள் ஆட்சி செய்த பல்வேறு கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் போன்றவை கிடைக்கபட்டுள்ளன. மேலும் சங்க இலக்கியங்களில் பூர்வ குடியான வேட்டுவர்களைப் பற்றி எண்ணற்ற தரவுகளைக் கொண்டுள்ளன. இதில் வல்வில் ஓரி, அதியமான், கடிய நெடுவேட்டுவன், கண்டிரம் கோ பெருநள்ளி, போன்றோர் சங்க கால அரசர்கள் ஆவார்கள். மேலும் திருப்பாண்டிக் கொடுமுடி, வெஞ்சமான், அல்லளா இளைய நாயகன், பல்லவராயன், அப்பிச்சிமார் காவியத்தின் தலைவரான ராஜ ராஜேந்திரமாராயன் என்கின்ற அப்பிச்சி மாராயன் போன்றோர் கொங்கு மண்டலத்தை ஆட்சி செய்த வேட்டுவ அரசர்கள் இவர்கள் அனைவரும் சிவபக்தர்கள் ஆவார்கள். இவர்களின் கல்வெட்டு செப்பேடு போன்றவை எண்ணற்று உள்ளன. இதில் கொங்கு வேட்டுவ அரசர்களின் சைவ சமய வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளை செப்பேடு வழியாக நாம் அறிய முடிகிறது.

தொல்குடி வேட்டுவர் மொழியை உருவாக்கினார்கள்; பாறை ஓவியங்கள் மூலம் எழுத்தை உருவாக்கினார்கள், வானசாத்திரங்கள் இரும்பு மற்றும் உலோகங்களைக் கண்டறிந்தனர்; போர்க் கருவிகள் கண்டறிந்தனர். விவசாயம் மற்றும் நீர் மேலாண்மையை உருவாக்கி விவசாயத்தில் புரட்சி செய்தனர். அரசு உருவாக்கி உணவு வழங்குதல் வரி வசூலித்தல் மக்களைப் பாதுகாத்தல் என பன்முகத் தன்மையுடன் வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதனைத் தனது ஆய்வுக் கட்டுரைகள் மூலம் வெளிக்கொண்டு வந்த அனைத்துக் கட்டுரையாளர் களுக்கும் நன்றியும் வாழ்த்துக்களும். வேட்டுவ அரசர்கள் கன்னியாகுமரி முதல் வேங்கடம் வரை சிறப்பாக ஆட்சி செய்து வந்தார்கள் என்பதை கட்டுரைகளில் பேராசிரியர்களும், ஆராய்ச்சி மானவர்களும் தெளிவாக விளக்கி உள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த வேட்டுவர் வாழ்வும் வரலாறும் என்ற ஒரு நாள் கருத்தரங்கு நடத்த வேண்டும் என்று ஆனந்தபுரம் கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களிடம் கேட்டுக்கொண்ட போது அவர் சிறிதும் தயக்கம் இன்றி உடனே உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு திரு. கோபிநாத்ஸ்டாலின் ஐயா மற்றும் முனைவர் கா.காமராஜ் ஐயா ஆகிய இருவருடனும் பேசி அவர்களைச் சந்திக்க அனுமதி பெற்று கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை நிர்வாகக் குழு உறுபினர்களைச் சென்னைக்கு அழைத்து சந்திப்புக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். தொல்குடி வேட்டுவர்களின் வாழ்வியல் மற்றும் வரலாற்றுச் செய்திகளை உலக அரங்கில் கொண்டு செல்லும் வகையில் இந்தக் கருத்தரங்கிற்கு அனுமதி அளித்து ஆதரவு கொடுத்த ஐயா திரு.கோபிநாத் ஸ்டாலின் மற்றும் பேராசிரியர் முனைவர் கா. காமராஜ் ஐயா இருவருக்கும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை சார்பாகவும் வேட்டுவர் டிவியின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸ்ரீ கண்ணப்பர் அறக்கட்டளைத் தலைவர் மருதுவர் மயிலேறு ரவீந்திரன், செயலாளர் ஐ.கே.சுப்பிரமணியம், பொருளாளர் ராமசாமி, துணைத் தலைவர் பழனிசாமி கவுண்டர், மேலும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி மடல் ஆசிரியர் மல்லிஸ்வரன் சிவானந்தம், கண்டியன்னன், தங்கவேலு மற்றும் முனைவர் ப.சசிகலா, திரு.எழில்வாணன் முனைவர் மு. கருப்புசாமி, முனைவர் குமாரசாமி, திரு.வடிவேலு ராமசாமி, வரலாற்று ஆசிரியர் திரு.ராஜசேகர் தங்கமணி, அடசப்பாளையம் திரு. சந்திரசேகர்,

திரு. கோவிந்தராஜ் ஆகியோருக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைக் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தச் சிறப்புமிக்க வரலாற்று நிகழ்வைப் பதிவு செய்த வேட்டுவர் டி.வி. மற்றும் vettuvar.com ஆகிய நிர்வாகத்திற்கும் ஆரம்ப வசதி செய்து கொடுத்த திருமதி. வேணுகாதேவி அவர்களுக்கும் எங்களது நன்றி கலந்த வணக்கத்தையும், வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல் ஆணித்தரமாகக் கருத்துக்களை எடுத்துரைத்த ஆய்வாளர் பெருமக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி!

செல்வத்தின் பயன் ஈதலே என்பது போல் கல்வியின் பயன் யாது? தாம் கற்றதை, கேட்டதை, பார்த்ததை, அனுபவித்ததை ஒரு சேரக் கொண்டு கற்றவரும், மற்றவரும் பாராட்டும் வண்ணம் எடுத்துரைக்க வேண்டும்; எடுத்துச்சொல்ல வேண்டும். அதுதான் கற்றதன் பயன். எனவே இந்த நூல் சமுதாய ஆர்வலர்கள், வரலாற்று ஆய்வாளர்களின் இல்லங்களில் எல்லாம் சென்று அலங்கரிக்க வேண்டும். மேலும் கருத்தரங்கு தேசியக் கருத்தரங்காக நடத்த திட்டமிட்டோம் ஆனால் வெளிநாடுகளில் இருந்தும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு பன்னாட்டு கருத்தரங்காக மாற்றம் பெற்றதில் எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

50 கட்டுரைகள் வரும் என எதிர்பார்த்தோம். ஆனால் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வந்து எங்களைத் திக்கு முக்காடச் செய்து விட்டார்கள் அறிஞர் பெருமக்களுக்கும் இக்கருத்தரங்கு சிறக்க உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி! அவர்களுக்கும் விழாகுழு சார்பாக நெஞ்சார்ந்த நன்றி!

வாழ்த்துக்களுடன்,

மருத்துவர் வாழை பரமேஸ்வரன் M.D..

நிறுவனர். வேட்டுவர் டி.வி.

வாழ்த்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை மற்றும் ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை ஈரோடு இணைந்து நடத்தும் தொல்குடி வேட்டுவர் வரலாறும் வாழ்வியலும் பற்றி ஒருநாள் கருத்தரங்கம், காவிரியில் தடுப்பணை கட்டி ராஜவாய்க்கால் வெட்டிய மாமன்னன் அல்லாள இளையநாயக்கரின் பிறந்தநாள் விழாவை அரசுவிழாவாகக் கொண்டாடும் 14.01.2025, தைத்திருநாளில் நடைபெற உள்ளது என்பது எவ்வளவு பெரிய விடயம். நினைக்க, நினைக்க மகிழ்ச்சி பொங்குகிறது.

வேட்டுவர் பற்றிய ஆராய்ச்சிகளை சமூக அக்கறையுடன் தங்கள் நாவும், பேனாவும் சுழன்று கட்டுரைகளை அனுப்பிய அறிஞர் பெருமக்களை ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை இருகரம் கூப்பி வணங்குகிறது.

ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளையுடன் கைகோர்த்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கருத்தரங்கம் நடத்துவதில் பெருமிதமும், பேரானந்தமும் கொள்கிறோம். எங்கள் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

வணக்கம்.

C.மயிலேறு ரவீந்திரன்
தலைவர். ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை

பொருளடக்கம்

1. பழங்குடியும் வேட்டுவர் வாழ்வும் 15
- சு.கோபாலகிருஷ்ணன்

2. தொல்தமிழரின் வேலன் வெறியாட்டு வழிபாடு
மற்றும் சேயோன் வழிபாடு - ஓர் ஆய்வு 21
- முனைவர் ப.மு.கண்ணன்

3. சங்க இலக்கியத்தில் வேட்டுவர் 30
- முனைவர் மு.லோகநாயகி

4. ஜவ்வாது மலை - வேட்டுவ வழிபாடு 36
- ஆசிரியர் க.ஜெய்சங்கர்

5. வேட்டுவர் வாழ்வும் ஆளுமையும் 43
- முனைவர் கி.ராம்கணேஷ்

6. வேட்டுவர்களின் நீர் மேலாண்மை 51
- ஆர். சுப்ரமணி

7. அந்துவன் ஆண்ட வடகரை நாட்டின் அந்தியூர் 69
- ஏ.கே. சந்திரசேகரன்

8. பாலைத் திணைக்குடியின் வேட்டுவர் வாழ்வியல் 80
- **முனைவர் ந. வெண்ணிலா**

9. சங்க இலக்கியங்களில் வேட்டுவர் வாழ்வியல் 89
- **முனைவர் வ. மணிகண்டன்**

10. சங்ககால வேட்டுவர் இனக்குழுச் சமூகம் 103
- முனைவர் ந. அறிவரசன்

11. கல்வெட்டில் வேட்டுவர்கள் 111
- **பதிப்புத் தென்றல் புலவர் அ. பழனியப்பன்**

12. சங்க இலக்கிய குறிஞ்சித்திணையில் வேட்டுவர்கள் வாழ்வியல் 116
- **தி. தருண்சர்மா**

13. பெரியபுராணம் காட்டும் காளத்திமலை வேட்டுவர்களின் வாழ்வியலில் சங்ககாலப் பண்பாட்டு நீட்சி 126
- **ச.வாசுதேவன்**

14. வீரமும் விருதும் பெற்ற வேட்டுவ சமுதாயம் 141
- **முனைவர்த.சங்கீதா**

15. கொங்கு நாடும் வேட்டுவர் வரலாறும் 152
- **மு. காவ்யா**

16. வேட்டுவ மக்களின் கலைக்கூறுகள் 156
- **திருமதி சு.சாந்தி**

17. கண்ணப்பரின் சிவன் சிலை வடிவானவரே 160
- **காவடி மு.சுந்தரராஜன்**

18. கல்வெட்டுகளின் வழி அறியலாகும் வேட்டுவ மக்களின் வாழ்க்கை வரலாறு 164
- **முனைவர் சு. சிவசந்திரகுமார், ம.சௌந்தர்யா**

19. குற்றாலக் குறவஞ்சியில் வேட்டுவர் 171
- **பா.மோகனா**

20. குறுந்தொகையில் வேட்டுவர்கள் 176
- **முனைவர் அ. ஸ்ரீ ஜனனி**

21. கம்பர் காட்டும் வேடர்குலச் செம்மல் குகன் 180
- **முனைவர் சு. அட்சயா**

22. நடுகல் : சோழர் காலமும் வேட்டுவர் கல்லும் 189
- **மு. சத்தியா**

23. சங்க இலக்கியங்களில் வேட்டுவர் 195
- **திரு.மு.கோகுலசாமி**

24. சங்க இலக்கியத்தில் வேடர்கள் 201

- முனைவர் பெ.சங்குவதி

25. கருப்பொருள் மயக்கத்தில் வேட்டைத் தொழில் 206

- ச. தென்பாண்டி

26. பன்னிரு திருமுறைகளில் வேட்டுவர்
என்னும் சொல்லாட்சி **- பு.அரவிந்தபிரகாஷ்** 214

27. தலையநாடு - பட்டக்காரர்கள் வரலாறு 219

- க.ஆண்டமுத்து வள்ளல்

28. அரசத் தொழில் செய்த தமிழ் வேட்டுவக்குடியினர் 225

- ப.ஆனந்தகுமார்

29. இலக்கியத்திலும் ஆவணங்களிலும் வேட்டுவர் 237

- த. ஐஸ்வர்யபிரதினா

30. குறுந்தொகைக் குறிஞ்சியில் வேட்டுவர் 243

- சு.ஐஸ்வர்யா

31. சங்க இலக்கியத்தில் வேட்டுவர் 247

- செ. கயல்விழி

32. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கடைபிடித்த கல்யாண
நடைமுறைகள் 253

- முனைவர்மு.கருப்புசாமி

33. புராணங்களில் வேட்டுவர் 268

- வெ.கருப்பையா

34. சங்க இலக்கியம் காட்டும் வேட்டுவர் சமூகம் 272

- ப.காவியா

35. பெரியபுராணத்தில் சேக்கிழார் காட்டும்
வேட்டுவரின் வாழ்வியல் 276

- ச. சந்தோஷ்குமார்

36. மலேசியாவில் வேட்டுவர்கள் 282

- ச. சரவணன், டாக்டர். க.சுப்பிரமணியம்

37. அகநானூற்றில் வேட்டுவரின் தொழில்கள் 287

- முனைவர் இரா.சிவகுமார்

38. நாட்டுப்புறவியலில் வேட்டுவர்கள் 292

- **த.சினேகா**

39. சிலம்பில் காணலாகும் வேட்டுவர்களின் வாழ்வியல் 297

- முனைவர் பா.சீனிவாசன்

40. வேட்டுவக் கவுண்டரின மகளிர் நிலை 305

- கு. சுபத்ரா, பேரா. முனைவர் ம. சுந்தரமூர்த்தி

41. வேட்டுவக் குடிகளின் பெருமைகள் 311

- **முனைவர் கி. சுமித்ரா**

42. சங்க இலக்கியங்களில் வேட்டுவர்கள் 320

- மு.செல்வி

43. சங்க இலக்கியங்களில் வேட்டுவர் 325

- **சொல்லாக்கியன்**

44. வேட்டுவக் கவுண்டர்களின் புழங்கு பொருள்கள் 330

- **ர.தமிழ் தானூ, முனைவர்ம.சுந்தரமூர்த்தி**

45. வேட்டுவரின் பரிணாமமும் சங்க இலக்கியமும் 337

- **சு.தமிழ்ச்செல்வன்**

46. பெரியபுராணத்தில் வேட்டுவரின் வாழ்வியல் 341

- **ச.திரிஷா**

47. கம்பராமாயணத்தில் குகன் 346

- **முனைவர் ச.திவ்யபாரதி**

48. வேட்டுவரின் புலம் பெயர்வும் வாழ்வியலும் 351

இரா. நிவேதா

49. இலக்கியங்களில் வேட்டுவர் 355

- ப.நிவேதா

50. பழங்குடி வேட்டை வாழ்வியலில் பகிர்வுப் பண்பாடு 360

- முனைவர்வே. நெடுஞ்செழியன்

51. பக்தி இலக்கியங்களில் வேட்டுவர் 370

- புலவர் சோணா மதியழகன்

52. சங்க இலக்கியங்களில் வேட்டுவர் வாழ்வியல் 376

- முனைவர் கொ.பரிமளம்

53. புறநானூறு கூறும் வேட்டுவக் கடையெழு வள்ளல்களின் வீரம் 381

- செ. பிரபாகர்

54. வேட்டுவக் குலத்தின் பிரிவுகள் ஒரு பார்வை 386

- முனைவர் ஏ. பிரேமா

55. குறிஞ்சிக்கலியில் வேடுவர் 391

- ம.ரஞ்சிதா

56. இலக்கியங்களில் வேட்டுவர் தொழில்கள் 396

- முனைவர் மா. ரமாதேவி, திருமதி. சு. ஈஸ்வரி

57. கம்பராமாயணத்தில் வேட்டுவர்கள் 400

- செ.லைலா

58. புறநானூற்றில் வேட்டுவர் 405

- இரா.விக்னேஷ்

59. படைவீடு - நடுகற்களில் வேட்டுவர் வாழ்வியல் 411

- பா.விஜய்

60. நற்றிணையில் வேட்டுவர் வாழ்வியல் 416

- வெ.விஷ்ணு, முனைவர் இரா.சிவகுமார்

61. தொல்குடி வேட்டுவர்களின் வரலாறும் வாழ்வியலும் 422
- **முனைவர் சொ. அருணன்**

62. திருமுருகாற்றுப்படையில் வேட்டுவர் வழிபாடு 429
- **செல்வி ம.கங்கா**

63. தொல்குடி வேட்டுவர்களின் இன்றைய நிலை 434
- **ஞா. பூமிகா**

64. சிலப்பதிகாரத்தில் வேடுவர் 440
- **முனைவர் அ. யோகேஸ்வரி**

65. குறிஞ்சிநில வேட்டுவ மக்களின் உணவுகள் 445
- **சி. ஜீவா**

66. குறவஞ்சியும் வேட்டுவர் வாழ்வும் 451
- **முனைவர் ப.ஜெயசெல்வி**

67. ஐங்குறு நூற்றுக்குறிஞ்சித் திணையில் வேட்டுவர் வாழ்வியல் 456
- **ஆ. பாண்டிச் செல்வி**

பழங்குடியும் வேட்டுவர் வாழ்வும்

சு.கோபாலகிருஷ்ணன், எம்.ஏ.,எம்.எட்.,எம்.ஃபில்.,
முதுகலைத் தமிழாசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி,
கருவாக்குறிச்சி, மன்னார்குடி (தா),
திருவாரூர் மாவட்டம் -614 018.
அலைபேசி : 9750883557
மின்னஞ்சல்: akshyaakshya85@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பழங்குடிகள் என்பவர்கள் மனிதனின் படிநிலை வளர்ச்சிகளை அறிய உதவும் சான்றுகளாவார்கள். இவர்களே மிகவும் தொன்மையான ஆதிக்குடிகள் ஆவர். வழிவழியாகத் தங்களுக்கெனத் தனித்த உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் வாழ்பவர்கள் பழங்குடியினர். குறிஞ்சி நிலமான மலைப்பகுதியில் வாழும் மக்கள் மலை மக்கள், மலையகப் பழங்குடிகள் என்று வரையறை செய்யப்படுகின்றனர். குறிஞ்சித் திணைக் குடிமக்களைக் கானவர், குறவர், குறத்தியர், **வேட்டுவர்,** கொற்றர், கொற்றியர் என்றும், பாலை நில மக்களை மறவர் மற்றும் **எயினர்** போன்ற சொற்களால் சங்கத் தமிழ் நூல்கள் இனம் காட்டுகின்றன. அவ்வகையில் பழங்குடியும் வேட்டுவர் வாழ்வும் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

முன்னுரை

வேட்டைத் தொழிலை மேற்கொண்டவர்கள் வேடர்கள் அல்லது வேட்டுவர்கள் எனப்பட்டனர். மனித சமூகத்தின் முதல் உணவாதாரம் வேட்டையாகும். வேட்டுவ இனத்திலிருந்தே மனித இனம் படிப்படியாக வளர்ச்சியடைந்ததாகக் கூறப்படுகிறது. காட்டில், மலையில் வசித்த வேடர்கள் வேட்டையுடன் காடுகளில் கிடைக்கும் உணவுப் பொருட்களைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டனர். இவர்கள் உணவாகக் கிடைத்தவற்றை வேட்டையாடியுள்ளனர். சங்ககாலத்தில் வேட்டைத் தொழிலை மட்டுமே

செய்பவர்களாக எந்தக் குழுவும் இல்லை. வேட்டைத் தொழிலை வாழ்வாகக் கொண்டவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் வேட்டையைக் கடைபிடித்துத் தம் வீரத்தை நிலைநாட்டியுள்ளனர். வேட்டையாடு பவர்கள் எல்லாம் வேடுவர்கள் இல்லை. உணவாதாரத்திற்காக வேட்டையாடுபவர்களே வேடுவர்கள் ஆவர். திருவள்ளுவர், புதரில் மறைந்து கொண்டு வேடன் வலைவீசிப் பறவையைப் பிடிப்பது பற்றி 274 - ஆவது குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத்தில் வேட்டுவர்கள்

பன்னெடுங்காலமாகப் பழங்குடி மக்கள் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். சங்ககாலம், இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படுகிறது. காரணம் அப்போது தோன்றிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஆகிய பதினெண்மேல்கணக்கு நூல்களில் காணலாகும் அக்காலச் சமூகம் பற்றிய பதிவுகள் ஒவ்வொரு காலத்தும் தோன்றிய இலக்கியப் படைப்புகள் அந்தந்தக் கால மக்கள், அவர்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், வாழ்வியல் முறைகள் போன்றவற்றைக் காலம் தாண்டியும் உணர்த்தி நிற்கும் கருவூலமாய்த் திகழ்வதாகும். நமது சங்க இலக்கியங்கள் தமிழகத்தில் வாழ்ந்த பழங்குடியினர் அவர்தம் பண்பு, சமூக, பொருளாதார நிலை ஆகியவற்றை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. சத்தம் எழுப்பியும் கல் எறிந்தும் இணையாக உள்ள விலங்குகளைத் தனியே பிரித்து அதன்மீது அம்பெய்து அதனைக் கொல்லுவதும் வேடர்களின் தொழிற்கலையாகும். வேட்டைத் தொழிலைச் செய்வதற்கென்றே எப்பொழுதும் கையில் வில்லைக் கொண்டிருந்தவர்களை 'வில்லுடை வீளையர்' என்கிறது குறுந்தொகை.

வில்லுடை வீளையர் கல்லிடு பெடுத்த
நனந்தலைக் கானத் தினந்தலைப் பிரிந்த
புன்கண் மடமா னேர்படத் தன்னையர்
சிலைமாண் கடுவிசைக் கலைநிறத் தழுத்திக்
குருதியொடு பறித்த செங்கோல் வாளி - (குறுந்:272)

என்னும் பாடலில் வேடர்கள் மானை வேட்டையாடுவதற்கு வீளை என்னும் ஒரு வகை ஒலியை எழுப்பினர். வீளை என்பது சீழ்க்கை அல்லது விசில் எனப்படும் (குறுந்தொகை மூலமும் உரையும் ப.501).

'இன்சிலை ஏறுடை யினத்தா நாறுயிர் நவ்வி' என்னும் அகநானூற்றுப் பாடலடிகளால் ஒவ்வோர் உயிருக்கும் ஒவ்வோர் உறுப்பு அல்லது இடம் உயிர்நாடி என்பதைக் கண்டறிந்து அதன்கண் அம்பெய்து கொல்லுதல் வேடர்களின் இயல்பாகும் என்று குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் வேட்டுவன் யானைத் தந்தத்தின் உதவியோடு பொன்னைத் தோண்டி எடுத்ததாக இலக்கியம் கூறுகிறது. சங்க காலத்தில் வேடர்கள் யானைகளையும் வேட்டையாடியுள்ளனர் என்பதைக் கீழ்க்காணும் பாடலடிகளால் உணரமுடிகிறது.

இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன்
மராஅம் பொருந்திக் கோல்தெரிந்து
வரிநுதல் யானை யருநிறத் தழுத்தி - (அகம்:172)

பழங்குடியின வேட்டுவர்கள் முதலில் பெண் மான் ஒன்றைப் பிடித்து அதனை இளைப்பாறச் செய்து விளாமரம் அல்லது பலாமரத்தில் கட்டி வைப்பர். அந்த மானைக் காண ஆண்மான் வந்தபோது அதனை வேட்டையாடினார்கள் என்ற செய்தி புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. அவர்கள் பெண்மான் மற்றும் சினைமான் ஆகியவற்றை வேட்டையாடுவதில்லை. இதனால் அவர்களின் மனிதநேயத்தை அறியமுடிகிறது. வேட்டையாட இரவை விடப்பகலைப் பாதுகாப்பாகக் கருதினர். வீரத்திற்கும், அஞ்சாமைக்கும் பெயர்பெற்ற வேட்டுவர் இலக்கியங்களில் பாராட்டப்பெறுகின்றனர்.

வேட்டுவர் வாழ்வியல்

வேட்டுவர்கள் காடுகளிலும், மலைகளிலும் குழுவாகச் சேர்ந்து வேட்டையாடினர். விலங்குகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள மரத்தின் குன்றுகளுக்கு இடையில் வாழ்ந்து காலத்தைக் கழித்தனர். பாலைத்திணையில் வேட்டைத் தொழில் செய்து வாழ்ந்த மக்கள் எயினர், எயிற்றியர் என அழைக்கப்பட்டனர். இவர்கள் வேட்டைத் தொழிலை முதன்மையாகக் கொண்டவர்கள் என்பது சிலப்பதிகாரத்தின் வேட்டுவ வரியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கானகத்தில் வசிக்கும் வேட்டுவர்கள் தமக்கு வேட்டையில் வெற்றி கிடைக்கவேண்டும் என்பதற்காகக் கொற்றவையை வழிபட்டுள்ளனர். சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவையின் அடையாளமாக வாளை ஏந்திச் செல்பவள் வெள்வாளுழத்தி என்று குறிப்பிடப்படுகிறது. தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் பழையோள் என கொற்றவை குறிப்பிடப்படுகின்றது.

வேட்டுவர், போற்றி வணங்கிய பெண் தெய்வமாகிய கொற்றவையின் உருவ அமைப்பைச் சிலப்பதிகாரம் விரிவாக எடுத்துரைக்கிறது. இளங்கோவடிகள் மதுரைக் காண்டத்தின் இரண்டாவது காதையான வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாடு குறித்துத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். ஓய்மானாட்டுப் பாலை நில மக்களான வேட்டுவர்கள் இனிய புளிங்கறி எனப்படும் சோற்றையும் ஆமான் இறைச்சியையும் உண்டனர் என்பது பற்றியும் இவர்களின் விருந்தோம்பலைப் பற்றியும் சிறுபாணாற்றுப்படையின் கீழ்க்காணும் பாடலில் சிறப்பிக்கிறது.

எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் ஆட்டின் அமைவரப் பெறுகுவீர் - (சிறு:175-177)

வேட்டுவர், உணவைப் பிறருக்கு அளித்து விருந்தோம்பிய பண்பாட்டுச் சிறப்பு கொண்டு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை ஆற்றுப்படை நூல்கள் விவரிக்கின்றன. அவர்கள், சிலைமரத்தால் செய்த வில் மற்றும் அம்பை ஏந்தி சிவப்பு நிற ஆடையை அணிந்திருந்தனர் என்று ஐங்குறுநூறு கூறுகிறது. தாங்கள் சேகரித்த பொருட்களையும், வேட்டையாடிய விலங்குகளையும் அனைவருக்கும் பங்கீடு செய்து வழங்கினர். வேட்டுவர்கள் தன்னலமற்றவர்களாக வாழ்ந்துள்ளார்கள். காடுபடு பொருட்களில் சிலவற்றை அண்டைய சமநில மக்களுக்குக் கொடுத்து உப்பு, உடை, எண்ணெய் போன்ற பொருட்களைப் பண்டமாற்றாகப் பெற்றுக் கொண்டார்கள். பழங்குடிகள் உணவாதாரத்தைத் தேவைக்கு அதிகமாக ஈட்டுவது கிடையாது. அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டுமே சேகரித்தனர். உபரியோ, சேமிப்போ பெரிதும் வைத்திருக்க அவர்கள் விரும்பியதில்லை.

மிகத் தொன்மையான பழங்குடிகள் வேட்டையை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கவில்லை. சேகரித்தலையே முதன்மையாகக் கொண்டிருந்தனர். பெண்கள் காடுகளில் உள்ள கிழங்கு வகைகள், காய்கள், கனிகள், கொட்டைகள், மரப்பட்டைகள் போன்ற பொருட்களைச் சேகரிப்பர். உயரமான இடங்களில் உள்ள தேனைச் சேகரிப்பதில் ஆண்கள் ஈடுபட்டனர். பெண்கள் சேகரிப்பிலும், ஆண்கள் வேட்டையிலும் ஈடுபட்டனர். காட்டில் தாவர உணவுப் பொருட்களைச் சேகரித்த பெண்களே விவசாயத்திற்கும், ஆண்களின் வேட்டையாடுதல் விலங்கு வளர்ப்புக்கும் வழிகோலின. ஆதலால் ஆதி விவசாயி

பெண்களே என்பது இதன்மூலம் விளங்குகிறது. பெண்கள் பொருளாதாரத்திற்கு அடிப்படையாய் விளங்கினார்கள். இந்தப் பெண்கள் பயன்படுத்திய 'தோண்டுகழி' முதல் விவசாயக் கருவியாகும். உணவு உற்பத்தி என்பது பழங்குடியினரிடமிருந்து தொடங்கப்பட்டதாகும். ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டைத் தொழிலை மேற்கொண்ட வேட்டுவருள் பலர், சிலகாலம் சென்ற பின்னர் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்தனர். உணவு தேடும் நிலையை விட்டு உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினர். சமவெளிகளில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். இதுவே வேட்டுவர் வாழ்வில் நிகழ்ந்த மாபெரும் புரட்சி எனலாம். வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் வேட்டைத் தொழிலில் ஈடுபட்ட இவர்கள் இடைக்காலத்தில் வேளாண்மையில் நாட்டம் கொள்ளும் அளவிற்கு உயர்ந்தனர். இம்முன்னேற்றத்தால் பல வேட்டுவர்கள் வேட்டைத் தொழிலைக் கைவிட்டனர். ஆடுமாடு மேய்த்தலைக் கைக்கொண்டனர். சிலர் வேளாண்மையில் ஈடுபட்டு வாழலாயினர். இவர்களின் முன்னேற்றம் பற்றி எட்கார் தர்ஸ்ட்டன் தனது 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்ககாலத்தில் வேட்டுவர் குலத்தலைவர்கள் சிலர் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். அவர்களுள் கோடைமலைத் தலைவனான கடியநெடுவேட்டுவன், தோட்டிமலைத் தலைவனான கண்டீரக்கோப்பெருநள்ளி, கொல்லிமலைத் தலைவனான வல்வில் ஓரி ஆகியோர் புகழ் பெற்று விளங்கினர். இதனைச் சங்கப்பாடல்களால் அறியமுடிகிறது. இளவெயினனார், எயிற்றியனார், எயினந்தையார் மற்றும் எழு உப்பன்றி நாகன்குமரனார் போன்ற புலவர் பெருமக்கள் வேட்டுவக் குடிக்குப் பெருமை சேர்த்தனர். வேட்டுவக்குலப் பெண்பாற் புலவர்களுள் வெறிபாடியக் காமக்கண்ணியார், சுழாரர் சீரன் எயிற்றி ஆகியோர் சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர்.

சங்ககாலத்தை அடுத்து வெஞ்சமன் என்னும் வேட்டுவ அரசன் திருவெஞ்சமாக்கூடலைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்துள்ளான். ஆதித்தசோழ அரசன் வேடர்களை வென்று கொங்கு நாட்டைக் கைப்பற்றினான். கொங்கு நாட்டு மலைகளை ஆண்டவர்கள் வேடுவர்கள் என்று பக்தவத்சலபாரதி எழுதிய 'தமிழகப் பழங்குடிகள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றால் வேட்டுவர்கள் அரசர்களாக

இருந்ததை அறியமுடிகிறது. கொங்கு நாட்டில் சோழர் ஆட்சி மறைந்த பின்னர் பாண்டியரும், ஹொய்சாலரும் கொங்கு நாட்டை ஆட்சி செய்தனர். வேட்டுவ வீரர்களின் வில்லாற்றலால் அவர்கள் பாண்டியப் படைகளின் படை வீரர்களாகவும், படைத் தலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

வேட்டைத் தொழிலை மேற்கொண்ட வேட்டுவர்கள் பின்னர் காடுகளை அழித்து விவசாய நிலங்களாக மாற்றி வேளாண்மை செய்துள்ளனர். வேட்டையாடுதல், நாட்டைக் காத்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்ட வேட்டுவர்கள் ஊர்த்தலைவர்களாகவும், அரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும், படை வீரர்களாகவும், படைத்தலைவர்களாகவும் பல்வேறு காலகட்டங்களில் சிறப்புடன் வாழ்ந்தனர் என்பது தெளிவாகிறது.

முடிவுரை:

வேட்டுவர் வேட்டையாடி உணவு சேகரிக்கும் நிலையில் இருந்தபோதே சமத்துவச் சமூக முறையைப் பின்பற்றியுள்ளனர். கூட்டு வேட்டை, கூட்டாக உணவு தேடுதல், பாதீடு, பகிர்ந்துண்ணுதல் ஆகிய முறைகளைக் கொண்டிருந்தனர். இதனால் சமூகக் கட்டமைப்பில் அனைவரும் வாழ்வாதாரத்தைச் சமமாகப் பெறமுடியும். **'யாயும் ஞாயும் யாரா கியரோ'** (குறுந்தொகை:40), **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** (புறநானூறு:192) போன்றவை சங்க காலத்தில் அக வாழ்விலும், புறவாழ்விலும் சாதிகளற்ற நிலை காணப்பட்டதை இலக்கியங்கள் வாயிலாகத் தெளிவாகிறது. சாதிகள் இல்லை என்றும் குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்கிறார் மகாகவிபாரதியார். தமிழ்ச் சமூகத்தின் மிக நீண்ட அறுபடாத தொடர்ச்சியினை ஆராய்வதற்குப் பழங்குடிகள் பற்றிய ஆய்வு பெரும் பயன் விளைவிக்கும் என்பதை இளைய தலைமுறையினர் உணர்ந்து விருப்பத்தோடு ஈடுபட வேண்டும்.

துணைநூல்:

1. தமிழகப்பழங்குடிகள், பக்தவத்சல பாரதி, 2018.

தொல்தமிழரின் வேலன் வெறியாட்டு வழிபாடு மற்றும் சேயோன் வழிபாடு - ஓர் ஆய்வு

முனைவா ப.மு. கண்ணன்
அறிவியல் மற்றும் மனிதவியல் துறை,
அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகம்,
திருநெல்வேலி - 627 007
அலைபேசி: 9994726075
மின்னஞ்சல்: kaayalkannan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

சங்க கால இலக்கியங்களில் முருகு, முருகன், சேய், சேயோன், வேள், செவ்வேள், நெடுவேல் என்னும் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவையாவும் முருகனைக் குறிக்கும் சொற்களாகும். எனவே, தமிழரின் முருக வழிபாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொன்மை வாய்ந்த வழிபாடு எனக்கூற நம்மிடம் தெளிவான சான்றுகள் பல உள்ளன எனலாம். இதில் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுமுறை ‘வேலன் வெறியாட்டு’ ஆகும். இது சங்க காலத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முருகனுக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு வழிபாட்டு முறையாக அறியப்படுகிறது. இதனை, நாம் அறிந்து புரிந்து கொள்ள வேண்டுமெனில் வேலன் வழிபாட்டு முறைகளும் பண்பாட்டுத் தொடாபுகளும் ஆராயப்பட வேண்டும். இந்த வேலன் வெறியாடுதல் பற்றிய சங்க இலக்கிய நூல்களின் கூறுகள் விளக்கப்பட வேண்டும். இந்தத் தொல்தமிழரின் இறை நம்பிக்கையையும் அதைச் சார்ந்த சமூக வழக்கங்களையும் அது எவ்வாறு தற்கால முருக வழிபாடாக மாறியது என்பதையும் இக்கட்டுரை விளக்கியுள்ளது.

முன்னுரை

முருக வழிபாடு என்பது மிகப் பண்டைய காலத்திலேயே மக்களிடம் நிலவி வரும் ஒரு வழிபாடு ஆகும். இது இன்று நாம்

காண்கின்ற முருக வழிபாடு போன்றோர் சங்க இலக்கியங்கள் சித்திரிக்கின்ற வழிபாடு போன்றே இருந்திருக்காது என்பர். கி.மு. 3000-க்கும் கி.மு. 2500-க்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் மிகவும் உச்சத்தில் இருந்த சிந்துவெளி நாகரிகத்தில் "முருக வணக்கம்" நிலவியதாகக் கூறுவோரும் உண்டு. மேலும், தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பலனாக சிந்துவெளியில் முருக வழிபாடு நிலவியுள்ளது என்ற கருத்தை அறிஞர்கள் முன்னுரைக்கத் தொடங்குகிறார்கள்.

சங்க காலத்திற்கு முந்தைய பெருங்காலத்தில் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் முருக வழிபாடு நிலவியிருந்திருக்கிறது. இதற்கு ஆதாரங்களாக அமைவன நமது தொல்பொருள் சின்னங்களாகும். மெஞ்ஞானபுரம் நாகரிகத்தில் (காலம் கி.மு. 1500) கண்டெடுக்கப்பட்ட இரும்பினால் ஆன அம்பு நுனி, திரிசூலம் என்பனவும், ஆதிச்சநல்லூர் (காலம் கி.மு. 1150) அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட திரிசூலம், வேல் போன்றவையும், இலங்கையின் பொம்பரிப்பு, அனுராதாபுரம், பின் வேல கந்தோரடை, பூனகரி ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழ்வாராட்சியில் கிடைத்த 'வேல்' போன்றவற்றைக் கொண்டு அக்காலத்தில் முருக வழிபாடு நிலவியது எனக் கூறுவர். எனினும் சங்ககால இலக்கியங்களில்தான் முருகன் வழிபாடு பற்றிய தெளிவான தகவல்களைக் காணமுடிகிறது. சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்ற 'முருகு' அல்லது 'முருகன்' குறித்த செய்திகளும் வேலன் வெறியாடல், 'குரவையாடல்' முதலியனவும் இத்தகையன.

சங்க இலக்கியங்களில் வெறியாட்டு பற்றிய பாடல்கள் மொத்தம் 62 ஆகும். வெறியாட்டைப் பற்றி சிறப்பாகப் பாடிய புலவர் வெறியாடிய காமக்கண்ணியார் என்று அழைக்கப்பட்டார். ஐங்குறுநூற்றில் வெறியாட்டு பற்றிய பாடல்கள் 'வெறிப்பத்து' என்று அழைக்கப்பட்டது. இதுபோன்ற, தகவல்கள் அக்காலத்தில் வெறியாட்டு பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், சங்க இலக்கியங்களான திருமுருகாற்றுப்படை, பரிபாடல் ஆகிய நூல்களில் பொதிந்துள்ள முருகனைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டு முருக வழிபாட்டினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். பண்டைத் தமிழ் மக்கள் அகம் புறம் ஆகிய வாழ்வினை இறைவனை நினைத்தே மேற்கொண்டு வந்தனர் என்பது இவ்விலக்கியங்கள் உணர்த்தும் உண்மையாகும். எனவே, நம்

தமிழர்கள் வணங்கி, வளமும் வாழ்வும் பெறுவதற்கு உற்ற துணையாய் ஒளிர்ந்த தெய்வங்களையும் தெய்வங்கள் அடிப்படையாகக் கொண்டு எழுந்த அருஞ்செயல்கள் விழாக்கள், வழிபாடுகள் (வேலன் வெறியாட்டு) முதலியவற்றைச் சங்க இலக்கியங்கள் வாயிலாகக் காணலாம்.

தமிழ் மக்கள் மிகவும் தொன்மையான காலத்தில் இருந்து முருகனை வணங்கி வழிபட்டு வந்துள்ளனர். இதன் காரணமாகவே சங்க இலக்கியக் காலத்தில் உருப்பெற்ற மிகப் பழைய பாடல்களில் முருகனைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவற்றைத் தொகுத்து ஆராய்ந்து நோக்கினால் முருகனைப் பற்றிய வழிபாட்டுத்திறம், பக்தித்திறம் ஆகியன அக்காலத் தொல்தமிழாகளின் மனத்தில் பதிந்திருந்த பாங்கு நன்கு புலப்படும்.

முருக வழிபாட்டின் இரு வகைகள்

தொல்தமிழர்களிடையே நிலவி வந்த முருக வழிபாட்டினை இரண்டாக வகைப்படுத்தலாம். ஒன்று, தமிழ் மரபிற்குட்பட்ட தமிழ்ப் பண்பாட்டுத்தளத்தில் நிகழ்த்தப்பட்ட வழிபாடான முருக வழிபாடு. சங்க இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்ற 'முருகு' அல்லது 'முருகன்' குறித்த செய்திகளும் வேலன் வெறியாடல், குரவையாடல் முதலியனவும் இத்தகையன. இரண்டாவது, தமிழ் மரபும் வட இந்திய மரபும் இணைந்த முருகன் வழிபாடு. அதாவது, ஸ்கந்தனுக்கு உரிய ஆகம முறை சார்ந்த முருக வழிபாடு. சங்ககால இறுதிப் பகுதியில் முருக வழிபாட்டில் வைதீக மரபுகள் சேர்ந்தன. சிவசக்தி ஆகியோரின் மகனாக முருகன் உருவாகுவதும் தெய்வானையை முருகன் திருமணம் செய்வதும் முருகன் சுப்பிரமணியனாகவும் கார்த்திகேயனாகவும் அறிமுகப் படுத்துவதாக மாறின. இவ்விரண்டு வழிபாட்டு முறைகளும் சங்ககாலத்தில் நிலவிய வழிபாட்டு முறைகள் ஆகும்.

இத்தகைய முருக வழிபாட்டில் சங்க காலத்தின் ஆரம்பத்தில் அதாவது வைதீகப் பண்பாடு கலப்பதற்கு முன்னர் நிலவிய வழிபாடு வேலன் வெறியாட்டு ஆகும். இதுவே, தமிழரின் தொல்வழிபாட்டு முறையாகும். சங்க இலக்கியங்கள் சுட்டும் முருக வழிபாட்டில் பெரும்பகுதி வெறியாடல் நிகழ்ச்சியாகவே அமைந்துள்ளது என்பர்.

திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களைப் பாட்டும் தொகையும் என்று அழைக்கிறோம். அவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். சங்க இலக்கியங்களின் காலம் கி.மு, 300 முதல் கி.பி. 300 வரை சொல்லப்படுகிறது. சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் தொல்காப்பியர் வரையறுத்துள்ள அகம்-புறம் என்ற திணைக் கோட்பாட்டினைச் சட்டமாகக் கொண்டு பல்வேறு சங்கப் புலவாகளால் பாடப்பெற்றுள்ளன.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை முழுமையும் பக்தி இலக்கியமாகத் திகழ்கிறது. திருமுருகாற்றுப்படையினை இந்தியாவின் முதல் பக்தி இலக்கியம் என்று இந்திய இயல் பேரறிஞர் டாக்டர் ஏ.எல். பேஷம் சுட்டியுள்ளார். இவ்வாறே எட்டுத்தொகை நூலான பரிபாடலும் திருமால், செவ்வேள் குறித்த பாடல்களைக் கொண்டு சிறந்த பக்தி இலக்கியமாகத் திகழ்கிறது.

முருகனின் தொன்மை

ஐவகை நிலத்தில் முதல் நிலமாகிய குறிஞ்சியில் வந்த மக்கள் வழிபட்ட கடவுள் முருகனே ஆவான். மனிதகுலம் முதன் முதலில் மலை நிலத்தில் தான் வாழ்ந்தது. பின்புதான் மற்ற நிலங்களை நோக்கிச் சென்றது என்பதை அறிவோம். எனவே முருகன் தொல்தமிழரின் தெய்வமாக விளங்கியுள்ளான். முருகன் அல்லது முருகு என்ற தனித்தமிழ்ச் சொல்லிற்கு ‘மாறா இளமை’ என்றும் ’அழியா அழகு’ என்றும் ‘தெய்வத்தன்மை’ என்றும் ‘மணம்’ என்றும் பல பொருட்களை வழங்கி உள்ளனர். மேற்கண்ட இவ்வனைத்து இயல்புகளையும் உடைய பரம்பொருளை முருகன் என்ற இனிய சொல்லால் பண்டைத் தமிழர்கள் வணங்கியுள்ளனர்.

சங்க இலக்கியங்களில் முருகு, முருகன் என்ற சொற்களால் இறைவனைச் சுட்டி உள்ளது பின்வரும் குறிப்புகளில் அறியலாம்.

- முருகன் அயர்ந்து வந்த முதுவாய் வேல - (குறிஞ்சி-362)
- முருகென மொழியுமாயின் - (ஐங்குறுநூறு-237)
- முருகென மொழியும் - (ஐங்குறுநூறு-129)
- முருகமர் மாமலை - (ஐங்குறுநூறு-31)
- முருகன் பொதினி - (அகம்-1)

- முருகு முரண் - (அகநானூறு-288)
- இயன் முரு கொப்பினை - (அகநானூறு-252)
- முருகு மனைத் தரீஇ - (அகநானூறு-138)
- முருகுறழ் முன்பொடு - (நற்றிணை-225)
- முருகென வேலன் - (அகம்-232)
- முருகற் சீற்றத்து - (அகநானூறு-158)
- முருக்காத்தீயே - (புறநானூறு-56)
- முருகன் கோட்டத்து - (புறம்-299)
- முருகுடன்று - (பதிற்றுப்பத்து-11)
- முருகுறழ - (அகநானூறு-181)
- முருகு - (நற்றிணை-37)
- முருகு புணாந்து - (நற்றிணை-82)

இவ்வாறு ‘முருகு’ என்ற சொல் பெரு வழக்காக காணப்படுவதில் இருந்து முருகனின் தொன்மை அறியப்படுகிறது.

சேஎய்

முருகனைச் சேய் என்ற சொல்லாலும் பழந்தமிழர் சுட்டியுள்ளனர். தொல்காப்பியத்தில் ‘சேயோன் மேய மைவரை உலகும்’ என்று குறிக்கப் பெற்றுள்ளது.

‘சேய்’ என்ற சொல்லிற்கு சிவந்த திருமேனி உடையவன், மைந்தன் என இருவகைப் பொருள்கள் உண்டு. சங்க நூல்களில் பின்வரும் பாடல் பகுதிகளில் ‘சேய்’ என்ற சொல்லும் முருகனைக் குறிக்கிறது. சேஎய், சேய்மலை நாடன், பைம்பூட் சேஎய், சுடர்பூட் சேஎய், முருகனைக் குறிக்கும் ‘சேய்’ என்ற சொல்லினால் வேந்தர்களும் குறிக்கப்பட்டதை சங்க இலக்கியங்களில் காண முடிகிறது.

மேலும், முருகனைச் சங்க இலக்கியங்கள் வேள் என்ற சொல்லியிருந்தாலும் செவ்வேள், நெடுவேள், விறல்வேள் என்ற சொல்லினாலும் பண்டைத் தமிழர்கள் சுட்டியுள்ளனர். எனவே, முதலில் ’வேள்’ என்ற சொல் முருகனைக் குறித்து பின்னர் அவனை வழிபட்டு அம்மலை நிலத்தை ஆண்ட தலைவர்களையும் சுட்டியிருத்தல் வேண்டும் என்பதை அறிய முடிகிறது.

வெறியாடல்

சங்ககால மக்களின் பழக்க வழக்கங்களில் வெறியாடல் காணப்படுகிறது. தொல்காப்பியம் பொருளதிகாரம் 113-ஆவது பாடலில் கட்டின் மூலமாக, கழங்கின் மூலமாகக் குறி கண்டு வெறியாடுவதே முறை என்று தலைவியின் தாய் கருதி அதற்கு ஏற்பாடு செய்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

> **"களவல ராயினும் காமமேற் படுப்பினும்**
> **அளவுமிகத் தோன்றினுந் தலைப்பெய்து காணினுங்**
> **கட்டினில் கழங்கினும் வெறியென இருவரும்**
> **ஒட்டிய திறத்தாய் செய்திக் கண்ணும்" -தொல்.பொருள் 113-114**

'வெறியாடல்' என்று சொல்லிற்கு மணம் என்ற பொருள் உண்டு. பெரும்பாலும், மணம் புரியும் நிலையில் உள்ள மங்கையின் உடல் வேறுபாட்டிற்கான காரணம் அவளுற்ற காமநோய் என்பதை அறியாத தாயார், வேறுபாட்டிற்குக் காரணத்தை அறியும் பொருட்டு முதுபெண்டிராகிய கட்டிவிச்சியை அழைத்து, குறி கேட்பது வழக்கம். இம்மூதாட்டி அனுபவம் மிக்கவள்; இறைவனின் பல்வேறு பெயர்களைக் கூறி (அகவி) ஆலோசித்துக் குறி சொல்லும் காரணத்தால் இவளை 'அகவல் மகள்' என்றும் கூறுவர். முறத்தில் நெல்லை இட்டு எண்ணிப் பார்த்து அதனால் சில நிமித்தங்களை அறிந்து முடிவாக வேலனை அழைத்து முருகனுக்கு வெறியாட்டு எடுத்து அப்பெண்ணின் நோயை நீக்க முற்பட்டு கழற்சிக்காயை வைத்து எண்ணிப் பார்த்து குறி சொல்லும் வழக்கமும் உண்டு. வெறியாடல் என்னும் வழிபாட்டு நிகழ்ச்சியில் பழங்கால மகளிரின் அச்சங் காரணமாகத் தோன்றிய பக்தி நிலையை காண்கிறோம்.

மகளிர் புரியும் வெறியாடல்

'வெறியாடல்' என்ற வழிபாட்டினை முதபெண்டிர் முன்னின்று நடத்துதல் உண்டு. முருகனுடைய ஆவேசம் வரப்பெற்ற இம்முதுப் பெண்டிர் முருகனுடைய சிறப்பையும் அவன் கோயில் கொண்டுள்ள மலையின் வளத்தையும் அகவிப் பாடுதல் உண்டு. மகளிர் வெறியாடிய நிகழ்ச்சிக்கு பின்வரும் சங்கப் பாடல்கள் சான்றாக உள்ளன,

> **"செவ்வேள் வெறியோடு மகளிரொடு செறிய"**
> **- (குறிஞ்சிப்பாட்டு-174)**

“புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடு மகள்” - (நக்கீரா - புறம்-78)

வேலன் வெறியாடுதல்

முருகன் வழிபாட்டினை நிகழ்த்தும் பூசாரி வேலன் என்று பல சங்கப் பாடல்களில் சுட்டப் பெறுகிறார். முருகனுக்குரிய வேலினை இவன் கையில் ஏந்தி ஆவேசத்துடன் குறி கூறுவதால் வேலன் என்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். முதுவாய் வேலன் மற்றும் முதுவேலன் எனச் சுட்டப்பெறுவதால் அனுபவித்தினால் அறிவு வாய்க்கப் பெற்ற முதியவன் என்று அறியலாம். சங்க இலக்கியங்களில் வேலன் வெறியாடிய நிலையினைப் பின்வரும் பாடல் பகுதிகள் புலப்படுத்துகின்றன.

‘வெறியென உணர்ந்த வேலன்’ - (குறிஞ்சி-360)

‘முருகயர்ந்து வந்த முதுவாய் வேல’ - (குறிஞ்சி-362)

‘வேலற் றந்தா னாயினவ் வேலன்’ - (ஐங்குறுநூறு-241)

‘அறியா வேலன் வெறியெனக் கூறும்’ - (ஐங்குறுநூறு-25)

‘முருகென மொழியும் வேலன்’ - (ஐங்குறுநூறு-247)

‘அருங்கடி வேலன் முருகொடு வளைஇ’
- (தொல்.பொருள்-179)

‘வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்’ - (நற்றிணை-34)

முருகனுக்கான வேலன் கொண்டாடும் வெறியாடல் நிகழ்ச்சி பூத்துக் குலுங்கும் புங்க மரத்தின் நிழலில் வெண்மணி பரப்பி அமைக்கப்பட்ட காலத்தில் நடைபெற்றது. தலைவியின் வீட்டிலும் வீட்டிற்கு முன்பும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்ததை அறிய முடிகிறது.

‘வெறிமனை வந்தோய்’ - (நற்றிணை-34)

‘எம்மணங்கினவே மகிழ்ந முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மனல்
வேலன் புனைந்த வெறியயா களந்தொறும்’
- (குறுந்தொகை-60)

‘வெறியயா வியன்களம்’ - (அகம்-98)

'கடியுடை வியனகா காவல்' - (புறம்-13)

வெறியாட்டு எடுக்கும் வேலன் முருகனுக்கு நிகழ்த்தும் படையல் முறையினையும் சங்க இலக்கியப் பாடல்களின் குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது. முருகனுக்கு விருப்பமான கடம்ப மாலை, அரலை மாலை, குறிஞ்சி மலர் முதலியவற்றைச் சூட்டியதாக அறிய முடிகிறது.

'விரவுப்பூம் பலியொடு விரைஇ' - (அகம்-232)

'கடம்பு கொடி யாத்து கண்ணி சூட்டி' - (அகம்-382)

குறிஞ்சி நிலத்தில் சிறப்பாக விளையும் தினை அரிசியுடன் ஆட்டினையும் பலிப் பொருளாக வைத்து மணியடித்துப் பல வகையான வாத்தியங்களையும் முழங்கிப் பூச்சொரிந்து பக்தி உணாச்சி மிக ஆவேசத்துடன் வேலன் வெறியாடியதை நிகழ்த்தியதாகவும் அறிய முடிகிறது.

'புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவட் கிட்ட செழுங்குரல்' - (குறுந்தொகை-105)

'அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்' - (குறுந்தொகை-105)

தொல்தமிழாகள் தாம் வழிபட்டு வந்த தெய்வங்களுக்குக் கோயில் அமைத்துச் சிறப்போடு பூசைகள் செய்து இறையருளால் நலமும் வளமும் பெற்று வந்தனா். தமிழ்க் கடவுள் முருகன் குறிஞ்சி தெய்வம். எனவே, மிகப் பழைய முருகன் கோயில்கள் மலை உச்சியில் அமைக்கப்பெற்றன. தமிழ்க் கடவுள் முருகனை உயரமான இடத்தில் எழுந்தருளச் செய்து வழிபட்டு வரும் தமிழர்களின் மேலான இறைவுணாவு குறிப்பிடத்தக்கது ஆகும்.

'தனக்குவமை இல்லாதான் தாள்சோந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது'

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப தமிழ்க் கடவுள் முருகனை வணங்கினால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பயன்களையும் அடையலாம்.

துணை நூற்பட்டியல்

1. வானமாலை. நா - தமிழர் பண்பாடும் தத்துவமும்
2. ஐராவதம் மகாதேவன் - சிந்துவெளியில் முருகன்
3. சாமி பி.எல். - தமிழிலக்கியத்தில் தாய் தெய்வ வழிபாடு
4. அரவிந்தன் நீலகண்டன் - ஹரப்பா கந்தனும் கார்த்திகை மாதரும்
5. முனைவர் சேதுராமன் சி. - நெடுந்தொகையில் வழிபாட்டு முறைகள்
6. முத்தையா ஓ. - வேலன் வெறியாட்டு சங்க காலம் முதல் சமகாலம் வரை பழந்தமிழர் கலைகளும் நீட்சியும், காவ்யா பதிப்பகம், சென்னை (2013)
7. சாமி பி.எல். - வேலன் வழிபாடு மக்களும் மரபுகளும் மானிடவியல் ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை (1993)
8. சாமி பி.எல். - சங்க நூல்களில் முருகன் சேகர் பதிப்பகம் முதற்பதிப்பு, சென்னை (1990)

சங்க இலக்கியத்தில் வேட்டுவர்

முனைவர் மு. லோகநாயகி

கௌரவ விரிவுரையாளர்,

தமிழ்த்துறை,

அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி,

செய்யாறு - 604 407.

முன்னுரை

மனித வர்க்கம் படிப்படியான வளர்ச்சி நிலையை அடையும் முன்னர் உலகில் உள்ள அனைத்து மக்களுமே ஒரு காலகட்டத்தில் வேடர்களாக இருந்து வளர்ச்சி நிலையை அடைந்தவர் என்றே கருதப்படுகிறது. காடுகளில் வேட்டையாடி புசிக்கத் தொடங்கிய மனிதன் முதல் படிநிலையாக ஆற்றுக் கரைகளில் குடிகள் அமைத்து வாழவும், செல்லப்பிராணிகளை வளர்க்கவும் பழகினான். தமிழ் மண்ணின் வடபகுதியில் வாழ்ந்த வேட்டுவக் குடியினர் பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

இவர்கள் நான்குவிதப் படைகளிலும் மூர்க்கத்தனமாகப் போர் புரியும் மனவலிமை படைத்தவர்களாக இருந்தார்கள். இத்தகைய வலிமையும் சிறப்பும் உடைய வேட்டுவர், சங்க இலக்கியங்களில் எவ்வாறு இடம் பெற்றிருந்தனர் என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

வேட்டுவர் என்போர் யார்?

வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக மான், முயல் மற்றும் பறவைகளை வேட்டையாடிப் பிடித்தனர். இதனால் வேட்டுவக் குடியினர் வேடர், வேடுவர், வேட்டைக்காரன், வேட்டைச் சாதி என்றெல்லாம் அழைக்கப்பட்டனர்.

பூமியை ஆளும் வேட்டுவக் குடியினர் பூலுவர் என்று அழைக்கப்பட்டனர். குடுமி வேட்டுவக் குடியினர், வெள்ளை வேட்டுவக் குடியினர் போன்ற வேட்டுவக் குடிகளுக்குப் பூலுவர் என்ற சொல் வழங்கி வந்ததாகச் சில ஆய்வாளர்களால் கூறப்படுகின்றன. வேட்டுவர் என்ற

சொல் ஒரு குடிப் பெயர். வேட்டுவக் குடியினர் குடிமக்களைக் களவு, கொலை, கொள்ளை போன்றவற்றிலிருந்து பாதுகாத்தனர். மேலும் ஊரையும் நாட்டையும் பாதுகாத்தனர். இதனால் வேட்டுவக் குடியினர் காவலன் என்று அழைக்கப்பட்டனர். செம்ப(செம்பிய) வேட்டுவக் குடியினர் காவலன் என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

வேடரின் பண்பு

வில்லைத் தன்னுடைய உடைமையாகக் கொண்ட வேடர்கள் தம் அம்பால் மாய்ந்த உடல்களைச் சருகுகளால் மூடி மறைத்து அவற்றின் மீது கற்களைக் குவித்து வைக்கும் வழக்கம் இருந்துள்ளதை,

தீண்டலும் இயைவது சொல்லோ- மாண்ட
வில்லுடை வீணையார் கல் இடுபு எடுத்த" -(குறுந்., பா. 272)

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

வேட்டுவன் வேட்டையாடச் செல்லும்போது கூடவே நாயைப் பாதுகாப்புக்காக அழைத்துச் சென்றதை,

"கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்" -(புறம்., பா.33)

இதன்வழி, வேடன் ஒருவன் காட்டில் வேட்டை நாயை உடைய வேட்டுவன் என்று கூறுவதைக் காண முடிகிறது.

யானையை வேட்டையாட வேண்டுமென்று கருதிச் செல்பவன் யானையினை எளிதாகப் பெறக்கூடும். குறும் பூழ் பறவையை வேட்டையாடக் கருதிச் செல்பவன் அதுகிடைக்காது திரும்பிடினும் திரும்புவார் என்பதை,

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே" -(புறம், பா.214)

என வேட்டையாடுபவனுடைய குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று புறநானூறு கூறுவது இங்கு எண்ணத்தக்கது.

விலங்குகளை வேட்டையாடுதல்

பலரும் உறங்குவதற்குக் காரணமாக, பந்தரின் நிழல் விளங்கும். அந்நிழலில் கைகளையுடைய விலங்காகிய யானையை வேட்டை யாடுபவன் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தான் என்பதை,

"பந்தர் வேண்டாப் பலர் வாங்கு நிழல்
கைம்மான் வேட்டுவன் கனைதுயில் மடிந்தென" -(புறம், 320)

என்று யானையை வேட்டையாடி விட்டு மர நிழலில் தூங்கியதைக் காணமுடிகிறது.

மான் கூட்டத்தை வேட்டையாடிய இரத்தம் தோய்ந்த வீரக்கழல் உடைய காலினையும் ஒளி பொருந்திய நீலமணி விளங்கும் உச்சியையும் உடைய வேட்டுவன் ஒருவன் வந்தான் என்பதை,

"செல்வத் தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன்
தொழுதனென் எழுவேற்கை கவித்து இரிஇ" -(புறம்,50)

என மானை வேட்டையாடி உண்டனர் என்பதை அறியமுடிகிறது.

பறவைகளை வேட்டையாடுதல்

கொடிய கொலைத் தொழிலில் வல்லவனாகிய வேட்டுவன் விரித்து வைத்த வலையை அறுத்துவிட்டோடும் காட்டில் உள்ள சேவற்புறா சிலந்திப் பூச்சி தன் வாயின் நூலாலே கட்டிய வலையைக் கண்டு அஞ்சும் என்பதை,

"நரம்பு இசைத்தன்ன இன்குரற் குருகின்
கங்கை வங்கம் போடுவர் கொல்லோ
எவ்வினை செய்வர் கொல்தாமே? வெவ்வினைக்
கொலை வல் வேட்டுவன் வலை பரிந்து போகிய
கானப்புறவின் சேவல் வாய் நூல்" -(நற்றி, 189)

என்று வேட்டுவர்கள் வலையை விரித்து பறவைகளை வேட்டையாடினான் என்பதை அறிய முடிகிறது.

பார்வை ஒன்றுபட வேடன் வலையை அமைத்தான். அந்த வலையைக் கண்ட, கொடிய காவலையுடைய கணந்துள் என்ற பறவை அச்சமுற்று கத்தும், தனித்து குரலை எழுப்பும் என்று கூறுவதை,

"பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ
நெடுங்கால் கணந்துள் அம்புலிம்பு கொள் தெள் விளி
சுரம் செல்கோடியர் கதுமென இசைக்கும்" -(நற்றி,212)

என்று வேடர்கள் வலையை அமைத்து பறவைகளைப் பிடித்திருப்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

குளிர்ந்த புதரிடத்திலே உள்ள இண்டரங் கொடியின் அழகிய தளிர்கள் வருடுவதால், குளிரில் தன்னுடைய சிறகை ஒடுக்கி வருந்தியிருக்கும் வெண்மையான கொக்கினைக் கொண்ட வேட்டுவன் அதனுடைய கால்கட்டை அவிழ்த்து விடுவான் என்பதை,

"சிறை குவிந்திருந்த பைதல் வெண்குருகு
பார்வை வேட்டுவன் காழ்களைந்தருள
மாரி நின்ற, மையல் அற்சிரம்" -(நற்றி பா.312)

என வேட்டையாடிய கொக்கினைக் கால்கட்டி வைத்திருப்பது இதன் மூலம் தெரிய வருகிறது.

வேட்டுவர்களின் உணவு முறை

சங்க காலத்தில் வேட்டையாடி உணவு சேகரித்து அதனைப் பகிர்ந்து உண்டனர். வேட்டையாடுதல் குறிஞ்சிநில மக்களுக்கே உரியது என்றாலும் பிறநில மக்களும் தங்களுடைய நிலத்திற்கு ஏற்ப உணவுகளைச் சேகரித்தும் உற்பத்தி செய்தும் வந்தனர்.

"கோடு துவையா கோள்வாய் நாயொடு
காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு" -(நற்றி, பா.276)

என வேட்டையாடி உணவு சேகரித்துச் செல்லும்போது கொம்பினை ஊதிக் கொண்டு வேட்டை நாயுடன் செல்வர் என்பதை அறிய முடிகிறது.

காடு சூழ்ந்த நாட்டில் உடும்பைக் கொல்லும் வரித் தவளையை அகழ்ந்து எடுத்தும் நெடிய நோக்குகளைக் கொண்ட புற்றுகளை வெட்டி ஆண்டுறையும் ஈசல்களை மண்ணைத் தோண்டி எடுத்தும் பகலில் முயலை வேட்டையாடியும் வாழும் வேட்டுவன் இரவில் தன் அழகிய தோளில் சுமந்து வந்த பல்வேறு வகைப்பட்ட பண்டங்களைப் பொதிந்த மூட்டையுடனே ஏனையை கருவிகளையும் வீட்டிலே போட்டுவிக்க மறந்து மிகுதியாகப் பருகிய கள்ளின் மயக்கத்தில் செருக்குற்றுக்கிடப்பான் என்று கூறுவதை,

"உடும்பு கொலீஇ வரி நுணல் அகழ்ந்து
நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல
பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து
இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும் -(நற்றி, பா.59)

என்று ஈசல் கறியையும் முயல் கறியையும் உண்டனர் என்பதை அறிய முடிகிறது.

வேடர்களின் நம்பிக்கை

கானவன் காட்டுப் பசுவின் நேர்த்திக் கடன் மீது அம்பு எய்தான். அம்பு, குறி தவறிவிட்டது. உணவாக வேண்டிய பசு தப்பி விட்டது. அதற்குக் காரணமான மலைத் தெய்வத்தின் கோபம் என நம்பினர்.

> **“அமர்க்கண் ஆமென் அருநிறம் முள்சாது**
> **பணைத்த பகழிப் போக்கு நினைந்து கானவன்**
> **அணங்கொடு நின்றது மலை, வாண் கொள்கை எனக்**
> **கடவுற் ஓங்கு வரை பேண்மார்” -(நற்றி.பா.165)**

என மழை பெய்தால்தான் அதன் வெப்பம் தணியும் எனக் கருதி மலைமேல் ஏறிச் சுற்றத்தினருடன் சென்று தெய்வத்தை வணங்கி யிருப்பதைக் காணலாம்.

கூர்மையான கல், கம்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி பகலில் விலங்குகளை வேட்டையாடித் தனக்கான உணவைத் தேடிக் கொண்டதோடு அவற்றிடம் இருந்து தன்னைப் பாதுகாத்தும் கொண்டான். ஆனால் இரவு வந்து இருள் சூழ்ந்ததும். மனிதனுக்கு உயிர்ப்பாதுகாப்பு பற்றிய பயமும் கூடவே வந்தது. இரவில் விலங்குகளிடமிருந்து தன்னைப் பாதுகாப்பதே பெரும் சவாலாக இருந்தது. இந்த நிலையில் இருள் விலகி, பொழுது விடிந்து வெளிச்சம் தோன்றியதும் அவனுக்கு மீண்டும் நிம்மதியும் நம்பிக்கையும் வந்தது. இதனால் ஒளியைத் தரும் சூரியனைத் தன்னைக் காக்க வந்த கடவுளாகக் கருதி மனிதன் வணங்கத் தொடங்கினான்.

முடிவுரை

வேட்டுவர் என்போர் பறவைகளையும் விலங்குகளையும் வேட்டையாடி வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்கள் பாணர்கள், வேட்டைக்காரன், அல்லது வேட்டை சாதி என்று அழைக்கப்பட்டதைக் காணமுடிகிறது. வேட்டுவர்கள் வேட்டைக்குச் செல்லும்போது நாயையும் தம்முடன் அழைத்துச் சென்றனர். வேட்டைக்குச் செல்லும்போது தன் மனதில் என்ன நினைத்துச் செல்கிறார்களோ அதே பொருளை வேட்டையாடிக் கொண்டு வருவர் என்று சங்க இலக்கியங்கள்வழி

அறியமுடிகிறது. எனவே வேட்டைக்குச் செல்பவனுடைய குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வேடர்கள் வலையை விரித்துப் பிடித்த பொருளும், அம்பு கொண்டு எய்திய பொருளும் அவர்களுடைய உணவுப் பொருளாக விளங்கியது. வரித்தவளை, ஈசல், முயல்கறி ஆகியவற்றை உண்டனர் என்பதை அறியமுடிகிறது. வேட்டுவர்கள் வேட்டையாடும்போது குறி தவறினால் மலைத் தெய்வம் கோபம் கொண்டதாக நம்பினர். அதனால் மழைக் காலங்களில் மலையில் உள்ள தெய்வத்திற்குச் சுற்றத்தாரோடு வழிப்பட்டனர் என்பதை அறிய முடிகிறது. இது வேடர்களிடையே இருந்த நம்பிக்கை என்பது சிறப்புக்குறியதாகும்.

ஜவ்வாது மலை - வேட்டுவ வழிபாடு

ஆசிரியர் க.ஜெய்சங்கர்
அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலைப்பள்ளி,
சு.கீழ்நாச்சிப்பட்டு,
திருவண்ணாமலை வட்டம் மாவட்டம் - 606 603.
செல் : 9786472148

அடர்ந்த வனப்பகுதியில் வாழும் வேட்டுவர்கள் இயற்கையுடன் வாழும் வாழ்வியல் முறைகள் பலருக்குத் தெரியாது. ஜவ்வாதுமலையில் (திருவண்ணாமலை) 2011-இன் கணக்குப்படி 51999 பேர் வசிக்கின்றனர். ஜவ்வாதுமலை கடல் மட்டத்திலிருந்து 2360 அடி முதல் 3855 அடி வரை உயரம் கொண்டதாக உள்ளது. மலைகளுக்கு இடையே உள்ள பள்ளத்தாக்குகள் 1640 அடி முதல் 2625 அடி வரை ஆழம் கொண்டவை. புவிக்கோளத்தில் 1200 மற்றும் 12049 வரை வடக்கு அட்சரேகை 78038-இல் இருந்து 79045 கிழக்குத் தீர்க்க ரேகை 2 இடையில் சுமார் 187 ச.கி. மீட்டரில் அமைந்துள்ளது. இதில் விளை நிலங்கள் 34,500 ஹெக்டேர் ஆகும். இங்கு நிலவும் தட்பவெப்பம் கோடை காலத்தில் 33 செ.கி. வசந்த காலத்தில் 12 செ.கி. மழையளவு ஆண்டிற்கு 35-50 செ.மீ. வரை பொழியும். இங்கு ஆண்டு முழுவதும் சுற்றுலாவுக்கு ஏற்ற காலங்களாக விளங்குகிறது.

இந்த மலை கடினமான பாறை அடுக்குகளால் அமைந்தது என்பதால், இப்பகுதியில் நில அதிர்வுகளின் தாக்கம் ஏற்படுவதில்லை. ஜவ்வாதுமலைப் பகுதியில் அடர்த்தியான காடுகள் உள்ளதால் மற்ற மலைகளைவிட இங்கு குளிர்ச்சி அதிகமாகக் காணப்படுவதால் விலங்கினங்களின் வருகை அதிகமாக உள்ளது.

ஜவ்வாதுமலையில் வடக்குத்திசையில் உள்ளது வடபாதி மலை; தெற்குத் திசையில் உள்ளது தென்பாதி மலை; மேற்குத் திசையில் உள்ளது மேல்மலை; கிழக்குத் திசையில் உள்ளது கீழ்மலை மலை ஆகும்.

ஜவ்வாதுமலையில் மடிப்புமலை, கானமலை, பெருமலை, தென்மலை, நாச்சாமலை, கழுகுமலை, தொங்குமலை, கோட்ட மலை, துருவத்துமலை, சருக்குமலை, துரத்திக்கல்மலை, சேப்ளிமலை, கைக்கல்மலை, கொயித்துமலை, தேன்கல்மலை, உயர்லஸ் மலை, தீர்த்தமலை என்னும் மலைகள் அமைந்துள்ளன.

1. வேட்டுவம்

ஜவ்வாதுமலையில் பெரும்பாலும் திரும்பிய திசையெங்கும் அடர்ந்த காடுகள் காணப்படுகின்றன. இவை இயற்கைப் பாரம்பரியத்தின் இனிமையான எச்சங்களாகும். காடுகள் உருவான காலந்தொட்டே, வேட்டுவர்களின் வாழ்வியல் தொடர்கிறது. பழங்காலத்தொட்டே வேட்டுவ மக்கள் குறிஞ்சி, முல்லை, நிலப்பகுதிக்குக் குடியேறும்போது வேட்டை வாழ்வியலாக இருந்துள்ளது.

வேட்டைப் பயன்பாட்டை வைத்து ஜவ்வாதுமலை (திருவண்ணாமலை)யில் சில குடியிருப்புகளின் பெயர்கள் உருவாகி உள்ளன. அவை 1.வேடன்தோப்பு 2. வேடக்கொல்லைமேடு என்பனவாகும். மேலும் பிசினுகோலு, பட்டாங்கோலு, டபார், பில்லுண்டு, துப்பாக்கி ஆகிய வேட்டைக் கருவிகளின் பெயர்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பண்பாட்டு நோக்கில் வழிபாடுகள்

ஊர்த்திருவிழாவின் போதும், எருதுக்கட்டு விழாவின்போதும் கூப்பிட்டு அழைக்கும் வழிபாட்டின்போதும் வேட்டுவச்சாமி வழிபாடு குறிப்பிடத்தக்க ஒன்றாக ஜவ்வாதுமலையில் காணப்படுகிறது. வேட்டைக்குத் தனியாகவோ குழுவாகவோ செல்லும்போது, வேட்டுவச்சாமி கோவிலுக்குச் சென்று வேட்டைக்கு எடுத்துச்செல்லும் பொருட்களை அங்கே வைத்து, இந்த வேட்டையில் மிருகம் கிடைக்கணும், யாருக்கும் எந்த விண்ணமும் படாமல் வரவேண்டும் என்று வழிபடும் மரபு காணப்படுகிறது.

வேட்டைக்குச் சென்று ஓரிரு நாள் காட்டிலே தங்கிய பிறகே வேட்டை கிடைத்தால் மட்டுமே ஊர்த்திருவிழா நடைபெறும் என்பது கட்டளையாகும். கிடைத்த பொருளை எடுத்துவந்து வேட்டைச்சாமி கோவிலில் வைத்து வணங்கிய பிறகு ஊருக்கு எடுத்து வரவேண்டும்.

வேட்டப்பாறை

ஜவ்வாதுமலையில் உள்ள அனைத்து குடியிருப்புகளிலும் ஊர்ப்பகுதிக்கு வெளியே காட்டில் வேட்டப்பாறை என்ற ஒன்று இருக்கும். வேட்டையில் கிடைத்த விலங்கை இந்தப்பாறைமேல் வைத்து அறுத்து எடுப்பார்கள். அறுத்த கறியை அந்த ஊரில் எத்தனைக் கொத்து, வகையறா என்ற எண்ணிக்கைக்கு ஏற்ப பாறையில் கல் எடுத்து வரிசைப்படுத்தி வைப்பார்கள்.

அதில் ஒவ்வொரு கல்லுக்கும் ஒரு பங்கு பிரித்து வைப்பார்கள். ஊரிலுள்ளவர்களுக்குக் கொடுத்தபிறகு ஒரு மரகறி என்று பிரிப்பார்கள். இந்தக் கறி இந்த ஊரில் இருந்து புலம்பெயர்ந்து வெளியூர்களுக்குச் சென்றுள்ளவர்களுக்கு அந்த ஊர் கங்காணி, மூப்பன்மூலம் கறியைக் கொடுத்து அனுப்பி, அவர்களுக்குத் திருவிழா விவரத்தைக் கூறிவிட்டு வருவதாகக் கூறுகின்றனர். இந்நிகழ்வு இன்றளவும் நடைபெறுகின்றது.

இந்தப் பாறைக்கு யாரும் அவ்வளவு சீக்கிரமாகச் செல்லமுடியாது. அங்கு பாத்தியப்பட்டவர்கள் மட்டுமே அப்பாறைக்குச் செல்ல வேண்டும்; மற்றவர்கள் செல்லக்கூடாது. குறிப்பாக, பெண்கள் செல்லக்கூடாது. சிறுவர்கள் செல்லவேண்டும் என்றால், வேட்டைப்பாறை அருகே வரிசையாக நிற்க வேண்டும். அங்குள்ளவரில் ஒருவர் புளியஞ்சிமிர் கிழித்து ஒவ்வொருவரையும் 3 முதல் 5 அடி வரை அடிப்பார். அதைத் தாங்கிக் கொண்டால் மட்டுமே அப்பாறையில் அனுதிக்கப்படும் என்பது கட்டுப்பாடு ஆகும்.

வேட்டைக்குக் கட்டுப்பாடு

வேட்டைக்குக் காட்டுக்குச் செல்வதற்கு சில கட்டுப்பாடுகள் வைத்துள்ளனர். அதன்படி இருந்தால் மட்டுமே வேட்டைக்குழுவில் சேர்ப்பார்கள். இல்லையென்றால் சேர்க்க மாட்டார்கள். ஒரே ஊரில் மூன்று, நான்கு குழுக்கள் இருக்கும். வேட்டைக்குச் செல்லும் நாளைக் குறிப்பார்கள். நாள் குறித்ததும் அன்று முதல் பாய் படுக்கை இல்லாமல் தூய்மையாக இருக்க வேண்டும். வேட்டைக்குச் செல்பவர் வீட்டில் பெண்கள் மாதவிடாய் ஏற்பட்டால் அந்த வீட்டில் இருந்து யாரும் செல்ல மாட்டார்கள். குடிபோதையிலும், புகைப்பிடித்துக்கொண்டோ செல்லக் கூடாது என்கின்றனர். இன்று இரவு வேட்டைக்குச் செல்வதாக இருந்தால் சுத்தபத்தமாக இருந்து வீட்டில் மூதாதையரையும், வேட்டுவச்சாமியையும் வணங்கிய பிறகே வீட்டைவிட்டு வெளியே வருவார்கள்.

ஊருக்கு வெளியே ஒன்று கூடியதும் எல்லோரும் ஊர்த்தெய்வம், இனதெய்வம், எல்லைதெய்வம் ஆகியவற்றை வணங்கிய பின்பு காட்டிற்குள் செல்வார்கள். வேட்டைக்குழுவில் சேர பல்விழுந்த சிறுவர்கள் சேர்வதற்கு இதில் கலந்துகொள்ள ஒருகோழி, 2 - படி அரிசி கொடுத்து சேரவேண்டும். இல்லாவிடில் வேட்டைச்சாமி பூஜையில் பங்கேற்க முடியாது.

உணவுசார் பண்டங்கள்

ஜவ்வாதுமலையில் அந்தக் காலத்தில் வேட்டுவர்கள் உணவுக்காக ஆயுதங்கள் இல்லாமல் வேட்டையாடியுள்ளனர். அடர்ந்த காட்டுப் பகுதியில் 6-க்கு 4 அளவு உள்ள குழி வெட்டி, அதன்மீது காட்டுத் தழைகளைப் போட்டு மூடிவிடுவார்கள். காட்டில் விலங்குகள் அந்தப் பக்கம் வந்து குழியில் மாட்டிக்கொள்ளும்போது பிடித்து விடுவார்கள். இதில் பெரிய சிறிய விலங்குகளைப் பிடித்துள்ளனர்.

காட்டில் புதர் செடிகள் இருக்கும் இடத்தில் சிறிய பள்ளம் வெட்டி தண்ணீர் ஊற்றிவைத்துவிட்டு, புதர் பக்கம் மறைந்திருந்து தண்ணீரில் கால் வைக்கும்போது காட்டுப்பன்றி, மயில், மான் போன்ற விலங்கு களைப் பிடித்துள்ளனர்.

காட்டுப்பகுதியில் கயிற்றில் கன்னி வளையத்தைக்கொண்டு முயல், காடை, கௌதாரியையும் புகையூட்டி காட்டு எலியையும் பிடித்துள்ளனர். இந்தக் கன்னிவைத்தலை ஆரம்பத்தில் குருவிக்காரர்கள் வந்து கற்றுத்தந்ததாகக் கூறுகின்றனர். மேலும் வேட்டை நாய்களின் உதவியுடன் காட்டில், நாய் விலங்குகளைத் துரத்த, உடனே அம்பில் அடித்து கரடி, காட்டுப்பன்றி, மான், முயல், உடும்பு ஆகியவற்றை வேட்டையாடி உண்டு வாழ்ந்துள்ளனர். ஆரம்ப காலத்தில் உணவுக்காக மட்டுமே வேட்டையாடப்பட்டுள்ளது.

பாதுகாப்புசார் பண்பாடுகள்

இயற்கையின் மிகப்பெரிய பணியைப் பறவைகள் செய்து வருகின்றன. தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் பறவைகளுக்கும் ஓர் உயிர்த்துடிப்பு உருவாகும் உன்னதமான உறவை இயற்கை ஏற்படுத்தி யுள்ளது. வாழ்வியல் சுழற்சியை இயற்கை சமநிலைப்படுத்துகிறது. பறவைகளின் எச்சத்தின் வழியே சில தாவரங்கள் விருட்சம் பெறுகின்றன. தாவரங்களை உண்பதில்தான் மனிதர்களுக்கு உயிர்த்

தாதுக்கள் கிடைக்கின்றன. இயற்கையின் சமநிலைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவது பறவைகளும் விலங்குகளும் ஆகும்.

வேட்டுவர்கள் வேட்டைக்குச் செல்லும்போது 5 வயது முதல் 10 வயது வரை உள்ளவர்கள் குருவிக்குஞ்சுகளை அடிப்பதும், 11 வயது முதல் 18 வயது வரை உள்ளவர்கள் குருவிக்குஞ்சுகளைப் பிடிப்பதும், 19 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்கள் தாய்க்குருவி குஞ்சுகளுடன் இணைந்திருக்கும்போது குருவியை அடிக்க முற்படும்போது இதில் எது கத்தினாலும் விட்டுவிடும் கருணை மனம் உடையவர்களாகவும் இருப்பதைக் காணமுடிகிறது.

மேலும் எந்தநேரத்தில் எந்த இடத்தில் எந்தப்பறவைகள், எந்த மரத்தில் தனியாகவோ, கூட்டமாகவோ இருக்கும் என்ற அறிவுநுட்பம் பெற்றுள்ளதால் எளிமையாக வேட்டையாடுகின்றனர்.

விலங்குகளை வேட்டையாடச் செல்லும் வேட்டுவர்கள், சில நேரங்களில் காட்டிலே மேய்ச்சலில் இருக்கும் ஆடு, மாடுகளை நரி, புலி, சிறுத்தைகளால் தாக்கி, அவை காயம்பட்டுத் தப்பி வரும்போது, வேட்டுவர்கள் காட்டு மூலிகையைப் பறித்து அங்கே வைத்தியம் செய்வதாகக் கூறுகின்றனர்.

மேலும், ஆடு மாடுகளைத் தாக்க வரும் புலி சிறுத்தைகளை வேட்டையாடுவதில்லை. மாறாக, காட்டுக்குள் துரத்திவிட்டுவிடுகின்றனர். யானையைக் காட்டில் பார்த்தாலும் ஊருக்குள் பார்த்தாலும் வேட்டை யாடாமல் தீப்பந்தம் கையில் கொண்டு சப்தமிட்டுத் துரத்திவிடுகின்றனர். யானையைப் பிள்ளையார் கடவுளாக வணங்குகின்றனர். கருவுற்ற மானை வேட்டையாடுவதில்லை. திருவிழாவிற்காக மானை வேட்டையாடுகின்றனர். மான் தோலில் அந்தக்காலத்தில் எருதுகட்டு விழாவிற்கு மாடுபிடிக்க வடக்கயிறு பின்னியதாகக் கூறுகின்றனர்.

ஆடு, மாடுகள் காட்டில் இறந்துவிட்டால் காட்டிலுள்ள பருந்து, பறவை, கழுகுகளுக்கு உணவாக விட்டுவிடுவார்கள். வீட்டில் இறந்தால் அவரவர் நிலங்களில் குழிதோண்டிப் புதைத்து விடுவார்கள்.

குலதெய்வ வழிபாட்டுச் சடங்குகள்

ஜவ்வாதுமலையில் எருதுகட்டு விழா, எந்தெந்த ஊர்களில் நிகழ்கிறதோ அந்த ஊர்களில் எல்லாம் வேட்டைசாமி வழிபாடு உண்டு. இந்த நடுகல் 3 அடி நீளமும் 33 அடி உயரமும் பலகைக் கல்லில்

காணப்படுகிறது. தலைமுடியின் இடதுபக்கம் கொண்டையும் காதில் குண்டலமும் அணிந்துள்ளது. இடதுகரத்தில் வில்லும் வலது கரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அம்பும் உடைய புடைப்புச் சிற்பம் உள்ளது. இதைக் குலதெய்வமாகக் கருதுவதும் உண்டு.

எருதுகட்டு விழாவில் பிள்ளையார், காளியம்மன் கன்னிமார் பட்டங்கோவில் வழிபாட்டிற்கு அடுத்ததாக வேட்டைச்சாமி வழிபாடாகும். அவ்வப்போது வேட்டைக்குச் செல்லும்போதும், சென்று வந்த பிறகும் வேட்டைச் சாமியை வணங்குவதுண்டு. இவ்வழிபாட்டில் ஆண்கள் மட்டுமே இடம்பெறவேண்டும். பெண்களுக்கு அனுமதியில்லை. பொங்கல் வைத்துப் படையலிடப்படும் ஆடு, கோழியை அங்கேயே அறுத்து, சமைத்து, விருந்து படைத்தல் உண்டு. அங்கிருந்து ஒரு பருக்கைகூட வீட்டிற்கு எடுத்துவரக்கூடாது. இவ்வழிபாட்டில் தவறாமல் மாவிளக்குப் பூசை இடம்பெறும். இந்த நடுகல்லை வேடர்சாமி, வேட்டுவச்சாமி, வேட்டக்கல்சாமி, வேட்டைக்காரன் ஆகிய பெயர்களில் வழிபடுகின்றனர்.

வேட்டை வழிபாட்டில் மூங்கில்

காட்டில் வேட்டைக்குச் சென்று வேட்டை கிடைத்தால், அதில் மூங்கில் குச்சிகள் (கம்மியாக) சீவி சுட்ட கறியை குச்சியில் கோர்த்துப் படைப்பது வழக்கம். வேட்டையில் ஆண் விலங்காக இருந்தால் 9 படையலாக (ஊரின் கொத்து அடிப்படையில்) முனீஸ்வரனுக்கும் பெண் விலங்காக இருந்தால் 7 படையல் கன்னிமாருக்கும் படைப்பது மரபாக உள்ளது. வேட்டையாடிய விலங்கின் இடது கண்ணைக் கொத்தி, அதிலுள்ள ஆளியை எடுத்து, தலையையும் வாலையும் வெட்டி ஒன்றாக வைத்து, வேட்டையாடிய விலங்கிலிருந்து சிறிதளவு கறி எடுத்து நெருப்பில் சுட்டு, மூங்கிலில் கம்பிபோலச் சீவி, அதில் சுட்ட கறி ஒரு துண்டும், ஈரல் ஒரு துண்டும் என மாறி மாறி கோர்க்க வேண்டும். வேட்டையாடிய விலங்கின் அருகே இலைபோட்டு அதில் மூங்கில் குச்சியில் கோர்த்த கறியை வைத்துப் படையல் போட்டு, வேட்டைக்கு வந்தவர்கள் அனைவரையும் அங்கு வரவழைத்து, கல்லின்மேல் நெருப்பை வைத்து, அதன்மேல் அந்த விலங்குக் கறியில் உள்ள கொழுப்பை வைத்து அதில் வரும் புகையைத் தீபஆராதனையாகக் காண்பித்துத் தெய்வ வழிபாடு செய்யப்படும் என்கின்றனர். இங்கு முதல் கறியைச் சுடவும், படைக்கவும் மூங்கிலைப் பயன்படுத்தியுள்ளனர். சூடம்

கண்டறியும் முன்னே உலகின் தெய்வ வழிபாட்டில் முதல் கூடம் காட்டும் பண்பு அன்றே கண்டறியப்பட்டுள்ளது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

ஆய்வு முடிவுகள்

ஜவ்வாதுமலையில் வேட்டுவத்தைப்பற்றியும் வேட்டுவக் குடியிருப்பு உருவாக்கம் பற்றியும் அறியப்பட்டது. வேட்டைக் கருவிகளின் பயன்பாட்டில் வளர்ச்சியையும் காணமுடிகிறது. பண்பாட்டு நோக்கில் வேட்டை வழிபாடுகள் நிகழ்ந்தாலும், அது உணவுநிலை சார்ந்தே காணப்படுகின்றன. பாதுகாப்புப் பண்பில் மனிதநேயத்தோடு குலதெய்வ வழிபாட்டுச்சடங்கில் வேட்டுவக் கட்டுப்பாடும் காணப்படுகிறது.

மனிதன் தன் உணவுத் தேவைக்குத் தொடங்கிய வேட்டை, பிறகு உணவு மட்டுமல்லாமல் வணிகம், வாழ்வியல் தேவைகளுக்காகவும் வளர்ச்சியுற்றது. உணவுச் சங்கிலியின் சுழற்சியில் காடு சார்ந்த வாழவியலுக்கும் விலங்குகளின் இனப்பெருக்கத்தை மட்டுப்படுத்தவும், வேட்டைவாழ்வுநிலைபெற்றது. ஜவ்வாதுமலையில் வேட்டை வாழ்வியல் இன்று ஒரு பகுதியாக விளங்குகிறது.

வேட்டுவர் வாழ்வும் ஆளுமையும்

முனைவர் கி. ராம்கணேஷ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி,
பொள்ளாச்சி - 642 107.
அலைபேசி - 97159 84239
ramganeshdharun@gmail.com

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் இயற்கை நெறிக்குட்பட்டவை. இன்றைய காலத்தில் மனித இனம் செயற்கையை உருவாக்கி முரண்பட்ட வாழ்க்கையை வாழ்வதைக் கண்கூடாகக் காணமுடிகிறது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் ஆற்றல் கொண்டவனாகவும் ஆளுமை மிக்கவனாகவும் விளங்கியிருக்கிறான். சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதனுடைய வாழ்வியல் போராட்டங்கள் உணவுத்தேவை, பாதுகாப்புத்தேவை என்ற இருநிலைகளில் இருந்து வந்துள்ளன. அவ்வகையில் இயற்கையோடு பின்னிப்பிணைந்த வாழ்வினை வாழ்ந்த வேட்டுவர் சமூகத்தின் வாழ்வையும் ஆளுமையையும் ஆராய்வதாகக் கட்டுரை அமைகிறது.

வேட்டுவர்

பழந்தமிழ் நாட்டு மக்களினம் நாட்டின் நில இயல் அடிப்படையில் நான்காகப் பாகுபடுத்தப்பட்டிருந்தது. பாலை என்ற நிலமானது முல்லை, குறிஞ்சி ஆகிய நிலங்கள் தம் நல்லியல்புகளை இழக்கும் போது உருவாகும். எனினும் பாலையையும் சேர்த்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்கள் எனக் கூறப்படும் வழக்கம் உண்டு. குறிஞ்சி நிலத்திலும் பாலை நிலத்திலும் வாழ்ந்தவர்களாக வேட்டுவர்கள் கருதப்படுகின்றனர். போராடுதல் இவர்களின் வாழ்க்கையின் அங்கமாக விளங்கியது. வேட்டையாடுவதில் வல்லவர்களாக விளங்கியவர்கள் வேட்டுவர்கள் ஆவர். இவர்களை வேடர் எனக் குறிப்பிடுவதும் உண்டு. பழங்கற்கால வாழ்விலிருந்தே

வேட்டைத்தொழில் இருந்து வருகிறது. மனிதன் விவசாயம், இருப்பிடம் ஆகியவற்றை உருவாக்கிக் கொள்வதற்கு முன்பிருந்த மக்களின் வாழ்க்கையில் வேட்டை என்பது தவிர்க்க இயலாததாக இருந்திருக் கின்றது. வனவிலங்குகளிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவும் உணவு, உடை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காகவும் வேட்டையாடுதல் இன்றியமையாததாகத் திகழ்ந்தது.

வேட்டையாடி வாழும் வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்ட வேட்டுவ இனத்திலிருந்தே மனித இனம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது எனக்கொள்ள இடமுண்டு. மலைகளில் தொடங்கிய வேடர் வாழ்வு, பின்னர் ஆற்றங்கரைகளில் குடியேறி விவசாயம் செய்யுவும் தங்களுக்கென தனியே வீடுகளை உருவாக்கிக் கொள்ளவும் விலங்குகளைப் பழக்கி வேட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்துவதாகவும் அமைந்தது. அச்சமின்மையும் திடமான உடல் வலிமையும் வேட்டுவர்களை ஆளுமைத் தன்மை கொண்டவர்களாக உருவாக்கின. இவர்களுக்குள் குலக்குழு அமைப்பு உருவானது. இன்றும் வேட்டையாடி உணவு சேகரித்து வாழும் பல மக்களிடம் (Hunting and gathering people) குலக்குழு அமைப்பு நிலவுகிறது. வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையும் வாழ்க்கைப் பொருளாதாரமாகக் (Subsistence economy) கொண்ட இவர்கள், மண்ணில் புதைந்து கிடப்பனவற்றையும் (கிழங்கு வகைகள்), நிலத்தின் மேற்பகுதியில் கிடைப்பனவற்றையும் (காட்டு விலங்குகளை வேட்டையாடுதல், காட்டுப் பொருள்களைச் சேகரித்தல்), நீரில் கிடைப்பனவற்றையும் (மீனும் பிற நீர்வாழ் உயிரினங்களும்) ஈட்டும் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளனர் (பண்பாட்டு மானிடவியல், சீ.பக்தவத்சலபாரதி, ப.எ.292) என்ற கருத்தோடு தொடர்புபடுத்தி வேடர்களின் வாழ்வியலை ஆராய முடியும்.

வேட்டுவர் வாழ்ந்த பகுதிகள்

கொங்குநாடு அமைந்துள்ள பகுதி பெரும்பாலும் மலைப்பிரதேசங் களாக இருக்கிறது. இம்மலைப் பகுதியில் வேட்டுவர்கள் வாழ்ந்திருந்தனர். கொங்கு நாட்டின் பூர்வீக மக்களினத்துள் முதன்மையானவர்களாக வேட்டுவர்கள் விளங்குகின்றனர். கொங்கு நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் உணர்த்துகின்றன. இன்றைய ஆந்திரப் பிரதேசப் பகுதிகளிலும் வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளனர். வேட்டுவர்கள் பழங்கொங்கு நாட்டின் தென்பகுதிகளிலும் அக்காலத்தே வாழ்ந்து வந்த

போதிலும் வடபகுதிகளிலே மிகுதியாக வாழ்ந்தனர். இதற்குக் காரணம் வடகொங்கு நாடு வளம் குறைந்த பாலைநிலப் பகுதிகளையே மிகுதியாகக் கொண்டிருந்ததோடு வேட்டுவர்களின் பூர்வீகம் தொண்டை நாடும் அதற்கு வடக்கேயிருந்த பொத்தப்பிநாடு எனப்படும் நெல்லூர், குண்டூர் மாவட்டப் பகுதிகளுமாக இருந்ததேயாம் (கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், வீ. ராமமூர்த்தி, ப.எ.9) என்பதை அறியமுடிகிறது

கொடுந்தமிழ் பேசப்படுவனவாகிய பன்னிரண்டு நாடுகள் அக்காலகட்டத்தில் இருந்தன. அவையாவன தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேணாடு, பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனநாடு என்பனவாகும். இவற்றுள் அருவா, அருவாவடதலை எனக் குறிப்பிடப்படும் நாடுகள் பொத்தப்பி நாடு, தொண்டைநாடு ஆகியன ஆகும். தொல்காப்பியர் காலத்தில் இந்நாடுகள் செந்தமிழ் நிலமாக இருந்தது. ‘‘தொல்காப்பியர் காலத்தில் இவையெல்லாம் செந்தமிழ் நிலமே. பிற்காலத்தில் செந்தமிழ் நிலப்பரப்பு மிகச் சுருங்கிய பின்னர் இப்பன்னிரண்டும் கொடுந்தமிழ்நாடு எனக் கணக்கிடப்பட்டன’’ (தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு, ப.எ.46) என்பதை அறியமுடிகிறது. இக்கருத்துகளை ஆராயும்போது இன்று ஆந்திரப் பிரதேசமாக உள்ள பகுதிகள் தமிழ்நாட்டோடு இருந்ததை அறியமுடிகிறது.

‘‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்’’ (தொல்.சிறப்புப்பாயிரம்) என்று பாடிய பனம்பாரனாரின் கருத்தின் வழி இன்றைய ஆந்திரப்பிரதேசம் வடவேங்கடம் என்ற பெயரில் தமிழகத்தின் வடக்குப் பகுதியாக இருந்ததை அறிய முடிகிறது. மேற்கண்ட தரவுகளின் வழி பழந்தமிழ்நாட்டு மக்களினத்துள் ஒரு பிரிவினராக வேட்டுவர் இருந்திருக்கின்றனர் என்பதை ஆராய்ந்துணர முடிகிறது. வேட்டுவர் குலங்களில் உள்ள பிரிவுகள்

வீரத்தில் சிறந்து விளங்கிய வேட்டுவர் குலத்தினில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அவை கூட்டப்பெயர்கள் என்பதாகச் சுட்டப்பட்டுள்ளன. ‘‘1. முன்னை வேட்டுவர் 2. மாந்தைப்படை வேட்டுவர் 3. பூவாணி கரைய வேட்டுவர் 4. கிழங்க வேட்டுவர் 5. கரடி வேட்டுவர் 6. புல்லை வேட்டுவர் 7. பாண்டிய வேட்டுவர் 8. வேம்ப வேட்டுவர் 9. முளை வேட்டுவர் 10. கண்ணாடி வேட்டுவர் 11. மணிய வேட்டுவர் 12. கீரை வேட்டுவர் 13 .மோகாளி வேட்டுவர் 14. குருண்டி வேட்டுவர் 15. வெங்கச்சி வேட்டுவர் 16. சுண்டை வேட்டுவர் 17. பணைய வேட்டுவர்

18. உரிமைப் படை வேட்டுவர் 19. மச்சாடி வேட்டுவர் 20. கொல்லி வேட்டுவர் 21.வெலைய வேட்டுவர் 22. சொர்ண வேட்டுவர் 23. பதரை வேட்டுவர் 24. வடுக வேட்டுவர் 25. நச்சுழி வேட்டுவர் 26. அந்து வேட்டுவர் 27. சிறுத்தலை வேட்டுவர் 28.வராக வேட்டுவர் 29.மலைய வேட்டுவர் 30. குறுங்காடை வேட்டுவர்" (கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், வீ. ராமமூர்த்தி, ப.எ. 312) இக்கூட்டப் பெயர்களை ஆராயுங்கால் ஒவ்வொரு பெயரின் பொருளையும் தெளிவாக அறிந்து கொள்ள இயலும்.

வேட்டுவர்களின் இனப் பிரிவுகளில் மாவலியர், காவலியர், பூவலியர், வேட்டுவர்கள் என உண்டு. இவற்றின் பெயர்க்காரணங்களை ஆராயும் போது மாவலியர் என்போர் பூமியை ஆளும் வலிமை படைத்தவர் என்றும் மாவலியர் என்பபோர் மிகுந்த வல்லமை படைத்தவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றனர். இவற்றின் அடிப்படையில் ஆளுந்தன்மை கொண்டவர்களாக, எதையும் எதிர்கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்களாக வேட்டுவர்கள் விளங்கியுள்ள தன்மையை உய்த்துணர முடிகிறது.

சங்க இலக்கியம் காட்டும் வேட்டுவர்

தமிழின் தொன்மையான இலக்கியம் எனப் போற்றப்படும் சிறப்புப் பெற்றது சங்க இலக்கியம் ஆகும். இவ்விலக்கியத்துள் வேட்டுவர் பற்றிய செய்திகள் காணக்கிடைக்கின்றன. வேடர்கள் போர்க்களங்களில் வீரத்தை நிலைநாட்டும் வலிமை கொண்டவர்களாகவும் அரசர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். காவல் செய்யும் முறையில் சிறந்தவர்களாக வேட்டுவர்கள் திகழ்ந்ததால் காவலர்கள் எனக் கூறப்படுவதுமுண்டு. வேட்டைக்காரன் என்ற பெயரில் அழைக்கப்படுபவர்களும் வேட்டுவர்களே ஆவர். வேட்டுவன் என்ற சொல் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த ஆணைக் குறிக்கும் பொதுவான பெயராக இருந்திருக்கிறது.

"கறங்குவெள் அருவி ஏற்றலின் நிறம்பெயர்ந்து
தில்லை அன்னை புல்லென் சடையோடு
அள்இலைத் தாளி கொய்யு மோனே
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன் முன்னே" (புறம். பா.எ. 252)

என்ற பாடலில், சொல்வலை வேட்டுவன் என வந்திருக்கிறது. வேடன் பறவைகளை வலை விரித்துப் பிடிப்பது போல், சொல்லால் பெண்ணை

வயப்படுத்தும் ஆற்றலுடையவன் எனத் தலைவன் ஒருவனைப் பாடல் குறிக்கின்றது. உவமையாக வேட்டுவன் குறித்து இடம் பெற்றிருந்தாலும் வலை விரித்துப் பிடிப்பதில் வல்லவன் என்ற பொருளில் வலிமையைப் பாடல் பறைசாற்றியுள்ளது.

வேடர்கள் வேட்டையாடுவதில் நுட்பம் தெரிந்தவர்களாக இருந்திருக்கின்றனர் என்பதற்கான சான்றுகளும் சங்க இலக்கியத்தில் காணக்கிடைக்கின்றன. விலங்குகளைத் தாங்கள் மட்டுமே சென்று வேட்டையாடுவதோடு மற்ற விலங்குகளைப் பழக்கப்படுத்தியும் வேட்டையாடியுள்ளனர். ஒரு பறவையைப் பழக்கப்படுத்தி இன்னொரு பறவையைப் பிடித்தலையும் கையாண்டுள்ளனர்.

“பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ
நெடுங்கால் கணந்துள்அம் புலம்புகொள் தெள;விளி
கரம்செல் கோடியர் கதுமென இசைக்கும்” -(நற். பா. எ.212)

தோழி ஒருத்தி தலைவன் பொருள்தேடி வருவது குறித்த செய்தியைத் தலைவிக்குத் தெரிவிக்கும் மேற்கண்ட பாடலில், பார்வை வேட்டுவன் என்றொரு தொடர் வருகிறது. இதில், பார்வை என்பது கைப்புள் (பழக்கப்படுத்தப்பட்ட பறவை) . புள் என்பது பறவையைக் குறிக்கும். ஒரு பறவையைப் பழக்கப்படுத்தி பிற பறவைகளை வரச்செய்து, அவை வலைக்குள் அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பதின் வழி வேட்டையாடுவோர் தம் தொழிலில் மேற்கொண்ட நுட்பத்தினை அறியமுடிகிறது.

கம்பராமாயணத்தில் வேட்டுவர்

இராமபிரானுக்கு அணுக்கத் தொண்டனாக விளங்கியவர்களுள் ஒருவர் குகன். இராமபிரான் கங்கை நதியைக் கடப்பதற்கு, படகோட்டிச் சென்று உதவியவர். குகனைத் தம்முடைய சகோதரர்களுள் ஒருவராக இராமபிரான் நடத்தினார் என்பர். குகன் வேடர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கியவர். கங்கை வேடன் எனவும் குறிப்பிடுவர். முதன்முதலில் இராமபிரானைச் சந்திக்க வந்தபோது முதலில் இலக்குவனைக் காண்கிறார் குகன். குகனை யாரென இலக்குவன் கேட்க, தன்னைப் பின்வருமாறு அறிமுகப்படுத்திக் கொள்கிறார் குகன்,

“கூவா முன்னம் இளையோன் குறுகி நீ
ஆவான் யார்? என அன்பின் இறைஞ்சினான்

தேவா நின்கழல் சேவிக்க வந்தனென்
நாவாய் வேட்டுவன் நாய் அடியேன் என்றான்”
- (கம்பராமாயணம். குகப்படலம் .11))

நாவாய் வேட்டுவன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் குகன், தன்னை நாய் போன்றவன் என்கிறார். நாய் என்பதை நன்றி மிக்க விலங்கு என்பர். அதைப்போல் தானும் நன்றியுணர்வு கொண்டவன் என்பதைப் புலப்படுத்துகிறார். வேட்டுவனாக, பல விலங்குகளை வேட்டையாடும் ஆற்றல் கொண்டிருந்தாலும் பணிவு என்ற பண்பும் வேட்டுவராகிய குகனிடம் இருந்திருக்கிறது. அவ்வகையில் பயன்கருதாத அன்பினைச் செலுத்தி மேன்மையடைந்தவர் குகன் எனப் பாராட்டுவர்.

பெரியபுராணத்தில் வேட்டுவர்

பெரியபுராணத்தில் கண்ணப்ப நயனார் என்ற வேட்டுவர் ஒருவருண்டு. காளத்தி வேடன் எனப் போற்றப்படுபவர் கண்ணப்ப நாயனார். சிவபெருமானிடம் மிகுந்த அன்பைச் செலுத்தியவர். சிவனுக்காகத் தன் கண்களை அர்ப்பணித்து திண்ணப்பராயிருந்து கண்ணப்பரானவர். கண் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு முன்னோடி என, கண்ணப்பரைக் குறிப்பிடலாம். குடுமித்தேவர் என்ற சிவபெருமானை வழிபாடு செய்த ஆறுநாளில் அங்கத்தின் முதன்மை உறுப்பான கண்ணினை அர்ப்பணித்தவர். சிவகோசரியார் என்பவர் கண்ணப்பரின் பக்தியை உணராத நிலையில் எதையும் எதிர்பாராத அவர் பெருமையை உலகறியச் செய்தார் சிவபெருமான். முற்றுந் துறந்து சிறந்த சித்தரான பட்டினத்தாரும் கண்ணப்பரைப்போல் தான் இல்லையே எனக் கரைந்து உருகியுள்ளார்.

“வாளால் மகவுஅரிந்து ஊட்டல் லேனல்லேன் மாது சொன்ன
சூளால் இளமை துறக்கவல் லேன் அல்லேன் தொண்டு செய்து
நாள்ஆறில் கண்இடந்து அப்பவல் லேனல்லேன் நான்
இனிச்சென்று
ஆளாவ தெப்படி யோதிருக் காளத்தி அப்பருக்கே
- (பட்டினத்தார் பாடல்கள். பா. எ. 76)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றறிந்தும், சிவபெருமானிடம் வைத்த மிகுதியான அன்பினால், கண்ணிடந்து அப்பிய கண்ணப்பனாரின் பெருமை போற்றத்தக்கது.

தலைமைப்பண்பு

வேட்டுவர் சமூகத்தினர் தலைமைப் பண்பில் தலைசிறந்தவர் களாகத் திகழ்ந்திருக்கின்றனர். மன்னருக்குப் போர்க்களங்களங்கில் வெற்றியை ஈட்டித் தருபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். சிலர் குறுநிலப் பகுதிகளுக்கு மன்னர்களாகவும் விளங்கியுள்ளனர். வில், அம்பு போன்றவை இவர்களின் ஆயுதங்கள் ஆகும். மிக வலிமையான விலங்குகளையும் நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு வென்றிருக்கிறார்கள்.

திருமலைநாயக்கர் மதுரையை ஆட்சி செய்தபோது மலையிலுள்ள விலங்குகள் பயிர்களையும் நாட்டையும் அழித்துக் கொண்டிருந்தன. மக்கள் முறையீட்டின் காரணமாகச் செய்தியையறிந்து கொண்ட மன்னர் தம் மனைவி, ராஜகுரு உள்ளிட்டோரிடம் கலந்தாலோசனை செய்து, கொடிய விலங்குகள் வாழும் பகுதிக்குச் சென்றார். பல விலங்குகளை வேட்டையாடினார். திரும்பி வரும்போது மன்னருக்குத் துணையாக மலைவேடர்கள் வந்தனர். அடிபட்ட புலியொன்று மன்னரைத் தாக்க வந்தபோது மலைவேடர்களில் ஒருவர் புலியைக் கொன்று மன்னரைக் காப்பாற்றியதாக வரலாறு உண்டு. தன்னைக் காத்த மலைவேடருக்கும் அவர்தம் சமூகத்திற்கும் மன்னர் சிறப்புச் செய்தார். மேலும் மன்னர், “மலைவேடர் சமூகத்தினர் அனைவரையும் அழைத்து காவல் காக்கும் பணியில் அமர்த்தினார்” (நவீன நோக்கில் நாட்டுப்புற ஆய்வுகள், ப. எ. 313) என்ற செய்தியையும் அறிய முடிகிறது.

நிறைவுரை

வேட்டுவர் என்போர் தொன்மைத் தமிழகத்தின் ஆதி இனங்களுள் தனித்துவம் மிக்கவர்களாக இருந்திருக்கிறார்கள். வேட்டையாடுவதில் வல்லவர்களாக, ஆளுமைப் பண்புகளில் சிறந்தவர்களாக செயல்பட்டிருக் கின்றனர் என்பதை சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம், பட்டினத்தார் பாடல் உள்ளிட்டவற்றின் வாயிலாக அறிய முடிந்தது. காவலர், மன்னர், எனப் பல பொறுப்புகளை வகித்துள்ளனர் என்பதையும் இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. இன்னும் வேட்டுவர் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டால், தமிழ்கூறு நல்லுலகம் மகத்தான செய்திகளை அறியமுடியும் என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது.

குறிப்புதவி நூல்கள்

1. சீ. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை - 600 001
2. வீ. ராமமூர்த்தி(வீயாரெம்), கொங்கு நாட்டுக் கவுண்டர்கள், லோட்டஸ் பப்ளிஷிங் கம்பெனி (பி) லிமிடெட், 32, பொன்னகர், திருச்சிராப்பள்ளி - 625 001
3. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழ் வரலாறு, திருநெல்வேலி, தென்னிந்திள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்., 154, டி.டி.கே. சாலை, சென்னை -18
4. இளம்பூரணர் (உரையாசிரியர்), தொல்காப்பியம், திருநெல்வேலி, தென்னிந்திள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே. சாலை, சென்னை -18
5. புலியூர்க்கேசிகன், புறநானூறு (தெளிவுரை), பாரிநிலையம், 184, பிராட்வே, சென்னை -600 108
6. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம் (எட்டுத்தொகை) மூலமும் தெளிவுரையும், தொகுதி -1, மணிவாகசர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108
7. அ. மாணிக்கனார் (உரையாசிரியர்), கம்பராமாயணம், தொகுப்பு -1, தமிழ் நிலையம், 40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை -17
8. வீ. சிவஞானம், பட்டினத்தார் பாடல்கள் (உரை), விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோயம்புத்தூர் - 641 001
9. நவீன நோக்கில் நாட்டுப்புற ஆய்வுகள் (வந்தனம்), ஓவியா பதிப்பகம், திண்டுக்கல்.

வேட்டுவர்களின் நீர் மேலாண்மை

ஆர். சுப்ரமணி,
கரடிகுல வேட்டுவர்,
அருள்மிகு பண்ணையம்மன் கோவில்,
ஏழூர், நாமக்கல் மாவட்டம்.

முன்னுரை

உயிர் வாழ்வதற்கு வேண்டிய உணவைக் கொடுப்பவை நிலமும் நீருமாகும். இவ்விரண்டையும் ஒன்றாக இணைத்திருக்கும்படி செய்வதே மன்னர்களின் தலையாய கடமை ஆகும். நிலத்திற்கு வேண்டிய நீர் வசதிகளைச் செய்து தர வேண்டியது அரசின் கடமைகளுள் ஒன்றாகப் பண்டைய தமிழகம் எண்ணியது. ஒரு வேந்தன் சிறந்த நல்லிசை நிறுத்தல் வேண்டின்,

நீரிஇன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணறியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே (புறநானூறு: 18: 18 - 23)

என்னும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பார் குடபுலவியனார். உணவுப்பொருள் பெருக நீர்வளம் இன்றியமையாததாகிறது. கொங்குப் பகுதியில் முன்பு **கொங்கர் எனும் வேட்டுவ ஆட்சியாளர்களே அரசு ஆட்சி செய்தனர் என்பதைச் சோழன் பூர்வ பட்டயம் உறுதி செய்கிறது.** மன்னன் (மன் - என்றால் ஆக்குதல்) காட்டை அழித்து குளம், குட்டை, ஏரி, கிணறு, அணை வாய்க்கால் அமைத்து நாட்டை ஆக்கியவன் என்று பொருள். மக்களிடமிருந்து பெற்ற வரிப்பொருளை அவர்களின் நலன்களுக்காகவே வேந்தர் செலவிட்டனர். கரிகால் வளவனது குலம் தொட்டு, வளம் பெருக்கக் காடு கொன்று நாடாக்கிய செய்தி பட்டினப்பாலையால் (பட்டினப்பாலை: 283 - 284) அறியலாம்.

கரிகாலன், காவேரியின் குறுக்கே கல்லணை கட்டி நீர்ப்பாசன வசதியை மேம்படுத்தினான். இச்செய்தியினைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிட வில்லை எனினும் கலிங்கத்துப்பரணி (கலிங்கத்துப்பரணி - 197) குறிப்பிடுகின்றது.

குளம் வெட்டி வளம் பெருக்கிய வேட்டுவ வள்ளல்கள்

சேலம் மாவட்டம் மூக்குத்திபாளையம் மோழப்பாறை கல்வெட்டால் அறியப்படுவது:

ஸ்வஸ்தி ஸ்ரீ ஏழுகரை நாட்டு அக்கை சாலை
கங்கை என்று பெயரிட்டு இக்குளம் அட்டினேன்
பெரிய விளங்கை ஊராளியாகிய சுரண்டை
வேட்டுவன் சிலம்பன் சிறியன் ஆன் ஏழுகரை
நாட்டு அக்கசாலைகள் மாத்த ஆராத பிள்ளையேன்
பெருமலைக்கு
எல்லை....

பெரிய ஊராளியான சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியன் ஏழுகரை நாட்டில் அக்கசாலைக் கங்கை என்னும் பெயரில் குளம் ஒன்றினை வெட்டி வளம் பெருக்கியதை மேலே உள்ள கல்லெழுத்துக்கள் உணர்த்துகின்றன. (அக்கசாலை - நாணயம் அச்சிடும் தொழிற் சாலை)

மணலூர் கிழவன் சோழ கோனான நல்வாளை குலத்தைச் சேர்ந்த வேட்டுவ நாயன் என்பார் கிணறு ஒன்றை வெட்டி நீர்ப்பாசனத்தை பெருக்கினான். அது கூறும் கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ முளை ஊர்
2. ரான அஞ்சாதக
3. ண்ட நல் ஊர்
4. கிணறு மண
5. லூர் கிழவன் சோ
6. ழ கோன் நல்
7. வாளை வேட்டு
8. வந் நாயன்
9. தன்மம்

வாழவந்தி ஏரி

இரும்புளை வேட்டுவன் வாழவந்தியில் ஏரி ஒன்றினை அமைத்து வளம்பெருக்கி வள்ளல் ஆனார். வாழவந்தி ஒழுகு பாறை ஏரியில் உடைப்பு ஏற்பட்டது. அதனை வாழவந்தியில் உள்ள இரும்புளை வேட்டுவன் வடசேரி ஆறங்காடி நாயறலியார் என்பானைக் கொண்டு நலமாகக் கட்டுவிக்கச் செய்தார். அவ்வேரியைக் கட்டியமைக்காக அவனுக்குச் சர்வமானிய நிலம் கொடுத்தார். இராசிபுரம் குட்லாம் பாறைக் கல்வெட்டால் இது அறியப்படுகிறது. இக்கல்வெட்டு சேந்தமங்கலம் இராமச்சந்திர நாயக்கன் (கி.பி. 1645) காலத்தது ஆகும்.

கொல்லிமலையில் கொல்லி வேட்டுவன் ஒருவன் கிணறு ஒன்றினைத் தோண்டியுள்ளான். கரூர் மாவட்டம் புங்கம்பாடி பூமதேவம் பாளையக்காரர்கள் ஒன்று கூடி விருப்பாச்சி மலையிலிருந்து வரும் நங்காஞ்சி ஆற்றின் குறுக்கே தலைய நாட்டைச் சேர்ந்த சேந்தமங்கலம் கிராமம் கோரையூத்தில் ஒரு அணையும், பள்ளப்பட்டி அருகே இரு அணைகளும், அரவக்குறிச்சி பக்கம் இரு அணைகளும் கட்டினார்கள். மேலும் பள்ளப்பட்டி அருகே அணையின் நீரை வாய்க்கால் மூலம் கொண்டுசென்று மண்மாரிக்கு மேற்கில் ஒரு பெரிய குளம் வெட்டி, அதில் நீரைத் தேக்கி அந்தப் பகுதியை வளமாக்கினார்கள்.

"நீர்இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்றி அமையாது ஒழுக்கு" - திருக்குறள்.

அல்லாள இளையானின் நீர்ப்பாசனப் பணிகள்

வடகரை ஆற்றூர் அல்லாளன் இம்முடி திருமலை இளையான் இருக்கூர் பாளையக்காரனுக்கு மதுரையை ஆண்ட திருமலை நாயக்கனால் (கி.பி. 1623 - 1659) இளைய நாயகன் எனும் பட்டம் வழங்கப்பட்டது. இவர் நாமக்கல் மாவட்டம் பரமத்தியில் பெரிய மண் கோட்டை கட்டி ஆண்டார். இவர் காவேரியைத் தடுத்து தடுப்பணை ஒன்றைக் கட்டி, வாய்க்கால் ஒன்றினை வெட்டினார். காவேரியின் நீரை முதன் முதலில் கொங்கில் அணைகட்டி வாய்க்காலில் ஏற்றிய பெருமை அவரைச் சேரும். இக்கால்வாய் ஜேடர்பாளையத்தில் தொடங்கி நாமக்கல் மாவட்டம் வேலூர் வழியாக பாலப்பட்டி ஒடுவந்தூர் வரை சென்று 5000 - க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் பாசன வசதி பெற 36 கீ.மீ தூரம் வரை வெட்டப்பட்டுள்ளது.

வாய்க்கால் வெட்டி வளம்பெருக்கிய அல்லாளன்

‘மூவருக்கும் அகத்திய மாமுனிவருக்கும்
அரசிருந்த முன்னையோர்க்கும்
தேவர்க்கும் திரும்பாத காவிரியைக்
கொங்கேற்றித் திரை கொண்டாயே
பூவிரக்க முரமாயன் கடலமைத்தான்
அவன் வேடம் புனைந்தவாறோ
யாவருக்கு மிளையானே அல்லாள திருமலை ஈகையானே’
– (திருச்செங்கோடு திருப்பணிமாலை)

என்று அல்லாள நாயக்கரின் பெருமை கூறப்படுகிறது.

கிடாரம் தாமரைகுளம்

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் வட்டம் நம்பியூர் கிடாரம் என்ற ஊரில் மூன்று துண்டாக உடைக்கப்பட்டு சாலை ஓரம் கிடக்கும் கல் பூச்சந்தை வேட்டுவரின் வள்ளல் தன்மை என்னவென்று இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. காலம்: உம்மத்தூர் தலைவன் வீரநஞ்சண் உடையார் காலம்; நள ஆண்டு சித்திரை 13 - ஆம் தேதி கி.பி. 1496.

செய்தி:

மோடமங்கலம் (மொட்டணம்) பூச்சந்தை வேட்டுவர் பெரிய பெருமாள் முத்தாண்டன் என்பவர் நவீரை ஆனகப் பலன் கிடாரன் என்ற ஊரில் குளம் வெட்டி வைத்துத் தாமரைக் குளம் என்று பெயரிட்டு புஞ்சையை நஞ்சையாக்கினான், அப்பூமியை பொன்விளையும் பூமி ஆக்கினான்.

கல்வெட்டு:

1.ஸ்வஸ்தி ஸ்ரீமன்

2. மகா மண்ட

3. லேஸ்வரன் ஸ்ரீ

4. வீரநஞ்சண்

5. ண உடையாற்கு

6. ச் செல்லா நின்

7. ற நள வருஷ

8. த்து சித்திரை ப

9. தினொன்றாம்

10. தியதி கீழ்க

11. ரைப் பூந்துறை நா

12. ட்டு மோட மங்

13. கலத்து பூச்சன்

14. தை வேட்டுவரி

15. ல் பெரிய பெரு

16. மாள் முத்தா

17. ண்டானேன் வ

18. டபரிசார நாட்டு ந

19. விரையான கப்பலன்

20. கிடாரன் தாம

21. ரைக் குளம் முத்

22. தாண்டாருடைய

23. உபையம்.

இவ்வாறு வாய்க்கால் வெட்டியும், குளம் வெட்டியும், வளம் பெருக்கிய இத்தமிழ் மண்ணின் மைந்தர்களான வேட்டுவச் செம்மல்களைச் சங்க காலத்திலேயே கிணறுகளை வெட்டித் தன் கால்நடைச் செல்வங்களுக்குரிய நீரைச் சேமித்து வைத்திருந்த வரலாற்றில் ஒன்றினை மட்டும் நற்றிணை எனும் சங்ககால நூலில் 92 - ம் ஆம் பாடலின் மூலம் காண்போம். மலைப்பகுதியில் வேட்டுவரின் குடியிருப்பான வேட்டச் சீறூரின் அருகே கால்நடைகளுக்கெனக் கிணற்று நீர் பாத்திரங்களில் சேமிக்கப்பட்டு விற் பொறியால் மூடப்பட்டுள்ளது. பெண் யானைகள் இம்மூடிகளைத்தகர்த்துத் தம் கன்றுகளை நீர் பருகச் செய்கின்றன (நற்: 92).

வானியாறு

வானியாறு காவிரியின் உபநதியாகும் இந்த ஆறு கேரளத்திலுள்ள அட்டப்பாடி பள்ளத்தாக்கில் உற்பத்தியாகிறது. இதனுடைய உபநதிகள் குன்றூராறு, பாய் கரையாறு, பாயாறு, கல்லாறு என்பவனாகும். நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட கொங்கு நாட்டின் மேற்கு எல்லையாம் மேற்குத் தொடர்ச்சிமலையில் இவ்வாறு உற்பத்தியாகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பாலைக்காட்டுக் கணவாய்க்கு வடக்குப் பகுதி வடமலை என்றும் தெற்குப் பகுதி தென்மலை என்றும் அறியப்படுகிறது.

வட மலையில் தோன்றும் ஆறுகள் வானி என்றும், தென்மலையில் உற்பத்தியாகும் ஆறுகள் பொருநை என்றும் சங்க காலப் புலவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. வடமலையில் சிறுவானி பெருவானி என இரண்டு ஆறுகள் உற்பத்தி ஆகின்றன. இன்று சிறுவானி ஆறு கோயம்புத்தூர் நகரின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. வடமலையில் உற்பத்தியாகும் பெருவானி ஆறு பவானி கூடுதுறையில் காவிரி ஆற்றில் சங்கமம் ஆகிறது.

காவேரி நதிக்கு அகத்திய முனிவர் பெருமை சேர்த்தது போல் வானி நதியாகிய பவானி நதிக்கு துருவாசக முனிவர் பெருமை சேர்த்திருக்கிறார். வானியாறு மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி கீழே வர வர பல சிற்றோடைகளும் சிறு நதிகளும் இணைந்து பெரியதொரு ஆறாகப் பெருக்கெடுத்து பெருவானி என்று பெயர் பெற்றது. இன்று பவானி என்றும் அழைக்கப்படும் இவ்வாறு அன்று வானியென்றும் பெருவானி என்றும் சங்ககாலத்தில் அழைக்கப்பட்டு வந்தது. இன்று வானி நதிகரையில் உள்ள வானிபுத்தூர், கீழ்வானி, மேவானி, வானி நாவலூர் (அத்தானி) எனும் ஊர்களே இவ்வாறு வானி என்று அழைக்கப்பட்டதற்குச் சாட்சியம் கூறுகின்றன.

இவ்வானி ஆறு கொங்கு நாட்டில் உள்ள அந்தியூர் வடகரை நாடு, ஒடுவங்க நாடு, காஞ்சிக்கோயில் நாடு என்னும் மூன்று நாடுகளுக்கிடையே தவழ்ந்து வருகிறது. இவ்வாற்றின் அழகையும் தெளிவையும் சேர மன்னர்களின் வரலாறு கூறும் பதிற்றுப்பத்தில் காண்போம்:

**"கழை நிலைபெறா அக்குட்டத்து ஆயினும்
புனல் வாய் மகளிர் ஆட ஒழிந்து
பொன் செய் பூங்குழை மீ மிசைத் தோன்றும்
சாந்து வரு வானி நீரினும்
தீந்தன் சாயலன் மன்றதானே"**

இப்பாடல் வரிகள் பதிற்றுப்பத்தில் உள்ள ஒன்பதாம் பத்தில் பெருங்குன்றூர் கிழார் சேரமன்னன் இளஞ்சேரல் இரும்பொறையைப் பற்றிப் பாடியது ஆகும். சேர மன்னர்கள் வரலாறு கூறும் செந்தமிழ் இலக்கியமாம் பதிற்றுப்பத்தில் பவானி ஆறு வானி ஆறு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

‘‘ஓடக்கோல் அண்டாத ஆழமுடைய இடத்திலும் நீரில் பாய்ந்தாடும் மகளிர் காதில் இருந்து கழன்று விழுந்த பொன்னால் ஆகிய காதணிகள் நீரின் மேலிருந்து பார்க்கத் தெளிவாகத் தெரியும் தெளிந்த நீரைக் கொண்டதும், சந்தன மரங்களை அடித்துக்கொண்டு வருவதுமான வானி என்னும் ஆற்றின் நீரைக் காட்டிலும் மென்மை உடையவனாக இளஞ்சேரல் இரும்பொறை விளங்குகின்றான்’’ என்பது அப்பாடலின் பொருளாகும்.

வேட்டுவரின் பெருமை

கொங்குச் சோழர் காலத்தில் கொங்கில் வேட்டுவர்கள் காணி ஆட்சி பெற்றிருந்தனர். வடபாரிசார நாட்டு ‘‘கோசனம் காணியாளர் முன்னை வேட்டுவர்’’ என்றும் சாந்தப் படை வேட்டுவர், கரைய வேட்டுவர், பூந்துறை நாட்டு அறச்சலூர் காணியாளர்கள் என்றும் சிற்றூர் படவோடு குறிச்சி, அஞ்நூற்றுமங்கலம், மழபாடி வடகரை நாட்டு இருப்புலி, தென்னிலை ஆகிய ஊர்களில் வெங்கட்சி வேட்டுவர் காணியாளர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதிகாரிகளாகச் (வேளான்களாக) சில வேட்டுவர் கூறப்படுகின்றனர். அவர்கள் கொடுக்கி மங்கலம், ஆப்பக்கூடல், வேம்பத்தி, கரூர் போன்ற ஊர்களில் இருந்துள்ளனர்.

ஊர்ப் பெயர்களும், நாட்டுப் பெயர்களும், கோவில் பெயர்களும் வேட்டுவர் குடிப் பெயர்களால் உருவாகியுள்ளன. வெங்கம்பூர் வெங்கச்சி வேட்டுவர் குடிப்பெயரிலும், கிழங்கு நாடு கிழங்க வேட்டுவர் குடிப்பெயரிலும், முன்னை ஆளுடையார் (கொடுவேரி) முன்னை வேட்டுவர் குடிப்பெயரிலும் ஏற்பட்டன என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

கல்வெட்டுகளில் வேட்டுவரில் வேளான் என்பதில் ‘வேளான்’ என்ற சொல் அரசியல் அதிகாரி அல்லது நன்கொடையாளர் என்பதையே குறிக்கும் ‘வேள்’ என்ற சொல் குறுநில மன்னன் என்பதைக் குறிக்கும் பாரிவேள், கொங்கு வேள், இருங்கோவேள் (இருக்கு வேள்), அந்துவன் வேன் மான் ஆய்வேள் எனும் ஆய் எயினன் ஆய் அண்டிரன் ஆகியவர்கள் குறுநில மன்னர்கள் ஆவர்.

வேட்டுவரின் தானம்

வேட்டுவர்கள் பலர் சிவன் கோயில்களுக்குத் திருநிலைக்கால் மண்டபம் ஆகியவற்றைக் கட்டியுள்ளனர். அறச்சலூர் சிவன் கோயிலுக்குத் திருநிலைக்காலும், மண்டபமும் உருவாக்கியுள்ளனர். வெங்கம்பூர் சிவன் கோயிலுக்குப் புல்லை வேட்டுவன் வெங்கம்பூரைத் தானமாக அளித்தான், கொடிவேரி முன்னை ஆளுடையார் கோவிலுக்குச் சந்தி விளக்கு வைத்தான் சிறுத்தலை வேட்டுவரில் இருங்கோளன் மகன் ஆவார்.

வேட்டுவர் குலத்தில் சோழர்

இராமாயணத்தில் சொல்லப்படும் கதிரவ குலம் (சூரியவம்சம்) பழஞ்சோழக் கிளையும் ஆகும். முசுகுந்தன், மாந்தாதா, சிபி முதலியோர் தென்னாட்டுச் சோழர் குடிக்கும், வட நாட்டுக் கதிரவ குலத்திற்கும் பொது முன்னோராகக் கொள்ளப்படுதல், இவ்விரு குடிகளும் ஒரே குலத்தைச் சேர்ந்தமையாலேயே சிபியின் வழியினன் ஆதலாலேயே சோழன் 'செம்பியன்' எனப்பட்டான். பிற்காலத்துத் தெலுங்குச் சோடர் (சோழர்) மொழி பற்றிப் பிரிந்து போனது போன்றே, முற்காலத்துக் கதிரவகுல வடவரசரும் மொழியும் சேய்மையும் பற்றி பிரிந்து போயினர் என்க.

நாரதனை மூவுலகு முலாவி (திரிலோக சஞ்சாரி) என்றது சேர, சோழ, பாண்டிய நாடுகள் பற்றியே உலகம் என்பது முதலாகு பெயராய் நாட்டையும் குறிக்கும். இத்துணைப் பழமை வாய்ந்த சேர, சோழ, பாண்டியக் குடிப்பெயர்கள் தமிழன்றி வேறு மொழியாய் இருத்தல் முடியாது. ஆயினும் ஆரிய வெறியர் இந்திய நாகரிகத்தை ஆரியமாகக் காட்டல் வேண்டி மூவேந்தர் குடிப்பெயரையும் வடநாட்டுத் தொடர்பு கொண்டு வடசொல்லாகக் காட்டி வருகின்றனர். (தமிழ் வரலாறு. ஞா. தேவநேயப் பாவணர் பக்கம். 55 -56).

முதலாம் இராசராசன் (கி.பி. 985 - 1012) சேர நாட்டின் மீது படை எடுத்து கொல்லம், கொடுங்கோளூரை வென்று 'கீர்த்தி பராக்கிரமன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இக்காலத்தில் குடகு எனப்படும் குடகு மலை நாட்டைத் தாக்கி 'பனசோக' என்னுமிடத்தில் அதன் அரசன் கொங்காள் வாரை வென்றார். 'மனிசா' என்பவர் இராசராசனுக்காகப் போரிட்டு வெற்றி வாய்ப்பை அளித்ததால் "சத்திரிய சிகாமணி கொங்காள்வான்" என்னும் பட்டம் அவருக்கு வழங்கி 'மாளவ்வி' என்ற ஊர் ஒன்றை அளித்தார். மனிசாவின் மரபினர் சுமார் நூறு ஆண்டுகள் வரை சோழர்கட்கு அடங்கிய குறுநில மன்னராய் கொங்காள்வான் என்னும் பட்டத்துடன் குடுகு நாட்டில் அரசாண்டு வந்தனர். எனவே அப்போர் நிகழ்ச்சிக்குப் பிறகு குடகுமலை அம்மனிசா என்பவருக்கே அளிக்கப்பட்டது. அம்மனிசா என்பவன் சோழக் குடியினன் ஆவான். சிபியின் வழியினர் சோழர் என்பதால் 'செம்பியன்' எனப்பட்டனர். மேற்கூறிய மனிசாவும் 'செம்பகுலம்' என்னும் வேட்டுவ குலத்தில் தோன்றிய சோழக்குடியினர் ஆவான். கொடிவேரி (கொடிவேலி, கொடுவேரி)

கொடிவேரி என்பது ஒரு சிறந்த மருத்துவச்செடியாகும். இது சங்க காலம் தொட்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. தமிழ்ச் சொல் தொகுதியில் இச்செடி கொடுவேரி, கொடுவேலி, செங்கொடு வேலி எனக் குறிக்கப்பட்டுள்ளது. கொடுவேலியில் மூன்று வகை உண்டு; அவை வெண் கொடிவேலி, கருங்கொடு வேலி, செங்கொடி வேலி எனப்படும். இதில் வெண்கொடி என்பதை 'Plumbago Zeylania' என்று தாவரவியல் நூல்கள் குறிப்பிடுகின்றன. இதனுடைய வேர் அதிகமாக, சித்த மருத்துவத்திற்குப் பயன்படுகின்றது. இதனைப் பதார்த்த குணவிளக்கம் எனும் நூல் 'கொடிவேலி' எனக் கூறுகிறது.

செங்கொடி வேலி நஞ்சு நிறைந்த கொடியாகும். செங்கொடி வேலியைத் தாவர நூல்கள் 'பிளும்பாகோ ரோஸியா' (Plumbago Rosea) எனக் குறிபிடுகின்றன. சிகப்புப் பூக்கள் கொண்ட இனம் செங்கொடி வேரி எனப்பட்டது. பொதுவாக, கொடிவேலியும் சித்திரமூலமும் ஒன்றே ஆகும். செங்கொடிவேலி சிவப்புச் சித்திரமூலம் என அழைக்கப்பட்டது. பத்துப்பாட்டுகளில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டு செங்கொடு வேலியைக் குறிக்கிறது.

'ஒண் செங்காந்தள் ஆம்பல் அனிச்சம்
தண் கயக் குவளை குறிஞ்சி வெட்சி
செங்கொடுவேரி தே மா மணிச்சிகை' (குறிஞ்சிப்பாட்டு: 65.64)

இக்குறிஞ்சிப்பாட்டு குறிக்கும் பல்வேறு மலர்களில் செங்கொடுவேலிப் பூவும் குறிக்கப்பட்டுள்ளது. எனவே சங்க காலத்தில் இச்செடி பற்றியும் அறிந்திருந்தனர் என்பது புலப்படுகிறது. மேலும் இச்செடியைப் பற்றி சிலம்பும் குறித்துச் சொல்கிறது.

பெருங்கதை என்னும் சமண நூலில், இச்செங்கொடுவேரி குறிக்கப்பட்டுள்ளது. 'பெருங்கதை' கொங்கு வேளிர் என்பவரால் இயற்றப்பட்ட ஒரு தொடர்நிலைச் செய்யுள் ஆகும். இவர் கி.பி. 7 - ஆம் நூற்றாண்டில் கொங்கு நாட்டில் விசயமங்கலத்தில் வாழ்ந்தவர் என்பதால் இக்கொடிவேலியும் கொங்கு நாட்டில் 7 - ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனலாம்.

கொடிவேரி அணை

குடநாட்டின் மன்னனாக இராசராசன், இராஜேந்திரன் எனும் சோழர்கள் கொங்கில் சிறப்புற்று இருந்தபோது சுமார் நூறு ஆண்டுகள்

வரையில் சோழர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனாகக் குட நாட்டில் அரசாண்டு வந்தான். பின் இவன் சந்ததியினர் குலோத்துங்கன் ஆட்சியில் (கி.பி. 1070 - 1125) வடகரை நாட்டில் இன்று பெரிய கொடிவேரி என்று அழைக்கப்படும் குளவாற்றூர் எனும் ஊருக்கு ஊராளியாகப் பொறுப்பேற்று பின் அவன் ‘செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்’ எனும் பட்டப் பெயர் பெற்று கொங்கு நாட்டின் அரசியல் அதிகாரி ஆனான். செயங்கொண்டான் என்பது முதல் இராசராச சோழனின் பட்டப் பெயராகும். இவர் காலத்தில் வானி ஆறு பெரிய கொடிவேரியில் பாறைகளால் தடுக்கப்பட்டு குளம் போல் காட்சியளித்ததால் ’குளவாற்றூர்’ என்று அழைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வானி (பவானி) ஆற்றைக் குளமாகக் கட்டியதால் குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவர் என்று அழைக்கப்பட்டார். ஊராளி என்றால் ஊரை ஆளும் மக்கள் தலைவன் என்று பொருள்படும். அவர் சோழர் ஆட்சி காலத்தில் ஊராளும் தலைவராக மட்டும் இல்லாமல் சோழனின் அரசியல் அதிகாரியாக இருந்தமையால் ’செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்’ என்ற பட்டத்தை பெற்றிருந்தார். அவர் சோழனின் அரசியல் அதிகாரியாக இருந்ததால்தான் கொடிவேரி அணையைக் கட்ட முடிந்தது. கொங்கு நாட்டின் முதன் முதலில் வாணி (பவானி) ஆற்றைத் தடுத்து குளம் ஆக்கி இருகரைகளிலும் வாய்க்கால்களும் வெட்ட முடிந்தது. வடகரையில் உள்ள வாய்க்கால் அரக்கன் (அரசன்) கோட்டை வாய்க்கால் என்றும், தென்கரையில் உள்ள வாய்க்கால் தடப்பள்ளி வாய்க்கால் என்றும் அழைக்கப்படுகிறது. கொடிவேரி அணை இன்று ஒரு சிறந்த சுற்றுலா தளமாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சோழர்கள் காலத்தில்தான் நீர்ப்பாசனமுறை சிறந்து விளங்கியது என்பதை யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

கொடுவேரி அணை கட்டியபின் கொடுவேலி என்பது கொடுவேரி என்று ஆகி, பின்னர் தென்கரைக் கொடிவேரி என்றும், அணையின் வடகரையில் இருந்த குளவாற்றூர் வடகரைக் கொடிவேரி என்றும் அழைத்தனர். தற்போது இக்கரைக் கொடிவேரி என்றும், அக்கரைக் கொடிவேரி என்றும் மக்கள் அழைத்து வருகின்றனர்.

கொடிவேரி அணையின் நீர்பாசனம்

900 - ஆண்டுகளுக்கு முன்பு கொடிவேரிப் பகுதியில் அடர்ந்த மரங்கள் மிகுந்து, விலங்குகள் வாழ்ந்த காட்டுப் பகுதியாகும். இந்தக் காட்டின் வழியேதான் பவானி ஆறு பாய்ந்து ஓடுகிறது. இந்தப் பகுதியில் இயற்கையாகவே குளம் போல் இருந்ததால் சோழக்கொங்காள்வான் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டும் முயற்சியில் ஈடுபட்டான் அதற்குத் தேர்ந்தெடுத்த இடம் தான் கொடிவேரி. இந்த இடத்தில் பவானி ஆறு இயற்கையாகக் குளம்போல் தேங்கி இருந்ததால் இவ்வூர் குளவாற்றூர் என்று அழைக்கப்பட்டது.

பொதுவாக, கொங்கு நாட்டில் பவானி, காவேரி போன்ற ஆறுகள் பாறைகளின் மேல் தான் ஓடுகின்றன. அந்தப் பாறைகளைக் கொண்டு அணைகட்டி நீரைத் தேக்கினார் சோழக் கொங்காள்வான். எதிர்காலத்தை எண்ணியவாறு இரு கரைகளிலும் வசிக்கும் மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் அணையின் வடக்குப் பக்கம் ஒரு கால்வாயும், தெற்குப் பக்கம் ஒரு கால்வாயும் வெட்டினார். வடக்குப் பக்கம் கால்வாய் பெருமுகை வரை செல்கிறது. இந்தக் கால்வாய் அரக்கன் (அரசன்) கோட்டை கால்வாய் என்று மக்களால் அழைக்கப்படுகிறது. அதன் பிறகு பாசன வசதிக்காகத் தெற்கு பகுதியில் உள்ள கால்வாய் 40 கிலோமீட்டர் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கவுந்தப்பாடி அருகில் உள்ள பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் வரை செல்கிறது. இது தடப்பள்ளிக் கால்வாய் என்று அழைக்கப்படுகிறது. இது மேலும் 26 கிலோ மீட்டர் தூரம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கொடிவேரி அணைக்கட்டின் மூலம் பல ஆயிரம் ஏக்கர் விலை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. மேலும் இந்த வட்டாரமே கோடையிலும் வற்றாத நிலத்தடி நீரைப் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், கி.பி. 11 - ஆம் நூற்றாண்டிலேயே கொங்கு நாட்டில் மிகச்சிறந்த நீர்ப்பாசன வசதி பெருக்கியவர்கள் வேட்டுவ ஆட்சியாளர்கள்

என்று உறுதியாகத் தெரிகிறது. கொடிவேரி என்பது ஒரு மருத்துவ குணம் கொண்ட ஒரு கொடியாகும். கொடிவேரிச் செடிகளின் பூக்கள் நிறைந்த சோலையாக இன்றைய கொடிவேரி அணையின் தென்கரையில் விளங்கியது. அச்சோலையில் முன்னை வேட்டுவரால் கட்டப்பட்ட முன்னை ஈசுவரர் கோயில் இருந்தது. இந்த முன்னை ஈஸ்வரர் கோயிலை இன்று அணைமுனீஸ்வரர் என்று அழைக்கின்றனர். இன்றும் இக்கோயிலுக்கு பொங்கல் வைத்து பூஜை செய்த பின்னரே அணையில் இருந்து பாசனத்திற்கு - அரக்கன் (அரசன்) கோட்டை வாய்க்காலுக்கும், தடப்பள்ளி வாய்க்காலுக்கும் நீர் திறந்து விடப்படுகிறது. சோழர் ஆட்சிக் காலத்தில் கொங்கில் நீர்ப்பாசன வசதிகளைப் பழங்குடி பகுதிகளில் உருவாக்கினர். ஆறுகளில் இருந்து கால்வாய்களையும், குளங்களையும், கிணறுகளையும் வெட்டினர். நீர்ப்பாசனம் பற்றிய கல்வெட்டுகள் பழங்குடிகள் வாழ்ந்த பல ஊர்களில் காணப்படுகின்றன திங்களூர், பாரியூர், அன்னூர், சேவூர், கோயில்பாளையம், இடிகரை, பேரூர், முடுதுறை, கருவூர், வெஞ்சமாங்கூடல், கொழுமம், குமரலிங்கம், கடத்தூர், ஆனைமலை, ஈரோடு, அந்தியூர், கருவலூர் போன்ற ஊர்களில் கால்வாய் வெட்டியமை பற்றியும் குளம் வெட்டியமை பற்றியும் பல கல்வெட்டுகள் பேசுகின்றன. இவற்றில் சிலவற்றைப் பழங்குடியைச் சேர்ந்தவர்களே வெட்டியுள்ளனர். அரசர்களும், சாமந்தர்களும், பிராமணர்களும் கோயில்களையும் நீர்ப்பாசன வசதிகளையும் செய்தனர்.

கொடிவேரி அணையில் உள்ள கல்வெட்டு



1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்
2. துங்க சோள தேவற்
3. கு யாண்டு ஐம்பத்து அ
4. ஞ்சாவது வடகரை நாட்டு
5. க்குளவாற்றூரிலிருக்கும்
6. ஊராளி செம்ப வேட்டுவ
7. ன் தொண்டையன் பிள்ளா
8. நான் சயங்கொண்ட சோழ
9. க் கொங்காள்வானேன் இக்குள
10. ம் அட்டிக்
11. காலும் வெட்டி
12. விச்சேன் இது
13. ஆக்குவான் பா
14. தம் எந்தலைமேல்
15. இது அழிப்பான் வழி
16. அறுவான்

கி.பி. 11 - ஆம் நூற்றாண்டில் கொடிவேரி வேட்டுவர்களின் காணியாக இருந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது. கொடிவேரி ஆற்றங்கரையில் உள்ள கல்வெட்டு வரியில் “இக்குளம் அட்டிக் காலும் வெட்டிவிச்சேன்” என்று உள்ளது.

முதலாம் குலத்துங்கனின் ஆட்சி காலத்தில் (கி.பி. 1070 1125) கொங்கு மண்டலத்தின் 24 நாடுகளில் ஒன்றான வடகரை நாட்டில் ஊராளி செம்ப வேட்டுவர் குலத்தலைவன் ஜெயங்கொண்ட சோழக் கொங்காள்வான்.

முதலாம் குலோத்துங்கனின் ஐம்பத்து ஐந்தாவது ஆட்சிக் காலத்தில் சோழக் கொங்காள்வான் குளவாற்றூரில் (கொடிவேரி) பவானி ஆற்றின் குறுக்கே பெரிய பாறைகள் மற்றும் கற்களைக் கொண்டு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தினான். கொடிவேரி அணை சத்தியமங்கலத்தில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் கோபி செல்லும் சாலையில் உள்ளது. இதன் பழைய பெயர் குளவாற்றூர் கிராமம் இன்று கோபி வட்டத்திற்கு உட்பட்டதாக உள்ளது.

வில் முத்திரை

ஆதி காலங்களில் வேட்டுவர்கள் மலையன், வேடன், எயினன், வெற்பன், சிலம்பன், குறும்பியன் எனும் திணை நில மக்களாக வாழ்ந்து வந்தனர். சங்க காலத்தில் வேளிர் (சிற்றரசர்), கிழான் (மக்கள் தலைவன்) கொங்கன் (கொங்கின் இனக்குழுச் சிற்றரசர்கள்), மழவன் (மழங்கொங்கின் சிற்றரசர்கள்) எனும் வேட்டுவச் சிற்றரசர்களாய் வாழ்ந்து வந்தனர். பின்பு சேரப் பேரரசு இவ்வேட்டுவச் சிற்றரசுகளின் மேல் சங்ககாலத்தில் போர் செய்து கொங்கு நாட்டினைக் கைப்பற்றி ஆண்டனர்.

சேரனை வானவன், (வானை முட்டும் மலையினை உடையவன்), மலையன், வெற்பன் (வேடன்), மழவன், பொறையன், கொங்கன், வில்லவன், வஞ்சி வேந்தன், கொல்லிச் சிலம்பன், கோதைக் கேரளன் போன்ற பல பெயர்களில் கூறுகின்றனர். சேரநாடு மலைவளங்களும், மலைப்பொருட்களும் அதிகமாகக் கிடைக்கும் நாடு ஆகும். **"கற்காலத்தில் தமிழன் காடுகளில் வாழவில்லை மலையில் வாழ்ந்தான் அதனால் பிறநாட்டுக் கற்கால மனிதன் போல் காட்டு மிராண்டியாய் இல்லை இவனே இம்மண்ணின் மைந்தன்"** என்று இராமச்சந்திர தீட்சிதர் கூறுவார். மற்ற உலக நாகரிகங்கள் நதிக்கரையில் தோன்றியது என்றால் தமிழர் நாகரிகம் மலைகளில் தோன்றியது ஆகும். பொதிய மலையில் தமிழ்மொழி பிறந்ததாகக் கூறுவதும், குறிஞ்சிக் கடவுள் முருகன் தமிழ்க் கடவுளாகக் கூறப்படுவதும் இதனால்தான். குறிஞ்சிக் கோமரபினர்கள் ஆகிய வேட்டுவர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் ஆவர்.

சேரனின் முத்திரை ’வில்’ முத்திரை ஆகும். குமரி முதல் காளத்தி (வேங்கடம்) வரை உள்ள அனைத்து வேட்டுவ மக்களின் சின்னமும் இந்த வில் முத்திரைதான். வேளிர் என்ற சேரர் கொடி குறுநில மன்னனர்களும் வேட்டுவ மன்னர்கள் தான். ஆதிதிவாரகம் என்ற நிகண்டு சேரனை,

“பூமியன் உதியன் கொங்கன் பொறையன்
வானவன் குட்டுவன் வானவரம்பன்
வில்லன் குடநாடன் வஞ்சிவேந்தன்
கொல்லிச் சிலம்பன் கோதை கேரளன்
போந்தின் கண்ணிக் கோ ஆன்பொருனைத் துறைவன்
சேரலன் மலையமான் கோச்சேரன் பெயரே”

என்று பெயர் சொல்லிச் சேரன் வேட்டுவ மரபினன் என்பதை உறுதி செய்கிறது.

மணல் போக்கித் தொழில்நுட்பம்

கொடிவேரிஅணைக்கட்டின் மையப் பகுதியில் தண்ணீர் குவி மையத்தில் கிணறு வடிவில் சுரங்கமே வெட்டப்பட்டிருக்கும். இது அணைக்கு வெளியே தண்ணீர் திறக்கப்படும் இடத்துக்கு சுமார் 20 - அடி தூரத்திற்கு அப்பால் செல்கிறது. சுரங்கத்தின் வாய்ப்பகுதி அகலமாகவும்

உள்ளே செல்ல செல்ல குறுகளாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. சுரங்கத்துக்குள் கல்லால் ஆன நுட்பமான சல்லடை அமைப்புகள் மற்றும் கல்லால் செதுக்கப்பட்ட பல்வேறு வடிவங்கள் செய்யப்பட்டிருக்கும். மணல் போக்கிகளைக் கரையிலிருந்து மூடும் வகையில் சங்கிலியால் பின்னப்பட்ட கதவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மணல் போக்கிகள் மணலையும் சேற்றையும் உள்ளே இழுத்து மறுபக்கம் சுரங்கத்தின் துவாரம் வழியாக அணைக்கு வெளியே தள்ளிவிடும், இதன் மூலம் அணையில் மணலும், சேரும் தாங்காது. மேலும் இதன் வழியே வரும் தண்ணீரும் வெளியேறாது என்பது இதன் சிறப்பு. இந்த அணையின் தனிச்சிறப்பு இது தன்னைத்தானே தூர்வாரிக் கொள்ளும் வகையில் கட்டப்பட்டுள்ளது. இவ்வளவு அரிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேட்டுவ ஆட்சியாளர்கள் அணையைக் கட்டியுள்ளனர்.

நீர் மேலாண்மைத் தொழில்நுட்பம்

தடப்பள்ளிக் கால்வாயும், அரக்கன் கோட்டை கால்வாயும் ஆற்றை ஒட்டிய இருபுறமும் செல்கிறது. இதனால் ஆற்றின் நீரோட்டம் திசை திருப்பப்படுவதில்லை. மேலும் அணைக்குக் கீழே இருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் நீர்வரத்து எந்த விதத்திலும் குறையாத வண்ணம் ஆற்றில் இருந்து கால்வாய்களுக்குச் செல்லும் நீர்

வயல்வெளிக்குச் சென்று அதன் கசிவுநீர் மீண்டும் ஆற்றுக்கே வந்து விழும் வகையில் கட்டப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு பாசன நிலம் தனக்குத் தேவையான நீர் போக மீதியை மீண்டும் ஆற்றுக்கே அனுப்பி விடுகிறது. தடப்பள்ளி அரக்கன் கோட்டை கால்வாய்களில் மிகச் சிறந்த நீர் மேலாண்மை காரணமாக இன்றும் கொடிவேரி அணையில் பாசனத்திற்கு வினாடிக்கு 800 கன அடி நீர் திறந்தால் அந்தத் தண்ணீர் இடைப்பட்ட பகுதிகளுக்குப் பாய்ந்து பயன்தந்து மீதிநீர் 400 கன அடியாக ஆற்றுக்கே சென்று சேர்கிறது.

கொடிவேரி அணையில் இருந்து பிரிக்கப்படும் அரக்கன்கோட்டை வாய்க்காலும், தடப்பள்ளி வாய்க்காலும் பழையகரை வாய்க்கால் என்று அழைக்கப்படுவதால் இவ்விரு வாய்க்கால்களே கொங்கு நாட்டில் முதன் முதலில் வெட்டிய வாய்க்கால் என்பது புலப்படும். எனவே சோழர்கள் ஆட்சிக் காலத்தில் இக்கால்வாய்கள் வெட்டப்பட்டன என்பதே வரலாற்று உண்மையாகும். கரிகாலன் கட்டிய கல்லணையை நினைவுகூரும் வகையில் அந்தியூர் வடகரை நாட்டு குளவாற்றூர் குலோத்துங்க சோழனின் அரசியல் அதிகாரியான ஊராளி செம்ப வேட்டுவன் தொண்டையன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் வானி (பவானி) ஆற்றை கொங்கில் முதன் முதலில் தடுத்து அணைகட்டி குளம் உண்டாக்கி இரு கரைகளிலும் வாய்க்காலும் வெட்டினார். இக்கொடிவேரி அணையைப் பிற்காலங்களில் வந்த சிற்றரசர்கள் பழுது பார்த்திருக்கலாம், ஆனால் முதன் முதலில் சோழர்கள் ஆட்சி காலத்தில் இவ்வணையைக் கட்டியது வடகரை நாட்டு குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவன் ஆன செயங்கொண்ட சோழக் கொங்காள்வான் என்பதே வரலாற்று உண்மையாகும்.

வேட்டுவர்கள் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் மிக உன்னதமான நிலையில் இருந்தனர். வேட்டுவர்கள் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் 32 ராயர் குலம் இலட்சத்து எட்டு வீரக்குலத்தவர்களும் வீரத்தண்டும் வெற்றி வாளும் புலிக்கொடியும் பெற்றிருந்தனர் என்று பட்டய காளிபாளையத்தில் காலத்தீஸ்வரர் ஞானப்பூங்கோதை கோயிலில் உள்ள சோழர் கால கல்வெட்டு கூறுகிறது.

"It is dated in the 55th year of the region of the Kongu King Kulothunga and records the gift of a tank and excavation of a channel by Semba - Vettuvan Thondaiyan - Pillai alias Jayankonda Chola - Kongalvan of Kula attur in Vadakarai Nadu.

இந்தியத் தொல்லியல் துறை 1989 - 90 இல் மேற்கண்ட வடகரை நாட்டு செம்ப வேட்டுவனின் கல்வெட்டை மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

முடிவுரை

மேற்கூறிய கொடிவேரி பற்றிய ஐந்து வேட்டுவர் கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் வட பாரிசார நாட்டில் தென்கரைக் கொடுவேலி முன்னையீசுவரர் கோயிலுக்கு வட பாரிசார நாட்டுச் சிறுத்தலை வேட்டுவர்கள் சந்தியா தீபம் வைத்தது பற்றியது ஆகும். இம்மூன்று கல்வெட்டுகளும் கொடுவேலி முன்னையீசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் ஆகும். அடுத்த இரண்டு கல்வெட்டுகளும் கொடிவேரி பவானி ஆற்றங்கரை கல்வெட்டுகள் ஆகும். அதில் ஒரு கல்வெட்டு வடகரை நாட்டுக் கரை(ய) வேட்டுவர் வட பாரிசார நாட்டு கொடுவேலி திரு முன்னையீசுவரர் கோயிலுக்குச் சந்தியா தீபம் வைத்தது பற்றியது ஆகும். மற்றொன்று மேற்கூறிய வடகரை நாட்டுக் குளவாற்றூர் செம்ப வேட்டுவர் பற்றியது ஆகும். இன்றைய கொடிவேரி அணையின் தென்கரையில் உள்ள ஊர் கொடுவேலி என்றும், வடகரையில் உள்ள ஊர் குளவாற்றூர் என்றும் சோழர்கள் காலத்துக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

அந்துவன் ஆண்ட வடகரை நாட்டின் அந்தியூர்

அந்தியூர் ஆதினம், அடசப்பாளையம் **ஏ.கே. சந்திரசேகரன்**
அந்துவ (அந்தி) வேட்டுவர்,
அந்தியூர் வடகரை நாட்டுப் பட்டக்காரர்,
அருள்மிகு பத்ரகாளியம்மன் கோவில்,
அந்தியூர், ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு.

முன்னுரை

உலகில் முதன்முதலில் வேட்டுவச் சிற்றரசர்கள் தோன்றினர். அச்சிற்றரசர்களின் மேல்தான் சேரப் பேரரசு உருவானது. சேர மன்னன் குலசேகர ஆழ்வார் தன்னை வேட்டுவன் என்றே கூறுகிறார். இவர் பாடிய முகுந்த மாலையில் இவன் தன்னைக் கொல்லிக் காவலன், கொல்லி வெற்பன், கொல்லிச் சிலம்பன் மற்றும் கொங்கர் கோன் என்று கூறுகிறார்.

சங்ககாலக் கொங்கு என்ற தலைப்பில் கோவை அரசு கலைக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் பசுவலிங்கம் கூறியதாவது:கொங்கு நாடு, ‘கொங்கு நாடு, கொடு மனம், வேட்டுவர்’ என மூன்று கால கட்டங்களாகச் செயல்பட்டது. கொடு மனம் என்கிற காலகட்டத்தில் அரசு அமைப்பு ஏற்பட்டது. அப்போது வேட்டுவர்கள் என்கிற சிற்றரசர்கள் தோன்றினர்.(12.05.2012, தினமலர் நாளிதழ், கோவைப் பதிப்பு)

புறம். -168 ஆம் பாடல் வேட்டுவ அரசுத் தலைவனை **‘வடிநவில் அம்பின் வில்லோர் பெரும்’** என்கிறது. எனவேதான் சேரனின் சின்னம் வில் ஆனது. கொங்கில் வேளிர் சிற்றரசர் என்கிற சொல் வேட்டுவச் சிற்றரசர்களைச் சங்க காலம் முதல் சுட்டும் சொல்லாகும்.பின்பு இடைக் காலத்தில் ராயர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

சேரர் வேட்டுவரே

அரசு உருவாக்கத்தில் வேட்டுவர் என்ற தலைப்பில் வரலாற்றுச் சிற்பி பேராசிரியர் ம.இராசசேகர தங்கமணி கூறியதாவது, **“வில்லோர்**

அரசே கொங்கு நாட்டில் உருவான முதல் அரசு" ஆகும். இதனை வேட்டுவ அரசு எனவும் கூறலாம். வேட்டுவ இனப் பிரிவுகளுள் வில், வில்லிக் கூட்டங்கள் இருப்பதை நாமறிவோம். தொல்குடியினரான இவர்கள் வில்லை அரசுச் சின்னமாகக் கொண்டனர். கரூர் அமராவதி ஆற்றங்கரையில் இதுகாறும் நூற்றுக்கு மேற்பட்ட இருபக்கமும் வில் சின்னம் பொறித்த காசுகள் கிடைத்துள்ளன. இதில் சேர அரசின் சின்னமான யானை காணப்படவில்லை. எனவே, இதில் சேர அரசின் தலைவன் **'வில்லோர் பெரும'** என்று இலக்கியங்களில் சுட்டப் படுகிறான். (புறம் 169). இந்த அரசே சேர அரசாக நாளடைவில் உருவாயிற்று. வேட்டுவருள் சேர வேட்டுவர் என்கிற கூட்டப் பெயரும் உண்டு. பனைய வேட்டுவரும் உண்டு. வில்லோர், அரசு சேர அரசாக உருவான பின்னர், வில்லம்பும் யானையும் சேரரது அரசுச் சின்னமாக மாறியது.வெட்ட வெட்டத் தழையும் வேட்டுவர் படை என்பது முதுமொழி; வேட்டுவர்கள் போர்க்குணம் கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்ததே.

அந்துவன் குலம்

வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது என்கிற பழமொழியும் உண்டு. எண்ணற்ற வேட்டுவர் குலங்களில் இன்று அந்தி என்று அந்துவன் குலம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகம் எண் 3, புலிமான் கோம்பை, தேனி மாவட்டம். கி.மு. 3ஆம் நூற்றாண்டு நடுகல்:

"கல்பேடு தீயன் அந்தவன் கூடலூர் ஆ கோன்" பேடு என்னும் ஊரைச் சேர்ந்த தீயன் என்பாரின் மகன் அந்தவன். அந்துவன் ஆவினங்களைக் கவர்ந்து வருகையில் மரணம் எய்தினான் என்கிறது. அவனுடைய வீரச் செயலைப் போற்று முகத்தான் இந்த வீரக்கல் எழுப்பப்பட்டது. தீயன் என்னும் பெயர் அக்கினி குலத்தைச் சேர்ந்த சேர மன்னர் மரபுடன் தொடர்புடையதாக உள்ளது.



தீயன் என்றால் அக்னி குலத்தவன் என்று பொருள். வழக்கமாக நினைவுக் கல்லைக் குறிக்கும். கல் எனும் சொல் கல்வெட்டின் இறுதியில் தான் காணப் பெறும். ஆனால் இங்கு கல்வெட்டின் தொடக்கத்தில் உள்ளது. இது கி.மு. 3-ஆம் நூற்றாண்டு நடுகல். (நடன காசிநாதன் கல்லெழுத்துக் கலை, பக்கம் - 202) அந்தவன் என்பது அந்துவன் என்ற பெயரின் மாற்றுருவமாகும். இதுவும் பிழையன்று. அந்து என்ற பகுதி வெவ்வேறு விகுதிகளை ஏற்கும்போது, அந்து+அன்=அந்துவன் என்றும், அந்து+ அவன்=அந்தவன் என்றும் விரிவடைகிறது.

அந்தவன் என்ற பெயர் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த கி. மு. - 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பானை ஓடுகளில் பலமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (வி.சுப்பராயலு, கொடுமணல் பானை ஓடுகளில் பொறிப்புகள் 1996) புலிமான் கோம்பை நடுகற்கள் பலவகையாலும் சிறப்பு வாய்ந்தவையாகும்.

1. இந்தியாவிலேயே இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நடுகற்களில் கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவையே மிகவும் பழமையானதாகும்.

2. இக்கல்வெட்டுகள் பிராகிருத மொழிக் கலப்பின்றி தமிழில் எழுதப்பட்டுள்ளதுஇவற்றின் தனிச் சிறப்பாகும்.

3. இக்கல்வெட்டுகள் மதுரையிலிருந்து தொலைவில் (அக்காலத்தில் காடுகள் சூழ்ந்திருந்த) ஒரு சிற்றூரில் கிடைத்திருப்பது சங்க காலத்திலேயே தமிழகத்தில் பரவலாக எழுத்தறிவு இருந்தது என்பதற்கு உறுதியான சான்றாகும்.

(ஐராவதம் மகாதேவன், சென்னை ஆவணம் 17, 2006) சங்க காலத்தில் வேந்தர்களும், வேளிர்களும் அந்துவன் என்று பெயர் பெற்று விளங்கினர். அந்துவன் என்ற பெயர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட குகைகளில் உள்ள கல்வெட்டுகளில் காணலாம். திருப்பரங்குன்றம் கல்வெட்டு அந்துவன் கொடுபித்தவன் என்கிறது. திருப்பரங்குன்றத்தை அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை என்று அகம். 59-இல் மதுரை மருதன் இளநாகனார் சிறப்பித்துக் கூறுகிறார். அந்துவன் சேரல் இரும்பொறையின் நல்லிசைய புலமை வியந்தே பதிற்றுப் பத்து **ஏழாம் பதிகம் 'நெடுநுண் கேள்வி அந்துவன்'** என்று சிறப்பித்துரைக்கிறது.

வேட்டுவ அரசர்கள்

ஒன்பதாம் நூற்றாண்டில் ஆதித்ய சோழன் கொங்குமண்டலத்தின் மீது (கி.பி.880-905) படையெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்றிக் கொண்டான் என்று கொங்கு தேச ராசாக்கள் என்ற வரலாற்று நூல் கூறுகிறது. அந்நூல் கூறுவது சோழ வம்சத்திலே விசாயாட ராயன் மகன் ஆதித்தவர்மராயன் சோழ தேசம் தஞ்சாவூரிலே பட்டங்கட்டிக் கொண்டு கொங்கு தேசத்துக்கு வந்து ராசா வேடர்களைச் செயம் பண்ணி அந்த அரசை ஆண்டனன் என்பதாம்.

ஆதித்யா சோழன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் பொழுது கொங்கு நாட்டை வேட்டுவ ராசாக்கள் ஆண்டனர் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. கொங்கு தேச ராசாக்கள் சரிதம் கூறுவது உண்மை என்கிறது திருத்தொண்டர் திருவந்தாதிப் பாடல்:

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு
கொங்கிற் கனக மணிந்த ஆதித்தன்குல முதலோன்...

ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தைத் தன் வசப்படுத்திய பொழுது கொங்கு நாட்டை ஆண்டு கொண்டிருந்த வேட்டுவ ராசாக்கள் கொடுத்த பொன் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியை உறுதிப் படுத்துகிறது. எனவே, கொங்கு தேச இராசாக்கள் சரிதம் கூறும் ஒரு வரலாற்று நிகழ்ச்சி நம்பியாண்டார் நம்பியின் வாக்கினால் உறுதி செய்யப்படுகிறது.

அந்துவ வேட்டுவ அரசன் சுந்தரராயன்

சங்க காலத்தில் கருவூரைத் தலைநகரமாகக் கொண்டு அந்துவன் சேரல் இரும்பொறை முதல் கணைக்கால் இரும்பொறை வரை கொங்கு நாட்டைச் சீரும் சிறப்புடன் ஆண்டு வந்தனர். பதிற்றுப்பத்து எனும் சங்க நூல் சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றிப் பாடுகிறது. அதில் முதல் பத்தும் கடைசிப் பத்தும் இன்று காணாமல் போய்விட்டது.

சங்க காலத்தில் கொங்கு நாட்டை ஆண்ட அந்துவன் சேரல் இரும்பொறையைத் தொடர்ந்து இடைக்காலத்தில் அந்துவன் சேரல் இரும்பொறையின் கால் வழியினரான அந்துவ (அந்தி) வேட்டுவன் சுந்தராயன் அந்தியூர் வடகரை நாட்டை ஆண்டதைப் பற்றி இனி காண்போம்.

இன்று அந்தியூரின் அருகில் அடசப் பாளையத்தில் (அரசன் பாளையம்) வசிக்கும் அந்தியூர் வடகரை நாட்டு அரண்மனையாளர் சந்திரசேகர சுந்தராயர் அவர்களின் செப்புப் பட்டயம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

இப்பட்டயம் இந்தியத் தொல்லியல் துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது. ARE, 2014-15. இப்பட்டயத்தில், ஆண்டு எழுபத்து அஞ்சு ஆகிய ஆங்கிரசா வருடம் ஆடி மாதம் 18-ஆம் தேதி சேர, சோழ, பாண்டியன் மூவராசாக்கள் பெருமாள் கம்பன் உடைய அந்துவ வேட்டுவ சுந்தராயருக்கு அந்தி ஊரு வடகரை நாடு முப்பது கிராமமுள்பட ஆதீனம் செப்பேட்டு பட்டயம் குடுத்தது என்று கண்டுள்ளது.ஆதித்ய சோழன் சேரன்ஸ்தாணுரவி, பாண்டியன் பராந்தக வீரநாராயணன் (880-905) இவர்களால் கருவூரில் முடிசூட்டப்பட்டவன்தான் அந்தியூர் வடகரை நாட்டு அந்துவ (அந்தி) வேட்டுவச் சுந்தராயன்.கெட்டி முதலியார்களைப் பற்றிக் குறிப்பிடும் பகுதியில் வில்சன் என்ற ஆங்கில அறிஞர் கொங்கு மண்டலம் சேர, சோழ, பாண்டியர் காலத்திற்குப் பின்னாலும் வேட்டுவப் பாளையக்காரர்களால் சீரும் சிறப்புடன் ஆளப்பட்டு வந்தது எனவும், அவர்களே சங்ககிரி, சாமப்பள்ளி (தென்னிலை) காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் கோட்டைகள் கட்டிக் கொண்டு ஆண்டனர் என்று கூறியுள்ளார் (Wilson. P425. No. XVIII) சரம்பள்ளி, தென்பளை, காவேரிபுரம், அந்தியூர் ஆகிய இடங்களில் வேட்டுவர்கள் கோட்டை இருந்ததாகப் பாளையப்பட்டுக்களின் வரலாறு (தொகுதி: 1, பக்கம் 1-இல்) கூறுகிறது.

அந்தியூர் கோட்டை

வேட்டுவ மன்னர்கள் ஆட்சி செய்த தலைநகராக அந்தியூர் இருந்ததால் இவ்வூரில் பெரிய கோட்டை ஒன்று இருந்தது.

“இப்பெருங்கோட்டை 1 மைல் நீளமும் அகலமும் கொண்டது. மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்தில் இருந்த அரண்மனை, அத்தாணி மண்டபம், மந்திரிமார்கள் கூடம் ஆகியன அழிந்துவிட்டன. செல்வக் கடுங்கோ வழியாதனுடன் தொடர்புடைய செல்லீசுவரர் கோவில், அழகரசப் பெருமாள் கோவில், வீரபத்திரர் கோவில், பத்திரகாளியம்மன் கோவில், கோட்டை மாரியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றும் உள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இவை தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்பித்துள்ள வாழ்வியல் களஞ்சியம் முதல் தொகுதியில் உள்ளது.

நாயக்கர் ஆட்சிக் காலத்தில் திருமலை நாயக்கன் மதுரையை ஆண்டபோது அந்தியூர் கோட்டை செப்பனிடப்பட்டதாக நாயக்கர் வரலாறு கூறுவதால் அந்தியூர் கோட்டை திப்பு சுல்தானால் கட்டப்பட்டது என்பது வரலாற்றுப் பிழையாகும். அது வேட்டுவன் கோட்டை என்பதுதான் உண்மை.

ஈரோடு 6-3-2011 23

தினத்தந்தி

சுந்தரராய செப்பேடுகளை படிக்கும் மாணவிகளை படத்தில் காணலாம்.

ஆதித்ய சோழன் எழுதி கொடுத்த செப்பேடுகள்...

பண்டைய தமிழ் மன்னர்களின் ஆட்சி மற்றும் வாழ்க்கை முறைகள் செப்பேடுகள் மற்றும் கல்வெட்டுகள் நமக்கு தெளிவாக அறிந்துகொள்ள உதவுகின்றன. பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையை விளக்கும் வேள்விக்குடி செப்பேடுகள் போல் கொங்கு மண்டலத்தின் மீதுபோர் தொடுத்த ஆதித்ய சோழனை பற்றி விளக்கும் சுந்தரராய செப்பேடுகள் கோபி அருகே பாதுகாக்கப்பட்டு வருகிறது என்ற தகவல் கிடைத்ததும் நமக்கு ஒரே ஆச்சரியம்.

அதைத்தொடர்ந்து, சுந்தரராய செப்பேடுகளை பாதுகாத்து வரும் கோபி தாலுகா கள்ளிப்பட்டி அருகே உள்ள அடசப்பாளையத்தை சேர்ந்த அந்தியூர் காணியாளர் சந்திரசேகர் என்பவரை சந்தித்தோம். சுந்தரராய செப்பேடுகளை காட்டி நமக்கு விளக்கம் அளித்த சந்திரசேகர் கூறியது இதுதான்.

"அந்துவன் சேரன் இரும்பொறையை சேர்ந்த எங்களுடைய முன்னோர்கள் அப்போதைய கொங்கு மண்டலத்தை ஆண்டு சிற்றரசர்க[illegible] பங்கேற்றிருந்தார்கள். பண்டைய கொங்கு மண்டலம் பல்வேறு நாடுகளாக பிரித்து ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. அதில், பெருந்துறையில் இருந்து கோபி வரை எல்லையாக கொண்ட காஞ்சிக்கோவில் நாடு, அந்தியூர் முதல் பவானி-சத்தியமங்கலம் வரை எல்லையாக கொண்ட அந்தியூர் வடகரை நாடு, சத்தியமங்கலம் முதல் புஞ்சை புளியம்பட்டி வரை எல்லையாக கொண்ட ஒடுவங்கம் நாடு உள்பட பல்வேறு நாடுகளாக கொங்கு மண்டலம் பிரிக்கப்பட்டு இருந்தது.

இந்த பகுதிகளை கோக்கலை மூக்கன், முடிசேர நயினார், தொண்டைமானர் உள்பட பல்வேறு சிற்றரசர்கள் ஆட்சி செய்தனர். பசுமையான நில வளமும், நல்ல செல்வ வளமும் கொண்ட கொங்கு மண்டலத்தின் மீது பிற்கால சோழ அரசை நிறுவிய விஜயாலய சோழனின் மகன் ஆதித்ய சோழனின் பார்வை பட்டது. கொல்லம் நூற்றாண்டில் அதாவது கி.பி. 8 அல்லது 9-ம் நூற்றாண்டில் கொங்கு மண்டலத்தின் மீதுபோர் தொடுத்து கொங்கு மண்டலத்தில் இருந்து தங்கம் மற்றும் செல்வங்களை கைப்பற்றி சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு கொடுத்து விட்டார்.

நாட்டில் உள்ள அனைத்து வளங்களையும் எடுத்துக் கொண்ட ஆதித்ய சோழன் ஒவ்வொரு நாட்டையும் அப்போது ஆண்டு வந்த சிற்றரசர்களுக்கு செப்பேடுகள் மூலம் எழுதிக் கொடுத்தான். அதில், அந்தியூர் வடகரை நாட்டில் உள்ள ஆண்ட வேட்டுவ சுந்தரராயன் என்ற சிற்றரசருக்கு 30 கிராமங்களை எழுதிக் கொடுக்க முன் வந்தான். கருரில் உள்ள ஒரு சிவன் கோவிலில் வைத்து வேட்டுவ சுந்தரராயருக்கு 30 கிராமங்களையும் 2 செப்பேடுகள் மூலம் எழுதிக் கொடுத்தான். இதற்கு சுந்தரராய செப்பேடுகள் என்றும் பெயரிடப்பட்டு உள்ளது.

அந்த செப்பேடுகளை எங்களுடைய முன்னோர்கள் பாதுகாத்து வந்தனர். கால ஓட்டத்தில் அரசர்கள் மற்றும் அவருடைய வாரிசுகள் என தலைமுறைகள் மாறியது. அதன்பிறகு ஆங்கிலேயர் ஆட்சி வந்தது. தற்போது வரை அந்த செப்பேடுகளை பாதுகாத்து வருகிறோம். என்று கூறி நிறுத்திய சந்திரசேகர் மேலும் தொடர்ந்தார்.

எங்களுடைய முன்னோர்கள் காலத்தில் இருந்து பாதுகாத்து வரும் இந்த அரிய பட்டயத்தை தொல்பொருள் ஆராய்ச்சித்துறையை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பலர் பார்வையிட்டு ஆய்வு செய்து சென்றுவிட்டனர். கோவையில் நடைபெற்ற உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டில் நடைபெற்ற கண்காட்சியில் இந்த செப்பேடுகளை இடம்பெற வைக்க பெரும் முயற்சி எடுத்தேன். ஆனால் காலதாமதமாக எடுத்த முயற்சியின் காரணமாக செம்மொழி மாநாட்டு கண்காட்சியில் இடம்பெற முடியவில்லை. இருந்தாலும் யாருக்காவது பயன்பட வேண்டும். அதனால் ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு செய்வதற்கு உதவுவேன் என்றார்.

சந்திரசேகர்

இந்த அரிய கோட்டைப் பகுதியில் ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், உரோமாபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், உடைவாள்கள், பழமை மிக்க எலும்புத் துண்டுகள், பல நாணயங்கள், அகல் விளக்குகள், மண்பாண்டங்கள், மண்ணில் சுடப்பட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்றும் காணக்கிடக்கின்றன என்று தமிழ் பல்கலைக் கழக வாழ்வியல் களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வடகரை நாடு

அந்தியூர் வடகரை நாட்டுக் கல்வெட்டுகள் வேட்டுவர்களை நாட்டுக் காமிண்டர் என்றும் கொங்கன் என்றும் கொங்காள்வான் என்றும் ஊராளி (சிற்றூர் மன்னன்) என்றும் குறிப்பிடுகின்றன. அந்தியூர் செல்லீஸ்வரர் கோவில் கல்வெட்டுச் செய்தி பாசறை வேட்டுவரில் குறும்பன் கொங்கன் என்றும் வேட்டுவர்களைக் குறிப்பிடுகிறது.

வடகரை நாட்டுக் கொடிவேரிக் கல்வெட்டுச் செய்தி ஊராளி **செம்ப வேட்டுவன் தொண்டயன் பிள்ளான் ஆன செயங்கொண்ட சோழ கொங்காள்வான்** என்றும் வேட்டுவர்களை ஊராளி மற்றும் கொங்காள்வான் என்றம் சிறப்பிக்கிறது.

வேட்டுவர்களின் வரலாற்றைக் கல்வெட்டுக்களில் அள்ளித் தந்த உலகடமும், பட்லூரும் வடகரை நாட்டில்தான் இருக்கின்றன. சங்ககால வேட்டுவ வேந்தன் செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலர் தொடர்புடைய திருநனா எனும் ஊராட்சிக் கோட்டை மலையும் பாரி, நள்ளி இவர்களின் தொடர்புடைய பர்கூர் மலையும், அந்தி வேட்டுவரின் திருகடம்பூர் மலையும் மற்றும் பொறையர்பாளையமும், அரசன்பாளையமும் (அடசப்பாளையம்) வடகரை நாட்டின் வரலாறுகளை இன்றும் எடுத்துரைக்கின்றன.

உலகடத்துக் கள்ள வேட்டுவன், நெரிஞ்சிஊர் சாமவேட்டுவன், கோட்டை நவுலூருபுள்ளை வேட்டுவன், கேசரமங்கலம் வன்னி வேட்டுவன், ஊராச்சிக்கோட்டை பரிபடை வேட்டுவன்,சம்பை அந்து வேட்டுவன், வெள்ளை வேட்டுவன், ஆப்பக்கூடல் படைத்தலை வேட்டுவன், கீழ்வானி கிழங்கு வேட்டுவன், திருக்கடம்பூர் அந்து வேட்டுவன், வேம்பத்தி வேம்பு வேட்டுவன், நவலூரு புன்னை வேட்டுவன், பட்டுலூர் பீச்சை வேட்டுவன், அந்து வேட்டுவன் என்று **சுந்தராயப் பட்டையம்** கூறுவதால் வடகரை நாட்டில் உள்ள முப்பது கிராமங்களுக்கும் ஊராளிகளாக வேட்டுவர்களே இருந்தனர் என்பது புலப்படுகிறது.

சிற்றூர் மன்னன் என்ற ஊராளியாகவும், வேளிர் என்ற குறுநில மன்னராகவும், வேந்தன் என்ற பேரரசனாகவும் வேட்டுவர்கள் தமிழகத்தில் ஆட்சி புரிந்தனர் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. உதாரணமாக, கடம்பூர் சிற்றூர் மன்னன்(ஊராளி) அந்து வேட்டுவன்

அந்தியூர் (வடகரை நாட்டு) குறுநில மன்னன் (வேளிர்) அந்து வேட்டுவச் சுந்தராயன் கொங்கு நாட்டின் வேந்தனாக அந்துவன் சேரல் இரும்பொறை ஆண்டது வேட்டுவர்கள் அரசு உருவாக்கத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அந்தியூர் சுந்தராயர் பட்டயச் செய்தி

அந்தியூர் சுந்தராயரிடம் உள்ள பட்டயம் நான்கு பக்கச் செய்திகளைக் கொண்டுள்ளது. இது அந்துவ வேட்டுவப் பெருமையை எடுத்தியம்புகிறது.

1 - ஆம் பக்கம்:

ஆண்டு எழுபத்துதஞ்சு ஆகிய ஆங்கில வருஷம் ஆடி மாதம் 18 - ல் சேரன், சோழன், பாண்டியன் மூவராசாக்கள் விச (ய) னகரம் ஆனகுந்தியில யிருந்து கண்ணப்ப கோத்திரத்தை வேண்டியழைத்து வேழங்கள் தானகொடுத்து மூவராசாக்களுங்கூடி கருவூர்சாமிக்கு எண்ணைக்காப்புசாத்தி அருளியபொழுது வானவரம்ப கோவர்கோ கோக்கலி மூக்கன் கிளக்கிட முடி சேர நயினார் வன்னியர் தொண்டமானார் சேருமா மலை ஊராளி காஞ்சிக்கோவில் நாட்டுத தானிகரில் பெரிய பெருமாளயன்கும் பலங்காடைய் கிட அருந்துதி என்ம்பன் பெருமாளுக்கு விண்ணப்பம் செய்யுது திருமுகம் பெற்று(ம்)

முக்கோடி நம்பியாரைக் கூட்டித் திருமுகம் விட்டுச் சாத்தப்பட்டும் சிறப்புக் கொடுத்து அருந்துதியை நில்லென்று சொல்லித் தங்கள் விளி

விளிச்சு முக்கா முக்கோடி நம்பிமார்கள் கண்டு பன்னிராட்டைக் காலம் விசாரித்து யின்றும் தங்பழங்காரரென்றும் அம்பலங்காரென்றும் பெண்டிரென்றுங் குடுப்பதில்லை யிதினுங் கானுந்தன பாப்பானுங் கடுக வருவதென்று சொல்லி அருந்திதி சென்று பெருமாளு - என்பது பட்டயச் செய்தி ஆகும்.

அந்தியூர் சுந்தரராயர் பட்டயத்தின் 2 - ம் பக்கம்:

க்கு விண்ணப்பஞ் செய்ய பெருமாள் கோபிச்சு எளுந்து கிளக்கிட சிங்காதன மேறக்கிட பதிநெட்டுச் சுரமும் மளிச்சு சேரன், சோழ, பாண்டி(ய)ன் மூவராசாககள் பெருமாள் கம்பன் உடைய அந்துவ வேட்டுவ சுந்தராயருக்கு அந்திஊரு வடகரைநாடு முப்பது கிராமம் யுள்பட ஆதீனம் செப்பேட்டு பட்டையம் குடுத்து மேக நதி யிலிருக்கும் பூதம் பணி செய்ய அவ்வை நலக்கவி சொல்ல ஆணுக்கும் பெண்ணுக்கும் வரிசைப் பொன்னாலை பூணுறு காவிக்கம் ஆலவட்டம் பரிமாறப் பள்ளிச் சிவியார் பரிசு மக்க சங்கு பேரிகை முழக்கம் வெங்கலக் கொடை வெள்ளியால வட்டம் நஞ்சை புஞ்சை னாற்பாங்கு எல்லையும் புற்றி தொன்றியும் தென்படுமலை மடுசுனையும் அனுபவிச்சுக் கொள்ளவும் வஞ்சிக்கும் வடகரைக்கும் யெல்லை வரு ஊருமலை அதின் கிழக்கு பச்சைபாளி யிதின் கிழக்கு நிலபாறையில் எளுத்து சாதனம் யிதின் கிழக்கு பாலைமலை மேல் அட்டகல் யிதன் கிழக்கு ஆளைக்கல் யிதின் கிழக்கு தென்கல்லு - என்பது பட்டயச் செய்தி ஆகும்.

அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 3 - ம் பக்கம்:

யிதின் கிழக்கு காவேரி வடகரைக்கும் ஒடுவங்கத்துக்கும் யெல்லை திருக்கடம்பூரு வாணிப்புத்தூருக்கும் நடுவே விளுந்த புலியன் பள்ளத்தில் பாறையில் எளுத்து வடக்குமலை அழவு தெற்கு வானிநவுலூருக்கு யெல்லை காரைமடை யிதின் வடக்கு கருங்கரடு யிதின் வடக்கு பெரியமலை என்னமங்கலத்துக்கு எருத்தாயமலை மாத்தூருக்கு வால்கரடு வடக்கு கருங்கரடு யிதின் வடக்கு தென்படுமலை திருப்பூருக்கு நாவிதன் பாழி வடக்கு பூதாளை பட்டுலூருக்கு கருங்கரடு தெக்குசிருக்கரடு யிதின் தெக்குதூரி ஆலாயிதின் மேற்கு கொண

உகாய அடுத்து எளுத்துக்கல் யிதின் மேற்குக் கருங்கரட்டுக்கு தெற்கு அடுத்த எளுத்துக்கல் யிதின் மேக்குக் கருங்கரட்டுக்கு தெற்க்கு அடுத்த எளுத்துக்கல் மேற்க்கு வெள்ளகரடு உலகடத்து கள்ள வேட்டுவன் நெரிஞ்சி ஊர் சாமவேட்டுவன் கோட்டை நவுலூரு புள்ளை வேட்டுவன் கேசரமங்கலம் வன்னி வேட்டுவன் ஊராச் - என்பது பட்டயச் செய்தி ஆகும்.

அந்தியூர் சுந்தராயர் பட்டயத்தின் 4 - ம் பக்கம்:



சிக்கோட்டை பரிப்படை வேட்டுவன் சம்பை அந்து வேட்டுவன் வெள்ள வேட்டுவன் ஆப்புகூடல் படைத்தலை வேட்டுவன் கீள்வானி கிளங்கு வேட்டுவன் பெருமுகை வெள்ள வேட்டுவன் திருகடம்பூர் அந்து வேட்டுவன் நவுலூரு புன்னை வேட்டுவன் அந்து வேட்டுவன் வேம்ப அத்தி வேம்பு வேட்டுவன் கட்டுகல்லானை சிவப்பிரமாணன் கோயில் ஆண்டி கொங்க கொள்ளன் தச்சன் வேட்டுவனாவிதன் சங்கிடு பறையன் காளத்தீயீசர் மீனாட்சி அம்மன் மாணிக்கவாசகர் லட்சிக்கவும் யிந்த செப்பேடு வெட்டுனவன் கட்டாரி செய்யன் இதுக்கு ஆதாயொருவர் ஆமா அல்லவென்று துடுக்குச்சணம் பன்னின பேர்கள் காசிகெங்கை கரையில் காராம் பசுவை கொன்ன பாவத்தில் ஏழுபிராமணரை கொன்னபாவத்தில் போகக்கடவானாகவும் உ பட்டுலூர் பீச்சைவேட்டுவன் ஊழியத்து பெரிதான யீஞ்சனுக்கும் கருமலை வட்டத்தில் முப்பது வள்ள காடு உம்பழ - - என்பது பட்டயச் செய்தி ஆகும்.

முடிவுரை

வேட்டுவ அரசர்கள் கொ நாட்டை வலிமையோடும் ஆளுமையோடும் அரசாண்டுள்ளனர். அதில் அந்தியூர் வடகரை நாட்டை அந்துவ வேட்டுவ அரசர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்துள்ளனர் என்பதை இக்கல்வெட்டுகள், செப்பேடுகளைச் சான்றுகளாகக் கொண்டு அறியமுடிகிறது.

பாலைத் திணைக்குடியின் வேட்டுவர் வாழ்வியல்

முனைவர்ந. வெண்ணிலா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல்
கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி,
கடலூர்.
அலைபேசி:6382293973

முன்னுரை

தமிழரின் முன்னோரான குமரி நாட்டு மனிதர்கள், பொன் எதுவும் கண்டுபிடிக்காத காலத்திற்கு முன்பு, கல்லி, வெட்டி, குத்தி, கத்தி, உளி, சுத்தி, சமட்டி, குந்தம், கூந்தாலம், கோடரி, குத்துக்கோடரி போன்ற கருவிகளைக் கரடு முரடான கற்களால் செய்து பயன்படுத்தி வந்தனர். அவர்கள் வாழ்ந்த இடம் குமரிமலைத் தொடரின் அடிவாரமான குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சி நிலத்தில் வாழ்க்கையைத் தொடங்கிய மாந்தனுக்குக் காய்கனி பறித்தல், கிழங்கு எடுத்தல், தேனெடுத்தல், வேட்டையாடல் தொழிலாக அமைந்தன. கிழங்கு தோண்டுவதற்குக் கோணல் இல்லாத கொம்பையும் கூராகச் செதுக்கிய வலிமையான குச்சியையும் வேட்டையாடுவதற்குக் கல்லையும் குறுந்தடியையும் நெடுந்தடியையும் பயன்படுத்தி இருந்தனர்.

அவர்கள் உண்ட உணவு இயற்கையில் விளைந்ததையும், வேட்டையாடிய பச்சை இறைச்சியும் ஆகும். வேனிற்காலத்தில் மூங்கிலும் மரங்களும் உராய்ந்து பற்றிய நெருப்பில் அகப்பட்டு இறந்த விலங்குகள், பறவைகளின் இறைச்சி சுவையாகவும் மெதுவாகவும் இருப்பதைக் கண்டு வேட்டையாடிய கறியைச் சுட்டு உண்ணும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் கோரை, தழை, கல்லி, இலைகளைத் தைத்தும், மரப்பட்டை, விலங்குத் தோலையும் உடைகளாக அணிந்தனர். சில மரப்பட்டைகளை ஊற வைத்துத் தட்டி விரிவாக்கி ஆடையாக அணிந்தனர்ர் அது,

மரல் நார் உடுக்கை மலை உரை குறவா (நற். 64)
பல்ப+ம் பகைத் தழை நுடங்கும் அல்குல் (நற். 8)

எனும் சங்கப் பாடல்கள் வழி அறியப்படுகிறது.

குடிகள், மலை சார்ந்த பகுதியில் உள்ள குகைகளில் வாழ்ந்துள்ளனர். மரக்கிளைகள் அடர்ந்த மரக்கவடு, பரண், கல்லால் அமைத்த வளிமறை என்னும் காற்றை மறைக்கும் குடில்களிலும் வாழ்க்கையை நிகழ்த்தியுள்ளனர். தினைபுனம் காவற் செய்யும் பொருட்டு பரண் அமைத்தனர். இடச்சார்புடைய பொருள்களைக் கொண்டு அணிகளைத் தம் இன அடையாளமாக அமைத்துள்ளனர். நறிய மணம் வீசும் மருக்கொழுந்து, மணமிக்க அழகிய மலர்கள், மயிற் பீலி, சேவலிறகு, புலிப்பல்தாலி ஆகியவற்றைக் குறிஞ்சிநில மாந்தார்கள் அணிகலன்களாக அணிந்துள்ளனர். இத்தகைய அணிகலன்களின் அடையாளங்கள் பற்றி சங்கப் பாடல்கள் சான்றளிக்கின்றன. புழங்கிய நீர்க்கலம் மூங்கில் நாழியும், சுரைக்குடுக்கை போன்ற நெற்றுக்கள் நீர்க்கலன்களாக அமைந்துள்ளன.

பாலை நிலத்தின் இயல்பு

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்து நிலங்கள் ‘திணைகள்’ எனப் பெயர் பெற்றன. ‘திணை’ என்னும் சொல்லுக்குக்குடி’ என்று பொருளுரைக்கிறது தமிழகராதி. குடிகள் வாழும் இடமே திணை என வரையறுக்கப்பட்டது. திணை என்னும் சொல் நிலத்தை மட்டும் அல்லாமல் நிலத்தின் அமைப்பு, அங்கு வாழும் மக்களின் இயல்பு, விலங்குகள், பறவைகள், பயிர் வகைகள், மக்களால் வழிபட்ட தெய்வங்கள் ஆகியவற்றை விளக்குவதாகும். திணைகள் ஐந்து வகையாகப் பகுக்கப்படுகின்றன.அன்பின் ஐந்திணை என்றும் வழங்கப்படுகிறது. அவ்வன்பின் ஐந்திணையில் வாழும் குடிகளின் வாழ்வியல் முறைகளைப் பற்றிய செய்திகளே பண்டைத் தமிழரின் வாழ்வியல் நெறிகளை உணார்த்துகின்றனவாகும்.

பாலைக்கு என்று தனி நிலம் கிடையாது. முல்லையும் குறிஞ்சியும் முறை திரிந்து கதிரவன் வெம்மையாலே எங்கும் வளமை தீய்ந்து போன இடங்களே பாலை என்று பெயர் பெற்றது. இதனால், காதலர் இடையே பிரிவும் பிரிதல் நிமித்தமும் தொடர்பாக ஏற்படும் பெரும் துயரமும் பாலைக்கு உரியதாகும். ஆறலைக் கள்வரும், கொலையும் துன்பமும்

வெம்மையும் இந்நிலத்துக்கு உரிய தன்மைகள் ஆகும். பாலைத்தன்மை நிலைபெற்றமையால் பிறந்த பாலைநிலமாகிய தொலையாத வழி, பாலையின் தன்மையாக அமைந்தது. காலையும் மாலையும் நண்பகலுமாகிய கடுமையான சோலை, நீரும் நிழலுமின்றி, நிலம் பயந்துறந்து, பறவைகளும் விலங்குகளும் புலம்பி இன்பம் இல்லாமல் துன்பம் பெறும் காலமே பாலை நிலமாகும்.

எனவே, தமிழ்ச் சமுதாயத்தில் ஐவகை நிலம் சார்ந்த இனக்குழுக் களை அடையாளம் காட்டுவது சங்க இலக்கியத்தின் சிறப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலப்பிரிவுகளும் அவற்றை ஒட்டியமைந்த மக்கள் பிரிவுகளும் திணை, துறை காட்டும் பழக்க வழக்கங்களும் ஒழுகலாறுகளும் திணைக்குடிகளின் பெரும் சிறப்பாகும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களிலும் வேறாகப் பேசப்படும் நிலப்பகுதி, நீரும் நிழலும் அற்ற பாலையாகும். எல்லாப் பருவத்திலும் பாலையாகவே விளங்கும் நிலப்பகுதி தமிழகத்தில் இல்லை. வேனிற்காலத்து நண்பகற் பொழுதில் ஞாயிற்றின் வெப்பத்தால் ஒருவரும் நடத்தற்கியலாதபடி காய்ந்து வெதும்பிய வழியே சுரம்' என்ற பெயரால் வழங்கப்பட்டது.

பகைப்புலத்தின் வெம்மையுடன் ஆறலைத் கள்வர், நெடுவேல் ஏந்தி, பாலை நிலத்தையும் கடந்து நாட்டின் எல்லையாகிய காவற்தொழிற்குச் செல்லுவர். ஆநிரைகளை மீட்டு வருவர் என்று பாலை நிலத்தின் இயல்பை அகநானூறு கூறுகின்றது (அகம்.63).

ஞாயிறு சுடும் பக்க மலைகளிலுள்ள கல்லொழுங்குபட்ட பாதைகளில் பருக்கைக் கற்கள் தீட்டப்பட்டன போலத் தேய்ந்த கூர்முனையைத் தோற்றுவித்து வழிச்செல்வர், விரல்நுனிகளைச் சிதைக்கும் தன்மையுடையது. பாலை நிலத்தின் ஆறலைக் கள்வர் பிறர் பொருளைக் கவர்ந்து செல்லும் இடமாகும். அச்சம் தரக்கூடிய பாலையில் பருந்துகளும் ஆந்தைகளும் பறையடிப்பது போல் ஒலிக்கும். அத்தகைய பாலை நிலத்தில் தண்ணீருக்காகக் கிணறு வெட்டுவோர் தோண்டிப் பார்த்தும் நீர் வராததால் விட்டுச் சென்ற பள்ளங்கள் தழைகள் மூடி ஆபத்து விளைவிக்கும் தன்மையை உடையன. இத்தகைய கொடிய பாலையில் வேட்டுவர்கள் உயிர்க்கொலை புரிதலில் வல்லமை உடையவர் ஆவர்.

வெஞ்சுரம்

வேனிற்காலம் கோடைப்பருவம் நிகழும் மாதமாகும். கோடைப்பருவத்தில் காலையும் மாலையும் நண்பகல் போல் வெம்மை மிகுந்து காணப்படும். ஆதலால் சோலைகள் வாடியும் குளங்களும், மற்றை நீர்நிலைகளும் வறண்டும் உலர்ந்தும் இயற்கையின் தன்மை கெட்டு பயன் இழந்து போகும் கொடிய வெஞ்சுரம் என்று வெம்மையுடைய பாலை நிலத்திற்கு ஐங்குறுநூறு 309 ஆம் பாடல் இலக்கணம் கூறுகின்றது. ஞாயிறு என்னும் அரசன் வேனில் என்னும் அமைச்சனோடு கூடி குறிஞ்சியையும் முல்லையையும் வாட்டுவதால் இரண்டு நிலங்களும் தம் இயற்கை நிலைகளிலிருந்து மாறி, தங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தும் பாலை என்னும் படிவம் பெறும் என்பதை,

வேனலங் கிழவனொடு வெங்கதிர் வேந்தன்
தானலம் திருகத் தன்மையில் குன்றி
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்.
- (சிலம்பு. நாடு காண் காதை -62--66)

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச் சோலை தேம்பிக் கூவல் மாறி, நீரும் நிழலும் இன்றி நிலம் பயன் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது என்று நச்சினார்க்கினியர் பாலைத் தன்மையை விளக்குகிறார். தொல்காப்பியத்தில் பாலைக்கென்று தனியே நிலம் வகுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எயினர்களின் பண்புகள்

எயினர் பாலை நில மாந்தராவர். எயினப் பெண்கள் எயிற்றியர் என்றழைக்கப் படுகின்றனர். ஆறலைத்தல் இவர்தம் குலத்தொழிலாகும். எயினர்கள் வளைந்த வில்லினை எப்பொழுதும் கையில் கொண்டிருந்தார்கள். இவர்கள் தம் அம்புகளை வெம்மையான பாறை களில் தீட்டினர். எயினர்கள் வேட்டைக்காகச் சுரம் படர்ந்தபோது துடிப்பறை முழக்கப்பட்டது.

உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடுவில் எயினர், பகழி மாய்க்கும் (குறுந். 122)

என்று குறுந்தொகையும்,

...கடுந்துடிக்
கொடுவில் எயினர் கோயசுரம் படர,
நெடுவிளி பயிற்றும் நிரம்பா நீள் இடை (அகம். 79:13-15)

என்று அகநானூறும் கூறுகின்றது.

எயினர்கள் உடல் வலிமை படைத்தவர்கள்; வலிமையான உடம்பினை உடையவர்கள். புலிபோன்ற பார்வையுடையவர்கள். கலைமானின் கொம்பு போல முறுக்குண்டு தாழ்ந்த தாடியினை உடைய இவர்கள் வில்லினைத் தாங்கியிருந்தார்கள்.

வலிமுன்பின், வல்லென்ற யாக்கை, புலிநோக்கின்
கற்றமை வில்லர், சுரி வளர் பித்தையர் (கலி. 4-1-2)

மருப்பின் திரித்து மறிந்து வீழ்தாடி,
உருத்த கடுஞ் சினத்து, ஓடா மறவர் (கலி. 15:6-7)

இருங்கவின் இல்லாப் பெரும் புன் தாடி,
கடுங்கண், மறவர் பகழி மாய்த்தென (அகம். 297:5-6)

என்னும் சங்கப் பாடல் அடிகளால் அறிய முடிகிறது. எயினர் ஆடை செந்நிறம் வாய்ந்ததாக இருந்தது. மறவர்களில் ஒரு பிரிவினர், நீண்ட மூங்கில்கள் உயர்ந்து நிற்கும் நீரில்லாத இடங்களின் வழியாகச் செல்லும் வழிப்போக்கர்களை அம்பு எய்து கொள்ளை அடிப்பதும் உண்டு. கூற்றுவனைப்போலச் சில நேரங்களில் அவர்களைக் கொல்லவும் செய்தார்கள்.

சிலை விற் பகழிச் செந்துவர் ஆடை
கொலைவில் எயினர்(ஐங்கு. 363:1-2)

துவர் செய் ஆடைச் செந்தொடை மறவர் (நற். 33:6)

நெடுங்கழை திரங்கிய நீர்இல் ஆர்இடை,
ஆறு செல் வம்பலர் தொலைய, மாறு நின்று,
கொடுஞ் சிலை மறவர் கடறு கூட்டுண்ணும் (குறுந். 331:1-3)

கூற்றத்தன்ன கொலைவேல் மறவர் (குறுந். 283-5)

கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும் (அகம். 319)

கொலைவில் ஆடவர் போல (அகம். 97)

துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர் (நற். 33)

என்னும் சங்கப்பாடல்கள் எயினரை அடையாளப்படுத்துகின்றன.

ஆடும் பொழுதெல்லாம் ஒலிக்கும் அழகிய வாயினையுடைய அச்சத்தைச் செய்யும் துடியினையும், வளைந்த வில்லினையும் உடைய மறவர்கள் பாலை வழிச் செல்வோரை அலறத் தாக்கி அவருடைய கைப்பொருளைக் கொள்ளும் நோக்குடன் சுரவழியில் செல்லுவர். வளைந்த வில்லினையுடைய எயினர் கொல்லும் தொழிலையுடைய வீரர்கள் ஆவர்.

ஆடு தொறு கனையும் அவ்வாய்க் கடுந்துடித்
கொடுவில் எயினர் தோட் சுரம் படர
நெடு விளி பயிற்றும் நிறம்பா நீள் இடை - (ஐங்கு. 79)

கொடுவில் எயினர் குறும்பிற்கு ஊக்கும்
கடுவினை மறவர் வில்லிடத் தொலைந்தோர்- (ஐங்கு. 319)

என்னும் சங்கப்பாடல்களால் தெளியலாம்.

எயினர்கள் சிலை மரத்தால் செய்த வில்லையும், அம்புகளையும் உடையோர், சிலை என்னும் ஒருவகை உறுதியான மரத்தால் செய்யப்பட்ட வில் என்பதில் சிலைவில’ர் என்று கூறப்படுகிறது. சிலை மரம் வாகை இனத்தைச் சார்ந்ததாகும். சிலை, மலையென்றும் பொருள்படுவதால் கல்லைப் போன்ற உறுதி படைத்த வில் உடையவர்களாக விளங்கினர். எயினர்கள் விடும் அம்பானது மனிதர்கள் உடம்பையும், விலங்குகளின் உடம்பையும் பகுக்கும் தன்மையுடைய தாகும்.

பாலைக் குடிகளின் தொழில்

வேட்டையாடுதல், வழிப்பறி செய்தல், ஆநிரைகளைக் கவர்தல், பாலைக்குடிகளின் தொழிலாகும். இரவு நேரங்களில் நீர் வேண்டித் தோண்டிய ஊற்றுகளில் நீருண்ண வரும் பன்றியினை வேட்டையாடுவர். பகல் வேளையில் புதர்களில் வலைகளைக் கட்டி நாய்களுடன் சென்று

முயல்களைப் பிடிப்பர். இவர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து வந்து பங்கிட்டு வாழ்ந்தனர்.

சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு
எருவைச் சேவல் இருஞ்சிறை பெயர்க்கும்
வெருவரு கானம் - (அகம். 257)

என்று அகநானூறு கூறுகின்றது.

எயினர் காட்டு வழிகளில் பதுங்கியிருந்து வழிப்போவோரை வருத்திப் பொருள் பறித்து வாழ்ந்தனர் என்பதை,

கொலைவெங் கொள்ளைக் கொடுந்தொழில் மறவர்-
(அகம். 363)

அற்றம் பார்த்து அல்கும் - கடுங்கண் மறவர் தாம்
கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர் வௌவலின்,
புள்ளும் வழங்காப் புலம்பு கொள் ஆர்இடை (கலி. 4:3-6)

என்றும், கான் உயர் மருங்கில் கவலை அல்லது

வானம் வேண்டா வில் ஏர் உழவர் (அகம். 193)

என்றும்,

வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர் (அகம். 35)

என்றும் மேற்கண்ட சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

எயினர்கள் கொள்ளைத் தொழிலில் ஈடுபடும் போது 'துடி'யினை ஒலித்தனர். நிரை கவரும் போது தண்ணுமை'யினை முழக்கினர். இவர்கள் இவ்வகை இசைக்கருவிகளை இயக்கும் ஒலியினைக்கேட்டு வழிச்செல்வோர் நெஞ்சம் துண்ணென நடுங்கும். துடிப்பறை அடித்தவனை துடியன் என்றழைத்தனர். சான்று:

கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி,
அருஞ் சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென,
குன்று சேர் கவலை, இசைக்கும் அத்தம் - (அகம். 87)

கணைத் தொடை நாணும் கடுந்துடி ஆர்ப்பின் - (கலி. 15)

சிறுகுடி மறவர் சேக்கோள் தண்ணுமைக்கு - (அகம். 297)

இதன் மூலம் எயினராகிய பாலைநில மக்களின் வாழ்வியல் விளக்கப் பட்டுள்ளது.பாலை நில வேடர்கள் நடுகல்லையும் இறந்தவர்களையும் பதுக்கைகளில் உள்ள தெய்வங்களையும் வழிபட்டனர்.

பாலையும் நடுகல் வழிபாடும்

பாலை நிலம் களவும், கொலையும் நிறைந்தது ஆகும். தனிமை கொண்ட பாலை வழியில் கூர்மையான பற்களை உடைய செந்நாய் வருத்தும். தாம் வில்லில் வைத்து எய்தும் அம்பு பிழையாது இறந்துபட்டோரின் பெயரும் பீடும் எழுதிய எழுத்துகளை உடைய நடுகற்கள் நிழலாக அமையும் என்று அகநானூறு கூறுகிறது.சான்று:

பொரி அரை புதைத்த புலம்பு கொளியவின்
விழுத் தொடை மறவார் வில்இட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல் இன்நிழல் வதியும் - (அகம். 53)

இதில் பெயரும் பீடும் எழுதப்பட்டதால் எழுத்துடை நடுகல் என்றழைக்கப் படுவதை அறியலாம்.

விழுத்தொடை மறவார் வில்லிடத் தொலைந்தோரி
எழுத்துடை நடுகல் (ஐங்கு. 352)

என்று ஐங்குறுநூறும் சான்றளிக்கிறது.

பாலை நில ஆறலைக்கள்வர்கள் கொல்லப்பட்டவரின் உடம்பின்மேல் தழைகளை அடையாளமாகப் போடுவதையும். பின்னர் அதே இடத்தில் கல் நடுவதையும் மரபாகக் கொண்டுள்ளனர். பாலை வழியில் வரும் காட்டு யானை ஆள் என நினைத்து நடுகல்லை உதைத்து அதன் பெருநகம் சிதைவுற்றுக் காணப்படும். மேலும் பெண் யானைகளைப் போல் கிடக்கும் குன்றுகளின் அருகில் நட்டு வைத்தது போன்ற இயற்கையாக எழுந்த கற்களின் அகன்ற இடத்தைச் செதுக்கிப் பல வடிவங்களை அமைத்தனர். அவற்றை நீராட்டி நறுமணமுள்ள மஞ்சளை ஈரம் புலராப் புறப்பகுதியில் பூசினர். அம்பு கொண்டு அறுத்து உரித்தெடுத்த ஆத்தியின் நாரினால் சிவந்த கரந்தைப் பூவைத் தொகுத்துக் கட்டிய கண்ணியை அக்கற்களில் சூட்டுவர் என்று அகப்பாடல்கள் கூறுகின்றன.

அத்த நடுகல் ஆள்என உதைத்த
கான யானைக் கதுவாய் வள்உகிர்
இரும்பனை இதக்கையின் ஓடியும் (அகம். 365)

என்றும்,

பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம் குயின்ற பல்பெயர் மண்ணி- (அகம். 299)

என்றும் அகநானூற்றுப் பாடல்கள் விளக்கமளிக்கின்றன.

எனவே, இத்தகைய நடுகல் வழிபாட்டு முறைகள், திணைக்குடி வழிபாட்டுக் கூறுகள் மேல்நிலையாக்கம் பெறும்போது, திணைக்குடித் தெய்வத்தை வழிபடுகின்றனர். அத்தெய்வம் இருக்கும் பொதுவான சூழல் ஆகியவற்றையும் கணக்கில் எடுக்கப்படும் என்னும் பொதுப்பண்பு நடுகல் வழிபாட்டுக்கும் பொருந்தும் நடுகல் வழிபாடு தனித்து நின்றதுஎன்கிறார். அ.கா.பெருமாள் (2011.9).

முடிவுரை

வேட்டுவர் சங்க இலக்கியங்களில் சுட்டும் எயினர் என்று அழைக்கப்படுகின்றனர். வேட்டைத்தொழிலை மேற்கொண்டு, அதன் வழி வாழ்வியல் முறைகளை வாழ்ந்தவர்கள் ஆவர். பிற்காலத்தில் அரசு அமைத்தும் பெரும்நிலவுடைமையாளராகவும் வாழ்ந்து வரலாற்றில் சிறந்து விளங்கினர் என்பதை அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களில் வேட்டுவர் வாழ்வியல்

முனைவர் வ.மணிகண்டன்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்முதுகலை, ஆய்வுத்துறை,
புதுக்கல்லூரி,
இராயப்பேட்டை, சென்னை 14.
அலைபேசி : 9791604206
மின்னஞ்சல்: manivrani1486@gmail.com

முன்னுரை

சங்க இலக்கியம் சங்கத் தமிழரின் வாழ்வியிலைக் காட்டும் கண்ணாடி. சங்கத் தமிழர் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர். மனிதன் விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்தில் விலங்கைத் தாக்கி வீழ்த்தி வாழ முற்பட்ட நிலையில் வேட்டைத் தொழில் தோன்றியிருக்க இடமுண்டு. அன்று தொடங்கி இந்தத் தொழில் காலந்தோறும் வளர்ந்து தற்காலத்தில் ஒரு கலையாகப் போற்றப்படுகின்றது. காலமாற்றத்தால் இக்கலை இன்று வீரத்தின் அடையாளமாகக் கருதப்படுவதும் சுட்டத்தக்கது. சங்க காலத்தில் ஐந்நிலமக்களும் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டனர் என்று அறிய முடிகின்றது.

வேட்டுவரின் வாழ்வியல் என்னும் பொருண்மையில் வேட்டுவரின் பிற பெயர்கள், வேட்டுவர் குடியைச் சேர்ந்த ஊராளிகள், வேட்டுவரது ஊரும் அரணும், வேட்டுவரின் இயல்பு, வேட்டுவரும் பதினெண் குடிமக்களும், வேட்டுவக் குறுநிலத் தலைவர்கள்மற்றும் மன்னர்கள், வேட்டுவர் குடியின் வில் விழா, வேட்டுவச்சிறாரின் விற்பயிற்சி, வேட்டுவர்களின் வில்லாற்றல், வேட்டுவர்கள் தினை விதைத்தமை, வேட்டுவர்களின் கவண் எறியும் கை வண்ணம், வேட்டுவர்களின் வேந்துவிடுதொழில், வேட்டுவர்களின் வேட்டைத் தொழில், வேட்டுவர்கள் வாழ்வில் சங்க உவமைகள் ஆகியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவரின் பிற பெயர்கள்

சங்க காலங்களில் வேட்டுவக் குடியினர் வில் எயினர், வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். வேட்டுவக் குடியைச் சேர்ந்த போர் வீரர்கள் மழவர், மறவர், வயவர், கூளியர் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர்.வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக மான், முயல் மற்றும் பறவைகளை வேட்டையாடிப் பிடித்தனர்.இதனால் வேட்டுவக் குடியினரை வேடர் அல்லது வேட்டைக்காரன் அல்லது வேட்டைச் சாதி அல்லது வேடுவர் என்று அழைக்கபட்டனர். வேட்டுவக் குடியைச் சேர்ந்த போர் வீரர்கள் நாணுடை மறவர், விழுத்தொடை மறவர், விழுத்தொடை மழவர், சிலை மழவர், வில் கூளியர், இளையர், வயவர் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர்.மேலும் வேட்டுவக் குடியைச் சேர்ந்த மன்னர்கள் (அகம்.13, நற்.52) மழவன், மறவன் என்று அழைக்கப்பட்டனர்.

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, வேட்டுவக் கவுண்டர் மற்றும் நாடாள்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர்.

வேட்டுவர் குடியைச் சேர்ந்த ஊராளிகள்

வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஊராளிகள் (சீறூர் மன்னர்கள் மற்றும் தண்ணடை மன்னர்கள்) சங்க இலக்கியங்களில் முல்லை மற்றும் மருதநில ஊர்களை ஆண்டவர்களைச் சீறூர் மன்னர், தண்ணடை மன்னர் என்று அழைத்தனர்.இவர்களைக் கல்வெட்டுகளில் ஊராளி என்றும் ஊரும் ஊராளிகள் என்றும் குறிப்பட்டனர். புறநானூற்றின் 285-ஆம் பாடல் முதல் 335-ஆம் பாடல் வரை சீறூர் மன்னர் பற்றிக் காணப்படுகின்றன. சீறூர் மன்னர் ஆண்ட நிலப்பகுதி,

“பருத்தி வேலிச் சீறூர் மன்னர்” (புறம்.299:1)

“சீறூர் மன்னன் சிறியிலை எஃகம்” (புறம்.308:4)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

“நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்” (புறம்.302:7)

“பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலம் தழீஇய அம்குடிச் சீறூர்” (புறம்.324:7-8)

எனவும் இவர்கள் ஆண்ட நிலப்பகுதி குறிக்கப்பட்டுள்ளது.

வேட்டுவரது ஊரும் அரணும்

“ஊர்,
அருமிளை இருக்கையதுவே” (புறம்.326)

ஊர், கடத்தற்கரிய காவற்காடு சூழ்ந்த இடத்தின்கண் உள்ளது.

“வாழ்முள்வேலிச் சூழ்மிளைப் படப்பை” (பெரும்பா.126)

ஊர், முள்ளையுடைத்தாகிய வாழ்முள் வேலியினையும் அதனைச் சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தையும் உடையது.

“அருங்குழு மிளை” (மதுரைக்.64)

பகைவர் சேர்தற்கரிய திரட்சியையுடைய காவற்காடு என்னும் தொடர்கள் குறிஞ்சி நிலத்து வேட்டுவரது ஊர்களைச் சார்ந்து அமைந்திருந்த காவற்காடுகள் பற்றியும் அவற்றின் தன்மை, பயன் ஆகியன குறித்தும் கூறுகின்றன.

“பருந்துபட
ஒன்னாத்தெவ்வர் நடுங்க வோச்சி
....
கொடுநுகந்தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவில்லெயினர் குறும்பு” (பெரும்பா.117-129)

“பூவற்படுவில் கூவற்றொடீஇய
செங்கட் சின்னீர்” (புறம்.319)

செம்மண் நிலத்து மடுவில் உள்ள நீர் நிலையைத் தோண்டியதால் உண்டாகிய சிவந்த இடத்தில் சிறிதாக ஊறிய நீர் என்றும்,

“களிறு நீராடிய விடுநில மருங்கில்
வம்பப் பெரும் பெயல் வரைந்து சொரிந்திறந்தெனக்

குழிக்கொள்சின்னீர் குராஅ லுண்டலிற்
சேறு கிளைத்திட்ட கலுழ்கண்ணூறல்" (புறம்.325)

பன்றிகளால் புழுதியாக்கப்பட்ட விடுநிலத்தின் கண் புதிதாக வந்த பெருமழை அவ்விடத்தை வரைந்து பெய்து நீங்கிற்றாக. பள்ளங்களில் தங்கிய சிறிதாக ஊறிய நீரைக் கன்றையுடைய பசுவானது அங்கே முளைத்திருந்த புல்லை மேய்ந்து உண்டொழிதலால் சேற்றைநீக்கித் தோண்ட ஊறிய கலங்கலாகிய நீர் என்றும்,

"களிறு பொரக் கலங்கிய கழன்முள் வேலி
அரிதுண்கூவலங் குடிச் சீறூர்" (புறம்.306)

களிறு படிந்துழக்கக்கலங்கிச் சேறாகும் உண்ணும் நீர் அரிதாகிய நீர் நிலையும் முள்ளையுடைய கழற்கொடியாலாகிய வேலியும் சூழ்ந்த அழகிய குடிகளையுடைய சீறூர் என்றும் குறிப்பிடுவதைஅறியமுடிகிறது.

வேட்டுவரின் இயல்பு

வேட்டுவர்கள் காட்டுப் பூனைபோன்ற வெருண்டபார்வையை உடையவர்கள்;பெரியதலையை உடையவர்கள், பறவைகளின் ஊனைத்தின்பதால் புலால் நாற்றம் கமழும் வாயினர். இடக்கர்ச் சொற்களை அடிக்கடி கூசாது கூறினாலும் கரவில்லாத சொற்களையே பேசுவர். அதனால் வெள்வாய் வேட்டுவர் எனப்பட்டனர்.

"வெருக்குவிடையன்ன வெருணோக்குக் கயந்தலை
புள் தின்ற புலவு நாறு கயவாய்
வெள்வாய் வேட்டுவர்" (புறம்.324)

என்று வேட்டுவர் இயல்பு குறித்து ஆலத்தூர் கிழார் கூறுகிறார்.

அரசனால் வென்றளிக்கப்பட்ட சிறந்த பொருள்களைத் தனக்கென வைத்துக்கொள்ளாது பரிசிலர்க்கு எந்நாளும் குறையாமல் தருகின்ற வள்ளண்மையுடைய புகழமைந்த தகுதியுடையவன் சீறூர் மன்னன் என்பதை,

"வேந்து தரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்
அருகாது ஈயும் வண்மை
உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரை" (புறம்.320:16 - 18)

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

வேந்துவிடு தொழிலுக்காட்பட்டு, அத்தொழிலின் வாயிலாகப் பெற்றவற்றைப் பாணர்க்கும் பலருக்கும் வழங்கிய சீறூர் மன்னரின் இத்தகைய இயல்பு அவர்தம் குடிமைப் பண்பால் விளங்கக் காணமுடிகிறது.சீறூர் ஊராளிகள் (சீறூர் மன்னர்)வேந்துவிடு தொழில் மூலம் தண்ணடை (மருத நிலத்தை ஊர்) பெற்று தண்ணடை ஊராளிகளாக (தண்ணடை மன்னர்) மாறினார்கள்.

வேட்டைச் சமூகத்தவரான எயினர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்ந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. விருந்தோம்பல் இம்மக்களின் தலையாய பண்பாக விளங்கியது. அது மட்டுமல்ல இருப்பது எதுவாயினும் அதனை எல்லாரும் சமமாகப்பங்கிட்டுக் கொள்ள வேண்டும் என்பது இம்மக்களின் சீரிய பண்பாக மிளிர்ந்தது. இவர்கள் களவு, கபடம், சூது முதலிய தீயபண்புகளை அறியாதவராக இருந்தனர் என்பதையும் சங்க இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன.

வேட்டுவரும் பதினெண் குடிமக்களும்

நாவிதன், கணக்கர், குயவர், வண்ணான், வலையர் போன்ற மக்கள்கள் வேட்டுவ இனத்துக்குப் பணி செய்ததால் வேட்டுவ நாவிதன், வேட்டுவக் கணக்கர், வேட்டுவக் குயவர், வேட்டுவ வண்ணான், வேட்டுவ வலையர் போன்ற பெயர்களில் இன்றும் அழைக்கபடுகிறார்கள். இது போல பதினெண்குடி மக்களும் வேட்டுவ இனத்துக்குப் பணி செய்த மக்கள் ஆவார்கள்.வேட்டுவக் குலத்தலைவருக்கு இடையர்கள் பணிசெய்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

வேட்டையாடுதல், நாட்டைக் காத்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்ட வேட்டுவர், ஊர்த் தலைவர்களாகவும் (ஊராளி), படைவீரர்களாகவும், படைத்தலைவர்களாகவும், குறுநில மன்னர் களாகவும் மற்றும் பட்டக்காரர்களாகவும் பல்வேறு காலகட்டங்களில் பணியாற்றியுள்ளனர். வேட்டைத் தொழிலை மேற்கொண்ட வேட்டுவர், பின்னர் காடுகளை அழித்து, விவசாய நிலங்களாக மாற்றி வேளாண்மை புரிந்துள்ளனர். இவர்கள் இறைப்பணியில் மேம்பட்டு விளங்கிப் பல திருக்கோயில்களை அமைத்தும், கோயில்களைப் புதுப்பித்தும், அவற்றில் தொடர்ந்து பூசனை நடைபெற பல அறக்கொடைகளை அளித்தும் தொண்டு புரிந்துள்ளனர். இவ்வாறு வேட்டுவர்கள், கொங்கு நாட்டின்

முன்னேற்றத்திற்கு உழைத்து, கொங்கு நாட்டு வரலாற்றில் தனக்கெனத் தனித்தோர் இடத்தைப் பெற்றுள்ளனர்.

வேட்டுவக் குறுநிலத் தலைவர்கள் மற்றும் மன்னர்கள்

வல்வில் ஓரி (கொல்லி மலைத் தலைவன்), கண்டீரக் கோப்பெரு நள்ளி (தோட்டி மலைத் தலைவன், தோட்டி மலைக் கோவை, மேட்டுப்பாளையம் அருகில் உள்ளது), கடிய நெடு வேட்டுவன் (கொடைக்கானல் மலைத் தலைவன்), குமணன் (முதிர மலைத் தலைவன், முதிர மலைத் கோவை, உடுமலை அருகில் உள்ளது), பிட்டன் கொற்றன் (குதிரை மலைத் தலைவன், குதிரை மலை சேலம் பகுதியில் இருக்கிற மலை), தகடூர் வேட்டுவக் குலத் தலைவன் அதியமான், பழையன், பழையன் மாறன்,கொடுமுடி, பாண, வாண மன்னர்கள் (தமிழகத்தின் வட பகுதியை ஆண்டவர்கள்), பண்ணன், ஆய் எயினன்(பழனி மலை தலைவன்), ஆய் ஆண்டிரன் (பொதிய மலை தலைவன்), கொடும்பூர் வேட்டுவக் குலத் தலைவன் இருங்கோவேள் போன்ற குறுநிலத் தலைவர்கள் வேட்டுவக் குலத்தைச் சேர்ந்தவர்கள்.

சங்க காலத்தில் வேட்டுவக் கவுண்ட குலத் தலைவர்கள் சிலர் குறுநில மன்னர்களாகத் திகழ்ந்தனர். இதனைச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. இவர்களுள் கோடை மலைத் தலைவனான கடிய நெடு வேட்டுவன், தோட்டிமலைத் தலைவனான கண்டீரக்கோப் பெருநள்ளி, கொல்லிமலைத் தலைவனான வல்வில் ஓரி ஆகியோர் புகழ் பெற்று விளங்கினர்.வேட்டுவர் குடியை சேர்ந்த மன்னர் வல்வில் ஓரியின் வம்சாவழியினர்(கொல்லி மழவர்) புல்லை வேட்டுவக் குலத்தவர்கள் (கொல்லி வேட்டுவர்) ஆவார்கள்.வல்வில் என்று அவன் பெயரின் அடைமொழி குறிப்பிடப்படுகிறது. வில்லுக்கு உரிமையுடையவர்கள் யார்? வேட்டுவர்கள். ஓரியைப் பற்றி வன்பரணர் பாடிய பாடல்,

> **“......யாம்**
> **நாட்டிடன் நாட்டிடன் வருதும் ஈங்கோர்**
> **வேட்டுவர் இல்லை நின் ஒப்போர்”** (புறம்.152)

என்று விறலியர் புகழ்வதாகக் கூறுகின்றது. பல நாடுகளுக்குச் சென்று வருபவர்கள் நாங்கள்; ஆனால் எங்கும் உனக்கு நிகரான வேட்டுவர் எவரும் இல்லை என்பது இதன் பொருள். ஆக வல்வில் ஓரி வேட்டுவச்

சாதியைச் சேர்ந்தவன் என்பது உறுதிப்படுகிறது. வல்வில் ஓரியின் வம்சாவளியினர் கொல்லி மழவர்கள் ஆவார்கள்.

அகநானூறும், கோடைமலைத் தலைவனின் பெருமையைப் பேசுகின்றது. ஓரி, மிகச்சிறந்த வில் வீரனாகத் திகழ்ந்தான். ஆமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த குறும்பொறைக்கோமன் (கொடுமுடி) மாவீரனாகத் திகழ்ந்தான்; சேரரை வென்றான்; தனது அரசை விரிவுபடுத்தினான்.இளவெயினனார், எயிற்றியனார், எயினந்தையார் மற்றும் எழுஉப்பன்றி நாகன்குமரனார் போன்ற புலவர் பெருமக்களும் வேட்டுவர் குடிக்குப் பெருமை சேர்த்தனர். வேட்டுவக்குலப் பெண்பாற் புலவர்களுள் வெறிபாடிய காமக்கண்ணியார், சுழாரர் சீரன் எயிற்றி ஆகியோர் சிறந்த புலவர்களாகத் திகழ்ந்தனர்.

வேட்டுவர் குடியின் வில் விழா

“உமண் சாத்து இறந்த ஒழிகல் அடுப்பில்
நோன் சிலை மழவர் ஊன் புழுக்கு அயரும்
சுரன் வழக்கு அற்றது என்னாது, உரம் சிறந்து”
- (அகம்.119:8-10)

உப்பு வணிகர் கூட்டம் விட்டுப்போன கல் அடுப்பில் வலிய வில்லையுடைய மழவர்கள்(கொல்லி மழவர்கள்), நாற்றங் கொண்ட இறைச்சியைப் புழுக்கி உண்ணும் இடங்கையுடைய பாலை நிலமானது (சுரம்), பெண்டிரோடு இயங்குதற்கு உரியதல்ல என்பது இதன் பொருள்.பாலை நிலத்தைச் சேர்ந்த வல் எயினர்கள் "சிலை மறவர்" என்றழைக்கப்பட்டனர். சிலை மழவர் (வில்லினையுடைய வீரர்கள்) பாலை நிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று இச்செய்யுள் கூறுகிறது.

“.......................... கறுத்தோர்
தெம்முனை சிதைத்த கடும்பரிப் புரவி
வார் கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலை நாள் அன்ன” (அகம்.187:5-8)

சினந்தெழுந்த பகைவரது வெம்மையான முனையை அழித்த, கடிய செலவினையுடைய குதிரைகளையும் நீண்ட கழலால் பொலிவுற்ற கால்களையும், தறுகண்மையினையும் உடைய மழவர்கள் (கொல்லி மழவர்கள்) செய்யும் பூந்தொடை விழா என்னும் விழாவின் முதல்நாளை யொத்த பொலிவினையுடையவர் என்பது இதன் பொருள்.செய்யுளில்

பேசப்பட்ட மழவர்கள் பாலை நிலத்தைச் சேர்ந்தவர்கள். தொடை - அம்பு. பூந்தொடை விழவு - படைக்கலம் பயின்ற வேட்டுவக் குடியைச் சேர்ந்த வில் வீரரை அரங்கேற்றுவிக்கும் விழா. இன்று மழகொங்குப் பகுதியில் வாழ்ந்து வரும் வேட்டுவக் குடியினர் வருடந்தோரும் வில்விழா எடுத்து வருகிறார்கள்.

வேட்டுவச்சிறாரின் விற்பயிற்சி

வேட்டுவச் சிறுவர் விளையாட்டுப் பருவத்திலேயே விற்பயிற்சியைத் தொடங்கிவிடுவர். வளார்களில் மரற்கயிற்றைப் பிணித்து வில்லாகச் செய்வர். உடை வேலமரத்தின் உள்ளே புழையுடைய வெள்ளிய முள்ளை ஊகம் புல்லின் நுண்ணிய கோலிற் செருகி அம்புகளாகச் செய்வர். அவ்வம்புகளை வில்லில் தொடுத்து எய்து விளையாடுவர். இது குறித்துப் புறநானூறு அழகாகப் பேசுகிறது.

“உழுதூர் காளை யாழ்கோடன்ன
கவை முட்கள்ளிப் பொரியரைப் பொருந்திப்
... ...
செங்கட் குறுமுயல் கருங்கலனுடைய
மன்றிற் பாயும் வன்புலம் (புறம்.322)

வன்புலமாகிய முல்லை நிலத்தில் வாழும் வில்லேருழவரான வேட்டுவர்களின் சிறுவர்கள் வரகுக் கொல்லைகளில் வரகினது அரிகாலைப் பொருந்தியிருக்கும் காட்டெலிகளை வேட்டையாடுவர். எலியொன்றைக் கண்டதும் அவர்கள் ஆரவாரம் செய்வர். அவ்வோசையைக் கேட்டு, அருகேமேயும் முயல்கள் அண்மையில் உள்ள அவர்களது குடிசையின் முற்றத்தில் இருக்கும் மட்கலங்களின் இடையே துள்ளிப் பாய்ந்து செல்லும். அதனால் மட்கலங்கள் உருண்டு உடைந்து கெடும் என்று அக்காட்சியைப் புறநானூற்றில் ஆவூர்கிழார் அழகுறக் காட்டுகிறார்.

“வெருக்கு விடையன்ன வெருணோக்குக் கயந்தலை
புள்ளன்தின்ற புலவுநாறு கயவாய்
....
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலந்தழீஇய அங்குடிச்சீறூர் (புறம்.324)

வேட்டுவர்கள் காட்டுப் பூனையைப் போல் வெருண்ட பார்வையும் பெரிய தலையும் உடையவர்கள். பறவைகளின் ஊனைத் தின்பதால் புலால் நாற்றம் கமழும் மெல்லிய வெளுத்த வாயையுடையவர்கள். அவர்களின் பிள்ளைகள் ஒருவரையொருவர் விரும்பிநட்புக் கொண்டு உறையும் பண்பினை உடையவர்கள். அச்சிறுவர்கள் சிறிய இலைகளையுடைய ஊகம் புல்லில் செருகிய அம்பை வளாரால் செய்யப்பட்ட வில்லில் வைத்து வளைத்துப் பருத்தியாகிய வேலியடியில் உறையும் காட்டெலிகளை வீழ்த்துவதற்குக் குறி பார்த்து எய்து விளையாடுவர். இத்தகைய புன்செய் சூழ்ந்துள்ள அழகிய குடிகள் வாழும் சீறூர் என்று ஆலத்தூர் கிழார் அமைவுறக் கூறுகிறார்.

எயினர்களின் விற்பயிற்சியும் வில்லாற்றலும் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுவதற்கே பயன்படுத்தப்பட்டன என்பதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் காட்டுகின்றன. மண்ணாசை மற்றும் அதிகாரப் போதை காரணமாகப் போர்த் தொழிலில் ஈடுபட்டுச் சக மனிதர்களைக் கொல்லும் நிலையினை மனித சமூகம் இன்னும் எய்தவில்லை என்பதனை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வேட்டுவர்களின் வில்லாற்றல்

வேட்டுவர்கள் வில்லாற்றலில் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சமூகத்தலைவர்களில் ஒருவனான வல்வில் ஓரியின் வில்லாற்றலே சிறந்த சான்றாகும். ஓரி என்பவன் கொல்லிமலைத்தலைவன். அவன் தன் வில்லாற்றல் காரணமாகப் புலவர்களால் வல்வில் ஓரி என்று சிறப்பிக்கப்பட்டான். அவனது வில்லாற்றலை வன்பரணர் புறப்பாடல் ஒன்றில் வியந்து போற்றுகிறார்.

“வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிதுறீஇப்
....
புகழ் சால் சிறப்பின் அம்பு மிகத் திளைக்கும்
கொலைவன்” (புறம்.152)

யானையைக் கொன்று வீழ்த்த சிறந்த தொடையையுடைய அம்பு, பெரியவாயையுடைய புலியை இறந்துபடச் செய்து, துளை பொருந்திய கொம்பையுடைய தலையினையுடைய புள்ளிமான் கலையை உருட்டி, உரல் போலும் தலையையுடைய கேழலாகிய பன்றியை வீழச்செய்து

அதற்கு அயலதாகிய ஆழ்தலையுடைய புற்றின்கண் கிடக்கும் உடும்பின்கண் சென்று செறியும் வல்வில்லால் உண்டாகிய வேட்டத்தை வென்றிப்படுத்தியிருப்பவன், புகழமைந்த சிறப்பினையுடைய அம்பைச் செலுத்தும் தொழிலில் மிகச்சென்று உறுதற்குக் காரணமாகிய கொலைவன் என்று ஓரியின் வில்லாற்றல் வியந்து போற்றப்படுகிறது.

வேட்டுவர்கள் தினை விதைத்தமை

"அருவியார்க்கும் கழைபயில் நனந்தலைக்
மலர்ந்த காந்தட்
....
உழா அது வித்திய பரூஉக் குரற் சிறுதினை
முந்து விளை யாணர்" (புறம்.168)

"கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பிற்
றலை விளை கானவர் கொய்தனர்" (ஐங்.270)

"கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்காட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா ஏனற்கிழுமெனக்
கருவி வானம் தலை இ" (புறம்.159)

வேட்டுவர் சுடப்பட்டுக் கரிந்த புனத்தை மயங்க உழுத அகன்ற இடத்தையுடைய கொல்லைக்கண் ஐவன நெல்லோடு வித்தி இருட்சியுற அழகு பெற்றுக் கோடை மிகுதியில் ஈன்றலைப் பொருந்தாத தினைக்கு இழுமென்னும் ஓசையுடன் மின்னலும் இடியும் முதலாகிய தொகுதியுடைய மழைத்துளி சொரிந்ததுஎன்று புறநானூறு கூறுகிறது. இதன் மூலம் பன்றிகள் கிளறிக்கிளைத்த புழுதியில் வேட்டுவர் தினை விதைத்தமைபற்றிஅறியமுடிகிறது.

வேட்டுவர்களின் வேந்துவிடுதொழில்

புன்புல வேளாண்மையால் கிடைக்கும் வரகு, தினை, அவரை முதலான தானியங்கள் மற்றும் வேட்டையின் வாயிலாகக் கிடைக்கும் பொருளைக் கொண்டதான சீறூர் மன்னர் சமுதாயம் வறுமை காரணமாக வேந்துவிடுதொழிலில் ஈடுபட்டமையைப் புறநானூற்றுப் பாடல்கள் விளக்குகின்றன.

“வேந்து தொழில் அயரும் அருந்தலைச் சுற்றமொடு”
(புறம்.285 : 7)

“.....வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக” (புறம்.306:6 - 7)

“சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன்” (புறம்.319:12 - 13)

என வேந்துவிடுதொழிலை மேற்கொண்ட சீறூர் மன்னர், அத்தொழிலின் வாயிலாக நெல், பொன், யானையின் முகபடாம் போன்ற பலவற்றைப் பரிசிலாகப் பெற்று வந்ததையும் பாடல்கள் காட்டுகின்றன.

“பெருஞ்செய் நெல்லின் அரிசி ஆர்ந்து, தன்
புன்புறப் பெடையொடு வதியும்
யாணர்த்து ஆகும் - வேந்து விழுமுறினே” (புறம்.318:7 - 9)

எனும் பாடலடிகள் பெரிய நெல் வயல்களில் விளைந்த நெல்லை உண்ட தன்னுடைய புல்லிய முதுகுப் பகுதியையுடைய பெண் குருவியுடன் தங்குவதற்கு இடனாகிய, வேந்துவிடு தொழிலில் கிடைக்கும் புதுவருவாய் உடையதாகும் ஊர் எனக் குறிப்பிடுகின்றனர்.

சிறிய ஊரின் மன்னன், வேந்தனால் ஏவப்பட்ட தொழிலை ஏற்றுப் பகைமேற்சென்றனன். அவன் போரில் வெற்றியுடன் திரும்பி வந்து உன்னுடைய பாணிச்சி பொன்னரி மாலை அணிய, உனக்கு வாடாத பொன்தாமரைப் பூவினைத் தலையில் பரிசாகச் சூட்டுவான் எனப் பாணரிடம், சீறூர் மன்னனின் மனைவி குறிப்பிடுவதை,

“சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்துநின்
பாடினி மாலையணிய
வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே” (புறம்.319:12 - 15)

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

“அருஞ்சமம் ததையத் தாக்கி பெருஞ்சமத்து
அண்ணல் யானை அணிந்த
பொன்செய் ஓடைப் பெரும் பரிசிலனே” (புறம்.326:13 - 15)

எனும் பாடலடிகள் சீறூர் மன்னன் வேந்துவிடு தொழில் முடித்து யானையின் முகபடாம் பெற்று வந்ததைக் காட்டுகின்றன. அரசனால் வென்றளிக்கப்பட்ட சிறந்த பொருள்களைத் தனக்கென வைத்துக் கொள்ளாது பரிசிலர்க்கு எந்நாளும் குறையாமல் தருகின்ற வள்ளண்மையுடைய புகழமைந்த தகுதியுடையவன் சீறூர் மன்னன் என்பதை,

> **"வேந்து தரு விழுக்கூழ் பரிசிலர்க்கு என்றும்**
> **அருகாது ஈயும் வண்மை**
> **உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரை"** (புறம்.320:16-18)

எனும் பாடலடிகள் காட்டுகின்றன.

வேந்துவிடு தொழிலுக்காட்பட்டு, அத்தொழிலின் வாயிலாகப் பெற்றவற்றைப் பாணர்க்கும் பலருக்கும் வழங்கிய சீறூர் மன்னரின் இத்தகைய இயல்பு அவர்தம் குடிமைப் பண்பால் விளங்கக் காணமுடிகிறது. சீறூர் ஊராளிகள் (சீறூர் மன்னர்) வேந்துவிடு தொழில் மூலம் தண்ணடை (மருத நிலத்தை ஊர்) பெற்று தண்ணடை ஊராளிகளாக (தண்ணடை மன்னர்) மாறினார்கள் என்பதை அறியமுடிகிறது.

வேட்டுவர்களின்வேட்டைத்தொழில்

மனிதன் விலங்கோடு விலங்காக வாழ்ந்த காலத்தில் விலங்கைத் தாக்கி வீழ்த்தி வாழமுற்பட்ட நிலையில் வேட்டைத் தொழில் தோன்றியிருக்க இடமுண்டு. அன்று தொடங்கி இந்தத் தொழில் காலந்தோறும் வளர்ந்து தற்காலத்தில் ஒரு கலையாகப் போற்றப் படுகின்றது. காலமாற்றத்தால் இக்கலை இன்று வீரத்தின் அடையாளமாகக் கருதப்படுவதும் சுட்டத்தக்கது. யானை வேட்டை குறித்து அகம்.172:6-10, நற்.65:5-6, குறுந்.331:3-5 ஆகிய பாடல் அடிகளும், புலி வேட்டை குறித்து புறம்.19:5-6, அகம்.7:18, புறம்.374:9,கலித்.65:24-25 ஆகிய பாடல்களும், மான் வேட்டை குறித்து நற்.111:4-5, நற்.190:8, குறுங்.272:4-5, அகம்.371:5-7, கலித்.120:11 ஆகிய பாடல்களும், குரங்கு வேட்டை குறுந்.342:1-4 ஆகிய பாடலும், பறவை வேட்டை குறித்து புறம். 320, புறம்.319 ஆகிய பாடல்களும், வீட்டைக் காவல் காக்க நாய்கள் பெரிதும் உதவியதை அகம்.107:11, அகம்.28:6-8, பெரும்பாண்.125-129 ஆகிய பாடல்களும் விளக்குகின்றன.

வேட்டுவர்கள் வாழ்வில் சங்க உவமைகள்

புலவர் உலேச்சனார் புன்னை மரத்தின் கரிய கிளைகளுக்கு இரும்பினையும், அதன் பசிய இலைகள் நீலத்திற்கும், மலர்களுக்கு வெள்ளையையும், மலரின் மகரந்த துகள்களுக்கு பொன்னையும் உவமையாக உவமிக்கப்படுவதை (நற்.249:1-4) என்ற நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. காட்டில் வாழும் கானவரின் (வேட்டுவரின்) உரம் பெற்ற கைகள் வடித்த இரும்புக்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளதை (அகம்.172:6) என்ற அகநானூற்று பாடல் தெளிவுபடுத்துகிறது. ஒரு நிலத்தில் காணப்படும் பொருள் மற்றொரு நிலத்துக்கு உவமையாதல் இல்லை என்பது கிடையாது.காட்டில் வேட்டையாடும் தொழில் கடலில் மீன் பிடித்தலுக்கு உவமிக்கப்படுகிறது.

> **“மரன்மேற் கொண்டுமான் கணம் தகைமார்**
> **வேந்திறல் இளையவர் வேட்டெழுந்து தாங்குத்**
> **திமிழ்மேற் கொண்டு வரைச்சுரம் நீந்தி” (நற்.111:4-6)**

எனத் திணை மாறி வந்துள்ளது.பாலை நில மக்களின் வேட்டுவ வாழ்வு கடற்கரையில் வாழ்வாரோடு உவமிக்கப்பட்டுள்ளது.இதுபோல பாலை நிலத்தைச் சேர்ந்த வேட்டுவக் குடியினரின் வாழ்வு நெய்தல் நிலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வோடு உவமைப்படுத்தப்பட்டுள்ளதை (மதுரை.116, அகம்.36:6, 270:3) என்ற அகநானூறு, மதுரைக்காஞ்சிப் பாடலடிகள் சுட்டிக்காட்டுகின்றன.

முடிவுரை

ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல் அலைந்து திரிந்து வேட்டையாடிய வேட்டுவரின் வாழ்வியலைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.அவர்கள், சிலகாலம் சென்ற பின்னர் ஓரிடத்தில் தங்க ஆரம்பித்தனர். ஒரேவகையாக நிலைத்து வாழ்ந்த இவர்கள் உணவு தேடும் நிலைமாறி, உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினர். இதுவே வேட்டுவர் வாழ்வில் நிகழ்ந்த மாபெரும் புரட்சியாகும். ஒரேவிதமான தொழிலை மேற்கொண்டுவந்த வேட்டுவர் இக்கால கட்டத்தில் பல்வேறு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

துணை நூற்பட்டியல்

1. சாமிநாதையர், உ.வே. பத்துப்பாட்டும் நச்சினாக்கினியருரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 10.

2. சுப்பிரமணியன், ச.வே. (உரை) எட்டுத்தொகை மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை, சென்னை -1.

3. சோமசுந்தரனார், பொ.வே.(உரை) குறுந்தொகை, கழக வெளியீடு, சென்னை.

4. துரைசாமிபிள்ளை, ஔவை. சு. (உரை) புறநானூறு, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1978.

5. வேங்கடசாமி நாட்டார்ந.மு., அகநானூறு, சைவசித்தாந்த நூற்பதிப்பக்கழகம்,சென்னை -18, ஆண்டு: 1944.

6. சிவசுப்பிரமணியன்வே., அகநானூறு, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை-90, ஆண்டு: 1990.

சங்ககால வேட்டுவர் இனக்குழுச் சமூகம்

முனைவர் ந. அறிவரசன்
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
பாட்ரிஷியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
அடையாறு, சென்னை 020.
அலைபேசி 9342270156
email : arivurajnatarajan@gmail.com

முன்னுரை

சங்ககாலத்தில் வேட்டையாடி உணவு சேகரிக்கும் இனக்குழுச் சமூகமாக வேட்டுவர், கானவர், குறவர், எயினர் ஆகியோர் வாழ்ந்துள்ளனர். இவர்களைப் பக்தவத்சலபாரதி, தமது இலக்கிய மானிடவியல் என்னும் நூலில், வேட்டையாடி உணவு சேகரித்தவர்கள், வேட்டையாடி உணவு உற்பத்தி செய்தவர்கள், வேட்டையாடி ஆநிரை கவர்ந்தவர்கள் (பக்தவத்சலபாரதி, இலக்கிய மானிடவியல், ப. 56) என்று மூன்று நிலைகளாகப் பகுத்து, இதில் வேட்டுவரை முதல் வகையினராகச் சுட்டுகின்றார். ஆகவே வேட்டையாடி உணவு சேகரித்த முதல் வகையினரைச் சங்க இலக்கியங்கள் வேடர், வேட்டுவர், வேட்டுவன் என்று குறிப்பிடுகின்றன. வேட்டுவர்-வேட்டுவன் என்னும் சொற்கள் வினையடியைக் கொண்டுள்ளன. வினை என்பது தொழிலைக் குறித்து வருமென்பதால் வேட்டை என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. இதனால், வேட்டுவர் உணவுக்காக வேட்டையாடும் தொழிலைச் செய்பவன் என்னும் பொருளைத் தருகின்றது. இவ்வுணவுக்காக வேட்டையாடி வாழும் வேட்டுவரைப் பற்றிச் சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், (வேட்டுவ வரி), கம்பராமாயணம் (குகப்படலம்), பெரியபுராணம் (கண்ணப்பர் நாயனார் புராணம்) முதலிய இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. மேலும், வேட்டுவர் இனக்குழுச் சமூகத்தின் தொன்மையைத் தமிழகத்தின் வேடப்பட்டி, வேடசந்தூர் (திண்டுக்கல் மாவட்டம்) முதலிய ஊர்ப்பெயர்களும், வேடப்பர்

(விருதாசலம்) என்னும் தெய்வத்தின் பெயரும் பறைசாற்றுகின்றன. இத்தகைய சிறப்புமிக்க வேட்டுவரின் வாழ்வியலைச் சங்க இலக்கியங் களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் எங்ஙனம் ஆவணப் படுத்தியுள்ளன என ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவரின் வாழ்வியல்

சங்க இலக்கியங்களில் வேட்டுவர் என்ற சொல்லாட்சி காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு வயவர் (நற்றிணை, பா.276:2-3) என்று நற்றிணையிலும்; இன மீன் வேட்டுவர் ஞாழலொடு மிலையும் (அகநானூறு, பா. 270:3), பயில் அரில் கிடந்த வேட்டு விளி வெரீஇ (அகநானூறு, பா. 387:9) என்று அகநானூற்றிலும்; வேட்டுவர் உள் வழி செப்புவேன் ஆட்டி (கலித்தொகை, பா. 144:21) என்று கலித்தொகையிலும்; வேட்டுவர் இல்லை நின் ஒப் போர் என (புறநானூறு, பா.152:24), வெட்சி கானத்து வேட்டுவர் ஆட்ட (புறநூனூறு, பா.202:1), நோன் சிலை வேட்டுவ நோய் இலை ஆகுக (புறநூனூறு, பா.205:9), வெள் வாய் வேட்டுவர் வீழ் துணை மகாஅர் (புறநூனூறு, பா. 324:3) என்று புறநானூற்றிலும்; காந்தள் அம்கண்ணி கொலை வில் வேட்டுவர்... செம் கோட்டு ஆமான் ஊனொடு காட்ட (பதிற்றுப்பத்து, பா.30 (வென்றிச் சிறப்பு) :9-10) என்று பதிற்றுப்பத்திலும்; நிரை திமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை (மதுரைக்காஞ்சி, பா. அடி. 116) என்று பத்துப்பாட்டின் ஒன்றான மதுரைக்காஞ்சியிலும் மொத்தம் பத்து இடங்களில் இடம்பெற்றுள்ளன.

'வேட்டுவன்' என்ற சொல்லாட்சி எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் (நற்றிணை, பா. 59:3), கொலை வில் வேட்டுவன் (நற்றிணை, பா.189:7), பார்வை வேட்டுவன் (நற்றிணை, பா.212:1; 312:4) என நற்றிணைப் பாடல்களிலும்; வேட்டுவன் பெறலொடு அமைந்தனை யாழ நின் (அகநூனூறு, பா.28:8), தூண்டில் வேட்டுவன் (அகநானூறு, பா.36:6) என அகநானூற்றுப் பாடல்களிலும்; இரும்புலி வேட்டுவன் (புறநானூறு, பா.19:5), கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன் (புறநானூறு, 33:1-2), செல்வ தோன்றல் ஓர் வல் வில் வேட்டுவன் (புறநானூறு, பா.150:7-8), யானை வேட்டுவன் (புறநானூறு, பா.214:4), குறும்பூழ் வேட்டுவன் (புறநானூறு, பா.214:5), சொல் வலை வேட்டுவன் ஆயினன் முன்னே (புறநானூறு, பா. 252:5), கைம் மான் வேட்டுவன் (புறநானூறு, பா.320:3) எனப் புறநூனூற்றுப்

பாடல்களிலும் மொத்தம் பதிமூன்று இடங்களில் காணப்படுகின்றன. இப்பாடல்கள் வழி வேட்டுவரின் தோற்றம், வாழ்ந்த நிலப்பரப்பு, உணவுக்காக வேட்டையாடிய உயிரினங்கள், வேட்டையாடுவதற்குப் பழக்கப்படுத்திய உயிரினங்கள், வேட்டைக்குப் பயன்படுத்திய கருவிகள், வேட்டையாடிய பொருட்களைப் பிறருக்குப் பங்கிடுதலும் பண்டமாற்றுதலும் ஆகிய வாழ்வியல் சார்ந்த நெறிகளை அறியமுடிகிறது.

வேட்டுவரின் தோற்றம்

வேட்டுவரின் தோற்றம் பற்றி ஆலத்தூர்க்கிழார் புறநானூற்றின் 324-ஆவது பாடலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வெருக்கு விடையன்ன வெருள் நோக்குக் கயந்தலைப்
புள் ஊன் தின்ற புலவுநாறு கயவாய்,
வெள்வாய் வேட்டுவர் (புறநானூறு, 324:1-3)

அதாவது, வேட்டுவர் ஆண் காட்டுப் பூனையைப் போன்ற வெருண்ட பார்வையை உடையவர்கள்; அவர்களது தலை யானைக் குட்டியின் தலையைப் போன்றது; அவர்கள் பறவைகளை வேட்டையாடி, அதன் ஊனைத் தின்பதால் புலால் நாற்றம் கமழும் வாயினர்.

காந்தள் அம்கண்ணி கொலை வில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
(பதிற்றுப்பத்து, பா.30 (வென்றிச்சிறப்பு) :9-10)

பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்தில் பாலைகௌதமனார் வென்றிச்சிறப்பில் வேட்டுவர் காந்தள் பூவைத் தலையில் சூடிக்கொள்வர் என்றும்; வளைவில்லாத கொம்புகளையுடைய ஆமான் என்னும் காட்டாட்டுக் கறியையும், யானையின் வெள்ளைத் தந்தங்களையும் கொண்டு வந்து ஊரின் கடைத்தெருவில் பிழி என்னும் பழச்சாற்றுக் கள்ளுக்கு விற்பர் என்றும் குறிப்பிடுகிறார்.

வேட்டுவர் வாழ்ந்த நிலப்பரப்பு

சங்கப் புலவர்கள் தங்கள் பாடல்களில் சுட்டியுள்ள நிலத்தின் பெயராலும், கருப்பொருள்களின் அடிப்படையாலும் வேட்டுவரின் வாழிடங்களை இனம் காணமுடியும். குறிப்பாக, நற்றிணைப் பாடல்களில்

கபிலர் (நற்றிணை, பா. 59:3) முல்லை நிலம் என்றும்; பெயர் தெரியாத புலவரும் (நற்றிணை, பா.189:7), குடவாயில் கீர்த்தனாரும் (நற்றிணை, பா.212:1), கழார்க்கீரனாரும் (நற்றிணை,பா.312:4) பாலை நிலம் என்று குறிப்பிடுகின்றனர். மேலும், அகநானூற்றுப் பாடல்களில் பாண்டியன் அறிவுடைநம்பி (அகநூனூறு, பா.28:8) குறிஞ்சி நிலம் என்றும்; மதுரை நக்கீரர் (அகநானூறு, பா.36:6) மருதம் நிலம் என்றும் சுட்டுகின்றனர். புறநானூற்றுப் பாடல்களில் குடபுலவியனார் (புறநானூறு, பா.19:5), கோவூர்க்கிழார் (புறநானூறு, பா.33:1-2), வன்பரணர் (புறநானூறு, பா.150:7-8), கோப்பெருஞ்சோழன் (புறநானூறு, பா.214:4) ஆகியோரின் பாடல்களில் அவர்கள் சுட்டியுள்ள கருப்பொருள்களின் அடிப்படையில் வேட்டுவரின் வாழிடம் குறிஞ்சி நிலம் என்று விளம்புகின்றனர். இங்ஙனம், சங்கத் தொகை நூல்கள் வழி வேட்டுவர் நெய்தல் நிலத்தைத் தவிர குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை ஆகிய நானிலத்தில் வாழ்ந்துள்ளனர். இதனால் இவர்கள் அலைக் குடிகளாக வாழ்ந்ததை அறியமுடிகிறது.

வேட்டுவர் உணவுக்காக வேட்டையாடிய உயிரினங்கள்

சங்ககால வேட்டுவர் இனக்குழு முயல் வேட்டை (நற்றிணை, பா.119, மலைபடுகடாம், பா.அடி.193-95; புறநானூறு, பா.19), முள்ளம் பன்றி வேட்டை (புறநானூறு, பா.325), மான் வேட்டை (புறநானூறு, பா.33; பா.166; பா.202; பா.205; பா.320; நற்றிணை, பா.276:2-3), புலி வேட்டை (புறநானூறு, பா.19; மலைபடுகடாம், பா.அடி. 302-304), யானை வேட்டை (அகநானூறு, பா.21; பா.172; நற்றிணை, பா.114; புறநானூறு, பா.214; பா.320; மலைபடுகடாம், பா.அடி.277-299) எனப் பல வகையான விலங்குகளை வேட்டையாடியுள்ளனர். இதில் யானையை அதனுடைய கொம்புகளுக்காக (நற்றிணை, பா. 65) வேட்டையாடினர். இவர்களது வேட்டைத் தொழில் பெரும்பாலும் ஒரு கூட்டுத் தொழில் என்றாலும் தனியொரு வேட்டுவன் உடும்பு, நுணல், ஈசல், முயல் ஆகிய சிறிய விலங்குகளை வேட்டையாடிய குறிப்பைக் கபிலர் (நற்றிணை, 59) சுட்டுகின்றார். மேலும், வேட்டுவர் கணந்துள் பறவை (நற்றிணை, பா. 212; புறநானூறு, பா.214), கொக்கு (நற்றிணை, பா.312), புறா (நற்றிணை, பா.189) ஆகியவற்றை வேட்டையாடியதை நற்றிணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. வேட்டுவரை அகநானூற்றுப் பாடல்கள் தூண்டில் வேட்டுவன் (36:6) என்றும், இனமீன் வேட்டுவர்

(270:3) என்றும் சுட்டுகின்றன. இதைப்போல் மதுரைக்காஞ்சி, நிரை திமில் வேட்டுவர் (மதுரைக்காஞ்சி, பா. அடி. 116) என்று குறிப்பிடுகின்றது. இப்பாடல்கள் வழி வேட்டுவர் எட்டுத்தொகையில் அகநானூற்றின் 36 - ஆவது பாடலில் மருத நிலத்திலும், அகநானூற்றின் 270 -ஆவது பாடலில் நெய்தல் நிலத்திலும், பத்துப்பாட்டின் ஒன்றான மதுரைக்காஞ்சியின் 116 - ஆவது பாடலடியில் நெய்தல் நிலத்திலும் மீன் பிடித்ததை அறியமுடிகிறது.

வேட்டுவர் வேட்டையாடுவதற்குப் பழக்கப்படுத்திய உயிரினங்கள்

சங்க காலத்தில் வேட்டுவர் விலங்குகளைப் பிடிப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளைப் பார்வை விலங்கு என்றும்; பறவைகளைப் பிடிப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்ட பறவைகளைப் பார்வை புள் என்றும் அழைத்தனர். நற்றிணையின் 212 - ஆவது பாடலைப் பாடிய குடவாயில் கீர்த்தனார், பார்வை வேட்டுவன் என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதாவது வேட்டுவன் பறவைகளை வலையில் சிக்க வைக்க, அப்பறவையைப் போன்று பழக்கப்படுத்தப்பட்ட பறவைகளை ஒலியெழுப்ப வைத்து பிற பறவைகளைப் பிடிப்பதாகும். கோடு துலையா கோள் வாய் நாயொடு காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு (நற்றிணை, பா. 276: 1-2) முருகுமுரண் கொள்ளும் தேம்பாய்கண்ணி பரியல் நாயொடு பன்மலைப்படரும் வேட்டுவன்...... (அகநானூறு, பா.28:5-7) நற்றிணையின் 276 - ஆவது பாடலிலும்; அகநானூற்றின் 28 - ஆவது பாடலிலும்; புறநானூற்றின் 33, 205 - ஆவது பாடல்களிலும் வேட்டுவர் பன்றி, மான் ஆகியவற்றைப் பிடிப்பதற்குப் பழக்கப்படுத்தப்பட்ட நாயைக் கொண்டு வேட்டையாடியதை உணர்த்துகின்றன. வேட்டுவர் வேட்டைக்குப் பயன்படுத்திய கருவிகள்

சங்க இலக்கியங்கள் வேட்டுவர் வலை, வில்-அம்பு, தூண்டில், அடார், கவண் முதலிய கருவிகளைக் கொண்டு விலங்குகளையும், பறவைகளையும் வேட்டையாடியதைப் பின்வருமாறு சுட்டுகின்றன. நற்றிணையின் 189 - ஆவது பாடல் வேட்டுவர் தன் வலையை விரித்து புறாக்களைப் பிடித்ததையும், அவ்வலையில் அகப்பட்ட ஆண்புறா வலையைப் பிய்த்துக் கொண்டு பறந்ததையும் குறிப்பிடுகின்றது. மாரிப்பித்தியார் புறநானூற்றின் 252 - ஆவது பாடலில் கணவன் மனைவியைச் சொற்களால் தன் வயப்படும் ஆற்றலுடையவன்

என்பதைச் சுட்டுவதற்காகத் தம் பாடலில், சொல் வலை வேட்டுவன் என்னும் தொடரைப் பயன்படுத்தியுள்ளார். இதனால் வேட்டுவர் தயாரிக்கக் கூடிய வலையின் நுட்பத்தினை அறியலாம். வன்பரணர் தமது புறநானூற்றுப் பாடலில் (152:1-7) கொல்லிமலையின் அரசனான வல்வில் ஓரி மிகச் சிறந்த வேட்டுவர் எனக் கூறி அவரது வில் அம்பின் சிறப்பினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்,
புழல்தலை புகர்க்கலை உருட்டி, உரல்தலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பில் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
புகழ்சால் சிறப்பின் அம்புமிகத் திளைக்கும் (புறநானூறு, 152:1-7)

அதாவது வல்வில் ஓரியின் வில்-அம்பு யானையை விழச் செய்துவிட்டு, புலியைக் கொல்கிறது. பின்னர் மானை கொன்றுவிட்டுப் பன்றியை வீழ்த்துகிறது. பிறகு அருகில் இருக்கும் உடும்பின்மீது பாய்கிறது எனக் குறிப்பிடுகிறார். குடபுலவியனார் புறநானூற்றின் 19 - ஆவது பாடலில் புலியைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் அடார் என்னும் கருவியைக் குறிப்பிடுகின்றார்.

இரும்புலி வேட்டுவன் பொறி அறிந்து மாட்டிய
பெருங்கல் அடாரும் போன்ம் (புறநானூறு, 19:5-6)

நீண்ட கருங்கல் பலகையின் ஒரு பகுதியைச் சாய்வாக நிமிர்த்தி வைப்பர். அதன் கீழே ஒரு பொருளை முட்டுக் கொடுப்பர். அதன் உள்ளே உணவுகளை வைப்பர். அவ்வுணவுகளைத் தின்ன வரும் விலங்குகள் அக்கருங்கல் பலகையையோ அல்லது முட்டுக் கொடுக்கப்பட்ட பொருளையோ கீழே தட்டிவிடும்போது கருங்கல் பலகை தானாகக் கீழே விழுந்து அவ்விலங்கை மூடிவிடும். அதாவது அடார் என்பது இன்று பயன்படுத்தும் எலிப் பொறி போன்ற கருவியாகும். இக்கருவியைக் கொண்டு புலியைப் பிடித்த செய்தியைப் புறநானூற்றுப்பாடல் (19) குறிப்பிடுகின்றது. இதைப்போன்று நற்றிணைப் பாடலும் (119), மலைபடுகடாமும் (193) குறிப்பிடுகின்றன.

வேட்டையாடியதைப் பிறருக்குப் பாதீடுதலும், பண்டமாற்றுதலும் வேட்டுவர் வேட்டையில் கிடைத்த உடும்பின் இறைச்சியைக் குடியிருப்பில் உள்ள குடியினர் அனைவருக்கும் பகிர்ந்தளித்ததைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் (325) சுட்டுகின்றது.

முளவுமாத் தொலைச்சிய முழுச்சொல் ஆடவர்
உடும்பிழுது அறுத்த ஒடுங்காழ்ப் படலைச்
சீறில் முன்றில் கூறு செய்திடுமார்
கொள்ளி வைத்த கொழுநிண நாற்றம் (புறநானூறு, பா. 325)

மேலும், வேட்டுவர் கூடி உண்ணுவதற்கென்றே சில மன்றங்கள் இருந்ததைப் புலம்பு கூட்டுண்ணும் புல்லென் மன்றத்து (நற்றிணை, பா.33) என்னும் நற்றிணைப் பாடலடியால் அறியலாம்.

வேட்டுவர் வேட்டையாடிக் கொண்டு வந்த மானிறைச்சியைப் பெற்றுக் கொண்டு உழவன்மகளிர் அதற்குப் பதிலாக வெண்ணெல் கொடுத்ததைப் புறநானூற்றுப் பாடல் (33) சுட்டுகின்றது. கொலைவில் வேட்டுவர் தாம் வேட்டையாடிய ஆமான் ஊனினையும், யானையின் தந்தத்தையும் கொடுத்துக் கடைத்தெருவில் கள்ளுண்டு மகிழ்ந்ததைப் பதிற்றுப்பத்து (30) விளம்புகின்றது.

முடிவுரை

1. சங்ககாலத்தில் வேட்டையாடி உணவு சேகரித்த வேட்டுவர் இனக்குழுச் சமூகத்தின் வாழ்வியலை நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய எட்டுத்தொகை நூல்களும்; பத்துப்பாட்டின் ஒன்றான மதுரைக்காஞ்சியும் ஆவணப் படுத்தியுள்ளன. இப்பாடல்கள் வழி வேட்டுவரின் தோற்றம், வாழ்ந்த நிலப்பரப்பு, உணவுக்காக வேட்டையாடிய உயிரினங்கள், வேட்டையாடுவதற்குப் பழக்கப்படுத்திய உயிரினங்கள், வேட்டைக்குப் பயன்படுத்திய கருவிகள், வேட்டையாடிய பொருள்களைப் பிறருக்குப் பாதீடுதலும் பண்டமாற்றுதலும் ஆகிய வாழ்வியல் நெறிகளை அறியமுடிகின்றன.

2. வேட்டுவரின் தோற்றம் குறித்து ஆலந்தூர்க்கிழாரும் (புறம், 324), பாலைகௌதமனாரும் (பதிற்றுப்பத்து, 30) குறிப்பிடுகின்றனர். இவர்களது கூற்றுப்படி வேட்டுவர் வெருண்ட பார்வையையுடையவர்கள்;

அவர்களது தலை யானைக் குட்டியின் தலையைப் போன்றது; அத்தலையில் காந்தள் மலரைச் சூடுவர்; அவர்கள் இறைச்சியை உண்பதால் வாய் புலால் நாற்றம் வீசக்கூடியது; காட்டாட்டு இறைச்சியையும், யானையின் தந்தத்தையும் கடைத்தெருவில் கொடுத்து பிழி என்னும் கள்ளினை அருந்தி மகிழக்கூடியவர்கள் என்பதை அறியமுடிகிறது.

3. கபிலர், குடவாயில் கீர்த்தனார், கழார்க்கீரனார், பாண்டியன் அறிவுடைநம்பி, மதுரை நக்கீரர், குடபுலவியனார், கோவூர்க்கிழார், வன்பரணர், கோப்பெருஞ்சோழன் ஆகியோரின் பாடல்கள் வழி வேட்டுவர் நெய்தல் நிலத்தைத் தவிர குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை ஆகிய நானிலத்தில் அலைக்குடிகளாக வாழ்ந்திருக்கின்றனர்.

4. சங்ககால வேட்டுவர் இனக்குழு புலி, யானை, முள்ளம் பன்றி, மான், காட்டாடு போன்ற பெரிய விலங்குகளை ஒன்றுகூடியும்; முயல், நுணல், ஈசல், கணந்துள் பறவை, கொக்கு, புறா, மீன் முதலிய சிறிய உயிரினங்களைத் தனியாகவும் வேட்டையாடியுள்ளனர்.

5. வேட்டுவர் பறவை, நாய் ஆகியவற்றைத் தங்கள் வேட்டைக்காகப் பழக்கப்படுத்தி மானையும், பன்றியையும் வேட்டையாடியுள்ளனர்.

6. வேட்டுவர் வலை, வில்-அம்பு, தூண்டில், அடார் ஆகிய கருவிகளைக் கொண்டு புறா, மான், பன்றி, உடும்பு, புலி, யானை முதலிய உயிரினங்களை வேட்டையாடியுள்ளனர். இங்ஙனம் வேட்டையாடிய உணவுப் பொருட்களைத் தங்கள் இனக்குழுவினருக்குப் பகிர்ந்தளித்தும்; கடைத்தெருவில் பண்டமாற்றம் செய்தும் வாழ்ந்திருக்கின்றனர்.

துணைநூல் பட்டியல்

1. இலக்கிய மானிடவியல், பக்தவத்சல பாரதி (2014), அடையாளம் பதிப்பகம்:புத்தாநத்தம்.
2. நற்றிணை (மூலமும் உரையும்), கு.வெ. பாலசுப்பிரமணியன் (உ.ஆ.) (2007), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்: சென்னை.
3. அகநானூறு (மூலமும் உரையும்), இரா.செயபால் (உ.ஆ.) (2007), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்: சென்னை.

கல்வெட்டில் வேட்டுவர்கள்

பதிப்புத்தென்றல் புலவர் அ.பழனியப்பன்,
எம்.ஏ., பி.எட்.,
கல்வெட்டாய்வாளர்,
ஜம்பை.

முன்னுரை

சங்க காலப் புலவர்களான இளங்கோவடிகள், சுந்தரமூர்த்தி அவர்கள் முதலானோர்களால் பாடப் பெற்றவர்கள் வேட்டுவ இனத்தோர். இவ்வினத்தவர்கள் கோயில்களுக்குச் செய்த பணிகள் பற்பல உள்ளன. இவ்வினத்தவர் பல குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு குழுவிற்கும் தனித் தனிப் பெயர்கள் உள்ளன. ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட பெயர்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள கோவில் கல்வெட்டுகளில் சில வேட்டுவ இனக்குழுவின் பெயர்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இதேபோல் கோவை மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

கல்வெட்டுச் செய்தி

ஊராரும், ஊராளிகளும் இவ்வூரில் ஏரி ஒன்றை வெட்டிக் கொடுத்துள்ளனர். ஏரி நீரைப் பயன்படுத்தி வேளாண்மை செய்பவர்கள் தம் வருவாயில் மூன்றில் ஒரு பங்கை இறைவனுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காதவர்கள் ஏழு தலைமுறைக்கும் குழந்தைப்பேறு இல்லாமல் போவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தத்துக்குக் குழந்தையை எடுத்தாலும் அதற்கும் குழந்தை இருக்காது. இது ஏழு தலைமுறைக்கும் பொருந்தும் என்பதை நாம் உணர வேண்டும்.

ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில் பட்டலூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரைப் பட்டலூர், பட்லூர் என்னும் பெயர்களில் அழைக்கின்றனர். இங்குள்ள வாகீசுவரமுடையார் கோவிலில் சில

கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒன்று கொங்குச் சோழ மன்னன் வீரராசேந்திரன் ஆட்சியாண்டு 38-ல் (கி.பி.1245ல்) பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு 1 :

ஸ்வஸ்தி ஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீ வீர ராஜேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதற்கெதிர் ஒன்பதாவது வடகரை நாட்டுப் பட்டில் ஊரும் ஊராளிகளேம் எங்களுர் நாயனார் வாகீஸ்வர முடையாருக்கு நாங்கள் ஏரியிட்டுக் குடுத்த படியானது,

....

....இக்குளம் உழுது மூன்றிலொன்று நாயனாற்கு குடுப்பார்களாகவும் .... யேழெச்ச மறுவான் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றியமையாத வரிகள் மட்டுமே இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பட்டிலூர் தற்போது பட்டலூர் பட்லூர் என்னும் பெயர்களில் வழங்கப்பெறுகின்றது.

இதில் உள்ள ஊராளி என்னும் வேட்டுவ இனத்தவர் பெயர் வந்துள்ளது. அவர்கள் இங்கு வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

கல்வெட்டு 2:

செய்தி: இக்கோவிலின் தென் வடல் குமுதப் பகுதியில் பாண்டாண்டி என்பவர், கோவிலில் விளக்கு எரிப்பதற்காகக் காசு கொடுத்தது பற்றிக் கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு 3:

ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திரு நல்லியாண்டு இருபத்து மூன்றாவது வடகரை நாட்டில் புன்னத்தில் இருக்கும் பாண்டி வேட்டுவரில் புன்னத்துரான் மகள் பாண்டாண்டியேன் வாகெஸ்வரமுடையார்க்கு அச்சுக் கொண்டு .... சந்தியா தீபம் மூன்றும் இட்டுப் பூசிப்பான் ...... என்றுள்ளது.

இதிலும் கோடிட்ட பகுதி நீக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு, பாண்டி வேட்டுவர் இனத்தைச் சேர்ந்த பாண்டாண்டி என்பவர் கி.பி.1230-இல் விளக்கு எரிப்பதற்கு நன்கொடையளித்துள்ளார் என்பது தெரிகிறது.

இதே கோவிலின் தென்புற மண்டபச் சுவரில் கொடும்பூர் வேட்டுவ இனத்தைச் சார்ந்த பெரிய தேவன் மகன் பெரிய பிள்ளையான பெரிய தேவன் என்பவர் கி.பி.1241 சந்தியா விளக்கெரிப்பதற்காகக் காசு கொடுத்ததைப் பற்றி தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டு கொடும்பூர் வேட்டுவர் என்னும் ஒரு வேட்டுவர் இனக்குழுவைக் குறிக்கின்றது.

பட்டலூர் வேட்டுவர், நடுகல்

பட்டலூர் வாகீசுவரமுடையார் கோவிலுக்குத் தென்பகுதியில் நடுகல் ஒன்று உள்ளது. இதனை வேட்டுவர் இனமக்களும் ஏனையோரும் வழிபட்டு வருகின்றனர்.

இந்த நடுகல்லில் நக வேட்டுவர் குலத்தைச் சார்ந்த சிலம்பன் என்பவர், ஊருக்குள் புகுந்த புலியுடன் போராடி இறந்து விட்டார் என்னும் செய்தி விளக்கப்பட்டுள்ளது. எழுத்தமைதி கொண்டு வீரராசேந்திரன் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் இந்த நடுகல் அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதில் உள்ள நக வேட்டுவர் என்னும் சொல் நவ வேட்டுவராக இருக்கலாம்.

பட்டலூருக்கு ஏறத்தாழ ஐந்துகல் தொலைவிலுள்ள ஒலகடம் (உலகவிடங்கம்) என்னும் ஊரில் உள்ள உலகவிடங்கர் கோவிலின் உள்ளே வடக்குப் புறத்தில் சிறிய அளவில் கோயில் கட்டி அதில் குன்றமெறிந்த பிள்ளையாரை (முருகப் பெருமான்) எழுந்தருளச் செய்தவர் கருஞ்சொக்கன், வலிய சொக்கன் ஆகிய கள்ளை வேட்டுவர் இருவர் ஆவர். இவர்கள் இவ்வூர் மக்களின் உதவியோடு இப்பணியைச் செய்தமை இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இது வீரராசேந்திர சோழனின் 24 - ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1231) பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கள்ளை வேட்டுவர் என்னும் இனக்குழுவைக் குறிக்கின்றது.

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடிக்கு அருகில் பட்டையக்காளி பாளையம் என்னும் ஊர் உள்ளது. இங்கு அருள்மிகு.ஞானப் பூங்கோதை உடனமர் காளத்தி நாதருக்கு ஒரு ஆலயம் உள்ளது. கோவிலின் வடக்குப்புறச் சுவரின் பட்டிகைப் பகுதியில் ஒரு பாகம், கிழக்கு மேற்காக கிரந்த மொழிக் கல்வெட்டும், மற்றொரு பாகம் தமிழ்க் கல்வெட்டும் இருக்கின்றன. இது கோவிலைப் புதுக்கி நிர்மாணம் செய்யப்பட்டது பற்றிக் குறிப்பிடுகின்றது. தமிழ்க் கல்வெட்டில் கலியுக ஆண்டு 5015 பிரமாதீச வருஷம் தை மாதம் என்றுள்ளது.

தெற்குப்புறச் சுவரில் தென் கிழக்காக ஸ்ரீ கணேசாய நம, பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றாகிய ஸ்ரீ காளத்திநாதன் ஆதீனம் கண்ணப்பர் கோத்திரம் வில்வேடுவர், வேட்டுவர், மாவலவர், பூவலவர், காவலவர் இதைச் சார்ந்த 32 ராயர் குலம் லட்சத்தி எட்டு வீர குலத்தவர்களும், வீர தண்டும், புலிக்கொடியும் என்று உள்ளது. இதன் தொடர்ச்சி கோவிலின் கிழக்குப்புறச் சுவருக்குள் மறைக்கப்பட்டுக் கட்டடம் கட்டப்பட்டுவிட்டது. இது வேட்டுவர் பற்றிய பெருமையைச் சொல்வதாக அமைந்துள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கவுந்தப்பாடிக்கு அருகில் மின்ன வேட்டுவம் பாளையம் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரில் பெரும்பாலும் வேட்டுவ இன மக்களே வாழ்ந்து வருகின்றனர். இவ்வினத்தவர் வழிபடும் மாரியம்மன் கோவில் ஒன்று இங்குள்ளது. இக்கோவிலின் முன்புறம் உள்ள தூரிக்கல்லில் கடவுள் துணை எனத் தொடங்கும் ஒரு கல்வெட்டு உள்ளது.

கல்வெட்டு: சாலிவாகன சகாப்தம் - 1843 கலியுக சகாப்தம் - 5022 சரியான 1921 -ஆவது வருஷம் மார்ச் மாதம் 30- ஆம் தேதி தமிழில் ரவுத்திரி வருஷம் பங்குனி மாதம் 7-ஆம் தேதி மின்ன வேட்டுவம் பாளையத்திலிருக்கும் ராக்கணகவுண்டன் மகன் புள்ள மாரப்ப கவுண்டன் பெண் சாதி கவுண்டியம்மாள் செய்து வைத்த தூரிக்கல் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

பணி ஓய்வு பெற்ற அரசு அலுவலர் குருசாமி மற்றும் சந்திரசேகர், முருகவேல் ஆகியோருடன் சென்று எழுத்துக்களைப் படி எடுத்த பொழுது இச்செய்தி தெரிய வந்தது. புள்ள மாரப்பகவுண்டன் பெயரில் அவர் புள்ள வேட்டுவர் இனத்தைச் சார்ந்தவர் என்றும், ஊரின் பெயரில் மின்ன வேட்டுவன் என்னும் பெயர் இணைந்திருப்பதால் இங்குப் புள்ள வேட்டுவர், மின்ன வேட்டுவர் ஆகிய இரண்டு இனக் குழுவினர்கள் வாழ்கின்றனர் என்பதை அறியலாம்.

பவானியை ஒட்டிய கொமாரபாளையத்தில் அன்னபூரணி உடனமர் கைலாசநாதர் கோவில் உள்ளது. இக்கல்வெட்டு சக ஆண்டு - 1220 திரிபுவனச் சக்கர (வர்த்)திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தெ(வர்க்கு) யாண்டு 13 - ஆவது வடகரை நா(ட்டு) லெங்கை வேட்டுவ .... என்று முழுமை பெறாமல் உள்ளது. இங்கு ஏறத்தாழ 700 ஆண்டுகளுக்கு முன்பு லெங்கை வேட்டுவர் வாழ்ந்து வந்துள்ளதாக இக்கல்வெட்டின் மூலம் நாம் அறிய முடிகிறது.

மண்டபத்தூர் வேட்டுவர் நடுகல்

நாமக்கல் மாவட்டம், வெப்படை, பி.கொமாரபாளையம் ஆகிய இரு ஊர்களுக்கு இடையே மண்டபத்தூர் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் உள்ள ஒரு நடுகல் கி.பி.1320-ல் அந்துவ வேட்டுவனுக்காக எடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.

கல்வெட்டு: ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 22வது மண்டபத்தூர் அந்துவ வேட்டு(வன்) உத்தமாண்டார் திரு(நாட்)டாகு...... தொடர்ந்து எழுத்துக்கள் சிதைந்து காணப்படுகின்றன. இந்த நடுகல் அந்துவ வேட்டுவர் இனத்தைக் குறிப்பிடுகிறன்றது.

முடிவுரை

இதுவரை கூறப்பட்டுள்ள கல்வெட்டுகளில் 1. பாண்டிவேட்டுவர், 2.கொடும்பூர் வேட்டுவர், 3.வில் வேட்டுவர், 4.வேட்டுவர், 5.மாவலர், 6.பூவலவர், 7..நகவேட்டுவர் (நக வேட்டுவர்) 8.அந்துவ வேட்டுவர், 9.ஊராளி வேட்டுவர், 10.கள்ளை வேட்டுவர், 11.புள்ள வேட்டுவர், 12.மின்னவேட்டுவர் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பெற்ற கல்வெட்டுகள் இக்கட்டுரையாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டுத் தமிழகத் தொல்லியல் ஆவணங்களில் பதிவாகியுள்ளன.

ஈரோடு மாவட்டம், காசிபாளையம், மொட்டணம், தேவர்மலை நடுகற்களில் எழுத்துகள் இல்லை. இவையாவும் வேட்டுவர் பற்றியவை; அந்துவ வேட்டுவர் திரு.சந்திரசேகர், பட்டாலி வேட்டுவர் திரு.முருகவேல் ஆகியோருடன் சென்று கண்டுபிடிக்கப்பட்டவை. இந்த நடுகற்கள் பற்றிய செய்திகள் கண்ணப்பர் கல்வி மடல் இதழில் வெளியாகியுள்ளன.

சங்க இலக்கிய குறிஞ்சித்திணையில் வேட்டுவர்கள் வாழ்வியல்

தி. தருண்சர்மா,
தமிழ்த் திட்ட ஆய்வாளர்,
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005,
ttsart99@gmail.com

முன்னுரை

சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்னும் இருநிலைகளாகப் பகுத்துக் கூறப்படும் தன்மை உடையனவாகும். இலக்கணம் எழுதிய தொல்காப்பியரும் தம் திணைக் கோட்பாட்டைத் தமிழ்நாட்டின் நில அமைப்பையொட்டி அமைத்துள்ளார். இத்திணைக்கோட்பாடு மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கீழ்நோக்கிச் சரிந்துவரும் தமிழ்நாட்டு நில அமைப்பையே காட்டுகின்றது.

மலைகளையும் மலைசார்ந்த நிலப்பகுதி களையும் குறிஞ்சி என்றும், மலைகளை அடுத்துள்ள காடுகளுக்கும் காடுகள் சார்ந்த நிலப்பகுதிகளுக்கும் முல்லை என்றும், ஆறுகள் பாயும் சமவெளிப் பகுதிகளுக்கு மருதம் என்றும் இறுதியாக ஆறுகள் கடலோடு கலக்கும் நிலப்பகுதிகளுக்கு நெய்தல் என்றும் பெயரிடப்பட்டுள்ளன. பாலை என்பதைத் திணையாக வகுத்திருப்பினும், அதற்கு உரிய நிலம் இன்னதென்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. அவ்வகையில், குறிஞ்சிநில மக்கள் வாழ்வியலை இக்கட்டுரையில் காண்போம்.

குறிஞ்சி நிலம்

திணைக்கு உரிய அகமாந்தர்களின் பெயர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்”1

என்று கூறியுள்ளார்.

இதில் தொல்காப்பியர் வேட்டுவர் என்னும் சொல்லால் குறிஞ்சி நில மக்களைக் குறிப்பிட்டுள்ளார் என்றும் அறியமுடிகிறது. மேலும் கருப்பொருள்களுள் உயிர்ப்பொருளான மனிதனுக்கு மட்டுமே உரியதான உரிப்பொருளைப் பற்றிப் பேசுமிடத்தில், குறிஞ்சிக்கு உரிய உரிப்பொருளான புணர்தல் என்பது களவில் நிகழ்வதாகும்.

சங்க இலக்கியத்துள் இயற்கைப் புணர்ச்சி குறித்த பாடல்கள் பெரும்பாலும் குறிஞ்சித் திணை சார்ந்த பாடல்களாக இருக்கின்றன. இதன் மூலம் மலைப்பகுதியில் இயல்பாக இருக்கக் கூடிய இருளும் குளிரும் புணர்விற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தருகின்றது என அறியமுடிகிறது. மேலும், தமிழர் மரபு பெரும்பாலும் களவு வழிப்பட்ட கற்பாக இருப்பதால் குறிஞ்சியையே முதன்மையாகக் கருதுதல் வேண்டும்.

குறிஞ்சி நில மாந்தர்

குறிஞ்சித் திணைப் பின்புலத்தில் பாடப்பெற்ற பாடல்களில் வேட்டைத் தொழிலே சிறப்பிடம் பெறுகிறது. தொல்காப்பியரும் குறிஞ்சித் திணைக்கு உரிய மக்கட்பெயராக, வேட்டுவர் என வரையறுத்துள்ளார். இதன் மூலம் வேட்டுவர்கள் குறிஞ்சி நிலத்தில் வேட்டைத் தொழிலை முன்னிறுத்திய சமூகமாக இருந்ததை உணர முடிகின்றது. ஆனால் தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொண்ட இடமாகத் தினைப்புனம் இருப்பதனால், இம்மக்கள் உணவு உற்பத்தியிலும் ஈடுபட்டிருந்தனர் எனப் புலனாகின்றது.

இவ்விரண்டு நிலைகளிலும் குறிஞ்சிநில மக்கள் தனியுடைமை சாராத பொதுச் சமூகமாகவே இருந்தனர். இவ்வகையில் வேட்டையாடலும், தொல்வேளாண்மையும் குறவர்களின் தொழிலாக இருந்தன. குறிஞ்சிப் பாடல்களில் வேட்டைத் தொழில் பற்றியும் வேட்டையாடப் பெற்ற விலங்கின் இறைச்சி பற்றியும் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இனக்குழு சமூக மக்களுக்கே உரிய தொழிலான வேட்டைத் தொழிலில், அக்குழுவைச் சார்ந்த மக்கள் அனைவரும் ஒன்றுகூடியே ஈடுபட்டனர் என்பதை,

“யானை வவ்வின தினையென நோனாது
இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇச்
சிலையாய்ந்து திரிதரும் நாடன்”[2]

என்னும் பாடலில் கவர்ந்துண்ண வந்த யானையை இளையோரும் முதியோரும் ஆகிய சுற்றத்தாருடன் ஒருங்கே கூடி வேட்டையாடிய நிலை விளக்கப்பட்டுள்ளது.

வேட்டுவர்கள்

குறிஞ்சித்திணை மக்கள் மலைப்பகுதியில் வாழ்ந்தமையால், அவர்களைக் குறிக்க குறவன், கானவன், குன்றநாடன், மலைநாடன், மலைக் கிழவோன், மால்வரை நாடன், வெற்பன், குறமகள், கொடிச்சி ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மக்கள் இனக்குழுக்களாகக் கூடி வாழ்ந்த நிலையை விளக்கும் வகையில் பல்கிளைத் தலைவன் எனப் பெயர் பெற்றுள்ளான்.

வேட்டைக் கருவிகள்

வரலாற்றிற்கு முந்தைய காலகட்டத்தைப் பழைய கற்காலம், புதிய கற்காலம் எனப் பகுப்பதற்கு அடிப்படையாக அமைவது அக்கால மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளே ஆகும். மனிதன் தற்காப்புக்காகவும், உணவுத் தேவைக்காகவும், விலங்குகளை வேட்டையாடுவதற்காகவும் பயன்படுத்திய முதற்கருவிகள் கற்கருவிகளே ஆகும். ஆனால் சங்க இலக்கியப் பாடல்களில் வில்லும் அம்பும் வேட்டைக் கருவிகளாகப் பயன்பட்டமைக்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. கற்கருவிகளின் பயன்பாடு பற்றிய பதிவுகள் குறைவாகவே காணப்பட்டாலும், வேட்டுவர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபட்டபோது, தினைப்புனக் காவலில் விலங்குகளை விரட்ட, கல்லும் கவணும் பயன்பட்டமையைப் பாடல்கள் விவரிக்கின்றன.

> **“புலந்து புனிறு போகிய புனஞ்சூழ் குறவர்**
> **உயர்நிலை இதணம் ஏறிக் கைபுடையூஉ**
> **அகன்மலை யிறும்பில் துவன்றிய யானைப்**
> **பகனிலை தளர்க்கும் கவணுமிழ் கடுங்கல்**
> **இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக்**
> **கருவிர லூகம் பார்ப்போ டிரிய**
> **உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன**
> **வரும்விசை தவிராது மரமறையாக் கழிமின்”[3]**

என்ற அடிகளில், கூத்தர்களை ஆற்றுப்படுத்தும்போது, அவர்கள் கடந்து செல்லும் வழிகளில், கதிர்கள் வளர்ந்து முற்றி நிற்கும் தினைப்புனத்தினைக்

காக்கும் குறவர்கள் உயர்ந்த பரண்களிலே ஏறிநின்று மலையிடத்தே உள்ள குறுங்காட்டில் உள்ள யானைகளை விரட்டுவதற்காகக் கவண் எறிந்தனர் எனப் பாடப்பட்டுள்ளது.

குறவர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபடுவதற்கு முன்னர், வேட்டுவர்களாக வாழ்ந்த காலகட்டத்தில் வில்லும் அம்பும்தான் முக்கிய கருவிகளாக இருந்திருக்கின்றன.

தமிழக நிலப்பரப்பில் வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்தில் வாழ்ந்த வேட்டுவர்களும் வில்லாற்றலில் சிறந்து விளங்கினர். அதற்கு இனக்குழுத் தலைவர்களில் ஒருவனான வல்வில் ஓரியின் வில்லாற்றலே சிறந்த சான்றாகும்.

ஓரி என்பவன் கொல்லிமலைத் தலைவனாவான். மேலும் கடையேழு வள்ளல்களில் ஒருவனாகவும் வைத்துப் புகழப்படுபவன். இதில் வல்வில் என்பது ஒரே கணத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை எய்யும் வலிமை பொருந்திய வில்லினைக் குறிப்பதாகும்.

வேட்டை உத்தி

நாம் வேட்டையில் நேரிடையாக விலங்குகளை எதிர்க்கும்போது விலங்குகளால் கொடிய முறையில் தாக்கப்படக்கூடும். எனவே அவ்விலங்குகளைத் தாக்க சில உத்திகளைப் பின்பற்றினர். இதில் கானவர்கள் விலங்குகளின் காலடித்தடங்கள் மிகுதியாக அழுந்திக் கிடக்கின்ற வழிகளைத் தேர்ந்தெடுப்பர்.

“ஆர்களிறு மிதித்த நீர்த்திகழ் சிலம்பில்”[4]

என்னும் அடியில் யானை மிதித்த குழியில் நீர் நிறைந்து இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய வழித்தடங்களில் மழைநீர் தேங்கிக் கிடக்கும் வகையில் குழிகளைத் தோண்டி வைப்பர். கோடைக் காலங் களில் நீரின்றி அலையும் விலங்குகள், வேடர்கள் அமைத்த குளங்களில் நீர் அருந்த வருவதுண்டு. அவ்வாறு வரக்கூடிய விலங்குகளை வேட்டுவர்கள் மறைந்திருந்து தாக்குவர் என்பதை,

“மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதின் நீர்நசைக் குழித்த
அகழ்சூழ் பயம்பின் அகத்தொழித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவின் னன்ன

வளை மருப்பேனம் வரவுபார்த் திருக்கும்
அரைநாள் வேட்டம்"[5]

என்னும் பெரும்பாணாற்றுப்படைப் பாடலில் விளக்கப்பட்டுள்ளது.

வேட்டுவர் தேனெடுத்தல்

இனக்குழுக்களாக வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் வேட்டையாடு தலோடு தேனழித்தல், கிழங்ககழ்தல் முதலிய வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். கானவர் தேனழித்தது பற்றியும் கிழங்குகளை அகழ்ந்தது பற்றியும்

"தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்"[6]

என்று மலைபடுகடாம் கூறுகிறது. வேட்டைக்காகக் காடுகளில் அலைந்து திரிந்த கானவர்கள் தேனின் சுவையையும் அறிந்தே வைத்திருந்தனர். குரங்குகளால் ஏற முடியாத உயர்ந்த மலையில் தேனீக்கள் தேனைத் திரட்டிக் கூடு கட்டியிருந்தன. வேட்டுவர்கள் மலையின் மிக உச்சியில் இருக்கக் கூடிய தேன்கூட்டை அழித்து தேனை எடுத்த மகிழ்ச்சியால் மிகுதியாக ஆரவாரித்தனர். அந்த ஆரவாரம் மலையெங்கும் ஒலித்தது என்னும் செய்தியை மலைபடுகடாம் குறிப்பிடுகிறது.

"கலை கையற்ற காண்பி னெடுவரை
நிலை பெய்திட்ட மால்பு நெறியாகப்
பெரும்பயன் தொடுத்த தேங்கொள் கொள்ளை"[7]

என்னும் அடிகளில் கானவர் கண்ணேணி வழியாக ஏறிச் சென்று தேனெடுத்த செய்தி குறிப்பிடப்படுகிறது. தேன் என்பது பெருந்தேன் என்ற அடையுடன் வழங்கப்பட்டுள்ளதை, **பெருந்தேன் இழைக்கும் நாடன், நெடுவரைப் பெருந்தேன் என்பதன்** மூலம் அறியலாம்.

உணவுப் பழக்கம்

மனிதன் வேட்டைச் சமூகமாக வாழ்ந்த கால கட்டத்தில் உணவின் தேவைக்காக விலங்குகளை வேட்டையாடியதுடன், அவற்றின் ஊனைப் பச்சையாகவும், நெருப்பிலிட்டுச் சுட்டும் தின்றனர்.

"பச்சூன் தின்று பைந்நிணம் பெருத்த
எச்சில் ஈர்ங்கை விற்புறந் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை"[8]

என்ற பாடலில், ஊனைப் பச்சையாகத் தின்று ஈரமான கையை வில்லினது புறத்தே தேய்த்துத் துடைத்ததுக் கொண்ட, காளை போன்ற வீரன் என்று குறிப்பிட்டுள்ளார். மேய்ச்சல் சமூகமாக மாற்றமடைந்தபின் அவர்கள் ஊனுடன் பால், தயிர் முதலியவற்றையும் சேர்த்து உண்டதனைப் பற்றிப் பிறதிணைப் பாடல்களில் காணலாம்.

பகுத்துண்ணும் பண்பு

வேட்டுவர்களுக்கு வேட்டைப் பலன்கள் கிடைக்கப் பெறாத நிலையில் பற்றாக்குறையான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டிய சூழலும் ஏற்பட்டிருக்கக் கூடும். இந்நிலையில் பங்கீட்டு முறையைப் பின்பற்றி இருக்கக்கூடும். கொடிய வறட்சிமிக்க கோடைக்காலங்களில் நீர் வற்றிய பள்ளங்களில் சேற்றை நீக்கியதும் ஊறிய சிறிதளவு நீரை, மக்கள் தமக்குள் முறைவைத்து முகர்ந்து சமமாகப் பங்கிட்டுக் கொண்ட செய்தி புறநானூறு 352-ஆவது பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேட்டையில் கிடைக்கப்பெற்ற விலங்கின் இறைச்சியானாலும் அவற்றை மக்கள் தமக்குள் எவ்விதப் பாகுபாடுமின்றி சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர் என்பதை,

“கூறு செய்திடுமார் கொள்ளி வைத்த கொழுநிணம்”[9]

என்பதன் மூலம், மக்கள் உடும்பின் கறியைப் பங்கிடுவதற்காகவே சுட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

உணவுத் தட்டுப்பாடு

வேட்டுவர்கள் தொடர்ந்து விலங்குகளை வேட்டையாடியதால் விலங்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கக் கூடும். இந்நிலையில் மனிதன் உணவிற்காகத் தாவரங்களை நாடினர். தாவரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பழங்கள், காய்கறிகளைப் பச்சையாக உண்பதுடன் இறைச்சியைப் போன்று வேக வைத்து உண்ணவும் பழகியிருந்தனர். எனவே உணவுத் தேவையே மனிதனை இடப்பெயர்வுக்கு ஆளாக்கியது என்றும் மனித முயற்சிகளில் ஈடுபட வைத்தது என்றும் கூறலாம்.

உணவின் தேவைக்காக நிலத்தை அகழ்ந்து கிடைக்கும் கிழங்கு வகைகளை உண்ணத் தொடங்கியிருப்பர். தொடர்ந்து நிகழ்ந்துவந்த இயற்கைப் பேரழிவுகளும், இனப்பெருக்கமும், உணவுப் பற்றாக்குறையுமே உணவு சேகரிப்போராக இருந்துவந்த மக்களை

உணவு உற்பத்தியில் ஈடுபட வைத்தது எனலாம். வேட்டைக்கென சில விலங்குகளைப் பழக்கியதைப் போன்றே ஆடு, மாடு போன்ற சாதுவான விலங்குகளையும் மக்கள் பராமரித்தனர். எனவே, வேடர்கள் ஆகிய வேட்டுவர்கள் தமிழகச் சூழலில் நடைபெற்ற இனக்குழு வாழ்க்கை முறையில், புராதன விவசாயம் எனப்படுகின்ற தொல் வேளாண்மையில் ஈடுபடத் தொடங்கினர். பிற்காலங்களில் மருத நிலமாக வளர்ச்சி பெற்றதற்கெல்லாம் அடிப்படையாக விளங்கக் கூடிய வேளாண் தொழிலின் உருவாக்கமும் குறிஞ்சி நிலத்தில்தான் தொடங்குகின்றது.

தொல் வேளாண்மை

வேட்டைச் சமூக மக்கள் உணவு உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கிய போது அனுபவங்களின் வாயிலாகச் சில நுணுக்கங்களை அறிந்து வைத்திருந்தனர். நிலத்தின் மேற்பரப்பில் விதைகளைத் தூவினால் பறவைகளும் எறும்புகளும் உணவாக எடுத்துச் செல்லும் என்பதுடன் மழைநீரிலும் அரித்துச் செல்லக் கூடும் என்பதால் நிலத்தைக் கிளறிய புழுதியில் விதைக்க வேண்டும் என்ற அனுபவத்தின் அடிப்படையில் உணவு உற்பத்தித் தொடக்கம் உருப்பெற்றது.

சங்ககால மனிதனிடம் உழுவதற்கான கருவிகள் இல்லாத நிலையில் நிலத்தின் அடியில் புதைந்திருந்த கிழங்குகளைத் தின்பதற்காகப் பன்றிகள் மண்ணைத் தோண்டிக் கிளறி புழுதியாக்குவதைத் தெரிந்து கொண்டான். அவ்வாறு பன்றிகளால் கிளறிப் புழுதியாக்கப்பட்ட இடங்களில் கானவர் மழைக்காலங்களில் தினை விதைகளை விதைத்தனர்.

"அருவியார்க்கும் கழைபயில் நனந்தலைக்
கறிவன ரடுக்கத்து மலர்ந்த காந்தட்
கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையோடு
கடுங்கட் கேழல் உழுத பூமி
நன்னாள் வருபத நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக் குரற் சிறுதினை
முந்து விளை யாணர்"[10]

என்னும் பாடலில், அருவி பாயும் மூங்கில் வளர்ந்த மலைச் சாரலினிடத்து நிலத்தின் அடியில் காணப்பட்ட கிழங்குகளைப் பன்றிகள் பிறழக் கிளறித் தோண்டிய பள்ளத்தில் உண்டான புழுதியில் நல்லநாள் வந்த செவ்வியைப் பார்த்துக் குறவர் அந்நிலத்தை உழாமல் அதுவாகவே

தானாக விளைந்த சிறிய தினையாகிய புது வருவாயை உடைய இடமாகக் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் குறவர்கள் தாமே முயற்சி செய்து நிலத்தை உழவில்லை என்பதும், பன்றிகள் தோண்டிய பள்ளத்தில்தான் தினைகளை விதைத்தனர் என்பதும் பெறப்படுகிறது.

“கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பிற்
றலை விளை கானவர் கொய்தனர்”[11]

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலிலும், மலைப்பகுதியில் பன்றிகள் தோண்டிய பள்ளத்தில் கானவர் தினை விதைத்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விளைநிலப் பெருக்கம்

மலைப்பகுதியில் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களை அழித்தால் மட்டுமே உற்பத்திக்குத் தேவையான நிலத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முடியும். ஆனால் காட்டை வெட்டி அழிப்பதற்கும், நிலத்தை உழுவதற்கும் தேவையான சிறப்புக் கருவிகள் ஏதும் இல்லை. இரும்பின் பயன்பற்றி அறியாவிட்டாலும், நெருப்பின் பயனை அறிந்திருந்தமையால், அடர்ந்த காடுகளைத் தீயிட்டு அழித்தனர்.

“........ கானவர்
கரிபுனம் மயக்கிய அகன்காட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா ஈனற்கிழுமெனக்
கருவி வானம் தலைஇ”[12]

என்னும் புறநானூற்றுப் பாடலில், வேட்டுவரால் எரியூட்டப்பட்டு கரிந்த புனத்தை, அதன் கரிந்த தன்மை மயங்க உழுதபின் அகன்ற இடத்தை உடைய கொல்லைக்கண் ஐவன நெல்லோடு விதைக்கப் பெற்ற தினைகளுக்கு, மின்னலும் இடியும் முதலாகிய மழைத்துளி சொரிந்தது என்று கூறப்பட்டுள்ளது. இப்பாடலில், வேட்டுவர்கள் காட்டை எரியூட்டி நிலத்தைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தனர் என்பதோடு தொல்பழங்கால மக்கள் மேற்கொண்ட புராதன வேளாண்மைக்கு மழைநீரையே நம்பியிருந்தனர் என்ற கருத்தும் பெறப்படுகின்றது.

வாழிடம்

வேட்டைச் சமூகமாக இருந்த காலகட்டங்களில் குகைகளில் தங்கிய அனுபவம், குடியிருப்புகளை அமைக்கும்போது பேருதவியாக

அமைந்தது. பண்டைச் சமூகத்தினர், பனிப்பொழிவு அதிகமிருக்கும் காலங்களில், குளிரிலிருந்து தப்பிக்க மலைக்குகைகளில் வாழத் தலைப்பட்டனர். இவர்கள் நீண்டகாலம் மலைக்குகைகளில் தங்கியிருந்தபோது, தாம் வாழ்ந்த மலைக்குகைகளில் வரைந்த பல சித்திரங்கள் இன்றளவும் காணக்கிடைக்கின்றன.

இந்த அனுபவமே வேட்டைச் சமூகமாக இருந்த மக்கள் உற்பத்திச் சமூகமாக மாறியபோது குறிஞ்சிநிலக் குடியிருப்புகளை அமைக்கத் துணைபுரிந்தன.

“இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை”[13]

என்ற அடிகளில், தினையைப் பிரித்தபின் எஞ்சிய காய்ந்த புல்லினால் வேயப்பட்ட குடியிருப்புகளில் வாழ்ந்தனர் என்று அறிகின்றோம். மேலும் இதில் குறுங்கால் குரம்பை என்று குறிப்பிடப்படுவதால், வனவிலங்குகள் எளிதில் உள்ளே புகுந்து செல்ல இயலாத வகையில் குறுகிய கால்களைக் கொண்டு கட்டப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது.

“ஆரை வேந்த அறைவாய்ச் சகடம்
வேழம் காவலர் குரம்பை ஏய்ப்ப”[14]

என்ற அடிகளில், யானைகளை விரட்டித் தினைப்புனத்தைக் காக்கும் காவலர், பரண் அமைத்து மேலே கட்டிய சிறுகுடில், வரகின் வைக்கோலால் வேயப்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்களாகிய குறவர்கள் தமக்குக் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டே குடில்களை அமைத்துக் கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் வேட்டுவர்கள் விலங்கிடம் இருந்து பாதுக்காத்துக் கொள்ளும் வகையில் குடில்களை அமைத்தனர் என்றும், தொல் வேளாண்மையை மேற்கொண்டிருந்தோர், வரகுக் கதிரால் வேயப்பட்ட குடிலில் தங்கினர் என்றும் புலனாகின்றது. குடியிருப்புகளை உருவாக்கி ஓரிடத்தில் நிலைத்த வாழ்க்கையை வாழத் தொடங்கியபோது சிறுசிறு குலங்களாகவும், அக்குலங்கள் ஒன்றிணைந்து குடிகளாகவும் உருப்பெறுவதற்கு முக்கியப் பங்காற்றியது குடும்பக் கட்டமைப்பே ஆகும்.

முடிவுரை

தொல்காப்பியர் முல்லைத் திணையை முதலாகக் கொண்டு திணைக் கோட்பாட்டினை விளக்கியுள்ள போதிலும், மக்களினத் தோற்றம் பற்றி வரையறை செய்த சமூகவியலாளர்கள், விலங்கில் இருந்து

மனிதனாக உருப்பெற்ற மக்களினத்தின் வாழ்க்கைமுறை மலையில் இருந்து தொடங்கியதாகக் கருதுவதால், தமிழரின் திணைக் கோட்பாட்டினுள் குறிஞ்சித் திணையே முதலாவதாகக் கூறும் தகுநிலையைப் பெறுகின்றது. தொல்காப்பியர் குறிஞ்சிநில மக்களை வேட்டுவர் என்கிறார். சமூகவியல் அறிஞர்கள் பண்டைச் சமூக மக்கள் வேட்டைத் தொழிலையே முதன்மையாகக் கொண்டிருந்தனர் என்பதை அறிந்தோம்.

விவசாயம், குடும்பக் கட்டமைப்பு, இனப்பெருக்கம் என அனைத்திற்கும் வித்து குறிஞ்சிநில வேட்டுவர்களே ஆவர். குடியிருப்பு, உணவுமுறை ஆகிய அனைத்து அத்தியாவசிய முறைமைகளுக்கும் வேட்டுவர்களே அடித்தளமிட்டனர் என்றால் மிகையாகாது. இன்று வேட்டுவர் என்றால் சமூக மக்களிடையே சலிப்பு, இழிவு, அறுவறுப்பு போன்றவை வெளிப்படுகிறது; இச்சூழல் மாறவேண்டும். இச்சமூகத்தில் அவர்களும் நல்லநிலை பெறவேண்டும். வேட்டுவக்குடி நம் இனத்தின் மூத்தகுடி என்பதை அனைவரும் உணர வேண்டும்.

மேற்கோள் குறிப்புகள்

1. தொல்காப்பியம் பொருளதிகாரம் நூற்பா 05.
2. அகநானூறு, பாடல் 348.
3. மலைபடுகடாம், பாடல் 203-210.
4. குறுந்தொகை, பாடல் 52.
5. பெரும்பாணற்றுப்படை, பாடல் 106-111.
6. மலைபடுகடாம், பாடல் 152.
7. மேலது, பாடல் 315.
8. புறநானூறு, பாடல் 258.
9. மேலது, பாடல் 325.
10. மேலது, பாடல் 168.
11. ஐங்குறுநூறு, பாடல் 270.
12. புறநானூறு, பாடல் 159.
13. குறிஞ்சிப்பாட்டு, பாடல் 53.
14. பெரும்பாணற்றுப்படை, பாடல் 50-51.

பெரியபுராணம் காட்டும் காளத்திமலை வேட்டுவர்களின் வாழ்வியலில் சங்ககாலப் பண்பாட்டு நீட்சி

ச.வாசுதேவன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இலக்கியத்துறை, மொழிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613010.
அலைபேசி : 6383366377
nadunattutamizhan150@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

பண்பாடு இனக்குழுச் சமுதாயத்தின் அடையாளமாக விளங்குகிறது. ஆதிமனிதன் வில்லைப் பயன்படுத்தி வேட்டையாடித் தனக்கான உணவைத் தானே சேகரித்தான். வில்லை வைத்திருந்ததனால் வில்லியர், வேட்டையாடியதால் வேட்டையாடி, வேடர், வேட்டுவர் என்றெல்லாம் அழைக்கப்பட்டான். தமிழரின் வாழ்வு மலைப்பகுதியான குறிஞ்சியிலும் காட்டுப்பகுதியான முல்லையிலும் தொடங்கியது எனலாம். தொல்காப்பியர் கூறும் திணைகளுள் இவ்விரு திணையும் முக்கியத் திணைகளாகும். தொல்காப்பியர் திணைகெழு சமுதாயத்தை அன்பினுள் புகுத்தி இலக்கணம் கண்டுள்ளார். குறிஞ்சி புணர்தலை உரிமைப் பொருளாகக் கொண்டுள்ளது. குறிஞ்சித் திணையின் பண்பாட்டை அடியொற்றிப் பெரியபுராணத்தில் சேக்கிழார் திண்ணன் எனும் வேட்டுவத் தலைவனின் வரலாற்றை ஆவணப்படுத்தியுள்ளார். பக்தி இலக்கியத்தில் சங்ககால இசைப்பண்பாடு, இலக்கணப் பண்பாடு போன்றவை காரைக்காலம்மையார், சம்பந்தர், அப்பர், யாழ்ப்பாணர், ஆனாயர் போன்றோரால் எடுத்துக் கையாளப்பட்டன. ஆனால், வாழ்வியல் பண்பாட்டைக் குறிப்பாக, மலைவாழ் மக்களைப் பற்றிய கதையை ஆவணமாக்கியவர் சேக்கிழார் ஒருவரேயாவார். இதுபோன்ற பதிவுகளை நுணுகிப் பார்க்கும் பொழுது பெரியபுராணம் செவ்வியல் கூறுகளைப்

பெற்றுள்ள பெருங்காப்பியம் எனலாம். காளத்திமலை வேட்டுவர்கள் குறித்த தரவுகளையும் சங்ககாலப் பண்பாட்டு நீட்சியையும் சேக்கிழாரின் கண்ணப்ப நாயனார் புராணத்தின் வழி எடுத்துரைப்பதே கட்டுரையின் முதன்மை நோக்காகும்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் குறிப்பிடும் வேட்டுவரினப் பெயர்கள்

சேக்கிழார் பெரியபுராணத்தில்., 1.குறவர் (பா.3), 2.புன்தலைச் சிறுமகார்கள் (பா.4), 3.எயிற்றியர் (பா.5), 4.வெஞ்சொல் வேட்டுவர் (பா.5), 5.ஆறலைத்து உண்ணும் வேடர் (பா.6), 6.வன்தொழில் மறவர் (பா.7,9), 7.வன்தோலார் (பா.7), 8.பகழி வேடர் (பா.7), 9.கானவர் (பா.13), 10.குறவர் (பா.15), 11.இறவுளர் (பா.16), 12.தண்சிலை வேடர் (பா.17), 13.வேடர்தம் கோமான் நாகன் (பா.29), 14.குன்றவர், கொடிச்சியர், சூரரமகளிர் (பா.39), 15.மலையர் (பா.53), 16.குறமுதியாள் (பா.52), 17.தானையர், சாப மேவு கையர், வன்கணார் (பா.68), 18.வன்கை மள்ளர் (பா.69), 19.வெற்பர் (பா.70), 20.வேடர் (பா.71, 180), 21.சிமை மறவோர் (பா.86), 22.வனவேடர் (பா.141), 23.வேட்டுவர் (பா.107), 24.வேடுவன் (பா.156), 25.வேட்டையாடி (பா.166), 26.பைந்தழை அலங்கல் மார்பர் (பா.170), 27.கானவர் பெருமான் (பா.184), 28.எயினர் (பா.34), 29.கானவன் (பா.160) போன்ற பாடல்களில் வேடுவர் பெயர்களைக் குறிப்பிடுகிறார். வேடுவர்களின் தொழில், குணம், உரு, தன்மை ஆகியவற்றைக் கொண்டு இருபத்தொன்பது பெயர்களைப் பதிவுசெய்துள்ளார். சேக்கிழார் வேடரின மக்களைப் பற்றிப் பேசும் போது, கொல், எறி, குத்து என்னும் கொடுந்தொழிலினைச் செய்தாலும், எவ்விதக் குறையுமில்லாமல் அன்பு ஒன்றையே வாழ்வின் பெரும்பயனாகக் கொண்டவர்கள் என்பதை,

> **“அன்பு உறு காதல் கூர அணையு மான் பிணைகளோடும்**
> **இன்பு உற மருவி ஆடும் எயிற்றியர் (கண்.பு.பா : 4)**

என்று கூறுவதன் மூலம் அறியலாகும்.

குன்றுடையோனும் குரவைக் கூத்தும்

குரவைக் கூத்தினை மலை நடனம், மலைக்குறவர் நடனம் என்று அபிதான சிந்தாமணி பொருள் தருகிறது. இக்கூத்தானது போரும் பூசலமான சங்க காலச் சூழலில் மக்களிடம் உள்ள அச்சம் நீங்கவும்

பொழுதுபோக்கிற்காகவும் நிகழ்த்தப்பட்டது. குரவைக்கூத்தில் பலவகை உண்டு. 1.தண் குரவை, 2.போர்க்காலக் குரவை, 3.குன்றக் குரவை, 4.ஆய்ச்சியர் குரவை என்பனவாகும். குரவையாடல் என்பது பொழுதுபோக்கு, போர், நிமித்தம் பார்த்தல் போன்றவற்றிற்கு ஆடினாலும், சடங்கோடு தொடர்புடையது. வேலனுக்கு வெறியாடல் நிகழ்த்தி குரவை ஆடுவர். குரவையாடலுக்கு மகிழ்ந்து நெடுவேல் அருள் தருவான் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடத்தில் இருந்தது. இந்தப் பண்பாட்டு நீட்சியைக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் சேக்கிழார் காட்சிப்படுத்துகிறார். உடுப்பூர் வேடர்களின் தலைவன் நாகனும் அவன் மனைவி தத்தையும் பிள்ளைப்பேறு வேண்டி முருகவேளிடம் பிரார்த்தனை வைத்தனர். அந்தப் பிராத்தனையைக் குரவையாடலோடு வைத்தனர். அவ்வேண்டுதல் பற்றிச் சேக்கிழார்,

> **“.............. .... இனிப் புதல்வர் பேறே**
> **அரியது என்று எவரும் கூற அதற்படு காதலாலே**
> **முருகலர் அலங்கள் செவ்வேல் முருகவேள் முன்றில் சென்று**
> **பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார்”**
> **(கண்.பு.பா : 10)**

புதல்வர் பேறு இல்லாததால், முருகவேளின் முன் சென்று விரத நெறிகளைக் கடைபிடித்தனர் என்கிறார். அது மட்டுமல்லாது முருகவேள் முற்றத்தில் விழா நிகழ்வதையும் காட்சிப்படுத்துகிறார்.

> **“வாரணச் சேவலோடும் வரிமயில் குலங்கள் விட்டுத்**
> **தோரண மணிகள் தூக்குச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்**
> **போர்அணி நெடுவேலோற்க்கு புகழ்புரி குரவை தூங்கப்**
> **பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை**
> **(கண்.பு.பா : 11)**

முருக சடங்கில் சேவல், மயில் தோகை, தோரணம், மணிகள், கதம்பமாலை ஆகியவை படையலிடப்படுகிறது. குரவை ஆடலைத் தேவராட்டி மருள் வந்து ஆடினாள். (பேரணங்கு பூசாரிச்சி, மழவை மகாலிங்கையர் உரை, பெ.பு.வர.ப:110) ஆடி நல்நிமித்தம் உரைத்தாள் என்கிறது பெரியபுராணம். இங்கு நுணுகிப் பார்த்தால் சங்ககாலச் சமூகம் தாய்வழிச் சமூகமாதலால் பூசை செய்வதிலும் முதன்மை பெற்றவளாகப் பெண் விளங்கியுள்ளாள் என்பது புலப்படுகிறது. முருகவேளுக்கு விழா

எடுத்த பின்னர், நாகன் மனைவி தத்தை கருவுற்றாள். கருவுற்ற பின் பலிகள் போக்கி, வெறியாட்டு நிகழ்த்தி, சில மாதத்திற்குப்பின் கடந்து வேடர் குலப்பெண் தத்தை பிள்ளை பெற்றெடுக்கிறாள். முருகவேளுக்கு விழா எடுத்தால் அவன் அருளினால் குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையைப் பதிவு செய்துள்ளார் சேக்கிழார். மலைநாட்டுத் தலைவன் செவ்வேள், அவனிருக்கும் இடம் முருகவேள் முன்றில் என்ற பெயரால் வழங்கப்படுகிறது என்பதையும் கூறுகிறார். குறிஞ்சிநிலத் தெய்வமான வேலனைச் செவ்வேள், முருகவேள் (பா.10), போரணி நெடுவேலோர் (பா.11), எந்தையார் மைந்தர், வென்றி அண்ணலார் (பா.12), வரைவுறை கடவுள் (பா.18), வென்றிவேள் (பா.29) போன்ற அரும்பதச் சொற்களால் குறிப்பிடுகின்றது பெரியபுராணம்.

வேட்டுவர் குல தலைவி தேவராட்டி

வேடர்கள் தங்களது இனத்தில் பிறந்த மூத்த பெண்ணை முதன்மைப்படுத்தி வாழ்ந்துள்ளனர். அதற்குச் சான்றாக தேவராட்டி எனும் குல முதியாளைக் காட்டலாம். கானவர்கள் எதைச் செய்தாலும் அதில் தேவராட்டிக்கு முக்கிய இடம் அளிக்கப்பெறும். குரவை ஆடல், வெறியாட்டு, வில்விழா, பெயர் சூட்டு விழா போன்ற சடங்குகளை முன் நின்று தொடக்கி வைப்பார் தேவராட்டி. சங்க இலக்கியம் குறிப்பிடும் செம்பதம் அணங்கு. சங்ககால மக்கள் அணங்கைக் கண்டு அச்சம் கொண்டனர் எனச் சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அதே மரபைக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் காணமுடிகிறது. சேக்கிழார் தேவராட்டி மரபு எனும் பழமரபை மீட்டுருவாக்கியுள்ளார் என்பது ஆய்வாளர் கருத்து. தேவராட்டியை 1. பேரணங்கு (பா.10), 2.குலமுதுகுறத்தி (பா.27), 3.நரை மூதாட்டி (பா.47), 4.அணங்கு, முதுகுன்றக் கோலப் படிமத்தாள் (பா.49), 5.வரை சூராட்டி (பா.51), 6.தெய்வ நிகழ் குறமுதியாள் (பா.52), 7.கடவுள் பொறையாட்டி (பா.65), 8.அணங்குடையாட்டி (பா.67), 9.தலை மரபின் வழிவந்த தேவராட்டி (பா.120) போன்ற பெயர்களில் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. கொற்றவையை அணங்கு என்று கூறும் மரபு சங்கப் புலவர்களின் பாடல்களின் வழி அறியமுடிகிறது. கொற்றவையைப் போல் பார்ப்பதற்கு அச்சம் தருபவளாக விளங்கியதால் தேவராட்டியைப் பேரணங்கு எனக் குறிப்பிட்டிருக்கலாம். தேவராட்டியைப் பற்றி இவ்வளவு நுணுக்கமாகச் சேக்கிழார் பதிவிடுவதற்கான காரணம், அவள்

தலைமரபின் வழி வந்தவள் என்பதை அறிந்ததேயாகும். சங்ககாலத் தெய்வப் பண்பாட்டின் நீட்சியாகக் கண்ணப்பர் புராணம் தேவராட்டி மரபை விளக்குவதோடு, தெய்வச்சடங்கில் பெண்கள் பூசாரிகளாக இருந்து சடங்கு முறைகளை நிகழ்த்தி வந்துள்ளனர் என்பது புலனாகிறது. இதனை,

> **“மலைவாசிகள் தெய்வ நம்பிக்கையுடையவர்கள். வன தெய்வங்களையும் குறிஞ்சிக் கடவுளாகிய முருகனையும் வழிவழியாக வழிபட்டு வந்தார்கள். இத்தெய்வங்களின் சத்தி இந்நாளிலும் அறியமுடிகிறது. வன தேவதைகளின் பூசைக்குப் பூசாரிகளை வழிவழி உரிமையுடன் நியமித்து, ஆதரித்து வந்தார்கள் இந்நாளிற் போல அந்த நாளிலும் அவர்கள் மாலையணிந்து அலங்கரித்து கொண்டு வருவார்கள். வேடர் சேரியில் விளங்கிய அக்குமரேசன் இன்றும் விளங்குகிறாள். பெண்பூசாரிகளும் உண்டு (ப.67)**

என்று சிவக்கவிமணி சி.க.சு. கூறுகின்றார். தேவராட்டி கொண்டு வந்த தோரைமலி சேடைக்கு - தெய்வப்பிரசாதம் என்ற பொருளை சி.க.சு. தனது நூலில் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

காளத்தி மலை வேட்டுவர்களின் இசைக்கருவிகள்

மனித வாழ்வில் இசைக்கருவிகளின் பயன்பாடு மிகுந்திருக்கிறது. இனக்குழுச் சமூகத்தில் ஒவ்வொரு சமுதாயமும் ஒவ்வொரு வகையான இசைக்கருவிகளைத் தங்களது அடையாளமாக்கிக் கொண்டு வாழ்ந்துள்ளனர். சங்ககாலக் குறிஞ்சித்திணை மக்கள் குறிஞ்சிப் பண்ணையும் தொண்டகப் பறையையும், குறிஞ்சி யாழையும் பயன்படுத்தியுள்ளனர் என்பதைத் தொல்காப்பியத்தின் மூலம் அறிய முடிகின்றது. காளத்திமலை வேடுவர்கள் என்னென்ன விதமான இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர் என்பதைப் பெரியபுராணம் சுட்டுகிறது.

1. தோற்கருவிகள்

- சில்லரித் துடி, குறுந்துடி (பா.5,14,24,29,64,77,86)
- சிறுகண் ஆகுளி (பா.5), குறுகண் ஆகுளி (பா.72)

- பம்பை (பா.72)
- அமரர் துந்துபியும் (பா.14)
- தொண்டக முரசு (பா.38), (இது குறிஞ்சி நில மக்களுக்கான இசைக்கருவிகளில் முக்கியமானதாகும். சங்க இலக்கியங்கள் தொண்டகப் பறை, தொண்டக முரசம் என்ற பெயர்களில் பதிவுசெய்துள்ளன)

உ. துளைக்கருவிகள்

- கொம்பு (எருமைக் கொம்பாலானது)
- துளைகொள் வேய் (புல்லாங்குழல்) இது இன்றளவும் வேய்குழல் என்ற பெயரில் திண்டுக்கள் பகுதிகளில் வாழும் பளியர் இனப் பழங்குடி மக்கள் பயன்படுத்தும் இசைக் கருவிகளில் ஒன்றாக உள்ளது. இது பண்ணிசைக் கருவி ஆயினும் பழங்குடி மக்கள் சடங்குகளில் முதன்மைப் பெறும் கருவியாக இன்றளவும் விளங்கி வருவதைக் காணமுடிகிறது)

காளத்தி மலையில் பல்லியங்கள் முழங்கின என்ற செய்தியை,

"சில்லறை துடியும் கொம்பும் சிறுகண் ஆகுளியும் கூடிக்"
(கண்.பு.பா.5)

என்றும்,

"தொண்டக முரசும் கொம்பும் துடிகளும் துளைகொள் வேயும்
எண்திசை நிறைந்து விம்ம எழுந்த பேர் ஒலியினோடும்"
(கண்.பு.பா:38)

என்றும்,

"அரிக்குறுந் துடியே அன்றி அமரர் துந்துபியும் ஆர்த்த"
(கண்.பு.பா:14)

என்ற பாடல்களில் கூறுகின்றார். இதில் குறிப்பிடும் 'அமரர் துந்துபி' எனும் இசைக்கருவி 'உறுமி' என்ற பெயரில் இன்றளவும் வழங்கப்படுகிறது. இது, தென்தமிழகத்தில் இராஜகம்பளத்து நாயக்கர்கள் ஆடக்கூடிய தேவராட்டம், சேவையாட்டம் போன்ற ஆட்டக்கலையில் வாசிக்கப்படும் முதன்மை இசைக்கருவியாக விளங்குகிறது. தேவராட்டக் கலைஞர்கள் இதனை தேவதுந்துபி என்று அழைக்கின்றனர். இதனை, உடும்புத்

தோலால் செய்யப்படும் பழந்தமிழ் இசைக்கருவி என நாட்டுப்புற இசைக்கருவிகள் ஆய்வாளர் குருதேவன் கூறுகின்றார். இதுபோன்ற இசைக்கருவிகளைக் காளத்தி மலை வேடுவர்கள் தங்கள் வாழ்வியலிலும் சடங்குகளிலும் பயன்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

காளத்தி மலை வேடுவர்களின் வாழ்வியலும் தொழிலும்

காளத்தி மலையில் உள்ள பல தேயங்களில் பொத்தப்பி நாடும் ஒன்று; இயற்கை எழில் கொஞ்சும் பகுதி அதனை,

“பூவலர் வாவி சோலை சூழ்ந்த பொத்தப்பி நாடு”
(கண்.பு.பா:1)

என்று சேக்கிழார் கூறுகிறார். இந்நாட்டில் மதங்கொண்ட ஆண் யானையின் தந்தத்தை வேலியாக அமைத்து அந்த அரணில் பொலிவுற விளங்கும் பழமையான ஊர் உடுப்பூர். இவ்வூரை குன்றத்தூரார்,

“மத்த வெங் களிற்றுக் கோட்டு வன்தொடர் வேலி கோலி
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த முதுபதி உடுப்பூர் ஆகும்”
- (கண்.பு.பா:2)

என்கிறார். வேடர்கள் அகன்குடிச் சீறூர் ஆயத்தில் சிறுசிறு குடிலமைத்து வாழ்வர். அவர்களின் தொழில் தேனெடுத்தல், கிழங்கு தோண்டுதல், ஐவனம் (மலைநெல்), தினை போன்ற தானியங்களை விதைத்தல், வேட்டையாடுதலாகும். முரட்டுத்தனமான தோற்றமும் கண்டோர்க்கு அச்சம் தரும் உடலமைப்பும் உடையவர்கள் கானவர்கள். அவர்கள் வேட்டையாடும் தன்மையை.,

"வெல் படைத்தறுகன் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்
கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்"
- (கண்.பு.பா:5)

என்றவாறு எடுத்துரைக்கிறார். வேடர்கள் வேட்டையாடுதல் மட்டுமல்லாது ஆறலைத்து உண்ணும் தொழிலையும் மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். வன்தொழில் வேடர்களின் செயலை,

“ஆறலைத்து உண்ணும் வேடர் அயற்புலம் கவர்ந்து கொண்ட”
(கண்.பு.பா:6)

என்றும்,

மைச் செறிந்து அனைய மேனி வன்தொழில் மறவர் தம்பால் (கண்.பு.பா:7)

என்றும் கூறுகிறார். குன்றவர் என்னென்ன விலங்குகளை வேட்டையாடினர், காளத்தி மலையில் என்னென்ன வகையான விலங்குகள், பறவைகள் வாழ்கின்றன ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். குறிஞ்சியில் வாழும் மலையர் அணங்கு உறைவிடத்து அருகில் வாழ்ந்தனர் எனப் பெரியபுராணம் கூறுகிறது. வேட்டுவர்கள் கொலை ஞமலிகளை (நாய்கள்) தங்களது வேட்டைக்குப் பயன்படுத்தியுள்ளனர்; மிருகங்கள் பலவற்றை வேடுவர்கள் வேட்டையாடினர் எனும் செய்தியை.,

"அடல் ஏனம் புலி கரடி கடமை ஆமா
வெங்கண் மரை கலையொடு மான் முதலாய் உள்ள
மிருகங்கள்" (கண்.பு.பா:44)

எனப் பெரியபுராணம் கூறுகிறது. திண்ணன் வேட்டைக்குப் போகும்போது விலங்குகள் அஞ்சி ஓடின என்பதை,

"ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலம்
கானமேதி யானை வெம்புலிக் கணங்கள் கான்மரை
ஆன மா அநேக மா வெருண்டு எழுந்து பாயமுன்
சேனை வேடர் மேல் அடர்ந்து சீறி அம்பில் நூறினார்"
(கண்.பு.பா:78)

வேடர்களைக் கண்டு அஞ்சி ஓடும் விலங்குகளின் நிலைமையைச் சேக்கிழார் விளக்குகிறார். கருமரை (மான்), கரடி, வனமேதி (காட்டெருமை, பா.84), கொலை ஞமலிகள் (நாய்கள், பா.89), வராகம் (பன்றி,பா.92), மடங்கல் (புலி), அரிப்பிணவு (பெண்சிங்கம்), ஆளிஏறு (ஆண்சிங்கம்), பன்றி, கொல்அரிஏறு (ஆண் சிங்கம்) போன்ற வனவிலங்குகள் காளத்தி மலையில் வாழ்ந்தன என்பதைப் பெரியபுராணம் கூறுகின்றது.

வேட்டுவரின் உணவு வகைகள்

வேட்டுவர்கள் உடலுக்கு வலிமை தரும் உணவு வகைகளை உண்டு வாழ்ந்துள்ளனர். சங்ககால வேடர்கள் கிழங்கு, தேன் திணைமாவு தின்றல், காட்டெருமை இறைச்சி ஆகியவற்றை உண்டு

வாழ்ந்த செய்தியைச் சங்கப்புலவர் கபிலர் குறிப்பிடுகிறார். சேக்கிழாரும் கபிலரின் வழியில் வேடர்களின் உணவு வகைகளைப் பதிவுசெய்கிறார். வேட்டுவர்கள் 1.ஐவன அடிசில் (மலைநெற்சோறு), 2.புலிப்பால், 3.தினைமென்சோறு, 4.ஊன்கிழங்கு, 5.மூங்கில் வன்பதங்கள் (மூங்கிலரிசி), செந்தினை, தேன், சுட்ட இறைச்சி, விளங்கனி, ஈயல் (ஈசல்), போன்ற உணவு வகைகளை உண்டு வாழ்ந்தனர் எனக் கூறுகிறார். இதனை,

"ஐவன அடிசில் வெவ்வேறு அமைந்தன புலிபால் சொன்றி
மெய்வரைத் தினை மென் சோறு மூங்கில் வன்பதங்கள் மற்றும்
கைவினை எயினர் ஆக்கிக் கலந்த ஊன்கிழங்கு துன்றச்"
(கண்.பு.பா:34)

என்றும்,

"செந்தினை இடியும் தேனும் அருந்துவர் தேனில் தோய்த்து
வெந்த ஊன் அயில்வார் வேரி விளங்கனிக் கவளம் கொள்வார்
நந்திய ஈயல் உண்டி நசையொடு மிசைவார் வெவ்வேறு
அந்தமில் உணவின் மேலோர் ஆயினர் அளவி லார்கள்"
(கண்.பு.பா:35)

என்றும்,

"ஊன் அமுது கல்லை உடன் வைத்து இது முன்னையின் நன்றால்
ஏனமொடு மான் கலைகள் மரை கடமை இவை இவற்றில்
ஆனஉறுப்பு இறைச்சி அமுது ; அடியேனும் சுவை கண்டேன்
தேனும் உடன் கலந்தது இது தித்திக்கும் என மொழிந்தார்"
(கண்.பு.பா:150)

எனும் பாடல்களின் வழி எடுத்துக்காட்டுகிறார். காளத்தி வேடனான திண்ணன் மலையில் வாழும் குடுமித் தேவருக்கு முரட்டுத்தனமான பன்றியை வேட்டையாடி, அதன் இறைச்சியைத் தீயில் வாட்டி, தான் மென்று, சுவை பார்த்த பிறகு தேவருக்குப் படையலிட்டான் என்கிறது திருத்தொண்டர் மாக்கதை.

காளத்தி மலை வேட்டுவர்களின் தோற்றம்

மை போன்ற கருத்த உடலையும் வன்மையான தோளினையும் கொண்டவர்கள் வேடரின ஆண்கள். வேடரினப் பெண்களும்

வன்தொழிலுக்கு கருத்த உடலமைப்பைக் கொண்டவர்கள். வில்லைத் தொழில் கருவியாகவும் தற்காப்பு ஆயுதமாகவும் உணவு வேட்டைக்குப் பயன்படுத்தியதை.,

“வில்தொழில் விறலின் மிக்கான் வெஞ்சின மடங்கல்
போல்வான்”   (கண்.பு.பா:8)

எனக் காட்டுகிறார். காளத்திமலை வேடர்களின் தலைவனான நாகனின் தோற்றத்தை.,

“மைச்செறிந்து அனைய மேனி வன்தொழில் மறவர் தம்பால்
அச்சமும் அருளும் என்றும் அடைவிலார் உடை வன்தோலார்
பொச்சையின் நறவும் ஊனின் புழுக்களும் உணவு கொள்ளும்
நச்சழல் பகழி வேடர்க்கு அதிபதி நாகன் என்பான்”
(கண்.பு.பா:7)

இவ்வாறு பதிவுசெய்துள்ளார். அதாவது, அணிகலன்கள் பலவற்றை அணிந்திருப்பான்; அவன் கையில் வில்லிருக்கும் என்பதைக் காட்சிப்படுத்துகிறார். நாகன் புலித்தோல் இருக்கையில் அமர்ந்து தோலுடைச் சுரிகையைக் கையிலேந்தி உடுப்பூரை ஆட்சி செய்து வந்தான் என்கிறது பெரியபுராணம். (சுரிகை - குத்துவாள், உடைவாள்) சுரிகை சங்க காலப் போர்க்கருவி. இதனை,

“சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடை”
(பெரும்பாண்.அடி:73)

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறியுள்ளார். நாகன் மனைவி தத்தையும் அணிகலன்கள் நிறைய அணிந்திருக்கிறாள் என்பதனை,

“அரும்பெறல் மறவர் தாயத்து ஆன்றதொல் குடியில் வந்தாள்
இரும்புலி எயிற்றுத்தாலி இடைஇடை மனவு கோத்துப்
பெரும்புறம் அலையப் பூண்டாள் பீலியும் குழையும் தட்டச்
சுருப்புஉறு படலை முச்சிச்சூர் அரிப் பிணவு போல்வாள்”
(கண்.பு.பா.9)

புலிப் பல்லாலான தாலி, இடையிடையே கோர்த்த மனவு (மணிகள்), மயிற்தோகை, குழை, காந்தள் மலர், முச்சிச்சூர் (கொண்டையணி) ஆகியவற்றை அணிந்திருந்தாள் என்கிறார் சேக்கிழார். இதில் மனவு கோர்த்தல் என்பது சங்க இலக்கியம் குறிப்பிடும் பதம். இதனை மனவுச்

சூலுடும்பின் வறை (பெரும்.அடி:132) எனப் பெரும்பாணாற்றுப்படையும் அகவன் மகளே! அகவன் மகளே! மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல் (குறுந்.பா:23) எனக் குறுந்தொகையும் குறிப்பிடுகின்றன. பெண்சிங்கத்தை ஒத்த பான்மதி என்கிறார் சேக்கிழார். நாகனுக்கும் தத்தைக்கும் பிறந்த குழந்தை திண்ணன். அவனுக்கு அணிகலன்கள் சூட்டி அழகு பார்த்ததை,

**“பாசொளி மணியோடு ஆர்த்த பன்மணிச் சதங்கை ஏங்கக்
காசொடு தொடுத்த காப்புக் கலன் புனை அரைஞாண் சேர்த்தித்
தேசுடை மருப்பில் தண்டை செறிமணிக் குதம்பை மின்ன”
(கண்.பு.பா:21)**

என்ற பாடல் வரிகளில் காணலாம். குழந்தை பிறந்த உடனே வேம்புத் தளிரை வைப்பர். வைத்தால் தீய சக்திகள் குழந்தையிடம் அணுகாது என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு. இச்செய்தியைக் காளத்திமலை வேடுவர்களின் வாயிலாக அறியப்படுத்துகிறார். அரைஞாணில் மணியும் தகரமும் (கவடி) கோர்த்துக்கட்டி அழகு பார்த்தனர். புலியின் நகத்தால் செய்த நெற்றிச் சுட்டி, முள்ளம் பன்றி முள் கோர்த்தப் புலிப்பல் தாலி, குதம்பை (காதணி) ஆகியவற்றை அணிந்து திண்ணனுக்கு அழகு பார்த்தனர். திண்ணன் வளர்ந்து வரும் பருவத்தில் அவனுக்கு வில் பயிற்சி அளிக்க முடிவு செய்த நாகன் வில் பயிற்சிக் கூடம் அழைத்துச் சென்றான். அதனை,

**“சிலமுறை ஆண்டு செல்ல சிலை பயில் பருவம் சேர்ந்தார்”
(கண்.பு.பா:27)**

எனவும்

**“தந்தையும் மைந்தனாரை நோக்கித் தன் தடித்த தோளால்
சிந்தை உள் மகிழப் புல்லிச் சிலைத் தொழில் பயிற்ற வேண்டி
முந்தை அத்துறையில் மிக்க முதியரை அழைத்து”
(கண்.பு.பா:28)**

எனவும் பதிவுசெய்கிறார். வெற்றிவேல் அருளால் பெற்ற மகன் வில்பிடித்து விற்பயிற்சி பெறுகின்றான். அவனுக்கு விற்பயிற்சி அளித்த ஆசானுக்குக் காணிக்கையாக மாணிக்கம், முத்து, புலித்தோல், யானைத் தந்தம், மயில் தோகை, பொன்குவை, தேன், கள், இறைச்சி, கிழங்கு ஆகியவற்றைக் கொடுத்துச் சிறப்பித்தனர். அதோடு நில்லாது கன்னி

வேட்டைக்குச் செல்ல வேண்டும்; வில்விழா எடுக்குமாறு வேடர்த் தலைவன் நாகன் ஆணையிட்டார்.

மலை வேட்டுவர்கள் எடுத்த வில்விழா

போரும் பூசலும் நிறைந்த சங்க காலச் சமூகத்தில் வில், வாள், வேல் (ஈட்டி) ஆகிய மூன்று வகையான போர்க்கருவிகளும் போர் மறவர்களுக்கு உயிராகப் போற்றப்பட்டன. சங்ககாலப் போர்மரபில் வில்விழா எடுத்தல் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். அப்பண்பாட்டுத் தொடர்ச்சியைக் கண்ணப்ப நாயனார் புராணத்தில் காணலாம். வேடர் கையில் வைத்திருக்கும் வில், கொன்றை மாலை அணிந்த சிவபெருமானது வில்லாகும். அதற்குக் காப்பு கட்டுவர். அந்தக் காப்பானது திண்மையான புலி நரம்பினால் உருவாக்கப்பட்டது. இதனை.,

“சிலையினைக் காப்புக் கட்டும் திண்புலி நரம்பில் செய்த
நலமிகு காப்பு நல்நாள்” (கண்.பு.பா:33)

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. வில்லை மலையுறை மக்கள் வணங்கி வாழ்த்தினார்கள். மலை உணவுகளை உண்டு களிக்கின்றனர்; கனிகள் உண்டு மகிழ்கின்றனர். கள்ளுண்டு மயக்கம் நீங்க வரிசிலை விழவு (விழா) கொள்வதை.,

“உயர்கதிர் உச்சி நீங்க ஒழிவில் பல்நறவு மாந்தி
மயல் உறு களிப்பின் நீவி வரிசிலை விழவு கொள்வார்
(கண்.பு.பா:36)

என்னும் அடிகள் தெரிவிக்கின்றன. பச்சைப் பனைமட்டையால் செய்த இடையாடை (பாவாடை) சுற்றிப் பலவகையான மலர்களால் தொடுத்த மாலைசூடி, காசு கோர்த்த வடத்தோல் கட்டி இரும்புத் தகடணி, வெச்சிப்பூ சூடி, குற்றமில்லாத ஆசான் வில்லைக் கையில் தூக்கி எடுத்தார். வேடர்கள் சூழ்ந்து மங்களகோசம் போட்டனர். அதனை,

பாசிலைப் படலை சுற்றி பன்மலர்த் தொடையல் சூடிக்
காசுடை வடத்தோல் கட்டிக் கவடி மெய்க் கலன்கள் பூண்டு
மாசில் சீர் வெட்சி முன்னா வருதுறைக் கண்ணி சூடி
ஆசில் ஆசிரியன் ஏந்தும் அடர்சிலை மருங்கு சூழ்ந்தார்”
(கண்.பு.பா:37)

என்கிறார் சேக்கிழார். மலையே கோலாகலமான கொண்டாட்டத்தில் பல்லியங்கள் முழங்க மலையர்கள் மகிழ்ச்சியை ஆட்டமாக்கினர்.

“குற்றவர் களி கொண்டாடக் கொடிச்சியர் துணங்கை ஆடத்
துன்றிய மகிழ்ச்சியோடும் சூர் அரமகளிர் ஆட
வென்றி வில் விழவினோடும் விருப்புடை ஏழாம் நாளாம்”
(கண்.பு.பா: 39)

காப்புக் கட்டிய நாள்முதலாய் ஒற்றைப்படை எண்ணிக்கையில் அமையும் நாள்பார்த்து விழா எடுப்பர். அவ்வழக்கம் வேட்டுவர் மரபில் இருந்துள்ளதை வில்விழாச் சடங்கில் குறிப்பிடுகிறார் சேக்கிழார். இந்த விழாவில் கொடிச்சியராகிய வேட்டுவரினப் பெண்கள் துணங்கைக் கூத்து ஆடுகின்றனர். இதனை துணங்கையஞ் செல்விக் கணங்கு நொடித்தாங்கு (பெரும்பாண்.அடி:459) எனப் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. சங்க இலக்கியங்கள் பேய் துணங்கை எனப் பதிவுசெய்துள்ளன. சங்க காலத்திய கூத்தில் இதுவும் ஒன்றாகும். தேவராட்டியெனும் தலைமகளை நாகன் அழைத்து என் மகன் திண்ணனுக்குப் பட்டம் சூட்ட ஆசைப்படுகிறேன். அவனுக்கு முடிசூட்டு; அவன் நலமாக ஆட்சி செய்ய வனதேவதைகளின் அருள் வேண்டும். ஆகையால் காடுபலி இடு என்றான் நாகன். காடுபலியிட வந்த தேவராட்டியின் தோற்றம் பற்றிச் சேக்கிழார்,

“கானில் வரித்தளிர் துதைந்த கண்ணி சூடிக்கலை
மருப்பின் அரிந்தகுழை காதில் பெய்து
மானின் வயிற்று அரிதாரத் திலகம் இட்டு
மயில் கழுத்து மனவுமணி வடமும் பூண்டு
தான் இழிந்து திரங்கி முலை சரிந்து தாழத்
தழைப்பீலி மரஉரிமேல் சார எய்திப்
பூ நெருங்கி தோரைமலி சேடை நல்கிப்
போர்வேடர் கோமானைப் போற்றி நின்றாள் (கண்.பு.பா:48)

இவ்வாறு விளக்குகிறார். மலைவாழ் மக்கள் எவ்விதமான காரியம் செய்தாலும் தேவராட்டியை அழைத்துக் காட்டில் உறையும் தெய்வங்களுக்குக் குரவையாடி, பலியூட்டிய பிறகே பணியைத் தொடங்குவர் என்ற மரபை பெரியபுராணம் சுட்டுகிறது. தாய்வழிச் சமூகத்தை முன்னிறுத்தியே தமிழ்க் குடிகள் வாழ்ந்துள்ளனர். அணங்கு

என்றால் தெய்வம் (தொல்.பொருள்.நூ:256) என்ற பொருளைத் தொல்காப்பியம் கூறுகின்றது. காளத்தி மலையர்களின் அணிகலன்கள்

காளத்திமலை வேடுவர்கள் பலவகையான அணிகலன்கள் அணிந்துள்ளனர். அதனைப் பட்டியலிடுகிறார் சேக்கிழார்: 1.புலியுகிர்ச்சுட்டி (புலி நகத்தாலான நெற்றியணி), 2. முளவு முள் கோர்த்த எயிற்றுத் தாலி (முள்ளம்பன்றி முள்ளாலான புலிப்பல் தாலி), 3.பாசி மணி, 4.பன்மணிச் சதங்கை, 5.காசு தொடுத்தக் காப்பு, 6.அரைஞாண், 7.தண்டை, 8.மணிகுதம்பை (காதணி), 9.படலை (பனையோலையணி), 10.பீலி (மயிற்தோகை), 11.மனவு மணிவடம், 12.சங்கு வெண்தோடு, 13.பன்றிப் பல் கோர்த்த இடைமணியாரம், 14.சிறு தந்த மணித்திரள் மாலை, 15.தோல் வளையங்கள், 16.கங்கணம், 17.கைச்செறி, 18.வீரக்கழல், 19.நீடு செருப்பு ஆகிய அணிகலன்களை அணிந்திருந்தனர் எனப் பெரியபுராணம் கூறுகிறது.

நிறைவாக

காளத்திமலை வேடுவர்கள் தங்களது நிலம் சார்ந்த உடலமைப்பையும் மலையை மையமிட்ட வாழ்வையும் வாழ்ந்தவர்கள். அவர்கள் கள்ளுண்டு களித்து, வேட்டையாடினர். சேக்கிழார் திண்ணன் (கண்ணப்பர்) வரலாற்றைச் சொல்லுமிடத்தில் திண்ணன் எனும் வேடுவன் சங்ககாலக் குறிஞ்சி மக்களின் வழி வந்தவன் என்ற மரபை வெளிப்படுத்தியுள்ளார். வேலன் குறிஞ்சி நிலத்தலைவன் அவனுக்கு விழா எடுத்தால் பிள்ளைப்பேறு கிடைக்கும் என்பது சங்ககால மக்களின் நம்பிக்கையாகும். உலகில் தோன்றிய எல்லா இனக்குழுச் சமுதாயமும் பெண்ணை முன்னிலைப்படுத்திய வாழ்வை நகர்த்தினர் என்ற பண்பாட்டைத் தேவராட்டி என்னும் முதியவளின் வழி ஆவணப்படுத்தியுள்ளார். பாடல், உணவு, அணிகலன்கள், ஆடையமைப்பு, அரசுரிமை, நிலவமைப்பு, தொழில், இசைக்கருவிகள் ஆகியவற்றோடு எவ்வாறு பொருந்தியுள்ளன என்ற பதிவைக் கண்ணப்ப நாயனார் புராணம் வழி காணமுடிகிறது. பெரியபுராணம் ஒரு சைவ சமய நூல் மட்டுமல்ல; சங்ககாலப் பண்பாட்டின் நீட்சியைக் காட்டும் பண்பாட்டுப் படையலென்பதைத் தக்க சான்றுகளுடன் கட்டுரை மெய்ப்பித்துள்ளது.

துணைநூற் பட்டியல்

1. தெய்வச்சேக்கிழார்., பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணம், சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை, பவானி, பதிப்பு - 2022 (மு.ப)

2. அறவேந்தன்.இரா., பெரும்பாணாற்றுப்படை உரைவேறுபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.பி.லிட், சென்னை, பதிப்பு - 2024 (மு.ப)

3. சாமிநாதையர்.உ.வே.சா., குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, பதிப்பு - 2020 (எ.ப)

4. சாமிநாதையர்.உ.வே.சா., புறநானூறு மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, பதிப்பு - 2022 (பத்.ப)

5. சுந்தரமூர்த்தி.கு. (வி.உ.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, பதிப்பு - 1965 (மு.ப) 6. முனீஸ்மூர்த்தி.மு., மலைபடுகடாம் உரைவேறுபாடு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.பி.லிட், சென்னை, பதிப்பு - 2024 (மு.ப)

7. சாமிநாதையர்.உ.வே.சா(ப.ஆ)., பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரையும், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, பதிப்பு - 2019 (ஒ.ப)

8. சுப்பிரமணிய முதலியார்.சி.கே., சேக்கிழாரும் சேயிழையார் களும் (பெரியபுராணத்தில் பெண்கள்), சேக்கிழார் நிலைய வெளியீடு, கோயம்புத்தூர், பதிப்பு 2017

9. சுப்பையா.அரங்க., பெரியபுராணப் பதிப்பு வரலாறு, குகன் பதிப்பகம், வடுவூர், பதிப்பு - 2002 (மு.ப) .

வீரமும் விருதும் பெற்ற வேட்டுவ சமுதாயம்

முனைவர்த.சங்கீதா எம்.ஏ.,எம்.எட்.,பி.எச்டி.,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பெரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மண்ணிவாக்கம், சென்னை - 48.
9524996794,9786369776.
d.sangeetha5981@gmail.com

முன்னுரை

'குருகுல வம்சம்' என்று கூறிக் கொள்ளும் வேட்டுவர் இலக்கியம் 'குருகுலக் காவியம்' ஆகும். 'பஞ்சவர்ண ராஜ காவியம்' மற்றொரு காவியம் 'அப்பிச்சிமார் காவியம்'. அப்பிச்சிமார் பேரில் குறவஞ்சி போன்ற இலக்கியங்களும் இருந்துள்ளன. வேட்டுவர் சமூகத்தில் ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட குலப்பிரிவுகள் உள்ளன. அண்மையில் கிடைத்த "வேட்டுவர் கலிவெண்பா" சுவடி இவற்றைச் சிறப்புடன் தொகுத்தளிக்கிறது. வேளாளர் சபை, வெள்ளா நாட்டார்; வேட்டுவர் சபை, பூலுவ நாட்டார்; இரு சமூகச் சபைகளும் தனித்தனியாக அறச்செயல்கள் ஆற்றி இருப்பதுடன் இரு சமூகச் சபைகளும் இணைந்து பற்பல அறச்செயல்களை ஆற்றியுள்ளன. வேட்டுவ சமூகத்தினரை "வாளரசர்' வாளரசமணவாளர்" என்று சிறப்பாக அழைத்ததுடன் "பாதிப் பங்காளிகள்" என்று கொங்குவேளாளர்கள் அழைத்துள்ளனர். கொங்கு வேளாளர் சமுதாய ஒப்பந்தங்கள் பலவற்றில் வேட்டுவர் குலப் பெருமக்கள் முன்னிலை வகித்து சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர். கொங்கு நாட்டின் பல பகுதிகளில் வேளாளர்கள் குடியேறும் முன் பல ஊர்ப்பகுதிகளும், பல நிலங்களும் வேட்டுவர் சமுதாயத்தினருக்கு உரிமையுடையதாக இருந்துள்ளன. இரு சமுதாயத்திற்கும் நடைபெற்றதாக ஆவணங்கள் கூறும்.போராட்டங்கள் தொழில் பற்றிய விவகாரங்களால் ஏற்பட்ட நிகழ்வுகளே தவிர இனம் சாதிப் போராட்டங்கள் அல்ல. கொங்கு வேளாளர் ஆவணங்களில் கொங்கு வேட்டுவர் என்று வேட்டுவர் சமுதாயத்தினர் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் சிறப்புகளையும் செயல்பாடுகளையும் இவ்வாய்வின் மூலம் அறியலாம்.

அண்ணன்மார் காவியத்தில் வேட்டுவரின் சிறப்பு

'கும்பிட்டாரை வெட்டாத குருகுல வங்கிசம்' என்ற தொடர் அண்ணன்மார் காவியத்தில் காணப்படுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க கொங்குநாட்டு வேட்டுவர் சமுதாயச்செய்திகள் வரலாற்றில் போதுமான அளவு இடம்பெறவில்லை. கரூர்ப் பேராசிரியர் இராசசேகரத் தங்கமணி (கொங்குச் சமுதாயம் வேட்டுவர்), நாமக்கல் நந்தர் தங்கம் விசுவநாதன் (அரையநாட்டு வரலாறு - ஆய்வு நூல்) ஆகியோர் நூல்கள் ஓரளவு இக்குறையைப் போக்குகிறது.

வேட்டுவர்களின் ஆட்சி சிறப்பு

வேட்டுவர்கள், 'பூர்வ குடிகள்' எனவும், வேட்டுவ சமூகத்தினர் கொங்கர்' எனவும், வேட்டுவத் தலைவர்கள் கொங்குராயன் எனவும் அழைக்கப்பட்டதாக ஆவணங்கள் கூறுகின்றன. 'ஊராளி', நாடாழ்வான்', 'கொங்காள்வான்' போன்ற ஆவணச் சொற்கள், வேட்டுவர் ஆட்சிப் பொறுப்பிலும் இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன. கூத்துக் கலையில் தேர்ந்த வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி எனும் முப்பெரு நிலைகளிலும் சிறப்புற்றிருந்தனர். வேட்டுவர், 'காவலியர், மாவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர்' என ஐவகையாகப் பிரிக்கப் பட்டிருந்ததையும் ஆவணங்கள் குறிக்கின்றன.

வேட்டுவர்களின் கொடைச்சிறப்பு

வேட்டுவர் அளித்துள்ள கொடை பற்றிய செய்திகளை அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டடத் திருப்பணி செய்தமை, சிவராத்திரிப் பூசைக் கொடை வழங்கியமை, இறையிலி நிலம் அளித்தமை, சந்தியாதீபம் கொடுத்தமை, நெற்கொடை, கறவைப்பசு, குதிரைச் சிலை வழங்கியமை போன்ற ஆவணக் குறிப்புகளால் அறியலாம்.

வேட்டுவர்களின் வீரம்

வீரத்திலும், வேட்டுவர் சிறந்திருந்தனர் என்பதனை மன்னர் களுக்குப் படையுதவி அளித்தல், ஆநிரை மீட்டல், கள்ளர்களை அடக்குதல், நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல் போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிகிறது.

வேட்டுவர்களின் பக்திச் சிறப்பு

பக்திச் சிறப்புடைய கண்ணப்பரையே தம் குல முதல்வராக வேட்டுவர் கொண்டுள்ளனர். இவர்கள் சத்திரிய சாதியினர். காளத்தி மலைக்கு உரியவர்கள். கண்ணப்பரின் பக்தியைப் பற்றிக் கேள்விப்பட்ட சேரமான் பெருமாள் நாயனார் வேட்டுவரின் சிறப்பறிந்து 164000 வேட்டுவரைச் சேர நாட்டிற்கு அழைத்து வந்து பல்வேறு பணிகளில் ஈடுபடுத்திய செய்தியுண்டு. கண்ணப்பரைப் பற்றிய வேறுபல அரிய செய்திகளையும் ஆவணங்களின் வாயிலாக அறியலாம்.

செப்பேட்டுச் செய்திகள்

செப்பேடுகள் பல்வேறு உலோகங்களால் உருப்பெற்றிருப்பினும் பெரும்பாலும் செம்பே பயன்பாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. கொங்கு வரலாற்று ஆவணங்களில் வேட்டுவர் சமூகம் பற்றிய செப்பேட்டுச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. “தீர்த்தகிரிச் சர்க்கரைப்பட்டயத்தில்,” தீரன் சின்னமலையின் தந்தை இரத்தினச் சர்க்கரைக்கு நிலம் அளித்தவர், குமாரவலசு வேட்டுவர் குமார சின்னய கவுண்டா, எனும் செய்தி இடம்பெற்றுள்ளது.

இலக்கியங்களில் வேட்டுவர் பற்றிய செய்திகள்

இலக்கியங்கள், வேட்டுவர் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளன. ‘திங்களூர் அருள்மலை முருகன் மீது அவிநாசிப் புலவர், திங்களூர் நொண்டிச் சிந்து எனும் நூலைப் பாடியுள்ளார். இந்நூலைப் பாடியமைக்காக ‘வேட்டுவர் சமூகத் தலைவர் ஆண்டமுத்துக் கவுண்டர் அப்புலவருக்குப் ‘பொன்பரிசு’ கொடுத்துப் பாராட்டிய செய்தி அந்நூலிலேயே குறிக்கப்பட்டுள்ளது. அப்பச்சிமாரயன் குறவஞ்சியில் திங்களூர் பற்றி எழுதப்பட்ட முதல்பாட்டு மட்டுமே கிடைத்துள்ளது. வேட்டுவர் கலிவெண்பாவில் வேட்டுவர் குலங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை நீங்கலாக அப்பச்சிமார் காவியம், கபிலமலைக் கோவை, கோப்பண்ணன் கோவை, காணிப்பாடல்கள் ஆகிய இலக்கியங்களிலும் வேட்டுவர் பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

வேட்டுவ மகளிர் கல்வியறிவு

வேட்டுவ மகளிர் கல்வியறிவு உடையவர்களாகவும், பொருளாதாரச் சுதந்திரம் பெற்றவராகவும், கோயில் கட்டித் தருமளவிற்குப்

பக்தியும் செல்வமும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. வேட்டுவர் சமூகப் பெருமக்கள் பலர் ஆளும் தலைவர்களாகச் சிறப்புடன் விளங்கியுள்ளனர். அவர்கட்கு 'ஊராளி', 'நாடாழ்வான், 'கொங்காள்வான்', 'கொங்குராயன்' போன்ற அடைமொழிகள் காணப்படுவது அதனை விளக்கும். சிலர் 'அதிகாரன் என்று அழைக்கப்பட்டுள்ளனர். 'மன்றாடி' பட்டம் பெற்றவர் பலர்; கொடிவேரி குளவாற்றூர் ஊராளி செம்ப வேட்டுவரில் தொண்டைமான் பிள்ளனான செயங்கொண்ட சோழக் கொங்காள்வான்நாமக்கல் புல்லை வேட்டுவரில் நற்காவிரி நாடாழ்வான்,

"தேசி ஆளப்பிறந்தான் மும்முடிச் சோழச் சக்கரவர்த்தி
அரங்கராயன்
வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் வளர்ந்த அம்மத
திருவ நாடாழ்வான் வீரசிங்கன்

"துக்காச்சி ஊராளி வேட்டுவன் அழகன் காளி?"

"கீரனூர் காவலன் மேலைக்கரையரில் சொக்கன் ஊராளி:"

"பருத்திப்பள்ளி ஊராளி பாண்டிய வேட்டுவரில் அதியமான்
நடுவில் நங்கன்"

"பெரியவிலங்கி ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன்
சிறியர் ஆன எழுகரை நாட்டு அக்கசாலைகள் மாத்த
ஆராத பிள்ளை"

"பட்டில் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவர் பெரியதேவன்"

"உலகவிடங்கம் கள்ளை வேட்டுவரில் ஊராளிகளில்
கருஞ்சொக்கன் வலிய சொக்கன்"

போன்ற பலர் ஊர், நாடு ஆட்சி செய்த அரசு அலுவலர்களாக இருந்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன. வேட்டுவகுலப் பெருமக்கள் பலர் மூவேந்தர்களால் 'மன்றாடிப்' பட்டம் பெற்று ஊர் அதிகாரம் செய்ததை சோழன் பூர்வ பட்டயம்" விளக்குகிறது.

பேரரசர்களால் பெற்ற பெரும் சிறப்பு

வேட்டுவச் சமூகப் பெருமக்கள் பலர் அரசு, அரையர், மந்திரி, நாடாழ்வான் என்ற சிறப்புப் பெற்றும் அதியமான், சேனாவரையன்,

காலிங்கராயன், தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் அளிக்கப்பட்டும் பெரும் சிறப்புப் பெற்றுள்ளனர். பலருக்கு அரசர்கள் தங்கள் பெயர்களையே வைத்துக் கொள்ளும் உரிமையையும் கொடுத்துள்ளனர். 12-14ஆம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டுச் சமுதாய வாழ்வில் உயர்நிலையில் அவர்கள் இருந்துள்ளனர் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. பெயர் அமைப்பே அதனைவிளக்குகிறது.

பட்டப்பெயர்களால் புகழான வேட்டுவத் தலைவர்கள்

"வெங்கம்பூர் புல்லை வேட்டுவரில் வானவதரையன் வலங்கை வாழவந்தான் ஆன சுந்தரபாண்டிய வீரசிங்கதேவன்"

"காங்கயம் காவலன் வெண்கொற்றரில் செய்யாழ்வி சூரியதேவன் ஆன தொண்டைமான்"

"கீரனூர் வேட்டுவர் கீழைக்கரையரில் பெரிய அரசு அழகிய பிள்ளை"

"திங்களூர் வேட்டுவர் செய்யர்களில் போத்தன் கோன் ஆன சேனாவரையன்"

"முளையூர் மணலூர் கிழவன் சோழகோன் நல்வாளை வேட்டுவர்"

"பொழில்வாய்ச்சி பூலுவர் சிலம்பன் பிள்ளையான அதியன் காலிங்கராயன்"

"பருத்திப்பள்ளி ஊராளி வேட்டுவரில் அதியமான் நடுவில் நங்கன்"

**"பூலுவ வேட்டுவரில் மேற்சேரி வெள்ளைகளில் இராசன் நிறையுடையான் ஆன தொண்டைமான்'
வேட்டமங்கலம் பூலுவரில் சோழன்"**

என்பன அவற்றைக் குறிக்கும் கல்வெட்டுத் தொடர்களாகும்.

வேட்டுவர்களுக்கு விருதுகள்

அரசர்கள் தங்கள் உயர் அலுவலர்கட்கு விருது கொடுக்கும் வகையில் பல்வேறு பட்டப் பெயர்களை அளிப்பது வழக்கம். அப்படிப்பட்ட பட்டப் பெயர்களில் பல்லவராயன் என்பதும் ஒன்று. செங்கண்ண குலத்து

லிங்கையனுக்குச் சோழ மன்னன் "பல்லவராயன்" என்ற பட்டப்பெயரை அளித்துக் கௌரவித்தான்.

"போரிட்ட பல்லவன் தேகத்தை வெட்டியே
பொன்மகுடம் நீ பறித்தாய்
செங்கதிர்ப் பரிதிகுல மகராச ராசனாம் திரிபுவனச் சக்கரவர்த்தி
சித்தமகிழ் தளகர்த்தர் லிங்கயப் பல்லவன்"

என்பது ஒரு தனிப்பாடல் பகுதியாகும். அவர்கள் வழிவழியாக அப்பெயரை வைத்துக் கொண்டதைப் பல இலக்கியங்களும் ஆவணங்களும் எடுத்துரைக்கின்றன. வேட்டுவச் சமுதாயத்தில் பலர் அச்சிறப்புமிகு பல்லவராயன் பட்டத்தைப் பெற்றுள்ளதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

"அறச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான்
பல்லவராயன்!"

"பட்டாலியில் காவலன் வெண்கொற்றரில் சோணாப்
பல்லவரையன்?"

"முத்தூர் காவலன் வளவரில் உத்தமசோழப் பல்லவரையன்"*

ஈங்கையூரில் காவலன் குறும்பிள்ளரில் போத்தன் செய்யான் ஆன குலோத்துங்க சோழப் பல்லவரையன்

"கரூரில் கரடி வேட்டுவரில் மானாபரணப் பல்லவராயன்"

"கவையன்புத்தூர் பூலுவர் முட்டைகளில் அடையன் போத்தன்
ஆன உத்தமசோழப் பல்லவரையன்"

இவர்கள் அனைவரும் அரசர்களால் சிறப்பிக்கப்பட்டு உயர் அலுவலர்களாக இருந்தவர்கள்.

வேட்டுவர்களின் உழவுத் தொழில்

உழவுத் தொழிலுக்கு உதவியாகப் பலர் அணை, ஏரி, குளம், வாய்க்கால்கள் அமைத்துள்ளனர். பலர் கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர். சிலர் பொன் கொடுத்து நிலம் வாங்கிக் கொடை கொடுத்துள்ளனர். பட்டாலிக் காவலன் குறும்பிள்ளரில் செயங்கொண்ட வேளான்புன்னத்துப் பூவாணி வேட்டுவரில் வேளான் கரியான் ஆன மருதங்க வேளான் கவையன்புத்தூர் வேட்டுவர் பூலுவர் மயிலரில் வேளான் வேள் பெரிய பிள்ளை திருவகழிமங்கலத்து கரைய

வேட்டுவரில் காளிப் பிடாரன் ஆன கரைய வேளான்? என்பன வேளாண் பட்டம் பெற்ற சில வேட்டுவச் சமுதாயப்பெருமக்கள் ஆவர்.

ஆலயத் திருப்பணிகள்

பண்டைய அரசர்கள் காடுகளை அழித்து மக்கள் வாழும் நாட்டுப் பகுதியாக்கி, நீர்நிலைகளை ஏற்படுத்தி, கோயில்களைக்கட்டியபின்னரே மக்களைக் குடியமர்த்தினர்.திருப்பணி செய்வது நான்கு மடங்குப் புண்ணியம் தரும் செயல் என்று நூல்கள் கூறுவதை,

> **“முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய**
> **நெரிந்த வாகிய கோபுர நெடுமதிள் பிறவும்**
> **தெரிந்து முன்னையில் சீர்பெறப் பதுக்குவோர் பண்டு**
> **புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங் குறுவர்”**

என்ற பாடல் மூலம் உணர்ந்து பழைய கோயில்களைப் பலர் பழுதுபார்த்துள்ளனர் என்பதக் காணமுடிகிறது.

> **“அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் அழிவு சோர்ந்து**
> **தூபி பரியந்தமாக சாந்தும் பண்ணி எழுவித்து**
> **நிர்மாலியத் தொட்டியும் சமைப்பித்தேன்”**

என்று பவானி வட்டம் பட்டிலூர் வாகீசுவரர் கோயிலில் 1337-ஆம் ஆண்டு தான் செய்த பணிகள் பற்றி வேட்டுவச் சமூகப் பெரியவர் பிள்ளை என்பவர் கல்வெட்டில் பொறித்துள்ளார். கொடுமணல் கணபதி பாளையத்தில் செல்லாண்டியம்மன் கோயிலைப் பழுது பார்த்ததை ஒட்டப்பாளையம் வேட்டுவக் கவுண்டர்கள் பின்வருமாறு குறிக்கின்றனர்.

> **“ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 6-ஆம் தேதி வேட்டுவ ராஜகுல வம்சம் ஒட்டபாளையம் வேட்டுவக் கவுண்டர் அவர்களால்செல்லாண்டியம்மன்கோயில் ஜீர்ணோத்தாரம் செய்யப்பட்டது”**

ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயில். காலம் - விக்கிரம சோழனின் 12-ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1285 செய்தி : வேட்டுவக் காவலர் குறும்பிள்ளரில் போடன் என்பவர் மனைவி கோவி என்பவர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு:

1. ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவற்கு யாண்டு பன்னிரண்டாவது காங்கய நாட்டு பட்டாலியிற் காவலன் குறும்பிள்ளரில்

போடன்மனைக்கிழத்தி கோவி............ நாயனார் பால்வெண்ணீசுர முடையாற்குச் சந்தியா தீபமொன்றுக்கு ஒடுக்கின பொன் கழஞ்சுக்கும் கோயிற் காணியுடைய சிவப்பிராமணரில் கடைக்குறிச்சி பால்வணத்தானுடையான் ஆண்டவன் உள்ளிட்டாரும் கூத்தன் நல்லானுள்ளிட்டாரும் இவ்விருவோம் சந்தியாதீபம் சந்திராதித்த வரை செலுத்தக் கட வோமாகவும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை. என்று கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

கொங்கு வேளாளரோடுபொருளாதார உறவுகள்

கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள் வேட்டுவர் குலப் பெருமக்கள், அவர்களுக்குச் சொந்தமான ஊர்களையும், கோயில்களையும் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் குடியேறியபோது படிப் படியாகப் பொன்னும், பொருளும் கொடுத்துப் பெற்றனர். அதனையே இப்பட்டயமும் முந்தைய தென்னிலைப் பட்டயமும் விளக்குகிறது.

உக்கிலியரை விரட்டியதால் வேட்டுவர் தாம்பெற்ற தென்னிலைக் காணியில் கால் பங்கு உரிமையை 1000 பொன்னுக்குப் பெருங்குடி வேளாளராகிய கொங்கு வேளாளருக்கு விலைக்கு விற்றனர். இதேபோல் நீலியம்மன் கோயில், வேங்கபுரம் அம்மன் கோயில், கண்டியம்மன் கோயில், மங்கலம் காளியம்மன், மின்னாம்பள்ளி வன்னியம்மன் கோயில் ஆகியவற்றின் காணி உரிமைகள் வேட்டுவர் குலத்தாரிடமிருந்து வேளாளருக்கு மாறுகிறது. ஆனால் கோயில் உற்சவங்களும் உற்சவத்தின் போது கோயில் பணியாளர்கட்குக் கொடுக்கின்ற கொடைகளும் எந்தவித மாற்றமும் இல்லாமல் அப்படியே முன்பு நடைபெற்ற முறைபோலவே நடைபெற வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதிக் கொடுத்துள்ளனர். மூலம் கலியுக சகார்த்தம் 3689-இல் சாலிவாகன சகாப்தம் 360 மேல் செல்லாநின்ற சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் விகாரி வருஷம் பங்குனி மாதம் 15-ஆம் தேதி சேரன் சோழன் பாண்டியன் செட்டி சிவப்பிராமணன் காலத்தில் யுக்கிலியரைவெட்டி முடுக்கினபடியினாலே இந்த அஞ்சுபேரும் கவுண்டர்க்குக் காணி பூமி எல்லை கொல்லை சம்மதிச்சு விட்டதுக்குத் தென்னிலைக் கிராமத்திலே மேரு மிராசு பத்திக் கொண்டது. சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், வெங்கச்சி வேட்டுவன், மாந்தாக் கவுண்டன், குட்டியாக் கவுண்டன் இந்த ஐந்து பேர் கவுண்டர்களுக்குத் தென்னிலைக் கோட்டையிலே அஞ்சு பிள்ளையாரும் அஞ்சு

அரண்மனையும் மேரு மிராசு இந்தப் பட்டயத்தில் உள்ளபடிக்கு முந்தினார் பிந்தினார் உள்படப் பட்டயப் படிக்கு விபூதி சந்தனம் பற்றிக் கொள்ளவும்தென்னிலைக் கோட்டையிலே மேல்கண்ட சாதினம் மேற்புறத்துத் தலைவாசலுக்கு அண்டினாற் போலே வடக்கியாலே உக்கிலியன் தாலி முதல் தாலியும் செப்புப் பட்டயம் மூத்தாந்தாழியிலே போட்டுப் புதைச்சு இருக்குது. மேல் சிங்காதனக்கல்லுப் போட்டு மேற்கண்ட சாதினம் போட்டு இருக்குது.

இந்த ஐந்து பேர் கவுண்டர்கள் வெள்ளாளச் சாதி திருமலைக் கவுண்டன் பெருங்குடி வெள்ளாளன் கையிலே ஆயிரம் பொன் வாங்கிக் கொண்டு கால் பங்கு கொடுத்து உங்களுக்கு நடந்த பிரகாரம் மேரு மிராசு பத்திக் கொள்ளவும். இதுக்குத் தலையநல்லூர் கூரை காளியப்பகவுண்டர், வெங்கம்பூர் சமந்தராயக் கவுண்டன் சாட்சி, வராக வேட்டுவன் கண்டி கவுண்டன் சாட்சி. போத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்சி. சல்லி காளத்திக் கவுண்டன் சாட்சி. இந்த ஐந்து பேர் கவுண்டர்களும் பத்திக் கொண்டோம். செய வருஷம் பங்குனி மாதம் 13 ஆம் தேதி தென்னிலைக் கிராமத்திலே வெங்கச்சி வேட்டுவன் குட்டைக் கவுண்டன் நீலியம்மன் கோயில் முப்பாடு ராச முப்பாடு இதனைப் பெறும் கவுண்டர்களும் கொடுத்தோமிதுக்குச் சாட்சி சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், மாந்தை கவுண்டன், கூரை காளியப்ப கவுண்டன், திருமலைக் கவுண்டன், போத்தி சேசுவராயக் கவுண்டன், சல்லிகாளாத்திக் கவுண்டன், ஆத்தூர் வண்டிக் கவுண்டன், கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன், குப்பத்துப் பசுபதி ஐயன் இத்தனை பேர் சாட்சி.முப்பாட்டுக்காகப் பொன்னு 5, நெல்லு மொடா 3, ஆட்டுக்கிடாய் 1,சங்கிடு பறையன் மருதன் நெல்லு மொடா 2, பொன்னு 2, ஆட்டுக் கிடாய் இந்தப்படிக்கு நடத்திக் கொள்ளச் சிறுத்தலை வேட்டுவன், மாகாளி வேட்டுவன், மாந்தைக் கவுண்டன், வெங்கச்சி வேட்டுவன், குட்டியாக் கவுண்டன் இந்த ஐந்து பேரு கவுண்டர்களும் வெள்ளாளச் சாதி சின்னாக் கவுண்டனுக்கு ராசம்மாள் அதவப் பிள்ளையைக் கொண்டது.

புண்ணம் பெரியண கவுண்டன் இந்த ஐந்து பேர் கவுண்டர்களுக்குக் காப்பங்கு வீதம் ஊழியத்துக்கு ஆளில்லை என்ற புண்ணம் பெரியாக் கவுண்டர் இந்த ஐந்துபேர் கவுண்டர்களையும் கேட்டு ராசம்மாள் கவுண்டச்சிக்கு மகன் பொன்னம்பலக் கவுண்டன், தில்லையப்ப கவுண்டன், தில்லை அவனாசிக் கவுண்டர், ராசாக் கவுண்டன் இந்த நாலுபேர் நாலு கிணறு வெட்டி வைச்சுக் கொடுத்து

இராசம்மாள் கவுண்டச்சி மூத்த மகனுக்குக் கோயில் முப்பாடு மதியாக் கூடலூரு வாங்கிக் கொடுத்தாள். இந்தப்படி சம்மதிச்சு தீர்ந்த பிரகாரம். குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 28ஆம் தேதி சேரன், சோழன் பாண்டியன் காலத்திலே முப்பாட்டுக்காரனுக்கு 5 பொன்னு, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடா 1, பண்டாரம் சின்னாண்டிக்கு பொன்னு 3, நெல்லு மொடா 72, ஆட்டுக்கிடாய் 1, சங்கிடு பறையன் வேலனுக்குப் பொன்னு 3, நெல்லு மொடா 2, இந்தப்படிக்கு தீர்ந்த பிரகாரமாய் இது சாட்சி தலையநல்லூர் கூரை காளியப்ப கவுண்டன் சாட்சி, போத்தி சேசுவராயக் கவுண்டன் சாட்.சி, சல்லி காளாத்திக் கவுண்டன் சாட்சி. நீலியப்ப கவுண்டன் சாட்சி, கிழங்கு நாடு கண்டிக் கவுண்டன் சாட்சி. குப்பத்துப் பசுபதி ஐயன் சாட்சி. மாந்தைப் படை வேட்டுவன் கண்டிய கவுண்டன் சாட்சி. சம்மந்தராயக் கவுண்டன் சாட்சி. விகாரி வருஷம் பங்குனி மாதம் 15ஆம் தேதி வேங்கபுரம் அம்மன் கோயில் சம்மந்தராயக் கவுண்டன் ராச முப்பாடு கோயில் முப்பாடு கொடுத்தது சாட்சி இந்தக் கவுண்டர்களுக்குச் சாட்சி. காப்புக்கட்டிக்கு அஞ்சு பொன்னு, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1,பண்டாரம் கருப்பாண்டிக்குப் பொன்னு 4, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, சங்கிடு பறையன் மருதன் பொன்னு 2, நெல்லு மொடா 2, ஆட்டுக்கிடாய் 1, இத்தியாதி கவுண்டர்களும் சம்மந்தராயன் கையில் 9 பொன் வாங்கிக் கொண்டு எங்களூர் நடந்த பிரகாரம் நடத்திக் கொள்ளவும்.ஒப்பந்தம்செய்து கொண்டனர்செப்பேடோ, கல்வெட்டோ அனைத்துக்குரிய செய்திகளும்முதலில் ஓலையில்தான் எழுதப்பட்டன. பின் கல்லிலும், உரியவர்கள்அனுபவிக்கக் கொடுக்கத் தேவை ஏற்பட்டால் செப்பேட்டிலும் பொறிக்கப்பட்டன. இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலும்,செம்பிலும் பொறித்துக் கொள்ளுக என்பது ஒரு கல்வெட்டுத்தொடர். செப்பேடுகள் பெரும்பாலும் தனியார் வசம் இருப்பதால்இப்போது கிடைத்துள்ள செப்பேடுகளைக் காட்டிலும், கிடைக்கவேண்டிய செப்பேடுகள் மிகுதியாக இருக்கக் கூடும். செப்பேடுகள் வைத்திருப்போருக்கு அவை கூறும் தகவல் என்ன என்பது தெரிவதில்லை. சிலர் அதில் ஏதோ புதையல் இரகசியம்உள்ளது என நம்புகின்றனர். வேறு சிலர் அந்தச் செப்பேட்டைப் பிறரிடம் காட்டினால் கோயில், நிலம், சொத்து இவை போன்று ஏதேனும் ஒன்றில் தங்கள் பரம்பரை உரிமை பறிபோய்விடும் என்று எண்ணுகின்றனர். அதனால் அதைப் பிறரிடம் காட்ட முன்வருவதில்லை. மற்றும் சிலர் செப்பேடுகளின் வரலாற்று முக்கியத்துவம் என்னவென்று தெரியாமல் அவற்றை ஏதோ உலோகத் தகடு என்றுகருதி பழைய பாத்திர வியாபாரிகளிடம் குறைந்த

விலைக்கு விற்றுவிடுகின்றனர். அவை பாத்திரங்களாக உருமாறி விடுகின்றன. அண்மையில் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்பேடுகள் பழைய பாத்திரக் கடைகளிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

முடிவுரை

கொங்கு நாட்டில்கிராமப்புறங்களில் செம்புத்தகடுகள் கிடைப்பது மிக அரிதாக இருந்தமையால் இலக்கியம், கணக்குகள் எழுதப் பயன்படுத்திய பனை ஓலைகளிலேயே பட்டயங்களை எழுதினர். அவ்வாறான ஓலைப் பட்டயங்கள் கொங்கு நாட்டில் மிகுதியாகும். கல்வெட்டு, செப்பேடுகள் போல ஓலைப் பட்டயங்களும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். வேட்டுவர்கள்கூத்துக் கலையில் தேர்ந்த வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி எனும் முப்பெரு நிலைகளிலும் சிறப்புற்றிருந்தனர். வேட்டுவர், காவலியர், மாவலியர், பூவலியர், வேடர், வேட்டுவர் என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்ததையும் ஆவணங்கள் குறிக்கின்றன. வேட்டுவர் அளித்துள்ள கொடை பற்றிய செய்திகளை அர்த்த மண்டபம், மகாமண்டபம் கட்டித் திருப்பணி செய்தமை, சிவராத்திரிப் பூசைக் கொடை வழங்கியமை, இறையிலி நிலம் அளித்தமை, பெண்களின் கல்வியறிவு, பெண்கள் கோவிலுக்கு அளித்த கொடைகள் பற்றிய செய்திகள், கல்வெட்டுகள் மூலமும்ஓலைச்சுவடிகள் வழியாக வேட்டுவர் கோளின் சிறப்பு, அவர்களின்வீரம்,புகழையும் மன்னர்களோடு அவர்களுக்குஇருந்ததொடர்புகளையும் அறிய முடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. இணையவழித்தரவுகள்
2. வேட்டுவர் சமூக ஆவணங்கள் - ஆசிரியர் புலவர் செ. இராசு, எம்.ஏ., பிஎச்.டி., முன்னாள் தலைவர்கல்வெட்டு தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். வெளியீடு: ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை 34, மின்ன வேட்டுவம் பாளையம்-ரோடு, சலங்கபாளையம் (அ.நி), கவுந்தப்பாடி 638 455 பவானி வட்டம், ஈரோடு மாவட்டம்.

கொங்கு நாடும் வேட்டுவர் வரலாறும்

மு.காவ்யா
முதுகலைத் தமிழ் - முதலாம் ஆண்டு,
நேரு நினைவுக் கல்லூரி, புத்துனாம்பட்டி,
அலைபேசி : 7708711920.
kuttykavi0887@gmail.com

முன்னுரை :

“வேட்டுவர்” என்றால் வேட்டையாடுதலைக் குறிக்கும். வேட்டுவர் என்பவர்கள் பழங்குடி வகையைச் சேர்ந்தவர்கள் ஆவர். காடுகளில் சென்று வேட்டையாடும் தொழிலைச் செய்து வந்தனர்; கொங்கு நாட்டில் வாழ்ந்த அவர்களின் வரலாறும், பணிகள் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

கொங்கு நாட்டில் வேட்டுவர்

கொங்குநாட்டுச் சமுதாய வரலாற்றில் வேட்டுவர் முக்கியமான இடத்தை வகிக்கின்றனர். இவர்களின் குலத் தொழிலாக “வேட்டை யாடுதலைச்” செய்து கொண்டு இருந்தனர். கொங்கு நாட்டின் பூர்விகக் குடிகளான வேட்டுவர், பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டனர். அவர்கள்,

1. வேடன் 2. வெற்பன் 3. சிலம்பன் 4. எயினன்

என்னும் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் கொங்கு நாட்டில் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறிந்து கொள்ளலாம். இது மட்டும் அல்லாமல் பல்வேறு கல்வெட்டுகளிலும் இவர்களைப் பற்றி கூறியுள்ளனர் என்பதனையும் நம்மால் அறியமுடிகிறது.

கொங்கு நாட்டின் புகழ்

“உலகின் தலைசிறந்த குலம் வேட்டுவர் குலமே” என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் வேட்டுவப் பாடல் வரி மூலம்

எடுத்துரைக்கிறார். இது மட்டும் அல்லாமல் கொங்கு நாட்டில் பொதுவாக, வேட்டுவக் கவுண்டர்களை, கொங்குதேச ராஜாக்கள் என்று பஞ்சவர்ண ராஜ காவியம் கூறுகிறது.

கொங்கு வேட்டுவக் கவுண்டரின் வீர வரலாறு

“கல்தோன்றா மண்தோன்றா காலத்தே மூத்தகுடி
பிறப்பாலும் குணத்தாலும் உயர்ந்தகுடி
உலகின் தலைசிறந்த குடி
உலகின் முதல் போர்க்குடி வீரப்பெருங்குடி
கொங்குநாட்டின் ஆதிகுடி அரச குடி
வெட்ட வெட்ட தழைக்கும் குடி
கும்பிட்டாரை வெட்டாத குடி
எவருக்கும் தலைவணங்காத குடி
போரில் புறமுதுகு காட்டாத குடி
நம்பினோரை வாழவைக்கும் குடி”
- கொங்கு வேட்டுவகவுண்டர்

என்று பாடல் வேட்டுவக் குடியின் சிறப்பைக் கூறும் வகையில் அமைந்துள்ளது. கொங்கு நாட்டில் காணக் கிடைக்காத நடுகற்களில் வேட்டுவரின் வீரத்தையும், அவர்கள் எதற்கும் அஞ்சாத நிலையையும் எடுத்துரைப்பதாக உள்ளது. இதற்கு, கரையகுலச் சொக்கனின் பெருவீரத்தைப் போற்றிப் புகழும் பழமங்கலம் நடுகல் கல்வெட்டை எடுத்துக்காட்டாகக் கூறலாம்:

“வாய்த்த புகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்த மருள் வென்ற சயம்பெருகச் சீர்த்த புகழ்
நிக்குவனம் கற்பொறிக்கப்பட்டான்”

என்கிறது கல்வெட்டு. இது மட்டும் அல்லாமல் இவர்கள் புலிகளைக் கொல்லுவதில் ஆளுமை திறன் கொண்டவர்கள் ஆவர். இதனால் கொங்கு நாட்டில் புலிக் குத்திக் கற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இவர்கள் புலியை அதிக அளவில் குத்தியதால், தனது பெயருடன் புலிக்குத்தி என்னும் பெயரையும் வைத்து கொண்டனர்.

வேட்டுவக் கவுண்டரின் இறைப்பணி

வேட்டுவர்கள் பொதுப் பணியில் மிகவும் ஆர்வம் காட்டினர். இதனால் அவர்கள் பல கோவில்களுக்குப் பல்வேறு பணிகளைச்

செய்தனர். திருக்கோவிலை உருவாக்குவதிலும் இறைவனின் திருவுருவங்களைச் செய்வதிலும், விழாக்கள் நிகழ நிலக் கொடைகள் விடுவதிலும் மிகவும் ஆர்வம் காட்டினர். இதனை

அறச்சலூர்க் கல்வெட்டு கூறுகிறது:

"பூந்துறை நாட்டு அறச்சலூரில்
கரைய வேட்டுவரில் செய்யான்
பல்லவரையனேன்"

என்கிறது பாடல்.

வேட்டுவக் கவுண்டர்களின் குலப் பிரிவு

'வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது' என்று கூறப்படுவதுண்டு. வேட்டுவ கவுண்டர்கள் பல்வேறு குலப் பிரிவுகளைக் கொண்டுயள்ளனர். அவற்றில் சில:

1. காட்டு வேட்டுவர் 2. காரி வேட்டுவர் 3. கன்னி வேட்டுவர் 4. அண்டை வேட்டுவர் 5. சிலை வேட்டுவர் - என்பன.

இது போன்ற 203 - குலப் பிரிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பொதுப் பணி

வேட்டுவர்கள் நீர்ப் பாசனத்தை உயர்த்துவதில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளனர். இதனால், கால்வாய் வெட்டுதல், அணைகட்டுதல், குளம் வெட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளனர். இது மட்டும் அல்லாமல் ஊருக்குள் புகுந்து மக்களைத் துன்புறுத்தும் விலங்குகளைக் கொல்லுதல் என்ற பல்வேறு பொதுப் பணிகளையும் செய்து வந்தனர். நீர்ப் பாசனத்தை உயர்த்துவதில் வேட்டுவத் தலைவர்கள் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தனர். அதனை,

"கங்கை என்று பேரிட்டு இக்
குளம் அட்டினேன் பெரிய விலங்கி
ஊராளியாகிய சுண்டை வேட்டுவன்"

என்று வரிகளால் அறியலாம்.

கொங்கு வேட்டுவர் ஆவணங்களாகக் கல்வெட்டுகள், செப்பேடுகள், புராணங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றினால் வேட்டுவரின் வரலாறு பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஈரோடு, அவினாசி, திருமுருகன் பூண்டி,

இரும்பறை போன்ற ஊர்களில் உள்ள கல்வெட்டுகள் அதனை எடுத்துரைக்கின்றன.

முடிவுரை

இது போன்று கொங்கு நாட்டின் புகழையும், வேட்டுவக் கவுண்டரின் வீர வரலாறுகள் மற்றும் அவர்களின் பொதுப்பணிகளையும் எடுத்துக் கூறும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

கொங்குநாட்டுச் சமுதாய வரலாற்றில் வேட்டுவர் முக்கியமான இடத்தை வகிக்கின்றனர். இவர்களின் குலத் தொழிலாக "வேட்டையாடுதலைச்" செய்து கொண்டிருந்தனர்.

கொங்கு நாட்டில் வேட்டுவக் கவுண்டர்களை,கொங்குதேச ராஜாக்கள் என்று பஞ்சவர்ண ராஜ காவியம் கூறுகிறது.கொங்கு நாட்டில் காணக் கிடைக்காத நடுகற்களில் வேட்டுவரின் வீரத்தையும், அவர்கள் எதற்கும் அஞ்சாத நிலையையும் எடுத்துரைப்பதாக உள்ளது.

வேட்டுவர்கள் நீர்ப் பாசனத்தை உயர்த்துவதில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளனர். இதனால், கால்வாய் வெட்டுதல், அணைகட்டுதல், குளம் வெட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கொங்கு வேட்டுவர் ஆவணங்களாகக் கல்வெட்டுகள், செப்பேடுகள், புராணங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றினால் அவர்களது வரலாறு பற்றித்அறிந்து கொள்ளலாம்.

வேட்டுவ மக்களின் கலைக்கூறுகள்

திருமதி சு.சாந்தி
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
மல்லுப்பட்டி, பாலக்கோடு, தர்மபுரி.
அலைப்பேசி: 9344123140
keerthishan1@gmail.com

முன்னுரை

கலையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர்கள் தமிழர்கள். அவற்றை ஆயக்கலைகள் 64 என்று கூறுகின்றது சிலப்பதிகாரம். பல கலைகள் பண்டைய தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தமிழர்களின் கலைத்திறன், கலைநுட்ப அறிவு ஆகியவற்றை உலகத்திற்கு எடுத்துக்காட்டும் ஒளி விளக்குகளாக சான்றளிக்கின்றன. கலைகள் மனிதனின் உள்ளத்தில் ஊறி எழும் உண்மையான உணர்ச்சிகளின் வடிக்கால்களாக அமைந்துள்ளன. வாழ வேண்டிய வசதிகள் வாய்ப்பு அமையும் இடங்களில் குடி அமர்ந்து உணவுக்கான தேவையான தொழில்களைச் செய்து மனநிலை பெற்று இன்பப் பொழுது போக்காக பலவிதமான கலைகளை உருவாக்கி மகிழ்ந்துள்ளன. கடவுளுக்கு வழிபாடு செய்ய விரும்புவது இயல்பு. ஒவ்வொருவரும் தங்கள் விருப்பத்திற்கும் நம்பிக்கைகளுக்கும் தக்கவாறு வழிபாடு செய்து வருகின்றனர். அத்தகைய நாட்டுப்புற மக்களின் கலைக்கூறுகள், வேட்டையாடுதல், கூத்து, சிலம்பு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

மலைநில மக்களின் கலைகள்

கண்ணபிரானை ஒத்த கருமை நிறத்தையும் பலராமனை ஒத்த வெண்மையான அருவி பாய்கின்ற நிலத்தையும் கொண்டது குறிஞ்சி நிலம். இந்நிலம் இயற்கைக்கு அரணாய் விளங்கும் மலையும் மலை சார்ந்த பகுதியையும் இடமாகக் கொண்டுள்ளது. இங்கு வேட்டுவர் என்றழைக்கப்படும் குறிஞ்சிநில மக்கள் வாழ்கின்றனர். இந்நிலத்தில்

வாழ்கின்ற மக்களை கொடிச்சி எனவும், மலையுறை வேட்டுவர் எனவும் நற்றிணை குறிப்பிடுகின்றது. இதனை

"என் உயவு அறிதியோ நல்நடைக் கொடிச்சி" (நற். 82:3)

என்னும் வரி எடுத்துரைக்கிறது. குறிஞ்சிநில மக்களுடைய தொழிலில் குறிப்பாக வேட்டையாடுதலே அவர்களுடைய முதன்மைத் தொழிலாகக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்கள் குறுநில மக்களின் வாழ்வியலை எடுத்துரைப்பதை அறியமுடிகின்றது. பழங்காலம் முதல் இன்றுவரை மக்கள் வளர்ச்சி அடைந்த நிலையில் இது மூலமாக விளங்குகின்றது.

வேட்டையாடுதல்

மலைவாழ் மக்களான குறிஞ்சிநில மக்கள் கலையோடு இணைந்த தொழிலைப் புரிந்தனர். வேட்டைபுரிதலை ஆடவர்கள் கலையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். இதனைத் தொல்காப்பியர்,

“ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே” (தொல், அகம்., 967)

என்னும் வரிகள் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி நிலத்தில் விளையும் தினைப் பயிர் மற்றும் ஏனைய தானியங்களைப் பன்றிகள் உலாவிச் சென்றதாகவும் மற்றும் தினைகளைச் சேதப்படித்தியமையால் கானவன் அம்முள்ளம் பன்றியை வேட்டையாடியதாகவும் நற்றிணை, மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது:

"கானவன் எய்த முளவுநான் கொழுங்குறை
தேகமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கோடு" (நற். 85, 8 - 9)

"நல்லேர் நடந்த நகைச்சால் விளைவயல்
பன்மயிர்ப் பிணவொடு கேழல் உகள" (மதுரை. 173 - 174)

எனும் வரிகள் சுட்டுகின்றன. வேட்டுவர்கள் வேட்டைக் கலையில் சிறந்தவர்களாகக் கருதப்பட்டமையால் பல கருவிகளை உருவாக்கினர். அவற்றைக் கொண்டு வேட்டையாடும் கலைகளைச் சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுத்தனர். கானவர்கள் முள்ளம்பன்றி மட்டுமின்றி ஏனைய விலங்குகளையும் வேட்டையாடுவர்.

வேட்டைக் கலையில் சிறந்தவர்களாக, குறிஞ்சிநில மக்கள் திகழ்ந்தனர். ஆதலால் இந்நில மக்கள் வளமான இறைச்சியுடன் கொழுப்பையும், சோற்றையும் கலந்து உண்டனர். மாமிச நாற்றம்

வீசுகின்ற நிலமாகக் காணப்படும் என்பதனை மதரைக்காஞ்சி பின் வருமாறு உரைக்கிறது.

> "கோழு உன்குறைக் கொழுவல் சிப்
> புலவுவிற் பொறி கூவை" (மதுரை. 141 - 142)

குரவைக் கூத்து

மலைநில மக்கள் கூத்துக் கலையில் சிறந்தவராவர். இவர்கள் கூத்தைச் சிறப்பாய் கருதினார். கொற்றவை என்னும் தெய்வத்திற்குத் துடி என்ற இசைக்கருவி முழங்கக் குரவைக்கூத்து நிகழ்த்தப்பட்டது என வெட்சித் திணை குறிப்பிடுகிறது. வெட்சித்திணை என்பது குறிஞ்சித் திணையின் புறனாகும்.

> "மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த கொற்றவை நிலையும்
> அத்திணைப் புறனே" (தொல்., புறம். 1005)

இரண்டு மலைக் குன்றுகளுக்கும் இடையே கட்டப்பட்ட வலியக் கயிற்றின் மேல் நிற்பர். அதன்மேல் ஏறி உயரே கானவர்கள் நடந்து செல்வர்; இவ்வாறு கலைகளைப் பரப்பினர்.

குரவைக்கூத்து குறிஞ்சி நிலத்தில் சிறப்பாகக் கருதப்படும் ஒரு கலை நிகழ்வாகும். இதுபோன்ற கலைகள் மூலம் பழங்கால மக்களின் வாழ்வியலை நன்கு அறிய முடிகிறது.

சிலம்புக்கலை

சிலம்புக்கலை ஆடவர்களுக்கு உரிய கலையாகும். ஆனால் இன்று இருபாலரிடையேயும் அக்கலை காணப்படுகிறது. இதனைத் 'தற்காப்புக்கலை' என்றழைப்பர். நாட்டுப்புற கலைகளைத் தொல்காப்பியர் பண்ணத்தி எனக் கூறியுள்ளார்.

> "பாட்டிடைக் கலந்த பொருள் வாகிப்
> பாட்டின் இயல பண்ணத்தி இயல்பே" (தொல்.செய்., 1436)

தமிழர்கள் நிலத்தைப் பகுத்து அந்நிலத்தில் காணப்படும் இயற்கையைக் கொண்டு கலைகளை வெளிப்படுத்தினர். நாடோடியாகத் திரிந்து அலைந்து கொண்டிருந்த மனிதர்கள் பாறைகளில் முதன்முதலில் ஓவியம் வரையத் தொடங்கினர். இவ்வாறு கலை வளர்ச்சி அடைந்தது. நாள்பட, காட்டில் மேயும் மானை அம்பு கொண்டு எய்து வீழ்த்தினான்.

தொடர்ந்து நாகரிகம் வளர்ச்சி பெற்றது. அதுபோன்று கலைகளும் பல வளர்ச்சியினைப் பெற்றன.

வீட்டின் முன்புறம் முற்றத்தில் பெண்கள் இடும் மாக்கோலமும் ஒரு வகை கலையை வெளிப்படுத்துகிறது. உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோரே! உணவு மனிதன் வாழ்வதற்கு அரிதான ஒன்றாகும். ஆகவே உணவு சமைத்தல் என்பது ஒரு வகைக் கலையாகக் கருதப்படுகிறது. கல்விச்சாலையில் இன்றே மாணவ மாணவிகளுக்கு வரைதல் கலை (ஓவியம்) கற்றுக் கொடுத்து வருவதை நாம் அறிகின்றோம்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்" (தொல். அக. 99)

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு இணங்க இவ்வுலகம் ஒரு நாடகம் போன்று அதில் பயணிக்கும் மக்கள் அரங்கில் நாடகக் கதை மாந்தர்களாய் வாழ்ந்து செல்கின்றனர்.

முடிவுரை

குறிஞ்சிநில மக்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தவும் பிறரிடம் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளவும் வேட்டையாடல், கூத்து, சிலம்பம் என பல கலைகளைக் கையாண்டு கொண்டிருந்தனர். அத்தகைய கலைகள் இன்று பல பயிற்சியகங்கள் கொண்டு பயிற்சிக் கட்டணம் பெற்று மாணாக்கர்களுக்குத் தரக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

கருவி நூல்கள்:

1. வள்ளுவம் வ. சுப. மாணிக்கம்
2. குறுந்தொகை - தமிழண்ணல்
3. நற்றிணை - தமிழண்ணல்
4. தொல்காப்பியம் - இளம்பூரணார் உரை
5. குறள் கூறும் சமுதாயம் - காமாட்சி சீனிவாசன்.
6. வள்ளுவர் வகுத்த அரசியல் - திரு.முருகரத்தினம்
7. வள்ளுவர் வகுத்த பொருளியல் - திரு.முருகரத்தினம்
8. மதுரைக்காஞ்சி- தமிழண்ணல்
9. சிலப்பதிகாரம் - அடியார்க்கு நல்லார் உரை

கண்ணப்பரின் சிவன் சிலை வடிவானவரே

காவடி மு.சுந்தரராஜன்
9842231074.
indianthaatha@yahoo.com

முன்னுரை

திண்ணப்பர் கண்ணப்பர் ஆவதைச் சித்திரிக்கும் ஓவியங்கள் மிகவும் வியப்பளிப்பதாகவும், முரண்பாடுகள் கொண்டவையாகவும் உள்ளன. புராணங்களில் அவர் சிவனுக்குக் கண்தானம் செய்தார் என்று உள்ளது. சிவனுக்கென்று தனியாக உருவம் தரப்பட்டிருக்கையில், லிங்கத்திற்குக் கண்கள் வரையப்பட்டிருப்பது முரண்தானே?. கிடைத்த ஓவியங்கள் அனைத்தும் அப்படித்தான் இருந்தன. லிங்கத்தின் இடத்தில் சிவனின் உருவம் வரையப்படாமல் தடுப்பது எது? சைவர்களில் ஒரு பிரிவினர் சிவனை லிங்க வடிவாகத்தான் வணங்குவார்கள். அவர்கள்தான் தொடக்கத்திலேயே தங்கள் கோட்பாட்டின்படி, முரணான ஓவியத்தை வரைந்து பரப்பியுள்ளார்கள் என்ற நியாயமான ஐயம் எழுகிறது.

கண்ணப்ப நாயனார் புராணத்தின்வழி கண்ணப்பரின் சிவன் நிச்சயம் சிலை வடிவானவரே என்று சான்றுகள் கிடைக்கின்றன. அதே கருத்தைச் சான்றுகளோடு இங்கு வைக்கிறேன்:

திண்ணப்பர் / கண்ணப்பர் அறிமுகம்

குறவர் / குன்றவர் / கானவர் / வேட்டுவர் / வேடர் / வேடுவர் என்ற குறிஞ்சி நிலத்து (மலையும் மலை சார்ந்த பகுதியும்) இனத்தைச் சேர்ந்த கண்ணப்பர் என்பவர் சைவ சமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களில் பக்தர்களாலும், பிற சைவப் பெரியோர்களாலும் பெரிதும் மதிக்கப்படும் ஒருவர் ஆவார். அவரது இயற்பெயர் திண்ணன் ஆகும். தந்தை பொத்தப்பி நாட்டின் மலையரசன் நாகன்; தாய் தத்தை. உடுப்பூர் இவரது ஊர் ஆகும். தற்போது காலஹஸ்தி என அழைக்கப்படும்

அன்றைய காளத்தி மலையில் எழுந்தருளியிருக்கும் குடுமித்தேவர் என அடைமொழியிட்டு அழைக்கப்பட்ட சிவபெருமான்தான் இவரை ஆட்கொண்டவர்.

தனிச் சிறப்பு

சிவானந்தலஹரி என்ற தன்னுடைய (வடமொழி) நூலில் ஆதி சங்கரர் 61 -ஆவது சுலோகத்தில் கடவுட்பற்று என்பதற்குக் கண்ணப்பரின் செயலைப் பக்தியின் உயர்ந்த இலக்கணமாகச் சொல்கிறார்.

வழி நடை நடந்த மிதியடி பசுபதியின் அங்கத்திற்கு குறிகாட்டி யாகிறது; வாயிலிருந்து உமிழ்ந்த நீர் புரங்கள் எரித்தவனுக்கு நீராடலாகிறது; சிறிதுண்டு சுவைகண்ட ஊனமுது தேவனுக்கும் படையலாகிறது; பக்தி என்னதான் செய்யமாட்டாது? அன்ப ரென்போர் வேடுவ னன்றி வேறு எவர்? என்கிறார்.

மாணிக்கவாசகர் இவரை,

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை "வா" என்ற வான் கருணை
சுண்ணப்பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்துபி

எனப் போற்றியுள்ளார்.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் தனது "திருத்தொண்டத் தொகை" யில்

"கலை மலிந்தசீர் நம்பி கண்ணப்பர்க் கடியேன்"

எனப் போற்றியுள்ளார்

கண்ணப்ப நாயனார் புராணம்

பெரிய புராணம் என்னும் காப்பியத்துள் 63 நாயன்மார்கள் வரலாற்றில் கண்ணப்பநாயனார் வரலாறு இலைமலிந்த சருக்கத்தில் 10-ஆவது புராணமாக (காதையாக) இடம்பெற்றுள்ளது. இந்நாயனார் வரலாற்றைச் சேக்கிழார், 186 விருத்தப் பாக்களினால் பாடியுள்ளார். திண்ணனார், சமவெளி நாகரிகமறியா, வேட்டைத் தொழில் செய்யும் தனது மலைக் குறவர் இன வழிப்படி, வேதியர் வழிபாடு முறைகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டு மாமிச உணவை, அதிலும் தனது வாயிலிட்டுச் சுவைத்து, எச்சில் பட்டதைப் படைத்துப் பூசித்ததை

சிவன் ஏற்றுக் கொண்டதையும், சிவனின் திருவுருவத்தின் ஒரு கண்ணிலிருந்து குருதி கசிந்ததைக் கண்டு திண்ணன், தன் கண்ணைத் தோண்டி அப்ப, சிவனின் மறு கண்ணிலும் குருதி கசியவே, தனது மீந்த கண்ணையும் தோண்ட முயன்றபோது, இறைவன் கண்ணப்பன் என்று அழைத்துத் தடுத்தாட் கொண்டதையும் இக்கதை விளக்குகின்றது.

கண்ணப்பரின் சிவன் லிங்க வடிவானவரல்லர்

கண்ணப்ப நாயனார் புராணத்தில் உள்ள கீழ்க்காணும் பாடல்கள் கண்ணப்பரின் சிவன் சிலை வடிவானவரே என்பதை விளக்குகிறது.

96.......................... கோணமில் குடுமித் தேவர் இருப்பர்கும் பிடலாம் என்றான்.

104.......................... திங்கள்சேர் சடையார் தம்மைச்
சென்றவர் காணா முன்னே

123.......................... முடிமிசை மலரைக் காலில் வளைத்த பொற் செருப்பால் மாற்றி வாயின் மஞ்சன நீர் தன்னை விளைத்த அன்பு உமிழ்வார் போன்று விமலனார் முடிமேல் விட்டார்.

சிவனின் முடிமேலிருந்த பழைய மலர்களைச் செருப்பணிந்த காலால் நீக்கி விட்டு (ஒரு கையில் வில்லும், மறு கையில் இறைவனுக்கான ஊனும் இருந்ததால்), தனது வாயில் தேக்கிக் கொண்டு வந்திருந்த நீரை முடிமேல் விட்டுக் குளிப்பாட்டுகிறார்.

124. தலை மிசைச் சுமந்த பள்ளித் தாமத்தைத் தடங் காளத்தி மலை மிசைத் தம்பிரானார் முடி மிசை வணங்கிச் சாத்திச் தனது தலையில் சுமந்து வந்த மலர்களை இறைவனின் முடியில் சூட்டி..

லிங்கத்திற்குக் குடுமியோ, சடையோ, முடியோ இருக்க வாய்ப்பில்லை. அப்படி இருந்தால் அது லிங்க வடிவமே இல்லை.

116. அங்கிவர் மலையில் தேவர் தம்மைக் கண்டு அணைத்துக் கொண்டு வங்கினைப் பற்றிப் போதாவல்லுடும்பு என்ன நீங்கான் கண்ணப்பர் சிவனின் கைக் கங்கணத்தை உடும்பு போல் பற்றிக் கொண்டார் என்றுள்ளது. லிங்கத்திற்கு ஏது கையும், கங்கணமும்?

135. ..மை தழையும் கண்டத்து மலை மருந்தை வழி பாடு செய்து வரும் தவம் உடைய முனிவர் சிவ கோசரியார்

நஞ்சு தங்கிய கழுத்தையுடைய மலை மருந்தினை யொத்த சிவனை லிங்கத்துக்கு ஏது கழுத்து?

139. முழுது முறைமையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார் பூசைகளை முடித்து முழுமுதற் கடவுளின் கழல் அணிந்த திருவடி பணிந்தார். லிங்கந்திற்கேது திருவடியும் கழலும்?

140....... துணிந்த மறை மொழியாலே துதி செய்து சுடர்த் திங்கள் அணிந்த சடை முடிக் கற்றை அங்கணரை லிங்கத்திற்கு ஏது சடை முடியும் அதில் தங்கும் சுடர் விடும் நிலவும்?

167. ஆறுசேர் சடையார் தம்மை அணுக வந்து அணையா நின்றார் கங்கை ஆறு சேர்ந்த சடையாரை லிங்கத்தில் சடையையும், அதில் சேரும் கங்கையையும், வடிக்க முடியுமா?

169..... திரு நயனத்தில் ஒன்று துண்ணென உதிரம் பாய இருந்தனர் லிங்கத்தில் கண்ணிற்கு இடம் ஏது? உதிரம் எப்படிப் பாயும் ? லிங்கத்திற்குக் கண்கள் இருக்க வாய்ப்பில்லை அப்படி இருந்தால் அது லிங்க வடிவமே இல்லை.

173. நீடிய சோகத்தோடு நிறை மலர்ப் பாதம் பற்றி லிங்கத்திற்குப் பாதம் ஏது? இல்லாத ஒன்றை எப்படிப் பற்ற முடியும்?

183. .இடக்குங் கையைத் தடுக்க மூன்று அடுக்கு நாக கங்கணர் அமுதவாக்குக் கண்ணப்ப நிற்க என்ற பாம்பைக் கங்கணமாகத் தரித்த இறைவரது லிங்கத்தில் இருக்க முடியாத கைக்குப் பாம்புக் கங்கணம் எங்கிருந்து வரும்?

முடிவுரை

பக்தி என்ற பெயரில் அசல் புராணம் சொல்லுகின்றவைகளுக்கு மாறாக, லிங்கத்திற்குக் கண்கள், காதுகள், மூக்கு வரையும் அறியாமை சுட்டிக் காட்டப்படுகிறது.

கல்வெட்டுகளின் வழி அறியலாகும் வேட்டுவ மக்களின் வாழ்க்கை வரலாறு

ம.சௌந்தர்யா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை, தூயநெஞ்சக் கல்லூரி,
திருப்பத்தூர் (மா). 635 601.
அலைப்பேசி: 6382884209
மின்னஞ்சல் : soundaryamani005@gmail.com

முனைவர் சு. சிவசந்திரகுமார்
உதவிப் பேராசிரியர் மற்றும் நெறியாளர்,
தமிழ்முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி,
திருப்பத்தூர் (மா). 635 601.

ஆய்வுச் சுருக்கம்

கொங்கு நாட்டில் பன்னெடுங்காலமாகப் பல்கிப் பெருகிச் சிறப்புடன் வாழ்ந்துவரும் சமுதாயம் வேட்டுவர் சமுதாயம் ஆகும். கல்வெட்டுகள் பலவும் வேட்டுவ சமூகத்தினரை "பூர்வ குடிகள்" என்று கூறுகின்றன. வேட்டுவ சமூகத்தினரை "கொங்குராயன்" என்று இலக்கியங்களும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. அதில் வேட்டுவ மக்களின் வாழ்க்கை வரலாறுகள் குறித்து கல்வெட்டுகளின் வழியே ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மைப் பணி ஆகும்.

முன்னுரை

சங்ககாலத்தில் வேட்டுவர் இனத்தை வில்லர், எயினர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் உறுதிப் படுத்துகிறது. வேட்டுவர் இனத்தினர் படைத்தொழில் செய்ததால் வேட்டுவப் போர்வீரரை மறவர், மழவர், இளையர், வயவர் என அழைக்கப்பட்டதை கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கூறுகின்றன. அவ்வகையில் கல்வெட்டுகளின் வழி அறியலாகும் வேட்டுவ மக்கள்

வாழ்க்கை வரலாறுகளைத் தொகுத்துக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவர்களின் பூர்வீகம்

வேட்டுவர், பிரம்மனால் படைக்கப்பட்ட ஆதி வம்சத்தினர் என்று வேளாளர் புராணம் குறிப்பிடுகிறது. சோழன் பூர்வ பட்டயம், வேட்டுவக் கவுண்டர்களைக் கொங்கு நாட்டின் ஆதிகுடிகள் என்று சுட்டுகின்றது. சில பட்டயங்களில் வேட்டுவர், முத்தரையரின் வழித்தோன்றல்கள் என்று செப்புகின்றன. வேட்டுவக் கவுண்டரும் முத்தரையரும் கண்ணப்பநாயனாரைத் தமது குலதெய்வமாகக் கொண்டு வழிபடுகின்றனர். எட்கார் ஃதர்ஸ்ட்டன் (Edgar Thurston) அவர்கள் முத்தரையர், வேட்டுவர், வலையர் ஆகியோர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ளார். இருப்பினும் வேட்டுவரின் பூர்வீகம் குறித்து நான்கு முக்கிய கொள்கைகள் உள்ளன. அவை: 1. வேட்டுவர் நாகர் இனத்தவர். 2.குரு குலத்தவர். 3.கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர். 4.கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள்.

நாகர்

வேட்டுவர் நாகர் இனத்தவரே என்று கனகசபைப்பிள்ளை 1 குறிப்பிட்டுள்ளார். நாகரும் வேட்டையாடும் இனத்தின் தலைவர்களே ஆவர். எனவே தொழில் ஒற்றுமை கருதி, வேட்டுவரை நாகர் இனத்தினர் எனும் கனகசபையின் கருத்தினைப் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர். தமிழகத்தின் பூர்வ குடிகளுள் நாகரும் ஒருவர் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துதான். ஆனால், கொங்கு நாட்டில் பழங்காலத்தில் நாகர்கள் வாழ்ந்தமைக்கோ, நாகர் வேட்டுவரின் முன்னோர் என்பதற்கோ இதுகாறும் சான்றுகள் கிடைக்கவில்லை. எனவே இக்கருத்து பொருத்தமுடையதல்ல.

குரு குலத்தவர்

புராணங்களும் பழங்கதைகளும் வேட்டுவரைக் குருகுலத்தினர் எனக் கூறும். பாண்டவர், கௌரவர் ஆகியோர் குருகுலத்தவர். பாண்டவரது வீழ்ச்சிக்குப் பின்னர் இவர்களது கால்வழியினர் சிலர், தென்னிந்தியாவிற்கு வந்து, பொத்தப்பி நாட்டை உடுப்பூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். பொத்தப்பி நாடு, தொண்டை நாட்டை ஒட்டி அமைந்துள்ளது. இவ்வம்சத்தில் தோன்றியுள்ள வேந்தருள்

நாகராஜன் குறிப்பிடத்தக்கவன். இவ்வேந்தனது மகன் கண்ணப்பன். கண்ணப்பனுக்கு வேட்டுவன், வேடன், காவிலவன், பூவிலவன் மற்றும் மாவிலவன் எனும் ஐந்து மக்கள் இருந்தனர். கண்ணப்பனுக்குப் பின்னர் மூத்த மகனான வேட்டுவன் 2 என்று அழைக்கப்பட்டனர். இக்கருத்தினை வேல்சாமி கவிராயர் என்பார் குருகுல வரலாறு எனும் நுலில் குறிப்பிடுகிறார். கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர் மேற்கூறப்பட்டுள்ள கருத்தும் வேட்டுவர் சைவ நாயன்மாராகிய கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர் என்னும் கருத்தும் ஏறத்தாழ ஒன்றுதான். வேட்டுவக் கவுண்டப் பட்டக்காரர்களின் பட்டயங்களிலும், திங்களூர் நொண்டி நாடகம் எனும் கையெழுத்துப் பிரதியிலும் வேட்டுவரின் முன்னோன் கண்ணப்பர் என்று கூறப்பட்டுள்ளது. கண்ணப்பர் வேட்டுவர் குலத்தவர் என்பதும் உண்மையே. அவரை வேட்டுவக் கவுண்டர் வணங்கி வருவதும் உண்மையே. இவர் காளகஸ்தி வேடன் என்பது யாவரும் அறிந்ததே.

கொங்கு நாட்டின் பூர்வ குடிகள்

இவர்கள் கொங்கு நாட்டின் பூர்வ குடிகள் என்பதற்குப் பலவிதமான ஆதாரங்கள் உள்ளன. சங்க இலக்கியங்களும், கல்வெட்டுகளும் இக்கருத்தை உறுதி செய்கின்றன. பல அறிஞர்களும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர். வேட்டுவர்கள் தங்கட்கு அதிக எண்ணிக்கையில் படை தேவைப்பட்டபோது காளஹஸ்தி சென்று, அங்கிருந்த வேட்டுவ வேந்தனிடம் படை உதவி பெறுவதுண்டு. ஒரு காலகட்டத்தில் காளஹஸ்தியில் இருந்த வேட்டுவர் கொங்கு நாட்டில் குடியேறியுள்ளனர். இதனால், வேட்டுவர் காளஹஸ்தி வேந்தரிடையே சுமுகமான உறவும் இருந்தது.

பழைய கோட்டைப் பட்டக்காரர் செப்பேடுகளில் கார்வெளிவெளு (வேள்) வேட்டுவ முத்திரைக்காரர் ஒருவர் குறிக்கப்பெறுகிறார். வேட்டுவக் கவுண்டப் பட்டக்காரருள் ஒருவரான தலைய நாட்டு வள்ளல் கவுண்டர் என்பார் சுந்தரபாண்டிய தண்டெறி முத்துராஜா என்று மெக்கன்ஸியால் குறிக்கப்பெறுகிறார். வேட்டுவக் கவுண்டருள் கொங்கர் செல்வ முத்தரையன், சோழ முத்தரையன், சிய முத்தரையன், சேந்த முத்தரையன் முதலானோர் குறிக்கப்படுகின்றனர். கோபி வட்டம் கொங்கர் பாளையத்தில் இன்றும் பெரும் அளவில் முத்தரையர் வசிக்கின்றனர். திருச்சி மாவட்டம், திருச்சி வட்டத்திலும் (குறிப்பாக

வடசேரிப் பகுதி) குளித்தலை வட்டத்திலும் வாழ்ந்து வருகின்ற ஊராளிக் கவுண்டர்கள் முத்தரையர், கண்ணப்பர் குலவலையர் என அழைக்கப்படுகின்றனர். கொங்கு நாட்டின் பல பகுதிகளில் கண்ணப்பருக்கு வழிபாடு நிகழுங்கால் முத்தரையர் முதலுரிமை பெறுகின்றனர். இவற்றை நுண்ணிதின் ஆராய்ந்து பார்க்குங்கால் வேட்டுவருக்கும், முத்தரையர்க்கும் ஏதோ ஒருவிதமான நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதனை ஊகிக்கலாம். ஒருவேளை இவர்கள் இருவரும் ஓர் இனத்தவராகவும் இருக்கலாமோ? என்ற ஐயமும் ஏற்படுகிறது.

வேட்டுவரின் பிற பெயர்கள்

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி, வேட்டுவக் கவுண்டர் மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கவுண்டர், காடவராயன், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், காங்கயன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டி, ராயர், வள்ளல், கொங்கு ராயர், ஊர்க்கவுணடர், கங்கதிராயர் மற்றும் பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தினர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். வேட்டுவ வேந்தர்களோ பல்லவராயர், பூவலராயர், சந்தனராயர் மற்றும் நரசிங்கராயர் முதலான பட்டப் பெயர்களைப் பூண்டிருந்தனர் என்பதனைக் குறிப்பு நாட்டுச் செப்பேட்டால் அறியலாம்.

வேட்டுவர்களின் குலப்பிரிவுகள்

> **கொங்குநாட்டு வேட்டுவக் கவுண்டரிடையே பல பிரிவுகள் உள்ளன. இவர்களிடையே, வேட்டுவர் வேடர் காவிலுவர் (காவலர்) மாவிலுவர் (மாவலர்) பூவிலுவர் (பூவலர், பூலுவர்)**

எனும் பெரும் பிரிவுகள் இருந்தனவென்று இரா. நாகசாமி கூறுகிறார் 3 . காவலர் என்போர் நாடுகாவல் தொழிலில் ஈடுபட்டிருந்தனர் போலும். இவர்களே முத்தரையர் ஆகலாம். பூவிலர் நிலம் தொடர்பான அதாவது, வேளாண்மை புரிந்தனர். மாவிலர் என்போர் பெரும் வலிமை

படைத்தவர்; அதாவது போர்த்தொழிலில் ஈடுபட்டவர் எனலாம். இவைகள் தொழில் அடிப்படையில் ஏற்பட்ட பிரிவுகள் ஆகும்.

வேட்டுவக் கவுண்டர்கள் குலம் அடிப்படையிலும் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தினர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடிபெயர்ந்தனரோ அந்த ஊரின் பெயரைத் தமது குலப்பெயராகக் வைத்துக் கொண்டனர். சிலர் பறவைகள், விலங்குகள், மரம், செடி, கொடி, வீரம் மற்றும் பண்பு ஆகியவற்றையும் தமது குலப்பெயர்களாகக் கொண்டனர்.

வீரப்பெருங்குடியினரான வேட்டுவரிடையே பல குலங்கள் ஏற்பட்டன. இவை எத்தனை என்பதனை நாம் அறுதியிட்டு உறுதியாகக் கூறவியலாது. எனவேதான் வேர் வகையை எண்ணினாலும், வேட்டுவர் வகையை எண்ணமுடியாது எனும் முதுமொழியும் கூறப்பட்டுள்ளது. பழமங்கலம் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள கரைய குலச் சொக்கனேந்தல் என்னும் பெயர் மூலம், குலம் என்னும் சொல் வேட்டுவர் இனத்தில் பண்டைய காலத்திலேயே வழக்கில் இருந்துள்ளது என்பதனை உறுதிபடுத்துகிறது. சான்றாக, கரூர் வேட்டமங்கலம் ஊர் கல்வெட்டில் பூலுவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த சோழன் என்பவனின் நில எல்லைகளும், குடுமி வேட்டுவ குலத்தைச் சேர்ந்த சிறுவன் என்பவனின் நில எல்லைகளும் கூறப்பட்டுள்ளது 4 . கொங்கு மற்றும் கோனாட்டுப் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுகளில் குடும, குடுமி என்ற சொல் குடுமி வேட்டுவ குலத்தைக் குறிக்கும் .

‘சோழியன் கரை ஒன்றுக்கும் அந்துவ வேட்டுவரில் சிறுவன் கரை ஒன்றுக்கும் மேற்படி நச்சுளி வேட்டுவரில் சிறுவன் கரை ஒன்றுக்கும் குறுங்காடை வேட்டுவரில் சின்னன் கரை ஒன்றுக்கும்.’ (ஈரோடு கல்வெட்டு, கி.பி. 1538, திருமலை நாயக்கர்)

அந்துவ வேட்டுவர் - அந்துவ வேட்டுவ கூட்டம், நச்சுளி வேட்டுவர் - நச்சுளி வேட்டுவ கூட்டம்

குறுங்காடை வேட்டுவர் - காடை வேட்டுவ கூட்டம் (குறும்பூழ் - காடை) போன்ற கூட்டப் பெயர்களை கூறுகிறது.[5] களப்பிரர் ஆட்சியை நீக்குவதற்காக வேட்டுவ பாளையகாரர்கள் (வெங்கல நாடு, மணலூர் நாடு, தலையூர் நாடு) பெரும்பாணபாடி நாட்டில் இருந்து கரூர் பகுதிக்கு வந்த மாவலியர் பிரிவைச் சேர்ந்த வேட்டுவ குலத்தவர்கள் (புன்னாடி வேட்டுவ குலம், சாந்தப்படை வேட்டுவ குலம்) ஆவார்கள். மேலும்

உரிமைப் படை வேட்டுவ குலத்தவரும் மாவலியர் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று திருவெஞ்சமாகூடல் கல்வெட்டுகள் கூறுகிறது. வீரசேனாதியார் என்பவன் வேட்டுவ இளவரசர் படையுடன் போரிட்டு இறந்தான் என்ற செய்தியைத் தரும்புரிக் கல்வெட்டு கூறுகிறது.[6] இக்கல்வெட்டு வட்டெழுத்தில் எழுதப்பட்டிருப்பதையும், மெய்யெழுத்து புள்ளியுடன் இருப்பதையும் அறியமுடிகிறது.

வேட்டுவர் சமூகப் பணிகள்

கரடி வேட்டுவர் என்னும் குலப்பிரிவினர் கோவிலுக்கு தங்களின் ஊர்களைக் கொடையாகக் கொடுத்த வரலாற்றை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது,[7]

> **“ஆளுடையார் தேவான்மிகளுக்கு நம் ஓலைகுடுத்து பரிசாவது திருவெஞ்சமாங்கூடல் ஆளுடையார்**
> **க்குத் திருவெஞ்சமாங்கூடலைக் குடுத்தம்”**

வேறொறு கல்வெட்டு வேட்டுவர் குலப் பெரியவர் ஒருவர் வாகீசுவரர் கோயிலுக்கு அர்த்த மண்டபத்தையும், மகா மண்டபத்தையும் புதுப்பித்து, தேவையான இடங்களில் காறை பூசி, நிர்மாலியத் தொட்டி அமைத்துள்ளார்.[8] இவ்வாறு பல கல்வெட்டுகள் வேட்டுவர்கள் கோவிலுக்குக் கொடையாக நிலங்களையும், கழஞ்சுப் பொன்களையும் கொடுத்ததையும் கூறுகின்றன.

முடிவுரை

வேட்டுவர்களின் வரலாறு மற்றும் குலங்கள் பற்றி பல கருத்துகள் அறிஞர்களிடையே நிலவினாலும் கல்வெட்டுகள் மூலம் வேட்டுவர்கள் பற்றிய செய்திகள் அறிந்துக்கொள்ள முடிகின்றன. மேற்கோள் குறிப்புகள்

1. ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். ப. 207
2. குரு குல வரலாறு. ப.3
3. பாளையப்பட்டுகளின் வரலாறு. ப.192
4. தென்னிந்திய கோயிற் சாசனங்கள் (தொகுதி- 1). ப. 692
5. வேட்டுவர் சமூக ஆவணங்கள். ப.64
6. தருமபுரி கல்வெட்டு (தொகுதி- 1). ப.46

7. வேட்டுவர் சமூக ஆவணங்கள். ப.74

8. மேலது. ப.62

துணைநூற் பட்டியல்

1. வேட்டுவர் சமூக ஆவணங்கள், செ.இராசு, கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை 34, மின்னவேட்டுவபாளையம் ரோடு, சலங்கபாளையம் (அ.நி), கவுந்தப்பாடி-638 455

2. ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், திரு.வி. கனகசபை

3. பாளையப்பட்டுகளின் வரலாறு (தொகுதி-1), டாக்டர்.இரா. நாகசாமி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை,1981

4. தென்னிந்திய கோயிற் சாசனங்கள், T.CHANDASEKHARAN, Government Oriental Manuscripts Library, Madras.

குற்றாலக் குறவஞ்சியில் வேட்டுவர்

பா.மோகனா
உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை),
பிளாட் எண்:39,
நேதாஜி தெரு, கதிரவன் அவென்யூ,
குன்றத்தூர் சென்னை- 69
அலைபேசி எண்: 6369720082

முன்னுரை

வேடுவர்கள் பழம்பெருமை மிக்க குடியில் தோன்றியவர்கள். அவர்கள் பற்றிய குறிப்புகள் சிற்றிலக்கியங்களில் ஒன்றான குற்றாலக் குறவஞ்சியில் காணலாம். வேடர், வேட்டுவர், என்று இலக்கியங்களில் இவர்கள் சிறப்பிக்கப்பட்டவர்கள். இத்தகைய வேட்டுவரின் வாழ்வியல் நிலையைச் சிறப்பிக்கும் குற்றாலக் குறவஞ்சி, குறவஞ்சி நூல்களில் சிறந்தது எனலாம். இது குற்றால மலையில் வாழ்ந்த வேட்டுவர்களின் வாழ்வியலைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

வேட்டுவர்களின் தோற்ற நலன்

வேடுவர்கள் பழந்தமிழ்க் குடியினர் ஆவர். இவர்கள் குறிஞ்சி நிலத்தினர் கரடு முரடான மலைப்பகுதியைச் சார்ந்தவர்கள். ஆண்மகன் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தான். ஆண்களுக்குப் பலவிதமான பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன. அவை சிங்கன், நூவன், மல்லன், ஏகன், நாகன், எலியன், புலியன் போன்றவை. இவர்கள் வேறுகுலத்தில் பெண் கொடுக்கவும் மாட்டார்கள். பெண் எடுக்கவும் மாட்டார்கள். மேலும் அவர்கள் ஒருமுறை நட்பு கொண்டால் எக்காரணம் கொண்டும் இடையில் முறித்துக் கொள்ளாப் பண்பாளர்களாகத் திகழ்ந்தனர்.

பெண்டிரின் அழகு நலன்

பெண்டிர்கள் கருமை நிறத்தவர்கள். அவர்கள் வில் போன்ற நெற்றியில் கஸ்தூரிப் பொட்டு வைத்தும், கூந்தலுக்கு வெட்சிப்பூவைச்

சூடியும், கண்களுக்கு அஞ்சனமை தீட்டியும், கைகளில் மந்திரக்கோல் ஏந்தியும், அக்கத்தில் கூடையை இடுக்கிக் கொண்டும், மார்பில் குன்றிமணி, பாசிமணி, வக்காமணி போன்ற மணிகளை அணிந்து கொண்டும் நெற்றியில் திருநீறு பூசியும், கால்களில் சதங்கை அணிந்தும், காதுகளில் காதணி அணிந்தும், நாசியில் முத்து புல்லாக்கு பொருத்தியும் அழகுடன் காணப்பட்டனர்.

> **"குலமணிப் பாசியும்குன்றியும்புனைந்து..**
> **மொழிக்கொருபசப்பும் முலைக்கொருகுலுக்கும் விழிக்கொரு**
> **சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாய்"** (குற்றால.குற. ப.20 1-5)

இடை கொடி போன்றும் பற்கள் முல்லை அரும்புகள் போன்றும் கண்கள் குவளை மலர்கள் போன்றும் காணப்பட்டன. கூந்தல் எப்பொழுதும் மணம் மிக்கதாகத் திகழ்ந்தது. இவ்வாறு அழகுக்குப் பெயர் பெற்ற கொல்லிப் பாவையைக் காட்டிலும் பெண்டிர் பேரழகுடன் காணப்பட்டனர்.

வேடுவர்களின் தொழில்

பெண்டிர் குறிப்பு சொல்லும் தொழிலில் வல்லவர்களாகவும் மனதைரியம் உடையவர்களாகவும், பல நாடுகளுக்குத் தனியே சென்று குறிப்பு சொல்லிப் பாராட்டும் பரிசிலும் பெற்றவர்கள். ஆண்களுக்கு வலது கையையும், பெண்களுக்கு இடது கையையும் பார்த்துக் குறிப்பு சொல்லுவர். அவர்கள் ஜக்கம்மா தேவியையும் குறளிப் பேயையும் வசப்படுத்தி குறிப்பினைக் கணிப்பர். எதிர்காலத்தையும் கணித்துச் சொல்லும் ஆற்றல் கொண்டவர்கள். மனக்குறிப்பு, உடற்குறிப்பு, கைக்குறிப்பு, சொற்குறிப்பு போன்ற பல வகையான குறிகளைச் சொல்வதில் வல்லவர்களாகவும் திகழ்ந்தனர்.

குறிப்பு சொல்லி பெண்டிர் பெற்ற பரிசுப் பொருள்கள்

சிறப்பாகக் குறிப்பு சொல்லி முடித்தபின் பெண்டிர் பலவிதமான பரிசில்களைப் பெற்றனர். முத்திரை மோதிரமும், பொன் வளையலும், பொற்கரணமும், பொன் நெளியும், கடகக் காப்பும், பொன் மாலையும், மாணிக்க மாலையும் பரிசாகப் பெற்றனர். இவை தவிர வயிற்றுக்கு உணவும், வெற்றிலையும், வெட்டுப் பாக்கும், சீனதேசத்துப் புகையிலையும் அன்புப் பரிசாகப் பெற்றனர்.

வெளி மாநிலங்களில் பெற்ற பரிசுப் பொருள்கள்

சேரநாட்டிலிருந்து சிலம்பும், கலிங்க நாட்டிலிருந்து முறுக்குத் தண்டையும், பாண்டிய நாட்டின் மதுரையிலிருந்து பாடகமும், திருநெல்வேலியிலிருந்து சல்லாத்துணியும், சோழ நாட்டின் தஞ்சாவூரிலிருந்து அரைஞாண்கொடியும், காயல்பட்டினத்தில் இருந்து முத்துமணியும் குட்டநாட்டு காயங்குளத்தில் இருந்து கழுத்துச் சரடும் பரிசில்களாகப் பெற்று மகிழ்ந்தனர்.

வேட்டுவரின் வீரத் தோற்றம்

வேடுவர்கள் வீரம் மிக்கவர்கள்; அச்சம் என்பதை அறியாதவர்கள். காடு மேடுகள் எல்லாம் சுற்றித் திரிந்தவர்கள். கொடிய வனங்களில் அச்சமின்றிச் சென்று வேட்டையாடுபவர்கள். அவர்களைக் கண்டு கொடிய விலங்குகளான சிங்கம், புலி, கரடி போன்றவை அஞ்சி ஓடின. தொக்காக வரிந்திறக்கி தொடர்புலியைக் கண்டுறுக்கித் தூணி தூக்கி கைக்கான ஆயுதங்கள் கொண்டு சில்லம் கோலெடுத்து கண்ணி சேர்த்து (குற்.குற ப.2 1-6)

வேட்டுவரின் வேட்டைத் தொழில்

வேட்டையாடுதலில் நிபுணர்களான வேட்டுவர்கள் வேட்டை நுட்பங்களை நன்கு அறிந்தவர்கள். வேட்டை அவர்களின் குலத்தொழில் ஆகும். விளைநிலங்களிலும் நீர்நிலைகளிலும் கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடித்தனர். அவர்கள் சிங்கம் போல் பாய்ந்து பறவைகளைத் துல்லியமாக வேட்டையாடிப் பிடித்தனர். இவர்கள் மனிதர்களின் தலைமுடியைக் கத்தரித்து, கண்ணிகளாகத் திரித்து, பொறிவைத்துப் பறவைகளைப் பிடித்தனர். வேட்டையின்போது தோலினால் செய்த முழவு என்ற கருவியை முழக்கினர். பறவைகளை அழைக்க அப்பறவைகள் போன்றே ஒலி எழுப்பினர்.

“மலர்ந்த கண்ணியைக் கவிரழ்த்துக் குத்தினால் வக்காவும் படுமே குளுவா வக்காவும் படுமே. உலைந்த கண்ணியை இறுக்கிக் குத்தினால் உள்ளானும் படுமே குளுவா உள்ளானும் படுமே”. (குற்.குற ப.16 3-6) அவர்கள் சாதாரணக் கண்ணியைப் பயன்படுத்தி ஊர்க்குருவிகளையும் பெரிய கண்ணுடைய கண்ணிகளைக் கீழே நெருக்கி வைத்து காக்கை, வக்காய் போன்ற பறவைகளையும் பிடித்தனர்.

வேடுவரின் வேட்டைத் தொழில் சிறப்புகள்

"முன்னாட் படுத்த பரும்பெருமட் சாளியை மூத்தநயினார் மொடுவாய்க் கொடுபோனார் பின்னான் தம்பியார் ஆடும் மயிலையும் பன்னரும் அன்னத்தை நன்னகர் ஈசர்". (குற்.குற ப.14 1-5)

விநாயகப் பெருமான் பெருச்சாளியைப் பிடித்தார். முருகக்கடவுள் மயிலைப் பிடித்து தன் வாகனம் ஆக்கினார். சிவன் அன்னப் பறவையைப் பிடித்து பிரம்மனுக்கு வாகனமாக்கினார். இவ்வாறு தெய்வங்களே பறவைகளைப் பிடித்து வாகனங்கள் ஆக்கியதால் தான் பறவைகளைப் பிடித்தல் சிறுமையன்று என நம்பினர்.

வேடுவரின் சிறப்புத் திறன்கள்

வேடுவர்கள் வேட்டையாடும்போது பறவைகளும் விலங்குகளும் ஓடாதிருக்க வசிய மருந்தும், பார்ப்பவர் தான் விரும்பிய தோற்றத்தை நல்கும் கண்களுக்கு கண்கட்டு வித்தையும் அறிந்திருந்தனர். பெரிய மலையையும் நீராகக் கரைந்து வழிந்தோடச் செய்யும் மருந்து அவர்கள் வசமிருந்தது. எவர் கண்ணுக்கும் தெரியாமல் எங்கு வேண்டுமானாலும் சென்று வரும் மந்திரமும், வான்வழியே பறந்து செல்லும் சித்து வித்தைகளும், அவர்களுக்கு அத்துபடி எனலாம்.

வேடுவரின் இறைப்பற்று

வேட்டுவர்கள் எப்பொழுதும் இறைவனைத் தொழ மறவாதவர்கள். குற்றாலக் காவல் தெய்வத்தையும் கருப்பசாமியையும் முருகக் கடவுளையும் துர்க்கை அம்மனையும், எக்கால தேவியையும் வழிபட்டு வந்தனர்.

முடிவுரை

மலைகளிலும் காடுகளிலும் நீர்நிலைகளிலும் அலைந்து திரிந்து வேட்டையாடி தானும் உண்டு பிறருக்கும் அளித்து மக்களுக்குக் குறிப்பு சொல்லி அவர்களின் கவலைகளைப் போக்கிய பண்டைய தமிழ் குடிகளான வேட்டுவர்களின் வாழ்வியலைச் சித்திரித்துக் காட்டும் குற்றாலக்குறவஞ்சி தமிழ் இலக்கியத்தின் மணிமுடியாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை.

துணைநூற் பட்டியல்

1. குற்றாலக் குறவஞ்சி, புலியூர் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை(2009)

2. குற்றாலக் குறவஞ்சி, புலியூர் கேசிகன் பாவை பப்ளிகேஷன் (2014).

குறுந்தொகையில் வேட்டுவர்கள்

முனைவர் அ. ஸ்ரீ ஜனனி,
உதவிப் பேராசிரியர்,
மதுரை.

முன்னுரை

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான குறுந்தொகை நான்கு முதல் எட்டடிகள் வரை அமைந்த சிறந்த நூலாகும். இந்நூல் காலத்தால் முந்தையது. இந்நூல் எட்டுத்தொகையில் உள்ள அகநூலாகும். நானூறு அகவற்பாக்கள் கொண்டுள்ளது. குறுந்தொகையில் வேட்டுவர்கள் குறித்து ஆராய்ந்து உரைக்கும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

வேட்டுவர்கள்

வேட்டு+ வ்+அர்= வேட்டுவர். குறிஞ்சி நிலத்தின் குறிப்பிட்ட மாந்தர் வேட்டுவர் எனப்படுவர். வேட்டுவர் எனப்படுவோர் வேட்டையாடி உணவு உண்ணும் வழக்கத்தை உடையவர்கள். காடுகளில் வசிப்பவர்கள் வேடர் எனப்பட்டனர்.

> **“வேட்டுவன் - வேடர், வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்டவர்” என க்ரியாவின் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. (பக்கம்.1306, க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி)**
>
> **“கானவர்- வேடர் என்று தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. கானவர்- குறிஞ்சி (பக்கம்.30, தமிழ் அகராதி)**

தொல்காப்பியத்தில் வேட்டுவர்

தொல்காப்பியம் தமிழின் முதல் நூலாகும். இந்நூலில், “ஆயர், வேட்டுவர், ஆடூஉத் திணைப்பெயர்” (தொல்காப்பியம் - பொருளதிகாரம்- அகத்திணையியல்-23) என, குறிஞ்சிநில மக்களின் பெயராக வேட்டுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க நூலான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் அக்கால சமுதாயத்தை எடுத்துரைக்கின்றன.

குறுந்தொகையில் வேட்டுவர்

குறிஞ்சி நிலத்தில் வாழும் காதலர்களாக, தினைப்பயிரை விவசாயம் செய்து வாழும் மக்களாக, கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்து உணவு உட்கொண்டு வருபவர்களாக எடுத்துரைக்கப் பட்டுள்ளனர். வேடர்கள், உணவுப் பொருளின் உற்பத்தியைப் பெருக்க, புதர்களை, அழித்து விளைநிலமாகப் பண்படுத்தி, உணவுத் தேவையைப் பெற்றனர்.

“உணவை நாட்டில் அனைவருக்கும் எட்டச் செய்தல் ஒரு சமூகத் தலைமையின் அடிப்படைக் கடமையா கிறது” (பக்கம் 82, சங்க இலக்கியக் கட்டுரைகள்)

தலைவி கூற்று

"எறும்பின் அளையின் குறும்பர் புனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடுவில் எயினர், பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப , அவர் தேர் சென்ற ஆறே"
(குறுந்தொகை-12)

என்னும் பாடலில், தலைவன் சென்ற பாதை எறும்பு துளைத்த குழிகளைப் போன்று சிறு சிறு முறைகள் பலவற்றைக் கொண்ட பாறை வழி ஆகும். சூடாக இருக்கும் பாறைகள் மீது ஏறி, வேடர் தம் வில்லுக்கான அம்புகளைக் கூர்மைபடுத்திக் கொண்டு இருப்பர். தம் அம்புகளைக் கொண்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக இவ்வாறு செய்வர். இதன் மூலம் வேட்டுவர்தம் வில்தொழில் அறியப்படுகிறது.

தலைவன் கூற்று

“மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே
பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்., கல்கெழு கானல் நல்குறு மகளே” (குறுந்தொகை-71)

என்னும் பாடலில், தேமலை உடைய அழகு கொண்ட வேடர்மகள் தலைவன் காதல் நோய் தீர்க்கும் மருந்தாகவும், பெருஞ்செல்வத்திற்குச் செல்வமாகவும் விளங்குகிறாள் எனத் தலைவன் கூறுவதாக இப்பாடல்

அமைந்துள்ளது. இப்பாடலில் வேடர் மகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

தோழி கூற்று

"மரங்கொல் கானல் புனம் குளிர்ந்து வித்திய
பிறங்குகுரல் இறடி காக்கும் புறம் தாழ்
அம்சில்ஓதி , அசையாமல், கொடிச்சி" (குறுந்தொகை-214)

என்னும் பாடலில், மரங்களைக் கானவன் சீர்படுத்தி, நிலத்தை உழுது தினையை விதைத்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. உணவுப் பொருளை உற்பத்தி செய்யும் திறன்கொண்ட கானவன் வேட்டுவன் என அறியமுடிகிறது

தோழி கூற்று

"குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனம் உண்டு கடித்த பைங்கண் யானை
நறுந்தழை மகளிர் ஓப்பும் கிள்ளையொடு
குறும்பொறைக்கு அணவும் குன்ற நாடன்
பணிக்குறை வருத்தம் வீட,
துணியின் எவனோ தோழி" (குறுந்தொகை-333)

என்னும் பாடலில், அம்பும் வில்லும் உடைய வேடர் , தினையை உணவாக உடைய காட்டு யானையிடம் இருந்து பாதுகாத்தனர் என இங்கு கூறப்பட்டுள்ளது. இப்பாடலில், காட்டில் வாழும் வேடர் தம் உணவான தினை சார்ந்து வாழ்ந்தமை கூறப்பட்டுள்ளது.

தோழி கூற்று

"இன்று யாண் டையனோ தோழி! குன்றத்துப் பழங்குடி
அகழ்ந்த கானவன் கிழங்கினொடு,
கண்அகன் தூமணி, பெறூஉம் நாடன்" (குறுந்தொகை-379)

என்னும் பாடலில், குன்றில் பழையபடி குழியைத் தோண்டிய வேடருக்குக் கிழங்குடன் தூய கற்களும் பெறுகின்ற மலைநாடன் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு வேடர்கள் உணவிற்காக கிழங்கு அகழ்தலும் செய்தமை குறிப்பிடத்தக்கது.

தலைவி கூற்று

"பலவில் சேர்ந்த பழம்ஆர் இனக்கலை
சிலைவிற் கானல் செந்தொடை வெரீஇ,
செருஉறு குதிரையின் பொங்கி, சாரல்
இருவெதிர் தயங்கப் பாயும் " (குறுந்தொகை-385)

என்னும் பாடலில், பலா மரத்தின் அடியில் காணும் பழங்களை உண்ண வரும் காட்டுக் குரங்குகள் வேடர்களுக்குப் பயந்து குதிரைகள் போல மூங்கில் மரத்தில் தாவும் என்று கூறப்பட்டுள்ளது. இங்கு வேடர்கள் பலாபழங்களை உணவாக உண்டு வாழ்ந்ததை அறிந்து கொள்ளலாம்.

தொகுப்புரை

குறிஞ்சிநில மக்களின் பெயராக வேடர் என்பது குறிப்பிடப் பட்டுள்ளது. குறுந்தொகையில் வேட்டுவர், குறிஞ்சி நிலத்தில் வாழும் காதலர்களாக, தினைப்பயிரை விவசாயம் செய்து வாழும் மக்களாக, கிழங்கு வகைகளைத் தோண்டி எடுத்து உணவு உட்கொண்டு வருபவர்களாக, வில்லுக்கான அம்புகளைக் கூர்மைப்படுத்தி வேட்டையாடுபவர்களாக, காட்டைச் சீர்படுத்தி நிலத்தை உழுது, தினையைப் பயிரிட்டமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. காட்டில் வாழும் வேடர் தம் உணவான தினை சார்ந்து வாழ்ந்தமை கூறப்பட்டுள்ளது. வேடர்மகள் பற்றிய குறிப்பும் இக்குறுந்தொகையில் காணப்படுகிறது. வேடர்கள் பலாப்பழங்களை உணவாக உண்டு வாழ்ந்ததையும் குறுந்தொகையின்வழி அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. சுப்பிரமணியன் ச.வே., குறுந்தொகை - தெளிவுரை, மெய்யப்பன், பதிப்பகம், 2009, திசம்பர்.
2. சுப்பிரமணியன் ச.வே., தொல்காப்பியம் - தெளிவுரை, மணிவாசகர், பதிப்பகம், 1999, சூலை.
3. சௌந்தரபாண்டியன் எஸ்., தமிழ் அகராதி, 1995
4. மீனாட்சி சுந்தரம், சங்க இலக்கியக் கட்டுரைகள், மெய்யப்பன் பதிப்பகம், டிசம்பர் 2007.
5. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா பதிப்பகம், சென்னை 2010.

கம்பர் காட்டும் வேடர்குலச் செம்மல் குகன்

முனைவர் சு. அட்சயா
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
கோயம்புத்தூர் - 600 028.
அலைபேசி: 9500331497
shangeetha97@gmail.com

முன்னுரை

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான் ஒரு வேடன். வடநாட்டுக் கங்கை கரையிலே பிறந்தான் மற்றொரு வேடன். அவ்விருவராலும் வேடர் குலம் பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும், கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றுகின்றது. இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப் புகழ் பெற்றனர். காளத்திநாதன்பால் வைத்த அன்பினால் தன் கண்ணையும் பெயர்த்தெடுத்த கண்ணப்பன் பெருமை, தமிழ் நாடெங்கும் பரவி நின்றது. எல்லையற்ற அன்பிற்கு அவ்வேடர் பெருமானே எடுத்துக்காட்டினார். இவ்வாறு சிறப்பிற்குரிய வேடர்குலத் தலைவனான குகனைப் பற்றிய சிறப்புகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேடர் அல்லது வேடுவர்

வேடர் அல்லது வேடுவர் என்போர் சாதாரண மக்களின் வாழ்வியல் தன்மைகளில் இருந்து வேறுபட்டவர் களாக அல்லது சாதாரண மனித வாழ்க்கைக்கு இன்னும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளாதவர்களாக வேட்டையாடிப் புசிக்கும் வாழ்வைப் பழக்கமாகக் கொண்டு காடுகளில் வசிப்பவர்களைக் குறிக்கும் பெயராகும் வேட்டையாடி காடுகளில் வசிப்போர் வேடர் ஆவார்.

மனித வர்க்கம் படிப்படியான வளர்ச்சி நிலையை அடையும் முன்னர், உலகில் உள்ள அனைத்து மக்களுமே ஒரு காலகட்டத்தில் வேடர்களாக இருந்து வளர்ச்சி நிலையை அடைந்தவர்கள் என்றே கருதப்படுகிறது. காடுகளில் வேட்டையாடிப் புசிக்கத் தொடங்கிய மனிதன், முதல் படிநிலையாக ஆற்றங்கரைகளில் குடில்கள் அமைத்து விவசாயம் செய்யவும், குடில்கள் அமைத்து வாழவும், செல்லப்பிராணிகளை வளர்க்கவும் பழகினார் என்றும், அதன் பின்னரே கிராமங்களாகத் தோற்றம் பெற்று கிராமங்களின் எண்ணிக்கை அதிகரித்து நகரங்களும் நாடுகளும் தோற்றம் பெற்றன என மனிதனின் படிநிலை வரலாறு காட்டுகின்றது.

கண்ணப்பரும் குகனும்

**“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் அன்னொப்பில்
என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப்ப ணித்தென்னை வாவென்ற
வான் கருணைச் அண்ணப்பொன்
நீற்றற்கே சென்றூதாய் தோத்தும்பீ”**

என்று வண்டை நோக்கிப் பாடும் பான்மையில் கண்ணப்பனது எல்லையற்ற அன்பின் திறத்தினை மாணிக்கவாசகர் நன்கு விளக்கியுள்ளார். திருவாசகத்திலும், தேவாரத் திருப்பாசுரங்களிலும் கண்ணப்பனின் பெருமை பேசப்படுவதலால் சைவசமயத்தை நிலை நிறுத்திய நால்வருக்கும் அவன் முந்தியவன் என்பது நன்கு விளங்குகின்றது. காளத்தி நாதனை வணங்கிய திருஞானசம்பந்தர் கும்பிட்ட பயன் காண்பார் போல் வேடர் பெருமானாகிய கண்ணப்பனைக் கைதொழுதாரென்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

கவிக்கு நாயகராகிய கம்பர் இராமகதையை வடமொழிக் காவியத்தினின்றும் எடுத்துக் கொண்டாரேனும் அதனைத் தமிழ்நாட்டுக்கு ஏற்ற முறையில் ஒதுக்கி இனியதொரு விருந்தாக அளித்துள்ளார். இராமனிடம் அன்பு பூண்ட கங்கை வேடனை உருவாக்கும் பொழுது, கம்பர் உள்ளத்தில் காளத்தி வேடன் வடிவம் கனிந்து இலங்கிற்று. காளத்தி வேடனைக் கருவாகக் கொண்டு கங்கை வேடனான குகனை அவர் வார்த்து வடித்துள்ளாரென்று தோன்றுகிறது.

கோசலநாட்டு இளவரசனாகிய இராமன், தாயின் சொல்லைத் தலைக்கொண்டு, தனக்குரிய நாடு துறந்து கங்கைக் கரையை வந்தடைந்தான் என்று அறிந்த குகன் அக்குரிசிலைக் காணப் புறப்பட்டான். வான்மீகி முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலம், ஓர் அரசர் மற்றோர் அரசனைக் காண எழுகின்ற தன்மையில் அமைந்திருக்கின்றது. ஆனால் கம்பர் ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைக் குறிப்பிடுகிறார்.

"தேவா நின்கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்"

என்று குகன் கூறுவதன் வாயிலாக அறியமுடிகின்றது. காளத்தி வேடன் தனக்கினிய இறைச்சியே தன் தலைவனாகிய இறைவனுக்கும் இனியதாகும் என்று எண்ணி, அதனை எடுத்து ஊட்டியவரே, குகன் தனக்கினிய கங்கையாற்று மீனையும் கொம்புத்தேனையுமே எடுத்துக் கொண்டு சென்றான். அவ்விரண்டையும் இராமன் திருவடி முன்பு வைத்து, ஐயனே! தேனும் மீனும் திருத்திக் கொணர்ந்தேன். தேவரீர் திருவமுது செய்தருளல் வேண்டும் என்று இறைஞ்சி நின்றான். அச்செயல் நிகழும்போது இராமனுடன் அருகில் இருந்த மாதர் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர்.

அவர்கள் குகனது மனப்பான்மையை அறியாதவராய், தகாத பொருள்களை வேடன் எடுத்து வந்து அபச்சாரம் செய்து விட்டான் என்றெண்ணி வெறித்து நோக்கினர். அவர்கள் மனதில் நிகழ்ந்த கருத்தினை அறிந்த இராமன்,

"அரியதாம் உவப்ப உள்ளத்து
அன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த என்றால்
அமுதினும் சீர்த்த வன்றே"

என்று விருத்த மாதரைத் தெருட்டியருளினான். இதற்கு நேரான செயல் கண்ணப்பன் சரித்திரத்தில் உண்டு. கண்ணப்பனுக்கு இனிய காளத்திநாதனைச் சிவகோசரியார் என்றும் வேதியர் முறைப்படி பூசை செய்து வந்தார். கண்ணப்பன் இறைச்சியைக் கொண்டு திருக்கோயிலில் இட்டதைக் கண்டு செய்வ தொன்றறியாதவாறு கவலை கொண்டிருந்தார். அதை உணர்ந்த இறைவன் கனவிலே தோன்றி,

“அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம்
நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம்
நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலையில்லா றறிநீயென்
றருள் செய்வார்”

இது சேக்கிழார் பெருமான் திருவாக்கு.

காளத்திநாதன்பால் அன்பு பூண்ட கண்ணப்பனைப் போலவே குகனும் இராமனைப் பிரிந்திருக்கலாற்றாத மனப்பான்மை பெற்றான். அந்தி மாலை வந்தடைந்த பொழுது இராமன் குகனை நோக்கி, அப்பா இன்றிரவு உன் ஊருக்குச் சென்று நாளைக் காலையில் கங்கை ஆற்றைக் கடப்பதற்குப் படகுகள் கொண்டு வருக என்று சொல்லிய பொழுது, குகனுடைய மனம் அனலிடைப்பட்ட மெழுகு போல் உருகுவ தாயிற்று. என் ஐயன், என் ஆண்டவன், என்னைப் போ என்றானே. அவனை விட்டு நான் எவ்வாறு போவேன்? அவனுடனிருத்தலே எனக்குப் பேரின்பம். அவனைப் பிரிந்திருத்தல் பெருந்துன்பம் என்று எண்ணி, இராமனை நோக்கி ஐயனே? நான் போகலாற்றேன் ஈண்டிருந்து என்னால் இயன்ற தொண்டு செய்வேன் என்றான்.

இராமனும் குகனும்

இராமனின் சிறப்பியல்புகளைப் போற்ற முற்படும்பொழுது அவனது சகோதரத் தன்மையைப் புகழாதவர்கள் இல்லை. அவ்வாறு இராமன் நட்பும் சகோதரத்துவமும் பாராட்டிய முதல் நபர் - குகன். இராமனின் நற்குணத்தை உணர்ந்த குகன், அவன் மீது பேரன்பு கொண்டவனாய் இருந்தான். குகனின் உன்னதமான உள்ளத்தை அறிந்த இராமன், அவனைத் தன் உடன் பிறந்த சகோதரனாக ஏற்றான் என்பதை,

“குகனொடும் ஐயவர் ஆனோம்: பின், குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனோம்: எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்:
புகழ் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.”
(யுத்தகாண்டம், வீடணன் அடைக்கலப் படலம், பா.452)

இப்பாடலின் வாயிலாக இராமன் தன் சகோதரர்களை வேடர் குலத்தைச் சார்ந்த ஒருவனையும், வானர இனத்தைச் சார்ந்த ஒருவனையும், அரக்கர் குலத்தைச் சார்ந்த ஒருவனையும் ஏற்றுக்கொண்டான். அவர்களுள் முதன்மையானவன் குகன். அத்தகு பெருமை கொண்டுள்ள குகனின் குணத்தைக் காணமுடிகின்றது.

சிருங்கிபேரநகர் தலைவன் குகன் (கங்கைக்கரை)

அயோத்தி நகரைவிட்டு வெளியேறிய இராமன், கானகம் நோக்கிப் பயணமாயினான். வழியில் முனிவர்கள் சந்தித்தான். பின்பு புனித நதியான கங்கையில் மூவரும் நீராடினர். கங்கை நதிக்கரையிலுள்ள சிருங்கிபேரமென்ற நகரமுள்ளது. இந்நகரின் அரசன் குகன்; தயரதச் சக்கரவர்த்தியின் குமாரருமான இராமன் கங்கைக் கரைக்கு வந்துள்ளான் என்பதையறிந்த குகன் அவனைக் காணவேண்டி தன் சுற்றத்தாரோடு அங்கே திரண்டு வந்தான். அன்பின் விளைவாய் இராமனுக்காகத் தேனும் மீனும் கொண்டு வந்ததை,

“சுருங்கிபேரம் எனத் திரைக் கங்கையின்
மருங்கு தோன்றும் நகர் உறை வாழ்க்கையான்
ஒருங்கு தேனொடு மீன் உபகாரத்தன்
இருந்த உள்ளலைக் காண் வந்து எய்தினான்.”
(அயோத்தியா காண்டம். கங்கைப் படலம். பா- 660)

என்ற பாடலின் வாயிலாக, இராமன் தங்கியிருந்த தவப்பள்ளியினை அடைந்தான் குகன். தான் வந்திருப்பதைத் தெரிவிக்கக் கூவினான். சத்தம் கேட்ட இலக்குவன் வெளியே வந்து குகன் யாரென்று விசாரித்தான். தன்னை அறிமுகம் செய்தான் குகன். அப்போது தன்னை நாய் என்று குறிப்பிட்டான். நாயைப்போல என்றும் நன்றி மறவாது இராமனுக்குத் தொண்டாற்றுவேன் என்று குகன் குறிப்பிடுவதை இராமனிடம் தெரிவித்தான். தம்பி, பின்னர் குகனை இராமனிடம் அழைத்துச் சென்றான். இராமனைக் கண்ட குகன், இராகவனைக் கண்ட மனமகிழ்ச்சியால் தரையில் விழுந்து வணங்கினான் என்பதை அறியமுடிகின்றது.

பிறகு தான் கொண்டு வந்த தேனையும் மீனையும் இராமனுக்கு அன்போடு வழங்கி மகிழ்ந்தான் குகன் என்பதை,

“இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன்: எல்லை ஈந்த
அருந்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன:; என்கொல் திரு உனர்ந்த என்ன
வீரன் விருந்த மாதவரை நோக்கி முறுவலன், விளம்பலுற்றான்
(அயோத்தியா காண்டம். கங்கைப்படலம்.பா- 666)

என்ற பாடலின் வாயிலாக அறிய முடிகின்றது. இராமன் சைவ உணவுகளை மட்டுமே உண்பவன். மாமிசத்தை உட்கொள்ள மாட்டான், இருப்பினும் குகன் அன்போடு வழங்கிய பொருளைக் கண்டு அங்கிருந்த தவசியரை நோக்கி இளநகை பூத்து பேசலுற்றான் என்பதை,

“அரிய தாம் உவப்ப உள்ளத்து அன்பினால் அமைந்த காதல்
தெரியக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்ந்த அன்றே?
பரிவினின் தழீஇய எண்ணின் பவித்திரம்: எம்மனோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனென் அன்றோ? என்றான்
(அயோத்தியா காண்டம். கங்கைப் படலம். பா-667)

என்ற பாடலின் வாயிலாக, பக்தியாலும் அன்பின் மிகையாலும் நீவிர் கொண்டு வந்த இப்பொருட்கள் அமுதத்தை விடவும் சிறப்பானவை. இவையே எம்போன்றோர்க்கு உரியவை என உள்ளத்து உவகையோடு அவற்றை ஏற்றான் இராமன் என்பதை அறியமுடிகின்றது. பின்பு சுற்றத்தாரோடு இருப்பிடம் சேரச்சொல்லி விடியற்காலையில் நாவாயோடு வருமாறு பணித்தான் என்பதையும் அறி முடிகின்றது.

தவக்கோளத்தில் இராமன் இருப்பதைக் கண்ட குகன் வருத்தமுற்று உன்னை பிரியாது சேவை செய்வேன் என்றான் என்பதை,

“கார்குலாம் நிறத்தான் கூற, காதலன் உணர்த்துவான், இப்
பார்குலாம் செல்வ! நின்னை இங்ஙனம் பார்ந்த கண்ணை
ஈர்கிலாக் கறிவனேன் யான் இன்னலின் இருக்கை நோக்கித்
தீர்கிலேன்: ஆனது ஐய செய்குவென் அடிமை என்றான்.
(அயோத்தியா காண்டம். கங்கைப் படலம். பா- 669)

என்ற பாடலின் வாயிலாக, குகன் கூறிய இவ்வார்த்தைகள் இராமனை நெகிழ வைத்தது. தன் மனைவி சீதையின் முகத்தையும் தம்பி இலக்குவன் திருமுகத்தையும் பார்த்து புன்முறுவல் பூத்தான். குகனை அன்றிரவு தம்மோடு தங்கும்படி கேட்டான் இராமன் என்பதை,

“கோதைவில் குரிசில் அன்னான் கூறிய கொள்கை
கேட்டான் சீதையை நோக்கி தம்பி திருமுகம் நோக்கி தீராக்
காதலன் ஆகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினும் இனிய நன்ப இருத்தி ஈண்டு எம்மொடு என்றான்”
(அயோத்திய காண்டம். கங்கைப் படலம். பா-670)

என்ற பாடலின் வாயிலாக அதைக் கேட்ட குகன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். தன் சேனையைக் காவலுக்கு நிறுத்தியதோடு நில்லாமல் தானும் அவ்விடத்தைக் காத்து நின்றான். தூக்கத்தைத் துறந்த இளையவன் இரவு முழுவதும் தன் அண்ணனுக்குக் காவல் நிற்க, அவனுக்கும் சேர்த்துத் தன் படையோடு காவல் காத்தான் குகன். மறுநாள் காலையில் நாவாய்தனைக் கொணருமாறு இராமன் கேட்க, குகன் இராமனிடம் பணிவுடன் பேசலுற்றான். எந்தையே! அடியேன் வேண்டுகோளுக்குச் செவிசாய்க்க வேண்டும்; எல்லா வசதிகளும் நிரம்பப் பெற்ற எங்கள் நகரத்திற்கு வந்து எங்களுடனே தாங்கள் தங்கியிருக்க வேண்டும் என்று பணிவாய் வேண்டினான். வனவாசம் முடிந்து திரும்புகையில் நும் நகரத்திற்கு வருவோம் என்றான் இராமன் என்பதை அறியமுடிகிறது.

குகன் படகினைச் செலுத்த மூவரும் கங்கையைக் கடந்து மறுகரையை அடைந்தனர். இறுதியாக, தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு இராமனை வேண்டினான் குகன் என்பதை,

“நெறி, இரு வல்லேன்; மேடினேன் வழுவாமல்
நறியன கனி காயும் நறவு இவை தர வல்லேன்
உறைவிடம் அமைவிப்பேன் ஒரு நொடி வரை உம்மைப்
பிறிகிலென் உடன் ஏகப் பெறுகுவென் எனின் நாயேன”
(அயோத்தியா காண்டம். கங்கைகாணப்படலம்.பா- 693)

என்ற பாடலின் வாயிலாக, குகனின் தூய அன்பினை உணர்ந்த இராமன் அவனைத் தன் தம்பியென ஏற்றான். நேற்று வரையில் நாங்கள் நால்வர் சகோதரர்கள் என்று இருந்தோம். இக்கணம் முதல் உன்னையும் சேர்த்து நாம் சகோதரர்கள் ஐவர் என்றான் இராமன் என்பதை,

“துன்பு உளதுஎனின் அன்றோ சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது இடை மன்னும் பிரிவு உளது என உன்னேல்
முன்பு உணினும் ஒரு நாள்வே முடிவு உள்ளது என உண்ணா

அன்பு உள்ள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானும்"
(அயோத்தியா காண்டம். கங்கைப் படலம். பா-698)

என்ற பாடலின் வாயிலாக இராமன் கானகம் செல்ல வேண்டியது தன் கடமை என்று குகனுக்கு விளக்கினான். குகன் பின் தொடராது, அங்கேயே நின்றிட வேண்டுமென அன்புக் கட்டளையிட்டான். அதன் பின்னரே மூவரும் சித்திரக்கூடத்திற்குப் புறப்பட்டார்கள் என்பதை அறிய முடிகின்றது.

இராமன் பிரிந்து செல்கிறான் என்ற துயரம் வாட்டினாலும் அவனது கட்டளையைத் தலைமேற் கொண்டவனாய், பின் தொடராது நின்றான் குகன். என்பதை,

"பணிமொழி கடவாதான் பரு வரால் இகவாதான்
பிணி உடையவன் என்றும் பிரிவினன் விடை கொண்டான்
அணிஅழை மயிலோடும் ஐயனும் இளையோனும்
திணி மரம் நிறை காணில் கோளாறு எதிரி என்று சென்றார்"
(அயோத்தியா காண்டம். கங்கைப்படலம்.பா- 701)

என்ற பாடலின் வாயிலாக அறியமுடிகிறது.

பரதனும் குகனும் சில நாட்களுக்குப் பிறகு கங்கைக் கரையின் மறுமுனையில் பெரும்படை திரண்டு வருவதைக் கண்டான் குகன், தன் நாயகனான இராமனுக்கு இன்னல் தரவேண்டியே அவன் வருகின்றான் என்று தவறுதலாக எண்ணித் தன் சேனைகளைத் திரட்டினான். இராமனுக்காகப் பரதனோடு போரிடத் தயாரானான் குகன்; பிறகு பரதன் வந்திருக்கும் நோக்கத்தைக் கேட்டறிந்த அவனது பாதங்களை பணிந்தான்.

தொகுப்புரை

இக்கட்டுரையின் வாயிலாக வேடர் அல்லது வேடுவர் என்ற சொல்லிற்கான விளக்கத்தினை அறிந்துகொள்ள முடிகின்றது. கண்ணப்ப நாயனாரின் கதை இப்பூவுலகம் அறிந்ததே. இறைவனுக்குப் படையல் வேண்டி இறைச்சியைப் படைத்தார். ஆனால் அவற்றில் பக்தியின் மனம் நிறைந்திருந்தது. அதுபோலத்தான் குகனும் உள்ளத்தில் பூத்த அன்பின் மிகுதியால் இராமனுக்குத் தேனும் மீனும் படைத்தான். இராமனோடு ஏற்பட்ட ஒரு நாள் சந்திப்பிலேயே அவனுக்குச் சேவை செய்யும்

சேவகனாக மனமேற்கும் நிலையில் இராமனின் மேன்மையைப் புகழ்வாரா குகனின் மேன்மையைப் புகழ்வதா? இராமனின் மேன்மை புகழ்வதால் குகனின் மேன்மை புகழ்வதா? இவ்வாறு இருவருக்குமான நட்பினையே காலம் என்றென்றும் புகழ்கிறது. தனிமனித வாழ்வுக்கும் சமுதாய வாழ்வுக்கும் அன்பே முதன்மையானதும் சிறந்ததும் ஆகும் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

துணைநூற்கள்

1. கம்பராமாயணம்
2. தேவாரம்
3. திருவாசகம்
4. பெரிய புராணம்

நடுகல்: சோழர் காலமும் வேட்டுவர் கல்லும்

மு. சத்தியா
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.
8220301532

சங்க இலக்கியத்தில் வேட்டுவ, வேட்டுவன், வேட்டுவர் என்னும் சொல் 21 இடங்களில் இடம்பெறுகிறது. நோன் சிலை வேட்டுவ (புறம். 205:9), நிரை திமில் வேட்டுவர் (மது. 116), கொலை வில் வேட்டுவர் (பதி.30:9,10), இன மீன் வேட்டுவர் (அகம். 270:3), வெட்சி கானத்து வேட்டுவர் (புறம். 202:1), தூண்டில் வேட்டுவன் (அகம். 36:6), யானை வேட்டுவன் (புறம். 214:5) எனச் சங்க இலக்கியத்தில் வேட்டுவர் பற்றிய பதிவுகள் உள்ளன. சங்கம் மருவியகால இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் என வேட்டுவர் பற்றிய பதிவுகள் தொடர்ந்து இடம் பெற்றுக் கொண்டே வருகின்றன. நடுகற்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், பிற்காலப் பட்டயங்கள் வழி வேட்டுவர் பற்றிய குறிப்புகளும் குலப்பிரிவுகளும் அறியப்படுகின்றன. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியும் வேட்டுவர் என்பதற்கு ஓர் இனம் என்று பொருள் தருகிறது. கடைவெண்மலைக்கோட்டு வேட்டுவரு (600) (,10, .6), பெரியவிலங்கிய ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியர் ஆன (1100) (AVNM, 7, p.33)' என்று எடுத்துக்காட்டுகளையும் தருகிறது1. நடுகற்களில் வேட்டுவர் பற்றிய குறிப்புகளை ஆராயப் புகும்போது பழமங்கம் என்னும் ஊரில் உள்ள நடுகல் கல்வெட்டு வெண்பா வடிவில் அமைந்திருப்பது தெரிய வந்தது. அந்நடுகல் தரும் செய்தி என்ன, இறந்த வீரன் யார், நடுகல்லின் தற்போதைய நிலை என்ன முதலியவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழமங்கலம்

கொங்கு என்றால் கிழக்கு என்று பொருள்படும். மேற்குத் தொடர்ச்சி மலைக்கு மேற்கே உள்ள பகுதியைக் குடகு நாடு என்பார்கள். குடகு என்றால் மேற்கு, மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்குப்பகுதியில் வசித்தவர்கள் கொங்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். இன்றும் நீலகிரி மலையில் வசிக்கும் பழங்குடியினர் கிழக்கு திசையைக் குறிப்பிடுவதற்காகக் கொங்கு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். வடகிழக்குப் பருவமழையைக் கொங்கன் மழை என்கிறார்கள். இந்தச்சொல் சங்க இலக்கியங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என்கிறார் கல்வெட்டு ஆய்வாளர் இரா. ஜெகதீசன். இவர் இடைக்காலக் கொங்கு நாட்டின் அரசு, சமூகம், பொருளாதாரம் என்னும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வைச் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது[2].

கொங்குநாடு நிர்வாக வசதிக்காக 24 உள்நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. அதில் ஒன்றான மேல்கூரைப் பூந்துறை நாட்டின் 32 பழம் பெரும் ஊர்களின் ஒன்று இப்பழமங்கலம். தற்போது இவ்வூர் ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு, குல வீரனின் நடுகல் வழி பழமங்கலம் என்னும் இவ்வூரின் பழம் பெயர் புகழ் மங்கலம் என்பது தெரிய வருகிறது.

நானாதேசித் திசை ஐயாயிருத்து ஐநூற்றுவருக்கு இங்கு நானாதேசி அடைக்கலம் ஒன்று இருந்துள்ளது3. நானாதேசி என்போர் எல்லா நாடுகட்கும் சென்று வணிகம் செய்வோர். திசையாயிரம் என்பது வணிகர் செல்லும் எல்லாத் திசைகளும் என்று பொருள்படும். ஐந்நூற்றுவர் என்பது ஐந்நூறு வணிகர்களைக் குறிக்கும். கல்வெட்டுகள் அவர்களைப் பஞ்சசதவீரர் என்று கூறுகின்றன. இவ்வூர் பெரிய வணிகர் குழுக்கள் தங்கும் இடமாக இருந்துள்ளது.

நடுகல் செய்தி

பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் ஒன்று நடுகல். நடுகல்வைக்கும் இவ்வழக்கம் பெருங்கற்காலத்தின் இறுதிப் பகுதியில் உருவானது. இது குறிப்பாகப் பூசலில் இறந்துபட்ட வீரனின் நினைவாக வைக்கப்படும் நினைவுக்கல் ஆகும். நடுகல் (Hero stone) என்பது பெருங்கற்கல்லறைகள் (Megaliths) என்ற சடங்கு ரீதியான நினைவுச் சின்னங்களில் அடங்கும் [4]. பெருங்கற்காலத்தில் தொடங்கப்பட்ட நடுகல்

நடும் மரபு பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம் எனத் தொடர்ந்து வந்து நாயக்கர் காலம் வரையில் கிடைக்கின்றன. தற்போது கல்லெடுத்தல் என்னும் வழக்கம் சில கிராமப்புறங்களில் காணப்படுகிறது. பழங்கால நடுகற்கள் இக்காலத்திலும் வழிபாட்டில் இருந்து வருகிறது. அப்படி வழிபாட்டு நிலையில் இருக்கும் நடுகல்லில் ஒன்று தான் கரைய வேட்டுவன் நடுகல்.

ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி வட்டத்தில் பழமங்கலம் என்னும் ஊர் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள நத்தக்காடு என்கிற பகுதியில் வேட்டுவன்கல் கண்டறியப்பட்டது. இந்நடுகல்லை அவ்வூர் மக்கள் வேடன் கல், வேடம் சாமி என்று வழிபட்டு வருகின்றனர். இது கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நடுகல்லாகும். கி.பி. 10ஆம் நூற்றாண்டு என்பதால் இக்கல் நடப்பட்ட காலம் சோழர் காலத்தின் தொடக்கமாகும்.

வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்த்த மாற்றலரைச்
சாய்த்தமருள் வென்ற சயம்பெருக - சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேஉலகில் தான்.
இக்கற்பொறி இரஷிப்பான் ஸ்ரீபாதம் எந்தலைமேலே

கரையகுலத்தைச் சேர்ந்த சொக்கன் என்னும் வீரன் புகழ்மங்கலம் என்னும் தன் ஊரில் தன்னை வந்தெதிர்த்த பகைவரை வென்றான். அவ்வீரன் தன் புகழை நிலைநாட்டி போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தான். இவ்வுலகில் அவன் புகழ் பெருக கல்லாகப் பொறிக்கப்பட்டுள்ளான் என்பது இந்நடுகல் கல்வெட்டு கூறும் செய்தியாகும். நடுகல்லை அக்கால மக்கள் கற்பொறி என்று அழைத்துள்ளனர் என்பதும் இக்கல்லின் வழி தெரிய வருகிறது. இக்கற்பொறியைப் பாதுகாப்பவரின் பாதம் என் தலையில் வைத்து தாங்கப்படும் என்று ஓம்படைக்கிளவியாக ஒரு வரியும் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் பகைவர்கள் என்று குறிப்பிடப்படுவோர் யார்? வீரன் சொக்கனை எதிர்ப்பதற்கான காரணம் என்ன? முதலான தகவல்கள் எதுவும் காணப்படவில்லை.

கி.மு. 3 - ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு தமிழ் நாட்டில் நடுகற்கள் கிடைத்து வருகின்றன. அதிகப்படியான நடுகற்கள் கிடைக்கப்பெறுவது பல்லவர்களின் காலத்தில்தான். அவையாவும்

மக்களின் பேச்சு வழக்கில் பொறிக்கப்பட்டுள்ளன. தமிழி, வட்டெழுத்து மற்றும் தமிழியும் வட்டெழுத்தும் கலந்த வடிவத்தில் அவை கிடைக்கின்றன. என்றபோதிலும், இக்கரையகுல வீரனின் நடுகல் வெண்பா வடிவில் அமைந்நதுள்ளது குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியாவில் கிடைத்த நடுகற்களில் வெண்பாவில் இறந்த வீரனின் புகழைச் சொல்லும் நடுகல் இது ஒன்றே ஆகும். கல்வெட்டில் வெண்பா முறை தமிழகத்தில் 10ஆம் நூற்றண்டில் வழக்கத்திற்கு வந்துள்ளதை இக்கல்வெட்டு மூலம் உறுதிப்படுத்திடலாம்[5].

தொல்லியல் அறிஞர் இரா. நாகசாமி இதில் இரண்டொரு சொற்களை மாற்றி வாசித்துள்ளார்.

வாய்த்த புகழ் மங்கலத்து
வந்தெதிர்த்த மாற்றலரை
சாய்த்த மகன் வென்ற
சயம் பெறுக நீக்குவனம்
கற் பொறிக்கப் பட்டான்
கரடிகுல சொக்கனேந்தலே
உலகிற் காண்[6]

புலவர் செ. இராசு சொக்கன் என்னும் வீரனின் குலத்தைக் கரைய குலம் என்று வாசித்துள்ளார். இரா. நாகசாமி கரடிகுலம் என்று வாசித்துள்ளார். இருவருக்குமிடையே இம்முரண்பாடு இருப்பதை இங்கு காண முடிகிறது.

நடுகல்லில் வீரன் சொக்கன் உரையில் இருந்து உருவிய வாளை கையில் ஏந்தியபடி காணப்படுகிறான். தலையில் கொண்டை, வலதுகால் முன்னோக்கி இருக்கிறது. இந்நடுகல்லிற்குக் கோவில் அமைக்கப் பட்டுள்ளது. வீரன் சொக்கனின் நடுகல்லோடு ஏழு சிறிய கற்களும் நடப்பட்டுள்ளன. இவை சொக்கனுடன் இறந்த பிற வீரர்களாக இருக்கலாம். இவை அனைத்தும் தொல்காப்பியர் குறிப்பிடும் காட்சி, கால்கோல், நீர்ப்படை, நடுதல், பெரும்படை, வாழ்த்து என்ற நடுகல் நடும் வரிசை முறையை நினைவுபடுத்துகிறது. இந்நடுகல் கல்வெட்டு பி.லிட். முதுகலை பாடத்திற்குப் பாடமாகப் பல ஆண்டுகள் வைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது[7].

மேற்கோள் குறிப்புகள்:

1. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, ப. 579.
2. www.bbc.com
3. www.tamildigitallibrary.in
4. ராஜ் கௌதமன், பாட்டும்தொகையும். ப.197.
5. சி. கார்த்திகேயன், கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் நிகழ்கலைப் பதிவுகள், ப.63.
6. இரா. நாகசாமி, கல்வெட்டியல், ப.130.
7. புலவர் செ. இராசு, வேட்டுவர் சமூக ஆவணங்கள், ப. 28

துணைநூற்பட்டியல்:

1. இராசு. செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை, ஈரோடு, 2008 (முதற்பதிப்பு).
2. கார்த்திகேயன். சி., கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் நிகழ்கலைப் பதிவுகள், நெய்தல் இதழ், இதழ் 2, மலர் 6, ஏப்ரல் ஜூன் 2021.
3. ராஜ் கௌதமன்,பாட்டும் தொகையும் தொல்காப்பியமும், நியூ சென்சுரி புக் ஹவுஸ் நிறுவனம், சென்னை, 2018 (முதற்பதிப்பு).
4. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, தொகுதி 2, சாந்தி சாதனா, சென்னை, 2003 (முதற்பதிப்பு).
5. நாகசாமி. இரா., கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, 2021 (மூன்றாம் பதிப்பு).

படங்கள்

*படங்கள் தமிழ் இணையக் கல்விகழகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

சங்க இலக்கியங்களில் வேட்டுவர்

திரு.மு.கோகுலசாமி,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.ஆர்.எம். கலை அறிவியல் கல்லூரி,
காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு 603203.
அ.எண்: 6374322180. 7269
gokulrm7269@gmail.com.

ஆய்வுச் சுருக்கம்

வேட்டுவர் என்னும் சொல் **வேட்டை** என்னும் வினையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். வினை எனப்படுவது தொழிலைக் குறித்து வருமென்பதால், ‘வேட்டை’ என்பது **வேட்டையாடும் தொழிலைக்** குறித்து நிற்கின்றது. இதனால் வேட்டுவன் என்பது **வேட்டையாடும் தொழிலைச் செய்பவன்** எனும் பொருளைக் குறிக்கின்றது. சங்க காலத்தில் வேட்டுவன் என்னும் சொல் குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் பொதுப்பெயராக வழங்கியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறியமுடிகின்றது. குறிஞ்சி நிலமென்பது மலையைக் குறிக்கின்றது; மலைக்கும் அங்கு வேட்டையாடும் வேட்டுவனுக்குமான தொடர்பைக் கொண்டு வேட்டுவரின் வாழ்வியல் அறியலாகிறது.

முன்னுரை

வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டு புகழ்பெற்ற வேட்டுவர் குறித்து சங்க இலக்கியங்களில் பலவாறான செய்திகள் உள்ளன. கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி, கண்டீர கோப்பெரு நற்கிள்ளி போன்றோர் வேட்டையில் சிறப்பிடம் பெற்றிருந்ததாகப் புறநானூற்றின் வழியாகத் தெளிவாகின்றன. சங்க இலக்கியங்களான புறநானூறு, நற்றிணையின் வழியாக, வேட்டுவரின் புகழையும் பெருமையையும் ஆராய்வதே, இவ்வாய்வின் நோக்கமாகும்.

பிறர்க்கு உணவிடும் பண்பு

தமிழரின் தன்னிகரில்லாப் பெருமைகளுள் ஒன்று, விருந்தோம்பல் ஆகும். பிறர்க்கு உணவிட்டு அதன்மூலம் மகிழ்ச்சி காண்பதென்பது, சிறப்புடை மனிதரின் செயலாகும். வரும் விருந்தினரை எதிர்நோக்கி நலம் கேட்டு, வகை வகையான உணவுகளை விருந்திட்டதைப் பெரும்பாணாற்றுப்படை முதலான நூல்களின் வழியாக அறியமுடிகின்றது. வேட்டுவர்களும் பிறர்க்கு உணவிட்டு அதன்மூலம் மகிழ்ச்சியடையும் அருமைப்பாடு வாய்ந்த நிகழ்ச்சியினைப் புறநானூறு பதிவு செய்கிறது.

செல்வத்தின் தோற்றத்துடன் ஒரு வல்வில் வேடன் வந்து, விரும்பி எழும்முன் தன் கைகுவித்து புலவர் கூட்டத்தினை இருத்தி, மானின் நெய்யிழுது போன்ற தலசையைச் சுட்டுத் தின்றுக என்று குறிப்பிட்டதுடன் தன்னோடு தன் சுற்றத்தாரின் பசியையும் போக்கி பசிதீர்த்த செய்தியை,

செல்வத் தோன்றல், ஓர் வல்வில் வேட்டுவன்
தொழுதனென் எழுவேற் கைகவித்து இரீஇ,
இழுதின் அன்ன வால்நிணக் கொழுங்குறை
....
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டு, ‘நின்
இருப்பேர் ஒக்கலொடு தின்ம் எனத் தருதலின்
அமிழ்தின் மிசைந்து, காய்ப்பசி நீங்கி”[1]

வன்பரணரின் பாடல் மூலம் அறியலாம். வேட்டுவ மன்னனான வல்வில் ஓரி, தன் மக்கட்கு, தன்னைப் புகழும் முன்னரே பெருமை நோக்காது, மான் தசையும் பசுவின் நெய்யையும் போன்ற உயர்ந்த மதுவினைக் கொடுப்பான் என்பதை,

“வேட்டது மொழியவும் விடாஅன், வேட்டத்தில்
தான்உயிர் செகுத்த மான்நிணப் புழுக்கோடு
ஆன்உருக்கு அன்ன வேரியை நல்கி”[1]

என்ற வரிகளின் மூலம் வேட்டுவர் தமிழரின் உயர்ந்த பண்பான விருந்து ஒம்புதலைக் கடைப்பிடித்ததை அறியமுடிகின்றது.

கொடைப் பண்பு

தமிழரின் மற்றுமோர் சிறந்த பண்பு ஈதலாகும். **‘செல்வத்தின் பயன் ஈதல்’** என்றே புறநானூறு சுட்டுகிறது. வேட்டுவர்களும் பிறர்க்குக் கொடை கொடுத்து சிறந்த நிலையினைப் பெற்றிருந்தனர். குமணன் சிறந்த கொடையாளனாக இருந்தாலும், தன் இளவல் இளங்குமணனின் சூழ்ச்சி காரணமாகக் காட்டில் இருக்கும் போது, புலவர் பெருந்தலைச் சாத்தனாருக்குக் கொடையளிக்க முடியாமல் வருத்தம் அடைந்தது போல, வேட்டுவ மன்னன் ஒருவன், காட்டில் இருக்கின்றேன்; உமக்குத் தர வேறோர் சிறந்த பொருளும் எம்மிடம் இல்லையே எனச் சொல்லியவனாகத் தம் மார்பில் அசையும் முத்து ஆரத்தையும் கையிற் கடகத்தையும் எடுத்துக் கொடுத்த நிகழ்ச்சியினை,

“பொறுத்தல் கரிய வீறுசால் நான்காம்
பிறிதொன்று இல்லை; காட்டு நாட்டேம் என,
மார்பிற் பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமொடு ஈத்தனன்”

எனப் பொருள்தர முடியாத நிலையிலும், தன் உடலில் பூண்டுள்ள ஆரத்தையும் கடகத்தையும் கொடையாகக் கொடுத்த நிகழ்வு வேட்டுவரின் உயர்ந்த கொடைச் சிறப்பினை மெய்ப்பிக்கின்றது. மேலும், வேட்டுவத் தலைவன் வல்வில் ஓரி பொன்னும் மணியும் புலவர்களுக்கு ஈந்த செய்தியினை,

“தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக், கொண்ம் எனச்
சுரந்து இடை நல்கி யோனே; விடர்ச்சிமை
ஓங்கு இருங் கொல்லி பொருநன்”[1]

என்ற வரிகளின் மூலம் அறியலாகிறது.

தோற்றமும் காதற் பண்பும்

புலவர் மாறபித்தியார் புறநானூற்றுப் பாடலொன்றில் வேட்டுவரின் தோற்றத்தையும் அத்தோற்றத்தின் ஊடாக காதல் அருமைப்பாட்டையும் விவரிக்கின்றார். அருவி நீரில் வேட்டுவர்கள் இருப்பதால், தன் இயல்பான கருநிறம் மாறி, தில்லை இலை போன்று நிறம் மாறிய படையோடு கூடியவனாகச் செறிந்த இலையையுடைய தாளியிலே தளிர் கொய்கின்றவன் போல இருப்பார்கள் என்பதை,

"கறங்குவென் அருவி ஏற்றலின், நிறம் பெயர்த்து
தில்லை அன்ன புல்லென் படையோடு
அள்இலைத் தாளி கொய்து மோனே"[3]

என்ற புறநானூற்று வரிகளின் மூலம் வேட்டுவரின் தோற்றத்தினை தெளிய முடிகிறது. காதலியரை வீழ்த்த சிலர் வீரத்தை மெய்ப்பிப்பர்; சிலர் தோற்றத்தால் கவருவர்; ஆனால், வேட்டுவன் தான்பேசும் காதற் சொற்களால் காதலியைக் கவரும் சிறப்பான நிலையினை,

"இல்வழங்கு மடிமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே"

என்ற வரிகளின் மூலம் சிறந்த சொற்களால் காதலியரைத் தன்வயப்படுத்தும் வேட்டுவரின் காதற்பண்பு அறியலாகிறது.

வேட்டைப் பண்பு

வேட்டையில் சிறந்திருப்பதன் காரணத்தால், வேட்டையன், வேட்டுவர் என்று அழைக்கப்படுகின்றனர். வேட்டையாடும் விலங்கின் வலிமைக்கு இணையான வலிமையை வேட்டுவர்கள் இயல்பாகவே பெற்றிருந்தனர். எருதின் அணல் போன்ற வலிமையுடன் இருப்பவன்; கையில் வலிமை மிக்க வில்லை வைத்திருப்பவன்; எப்போதும் விழித்துக் கொண்டே இருப்பவன் என வேட்டுவனின் வேட்டைத் தோற்றத்தை,

"மைஅணல் எருத்தின் முன்பின் தடக்கை
வல்வில் அம்பின் அய்யா வண்மகிழ்"[1]

எருதின் வலிமை, வலிமையான வில், எப்போதும் விழித்துக் கொண்டிருக்கும் பண்பே வேட்டைக்கு அடிப்படைப் பண்பென்பதை இவ்வரிகள் மூலம் அறியலாம். வேட்டையில் விலங்குகளைப் பிடிக்கும் தந்திர உத்திகளையும் வேட்டுவர்கள் அறிந்திருந்ததாக நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தான் பழக்கி வைத்திருக்கும் பெண் பறவையை வைத்து மயக்கி ஆண் பறவைகளைத் தன் வலைக்குள் விழச்செய்து பிடித்துக் கொள்வான்; பம்பை உள்ளிட்ட விலங்குகளை விரட்டும் ஓசைக் கருவிகளுடன் வேட்டை நாயையும் அழைத்துக் கொண்டு வேட்டைக்குச் செல்லும் திறத்தினை,

“பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ
....
கருங் குரற் பம்பைக் கத நாய் வடுகர்
நெடும் பெருங் குன்றம் நீங்கி

என்ற நற்றிணையின் வரிகள் மூலம் உய்த்துணர முடிகிறது.

முடிவுரை

வேட்டையில் சிறந்திருந்த வேட்டுவரின் வாழ்வியலைச் சங்க இலக்கியங்களுள் சிறப்பு மிகுந்த இலக்கியமும் தமிழரின் வரலாற்றுப் பெட்டகம் என்று அழைக்கப்படும் புறநானூறு, முதல் இலக்கியமான நற்றிணை ஆகியவற்றின் துணைகொண்டு விளக்கப்பட்டுள்ளது. பிறர்க்கு உணவிட்டு அதன்மூலம் மகிழ்ச்சியடையும் குணம், செல்வத்தின் பயனாம் கொடைச் சிறப்பு, தோற்றத்துடன் கூடிய சொற்களாலான காதல்நிலை மற்றும் வேட்டைச் சிறப்புகளை மேற்கண்ட இலக்கியங்கள் வாயிலாகச் சுட்டுப்பட்டுள்ளது. சங்ககாலம் தொட்டு இக்காலம் வரை இலக்கியங்கள் வழியாகவும், மரபுத் தொடர்ச்சியாகவும் உள்ள வேட்டுவர்களின் வரலாறு நிலைக்கும்; அவர்தம் பெருமை சிறக்கும்.

மேற்கோள் குறிப்புகள்:

1. புறநானூறு 150:07-14
2. புறநானூறு 152:25-27
3. புறநானூறு 150:18-21
4. புறநானூறு 152:28-30
5. புறநானூறு 252:01-03
6. புறநானூறு 252:04-05
7. நற்றிணை 198:09-10
8. நற்றிணை 212:01-06

துணைநூற் பட்டியல்:

1) புறநானூறு மூலமும் உரையும் உரை: புலியூர்க் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை 600014. முதற்பதிப்பு டிசம்பர் 2010.

2) நற்றிணை (01-200), (201-400) தெளிவுரை உரை: புலியூர்க் கேசிகன், பாரி நிலையம், பிராட்வே, சென்னை 600108.

3) இணையம்: முநநவசர.உடிஅ இரா.வெங்கடேசன் பிப்ரவரி 2017.

4) இணையம்: ஏநநவரஎயச.டெடிபளயீடிவ.உடிஅ மந்தபடை வேட்டுவர் ஆகஸ்ட் 2018.

சங்க இலக்கியத்தில் வேடர்கள்

முனைவர் பெ.சங்குவதி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
செயின்ட் ஜோசப் கலை மற்றும்அறிவியல் மகளிர் கல்லூரி,
மூக்காண்டபள்ளி, ஓசூர்.
அலைபேசி எண் : 9715623182
sanguvathi1986@gmail.com.

முன்னுரை

வேட்டுவன் எனும் சொல் வேட்டை எனும் வினையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். வேட்டை என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. இதனால் வேட்டுவன் என்பது வேட்டையாடும் தொழிலைச் செய்பவன் எனும் பொருளைக் குறிக்கின்றது. பண்டைக் காலத்தில் இந்த வேட்டுவன் என்ற சொல் குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் சொல்லாகவும் பெண்ணைக்குறிக்கும் சொல் வேட்டுவத்தி என்றும் லிப்கோ அகராதி கூறுகிறது. இவ்வேட்டுவர்களைச் சங்க இலக்கியப் பாடல்கள் வழி இக்கட்டுரையில் ஆய்வோம்.

பழந்தமிழகத்தில் தொன்மையான குடிகள்பல இனக் குழுக்களாக வாழ்ந்துள்ளனர்.அவர்களுள் ஓர் இனக்குழு வேட்டுவர்.பிறகு பரிணாம வளர்ச்சியால் வேளிராக வளர்ந்து, அரசர்களாக மாறி, நிலத்தை ஆண்டு வந்துள்ளார்கள். இவர்களின் ஆட்சிக்காலத்தில் மக்கள் மகிழ்ச்சியுடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்து வந்துள்ளார்கள். அரசரின் தகுதிகளில் ஒன்றாக வேட்டையாடுதல் இடம்பெறுதல் இலக்கியங்கள் மற்றும் புராணங்கள் வழி அறியமுடிகிறது.

வேடர்களின் மரபு

பழந்தமிழகத்தில் மிருகங்களைப் பிடிப்பதற்குப் பழக்கிய விலங்கினைப் பார்வை மிருகம் என்று அழைத்துள்ளனர். இதுபோன்று பார்வைப் புள் (புள் - பறவை) என்பது பறவை இனத்தைச் சுட்டியிருக்

கின்றது. குடவாயிற் கீரத்தனார் எனும் புலவர் பார்வைப் புள் பற்றிய குறிப்பு நற்றிணையில் கூறியுள்ளார். பறவைகளைப் பிடிக்கக் கருதிய வேட்டுவன் பார்வைப் பறவையை வைத்து வலையை வீசுவான். இப்பார்வை என்பது கைப்புள் (வளர்க்கப்பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட பறவை) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. வேட்டுவன் என்றால் வேட்டைக்குச் செல்பவன். பழக்கப்படுத்தப்பட்ட பறவையைக் கொண்டு பிற பறவைகளை வரச்செய்து, வளைக்குள் அவை வந்து அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பது தெரிகின்றது

'பார்வை யாத்த பறைதாள் விளவின், நீழல் முன்றில்'. (பாணாறு-95) பெரும்பாணாற்றுப்படையில் பாடலடி வருகின்றது. இந்தப் பாடலடிக்கு (எயிற்றியர்) குடிசை முற்றத்திலுள்ள விளாமரத்தின் நிழலில் பார்வை மான்கள் கட்டப்பட்டிருக்கும். இங்கு பார்வை என்பது பார்வை மானைக் குறித்திருக்கிறது. யானையை வைத்து யானையைப் பிடிப்பதுபோல தாம் வளர்த்த மானைக் காட்டி மானைப் பிடிப்பது எயினர் வழக்காக இருந்திருக்கிறது. கட்டப்பட்டுள்ள பார்வை மானைப் பிடிக்கவரும் ஏனைய மிருகங்களைப் பிடிப்பதற்கும் இந்த வழக்கம் பயன்பட்டிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகின்றதுமாரிப்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றில்

"இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே!" (புறம்- 252)

வேடன் வலைவிரித்து விலங்கினைப் பிடிப்பதுபோலச் சொல்லால் வலைவீசி மனைவியைத்தன்வசப்படுத்துபவன் என்பதால் மடமயில் பிணிக்கும் சொல்வலை வேட்டுவன் எனப் புலவர் சுட்டியிருக்கிறார்.

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே(புறம்-214-4,5)

இப்பாடல் வரிகள் மனிதனின் உயர்ந்த எண்ணத்திற்குச் சான்றாகவேட்டைப்பொருளைக் குறித்துள்ளனர்.

"கோடு துவையா, கோள் வாய் நாயொடு
காடு தேர்ந்து அசைஇயநற்றிணை- 276

இவ்வரிகள் வேட்டைக்கு வேட்டைநாயைப் பயன்படுத்தியுள்ளனர். வேட்டுவர் யானை, (குறும்பூழ்) காடை, மான், பறவை முதலானவற்றை

வேட்டையாட பார்வை ஒன்றை வைத்து வேட்டையாடியுள்ளனர் என்பதை அறியலாம்.

வேடர்களின் பண்புநலன்

‘----------------------
தனதும் உள்ளேன் பிறிதுபுலம் படர்ந்தஎன்
உயங்குபடர் வருத்தமும் உலைவும் நோக்கி
மான்கணம் தொலைச்சிய குருதியங் கழற்கால்
வான்கதிர்த் திருமணி விளங்கும் சென்னிச்
செல்வத் தோன்றல்ஓர் வல்வில் வேட்டுவன்

நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே’ (புறம்-150)

‘‘அயல் நாட்டில் இருந்து வந்த என் தளர்ந்த நடையால் உண்டான வருத்தத்தையும் வறுமையையும் பார்த்து, மான் கூட்டத்தை வேட்டை ஆடிய, இரத்தம் தோய்ந்த வீரக்கழலையுடைய காலையும், வெண்மையான ஒளி பொருந்திய நீலமணி விளங்கும் உச்சியையும் உடைய செல்வத்தையும் உடைய தலைவன் வில்லையுடையவனாக வந்தான்.அவனை வணங்கியபடி எழுந்த என்னைக் கையைக் கவித்துக் காட்டி அமர்ந்தபடியே இருக்ககுமாறு செய்தான். நெய் இழுது போன்ற வெண்மையான நிணத்தையுடைய கொழுமையான ஊனை, காட்டில் வழிதவறிச்சென்ற அவனுடன் வந்த இளையர் வந்து சேர்வதற்கு முன்பு,விரைவாகத் தான் கடைந்த தீயால் சுட்டுப் பக்குவம் செய்து,மிகப்பெரிய உம் சுற்றத்துடன் உண்ணுங்கள் எனத் தந்தான். உண்டபிறகு பெறுவதற்கரிய அணிகலன்கள் வேறு ஒன்றில்லை, யாங்கள் காட்டு நாட்டில் வாழ்பவர் என்று சொல்லித் தன் மார்பில் அணிந்திருந்த முத்து வடங்களையுடைய மாலையை இணைப்பையுடைய முன்கை கடகத்துடனே அளித்தான். உம் நாடு எது? வினவவும் அதற்கு அவன் விடை அளிக்கவில்லை.நீர் யார் என வினவியதற்கு அவன் தன் பெயரையும் சொல்லவில்லை. அவனது நாட்டையும் பெயரையும் மற்றவர் மூலமாகக் கேட்டறிந்தேன்.இரும்பால் செய்யப்படாத புகழ்மிக்க தோட்டி என்ற மலையைக் காக்கும்,அழகான பெரிய பக்க மலையையும் பளிங்கை வகுத்தது போன்ற வெண்மையான நிறம் கொண்ட பெரிய மலை நாட்டவனான நள்ளி அவன் என மற்றவர்மூலமாகச்சொல்லக்கேட்டு அறிந்தேன் என்று நள்ளியால்

பயன்பெற்ற வன்பரணர் பதிவு செய்துள்ளார். இவை போன்ற வேட்டுவர்களிடமிருந்த வழக்கங்கள் பற்றிய பதிவுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வேடர்களின் சிறப்பு

வேழம் வீழ்த்த விழுத் தொடைப் பகழி

கேழற் பன்றி வீழ (புறம்-152)

இவ்வரிகளில் வேட்டையில் சிறந்து விளங்கிய கொல்லிமலைத் தலைவன் ஆதன் ஓரியின் அம்பு திறமையைக் குறிக்கிறது. யானையைக் கொல்ல எய்த அம்பு யானையைக் கொன்று,புலியை இறக்கச்செய்து, புள்ளிமானை உருட்டி,பின்பு பன்றியை வீழச்செய்தது. இவ்வேட்டுவ அரசன் ஓரி சிறப்பைப் போற்றும் வகையில் கடந்த 1975 - ஆம் ஆண்டு கொல்லிமலை செம்மேட்டில் வேட்டுவ மன்னனின் ஓரி குதிரைமீது அமர்ந்திருப்பது போன்ற சிலை வடிவமைக்கப்பட்டது. ஆண்டுதோறும் தமிழ் மாதமான ஆடி 18-ஆம் தேதி வேட்டுவ அரசன் ஓரிக்கு இரு தினங்கள் அரசு விழாவும் கொண்டாடப்பட்டு வருகிறது. விழாவில் வில்வித்தையில் சிறந்து விளங்கிய வேட்டுவ மன்னனின் ஓரியின் சிறப்பைப் போற்றும் வகையில் வில்வித்தைப் போட்டி நடத்தப்படுகிறது. இதுபோல், பாரம்பரிய நடனங்களும் நடத்தப்படுகின்றன.மேலும்தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கழுகுமலையில் ஒற்றைப் பாறையில் செதுக்கப்பட்ட வேட்டுவன் கோவில் வரலாற்று ஆவணமாக இன்றைக்கும் இருந்துவருகிறது.வேட்டுவர் தினமாக தை 1- ஆம் தேதிகொண்டாடப்படுகிறது.

தொகுப்புரை

மனித இனம் தோன்றிய காலத்தில் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் உணவையும் உற்சாகத்தையும் அளிப்பதற்காக வேட்டையாடினர். வேட்டைக்குப் பார்வைப்புள், நாய், வில்,அம்பினைப் பயன்படுத்தியுள்ளது. இதனடிப்படையில் வேட்டுவர் என்ற இனக்குழு உருவானது.இக்குடி தொன்மையான தமிழ்க்குடியாகும்.தமிழனுடைய வீரம் கொடை தீரம் போன்ற சிறப்பு மிக்க பண்புகளால் இவர்கள் உலகத்தையே ஆளும் வல்லமை பெற்று விளங்கினார்கள். இத்தகைய பெருமைமிக்க தமிழர்களின் குறிஞ்சி நிலத்தை ஆண்டு வந்த நமது

கடையேழு வள்ளல்களில்நள்ளிமற்றும் ஓரியின் குறிப்புகளை மட்டும் இக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தாலும்,எழுவருமே மனித இனத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் மிகப்பெரும் வள்ளல்களாகவும் வீரர்களாகவும் வாழ்ந்துள்ளனர்.

துணைநூற்பட்டியல்:

1. லிப்கோ தமிழ் - தமிழ் - அகராதி, சங்கர் பிரிண்டர்ஸ் (பி)லிமிடெட், சென்னை. முதற்பதிப்பு-1966
2. நற்றிணை (மூலமும் உரையும்) முனைவர் வி.நாகராசன் (உரையாசிரியர்) நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை. முதற்பதிப்பு-2004
3. புறநானூறு (மூலமும் உரையும்), புலவர் அ.மாணிக்கனார் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு-1999
4. பெரும்பாணாற்றுப்படை (மூலமும் உரையும்) முனைவர் வி.நாகராசன் (உரையாசிரியர்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்., சென்னை. முதற்பதிப்பு-2004.

கருப்பொருள் மயக்கத்தில் வேட்டைத் தொழில்

ச. தென்பாண்டி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அகராதியியல் துறை, வளர்தமிழ்ப் புலம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் 613 010.
அலைபேசி - 8525864756
thenpandiaravindhasamy@gmail.com

முன்னுரை

நிரை மேய்த்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல், புனம் காத்தல், வழிப்பறித்தல், உழவுத் தொழில் செய்தல், மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல்(விற்றல்) போன்ற பல தொழில்களைச் செய்து பழந்தமிழர் தங்களின் வாழ்வியலை மேம்படுத்திக் கொண்டனர். காலப்போக்கிற்கேற்ப தங்களின் பாரம்பரியத் தொழில்களை விடுத்து நாகரிக வளர்ச்சிக்கேற்ப தங்களின் தொழில்களை மாற்றிக் கொண்டனர். பெரும்பாலான தொழில்கள் இன்றளவும் தமிழ்ச் சமூகத்தினரால் நடந்து வருகின்றன. குறிப்பாக உழவுத்தொழில் செய்தல், மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் மற்றும் விற்றல், தேன் எடுத்தல், நிரை மேய்த்தல் போன்ற இன்னும் பல தொழில்களைக் கூறலாம்.

ஒரு திணையில் நடைபெறும் தொழில்முறை மற்ற திணைகளில் பெரும்பாலும் நடைபெறுவது இல்லை. ஒரு சில தொழில்களே அவ்வாறு காணப்படுகின்றன. அத்தகைய தொழில்களுள் வேட்டைத் தொழிலும் ஒன்று. வேட்டைத் தொழில் குறித்த செய்திகள் சங்கப் பனுவல்களில் விரவிக் காணப்படுகின்றன. பழமையும் புதுமைக்குப் புதுமையும் கொண்டு வேட்டைத் தொழில் இன்றளவும் நிகழ்ந்து வருவதைக் காணலாம். சங்க காலத்தில் வேட்டைத் தொழிலானது குறிஞ்சி நில

மக்களுக்கு மட்டும் உரியது என்பர். ஆனால், மற்ற திணைசார் மக்களுக்கும் உரியது என்பதை நிறுவுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

வேட்டைச் சமூகம்

பழங்கால மனிதன் தனக்கான உணவினைத் தானே தேடிக் கொண்டான். இடத்திற்கேற்றாற்போல் தொழில்முறைகளையும், உணவுமுறைகளையும், உறைவிடங்களையும், உடைகளையும் ஏற்படுத்திக் கொண்டான். குறிஞ்சி நில மக்களின் தொழில்முறைகளான தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், தினை விதைத்தல், புனம் காத்தல் முதலிய தொழில்களோடு வேட்டைத் தொழிலையும் செய்து வந்தான். குறிஞ்சிநில மக்களின் மேற்காணும் தொழில்முறைகளுக்கு முன்பு வேட்டைத் தொழிலே முதன்மையான தொழிலாக இருந்திருக்கும். காரணம் காடுகளில் வாழும் விலங்குகள் மழைக் காலங்களில் மலைகள் மீது செல்லும்போதும், குறிஞ்சிநில மாந்தர்களைத் தாக்க முற்படும்போதும் அவைகளை அழித்து வேட்டையாடி உணவுக்காக அவ்விறைச்சிகளை வைத்துக் கொண்டான்.

பிற்பாடு விலங்குகள் தங்களைத் தாக்காமல் இருக்கவும், அவற்றிடமிருந்து காத்துக் கொள்ளவும் காவல் காப்பதற்கென்று ஆட்களைப் பணித்தான். சுழற்சி முறையில் காவல் காக்க ஆட்களை நியமித்தான். இத்தகையவர்களே பிற்காலங்களில் வேட்டைத் தொழிலை மட்டுமே செய்யும் வேட்டுவர், வேடர் போன்ற இனக்குழுக்களாக உருவாகியிருக்கின்றனர். இவ்வாறாகவே வேட்டைச் சமூகமும் வேட்டுவக் குடிகளும் உருவாகின எனலாம். தற்காலங்களில் வேட்டை யாடுதல் என்பது கலையாகப் பார்க்கப்படுகிறது. இக்கலையானது வீரத்தின் விளைவு என்று கூறலாம்.

வேட்டைத் தொழிலின் கூறுகள்

சங்க காலத்தில் வேட்டைத் தொழில் சிறப்பாகப் போற்றி வளர்க்கப்பட்டது. அத்தகைய வேட்டைத் தொழில் செய்ய கீழ்க்கண்ட தொழிற்கூறுகள் இருக்க வேண்டும்.

1. தேவையான கருவிகளைக் கொண்டு செல்லுதல்
2. அதிக விலங்குகள் உள்ள இடத்தைக் காட்டில் கண்டறிதல்

3. சரியான இடத்தில் வலைவிரித்தல்

4. பதுங்கிய இடத்திலிருந்து விலங்கை வெளிப்படச் செய்தல்

5. வலையில் சிக்கியவுடன் பயம் அறியாது பாய்ந்து தாக்குதல்

என்பன வேட்டைத் தொழிலின் கூறுகளாகும். இத்தகைய கூறுகள் இருந்தால் மட்டுமே வேட்டைத் தொழில் சிறப்படையும்.

ஐந்திணையிலும் வேட்டைத் தொழில்

1. குறிஞ்சித் திணையில் வேட்டுவத் தொழில்

குறிஞ்சி நிலத்து வேட்டுவர்கள் மான் முதலியவற்றை வேட்டையாடுவர். கற்களை வீசியும், சீழ்க்கை அடித்தும், புதர்களில் மறைந்துள்ள விலங்கினங்களை எழுப்பி அலைத்து வேட்டையாடுவர். இது இவர்களின் முதன்மைத் தொழிலாகவும் பிற்காலங்களில் அமைந்துவிட்டது என்ற செய்தியை நாம் முன்னரே கண்டோம்.

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே;
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே"
(புறநானூறு 214: 4-5)

என்ற பாடல்வழி யானையை வேட்டையாட வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடையவர்கள் அந்நோக்கினை அடைவார்கள். குறும்பூழ் (காடை) வேட்டைதானே என நினைத்து செல்பவர்கள் வெறுங்கையுடனே தான் வருவார்கள். மேற்கண்ட பாடல் மூலம் வேட்டைத் தொழிலுக்குச் செல்வோர் தொழில் நோக்கும் உயர்ந்த குறிக்கோளும் கொண்டு செல்ல வேண்டும் என்று கூறுகிறது.

ஒரு சிறைப் பெரியவன் என்னும் புலவன் புறநானூற்றுப் பாடலொன்றில், மாட்சிமைப்பட்ட வில்லையுடைய வீளையொலியை உடையோராய்க் கற்களை வீசி எழுப்பி, அகன்ற இடத்தையுடைய காட்டிடத்துத் தன் இனத்தினின்றும் பிரிந்த துன்பத்தையும் இளமையையும் உடைய பெண்மான் நேரே இருப்ப அதனை அறியாது கலைமானைக் கொல்லும் வன்கண்மை உடையவர் வேடர்கள் (குறுந்தொகை - 272: 2-5) என வேட்டுவரின் குணங்களைப் பதிவு செய்கிறார். மேலும், நற்றிணையில் தலைவியின் கண்களுக்கு வேட்டையாடும்பொழுது வேட்டுவர் விலங்கினைக் கொன்று பறித்த குருதி

தோய்ந்த அம்பு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. (நற்றிணை 13: 3-4, நற்றிணை 75: 6-8)

பாலை பாடிய பெருங்கடுக்கோ கலித்தொகையில் வேட்டையாடல் குறித்த செய்தியைக் கூறுகிறார்.

“கொலை வெங் கொள்கையோடு நாய் அகப்படுப்ப,
வலைவர்க்கு அமர்ந்த மட மான் போல”
(கலித்தொகை, பாலைக்கலி: 16-17)

எனும் பாடலடி, அழகிய மானானது கொலை செய்யும் கொடிய எண்ணங்கள் கொண்ட நாய்களின் வலையில் சிக்காமல், வேடனின் வலையில் சிக்கிக்கொண்டது என உரைக்கிறது.

குறிஞ்சி நிலத்தில் மட்டும் இருந்த வேட்டைத் தொழில் பிற திணைகளிலும் பரவியது. மக்கள் இடம்பெயர்வும், பொருளாதாரமுமே இதற்கு முக்கியக் காரணங்களாக அமைந்தன.

உ. முல்லைத் திணையில் வேட்டுவத் தொழில்

முல்லை நிலத்திலும் வேட்டைத் தொழில் இருந்தது என்பதை முல்லைப்பாட்டு இயம்புகிறது.

“கான்யாறு தழீஇய அகல்நெடும் புறவில்
சேண்நாறு பிடவமொடு பைம்புதல் எருக்கி,
வேட்டுப்புழை அருப்பம் மாட்டி, காட்ட
இடுமுட் புரிசை ஏமுற வளைஇ,
படுநீர்ப் புணரியின் பரந்த பாடி” - (முல்லைப்பாட்டு. 24-28)

பகைவர்களை வெற்றிகொள்ள மறவர்கள் அக்காட்டில் நீண்ட நெடிய தொலைவிற்கு மணம் வீசும் பிடவச் செடிகளையும், பசுமையான புதர்களையும் வெட்டி, வேட்டுவரின் அரண்களை அழித்து, காவலுக்காகக் காட்டிலுள்ள முள்ளால் மதிலை வளைத்துக் கட்டிய இடத்தில், கடல் போன்ற பாசறையை அமைத்தனர் என மேற்கண்ட பாடல் பொருளுணர்த்துகிறது.

இப்பாடலின் வழி முல்லைக்காட்டில் உள்ள விலங்குகள் மலைப்பகுதிக்கு வராது தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அரண்களுக்கு அந்தப்புறம் சென்று விலங்குகளை வேட்டையாடிக்

கொள்வதற்கும் வேட்டுவர்கள் அரண்களை அமைத்துக் கொண்டனர் என மேற்கண்ட பாடல்மூலம் உணரமுடிகிறது.

3. மருதத் திணையில் வேட்டுவத் தொழில்

மருத நிலத்திலும் வேட்டைத் தொழில் இருந்தது என்பதைக் கீழ்க்காணும் சங்கப் பனுவல் வழி அறியலாம்.

“வாரல்எம் சேரி; தாரல்நின் தாரே;
அலரா கின்றால்- பெரும! - காவிரிப்
பலர்ஆடு பெருந்துறை மருதொடு பிணித்த
ஏந்துகோட்டு யானைச் சேந்தன் தந்தை,
அரியல்அம் புகவின் அம்தோட்டு வேட்டை
நிரைய ஒள்வாள் இளையர் பெருமகன்,
அழிசி ஆர்க்காடு அன்னஇவள்
பழிதீர் மாண்நலம் தொலைதல் கண்டே” - (குறுந்தொகை.258)

சோழ நாடு வளமிக்க நாடு. காவிரி கரைபுரண்டோடும் பகுதி. இத்தகைய பகுதியில் ஆர்க்காட்டை அழிசி என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனின் நகரமானது அழகும், புலமையாளர்களைக் கொண்டதும் ஆகும். உயர்ந்த கொம்பை உடைய யானைகளைப் பெற்றவனும், உணவாகக் கள்ளினை உண்பவனும், பகைவர்களுக்கு பெருந்துன்பமான நரகத்தைத் தரக்கூடிய ஒள்ளிய வாள் கொண்டவனும், இளம்படைகளைப் பெருவாரியாக வைத்திருப்பவனும், இவற்றோடு விலங்குகளை வேட்டையாடும் தொழிலைச் செய்பவனும் உள்ள இந்நாட்டில் இருக்கும் எம் தலைவியானவள் உம்மை நினைத்து வருந்தி அழகும், உடலும் மெலிந்து போவதால் காண்போர் யாவரும் அலர் பேசுகின்றனர். அதனால், நீவீர் நாங்கள் வசிக்கும் இத்தெருவுக்கு வரவும் வேண்டாம்; நீவீர் மாலையைத் தரவும் வேண்டாம் எனத் தலைமகனுக்குத் தோழியானவள் அறிவுறுத்துகிறாள்.

மேற்கண்ட பாடல்வழி மருத நிலத்தில் வாழும் மன்னனும் மக்களும் வேட்டைத் தொழில் செய்திருக்கின்றனர் என்பதை அறியலாம்.

4. நெய்தல் திணையில் வேட்டுவத் தொழில்

நெய்தல் நிலத்து மக்களும் வேட்டைத் தொழிலைச் செய்துள்ளனர் எனப் பட்டினப்பாலை உணர்த்தும்.

“சினைச் சுறவின் கோடுநட்டு
மனைச் சேர்த்திய வல்லணங்கினான்- (பட்டினப்பாலை. 86-87)

என்ற பாடல்வழி நுழையர்கள் சினை கொண்ட சுறாவினை வெல்ல, அதன் கோடு நட்டு வணங்கி வழிபாடு நடத்தியிருக்கின்றனர் எனப் பொருளுரைக்கிறது. இதன்வழி நெய்தல் நிலத் திமிலர்களும் கடலுக்குள் சென்று வேட்டைத் தொழிலைச் செய்துள்ளனர் என்பது புலனாம்.

5. பாலைத் திணையில் வேட்டுவத் தொழில்

பாலைத் திணையிலும் வேட்டையாடும் தொழில் இருந்திருக்கிறது; இருக்கிறது என்பதைக் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,
நல்லியல்பு இழந்து, நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”
- (சிலப்பதிகாரம் - காடுகாண்காதை.64-66)

என்ற பாடல்வழி முல்லையும் குறிஞ்சியும் தன்னியல்பிலிருந்து பிறழ்ந்து, உடலை வருத்தும் வெயிலும், நிலம் நீரின்றி வறண்டு போகுமாயின் பாலை எனும் நிலம் உருவாகும் எனச் சிலம்பு சுட்டுகிறது.

குறிஞ்சியில் வேட்டுவக் குடியினரும், முல்லையில் மான், முயல் போன்ற காட்டு விலங்குகள் இருப்பதாலும், மேற்கண்ட கூற்றின்படி, பாலைநிலத்தில் வேட்டுவத் தொழில் இருந்திருக்கும்.

அதை விடுத்து தனியாகப் பாலை நிலத்தை மட்டும் நோக்குகையில், எயினர்களின் முதன்மைத் தொழிலாக வழிப்பறித்தல், வழியில் வருவோரைக் கொல்லுதல், கொள்ளை அடித்தல் போன்றவை உள்ளன. அப்படி மனிதர்கள் இல்லாதபோழ்து விலங்குகளையும் வேட்டையாடி உண்பர். அவர்களின் முதன்மைத் தொழில்களுடன் வேட்டைத் தொழிலானது பெரும்பாலும் ஒத்துள்ளது. எனவே பாலை நில ஆறலைக் கள்வர்களும் வேட்டைத் தொழிலைச் செய்துள்ளனர் என்பது அறிவாம். இச்செய்தியைக் கீழ்க்கண்ட பாடல் உணர்த்துகிறது.

“அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவும்
களவுஏர் வாழ்க்கைக் கொடியோர்...”
- (பெரும்பாணாற்றுப்படை. 39-41)

முடிவுரை

மேற்கண்டவாறு ஒவ்வொரு திணைக்கும் பாரம்பரியத் தொழில் உண்டு. குறிஞ்சி நிலத்திற்குத் தினை விதைத்தல், புனம் காத்தல், தேனெடுத்தல் முதலிய தொழில்களும், முல்லை நிலத்திற்கு நிரை மேய்த்தல் முதலிய தொழில்களும், மருத நிலத்திற்கு உழவுத் தொழிலும், நெய்தல் நிலத்திற்கு உப்பு விளைவித்தல், மீன் பிடித்தல் முதலிய தொழில்களும், பாலை நிலத்திற்கு வழிப்பறித்தல், கொள்ளையடித்தல், கொல்லுதல் முதலிய தொழில்களும் இருக்கின்றன. சில திணைகளில் பொருளாதாரம், இடப்பெயர்வு முதலிய காரணங்களால் புதிய தொழில்களும் மற்றும் மற்ற திணைகளில் உள்ள தொழில்களும் பிற திணைகளில் நடைபெறுவதும் உண்டு. குறிஞ்சி நிலத்தில் வேட்டைத் தொழில் அறிமுகம் ஆனது. இப்படியாக, குறிஞ்சி நிலத்தில் வாழும் வேட்டுவர்களுக்கு மட்டுமே உரித்தான வேட்டைத் தொழில் முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்ற மற்ற திணைசார் மக்களும் கைக்கொண்டுள்ளனர் என்பது மேற்கண்ட சான்றுகள் வழி புலனாம். அதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் அதிகம் காணப்படுகின்றன.

துணைநூற்பட்டியல்:

1. சசிவல்லி.வி.சி., (1989) பண்டைத் தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113.
2. புலியூர் கேசிகன் (உரை), (2021) சிலப்பதிகாரம், குமரன் பதிப்பகம், சென்னை 600 017.
3. சுப்பிரமணியன்.ச.வே. (உரை), (2010) சங்க இலக்கியம் பத்துப்பாட்டு (முழுவதும்) தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை 600 108.
4. புலியூர் கேசிகன் (உரை), (2021) குறுந்தொகை மூலமும் உரையும், குமரன் பதிப்பகம், சென்னை 600 017.
5. புலியூர் கேசிகன் (உரை), (2021) கலித்தொகை மூலமும் உரையும், சரண் புக்ஸ், சென்னை 600 017.
6. புலியூர் கேசிகன் (உரை), (1967) நற்றிணை முதற்பகுதி, பாரி நிலையம், சென்னை 600 108.

7. புலியூர் கேசிகன் (உரை), (2019) புறநானூறு மூலமும் உரையும், நாச்சியார் பதிப்பகம், சென்னை 600 024.

8. இராகவையங்கார்.ரா. (உரை), (1951) பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பகம், அண்ணாமலை நகர்.

9. கோவிந்தன்.கா. (உரை), (1915) முல்லை (முல்லைப்பாட்டு ஒரு விளக்கம்), திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18.

பன்னிரு திருமுறைகளில் வேட்டுவர் என்னும் சொல்லாட்சி

பு.அரவிந்த பிரகாஷ்
முதுகலைத் தமிழாசிரியர்,
லதா மாதவன் பதின்மமேனிலைப்பள்ளி, மதுரை.
கைபேசி: 6383931529
aravinthaprakash2311;gmail.com

முன்னுரை

வேடர் அல்லது வேட்டுவர் எனும் சொல் தொல் குடியாகக் கருதப்படும் வேட்டையாடும் தொழிலைச் செய்யும் குறிஞ்சிநில மக்களைக் குறிக்கும் சொல்லாகும் தொல்காப்பிய அகத்திணையியலில் ஐந்து திணைக்குரிய மக்களைச் சொல்லும் இடத்தில்,

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் ஆயர், வேட்டுவர் என்னும் பதத்தினைக் கையாண்டுள்ளார். இதற்கு உரை வகுத்த இளம்பூரணர் ஆண் மக்களைப் பற்றி வரும் திணைப் பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும்; அவ்விடத்து வரும் கிழவரும் உளர் என விளக்குகிறார். இங்கு ஆயர் என்போர் நிரை மேய்ப்பவர்களாகவும் வேட்டுவர் என்போர் வேட்டைத் தொழில் செய்பவர்களாகவும் குறிக்கப்பெறுகின்றனர். வேட்டுவர் என்னும் சொல்லாட்சி பன்னிரு திருமுறையில் பயின்று வரும் பாங்கினைக் கட்டுரையாகக் காண்போம்.

பன்னிரு திருமுறை

தமிழ் மொழியினைப் பக்தியின் மொழி என்று போற்றுவர் சான்றோர். பல்லவர் காலமே பக்தியின் மறுமலர்ச்சிக் காலம் என்பர் ஆய்வறிஞர்கள். சைவத்தின் நாயன்மார்களும் வைணவத்தின் ஆழ்வார்களும் 'பக்தி சுவை நனி சொட்ட சொட்ட' பதிகங்களையும்

பாசுரங்களையும் அருளியுள்ளனர். இதில் நாயன்மார்களின் பதிகங்கள் பன்னிரு திருமுறையெனப் போற்றப்படுகின்றன. இந்தப் பன்னிரு திருமுறை சைவர்களின் தோத்திர நூலாகவும், புனித நூலாகவும் போற்றப்படுகிறது. பகவானைப் பூமாலையால் வணங்காமல் பாமாலையால் வணங்க பெரிதும் துணைபுரிவது இந்தப் பன்னிரு திருமுறை. இந்தச் சைவப் புனித நூல்களைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. தொகுப்பிக்கக் காரணமாக அமைந்தவர் முதலாம் இராச இராச சோழன் என்பதையும் அறிய முடிகிறது. திருஞானசம்பந்தர் தொடங்கி சேக்கிழார் வரை இருபத்தேழு அடியார்ப் பெருமக்கள் இப்பன்னிரு திருமுறைகளைப் பாடியுள்ளனர்.

பன்னிரு திருமுறையில் வேட்டுவர் எனும் சொல்லாட்சி

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டில் வேட்டுவர் எனும் சொல் ஆறு இடங்களிலும், வேடர் எனும் சொல் அறுபத்தெட்டு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் வேட்டையாடும் தொழிலைச் செய்யும் வேடர்களையும், இறைவனாகிய பரம்பொருளைச் சில இடங்களில் வேடன் எனும் பதத்தால் அடியார்கள் போற்றிச் செல்கின்றனர். சைவத்தில் உயர்ந்த அன்புடையவனாக, கண்ணப்பன் திகழ்ந்துள்ளதைப் புராணச் செய்திகளின் வழி அறிந்து கொள்ளமுடிகிறது. 'வேட்டுவர்' எனும் சொல் சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறையில் ஒரு இடத்திலும், பக்திப் பாடல்களின் திரட்டாகிய பதினோராம் திருமுறையில் நான்கு இடங்களிலும், சேக்கிழாரின் பெரியபுராணத்தில் ஒரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேடர் எனும் பதமானது சம்பந்தரின் முதல் மூன்று திருமுறையில் பத்து இடங்களிலும், அப்பரின் அடுத்த மூன்று திருமுறைகளில் ஐந்து இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுந்தரரின் ஏழாம் திருமுறையில் நான்கு இடங்களில் வேடர் எனும் பதமானது பயன்படுத்தப்பட்டுள்ளது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் கீர்த்தி திருஅகவல் எனும் பகுதியில் வேடர் எனும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. திருக்கோவையாரிலும் வேடர் எனும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒன்பதாம் திருமுறையில் ஒரு இடத்திலும், பத்தாம் திருமுறையில் இரண்டு இடத்திலும், பதினோராம் திருமுறையில் எட்டு இடங்களிலும், பன்னிரெண்டாம் திருமுறையில் முப்பத்தெட்டு இடங்களிலும் வேடர் எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பதிகங்களின் வழி அறியமுடிகிறது.

சம்பந்தர் கூறும் வேடர்

திருஞானசம்பந்தரின் திருப்பேணுபெருந்துறைப் பதிகத்தில் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய ஈசனைக் குறிக்க வேடர் எனும் பதத்தை,

“செய்பூங் கொன்றை கூவிள மாலை
சென்னியுள் சேர்புனல் சேர்த்தி
கொய்பூங் கோதை மாதுமை பாகன்
கூடியோர் பீடுடை வேடர்” (01.42.03)

எனும் பதிகத்தில் பயன்படுத்தியுள்ளார். கொன்றை வில்வ மாலை அணிந்த இறைவன் தலையில் கங்கைக்கு இருப்பிடம் தந்து தம் பாதி உடலை உமையவளுக்குத் தந்த பெருமையுடைய வேடன் என்று இறைவனை வேடன் எனும் சொல்லால் புகழ்கிறார் சம்பந்தர்.

அப்பர் கூறும் வேடர்

மேலைத் திருக்காட்டுப்பள்ளித் திருத்தலத்தில் மேவும் தீயாடியப்பர் எனும் இறைவனை, வேடர்கள் வணங்கும் சிறப்புடையவர் என்பதை,

தேனை வென்ற சொல்லாளொடு செல்வமும்
ஊனை விட்டுஉயிர் போவதன் முன்னமே
கான வேடர் கருதும் காட்டுப் பள்ளி
ஞான நாயகனைச் சென்று நண்ணுமே. (05.84.03)

எனும் அடிகளில் விளக்குகிறார். பெண் விருப்பமும், பொன் விருப்பமும் வீடுபேறு அடைய வழி வகுக்காது. காட்டில் வாழும் வேடர்கள் தொழும் திருக்காட்டுப்பள்ளியில் மேவும் இறைவனைத் தொழுது வாழ்வில் உயர்வு அடைவீர்களாக என்று காட்டுப்பள்ளி நாதனைப் புகழுகிறார் அப்பர்.

சுந்தரர் கூறும் வேட்டுவர்

திருப்புனவாயில் திருத்தலத்தில் மேவும் இறைவனை வேண்டி சுந்தரர் பாடிய பதிகம் ஒன்றில் வேட்டுவர் எனும் சொல் கூறப்பட்டுள்ளது. பேயாய் உழலும் சிறு மனதிற்கு அறங்கூறும் தன்மையில்,

நில்லாய் மனம் என்னோடு
சூளறு வைகலும்

நல்லாம் நமைஆ ளுடையான்
நவிலும் இடம்
வில்லாய்க் கணைவேட் டுவர்ஆட்ட
வெகுண்டு போய்ப்
புல்லாய்க் கணம் புக்கொளிக்
கும்புன வாயிலே. (07.50.05)

எனும் திருப்பதிகத்தை அமைத்துச் சிறப்பு செய்துள்ளார். சிவபெருமான் மனம் மகிழ்ந்து வாழும் இடம், வேடர்களின் அம்பிற்குப் பயந்து மான்கள் அடைக்கலம் தேடிவரும் திருப்புனவாயில் திருத்தலம் என்று அத்தலத்தின் சிறப்பினை வேடர்களின் மூலம் சிறப்புறப் புகழுகிறார் சுந்தரர்.

மாணிக்கவாசகர் கூறும் வேடர்

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் தில்லையில் அருளிய கீர்த்தி திருஅகவல் எனும் பதிகத்தில் இரண்டு புராணச் செய்திகளைக் கூறுமிடத்து வேடுவன் எனும் பதத்தைக் கையாண்டுள்ளார். சாந்தம் புத்தூரில் தவம் புரிந்த வேடனின் வேண்டுதலுக்கு இறங்கி இறைவன் வில், வாள், வேல், தந்த செய்தியை,

தர்ப்பண மதநீர் சாந்தம் புத்தூர்
விற்போர் வேடற் கீந்த விளைவும்

என்னும் அடிகளில் விளக்குகிறார். மேலும் சோழனுக்கும் பாண்டியனுக்கும் நடந்த போரில் இறைவன் வேடனாகி காட்டிற்குள் மறைந்த செய்தியை,

வேடுவனாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கடந்த கள்ளமும்

என்னும் அடிகளில் விளக்குகிறார்.இவ்வாறாக, திருவாசகத்தில் வேடர் எனும் சொல் பயின்று வந்துள்ளதை அறிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை

பன்னிரு திருமுறையில் வேடர் என்னும் சொல்லாட்சி அறுபத்தெட்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும் அடியார்ப் பெருமக்கள் இறைவனைக் குறிக்க வேடன் எனும்

பதத்தினைக் கையாண்டுள்ளதையும் அறியமுடிகிறது. திருவாசகத்தின் வழி இறைவன் வேடனாக உருமாறிய திருவிளையாடல் செய்தியையும் அறிந்துகொள்ள முடிகிறது. பன்னிரு திருமுறையில் வேடர் எனும் சொல் வேட்டையாடும் வேடர்களைப் போற்றுவதாகவும், இறைவனைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளதை இக்கட்டுரை வழி அறிந்துகொள்ள முடிகிறது.

தலையநாடு - பட்டக்காரர்கள் வரலாறு

க.ஆண்டமுத்து வள்ளல்,
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.,
தலைமை ஆசிரியா (பணி நிறைவு),
புஞ்சைப் புகழூர்.

தலையநாட்டுப் பட்டாக்காராகள் வேட்டுவ சமுதாயத்தைச் சோந்தவாகள். பிற்காலப் பாண்டியா காலத்தில் முதலாம் மாறவாமன் குலசேகரப் பாண்டியன் காலத்தில் அவரது பிரதிநிதியாக பாண்டிய அரசன் சடையவாமன் சுந்தர பாண்டியன் என்பார் கி.பி. 1276 முதல் 1293 முடிய கொங்கு தேசத்தில் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்துள்ளார். அப்போது தாராபுரம் பகுதிகளில் கள்ளாகளின் தொல்லைகள் அதிகமாக இருந்துள்ளன. கள்ளாகளை அடக்குபவாகளுக்குச் சீமை சாரி செய்து கொடுப்பதாக அறிவித்தனா. இந்த அறிவிப்பு பல்வேறு பகுதிகளிலும் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் காளஹஸ்தியிலிருந்து குன்னாடி ராசாவும், உரிமைப்படை ராசாவும் வேட்டைக்காகத் தென்னாடு வந்தபோது மேற்படி அறிவிப்பைத் தெரிவித்தனா.

குன்னாடி ராசாவும், உரிமைப்படை ராசாவும் மாமன் மைத்துனாகள். இவாகள் சடையவாமன் சுந்தர பாண்டியனைச் சந்தித்து மேற்படி கள்ளாகளை அடக்கிவிடுவதாகப் வெற்றிலை, பாக்கு வாங்கிக் கொண்டு காளஹஸ்திக்குத் திரும்பிச் சென்றனா. அங்கு பெரியவாகளிடம் நடந்தவற்றைக் கூற அவாகள் தேவையான ஆயுதங்களையும், படைகளையும் அளித்து நல்வாக்கு கொடுத்து, தென்னாட்டிற்கு அனுப்பி வைத்தனா.

தென்னாடு வந்த குன்னாடி வேட்டுவ மன்னா சங்ககிரி மலையின் முதல் கோட்டையில் திப்புசுல்தான் காலத்தில் மாரியம்மன், காளியம்மன் கோயில் கட்டியதாகக் கூறும் கல்வெட்டுச் சாசனம் இருப்பதாகக் கூறப்படுகிறது. சேலம் அரசு ஆவணத்தில் (அரசிதழ் இது பற்றி குறிப்பு உள்ளது).

தென்னாடு வந்த குன்னாடி ராசனும், உரிமைப்படை ராசனும், கள்வாகளை விரட்டி வெற்றிபெற்று நாட்டை விட்டே விரட்டினா என பாண்டடியனிடம் வேட்டுவ ராசாக்கள் பாராட்டப்பட்டனா. 18 விருதுகளும் கொடுத்தார். மணுலூரைச் சோந்த பாடி பண்ணிரண்டு, பூண்டி மூப்பத்தாறு கிராமங்கள் உட்பட அந்தச் சீமைக்குப்பட்ட காரராகப் பட்டம் சூட்டினார்; தலையூரில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தனா. மணலூ பட்டக்காரா என்ற பெயா விளங்கியது. பின்னா மணலூ நாடு, தலையூ என்றும் பெயரானது:

இப்பரம்பரையில் கீழ்க்கண்ட பட்டக்காரா பெயாகள் வம்சாவளி மூலம் தெரிகிறது

1. அலகடம் செய்தகைக்கு ஆளியிடும் பாண்டிய வள்ளல்.
2. தண்டேறி முத்தைய பாண்டிய வள்ளல்.
3. சவுந்தர பாண்டிய வள்ளல்.
4. அன்னதானப் பாண்டிய வள்ளல்.
5. வாரணவாசிப் பாண்டிய வள்ளல்.
6. மெய்ப்பொருள் நாத பண்டிய வள்ளல்.
7. சொக்கய பாண்டிய வள்ளல்.
8. சவுந்தர பாண்டிய வள்ளல்.
9. கனகசபாபதி பாண்டிய வள்ளல்.
10. சவுந்தர பாண்டிய வள்ளல்.
11. கனகசபாபதி பாண்டிய வள்ளல்.
12. சவுந்தர பாண்டிய வள்ளல்.

இந்தப் பரம்பரை மெக்கன்சி சுவடி ஆவணத்தின்படி கி.பி. 1393 முதல் கி.பி. 1784 வரை 12 தலைமுறைகள் (391 ஆண்டுகள் தலையூரை ஆண்டுள்ளனா).

தலையூரில் பெரியநாயகி அம்மன் என்ற பிரம்மகாளிக்குக் கோயில் கட்டி வழிபட்டு வந்தனா.

குன்னாடி ராசனுக்கு சவுந்தர பாண்டிய வள்ளல் என்றும் உரிமைப்படை ராசனுக்கு வள்ளல் பெரியசாமி ராசனென்றும் இரு வகைப்பேருக்கும் செப்பேட்டுச் சாசனம் கொடுக்கப்பட்டது.

இப்பரம்பரையில் வந்த கனகசபாபதி வள்ளல் என்பார் திருஞான சம்பந்த கண்ணுடைய வள்ளல் மடத்திற்குச் சீடரானார்; கனகசபாபதி பாண்டிய வள்ளல் எனப் பெயர் மாற்றம் பெற்றார். பிறகு அப்பரம்பரையினா சைவர்களாயினர். அதன் பின் வந்த அனைத்துப் பட்டக்காராகளும் தங்கள் பெயரில் வள்ளல் என்பதைச் சூட்டிக் கொண்டனா.

பின்னா கீழ்த்தலைய நாடு மேல் தலைய நாடு என இருபாகமாகச் செய்து கீழ்த்தலைய நாட்டுக்கு 8 கிராமங்களும், மேல் தலைய நாட்டுக்கு 5 கிராமங்களும் பிரிவினை செய்து கொண்டார்கள். கீழ்த்தலையூ கிராமங்கள் தாராபுரம் வட்டத்தில் 1.தலையூ, 2.வேஸாம்பூண்டி (அரவக்குறிச்சி வட்டம்), 3.சாந்தப்பாடி, 4.மொடக்கூர், 5.சேந்தமங்கலம், 6.புங்கம்பாடி, 7.இனுங்கலூ, வேலம்பாடி, 8.அரவக்குறிச்சி - பள்ளப்பட்டி ஆக 8 கிராமங்கள் சவுந்தர பாண்டிய வள்ளலுக்கும், மேல் தலைய நாட்டைச் சோந்த கிராமங்கள் தாராபுரம் வட்டத்தில் 1.கிளாங்குண்டல், 2.பெரியமருதூ, 3.சின்னமருதூ, 4.கன்னிவாடி, 5.இடைக்கல்பாடி ஆக 5 கிராமங்களும் மேல்தலைய நாட்டுப்பட்டக்காரா வள்ளல் பெரியாயி மன்னா அவாகளுக்கும் இவ்விதமாகப் பிரிந்து நன்கு ஆண்டு வந்துள்ளனா.

பதினோராம் பட்டக்காரா காலத்தில் சுமார் கி.பி.1755-இல் மைசூ சமஸ்தானத்தின் (கி.பி. 1742 மதுரை நாயக்காகளிடமிருந்து திண்டுக்கல் சீமை மைசூரு சமஸ்தானத்தால் வெற்றி கொள்ளப்பட்டது). பட்டக்காரருக்கு தலைய நாட்டு நஞ்சைக் காணியின் 12 புஞ்சைக் காணயில் 500. இது தண்டிகை மானிய மென்று விட்டார்கள். ஆங்கிலேயா காலத்தில் ஜமீன்தாரா என்பது ரத்து செய்யப்பட்டு கிராம முன்சீப் ஆக நியமிக்கப்பட்டார்கள்.

கீழ்த்தலைய நாட்டு வள்ளலுக்கு புங்கம்பாடியில் 700 ஏக்கர் பூமியும், பூமதேவத்தில் 500 ஏக்கர் பூமியும், இனுங்கனூர் - வேலம்பாடியில் 500 ஏக்கர் பூமியும், தலையூரில் நஞ்சை நிலமும் மாந்தோப்பும் இருந்தன.

மைசூ சமஸ்தானத்தால் திண்டுக்கல் சீமை கைப்பற்றப்படு முன்பு தலைய நாட்டுப்பட்டக்காரா மெய்ப்பொருள்நாத வள்ளலின் இரண்டு மகன்கள் தலையூரை விட்டு நீங்கி தனக்காகக் கிராமங்களைப் பிரித்துக் கொண்டு புங்கம்பாடிக்கு மூத்த மகன் பூசைய வள்ளலும், பூமதேவத்திற்கு இளைய மகன் கனகசபாபதி வள்ளலும் சென்று தங்களுக்கான அரண்மனை கட்டி பட்டக்காராகளாக இருந்துள்ளனா. புங்கம்பாடியில் பூசைய வள்ளல் கரிய காளியம்மன் கோயிலும், பூமதேவத்தில் பட்டக்காரா கனகசபாபதி வள்ளல் மண்மாரியில் கரியன்னன் கோயில் கட்டி வழிபட்டுள்ளனா.

பூமதேவம் பட்டக்காரா பரமத்தி பட்டக்காரா பரம்பரையில் பெண் கேட்டபோது, உங்கள் நாடு மேட்டாங்காடாக இருக்கிறது. பெண் தர முடியாது என்று கூறிவிட்டனராம். அதற்காகவே பூமதேவம் பட்டக்காரா கனகசபாபதி வள்ளல் நங்காஞ்சியாற்றில் கோரையூத்திலும், பள்ளப்பட்டி அருகில் 2 தடுப்பு அணைகளும், அரவக்குறிச்சியில் 2 தடுப்பு அணைகளும் மண்மாரியில் குளமும் கட்டினார். வள்ளல் நாரம் என்ற ஊரை உருவாக்கினார். அதன் பிறகே பரமத்தி (இருக்கூ) பட்டக்காரா அரண்மனையிலிருந்து பெண் கொடுப்பதும் எடுப்பதும் நடந்து வருகிறது. அந்த வள்ளல் நகரமே மங்கபுரமாக மாறி இன்று பள்ளபட்டியாக இருக்கிறது. பூமதேவம் பெரியபட்டக்காரா வாரணவாசி வள்ளல் 1923-இல் காலமானார். அதன்பின் அவரது மகன் கனகசபாபதி வள்ளல் நிர்வாகத்திற்கு வந்தார். பள்ளபட்டிக்கோயில் உரிமை மறுக்கப்பட்டபோது தக்க சாட்சியங்களோடு உரிமையை மீட்டார்; எதிர்த்தவர்கள் ஊரை விட்டே போய் விட்டனா. பிறகு வழக்குப் பதிவு செய்து இனுங்கனூ பட்டக்காரரான கனகசபாபதி வள்ளல் பள்ளபட்டி மாரியம்மன் கோயில் முதல் உரிமை பெற்றார்.

பூமதேவம், இனுங்கனூ பட்டக்காரா கனகசபாபதி வள்ளல் 1930 முதல் 1985 வரை 55 ஆண்டுகள் வேலம்பாடி கிராம முன்சீப் வேலை பார்த்து வந்துள்ளார். அரசுச் சான்றுகள் பல பெற்றுள்ளார். கவிராயர்கள் பாடிய கவிதைகள் உள்ளன. அரசுக்கும், காவல் துறைக்கும் உதவியாக இருந்துள்ளார்.

தலையாரிப்பட்டி பிரபல காளி குறவன் 2 வேலி தாண்டி ஓடியபோது கனகசபாபதி வள்ளலின் மணிக் குதிரையும் 2 வேலி தாண்டி

ஓடி காளிக்குறவனைக் பிடிக்க உதவியது. 17.10.1904 அன்று பிறந்த கனகசபாபதி வள்ளல் 30.01.1987 அன்று காலமானார்.

அவருடைய மகன் ஆண்டமுத்து வள்ளல் முதுகலைப் பட்டம் பெற்று ஆசிரியர் பணியாற்றி, நொய்யல் அரசு மேல்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக விளங்கி இப்போது, புஞ்சைப் புகழூரில் வாழ்ந்து வருகிறார். அவரது மகன் சரவணக்குமார் வள்ளல் பெங்களூரில் மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

பட்டக்காரா கனக சபாபதிவள்ளலின் மூத்த சகோதரா பெரியசாமி வள்ளல் என்பார் நெடுங்காலம் இனுங்கனூர் கிராம முன்சீப் ஆக இருந்துள்ளார்.

வாரணவாசி வள்ளல்

பெரியச்சாமி வள்ளல் வழயினர்

சௌந்திரபாண்டிய வள்ளல்

முத்துராமையா வள்ளல்

மெய்ப்பொருள் நாத வள்ளல்

தமிழரசு வள்ளல், பூபதி வள்ளல்

கதிர்வேல் வள்ளல்

ரவிக்குமார் வள்ளல் வேலுசாமி வள்ளல்

தமிழரசு, கவியரசு வள்ளல்கள்

அண்மைக்கால வம்சா வழியினர்

கனகசபாபதி வள்ளல் 1904-1987

மகன் ஆண்டமுத்து வள்ளல்

பேரன் சரவணக்குமார் வள்ளல்

மேல் தலையநாட்டுப் பட்டக்காராகள்

தமிழ்நாட்டில் பழமையானதோர் ஊ பொருளூர். வேளாம்பூண்டி, தலையூர் கன்னிவாடி கிழாங்குண்டல் சின்னமருதூர், இடைக்கல்பாடி குமாரபாளையம் ஆகிய 7 ஊர்களைக் கொண்டது மேல் தலையநாடு.

பொருளூரைத் தலைமையிடமாகக் கொண்டு மேல் தலையூ பட்டக்காரராக நியமிக்கப்பட்டார்கள். வேட்டுவர் மரபில் வந்த வள்ளல் பெரியாய்க்கவுண்டர் வம்சாவளியினர். இவாகள் நல்ல பெரியாய்க்கவுண்டர் வள்ளல் பெரியாய்க் கவுண்டர் என்ற பெயர்களை மாறி மாறிப் புனைந்து கொண்டு நாட்டு நிர்வாகம் செய்தனர். இவர்களின் வம்சாவளி கி.பி.1379 முதல் பட்டம் பெற்று நிர்வாகம் செய்ததாகக் கூறுகிறது. கம்பெனியார் ஆட்சி வரும்வரை 13 பட்டக்காராகள் 388 வருடம் நிர்வாகம் செய்ததாகக் கூறுகிறது.

2 - ஆம் பட்டக்காரா 13-இல் பெரியாய்க் கவுண்டர் மருணப்பட்டி என்னும் ஊரில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தார். 5-ஆம் பட்டக்காரா கிழாங்குணடலில் கோட்டை கட்டி ஆட்சி புரிந்தார்.

கி.பி. 1765 - ஆம் ஆண்டு (விய தை 13) வள்ளல் பெரியாய்க்கவுண்டர் காலமாகவே அவா மகள் நல்ல பெரியாய்க்கவுண்டர் அவாகட்கு மைசூர் ஐதா அலியின் அதிகாரி பீமரால் பட்டம் கட்டி நிர்வாகம் செய்ய அனுமதித்தார். இவ்வம்சாவளியின் இன்றைய வாரிசுகள் சக்திவேல் பெரியாய்க்கவுண்டர் அவரது மகன் பரணீதரன் பெரியாய்க்கவுண்டர் ஆகிய இருவரும் அரவக் குறிச்சி வட்டம் இனுங்கனூரிலும், காலம் சென்ற ராமமூத்தி பெரியாய்க் கவுண்டர் மகன் ஜீவன் ராம் பெரியாய்க் கவுண்டர் தாராபுரம் வட்டம், கிழாங்குண்டலிலும் வாழ்ந்து வருகின்றனா.

சான்றுகள்:

1. பாளையப்பட்டுக்களின் வம்சாவளி - தொகுதி வள்ளல் கவுண்டன் வம்சாவளி பக்கம் 143 TV BOK 0010699, 194 Pages. 194 Page, 12 MB PDF.

2. பட்டக்காரா கனக சபாபதி வள்ளல் எழுதிய தலையநாட்டுப் பட்டக்காராகள் வரலாறு என்ற கையெழுத்துச் சுவடி.

அரசத் தொழில் செய்த தமிழ் வேட்டுவக்குடியினர்

ப.ஆனந்தகுமார்,
வரலாற்று ஆய்வாளர், நாமக்கல்.
அலைபேசி: 8884625666

கல்வெட்டு

வேட்டு மாவலிக்கு விருந்திட்டோன் பாண்டியன் படிதொடப்பரி ஏறும் பெருமாள் (திருமெய்யம் ஊனையூர் கல்வெட்டு; கிபி 1577;--758) வேட்டு என்ற சொல் வேட்டுவக் குடியைச் சுட்டும்; மாவலி என்ற சொல் மாவலி வாணரைச் சுட்டும்; விருந்து = உபசரிப்பு; பாண்டியன் என்ற சொல் பாண்டிய அரசனைக் குறிக்கும். மாவலி வாணர் மற்றும் பாண்டிய மன்னர்கள் வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்கள் என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்தும்.

"வேட்டு விலியும் கறயறும் வெங்கோசெயும் இளமகன் இவ்வூருக்கு பாடி காவலாகவும் இக்குடி நீங்கா திரு விடையாட்ட" (இரவி கோதை செப்பேடு, கிபி.10).

வேட்டு=வேட்டுவக் குடியைக் குறிக்கும். விலியும் = வேட்டுவக் குடியில் ஒரு உட்குழுவின் பெயர் (வில்லி வேட்டுவர்). கறயறும் = வேட்டுவக் குடியில் ஒரு உட்குழுவின் பெயர்(கரைய வேட்டுவர்). வெங்கோசெயும் = வேட்டுவக் குடியில் ஒரு உட்குழுவின் பெயர் (வெங்கோச்சி வேட்டுவர்)

"...நெடு வாசலில் வன்னியரில் மாவலி வாணராயர் மக்களில் பெற்றா... கள் காலிங்கராயரும் மெய்க ...கராயரும் இவர்கள் ..." (மாவலி வாணாதிராயர் ஆட்சி PSI NO; -971; கிபி 1485).

இங்கு வன்னியர் என்ற சொல் வேட்டுவக் குடியில் ஒரு உட்குழு பெயரைக் குறிக்கும். மாவலி வாணாதிராயர் வேட்டுவக் குடியைச்

சேர்ந்தவனாகக் கல்வெட்டுகள் கூறுகிறது. ஆகவே இந்தக் கல்வெட்டில் வன்னி என்ற சொல் வன்னி வேட்டுவக் குலத்தைக் குறிக்கும். வன்னியர் என்ற சொல் வீரர் என்று பொருள் தருகிறது.

திருமாலிருஞ்சோலை நின்றார் மாவலி வாணாதிராயரை ‘‘கஜவேட்டை கண்டருளியவன்’’ என்று கல்வெட்டு கூறுகிறது. (கிபி 1428; 1976 :572).

கஜ வேட்டை ஆடி =யானை வேட்டை ஆடி

‘சொக்கன் மதுரையினில் தொண்டர்க்கு முன்னவீழ்த்த பொய்க்குதிரைச் சந்தைக்குப் போகுமதோ -மிக்க கரசரணா வந்த கரும்புறத்தார்க் கெல்லாம் அரசரான மாவலி வாணா’. (காளமேக புலவர், தனிப்பாடல் திரட்டு, 508).

கரும்புறத்தார் -வேடர். இச்சொல் இலக்கண உரைகளில் மேற்கோளாக வழங்குகின்றது. எனக் கூறுகிறது. (சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்கினியர் உரையும் 2751). மாவலி வாணரை வேடர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். மணிமேகலை காலத்துச் சோழ வேந்தனாகிய நெடுமுடிக் கிள்ளியின் தேவி சீர்த்தி யென்பவள் மாவலி வாணர் மரபில் தோன்றிய ஓர் அரசன் மகள் என்று சீத்தலைச் சாத்தனார் கூறுகின்றார்.

‘நீரிற் பெய்த மூரிவார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி யென்னுந் திருத்தகு தேவியொடு,
(மணிமேகலை 19. 51 - 116).

வலிமையுள்ள நீண்ட வில்லை உடைய மாவலி வாணர் என்று இப்பாடல் கூறுகிறது.

‘‘ஆறகளூருடைய பொன் பரப்பினான வேட்டும் இராஜாராஜா தேவனாரான விக்கிரம சோழ மகதை நாடாழ்வார்.’’ (அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம் பெரியமறை சுவேதபுரீஸ்வரர் கோயில் முன்மண்டபக் கிழக்குச்சுவர் காலம் - மூன்றாம் குலோத்துங்கன், யா.32,கி.பி.1210; 1994-95:203). இங்கு வேட்டும் என்ற சொல் வேட்டுவக் குடியைச் சேர்ந்தவனைக் குறிக்கும். சேலம் ஆத்தூர் ஆறகளூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட பாணர்கள்

(வாணக்கோவரையர்கள்) வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்கள் என்பதை இக்கல்வெட்டு கூறுகிறது .

'பொருமாள் கரி வேட்டும் பூழ் வேட்டும் போனார்கள்
உரியார் பெறுவ றொழிந்தார் பெறாரே' (தத்துவ கலிமடல்)

கரி வேட்டும் - யானை வேட்டுவக் குலத்தைக் குறிக்கும். பூழ் வேட்டும் - பூழ் (ஒரு வகையான பறவை) வேட்டுவக் குலத்தைக் குறிக்கும். இங்கு வேட்டும் என்ற சொல் வேட்டுவக் குடியைச் சேர்ந்தவனைக் குறிக்கும். ஓர் வார்த்தையில் கடைசி மற்றும் இடை எழுத்துக்களை நீக்கி எழுதுவது கடைக்குறை மற்றும் இடைக்குறை விகாரம். வேட்டுவன் என்ற சொல் வேட்டு என்று எழுதப்படும். வேட்டுவனும் என்ற சொல் வேட்டும் என்று எழுதப்படும்.

"கயத்தாத்து வேட்டு மாற ராசா உடைய தென்காசிக் குலசேகர ராசாவுக்கு ஒன்றுக்கொன்று விரோதமாய் சமர்வெகீமை நடந்ததில் குலசேகர ராசா கிராமம்" (நடுவக்குறிச்சி பாளையம் வம்சாவழி, டி.3886). கயத்தாத்து பகுதியை அரசாட்சி செய்த பாண்டியர்கள் பாண்டிய வேட்டுவக் குலத்தைச் சேர்ந்ததால் "வேட்டு மாற ராசா" என்றழைக்கப்பட்டனர். பாண்டிய அரசரை "திருநெல்வேலி பெருமாளான வேட்டும் பெருமாள்" என்று அழைக்கப்பட்டதை பாளையங்கோட்டை கல்வெட்டு (கிபி 1547; திருநெல்வேலி கல்வெட்டுகள் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடர் எண் 56/2005) கூறுகிறது.

"வாழரசரில் பாண்டி குலத்தில் பாண்டி கவுண்டரும்" (தூரன் குலச் செப்பேடு; கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர் காலம் (கிபி 1682 - 1689) .

வாழரசரில் பாண்டி குலத்தில் பாண்டிக் கவுண்டரும் - அரச குலத்தவரில் பாண்டிய வேட்டுவ குலத்தைச் சேர்ந்த பாண்டிக் கவுண்டர் என்பவரைக் குறிக்கும். 'திருபுவனத்து ராசாக்கள் தம்பிரான் பராக்கிரம பாண்டியத் தேவர் மகன் இராகூத்த பெருமாள்' என்பவர் ஈரோடு பெருந்துறை காத்தாங்கண்ணிப் பகுதியில் ஊராளியாக இருந்தவர். (கிபி 1518,ளுஐஐ,ஏடீடு-24,சூடீ.-197, பெருந்துறைக் கல்வெட்டு). இக்கல்வெட்டில் பேசப்பட்ட பாண்டியர் கொங்கு நாட்டை ஆட்சி செய்த சுந்தர பாண்டியன் வீர பாண்டியன் வழியில் வந்தவர். இவர்கள் பாண்டிய வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்கள்..

“கன்னடருங் காலிங்கருந் தென்னவருந் சிங்கையருந் பாஞ்சாலரும் பொப்பளரும் பூலுவரும் மத்திரு மராட்டாரு வத்தவரு மாகதரு கொடி நுடங்கு கைகை கோபுர கொற்ற வாசலிலே வந்தீண்டி....... திறைகள் கைக்கொண்டு... முடி சூடி” (குடந்தை திரைலோக்கி சுந்தரேஸ்வரர் கோவில் கிபி 1150; 1931 -32:103). “கன்னடரும் காலிங்கரும் தென்னவரும் சிங்களரும் வங்காளரும் கொங்கணருங் கூவகருங் சாகியரும் காம்போதரும் கோசலரும் குந்தலரும் பப்பாரும் பாஞ்சாலரும் பொப்பலரும் பூவுலறும் (பூலுவர்) மீதிரடும் பாரிடரும் வத்தவரும் மாகதரும் கொடி நுடங்கு கோபுர கொற்ற வாசலிலே வந்தீண்டி இடு திறைகள் நெடிக் கொடிய...லியர் புலவரி ரவ கற்றி மிலாட குலத்தவரித் தோர் குலாவு...” (திருச்சி ஊட்டத்தூர் கல்வெட்டு; SITI VOL-2 NO-1082). போசள மன்னன் தன்னுடைய படையெடுப்பின் போது வென்று அடக்கிய மன்னர்களை வரிசைப் படுத்தியுள்ளான். இவன் கேரளா (மலையாளர்), வட கொங்குப் பகுதிகளை வென்றான் என்பது அவன் சாசனத்தில் கூறப்பெறுகிறது. வட கொங்குப் பகுதிகளை ஆண்ட பொலுவர்களை (பூலுவர்) வென்றதாகக் கூறிக் கொள்கிறான். (EPIGRAPIA CARNATAKA VOL-4, p-508)பூலுவ வேட்டுவ குலத்தவர்கள் அரசகுலத்தவர்கள் என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிப்படுத்தும்.

சேர, பாண்டிய, சோழ அரசர்கள் வில்லர் குலத்தை சேர்ந்தவர்கள். (அகம் 31/13 -15; புறம் 336/1 -2 , 338/5 -8 , 221, 8-13).

சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி சங்ககாலச் சோழ மன்னர்களில் ஒருவன் ஆவான். இவனைப் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் (16,125,367,377) நான்கு உள்ளன. பெருநற்கிள்ளியைப் பாடலின் அடிக்குறிப்பில் புலவர்கள் “சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி” என்று கூறினார்கள்.

இராசசூயம் = நாட்டை விரிவுபடுத்த அரசன் செய்யும் ஒரு வகையான வேள்வின் பெயர் அல்லது நீர் சூழ் நாட்டு ராஜா ; சோழன்= வேட்டுவக்குடியில் ஒரு உட்குழு பெயரை (சோளன்) குறிக்கும்.

பெருநற்கிள்ளி=சோழனின் இயர்பெயர்; வேட்ட=வேட்டு = வேட்டுவக் குடியைக் குறிக்கும். பெருநற்கிள்ளி வேட்டுவக் குடியைச் சேர்ந்ததால் வேட்ட பெருநற்கிள்ளி என்று கூறப்பட்டனர். செம்பிய (செம்ப) வேட்டுவ குலத்தவர்களை வளவர், சோழ வேட்டுவன், சூரிய குலம் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்பட்டனர்

சோழ பாண்டியன், சோழ கேரளன், சோழ கங்கன், சோழ கன்னகுச்சி ராசன், சோழ வல்லபன் போன்ற பெயர்களில் சோழர் குடியைச் சேர்ந்தவர்களுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. (PSI No-112; SII Vol No-3 No-20). இவர்களில் ஒருவர் இராஜேந்திரசோழ கேரளனான நிஷாதராஜன் (வேட்டுவ ராஜா) என்று அழைக்கப்பட்டான். இவர்களில் ஒருவரை முதலாம் குலோத்துங்க சோழனின் 15, 36 - ஆம் ஆண்டைச் சேர்ந்த ஸ்ரீ ரங்கம் கல்வெட்டுகளில் “நிஷாதராஜன்” பற்றி கூறப்பட்டுள்ளது. (SII Vol-24 No-28, 58, 59, 61, 63, 83). சங்க காலத்தில் இருந்து கி.பி. 1069 வரை சோழ நாட்டை ஆட்சி செய்த சோழர்கள் செம்பிய வேட்டுவக் குடியைச் சேர்த்தவர்கள் .

சேர அரசர்கள் வில்லி வேட்டுவ குலத்தை சேர்ந்தவர்கள்

இருக்குவேள் குடுமி குலத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகிறது (S.I.I Vol-V, No-266, 278, கீரனூர்). குடுமி குலத்தைச் சேர்ந்த பெண்களைக் குடுமிச்சி என்று கல்வெட்டுகளில் அழைக்கப் பட்டனர். ஆண்களை குடுமர், குடுமி என்றழைக்கப்பட்டனர்.

(குண்டடம்; கி.பி. 1219, 1920:117) பாரதாயன் கண்டன் வீரநாராயணன் என்பவர் வேட்டுவன் ஆதித்த பிடாரிக்கு விலை ஆவணம் செய்து கொடுக்கிறான். சோழப்பெருந்தேவியான பட்டன் மல்லி (பூதி ஆதித்த பிடாரியின் மகள்) இந்நிலத்தில் வரும் வருவாயைப் பிரதேயத்தைச் சேர்ந்த பிராமணர்களுக்கு உணவு அளிக்க இவ்வூர் சபையினரிடம் நிவந்தம் செய்து கொடுத்ததைப் பற்றி செய்தி. (திருச்சி குளித்தலை, திருப்பராய்த்துறை தாறு காவனேஸ்வரர் கோவில்; கிபி 963; SII Vol-8 No-612). இக்கல்வெட்டு பூதியை (இருக்கு வேள்) வேட்டுவன் என்றே கூறியுள்ளது.

‘ஸ்வஸ்தி ஸ்ரீ வீரபாண்டிய தேவருக்கு யாண்டு 6 - ஆவது கிழங்கு நாட்டு வேட்டமங்கலத்து ஊரும் அரையர்களும் இளமாடமும் எங்களூர் நாயனார் புற்புவன முடையருக்கு நாங்கள் நீர்வார்த்து குடுத்த நிலமாவது கீழ்பாற்கெல்லை தண்ணீர் கிணற்று இட்டெரிக்கு தென்னிட்டேரிக்கு மேற்கு தென்பார்க்கெல்லை பூலுவன் சோழன் மனைக்கு வடக்கு மேல்பாற் கெல்லை குடுமி சிறுவன் தரைக்கு கிழக்கு வடபார்க்கில்லை கழபகன் தோட்டத்துக்கு தெற்கு இன்நான் கெல்லைக்கு உட்பட்ட நிலமும் கிணறும் நீர்வார்த்து கொடுத்தோம் வேட்டமங்கலத்தில்

புற்புவன முடையருக்கு வேட்டமங்கலத்து ஊரோம்' (கிபி கரூர் வேட்டமங்கலம்)' (SITI vol-2 No-736; ; வேட்டமங்கலம் கல்வெட்டுகள், கிபி 1271)

பூலுவன் = பூலுவ வேட்டுவ குலத்தை குறிக்கும்; சோழன் = பூலுவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஒருவனின் இயற்பெயர் பெயர்; குடுமி = குடுமி வேட்டுவ குலத்தைக் குறிக்கும்; சிறுவன் = குடுமி வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஒருவனின் இயற்பெயர் பெயர்; வேட்டமங்கலம் = வேட்டு மங்கலம்; அரையர்களும் = வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஆள்பவர்களைக் குறிக்கும். கிழங்கு நாட்டு வேட்டமங்கலம் ஊரில் கரடி வேட்டுவ குலத்தவர்கள், பூலுவ வேட்டுவ குலத்தவர்கள் மற்றும் குடுமி வேட்டுவ குலத்தவர்கள் வாழ்ந்து வந்ததை வேட்ட மங்கலம் கல்வெட்டுகள் கூறுகிறது. இவர்களை அரையர்கள்(வேளிர்) என்று அழைக்கப் பட்டுள்ளனர் ‘‘தென் குடுமர் பூலுவர் மரபை சேர்ந்தவர்களாகக் குறிக்கப் பெறுகின்றனர்’’ (கோயமுத்தூர் மாவட்ட கல்வெட்டுகள் தொகுதி -2, 2007 பக்கம் -i).பாண்டியரின் ஆட்சியை சேர்ந்த பொங்கலூர் கல்வெட்டு 'பூலுவ குடுமரில் பெரிய பிளின்னான கண்டிமுடையார் ' என்பவரைப் பற்றி கூறுகிறது.

'கொடும்பாளூர் ராஜேந்திரசோழ இருக்குவேளார்' (SII Vol-4, No-544; கி.பி. 1059) கல்வெட்டுகளில் திருகொடுங்குன்றமுடையான் நிஷாதராஜர் என்றழைக்கப்பட்டனர். கேரளாண்டரான நிஷதராயர் மகளார் திருகொடுங்குன்றமுடையானான நிஷதராஜர் தேவியார் கண்ணுடையப் பெருமாளான பிராட்டி ஆழ்வார் - (ஆண்டு 39; PSI - 168) கேரளாண்டரான நிஷதராயர் - சோழ வேட்டுவ ராஜா; திருகொடுங்குன்ற முடையானான நிஷதராஜர் - குடுமி வேட்டுவ ராஜா கோநாட்டை செம்பியன் கோனாடு, குடுமி கோனாடு என்றழைக்கப் பட்டது. (PSI No -229,906). இடங்கழி நாயனார் குடுமி வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவர்.

‘‘முனையதரையன் வேட்டுவன் ஆளவந்தான் இருங்கோளன்’’ என்பவர் திருமுனைப்பாடி நாட்டின் குறுநில தலைவராக இருந்தவர். ‘‘(விழுப்புரம், ஜம்பை ஜம்புநாதர் கோவில்; கி.பி. 12; 1937-38:436) மின்ன வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஒருவரை 'முன்னை வேட்டுவன் ' என்றும் 'மின்னை வேட்டுவன்' என்றும் கூறப்பட்டதை தென்னிலைச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. திருமுனைப்பாடி நாட்டை அரசாட்சி செய்த

முனையரையர்கள் முன்னை (மின்னை) வேட்டுவ குலத்தவர்கள் ஆவார்கள் நரசிங்க முனையதரைய நாயனார் மின்ன (முன்னை) வேட்டுவ குலத்தைச் சேர்ந்தவர்.

பழுவூரை (மேல் பழுவூர்,கீழ் பழுவூர்) தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த வேட்டுவக் குடியைச் சேர்ந்த அரையரை பழுவேட்டரையர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் (கிபி 881) இருந்து முதலாம் இராஜேந்திர சோழன் காலம் வரை அப்பகுதிகளை ஆண்டனர்.

‘ஓங்கும் பெரும் புகழ்... உய்ய நின்றடியோனா...ம் புயது குருகுலத்...ற் சந்தி கட்டி. தெல்....ற திரு நெல்லிநாதன் திருக் கரத்தே வாங்குங் கபாலத்திடும் பலியேற்கையை மாற்றினனே பூங்கமழ் சோலை சிற்றூருடையோனே ஓங்கிய பெரும் புகழ் உய்ய நின்றாடும் பங்கய மடத்தை விரும்பிய பனைப் தோட் கொங்கலர் நறுத்தார் குருகுலத்தரையன் போன் புனை கலனோடு போனகம் பெறுகத் தன பெயர் வழுவாச் சந்தி கட்டி ஒலிக்கு கய நெடு நீர் நெல்லியலுயர்ந்தவன் பலி குலத் திரக்கை மாற்றினன் வருந்தே தார் சிறந்த மணிமவுலிச் சுந்தரபாண்டியற்கு தழைத்த பதினேழான்டில்த் தங்காளி சற்கும் கார் சிறந்ததெனக் கோயிற் கற்றளியுஞ் செய்து சவுரியுடனாலுடையாள் தற்பித்து குடுத்தான் வார் சிறந்த முலையவள் வேண்டடுவன் சோறனுய நின்றான் வயற்சிற்றை பதிக்கதிபன் மல்லிவள நாடன் தார் சிறந்த படை மன்னன் தென்னவன் தன் தோழன் செங்கை முகில் குருகுலக்கோன் சேர்ந்தவர் மானேந்தியேய்’ (சிவகாசி வட்டம், திருத் தங்கல் நெல்லிநாதர், கி.பி. 1233, 1922:575). குருகுலம் என்ற சொல் வேட்டுவக் குடியில் ஒரு உட்குழுப் பெயராகும். இவர்கள் குருகுல வேட்டுவ குலத்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் .

“சோழ மண்டலத்து கண்டியூர் விளக்கத்தரையன் அம்பலவன் பொன்னர் மேனியான் பொன்னம்பல கூத்தன்” என்பவர் கோவிலுக்குக் கொடை அளித்ததைப் பற்றி திருப்பூர் பெருமா நல்லூர் கல்வெட்டுகள் கூறுகிறது. (கி.பி. 1268, 1270, 1279). இவர் பாண்டிய மன்னனின் அதிகாரியாக இருந்தார். விளக்கு வேட்டுவ குலத்தைச் சேர்ந்த அரையரை விளக்கத்தரையன் என்றழைக்கப்பட்டனர்.

மிழலை மற்றும் திருபுனவாயில் ஊர்களை வேள் எவ்வி ஆண்டு வந்ததை சங்க இலக்கியம் கூறுகிறது. திருபுனவாயில் பகுதியில் வேட்டுவக் குடியினர் வாழ்ந்து வந்ததைச் சுந்தரமூர்த்தி நாயனார் கூறுகிறார். (திருபுனவாயில் 7 - ஆம் திருமுறை; சுந்தரர்). பெரு நம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன் பெருமிழலை குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன் - தேவா-சுந்: 396/2

குறும்பர் என்ற சொல் வேட்டுவ குலத்தவர்களைக் குறிக்கும். பெருமிழலை குறும்ப நாயனார் குறும்பில்லர் என்று அழைக்கப்பட்டனர்.

'நீர்கொண்டு பாய பட்டாலிவதி என்கிற வாய்க்காலில் விழவிட்டு ஜெயங்கொண்ட சோழ நல்லூருக்கு நீர் பாய'(1908:434; கி.பி. 1193). 'அணுக்கியார் பல்லவன் பட்டாலி நங்கை' 'பட்டாலி ஈஸ்வரம் கோவிலுக்குக் கொடை அளித்ததைத் திருவீழி நாதர் கோவில் கல்வெட்டுகள் கூறுகிறது (1908 : 393). மிழலை பகுதியில் 'பட்டாலிவதி' என்ற பெயரில் ஒரு வாய்க்கால் இருந்தது. (1908 : 434). பட்டாலி வேட்டுவ குலத்தவர்களைக் குறும்பில்லர் (குறும்பிலர், குறும்ப நாயனார்) குலம் என்று கல்வெட்டுகளில் அழைக்க பட்டனர். கி.பி. 1090-களில் இருந்து இவர்களது கல்வெட்டுகள் கொங்கு நாட்டுப் பகுதியில் கிடைக்கிறது.

"மேல் கரை அரை நாட்டு இவ்வூர் ஊராழி மலைய் வேட்டுவன் கோயான் இருங்கோளன் கரிய பெருமாளான வலங்கை மீகாமன்...." (நாமக்கல் அரங்கநாதர் கோவில்; கிபி 1237). புல்லை வேட்டுவரில் காவேரி நாடாள்வான் தேசி ஆளபிறந்தான் மும்முடி சோழ சக்கரவர்த்தி ஆன அங்கராயன் என்பவர் மழ நாட்டை ஆட்சி செய்தார். (S.I.I Vol 22,part 1,No-9). இவர் மழ பெருமாளின் வழியில் வந்தவர் ஆவர். மழ நாட்டில் புல்லை வேட்டுவக் குடி மற்றும் மூளை வேட்டுவக் குடி, இரும்புலி (இரும் புளை) வேட்டுவக் குடி போன்ற வேட்டுவக் குடியினர் வாழ்ந்து வந்ததைக் கல்வெட்டுகள் உறுதிபடுத்துகிறது. மழ வேட்டுவ குலத்தவர்களைக் கொல்லி வேட்டுவர் என்று தென்னிலைச் செப்பேட்டில் அழைக்கப்பட்டனர் புல்லை மற்றும் மூல வேட்டுவ குலத்தவர்களை மலை (மழ) வேட்டுவர், கொல்லி வேட்டுவர் என்று அழைக்கப்பட்டனர். கொல்லி மழவர் மழ வேட்டுவ குலத்தை சேர்ந்தவர். இவரின் மகள் கண்டராதித்த சோழனின் பட்டத்தரசி (செம்பியன் மாதேவி) ஆவாள். மூல

வேட்டுவ குலத்தைச் சேர்ந்த அல்லாள இளையான் அரைய நாட்டை ஆட்சி செய்த குறுநில மன்னர் ஆவார்.

வல்வில் ஓரி, கண்டீராக கோப்பெரு நள்ளி, பண்ணி ஆகியோர்கள் வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்கள்(புறம் 150,152,205). இதுபோல பாணன், ஆய் அண்டிரன், ஆய் எயினன், பாரி வேள் மற்றும் பலர் வேட்டுவக் குடியைச் சேர்ந்த குறுநிலத் தலைவர்கள் ஆவார்கள். வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஊராளிகள் (ஊர் அரசர்கள்) சோழ மற்றும் பாண்டிய அரசருக்கு வேந்துவிடு தொழில் (போர் தொழில்) செய்தனர் (புறம் -320.324,326,333,306,319). வேட்டுவக் குடியினர் நாண் உடை (வில்லில் இருக்கும் கயிறு) வீரர்கள் என்றழைக்கப்பட்டனர் (அகநானூறு 387). முல்லை நிலக் காட்டில் வேட்டுவக் குடியைச் சேர்ந்தவர்களின் பாசறை பற்றி முல்லைப் பாட்டு கூறுகிறது (முல்லைப் பாட்டு-24 -28).

"வடகரை நாட்டில் பட்டிலிருக்கும் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவரில் பெரிய தேவன் மகன் பெரிய பிள்ளையான பெரிய தேவன் '(பட்டலூர் வாகீஸ்வரர் கோவில் கிபி 1245; ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2007 தொடர் எண் 97/2005)" வடகரை நாட்டில் பட்டிலிருக்கும் ஊராளிகளில் கொடும்பூர் வேட்டுவரில் பிள்ளையென் '(பட்டலூர் வாகீஸ்வரர் கோவில் கி.பி. 1241; ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி - 1 தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 2007 தொடர் எண் 99/2005). கொடும்பாளூர் பகுதியில் இருந்து கொங்கு நாட்டுக் குடிபெயர்ந்த வேட்டுவ குலத்தவர்களைக் கொடும்பூர் வேட்டுவர் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்பட்டுள்ளனர்.

"அரைச்சூரி.... ஊராளி காட்டுனன் வேட்டுவரில் மாற ஊராளி சிலம்பனான ஆளப்பிறந்தான் புலக்கழியப் பட்டான்" (ஈரோடு பட்டலூர் ஏரிக்கரையில் உள்ள நடுகல் கி.பி. 12). புலம் என்ற சொல் நாட்டைக் குறிக்கும். செய்தி: காட்டு வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஊராளி போரில் இறந்ததற்காக எடுக்க பட்ட நடுகல்:

"ஸ்வஸ்தி ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவருக்கு யாண்டு ஆறாவது வடகரை நாட்டு உலகடங்கத்து கள்ளை வேட்டுவரில் அந்தியூரன்' (நாமக்கல் திருச்செங்கோடு நடுகல், கி.பி. 1290). அந்தியூரன் - மருத நில

ஊரை அந்தியூர் ஆள்பவர். செய்தி: சுந்தர பாண்டியருக்கு, போசளருக்கும் நடைபெற்ற போரில் சுந்தர பாண்டியருக்கு ஆதரவாக, கல்லை வேட்டுவ குலத்தைச் சேர்ந்த அந்தி ஊரன் என்பவர் போரிட்டு இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல். இவர் சுந்தர பாண்டியனின் ஊராளியாக இருந்தவர்.

"சிரி சுந்தரபாண்டிய தேவருக்கு யாண்டு 20 வது மண்டபத்தூர் அந்துவ வேட்டுவர் உத்தமான்....." (நாமக்கல் மாவட்டம் எலந்த குட்டை நடுகல் கிபி 1295) செய்தி: சுந்தர பாண்டியருக்கு, போசளருக்கும் நடைபெற்ற போரில் சுந்தர பாண்டியருக்கு ஆதரவாக அந்துவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த மண்டபத்தூர் ஊராளி உத்தமன் என்பவர் போரிட்டு இறந்ததற்காக எடுக்கப்பட்ட நடுகல். இவர் சுந்தர பாண்டியனின் ஊராளியாக இருந்தவர்.

"தலைய நல்லூரில் கிழங்க வேட்டுவரில் கிழங்கன் பெரிய கிழங்கன்' (ஈரோடு சிவகிரி நடுகல் கி.பி. 12) 'கிழங்கன்'(ஈரோடு சிவகிரி நடுகல் கி.பி. 12) இந்த இரண்டு நடுகற்களும் ஈரோடு கலைமகள் அருங்காட்சியகத்தில் இருக்கின்கிறன. கிழங்கு வேட்டுவ குலத்தைச் சேர்ந்த தலைய நல்லூர் ஊராளி போரில் இறந்ததற்காக எடுக்க பட்ட நடுகல். இதுபோல பல நடுகற்கள் வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஊராளிகளைப் பற்றி கூறுகிறது.

"பெரும்பழனில் இருக்கும் பூலுவன் மேற்செறி வெள்ளைகளில் இராசன் நிலையுடையான் ஆன தொண்டைமான்' (கிபி 13; SITI Vol-1 No-338) பூலுவன்-வேட்டுவ குலத்தவரின் சிறப்புப் பெயர்; வெள்ளைகளில்-வெள்ளை வேட்டுவ குலத்தைக் குறிக்கும். 'துடியலூரில் ஊரும் ஊராளிகளும்... மேற்படியூரில் பூலுவன். ண்டைகளில் வில்வராயன் எழுத்து '(கோவை வட மதுரை கல்வெட்டு; கி.பி.13). பூலுவன் - வேட்டுவ குலத்தவரின் சிறப்பு பெயர். ண்டைகளில் -சுண்டை வேட்டுவ குலத்தைக் குறிக்கும். இதுபோல மற்ற வேட்டுவ குலத்தவர்களும் அழைக்கப்பட்டன.

வீரசோழ வளநாட்டு உத்தமசோழ சதுவேதிமங்கலத்து இருக்கும் காவலன் கறையரில் செயகங்கனான தம்பிரான் தோழனென் (ஈரோடு பெருந்துறை மொசக்குத்தி வலசு உத்தம சோழீஸ்வரர் கோவில் கல்வெட்டு கி.பி.1218). உத்தமசோழ சதுவேதிமங்கல காவலன் = உத்தமசோழ சதுவேதிமங்கல ஊரை காப்பவன்; கரையார் = கரைய

வேட்டுவ குலத்தைக் குறிக்கும்; செயகங்கனான தம்பிரான் = கரைய வேட்டுவ குலத்தைச் சேர்ந்த ஒருவரின் சிறப்பு பெயர்.

ஸ்வஸ்தி ஶ்ரீ குலசேகர தேவருக்கு யாண்டு 6 வது காங்கேயம் நாட்டு கீரனூர் உடையார் ஆதினாதீஸ்வரமுடையர் கோவில் திருநிலைக்கால் செய்வித்தேன் இவ்வூர் காவலன் மேலைக்கரையரில் சொக்க ஊராளியரில் யூராளியென் (காங்கேயம் கீரனூர் ஆதி ஈஸ்வரர் கோவில், கி.பி. 13). கீரனூர் காவலன் = கீரனூர் ஊரைக் காப்பவன். மேலைக்கரையர் = கரைய வேட்டுவ குலத்தைக் குறிக்கும். ஊராளி = ஊரை ஆள்பவரைக் குறிக்கும். பூந்துறை நாட்டை கரைய வேட்டுவ குலத்தவர்கள் அரசாட்சி செய்ததால் 'கரை நாடாழ்வார் நாடு' என்று அழைக்கப் பட்டனர். (இரவி கோதை செப்பேடு கி.பி. 10). மேல்கரைப் பூந்துறை நாட்டு அறைச்சலூரில் கரைய வேட்டுவரில் செய்யான் பல்லவராயன் இவ்வூர் உடையார் புற்றிடங்கொண்ட நாயனார் கோவிலில் திருக்கட்டளையில் திருநிலைக்காலும் படியும் செய்வித்தேன்' (ஈரோடு அறச்சலூர் புற்றிடங்கொண்ட ஈஸ்வரர் கோவில்; கி.பி. 1335; 1961 - 62:278). காவலன் என்ற சொல் கரைய வேட்டுவ குலத்தவரின் சிறப்புப் பெயர் என்பதை இக்கல்வெட்டுகள் உறுதிபடுத்துகின்றன.

பட்டாலி, வேந்தர், பொன்னர், செம்பியர் போன்ற வேட்டுவ குலத்தவர்களைக் காவலன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பட்டத்தைக் கல்வெட்டுகள் உறுதிப்படுகின்றன. "...தென்கரை மணலூர் நாட்டு அரைய நாட்டு அரையர்கள் ...தலையூர் நாட்டு அரையர்கள்... தலையூர் உறுபடை அரையர்களில் பாணி பெருமாள் சோழனான சுந்தரபாண்டிய சோழகோன்" (கி.பி. 1291; -2 -726). உறுபடை = உரிமைப் படை வேட்டுவ குலம்; பாணி பெருமாள் = பாண மன்னர் சுந்தர பாண்டியன் கேட்டுக் கொண்டதன் பேரில் பாண நாட்டு 'பாணி ராஜா' அவர்கள் புண்ணாடி வேட்டுவ குலத்தவர்களையும், சாந்தப் படை வேட்டுவ குலத்தவர்களையும் தலையூர் மற்றும் வெங்கல நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள் (டி 2967,3074). பாணி ராஜா = பாண அரசன். வேட்டுவக் குடியைச் சேர்ந்த மாவலியர்கள் கல்வெட்டுகளில் வாணராயர், பாணராயர், மாவலி வாணராயர், வாணகோவரையர், பெரும்பாணர் என்றழைக்கப்பட்டனர்.

இதுபோல பல கல்வெட்டுகள் வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஊராளிகளைப் பற்றி கூறுகிறது. இவர்கள் சேர, சோழ, பாண்டிய அரசுகள்

உருவானதில் இருந்து மறையும் வரை மூவேந்தர்களின் (சேர சோழ பாண்டிய) ஊராளிகளாக இருந்தனர் . “கொங்கு நாட்டு அரசர்கள் சோழ நாட்டில் இருந்தும், பாண்டிய நாட்டில் இருந்தும் கேரளத்திற்கு எதிராகத் தங்களுக்கு உதவுவதற்கு வேட்டுவர்களை அழைத்து வந்தனர் என வழக்கு வரலாறு கூறுகிறது. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழ மன்னர் ஆதித்திய வர்மன் கொங்கு நாட்டை வெற்றி கொள்ள உதவியவர்கள் இவ்வேட்டுவர்களே என வழக்கு வரலாறு கூறுகிறது” (தென்இந்தியக் குடிகளும் குலங்களும்-தொகுதி 7, வேட்டுவர் (தமிழ்)).

தமிழ் வேட்டுவக் குடியினர் அரசத் தொழில் செய்து வந்ததை இடைக்காலக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. இவர்கள் இன்று தங்களது குடிபெயரொடு (வேட்டுவர்) கவுண்டர் என்ற பட்டத்தைச் சேர்த்து வேட்டுவக் கவுண்டர் என்ற பெயரில் வாழ்ந்து வருகிறார்கள்.

பார்வை நூல்கள்:

1. செ.இராசு, வேட்டுவர் சமூக ஆவணங்கள், கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை வெளியீடு, ஈரோடு, 2009.
2. ப.ஆனந்தகுமார், தொல்குடி வேட்டுவர் சமூக ஆவணங்கள், அல்லாள இளையான் அறக்கட்டளை வெளியீடு, நாமக்கல், 2018.
3. ப.ஆனந்தகுமார், தமிழ் அரச குடியினர் வேட்டுவர் வேந்தர், அல்லாள இளையான் அறக்கட்டளை வெளியீடு, நாமக்கல், 2023.

இலக்கியத்திலும் ஆவணங்களிலும் வேட்டுவர்

த.ஐஸ்வர்ய பிரதினா,
MBA, Dip in Arch, Ephig.,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
aishwaryaprathina@gmail.com

கொங்கு நாட்டில் பன்னெடுங்கலமாகப் பல்கி பெருகி சிறப்புடன் வாழ்ந்துவரும் சமுதாயம் வேட்டுவர் சமுதாயமாகும். "கொங்கு நாட்டு ஆவணங்கள்" பலவும் வேட்டுவர் சமூகத்தினரைப்"பூர்வ குடிகள்" என்று கூறுகின்றன.வேட்டுவ சமூகத்தினரைக்"கொங்கர்" என்றும் அவர்கள் தலைவரைக் "கொங்கராயன்" என்றும் இலக்கியங்கள், ஆவணங்கள் கூறுகின்றன. இவ்வுலக்கியங்களையும், ஆவணங்களையும் கொண்டு வேட்டுவ மக்கள் பற்றிய சில செய்திகளை, இங்கு ஆய்வு கட்டுரையாக தொகுத்துள்ளேன்.

வேட்டுவர்

பன்னெடுங் காலமாக நம் தமிழ்ச் சமூகம் ஒரு வேட்டைச் சமூகமாக இருந்ததைப் பலரும் அறிந்த ஒன்றே. இதற்கு எடுத்துக்காட்டாக ஊருக்கு அண்மையில் இருந்த மடுக்கரையில் இருந்து உடும்புகளை எயினச்சிறார் பிடித்து வந்த செய்தியைப் புறநானூறு முதலிய நூல்கள் கூறுகின்றனர்.

“ஊர்,அருமிளையதுவே மனைவியும்
வேட்டைச்சிறாஅர் சேட்புலம் படராது
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம்பெய்த தயிர்க்கண் விதவை
யாணர்நல்லவை பாணரொடொராங்கு
வருவிருந்தயரும் விருப்பினள்.” - புறநானூறு 326

இதேபோல், வேட்டையாடுதலைப் பற்றி பல செய்திகளைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. அவ்வகையில் வேட்டைத் தொழிலிலும், வேளாண்மைத் தொழிலிலும் ஈடுபட்ட வேட்டுவர்கள் பற்றிய செய்திகள் அடங்கிய இலக்கியம் மற்றும் வரலாற்று ஆவணங்கள் பல உள்ளன.

"வேட்டுவன்" என்பது "வேட்டை" என்றவினையடியில் இருந்து உருவான ஒரு சொல்லாகும் வினை என்பதனால், இது ஒரு தொழிலைக் குறிக்கின்றது. வேட்டை என்பது வேட்டையாடும் தொழிலை மேற்கொள்ளும் நபர் என்று பொருள்படுகிறது. பழந்தமிழர் இலக்கியங்களில் வேட்டுவன் என்ற சொல்லைக் குறிஞ்சி நிலத்து ஆண்களைக் குறிக்கும் பொதுப் பெயராகப் பயன்படுத்தி இருந்ததை அறிய முடிகிறது. குறிஞ்சி நிலம் பண்டைய தமிழ் வழக்கில் மலைப்பகுதியைக் குறிக்கின்றது. மலைக்கும் வேட்டுவனுக்கும் உள்ள தொடர்பைச் சங்க இலக்கியங்கள் பல வகையிலும் விளக்குகின்றன. இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள வேட்டுவன் கோவில் என்ற வரலாற்றுச் சின்னம் முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. இது "கழுகுமலையில் ஒற்றைப் பாறையில்" செதுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள்

பண்டைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவும் பல்வேறு சான்றுகளில் கல்வெட்டுகளும் மிக முக்கியமானவை. கோயிலுக்கு வழங்கிய கொடைகள், செய்த திருப்பணிகள், கோவில் நிர்வாகத்தின் முடிவுகள், அரசின் ஆணைகள், திருப்பணி விவரங்கள் போன்ற செய்திகளைக் கல்லில் வெட்டப்பட்டு வரலாற்றைப் பாதுகாத்தனர் நம் முன்னோர்கள். இதன் வாயிலாகத் தான் நாம் இன்று படித்துக் கொண்டு இருக்கும் வரலாற்றின் உண்மைத் தன்மையை உணர முடிகின்றது. கல்லில் வடிப்பதை நம் முன்னோர்கள்,

**"நல்லார் ஒருவருக்குச் செய்த உபதேசம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே"**

என்றும்,

"இளமையில் கல்வி சிலையில் எழுதுக" என்றும் கூறுவர். அவ்வகையில் வேட்டுவர்கள் பற்றிய கல்வெட்டுகள் பெரும்பாலும்

கொங்கு நாட்டை ஒட்டிய பகுதியில் சமுதாயக் கல்வெட்டுக்களாகக் கிடைத்துள்ளன. நடு கற்களும், நடுகல் கல்வெட்டுக்களும் வேட்டுவர் சமுதாயத்தில் மிகுதியாக உள்ளன. இவை வீரத்தின் விளைநிலமாக இவர்கள் இருந்ததைக் காட்டுகின்றன. மாற்றார் படையெடுப்பின்போது போரிட்டு வீரமரணம் அடைந்த புகழ்மங்கலம் கரைய வேட்டுவர்சமூகச் சொக்கனேந்தல் நடுகல்லில், அவரது பெருமையை புகழ்ந்துசெதுக்கப்பட்ட பாடல், வெண்பா வடிவில் பொறிக்கப்பட்டு இருப்பது மிகவும் சிறப்பு குரியது. தென்னிந்தியாவில் பாடல் பொறித்த நடுகல் இது ஒன்றே ஆகும். ஏறக்குறைய வேட்டுவர் சமூகத்தின் ஆயிரம் ஆண்டுகால வரலாற்றுச் செய்திகளை இக்கல்வெட்டுகள் நமக்குக் காட்டுகின்றன.

வேட்டுவர்களின் கலைகள்

வேட்டுவர் சமூகத்தில் பலர் "கூத்தன்" என்று பெயர் பெற்றுள்ளனர். கூத்தன் என்பது தில்லையில் நடனம் ஆடுகின்ற நடராசர் பெருமானையும் குறிக்கும். ஆனால் கூத்தன் ஆனந்தக் கூத்தன் என்பன போன்ற தொடர்களால் இவர்கள் கூற்றுகளை வல்லவர்களாகவே இருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. இதற்குச் சான்றாக,

"வடகரையாற்றூர் புல்லை வேட்டுவரில் கூத்தாடும் தேவன்
இருங்கோளனான வலங்கை பீங்கான்"

என்ற கல்வெட்டுச் செய்தியைக் காணலாம். பட்டாலிக் கல்வெட்டு ஒன்றில் "யாழ்வல்லான்" என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் பட்டாளி வேட்டுவக் குலப்பெரு மக்கள் கலைப் பயிற்சி உடையவர்களாகவும் கலையார்வம் மிக்கவர்களாகவும் இருந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இலக்கியங்களில் வேட்டுவர்

சங்க இலக்கியங்களில் "வேட்டுவன்" என்னும் சொல் புலனமைத்துடன் ஆளப்பட்டுள்ளமை நம் கவனத்தை ஈர்க்கின்றது.

மாற்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் (252) ஒன்றில் "சொல்வலை வேட்டுவன்" என்று குறித்திருக்கின்றார். அப்பாடல்,

கறங்கு வெள் அருவி ஏற்றலின், நிறம் பெயர்ந்து
தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள் இலைத் தாளி கொய்யுமோனே

இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே!

என அமைந்துள்ளது. இதேபோல் "மடமையில் பிணிக்கும் சொல்வலை வேட்டுவன்" என்றும் "வல்வில் வேட்டுவன்" (புறம் - 150) என்றும், "யானை வேட்டுவன்" (புறம் - 214) போன்ற சொல்லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வேட்டுவர்களின் அரிய வழக்கம்

சமீபத்தில் வெளியான "கும்கி" என்ற திரைப்படத்தில், காட்டில் இருக்கும் யானை விளைநிலங்களைச் சூறையாடும் போது, அவ்விலங்கிடமிருந்து விளைநிலங்களையும் தங்கள் உயிரையும் காப்பாற்றுவதற்காக ஊர்மக்கள் வளர்ப்பு யானையான கும்கியை வரவழைத்து, காட்டு யானையைவிரட்டி அடிப்பதாக அமையப் பெற்றிருக்கும். திரைப்படத்தில் வருவதைப்போல் காட்டு விலங்கு களிடமிருந்து தங்கள் நிலத்தையும் பயிர்களையும் காப்பாற்றுவதற்காக அதே போன்று ஒரு விலங்கை, வீட்டில் வளர்த்து பிறகு அதை வைத்துக்கொண்டு மற்ற விலங்குகளை விரட்டி அடிக்கும் முறைகளை நன்கு கையாண்டவர்கள் வேட்டைச் சமூகத்தினர். இது வேட்டைச் சமூகத்திற்கே உரிய வழக்கமாகும். அது மட்டுமல்லாது வளர்ப்புப் பறவையை வைத்து மற்றொரு பறவையை வேட்டையாடுதலும் உண்டு. இதனை "பார்வைப் புள்" என நற்றினை பாடல் (212) கூறுகின்றது.

"பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ" எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ,
நெடுங் கால் கணந்துள்அம் புலம்பு கொள் தெள்விளி
சுரம் செல் கோடியர் கதுமென இசைக்கும்
நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்
கடுங் குரற் பம்பைக் கத நாய் வடுகர்
நெடும் பெருங் குன்றம் நீந்தி, நம் வயின்
வந்தனர்; வாழி - தோழி!

இந்தப் பாடலில் வரும் பார்வை என்பது கைப்புள் (வளர்க்கப்பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட பறவை) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

வேட்டுவன் என்றால் வேட்டைக்குச் செல்பவன். பழக்கப்படுத்தப்பட்ட பறவையைக் கொண்டு பிற பறவைகளை வரச் செய்து, வளைக்குள் அவை வந்து அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பது தெரிகின்றது. பார்வை என்பதற்குக் கவனம் என்றொரு பொருளும் கொள்ளப்படுகின்றது.

மகளிர் மாண்பு

வேட்டுவர் சமூகப் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கோயில் திருப்பணிகள் பலவற்றில் பங்குபெற்றதுடன், கோயில்களில் எப்பொழுதும் எரியும் நந்தா விளக்கும், குறிப்பிட்ட பூசை வேளைகளில் எரியும் சந்தி விளக்கும் ஏற்றப் பொன்னும், பொருளும் பெரும் கொடையாக அளித்துள்ளனர்.

பட்டாலியில் காவலர் குறும்பிள்ளரில் காவன் அரையன் என்ற தன் கணவனுக்காக நாயக விச்சி நாயன் சிலம்பி என்ற வேட்டுவர் சமூகப் பெண் தன் கணவன் நினைவாகப் பிடாரி கோயிலையே கட்டியுள்ளாள்.

"காங்கயம் காவலன் குறும்பிள்ளரில் செங்காளி
மனைக்கிழத்தி புளியம்மை"

"ஆறுதொழு வேட்டுவர் குலப் பெண் பல்லாண்டி"

"பட்டாலி காவலன் வளவர் மனைக்கிழத்தி சோழாண்டி"

"பட்டாலி காவலன் குறும்பிள்ளரில் போடன்
மனைக்கிழத்தி கோவி"

"பட்டாலி காவலன் வெண்கொற்றர் சோணாப்
பல்லவரையன் மனைக்கிழத்தி செங்கூத்தாண்டி"

வேட்டுவர் சமுதாயப் பெண்கள் செல்வ வளத்துடன் தாங்கள் விருப்பம்போல் செலவுகள் செய்யும் பொருளாதாரச் சுதந்திரத்துடன் வாழ்ந்துள்ளனர். தமிழகப் பெண்கள் வரலாற்றில் இது அரிய செய்தி ஆகும். மனைக்கிழத்தி என்பது உயர் மதிப்புடைய சொல்லாகும். இவ்வாறு பல்வேறு செய்திகள் இக்கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன.

முடிவுரை

வீரத்திலும் வேட்டுவர்கள் சிறந்தவர்கள் என்பதனை மன்னர்களுக்குப் படையை உதவியளித்து, ஆநிரைகளை மீட்டு, நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்கள் பற்றிய ஏராளமான நடுகல் செய்திகள் தெரிவிக்கின்றன. வேட்டுவர்கள் பற்றிய அரிய பலசெய்திகள் இன்னும் பல கல்வெட்டுகளிலும் ஆவணங்களிலும் காணக் கிடைக்கின்றன.

பயன்பாட்ட நூல்கள்:

1.) வேட்டுவ சமூக ஆவணங்கள், செ. இராசு, 2008.

2.) கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்,முதற்பதிப்பு 1991, தஞ்சை பல்கலைக்கழகம்.

3.) வால்வில் ஓரி, கவிதா வாழை பரமேஸ்வரன்.

குறுந்தொகைக் குறிஞ்சியில் வேட்டுவர்

சு. ஐஸ்வர்யா
தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி - 621 007.
அலைபேசி: 7397159560
iswaryaleela03@gmail.Com

முன்னுரை

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் வேட்டுவர், குறவன், குறத்தி, வேட்டுவச்சி என குறுந்தொகையில் அறியமுடிகிறது. குறிஞ்சி நில மக்களின் முக்கியத் தொழில் வேட்டையாடுதல், தினை பயிரிடல், விலங்குகள் வளர்த்தல் போன்றவை ஆகும். குறுந்தொகைக் குறிஞ்சியில் வேட்டுவர் என்பது ஒரு தனித்துவமான இலக்கியப் பாணி ஆகும். இதன்மூலம் அந்தக் காலச் சமூக வாழ்க்கையும், இயற்கையின் நிலையும் வேட்டையாடலின் நிலையினையும் வெளிப்படையாகக் காணமுடிகின்றது.

குறிஞ்சிநில மக்கள் முருகனைத் (சேயோன்) தெய்வமாக வழிபடுவர். குறிஞ்சி நிலத்து ஊர்கள் சிறுகுடி என்று அழைக்கப் படுகின்றன. கிளி, மயில் போன்ற பறவைகளும் குறிஞ்சி நிலத்தில் உண்டு.

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலை சார்ந்த இடங்ளையும் குறிக்கும். குறிஞ்சி நிலத்திற்கு உரிய காலங்கள் கூதிர்காலம், முன்பனிக் காலமும், யாமம் பொழுதும் போன்ற காலங்கள் ஆகும்.

ஒவ்வொரு வேட்டையாடலிலும் உணர்வுகளின் நடத்தை, அனுபவம், வாழ்க்கையின் சிறப்பிடையே ஒரு பாடல் பிறக்கச் செய்கின்றது. பல்வேறு பரிமாணங்களில் வேட்டுவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களின் உணர்வுகள் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன. குறிஞ்சி என்னும் இயற்கை வலயத்தில் வாழும் வேட்டுவர்கள் இவ்விதமாக வாழ்ந்தார்கள் எனக் காணமுடிகின்றது.

குறிஞ்சி மக்களின் பெயர்கள்

குன்றின்

குறவர்

நாடன்

வெற்பன்

கொடிச்சி

குறமகள்

குறிஞ்சியில் வேட்டுவர்களின் வாழ்க்கை

வேட்டுவர்கள் பெரும்பாலும் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள் மிகுந்த இயற்கையைப் புரிந்துகொண்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் செயல்படுத்திக் கொண்டனர்.

வேட்டையாடுதல்

குறுந்தொகையில் வேட்டுவர்கள் வேட்டைகளையும் தனது நேரத்தினையும் கொண்டாடுகிறார்கள். ஒரு வேட்டை முடிந்தபின்,அந்த வேட்டுவர்கள் கூட்டாக நின்று பகிர்ந்து கொண்டனர்.

தலைவன் வேட்டையாடுதல்
கல்லென் கானத்துக் கடமா ஆட்டி,
எல்லும் எல்லின்று; ஞமலியும் இளைத்தவன்;
செல்லல் -ஐஇய ! உதுஎம் ஊரே

கடமா- காட்டு விலங்கு. தலைவன் **கல்** என்னும் ஆரவார ஓசையையுடைய காட்டில், கடமாவை வேட்டையாடினான். தலைவனோடு வேட்டையாடிய நாய்களும் களைப்பாக இருக்கின்றன. பகல்பொழுது போய்விட்டது. இனி உன் ஊருக்குச் செல்ல வேண்டாம். இதோ எம் ஊர் தெரிகிறது. தங்கிச் செல்லலாம் என்றார்கள் தலைவியும் தோழியும்.

வேட்டுவரின் இரக்கம்

தீண்டலும் இயைவது கொல்லோ- மாண்ட
வில்லுடை வீளையர் கல்இடுபு எடுத்த
நனந்தலைக் காத்து இனம்தலைப் பிரிந்த
புன்கண் மடமான் நேர்பட

மாட்சி கொண்ட வில்லை உடையராயும், வீளை ஒலியை உடையராயும், வேட்டுவர் கற்களை வீசி விலங்குகளை எழுப்புவர். கல்லிட்டு வேட்டுவர் காட்டைக்கலைக்கப் பெண்மான் அதன் இனத்தைப் பிரிந்து வேட்டுவரின் எதிராகச் சென்றுவிட்டது; அதனால் அதனைக் கொல்லாமல் விட்டனர். தோள் தீண்டலும் இயைவது கொல் என்றது,தான் தீண்டிப் பெற்ற இன்பத்தை நினைத்து கூறியதாம்.

வேடர்கள் ஒலி எழுப்புதல்
அமர்க்களம் ஆமான் அம்செவிக் குழவி
கானவர் எடுப்ப வெரீஇ , இனம் தீர்ந்து,
கானம் நண்ணிய சிறுகுடிப் பெட்டென

காட்டுப்பசுவின் அழகிய கன்று,காட்டு வேடர்கள் ஒலி எழுப்புவதால் அஞ்சி தன் இனத்தை விட்டு நீங்கி காட்டில் வாழும் வாழ்க்கையை விட்டு காட்டுக்கு அருகேயுள்ள சிற்றூரில் போய்ச் சேர்ந்ததாக இளையர் பலரும் அதனைக் காத்து வளர்க்கவே , அவர்களோடு பழகி அவ்விடத்தை விரும்பி,காட்டு வாழ்க்கையை விட்டு வீட்டிலுறையும் வாழ்க்கையை ஏற்கும் பழக்கத்தைப் பெற்றது.

வேட்டுவன் தினைப்புனம் காத்தல்
குறும்படைப் பகழிக் கொடுவிற் கானவன்
புனம்உண்டு கடிந்த பைங்கண் யானை
பணிக்குறை வருத்தம் வீடத்
துணியின் எவனோ - தோழி !-நம் மறையே

கானவன் வில்லும் அம்பும் கொண்டுதன் விளைந்த புனத்தைக் காவல் புரிந்தான். அதனால் யானை புனம் செல்லாமல் மலையை நாடியது. பணிக்குறை வருத்தம் என்றது தலைவன் பெண்கேட்க வராமல் இருப்பதால் வரும் வருத்தத்தைத் குறிக்கிறது. அறத்தொடு நின்றால் உண்மையையுணர்ந்த பெற்றோர்களும் உறவினர்களும் தலைவனை ஏற்றுக் கொள்வார்கள். அதனால் தலைவன் செய்ய வேண்டிய செயல் நிறைபெறும் தலைவியின் வருத்தம் தீரும்.

கொடிச்சி இருந்த ஊர்

பெருத்த தோளினாளான கொடிச்சி, நீண்ட அம்பையும் வலிய வில்லையும் உடையவரான வேட்டுவருடைய தங்கையாவாள்.

....வார்கோல்
வல்விற் கானவர் தங்கைப்
பெருந்தோட் கொடிச்சி இருந்த ஊரே

தலைவியின் ஊர் மலைகளின் இடையே உள்ளதால் தலைவன் இரவில் வருவது எளிதான செயலன்று.

தலைவன் தலைவியை இரவில் சந்திப்பது இயலாத செயல் என்றும் தலைவன் தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்வதே சிறந்தது என்றும் கூறிகின்றாள் தோழி. பாறையில் உலர்த்தப் பட்டிருக்கும் தினையைக் காவல் இல்லாத சமயத்தில் குரங்குகளும் குட்டிகளும் கவர்ந்து செல்லும் அதேபோல் தலைவியை வேறு எவராவது திருமணம் செய்து கொள்ளக்கூடும் என்பதைக் காணமுடிகின்றது.

முடிவுரை

வேட்டுவரின் வாழ்க்கை என்பது மனிதனின் உயிரின் வேறுபாட்டையும், சமூகத்தின் சிறப்பையும்,இயற்கையின் அழகையும் சார்ந்தது ஆகும்.

இந்தப் படைப்பில் வேட்டுவர்களின் வாழ்க்கை முறையைச் சித்திரிக்கும் போது, அவர்களின் பொருள் பெற்றல், இயற்கையின் சராசரி அனுபவங்களின் சுவைகள் மற்றும் அவற்றின் அடிப்படையில் தண்டனை, குணம் போன்றவற்றையும் பார்க்க முடிகின்றது. வேட்டுவரின் இரக்கமும், தினையைக் காலத்திலும் வேட்டுவரின் இரக்ககுணங்களையும் பார்க்க முடிகின்றது.

வேட்டுவர் ஒலி எழுப்புதலைக் கண்டு காட்டுப்பசுவின் கன்று அஞ்சி சிற்றூரில் செல்வதையும் இளையோர் அதனை வளர்ப்பதை அறியமுடிகின்றது.

தலைவன் தலைவியை இரவில் சந்தித்தலில் ஏற்படும் பிரச்சினைகளையும் காணமுடிகின்றது. வேட்டையின் மூலம் வேட்டுவர், தனக்கான வாழ்வாதாரம் மற்றும் வேட்டையினால் பெறப்படும் மகிழ்ச்சி, சுதந்திரம் மற்றும் இயற்கையின் தத்துவங்களையும் காணமுடிகின்றது.

சங்க இலக்கியத்தில் வேட்டுவர்

செ. கயல்விழி
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தட்சசீலா பல்கலைக்கழகம்,
திண்டிவனம்.
அலைபேசி: 7418501062
kayalvizhi1610@gmail.com

முன்னுரை

ஒரு மொழியின் அடையாளம் இலக்கியம்; இலக்கியத்தின் அடையாளம் மக்கள்; மக்களின் அடையாளம் அவர் மொழிசார்ந்த இலக்கியம். எனவே மக்கள் வேறு, இலக்கியம் வேறு என்று பிரிக்க இயலாது. தமிழ் இலக்கியங்கள் கடலென விரிந்து கருத்துப்பெட்டகமாக காலம் உள்ள வரை நிலைத்திருக்கும் கற்பகவிருட்சமாகும். ஆதியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்திற்கென உருவானது மொழி. மக்களின் எண்ணம், சிந்தனை, செயல்பாடுகள், மாறமாற மொழியும் வளம் பெற்றது. மக்களின் மனவளத்திற்கு ஏற்பவளர்ச்சி பெற்றமொழி அவர்களின் அனுபவங்களை எண்ணங்களை உணர்வுகளைப் பதிவு செய்து வைக்கும் கருவியாகவும் மாறியது. அம்மாற்றத்தின் காரணமாக அனுபவப் பெட்டகங்கள் இலக்கியங்களாக உருப்பெற்றன.

அந்த இலக்கியங்கள் காலப்போக்கில் மக்களின் வாழ்வையும் வரலாற்றையும் பிற்காலத்தவர்களுக்கு எடுத்துரைக்கும் கருவூலகங் களாக விளங்கின. தேடியது கிடைக்கவும் தெளிவடையவும் ஐயங்களை அகற்றிக்கொள்ளவும் வாழும் வழிமுறையை அறியவும் பலரும் நாடிவரும் இடம், நம் தமிழ் இலக்கியங்களே ஆகும். அத்தகைய இலக்கியங்களில் சங்க இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு, பண்டைய வழக்கில் குறிஞ்சி நிலத்தைக் குறிக்கும் சொல்லாக, வேட்டுவன் என்ற சொல் இருந்துள்ளதும், மலைக்கும் வேட்டுவனுக்குமான

தொடர்பைப் பலவாறு உரைக்கின்ற இலக்கியச் சான்றுகளைக் கடந்து பார்க்கின்ற போது சங்க இலக்கியங்களில் வேட்டுவர் என்ற பொருண்மையில் இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

வேட்டுவன்

வேட்டுவன் எனும்செ சால் வேட்டை எனும் வினையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். வினை என்பது தொழிலைக் குறித்து வருமென்பதால் வேட்டை என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. இதனால் வேட்டுவன் என்பது வேட்டையாடும் தொழிலைச் செய்பவன் எனும் பொருளைக் குறிக்கின்றது. பண்டைய காலத்தில் இந்த வேட்டுவன் என்ற சொல்குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் பொதுப்பெயராக வழங்கியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழித்தெரிந்துகொள்ள முடிகின்றது.

சங்ககாலங்களில் வேட்டுவக் குடியினர் வில் எயினர், வில்கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டனர். சங்ககாலங்களில் வேட்டுவக்குடியைச் சேர்ந்த போர் வீரர்கள் மழவர், மறவர், வயவர், கூளியர் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர். சங்க இலக்கியங்களில் 'வேட்டுவர்' எனஅழைக்கப்பட்டவர்களைக் கல்வெட்டுகளில் 'பூலுவர்' என்றும் 'காவலன்' என்றும் 'வேட்டுவர்' என்றும் 'மாவலியர்' என்றும் 'வேடர்' அல்லது'வேட்டைக்காரன்' என்றும் அழைக்கப்பட்டனர்.

புறநானூற்றுப் பாடலில் வேட்டுவர்

ஒரு இனத்தின் தொன்மையையும், பெருமையையும், அவ்வினத்தின் வரலாற்றுச் சிறப்பினையும் அறிந்துகொள்ள வேண்டுமானால், அம்மக்கள் வாழ்ந்த இடம், பயன்படுத்திய மொழி, அவர்களின் கலை மற்றும் கலாச்சாரப் பண்பாட்டுக் கூறுகள் போன்றவை வழியாகவே அறிந்துகொள்ள முடியும். இவ்வகையில் பார்த்தால், ஏறத்தாழ மூவாயிரமாண்டுகளுக்கு முன்பே சிறந்த நாகரிக வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தவர்கள் தமிழர்கள் என்பது புலனாகும். கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே தமிழில் இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. தமிழில் சிறந்த இலக்கியங்கள் தோன்றி வெளிவந்து கொண்டு இருந்தாலும் நமது வரலாற்று வீரத்தைப் பதிவுபடுத்திய இலக்கியமாக இருந்தது புறநானூறு. அத்தகைய புறநானூற்றில்

வேட்டுவர் பற்றிய குறியீடுகளை நம் முன்னோர்கள் கூறிச்சென்றுள்ளனர். அந்த குறியீடுகளைச் சில பாடல்கள் வழி இங்குப் பார்க்கலாம்.

சொல்வலை வேட்டுவன்

மாற்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் (252) ஒன்றில் ‘‘சொல்வலை வேட்டுவன்’’ என்று குறிப்பிடுகிறார். அப்பாடல்,

இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே! - புறம் (252)

என அமைந்துள்ளது. இந்தப் பாடலில் ஒலிக்கும் வெள்ளிய அருவியில் பல காலம் நீராடுவதால் தன் கருநிறம் மரித்தில்லை இலை போன்று நிறம்மரிய சடையோடு கூடியவனாக அடர்ந்ததாளி இலையைப் பறித்துக் கொண்டிருக்கிறானே, இவனே தான், முன்னர் மயில் போன்ற இளம் அழகிகளை வேடன் வலையை விரித்துப் பறவைகளைப் பிடிப்பது போல வார்த்தை வலைவிரித்துத் தன் வசம்விழச் செய்தவன். வேடன் வலை விரித்து விலங்கினைப் பிடிப்பது போலச்சொல்லால் வலை வீசிப்பெண்களைத் தன் வசப்படுத்து பவன் என்பதால் மடமயில் பிணிக்கும் சொல்வலை வேட்டுவன் எனப்புலவர் சுட்டியிருக்கிறார்.

இதே போல் ‘வல்வில் வேட்டுவன்’ (புறம். 150), ‘யானை வேட்டுவன்’ (புற. 214) போன்ற சொல்லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வல்வில் வேட்டுவன்

கண்டீரக் கோப்பெருநள்ளிக்காக வன்பரணர் பாடிய பாடலில் தோட்டி மலைக்கு உரியவன் இவன் என்பதும், இவன் வேட்டுவக் குடியினன் என்பதும்,

வான்கதிர்த் திருமணி விளங்கும் சென்னிச்,
செல்வத் தோன்றல், ஓர் வல்வில் வேட்டுவன். புறம் (150)

குளிர்காலத்தில் பருந்தின் சிறகு பிரிந்து கிடப்பது போல் கிழிந்து போன ஆடையைப் புலவர் உடுத்தி, பலாமரத் தடியில் அமர்ந்திருந்தார். பல ஊர்களில் அலைந்த களைப்போடு இருந்ததை வேட்டைக்காரன், வல்வில் வேட்டுவன் (நள்ளி) கண்டான். அவன் காலில் குருதிக்கறை படிந்திருந்தது. அது அவன் வேட்டையாடிய மானின் குருதிக்கறை. தலையில் மணிமகுடம் அணிந்திருந்தான். அதனால் செல்வத் திருமகன்

போல அவன் காணப்பட்டான் என்ற பாடல் விளக்கத்தில் செல்வத் தோன்றல், ஓர் வல்வில் வேட்டுவன் என்ற வரியில் வல்வில் வேட்டுவன் என்ற சொல்லைப் புலவர் குறிப்பிட்டதன் மூலம் வேட்டு வருக்கான சான்றுப் பாடலாக அமைந்துள்ளது.

யானை வேட்டுவன்

கோப்பெருஞ்சோழன் என்ற புலவன் புறநானூறு: பாடல் 214- இல் பொதுவியல்திணைபொருண்மொழிக்காஞ்சித்துறையில் யானை வேட்டுவன் பற்றிய குறிப்பினை எழுதியுள்ளார்.

ஐயம் அறாஅர், கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவுஇல் லோரே;
யானை வேட்டுவன் யானையும் பெறுமே; - புறம் (214 , 2-4)

இந்த உலகில் நல்வினை நம்மாலும் செய்யமுடியுமா என்று ஐயப்பட்டுக் கொண்டே வாழ்பவர் நெஞ்சத்தில் துணிவு இல்லாத கோழைகள். மிகப்பெரிய விலங்காகிய யானை வேட்டைக்குச் சென்றவன் அதனைப்பெற முடியும் என்று வேட்டுவனைப் பற்றிய குறிப்பினை இங்கு நாம் காணமுடிகிறது.

குறும்பூழ் வேட்டுவன்

மேற்கூறிய பாடலின் தொடர்ச்சியாகவே இந்தப் பாடலும் அமைந்துள்ளது.

குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே;
அதனால், உயர்ந்த வேட்டத்து உயர்ந்திசி னோர்க்குச்
- புறம் (214 , 4-6)

குறும்பூழ் என்னும் சிறிய பறவையை வேட்டையாடச் சென்ற வன்வெறுங்கையோடு திரும்புதலும் உண்டு என்று வேட்டையாடி யவனுக்கு ஒன்றும் கிடைக்காமல் வீடு திரும்புதலை குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே என்ற வரியின் மூலம் குறிப்பிடுவதாக அமந்திருக்கின்றது.

பார்வை வேட்டுவன்

பழந்தமிழகத்தில், மிருகங்களைப் பிடிப்பதற்குப் பழக்கிய விலங்கினைப் பார்வை மிருகம் என்று அழைத்துள்ளனர். இது போன்று

பார்வைப்புள் (புள் - பறவை) என்பது பறவை இனத்தைச் சுட்டியிருக்கின்றது. நற்றிணையில் உள்ளகுடவாயிற் கீரத்தனார் எனும் புலவர் பாடிய இந்தப் பாடலில் (212) பார்வைப்புள் பற்றிய குறிப்பு வருகின்றது.

“பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ,
நெடுங்கால் கணந்துள் அம்புலம்பு கொள்தெள்விளி
சுரம் செல்கோடியர் கதுமென இசைக்கும்
நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்
கடுங்குரற் பம்பைக்கதநாய் வடுகர்” **- நற்றிணை (212)**

இந்தப் பாடல் பறவைகளைப் பிடிக்கக்கருதிய வேட்டுவன் பார்வைப் பறவையை வைத்தமைத்த வலையை வீசுவான். கொடிய வலையைக் கண்ட நெடிய கால்களைக் கொண்ட கணந்துள் பறவை அச்சம் கொண்டுதன் துணையை அழைக்கக்கூவும். அதனுடைய தனிமைக் குரல் அவ்வழிச் செல்லும் கூத்தரது யாழிசையோடு ஒத்து ஒலிக்கும்.

காட்டின் வழியிடத் தேவடுகர் தமது பம்பையை முழங்கிக்கொண்டு சினம் கொண்ட நாயுடன் வருவர். அத்தகைய வழியிடத்தே உள்ள நெடியதும் பெரியதுமான குன்றத்தைக் கடந்து நம்முடைய தலைவர் நம் ஊருக்கு மிக அருகில் வந்து கொண்டிருக்கிறார். பிரிவு காரணமாக உனது கையில் அணிந்துள்ள தொடிகழன்று போக, நம்மகன் உனது தொடிகழன்று போவது ஏனோ அன்னாய் கூறுவாய் என்று மழலைக் குரல் எழுப்பும்போதெல்லாம் நீ மனம் தளர்ந்து துயரத்தை அடைகின்றாய் நம்மிடத்திற்குத் தலைவன் வெகுசீக்கிரம் வந்து சேருவர். துன்பம் நீங்கி மகிழ்வாயாக என்று பொருள் கொள்ளப்படுகின்றது. இந்தப் பாடலில் வரும் பார்வை என்பது கைப்புள் (வளர்க்கப்பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட பறவை) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. வேட்டுவன் என்றால் வேட்டைக்குச் செல்பவன். பழக்கப்படுத்தப்பட்ட பறவையைக் கொண்டு பிற பறவைகளை வரச்செய்து, வளைக்குள் அவை வந்து அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பது தெரிகின்றது. பார்வை என்பதற்குக் கவனம் என்றொரு பொருளும் கொள்ளப்படுகின்றது.

பத்துப்பாட்டுத் தொகுப்பிலுள்ள பெரும்பாணாற்றுப் படையில் பார்வையாத்த பறைதாள் விளவின், நீழல்முன்றில்... (95) எனும்

பாடலடிகள் வருகின்றன. இந்தப் பாடலடிக்கு (எயிற்றியர்) குடிசை முற்றத்திலுள்ள விளாமரத்தின் நிழலில் பார்வை மான்கள் கட்டப்பட்டிருக்கும் என்று பழையவுரை பொருள் தருகின்றது. இங்கு பார்வை என்பது பார்வை மானைக் குறித்திருக்கிறது. யானையை வைத்து யானையைப் பிடிப்பது போலதாம் வளர்த்த மானைக்காட்டி மானைப் பிடிப்பது எயினர் வழக்காக இருந்திருக்கிறது.

முடிவுரை

பண்டைவழக்கில் குறிஞ்சி நிலமென்பது மலையைக் குறித்திருக்கின்றது. மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பைப் பலவாறு உரைக்கின்றன சங்க இலக்கியங்கள். இலக்கியச் சான்றுகளைக் கடந்து பார்க்கின்ற போது தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கழுகுமலையில் ஒற்றைப் பாறையில் செதுக்கப்பட்ட வேட்டுவன் கோவில் வரலாற்று ஆவணமாக இன்றைக்கும் இருந்து வருகிறது.

வேட்டுவர்களிடமிருந்த அரிய வழக்கங்கள் பற்றிய பதிவுகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிட்ட சில வழங்கங்கள் தற்கால வழக்கிலும் இருக்கின்றன.

தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு மட்டுமின்றி மிருகங்களைப் பிடிப்பதற்கும் மிருகத்தைப் பழக்கப்படுத்திப் பயன்படுத்திக் கொள்கின்ற வழக்கம் மனித இனத்திற்கு இருந்திருக்கிறது. இவ்வழக்கம் தற்காலத்திலும் வழக்கிலிருப்பதைக் களஆய்வுகளின் வழியாகக் கண்டுணர முடியும். தமிழ்ச் சமூகத்தில் நெடுங்காலமாக இவ்வழக்கம் இருந்து வருவதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கடைபிடித்த கல்யாண நடைமுறைகள்

(கள ஆய்வு: கோயம்புத்தூர் (மா), அன்னூர் (வ), ஆலபாளையம் - ஊர்)

முனைவர் மு.கருப்புசாமி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கோபி கலை அறிவியல் கல்லூரி,
கோபிசெட்டிபாளையம் - 53.
அலைபேசி: 6374736631.
mkskalaimalar@gmail.com

தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டம் - அன்னூர் வட்டம், கணுவக்கரை கிராமத்தில் அமைந்துள்ளது ஆலபாளையம் என்னும் ஊர். ஏறக்குறைய 250 - குடும்பங்களைக் கொண்ட இவ்வூரில் வேடுவர் - வேட்டுவர் இன மக்கள் பெரும்பான்மையாகவும் ஆதிதிராவிடர், வேளாளர், போயர், ஆசாரிகள், பண்டாரத்தார் ஆகியோர் சிறிய எண்ணிக்கை அளவிலும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வூரின் அண்டை ஊர்களாகக் கிழக்கே புன்செய்ப் புளியம்பட்டி, தெற்கே அன்னூர் (பேரூராட்சி), மேற்கே மேட்டுப்பாளையம் ஆகிய நகரங்களும் மிக அருகில் உள்ள கிராமங்களாக, வடக்கே கள்ளிப்பாளையம், கவுண்டம் பாளையம், மேற்கே கணுவக்கரை, முத்துக்குட்டிபாளையம், கிழக்கே நீலிபாளையம், அரிசிமில்மேடு, ஏ.கே.ஆர்.நகர் (ஏ.கே.ஆர்.சிட்டி), தெற்கே வடுகபாளையம், செல்லப்பம்பாளையம் ஆகிய சிற்றூர்களும் அமைந்துள்ளன.

ஆலபாளையம் என்பது ஆல் + பாளையம் என்பதன் சேர்க்கையாகும்; ‘ஆல்’ என்றால் ‘ஆலமரம்’ என்பது பொருள். ஆலமரத்தை அடையாளமாகக் கொண்டு குடியிருந்த பகுதியாதலால் இப்பெயர் ஏற்பட்டது. இன்றைக்கும் ஊரின் காவல் தெய்வமான கருப்பராயன் கோயிலுக்கும் அதன் அருகில் உள்ள குட்டைக்கும்

இடையில் மிகப்பெரிய அளவில் வளர்ந்து நிற்கிறது, ஊர்ப் பெயரின் அடையாளமான ஆலமரம். அம்மரம் 1950 - 60 களில் நடப்பட்டது என்று கள ஆய்வில் அறியமுடிந்தது.

இது மற்றொரு ஊர்ப்பொது மரத்தின் வாரிசு ஆகும். முன்னொரு காலத்தில் ஊருக்குள் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அப்போது, முதன்முறையாக இவ்வூரின் மேற்கில் உள்ள கணுவக்கரை கிராமத்திலிருந்து கிழக்கில் உள்ள புன்செய்ப் புளியம்பட்டிக்கு அரசாங்கத்தால் பாதை அமைக்கப்பட்டபோது ஆலபாளையத்தின் ஊரின் வடக்கில் இருந்த ஆலமரம் பாதையின் நடுவே குறுக்கிட்டதால் அரசாங்கத்தால் அகற்றப்படவே இவ்வூரைச் சேர்ந்த ஒருவர் அம்மரத்திலிருந்து ஒரு கிளையை எடுத்துவந்த குட்டையின் கரையில் நடுகிறார். அவ்வாறு நட்ட ஆலமரம் இன்று ஊரின் நுழைவாயிலில் (கிழக்கில்) ஊரின் அடையாளமாகவும் ஊர்ப்பெயரின் காரணமாகவும் கருப்பராயன் கோயிலின் தலமரமாகவும் குட்டையின் பாதுகாவலாகவும் இன்னும் பிற உயிர்களின் வாழ்விடமாகவும் ஊரின் பண்பாட்டுப் பழைமைச் சின்னமாகவும் திகழ்கிறது.

இதனாலேயே இவ்வூருக்கு ஆலபாளையம் என்று பெயர் உருவானதைக் கள ஆய்வின்வழி அறியமுடிந்தது. இவ்வூரில் பெரும்பான்மையாக உள்ள வேடுவர் - வேட்டுவர் இன மக்கள் (தற்போதுள்ள ஆலமரம் தோன்றிய காலகட்டத்தில்) 50 - ஆண்டுகளுக்கு முன்னர் கடைபிடித்த திருமணமுறை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. இவ்வாய்வின்வழி 50 - ஆண்டுகளிலேயே இவ்வினத்தில் ஏற்பட்ட வாழ்வியல் மாற்றத்தை அறிவது நோக்கமாக அமைகிறது. அந்தக் காலகட்டத்தில் திருமணம் என்பது இரண்டு பகுதிகளாக அமைந்து முகூர்த்தத்திற்கு முந்தையநாள் நிகழ்வுகள் கல்யாணம் என்றும் தாலி கட்டும் நாளில் நிகழ்வது முகூர்த்தம் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் ஆய்வின் எல்லை கருதி இங்கு, முகூர்த்தத்திற்கு முந்தைய கல்யாண நடைமுறைகள் மட்டும் ஆய்ந்தறியப்படுகின்றன.

பொருத்தமும் பொண்ணு பார்த்தலும்

ஆணுக்கு: 20 - 25, பெண்ணுக்கு: 18 - 22 ஆகிய வயதில் திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. “தற்காலத்தில் ஆண் களுக்குத் திருமண வயது இருபத்தியொன்று என்றம் பெண்களுக்குத் திருமண வயது பதினெட்டு என்றும் உடலியல் கூறுகளின் அடிப்படையில்

சட்டம் வகுக்கப்பட்டுள்ளது.''[1] திருமணம் என்ற சொல்லிற்குப் பதிலாகக் கல்யாணம், முகூர்த்தம் என்ற சொற்களே வழக்கில் இருந்துள்ளன. தொடக்கமாக, ஆணுக்கும் பெண்ணுக்கும் பெயர், இராசிப் பொருத்தம் பார்க்கப்படும். பெயர் பொருத்தம் சரியாக இருக்குமானால் அதனைத் தொடர்ந்து 'பொண்' பார்க்கப்படும். பொண்ணு பார்த்தல் நிகழ்ச்சிதான் திருமண ஏற்பாட்டின் முதல் நிகழ்வாகும்.

முதலாவதாக, மாப்பிள்ளை வீட்டார்தான் 'பொண்ணு பார்த்தல்' என்று கூறி பெண் வீட்டிற்குச் செல்லவேண்டும். மாப்பிள்ளை, பையனின் பெற்றோர், உடன்பிறந்தவர்கள், நெருங்கிய உறவினர்கள் மட்டும் பெண் வீட்டிற்குச் சென்று பெண்ணைப் பார்த்து வருவர். அதுபோலவே, பெண் வீட்டாரும்(பெண்ணைத் தவிர) மாப்பிள்ளை வீட்டிற்குச் சென்று இடம், வீடு, சொத்து முதலானவற்றைப் பார்த்துக் கொள்வர்; சம்மதம் ஏற்படவே பெண் பார்த்தல் நிகழ்வு தொடங்கப்படும். சம்மதம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஏனெனில், ''திருமணம் இன்ப உணர்விற்குத் தீனி போடும் முயற்சி மட்டுமன்று, வாணாள் முழுவதும் இன்ப துன்பம் இரண்டிலும் சமபங்கு போட்டுக் கொண்டு பிறவியின் அறக் கடமையை நிறைவேற்றத் தொடங்கும் முதல் நிகழ்ச்சி ஆகும்.''[2]

நேரம் பார்ப்பது கிடையாது. அதிகாலை நேரம்தான் (6 - 8) அதற்கு உரிய நேரமாகக் கருதப்பட்டது. மாப்பிள்ளை வீட்டார்கள், பங்காளிகள், உறவினர் என 10 - 15 நபர்கள் மட்டும் பெண் வீட்டிற்குச் செல்வர். வழியில் செல்கையில் தடம் வழி பார்க்கும் பணியும் சேர்ந்தே நடைபெறும். அது மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதாவது, ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் குடும்ப வாழ்வின் எதிர்காலம் நன்மை/தீமையாக அமையுமா? என்பதன் அறிகுறிகள் அச்சகுனத்தின் வழி இறைவன் /இயற்கையால் காட்டப்படும் என்பதில் முழு நம்பிக்கை வைத்திருந்தனர்.

தடம் வழியில்(சகுனம்) காகம் முதன்மை இடம் பெறுகிறது. அதாவது, வழியில் செல்லும்போது காகம் இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் போனால் நல்லது. மாறிச் சென்றால் (வலதிலிருந்து இடது) ஆகாது. செல்லும் காரியம் ஆகாது. காரியம் ஆனாலும் நன்மை இருக்காது என்பது பொருளாகக் கொள்ளப்பட்டது. (காகம் - ஈசனின் வாகனம், வலப்பக்கம் போனால் வழிவிடுதல் - நல்ல சகுனம்).

மேலும், மாங்கல்யப் பெண் எதிரில் வந்தால் நல்லது, மாதாரிகள் நிறையப்பேர் வந்தால் நல்லது என்ற முறையில் சகுனம் பார்க்கப்படும். அதுபோலவே, இரண்டு மாதாரிகள் எதிரில் வருவது (இழவு செய்தி சொல்பவரின் அறிகுறி), நாவிதர் வருகை, ஐயர் எதிரில் வருதல் ஆகியன கெட்ட சகுனங்களாகக் கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி பூனை, பாம்பு குறுக்கே செல்லுதல், செம்பூத்தைக் காணுதல், பால் எதிரில் கொண்டு வருதல், விறகுச் சுமை, மம்முட்டி, கடப்பாரை எடுத்து வருதல் யாவும் மரணத்தின் அறிகுறிகள் எனவும் அவை கெட்ட சகுனங்களாக நம்பப்பட்டது.

இச்சகுனங்கள் மாப்பிள்ளை ஊரின் தொடக்கத்திலும் பெண் ஊரினை நெருங்கும்போதும் மட்டுமே ஊர்ப் பெரியவர்களால் பார்க்கப் பட்டுச் சொல்லப்படும். சகுனம் சரியில்லை என்றால் பெரியோர்களால் தீய சகுனம் எனத் தீமானிக்கப்பட்டு திருமணம் நிறுத்தப்படும். அதாவது, “கொங்கு நாட்டுப் பகுதியில் வசித்தோர், கொங்கு மக்கள் என்றாலும், மண்ணின் இயல்பு, சுற்றுச் சூழல், பரம்பரை ஆகியவற்றின் காரணமாகப் பல குறிப்பிடத்தக்க இயல்புகள் அப்பகுதி மக்களிடையே வெளிப்படுதல் ஒருதலை.”[3]

சகுனம் சரியாக இருக்கும் நிலையில் பெண் வீட்டிற்கு மாப்பிள்ளையும் உடன் வந்தோரும் செல்வர். மாப்பிள்ளை தம் வீட்டிற்கு வருவதைக்க கண்டதும், மணப்பெண் வீட்டிற்குள் ஓடி ஒளிந்து கொள்வதுண்டு. வந்தவர்களுக்கு முதல் பண்பாட்டு வழக்கமான குடிக்கத் தண்ணீர் தருவர். பெண், வீட்டுக்குள் இருக்க அவரவர் சென்று பார்த்துக் கொள்வர். பெண் கையில் தேநீர் கொடுத்து மாப்பிள்ளை வீட்டாருக்குத் தரும் வழக்கம் அப்போது இல்லை. அது பின்னாளில் ஏற்பட்டதாகும். உணவு பரிமாறி உண்பர். திருமணம் குறித்த முதல் பேச்சுவார்த்தை இங்குதான் நடைபெறும். பெண் வீட்டாரால் எத்தனை பவுன் போடப்படும், மாப்பிள்ளை வீட்டார் பரியம்எவ்வளவு கட்டப்போகின்றீர்? எனப் பேசப்படும். அன்றைய காலகட்டத்தைப் பொறுத்தவரை 3,5,10 பவுன் போடப்படும் - பவுன் மாப்பிள்ளை வீட்டாரால் கேட்கப்படும். பரியத்தொகை 12.1/4- (பன்னிரண்டே கால்) ரூபாய் கட்ட வேண்டும்.

பேச்சு நிகழ்வு முடிந்து, மாப்பிள்ளை வீட்டார் திரும்புகையில் பெண்ணின் ஊர்த் தலைவர் அல்லது பெரியவர் கையில் வெற்றிலை பாக்கு கொடுத்து மாப்பிள்ளை வீட்டாருடன் வந்த பெரியவர் கையில்

கொடுத்து அனுப்பி வைக்கப்படும். இந்நிகழ்வு செவ்வாய், சனிக்கிழமை தவிர மற்ற ஐந்து நாள்களும் உரித்தானவை.

வேறொரு நாளில் பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் செல்வர். இவர்கள் செல்லும்போதும் சகுனம் பார்த்தல் நடைபெறும். மாப்பிள்ளை பெண் வீட்டிற்கு வந்ததைப் போல, மாப்பிள்ளை வீட்டிற்கு மணப்பெண் செல்வதில்லை; செல்லக்கூடாது. தற்போது வரை (2025) பெண்கள் செல்லக்கூடாது என்பது உறுதியாகக் கடைபிடிக்கப்படுகிறது. திருமணம் ஏதேனும் தடை நிகழ்ந்தால் அது வீட்டிற்குச் சென்று பார்த்துப் பழகிய பெண்ணுக்குப் பெரும் மன அழுத்தம் தருவதாகக் கருதியிருக்கலாம். அதனால், பெண்ணுக்குத் துணையாக உறவினர் (பாட்டி, தோழி, மற்றவர்) பெண் வீட்டில் இருக்க மற்ற அனைவரும் சென்றிடுவர். மாப்பிள்ளை வீட்டில் மணநாள் முடிவு செய்யப்படும். கோயில் அல்லது வீட்டில் திருமணம் நிகழ்த்த முடிவு ஏற்படும். மண்டபங்கள் கிடையாது. அதோடு உப்பு வாங்குதல் மற்றும் பரியம் கட்டும் நாள் முடிவு செய்யப்பட்டு பெண் வீட்டிலிருக்கும் ஊர்ப் பெரியவரால் வெற்றிலை பாக்கு கொடுத்து அனுப்பி வைக்கப்படும்.

உப்பு & இதர பொருள்கள் வாங்குதல்

பங்காளி வீட்டுப் பெண்கள், இருமண வீட்டார் சிலரும் கடைக்குச் சென்று உப்பு வாங்கிப் பரிமாறிக் கொள்வது உப்பு வாங்குதல் எனப்படுகிறது. இந்நிகழ்விற்கு மாப்பிள்ளையும் பெண்ணும் வரமாட்டார்கள்; விரும்பினால் மாப்பிள்ளை மட்டும் உடன்வருவார். மாப்பிள்ளை வீட்டார் 6 படி உப்பு வாங்குவர் பெண் வீட்டார் 5 - படி உப்பு வாங்குவர். பிறகு இரண்டு கூடைகளையும் அருகில் வைத்து மாப்பிள்ளை வீட்டுக் கூடையிலிருந்து ஒரு படி அளந்து(எடுத்து) பெண் வீட்டார் கூடையில் போடுவர். மீண்டும் மாப்பிள்ளை வீட்டார் கூடையிலிருந்து ஒருபடி அளந்து பெண் வீட்டாருக்குப் போட வேண்டும். ஆக, மாப்பிள்ளைக்கு 5 - படி, பெண்ணுக்கு 6 - படி எனப் பரிமாறிக் கொள்ளப்படும். அடுத்த பெண் வீட்டார் கூடையிலிருந்து எடுத்து மாப்பிள்ளை வீட்டுக் கூடையில் போடுவர். பெண் வீட்டார் கூடையில் ஒருபடி அதிகமாக இருக்கவேண்டும். அதாவது, உப்பைக் கொடுத்துப் பெண்ணைப் பெறுவது உறுதிசெய்யப்படுகிறது. இதனை, இன்று தமிழ்நாட்டில் பெரும்பாலான சாதியரிடத்தில் புது மணமகள் தன் கணவன் வீட்டிற்குள் நுழையும்போது ஒரு ஓலைக்கூடையில் உப்பை

எடுத்துக்கொண்டே நுழைகிறாள்.4 என்று கூறும் தொ.பரமசிவம் அவர்களின் கருத்து ஒப்புநோக்கத்தக்கது. உப்பு பரிமாறிக் கொண்டதும் இரு வீட்டார்களும் தத்தமது வீட்டிற்குச் சென்றுவிடுவர்.

பரியம் கட்டுதல்

மணப்பெண் வீட்டில் நடைபெறும். மாப்பிள்ளையின் பங்காளிகள் மற்றும் உறவினர்கள் 5,6 பேர் பெண் வீட்டிற்குச் செல்வர். குடிக்கத் தண்ணீர், தேநீர் வழங்கப்படும். பரியத்தொகை கட்டிய பின்னர்தான் உணவு உண்ணப்படும்.

தேவையானவர்கள் மற்றும் பொருள்கள்

பங்காளிகள், மாமன், மச்சான், அத்தை, அக்கா, தங்கை ஊர்ப்பெரியவர்கள்.

வெங்கல வட்டில்

வெள்ளைத் துணி(பரியத் துணி மஞ்சள் துடைக்கப்பட்டது) 1/2-அடி அகலம், 2-அடி நீளம்

வெங்கலச் சொம்பு(தண்ணீருடன்) 2

மஞ்சள்(மூன்று கொம்பு உடையது)

நவதானியம்

வெற்றிலை - 2 கவுளி

பாக்கு (ஏற்றாற் போல)

தரையில் விரிப்பு விரித்து, இருவீட்டாரும் எதிரெதிர் திசையில் வரிசையாக உட்காருவர். மஞ்சள் துடைத்த பரியத் துணியில் முக்கொம்பு மஞ்சள் மற்றும் நவதானியத்தை முடிந்து, வீட்டில் இருக்கும் தண்ணீர்ச் சால்மேல் வைத்து எடுத்து வந்து, இரு அணியினருக்கும் நடுவே வைக்கப்பட்டுள்ள வெங்கலத் தட்டில் வெற்றிலை பாக்குகளோடு சேர்த்து வைத்துக் கொள்வர். அருகே வெங்கலச் சொம்பில் தண்ணீர் வைத்திருக்க வேண்டும்.

முதலாவதாக, குலம் கோதுதல் நடைபெறும். இரு அணியினரும் பேசிக் கொள்ளும்முறை: (இரு வீட்டார்களும் வணங்கிக் கொள்வர்).

பெண் வீட்டார் : வணக்கம். யாரப்பா? எங்கே வந்தீங்க? இந்தப் பக்கம்.

மாப்பிள்ளை வீட்டார் : நாங்க ஆலத்தூர் (ஊர்ப் பெயர் - உதாரணம்) ஊர்காரங்க. மான் ஒண்ணு தேடி வந்தோமுங்க.

பெண் வீட்டார் : மானா? இங்கே எங்கே மான் இருக்குது? போவியா?

மா. வீட்டார் : அட... மானுன்னா.. சாதாரண மானில்லைங்க.. எங்க காளைக்கு ஏத்த பொன் மானுங்க.

பெண் வீட்டார் : எது பொன் மானா?

மா. வீட்டார் : மானுன்னா பொன் மானில்லைங்க. பெண் மானுங்க.

பெண் வீட்டார் : எங்ககிட்ட மானெல்லம் இல்லை... பொண்ணு தான் இருக்கு.

மா. வீட்டார் : நல்லதா போச்சு. காளைக்கு வெளையாட பொண்ணுதான் வேணும்... கொடுங்க.

பெண் வீட்டார் : அப்படியா? நீங்க என்ன இனம்? என்ன குலம்?

மா. வீட்டார் : நாங்க வேடர் இனம். மின்ன வேட்டுவர் குலம்(எடுத்துக்காட்டுக்காக)

பெண் வீட்டார் : நாங்க அந்தி குலம்.
என்னப்பா மின்ன வேட்டுவர் பொண்ணக் கேக்குறாங்க. கொடுத்தறலாமா? (சுற்றியிருக்கும் பெண் வீட்டார் ஆம் என்று சொல்லுவர்)

சரி! பொண்ணக் கொடுக்க எங்களுக்குச் சம்மதம்.

மா. வீட்டார் : என்னப்பா... பொண்ணக் கொடுக்கறாங்க நம்மளுக்குச் சம்மதமா? (சம்மதம் என்பர்).

மின்ன குலத்துக்கு அந்தி குலத்தில் கொண்டோம்.

பெண் வீட்டார் : அந்தி குலத்திலிருந்து மின்ன குலத்துக்குக் கொடுத்தோம்.

இதனை மூன்று முறை வெற்றிலை பாக்கு கொடுத்து மூன்று முறை இருவீட்டுச் சார்பாக அமர்ந்துள்ள பெரியவர்கள் மாற்றி மாற்றிச் சொல்வர். நிறைவாக அங்கு உள்ள பெண்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து நிறைவு செய்வர். பரியத் தொகை 12.1/4 (பன்னிரண்டே கால்) மாப்பிள்ளை வீட்டார் கட்ட வேண்டும். பெண் வீட்டார் பெற்றுக் கொள்வர்.

இதரப் பொருள்கள் வாங்குதல்

பெண் வீட்டார் பெண்ணுக்குக் கொடுக்கும் கட்டாயச் சீர்களாக கூடை, முறம், தக்கை, விசிறி, பாய், தலையணை ஆகியன புதிதாக வாங்கிக் கொள்வர்.

ஆடை வாங்குதல் சவுளி எடுப்பது என்று அழைக்கப்படும். பெண்ணுக்கான முகூர்த்தச் சேலை மாப்பிள்ளை வீட்டார் வாங்குதல் வேண்டும். மாப்பிள்ளைக்குத் தேவையான வேட்டி, சட்டை, துண்டு ஆகியவற்றைப் பெண்வீட்டார் எடுக்கவேண்டும். மேலும், எண்ணெய் தேப்பு நிகழ்வில் மாப்பிள்ளைக்கு உடுத்த வேட்டி சட்டை பெண்வீட்டாரே எடுப்பர். அதனையொட்டி, மணமக்கள் வீட்டார் இருவரும் மணமக்களின் பெற்றோர், அப்பாரு, அப்பத்தா, அப்புச்சி, அம்மத்தா, உடன்பிறந்தவர்கள், திருமணமாகியிருந்தால் அவர்தம் குழந்தைகள், தாய்மாமன், அத்தை, கைபிடித் தோழன், தோழி, மச்சான், நாத்தனார், தன்வீடு தோட்ட வேலையாள்கள், இன்னும் சிலருக்கும் ஆடை எடுத்துக் கொடுத்து மகிழ்வது தற்காலத்தில் வழக்கமாக உள்ளதைக் காணலாம்.

மணப்பெண் அணியக்கூடிய கொடியும் தாலியுமான அணிகலன் மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்தது. தாலி என்ற சொல்லின் வேர்ச்சொல்லை இனங்கான முடியவில்லை. ஆனால் தாலி, தாலாட்டு ஆகிய சொற்களைக் கொண்டு தாலி என்பது தொங்கவிடப்படும் அணி(காதணி, மூக்கணி, விரலணி போல) என்று கொள்ளலாம்.5 இக்கொடி, தாலி இரண்டும் மாப்பிள்ளை வீட்டார்தான் எடுக்க வேண்டும். முகூர்த்தத்தின்போது, மணமகன் மணமகள் கழுத்தில் மஞ்சள் கயிறு கட்டுவார். அக்கயிறு தங்கத்தால் செய்த கொடியுடன் பின்னப்பட்டு, தலையின் மேல்பகுதியிலிருந்து போடப்பட்டு மூன்று முடிச்சு போடுவார். கொடியின் முன்பகுதி தாலி அமையும் வகையில் தங்கத்தால் செய்யப்படும். இதனை, வடமொழியில் மாங்கல்யம் என்பர். கொடி 4 - பவுன் தங்கம், தாலி 1 - பவுன் தங்கம் எடுக்க இருவீட்டாரும் பெண்ணும் மாப்பிள்ளையும் கூட்டாகச் செல்வர். இவ்வளவு மணமகன் வீட்டாரின் செல்வாக்கைப் பொறுத்து அதிகமாவதும் உண்டு.

மூன்று நாள் கல்யாணம்

திருமணத்திற்கு முந்தைய மூன்றுநாள்கள் மூன்று நாள் கல்யாணம் என்று அழைக்கப்பட்டன. அவை இரு வீட்டிலும் நடைபெறும்.

முதல் நாள்

முதல் நாள் மாலை 7 மணியிலிருந்து 10 மணி வரை நிகழும் நிகழ்வாக இது அமையும். 'பட்டினிச் சோறு போடுதல், முகூர்த்தக் கால் நடுதல்' இதில் அடங்கும்.

நேற்று மாலையே மாப்பிள்ளையின் அக்காவும் தங்கையும், பெண்ணின் தாய்மாமனும் அருகில் உள்ள பங்காளி வீட்டார்களுக்கு நேரில் சென்று அழைப்பு விடுக்க வேண்டும்.

உரியவர்கள்

மணமகள், மணமகன் (அவரவர் வீட்டில்)

பங்காளி வீட்டுப் பெண்கள் (மூவர்)

நாவிதர், சீர்க்காரர்.

மணமகன் வீட்டில் - மச்சான், தங்கை அல்லது அக்கா.

மணமகன் வீட்டில் - தாய்மாமன், அத்தை.

பொருள்கள்

மூன்று வெங்கலச் சொம்பு.

பாலைக்குச்சி(வெற்பாலை), உரல், மஞ்சள் முடிப்பு, புதுப்பானை.

வந்திருப்பவர்களுக்கு உணவு தயாரிக்க வேண்டும்.

மாலை நேரம் தொடங்கியதும் முகூர்த்தக் கால் பிடிக்க சீர்க்காரர் வருவார். (கிழக்குத் திசையை நோக்கி நின்று வழிபடும் வகையில் அமைக்கப்படுதல் வேண்டும்.) நாவிதர் பாலக்குச்சி கொண்டு வருவார். மாப்பிள்ளை வீட்டில் மாப்பிள்ளைக்கு நாவிதர் சவரம் செய்வார்.

முதலில் உணவு தயாரிக்க வேண்டும். உணவு தயாராகி முடியும் வேளையில் பங்காளி வீட்டுப் பெண்கள் மூன்றுபேர் மூன்று வெங்கலச் சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து மாப்பிள்ளை/பெண்ணுக்கு ஊற்றிட

ஏற்பாடு செய்வர். முக்காலியில் உட்கார வைத்து மாப்பிள்ளைக்கு அக்காவும் மச்சானும், பெண்ணுக்குத் தாய்மாமனும் அத்தையும் நீர் ஊற்றி வார்ப்பர். சீர்க்காரர் வட்டிலில் சோறு எடுத்து மூன்றுமுறை (கைப்பிடி அளவு) தலை சுற்றிப்(மணமகள் /மணமகள்) போடுவர். மீண்டும் கைபிடித் தோழன்/தாய்மாமன் தண்ணீர் ஊற்றுவர். பின்பு (மணமகள் /மணமகள்) குளியலறை சென்று குளித்து வந்து, இறை வணக்கம் - குலதெய்வம் செய்வர். செய்யும் போது முகூர்த்த வேட்டி/ சேலைகளை வைத்து வழிபடுவர்.

வழிபாடு முடிந்ததும் முகூர்த்தக் கால் பிடித்தல் நடைபெறும். நாவிதர்/சீர்க்காரர் கொண்டுவந்த பாலைக்குச்சி, தளைகளை உயரமான குச்சி அல்லது உரலில் மஞ்சள் முடிப்புடன் கூடிய நவதானியத்தோடு கட்டி நிறுத்துவர். அக்குச்சிக்குத் திருநீர், சந்தனம், சிகப்பு வைப்பர். அதனைக் கற்பூரம், சந்தனக் குச்சி வைத்து மணமக்கள் முன்னிலையில் அனைவரும் வழிபடுவர். மாப்பிள்ளைக்குக் கைபிடித்தோழனும் பெண்ணுக்குப் பெண்ணிடுக்கியும் (தாய்மாமன்) இலை போட்டு அமரவைத்து அன்னமிட, மணமக்கள்(அவரவர் வீட்டில்) உண்பர். அதன் பின்னரே வந்திருப்பவர்கள் உணவு உண்டுவிட்டுச் செல்வர்.

இரண்டாம் நாள்

இரண்டாம் நாள் கல்யாணம் காலையில் தொடங்கும். இம்முறைக்கு நாட்டுக்கல் வழிபாடு, முய்களரி என்று பெயர். மாப்பிள்ளை, மணப்பெண்ணுக்கு எனத் தனித்தனி நடைமுறைகள் உண்டு.

மாப்பிள்ளை : முதலாவதாக, மாப்பிள்ளை நாட்டுங் கல்லுக்கு (ஊருக்குள் இருக்கும் பழைய ஆலமரம் இருந்த இடம்) அழைத்துச் செல்வர். வாத்தியம் இசைக்க, பந்தம் பிடித்து முன்னே செல்ல கைபிடித் தோழர் மாப்பிள்ளையை அழைத்துச் செல்வர். பங்காளி வீட்டாரும், உறவினர் சிலரும் உடன் செல்வர். முன்னாடி வண்ணார் மாத்து விரித்துச் செல்ல மாப்பிள்ளை அதன்மீது நடந்து செல்வார். சீர்க்காரர் தண்ணீரும் சோறும் கொண்டு செல்வர்.

மணப்பெண் : பெண்ணினது ஊரில் மேலே குறிப்பிட்டோருடன் தாய்மாமன், பெண்ணைத் தோளில் வைத்துத் தூக்கிச் செல்ல மாத்தின்மீது நடந்து செல்வர். தூக்கிச் செல்வது தாய்மாமனின் உரிமை.

முக்காலி போட்டு நாட்டுங்கல் முன் (மணமகள் /மணமகள்) அமர வைத்திருப்பர். சீர்க்காரர் கொண்டுவந்த தண்ணீரை நாட்டுங்கல்லுக்கு

ஊற்றுவார். நாட்டுங்கல்லில் வெற்றிலை, பாக்கு வைத்து மஞ்சளை நூலில் கட்டி விடுவர். சோற்றை மணமக்களுக்கு மூன்று முறை இப்பக்கமாகவும் அப்பக்கமாகவும் சுற்றிப் போடுவர். அதனை வணங்கி விட்டு வீடு திரும்புவர். நாட்டுங் கல்லிலிருந்து வீட்டுக்குச் செல்லும்போது சிறிது தூரத்திற்குப் பிறகு ஒரு கட்டிலில் மாப்பிள்ளையை உட்கார வைத்துக் கட்டிலின் நான்கு கால்களின் மீது சோற்றை வடை வடிவில் தட்டி வைப்பர். மாப்பிள்ளையை மாத்துப் போட்டு மூடிவிடுவர். அதோடு கட்டிலை மூன்றுமுறை தூக்கி இறக்குவர். அதன்பிறகே வீட்டிற்கு அழைத்துச் செல்வர்.

பிறகு, நாவிதர் ஊர் முழுதும் சென்று முய் களரி கூடுது என்று சொல்லி வருவர். மதிய உணவிற்கு வந்தவர்கள் உண்டவுடன் முய் வைப்பு தொடங்கும்.

வண்ணான் மாத்து வைத்து அதன்மீது முக்காலி வைப்பர். அம்முக்காலி மேல் வெங்கல வட்டில் வைத்து மொய் வாங்கப்படும். முதலில் ஊர்த் தலைவர் மொய் வைப்பர். 4 - அணா முதல் 1, 5, 10, 20 ரூபாய் வரை மொய் வைக்கப்படும். மொய் வாங்கி முடிந்ததும் அரிசிக்கூடை கொண்டு செல்லுதல் நடைபெறும். (அரிசிக்கூடை: 10 - படி அரிசி, 1 - படி துவரம் பருப்பு, 1 - படி சர்க்கரை, 1 - தேங்காய், 1 - சீப்புப் பழம், 2 - வெற்றிலை பாக்கு) முதலாவதாக, மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குப் பங்காளிகளை அழைத்து - பங்காளிவீட்டுப் பெண் அரிசிக்கூடை எடுத்துச் செல்ல - சென்று உண்டு வருவர். அரிசிக்கூடை எடுத்து வருவோரை வாசலுக்கே சென்று வரவேற்பது மரபு. ஒரு சொம்பில் தண்ணீர் எடுத்துச்சென்று அவருக்குக் கொடுத்து கூடையை வாங்கி வீட்டிற்குள் வைத்துவிடுவர். இக்கூடையினைத் திருமணவிழா முடிந்ததும் திருப்பி அளிக்க வேண்டும். அவ்வாறு தரும்போது அரிசி நான்கு படியும் பழம், வெற்றிலை பாக்கு, இனிப்பும் வைத்துத் தருவது வழக்கம்; வெறுங்கூடை தரக்கூடாது.

அடுத்தநாள் முகூர்த்தம் முடிக்க, இன்று மாலை - பொழுது சாய்ந்ததும் பெண் வீட்டாருக்குச் செல்வதற்கான மாப்பிள்ளை வீட்டாரின் புறப்பாடு நிகழும். புறப்படும் முன் மாப்பிள்ளை நடுவீட்டுச் சாமி (முன்னோர்)யை வழிபடுவார். அங்கு, கற்பூரம் ஏற்றி மணப்பெண்ணுக்காகச் செய்த தாலிக்கொடியை வைத்து வணங்குவர். வணங்கியபின் அத்தாலியை மாப்பிள்ளையின் அம்மா தம் கழுத்தில் போட்டுக் கொள்வார். அம்மா இல்லாத சூழலில் பங்காளி வீட்டுப் பெண்ணின் கழுத்தில் போட்டுக் கொள்ளப்படும்.

விடுதி வீடு சேர்தல்

மாப்பிள்ளை, வீட்டிலிருந்து புறப்பட்டதும் அவரைக் குதிரையில் ஏற்றி அழைத்துச் செல்ல மற்றவர்கள் மாட்டு வண்டிகளில் செல்வர். பெண்ணின் வீடு நெடுந்தொலைவாக இருந்தால் மட்டும் மாப்பிள்ளை, தம் வீட்டிலிருந்து சிறிதுதூரம் குதிரையில் சென்று இறங்கி மாட்டு வண்டியில் ஏறிக்கொள்வர். பெண் வீட்டிற்கு அருகில் செல்கையில் அங்கே குதிரை கொண்டுவரப்பட்டு மாப்பிள்ளையைக் குதிரையில் ஏற்றிக்கொண்டு செல்வர். குதிரையில் செல்லும் மாப்பிள்ளை தம்முடன் சீரும் கொண்டுசெல்ல வேண்டும்.

அதாவது, நெல் 5 - வள்ளம், கருப்பட்டி - 20 அல்லது 1 - படி சர்க்கரை, பருப்பு - 1 படி, தேங்காய் - 1, பழம் - 1 சீப், வெற்றிலை பாக்கு, நெய் - 1 கும்பம், எண்ணெய் - 1 கும்பம்(நெய்க்குடம், எண்ணெய்க் குடம் புதியதாக வாங்கியிருத்தல் வேண்டும்) பங்காளி வீட்டுப் பெண்கள் (மணமானவர்) எடுத்துக் கொள்வர்.

பெண்ணின் ஊருக்குச் சென்ற மாப்பிள்ளை(மச்சான் - கைபிடித் தோழன் குடை பிடித்தபடி மாப்பிள்ளையை அழைத்துச் செல்வர்) வீட்டார் (ஊர் மக்கள், உறவினர்) ஊரின் எல்லை அல்லது மாரியாத்தா கோயிலில் இறங்கி நின்றுகொண்டு வானவெடி வெடிப்பர். வெடியோசை கேட்டதும் பெண் வீட்டார் புறப்பட்டு (பெண்ணைத் தவிர்த்து) பங்காளி வீட்டாரோடு(ஆண், பெண்) வாத்திய இசை முழங்க மாப்பிள்ளை அழைக்க வருவர். மாப்பிள்ளை இருக்கும் இடத்திற்கு வந்து பங்காளி வீட்டுப் பெண் ஆளாத்தி எடுப்பர். ஆளாத்தி எடுத்த பெண்ணுக்கு மாப்பிள்ளை வீட்டார் (25 - பைசா) 4 அணா கொடுப்பர். மாரியாத்தா கோயிலோடு குதிரை ஏற்றம் முடிந்துவிடும். மணப்பெண்ணின் பக்கத்து வீடு - விடுதி வீடு என்று சொல்லப்படும்;. அங்குதான் மாப்பிள்ளையும் உடனாளிகளும் தங்க வேண்டும். அவ்வீட்டிற்கு மாப்பிள்ளையை அழைத்து விட்டபிறகு பழம் 1 - சீப், பால் - 1 தம்ளர் ஆகியன பங்காளி வீட்டுப் பெண்களால் (திருமணமானவர்கள்) கொண்டு செல்லப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்படும். அது உண்டபின்பு மணமகள் வீட்டில் பந்தி பரிமாற அனைவரும் விருந்துண்பர். மாப்பிள்ளை மணப்பெண்ணின் வீட்டிற்குச் செல்லக் கூடாது. அத்தோடு கல்யாணம் முடிந்தது; நாளை விடிந்ததும் முகூர்த்தம் நடைபெறும். இவ்விரண்டும் இணைந்த நிகழ்வே முந்தையகாலத் திருமணம் என்று சொல்லப்பட்டது.

இவ்வாறு ஆலபாளையத்தின் ஆலமரம் தோன்றிய காலத்தில் இருந்த மக்களின் கல்யாண நடைமுறைகள் எண்பது விழுக்காடு மாறிவிட்டன என்பதைத் தற்போது நடைபெறும் திருமண நடைமுறைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் அறியமுடிகிறது. இப்போது நடக்கும் இவ்வழக்கங்களும் வருங்காலத்தில் மாறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதால் அவற்றையும் நாம் பதிவுசெய்து வருங்காலத் தலைமுறைக்கு எடுத்துச் செல்வது அவசியமாகிறது.

ஆய்வு முடிவுகள்

50 - ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற திருமண நிகழ்வில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பெயர், இராசிப் பொருத்தம் பார்த்தல் மட்டும் பின்பற்றப்பட்டுள்ளது. தற்போது சாதகம் பார்த்தலாக மாற்றம் பெற்றுள்ளது. பெயர் பொருத்தம் சரியாக இருக்குமானால் பொண்ணு பார்த்தல் நிகழ்ச்சிதான் திருமண ஏற்பாட்டின் முதல் நிகழ்வாகும்.

மாப்பிள்ளை வீட்டாரே பெண் வீட்டிற்குச் செல்கையில் தடம் வழி பார்க்கும் நிகழ்வு நடைபெற்றது நடைபெறுகிறது. அதாவது, ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் குடும்ப வாழ்வின் எதிர்காலம் நன்மை/ தீமையாக அமையுமா? என்பதன் அறிகுறிகள் அச்சகுனத்தின் வழி இறைவன் /இயற்கையால் காட்டப்படும் என்பதில் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். தற்போது பொழுது விடியும் முன்னரே சென்று விடுகின்றனர். அதனால், சகுனக் குறிகள் தெரியப்படாமல் தவிர்க்கப் படுகின்றன.

இருவீட்டுச் சார்பாக உள்ள பெரியவர்கள் வெற்றிலை பாக்கு கொடுத்து மாற்றிக் கொள்வதும் மாப்பிள்ளை வீட்டார் பெண் வீட்டிற்குத் தொகை கட்டுவதும் பரியம் கட்டுதல் எனப்பட்டது. உப்பைக் கொடுத்துப் பெண்ணைப் பெறுவது உறுதிசெய்யப்படுவது உப்பு வாங்குதல் எனப்பட்டது. அக்காலச் சூழலில் இவ்விரண்டு நிகழ்வுகளும் தனித்தனியாக நடந்தன. தற்போது மண்டபத்தில் முகூர்த்தத்திற்கு முந்தைய நாள் இரவு ஏறக்குறைய 10.00 மணியளவில் ஒரே இரவில் நடத்தி முடிக்கப்படுகின்றன.

முகூர்த்தத்திற்கு முந்தைய மூன்று நாள்கள் கல்யாண நிகழ்வுகள் நடைபெற்றன. பட்டினிச் சோறு போடுதல், முகூர்த்தக் கால் நடுதல் முதல் நாளில் செய்யப்பட்டன. நாட்டுக்கல் வழிபாடு, முய்களரி ஆகியன

இரண்டாம் நாளில் நிகழ்த்தப்பட்டன. மூன்றாம் நாளே முகூர்த்தம் நடைபெற்றது. மூன்று நாள் கல்யாணம் தற்போது நடத்தப் பெறுவதில்லை. இவ்வாறு அன்றையகாலத் திருமணம் என்பது இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது; அது கல்யாணம், முகூர்த்தம் என்பதாக அறியமுடிகிறது. அதற்கு மாற்றாக, மண்டபத்திலேயே அனைத்துத் திருமண நிகழ்வுகளும் செய்யப்படுகின்றன. முகூர்த்தத்திற்கு முந்தைய நாள் மாலை வரவேற்பு விருந்து என்றும் அடுத்தநாள் காலை முகூர்த்தம் என்றும் நிகழ்த்தப்படுகின்றன. நாட்டுக்கல் வழிபாடு மறக்கப்பட்டு விட்டது. மூன்று நாள் என்பது இரண்டு நாள் திருமணமாகச் சுருங்கிவிட்டது. இவ்வாய்வினையொட்டி முகூர்த்தம் பற்றி மேலாய்வு செய்து பண்டையத் திருமண நிகழ்வை வரலாற்றில் பதிவு செய்யலாம்.

தகவலாளர் பட்டியல்:

1. சி.பழனிச்சாமி, வயது: 78, கல்வி: 5 - ஆம் வகுப்பு, தொழில்: விவசாயம், ஊர்: ஆலபாளையம்.
2. க.மயில்சாமி, வயது: 52, கல்வி: 7 - ஆம் வகுப்பு, தொழில்: விவசாயம், ஊர்: ஆலபாளையம்.
3. ந.முத்துச்சாமி, வயது: 76, கல்வி: 6 - ஆம் வகுப்பு, தொழில்: விவசாயம், ஊர்: ஆலபாளையம்.

மேற்கோள் குறிப்புகள்:

1. சோ.முகுந்தன்(கட்டுரை ஆசிரியர்), தமிழ் இலக்கியங்களும் கோட்பாடுகளும், ப.90.
2. பெ.பழனியப்பன்(கட்டுரை ஆசிரியர்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.13.
3. ந.வேலுசாமி(கட்டுரை ஆசிரியர்), கொங்கு நாட்டுப்புறவியல், ப.3.
4. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.23.
5. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள், ப.60.

துணைநூற் பட்டியல்:

1. சண்முகசுந்தரம், சு. — 2001, கொங்கு நாட்டுப்புறவியல், தன்னானே பதிப்பகம்.
2. பரமசிவன், தொ. — 2020, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629 001.
3. பெரியசாமி,மா. — 2019, தமிழ் இலக்கியங்களும் கோட்பாடுகளும், நாமகள் பதிப்பகம், 144, காமராஜர் சாலை, மாரியம்மன் தெப்பக்குளம், மதுரை - 625 009.

புராணங்களில் வேட்டுவர்

வெ. கருப்பையா
முதுகலைத்தமிழ் - முதலாம் ஆண்டு,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி
மின்னஞ்சல் : balajibkbalaji7@gmail.com
செல்:6369789229

முன்னுரை

வேட்டுவரைப் பற்றி அறிந்துகொள்ளப் பலவிதமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவற்றை நாம் கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், புராணங்கள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள் என்னும் பிரிவுகளாகப் பிரித்துக் காணலாம்.

வேட்டுவர் பொருள்

வேட்டுவர் என்றால் வேட்டைக்காரன், வேடன் என்று பொருள். வேட்டுவர் ஆடூஉ உத்திணைப் பெயர். வேட்டு + அர் = வேட்டு + வ் +அர் = வேட்டுவர்.

வேட்டுவரின் குலப்பிரிவுகள்

வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது என்பது பழமொழி. வேட்டுவரிடையே எண்ணிறந்த குலப்பிரிவுகள் இருந்தன என்பதைக் கல்வெட்டுகளாலும் செப்பேடு களாலும் அறிகிறோம். தற்காலத்தில் ஏறத்தாழ 203 வேட்டுவரது குலப்பெயர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தி வேட்டுவர்	அக்னி வேட்டுவர்
அந்துவ வேட்டுவர்	அன்னல் மீளவேட்டுவர்
அல்லாள வேட்டுவர்	ஆப்ப வேட்டுவர்
அமர வேட்டுவர்	இரும்புலி (இரும்புளை) வேட்டுவர்
ஆமை வேட்டுவர்	இந்திர வேட்டுவர்

இலங்கை வேட்டுவர்	உண்ணாடி வேட்டுவர்
ஈங்குறு வேட்டுவர்	உதிர வேட்டுவர்
உண்ணாடி வேட்டுவர்	உம்பி வேட்டுவர்
உத்திர வேட்டுவர்	உயிர் வேட்டுவர்
உயர வேட்டுவர்	உறுமுக வேட்டுவர்
உரிமைப் படை வேட்டுவர்	கஞ்சி வேட்டுவர்
ஊராளி வேட்டுவர்	கதிரிகளனை வேட்டுவர்
கதிப்ப வேட்டுவர்	கரட்டு வேட்டுவர்

கொங்கு வேட்டுவக்கவுண்டர் வீர வரலாறு

கொங்கு நாட்டுச் சமுதாய வரலாற்றில் வேட்டுவர் முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இவர்கள் வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

கொங்கு நாட்டின் பூர்வ குடிகளான வேட்டுவர் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரான், வேட்டுவதியரையன், ஊராளி, நாடாழ்வான், முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இதனால், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இவர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்து வந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்களால் அறிகிறோம்.

ஆதாரங்கள்களின்வழி அதாவது, கல்வெட்டுகள், செப்பேடுகள், புராணங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் துணைகொண்டு வேட்டுவரின் வரலாற்றினை அறிந்து கொள்கிறோம்.

வேட்டுவரின் பொதுப்பணி

கால்வாய் வெட்டுதல், அணைகட்டுதல், குளம் வெட்டுதல், நீர்பாசனத்தைப் பெருக்குதல், ஊரில் புகுந்து மக்களுக்குத் தீங்கு விளைவிக்கும் கொடிய மிருகங்களைக் கொல்லுதல் முதலான பொதுப் பணிகளிலும் வேட்டுவர் ஈடுபட்டிருந்தனர் என்பதைக் கல்வெட்டுச் சான்றுகளால் அறியலாம்.

வேட்டுவரின் பூர்வீகம்

1. வேட்டுவர் நாகர் இனத்தவர்
2. குரு குலத்தவர்

3. கண்ணப்ப நாயனாரின் கால்வழியினர்

4. கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிகள்.

வேட்டுவரின் பிற பெயர்கள்

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கவுண்டர், காடவராயன், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், காங்கயன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டி, ராயர், வள்ளல், கொங்கு ராயர், ஊர்க்கவுணடர், கங்கதிராயர் மற்றும் பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தினர் என்பதனைக் கல்வெட்டுக்களால் அறியலாம்.

வேட்டுவர் குடியை சேர்ந்த நடுகற்கள்

இடம்: விழுப்புரம் கள்ளக்குறிச்சியை அடுத்த நத்தம் ஆத்துக்காடு வேடியப்பன் கோவில்.



இடம் : கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம் ,காரமடை குரும்பபாளையம் ஊரில் வெங்கிடுசாமி நாயக்கர் தோட்டத்தில் உள்ள புலிக்குத்தி நடுகல்.

இக்கட்டுரையில் வேட்டுவர் குலம், இனம், பற்றிய செய்திகள் மற்றும் வேட்டுவ மக்களின் வரலாறு அவற்றின் கோவில்கள் ஆகியவற்றை அறிந்தோம்.

சங்க இலக்கியம் காட்டும் வேட்டுவர் சமூகம்

ப. காவியா,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்.
தொலைபேசி எண்- 934246053
E-mail.kaviyasparrow@gmail.com

முன்னுரை

வேட்டுவரினம் என்பது தமிழகத்தின் பழமையான பழங்குடி சமூகம் ஆகும். இவர்கள் காடுகளை அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். வேட்டையாடுவதில் வல்லமை பெற்றவர்கள். இவர்கள் வாழ்க்கை முறையானது; இயற்கையை மட்டுமே மையமாகக் கொண்டது.

வேட்டையாடுவதையே முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள். காடு சார்ந்த சூழலியல் குறித்து ஆழமான அறிவைப் பெற்றவர்கள். இவர்கள் பயன்படுத்தும் ஆயுதம் அனைத்துமே இயற்கையாகவே தயாரிக்கப்பட்டவை. மரங்களையும் மலைகளையும் புனிதமாகக் கருதுகிறார்கள். மதம் மற்றும் பண்பாடுகளைக் காடு சார்ந்த வழிபாட்டு முறைகளில் நம்பிக்கை வைத்துப் பின்பற்றுகின்றனர்.

இத்தகைய நிலையில் வேட்டுவர் வரலாற்றை அறிவதற்குச் சங்க இலக்கியங்கள் பெருந்துணை புரிகின்றன. சங்க இலக்கியத்தில் வேட்டுவர் வரலாறு எந்த வகையில் வெளிப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றன. எட்டுத்தொகை நூல்களைக் குறிக்கும் **பழம்பாடல்:**

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து

ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார் ஏத்தும்
கலியோடு அகப்புறம் என்று
இத்திறத்த எட்டுத்தொகை.

சங்க இலக்கியத்தில் வேட்டுவர்

வேட்டுவர்கள் சங்க இலக்கியங்களில் ஒரு முக்கியத்துவம் பெற்ற சமூகமாகப் புகழப்படுகின்றனர். காடுகளை அடிப்படையாக கொண்டு வாழ்ந்த பழங்குடி மக்கள் இவர்களே. வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள்.

வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என ஆனது. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டு இருந்திருக்கின்றனர். இதைப் பற்றி தொல்காப்பியம் நூற்பா கூறுகிறது.

ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.
(தொல்- பொருள்-அகம்- 23)

தொல்காப்பியக் காலத்திற்கு முன்னரே வேட்டுவர் என்ற பிரிவினர் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

கவுண்டர், காடவராயன், மன்றாடியார், பல்லவராயர், வானவதிராயன், காங்கயன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டி, ராயர், வள்ளல், கொங்கு ராயர், ஊர்க்கவுண்டர், கங்கதிராயர் மற்றும் பிள்ளை முதலான பல பட்டங்களைப் பெற்றிருந்தினர் என்பதைக் கல்வெட்டுகள் கூறுகிறது.

வேட்டுவ வேந்தர்கள் பல்லவராயர், பூவலராயர், சந்தனராயர் மற்றும் நரசிங்கராயர் முதலான பட்டப் பெயர்களைப் பூண்டிருந்தனர் என்பதனைச் செப்பேடுகள் மூலம் அறியலாம்.

வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திய பாறை ஓவியங்களும், குகை ஓவியங்களும் கொங்கு நாட்டிலும், அதனை ஒட்டிய பகுதிகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதில் வேட்டையாடும் காட்சி, விலங்குகள் படம் தீட்டப்பட்டுள்ளன. இவையாவும் வேட்டுவரது வாழ்க்கை முறையினை கூறுபவை.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வேட்டுவன் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வளை வேட்டுவன் ஆயினன், முன்னே. (புறம்-252)

சங்க இலக்கியத்தில் பல்வேறு இடங்களில் வேட்டுவர்களின் வாழ்வியல், வீரம் பற்றிக் கூறுகிறது. மலையிலும், காட்டிலும் இவர்கள் துணிச்சலான வாழ்க்கையை வாழ்ந்திருக்கின்றனர்.

இவர்களுடைய வேட்டையாடும் திறமை, துணிச்சலைப் பற்றி பல பாடல்களும் உதாரணத்துடன் காட்டுகின்றது.

"யானை வேட்டுவன் யானையும் பெறுமே". (புறம்-214)

சங்ககாலமானது தமிழரின் வசந்தகாலம் ஆகும். இக்காலத்தில் வேட்டுவர் வேட்டையாடுவதையும், ஆடு மாடு மேய்ப்பதையும் தமது தொழிலாகக் கொண்டிருந்தனர்.

இதே சமயத்தில் பலர் போர்ப்படையில் வீரர்களாகப் பணி புரிந்துள்ளனர். மேலும் சிலர் மலைகளிலும், மலைச் சரிவுகளிலும், சமவெளிகளிலும் விவசாயம் செய்து வந்துள்ளனர்.

வேட்டுவர்களில் பல்வேறு பிரிவுகள் காணப்படுவர். அதில் ஒரு பிரிவுதான் பார்வை வேட்டுவர். இவர்களைப் பற்றி நற்றிணைப் பாடல் ஒன்று பிவருமாறு கூறுகிறது:

"பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ". (நற்றிணை-212).

சங்க இலக்கியத்தில் வேட்டுவர்கள் குறிப்பிடப்பட்ட காரணம்

வேட்டுவர்கள் பழங்குடி இனமாகக் கருதப்படுகின்றனர். சங்க இலக்கியத்தில் வேட்டுவர்களுக்கென ஒரு தனி இடமே உண்டு. அவர்கள் பசுக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் அதனுடன் தொடர்புடைய சங்க இலக்கியமும் வேட்டை, பாரம்பரியம் பற்றி பேசுகிறது.

சங்க இலக்கியக் கவிஞர்கள் வேட்டுவர்களுடைய நெறிகளையும் வாழ்க்கை முறைகளையும் போற்றினர். சங்க இலக்கியம் சமூகவியல், வாழ்க்கை நிலை பற்றி விவரிக்கும் இனமாக வேட்டுவர்கள் உள்ளனர்.

வேட்டுவர்களின் தற்போதைய நிலை

நாகரிகம் வளர்ந்து வருகின்ற காலத்தில் வேட்டுவர்களும் இயற்கை வாழ்வியலில் இருந்து நகர்ப்புறத்திற்குச் செல்கின்றனர். இவர்களுடைய பண்பாடு கலாச்சாரம் போன்றவற்றை நிலையாகக் காத்து வரவேண்டும். இவர்களுடைய வாழ்வியல் முறைகளைப் பாதுகாப்பது அவசியமாக உள்ளது.

முடிவுரை

வேட்டுவர்கள் மரபு வழிகளைக் கடந்து வேட்டை செய்யும் மக்களாக இருந்தனர். இவர்களுடைய சமூகம் மிகவும் பழமையானது. இயற்கையில் வாழும் மக்களாக அறியப்படுகிறார்கள். சங்க இலக்கியங்களில் வேட்டுவர்களின் தோற்றம், வாழ்க்கைமுறை பற்றிய செய்திகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதன்மூலம் வேட்டுவர் சங்ககாலத்தில் இருந்தே தொல்குடிகளாக இருந்துள்ளனர் என்பதில் ஐயமில்லை. இதிலிருந்தே வேட்டுவர்களின் இனமானது சங்க காலத்தில் இருந்து இன்றைய காலம் வரையிலும் அனைவராலும் அறியப்படுகிறது எனலாம்.

துணைநூற் பட்டியல்:

1. ச.திருஞானசம்பந்தம் தொல்காப்பியம் - (பொருள்), கதிர் பதிப்பகம், திருவையாறு, (2018).
2. புலியூர்க் கேசிகன் - புறநானூறு, சாரதா பதிப்பகம், (2006).
3. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை - நற்றிணை, பூம்புகார் பதிப்பகம்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் காட்டும் வேட்டுவரின் வாழ்வியல்

ச. சந்தோஷ்குமார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தட்சசீலா பல்கலைக்கழகம், ஓங்கூர், திண்டிவனம்.
அலைபேசி : 9500463540

முன்னுரை

பெரியபுராணம் என்றழைக்கப்படும் திருத்தொண்டர் புராணம் சைவத் திருமுறையில் பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. இது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பியின் திருத்ததொண்டர் திருவந்தாதி ஆகியவற்றை மூலநூலாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. அது இரண்டு காண்டமாகவும் 13 சருக்கங்களையும் உட்பிரிவுகளாகக் கொண்டுள்ளது. அது சாதாரண மக்களைப் பாடும் தொகுப்பாகவே அமைந்துள்ளது. இதில் முதல் காண்டத்தில் வரும் இலை மலிந்த சருக்கத்தில் வேட்டுவர் பற்றிய வரலாறு கூறப்படுகிறது. கண்ணப்பநாயனாரின் கதை இச்சருக்கத்தின் மூலமாகவே எடுத்துரைக்கப்படுகிறது. வேட்டுவரின் வாழ்வும் சூழலும் வரலாற்றுப் பொருண்மைகளுடன் விவரிக்கப்படுகின்றது. சங்க இலக்கிய வேட்டுவர் வாழ்க்கையை இச்சருக்கத்தின் வாயிலாக ஒப்பிட்டுப் பார்க்கலாம். அவ்விதத்திலேயே இக்கட்டுரை வேட்டுவர் குலத்தின் வாழ்வாதாரங்களை எடுத்துரைக்க முயல்கிறது.

வேட்டுவர் வாழும் இடம்

வேடர்கள் பெரும்பாலும் மலைப் பகுதியில் வாழ்பவர்களாவர். அவர்களைக் குன்றவர் என்றும், மலையர் என்றும், கானவர் என்றும் சேக்கிழார் பெரியபுராணத்தில் குறிப்பிடுகிறார்.

“குன்றவர் அதனில் வாழ்வார்” (பெரியபுராணம். பாடல்.652)

“கானவர் குலம் விளங்க” (பெரியபுராணம். பாடல்.662)

என்ற பாடலடியின் மூலம் அறிய முடிகின்றது.

இவர்களுடைய நாடு மலர்ச்சோலைகளும், நீர்நிலைகளும் சூழ்ந்து காணப்படக்கூடிய **“பொத்தப்பி”** என்பதாகும்.

“பூவலர் வாவி சோலை
சூழ்ந்த பொத்தப்பி நாடு” (பெரியபுராணம். பாடல்.650)

சேக்கிழார், கண்ணப்பன் பிறந்த இடம் பற்றி கூறுகையில், முத்துகள் கொழிக்கும் அருவிச்சாரல் உடைய நீண்ட மலைகள் சூழ்ந்த இடமாகிய உடுப்பூர் என்றும், இவர்கள் வாழும் ஊரைச் சுற்றி மதங்கொண்ட யானைகளின் கொம்புகளால் தொடர்ச்சியாக வேலியமைத்து, தன்னுடைய நாட்டை பாதுகாத்ததை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

நித்தில அருவிச் சாரல் நீள்
வரை சூழ்ந்த பாங்கர்
மத்த வெம் களிற்றுக் கோட்டு
வன் தொடர் வேலி கொலி
ஒத்த பேர் அரணம் சூழ்ந்த
முது பதி உடுப்பூர் ஆகும். (பெரியபுராணம். பாடல்.651)

வேடர்களின் தோற்றம்

வேடர்கள் என்றாலே கரிய நிறத்தை உடையவர்கள் என்ற ஒரு தோற்றம் நமக்குத் தெரியும். சேக்கிழாரும் அவ்வாறே குறிப்பிடுகிறார்.

“மைச் செறிந்தனைய மேனி” (பெரியபுராணம். பாடல்.656)

குழந்தையாகிய கண்ணப்பனைக் கருமேகத்திற்கும், அவனை ஏந்திய தந்தை நாகனைக் கரிய மலைக்கும் ஒப்பிட்டுக் கூறுவதன் வாயிலாக அவர்களுடைய கரிய நிறத்தைச் சுட்டிச் செல்கிறார்.

“கருவரை காள மேகம்
ஏந்திய என்னத் தாதை
பொருவரைத் தோள்களாரப் புதல்வனை
எடுத்துக் கொண்டான்” (பெரியபுராணம். பாடல்.664)

இது மட்டுமின்றி பல இடங்களில் சேக்கிழார் உவமையுடன் எடுத்துக் கூறுகிறார்.

"மைவண்ண வரைநெடுந் தோள்நாகன்"
(பெரியபுராணம். பாடல்.692)

"கருங்கதி விரிக்கும் மேனிக் காமரு குழவி"
(பெரியபுராணம். பாடல்.665)

"கரும் போர் ஏறு" (பெரியபுராணம். பாடல்.689)

"மணிநீல மலை" (பெரியபுராணம். பாடல்.701)

"கருங்குவளை மலர் போன்ற திருமேனி" (பெரி. பாடல்.714)

போன்ற பாடலடிகளின் மூலம் பெரியபுராணத்தில் கண்ணப்பனின் கரிய நிறத்தை நயம்பட எடுத்துக்காட்டுகிறார்.

உணவு

"பாறை முன்றில் ஐவனம் உணங்கும் எங்கும்"
(பெரி. பாடல்.652)

என்ற பாடலடியின் மூலம் வேட்டுவர்களின் இல்லங்களில் ஐவனம் எனப்படும் மலை நெல்லைக் காய வைத்து, உணவாக உண்பர் என்பதால், இவர்களின் முக்கிய உணவாக அறிய முடிகிறது. மேலும், மலைத்தேனும், ஊன் கலந்த சோற்றையும் உணவாக உண்பர் என்பதை,

"பொச்சையின் நறவும் ஊனின்
புழுக்கலும் உணவு கொள்ளும்" (பெரி. பாடல்.656)

என்ற பாடலடியின் மூலம் அறிய முடிகிறது.

காலையில் சிறுவர்களுக்குப் புலால் கலந்த உணவை வேட்டுவ மகளிர் உண்ணக் கொடுப்பர் என்பதை,

"அவர் பகல் கழிந்த அந்தி
ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுது குறத்தி ஊட்டிக் கொண்டு
கண் துயிற்றிக் கங்குல்
புலர ஊன் உணவு நல்கிப்
புரி விளையாட்டின் விட்டு" (பெரியபுராணம். பாடல்.676)

என்ற பாடலில் காணமுடிகிறது.

உடை

வேட்டுவர்களின் உடை என்பது வலிமை வாய்ந்த தோலினால் செய்யப்பட்ட ஆடையை அணிந்திருப்பதைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

"உடைவன் தோலார்" (பெரியபுராணம். பாடல்.656)

தொழில்

வேடர்கள் என்று சொன்னாலே வேட்டையாடி உணவு உண்பவர்கள் என்ற ஒரு நிலை காணமுடிகிறது. சேக்கிழார்,

"ஆறு அலைத்து உண்ணும் வேடர்"
(பெரியபுராணம். பாடல்.655)

என்றும்,

"வன்தொழில் மறவர்" (பெரியபுராணம். பாடல்.656)

என்றும் கூறுகிறார்.

நாகனைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"கைவண்ணச் சிலை வேட்டை ஆடித்
தெவ்வர் கணம் நிரைகள் பலகவர்ந்து" (பெரி. பாடல்.692)

வேற்று நாட்டில் இருக்கும் பசுக்கூட்டங்களைக் கவர்ந்து வருவர் என்று கூறுகிறார்.

நாகன் தன் மகனுக்கு,

"தெம்முனையில் அயல்புலங்கள்
கவர்ந்து கொண்ட
திண்சிலையின் வளம் ஒழியாச்
சிறப்பின் வாழ்வாய்" (பெரியபுராணம். பாடல்.704)

எடுத்துரைக்கிறார். இதன்மூலம் இவர்களுக்கு ஆநிரைகளைக் கவர்தல் என்பது முக்கியத் தொழிலாக இருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

அணிகலன்

வேடர்களின் பெண்கள் திருமணமான பிறகு, பெரிய புலிப் பல்லைத் தாலியாக அணிந்து கொள்வர். அதில் இடையிடையே மனவு எனப்படும் சங்கு மணிகளைக் கோர்த்திருப்பர். அம்மாலையானது,

முதுகில் அலையுமாறு தொங்கிக் கொண்டிருக்கும் என்று சேக்கிழார்,

"இரும்புலி எயிற்றுத் தாலி இடை
இடை மனவு கோர்த்துப்
பெரும் புறம் அலையப் பூண்டாள்" (பெரி. பாடல்.658)

குறிப்பிடுகிறார்.

வேடர்களின் பண்பு

சேக்கிழார் வேடுவர்களை நாகனது பண்புகள் பற்றி கூறுகையில்,

பெற்றியால் தவமுன் செய்தான்
ஆயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்
கொடுமையே தலை நின்றுள்ளான்
வில் தொழில் விறலின் மிக்கான்
வெஞ்சின மடங்கல் போல்வான் (பெரி. பாடல்.657)

என்று வேடர் குலத்தில் பிறந்ததன் காரணமாகக் அச்சுறுத்தலையே குணமாகக் கொண்டு வாழ்பவன் நாகன் என்று குறிப்பிடுவதன் மூலம் வேடர்களின் பண்புகளை அறியலாம். மேலும்,

சினவில் வேடர் (பெரியபுராணம். பாடல்.683)

சின வேடர் (பெரியபுராணம். பாடல்.693)

வெஞ்சொல் வேட்டுவர் (பெரியபுராணம். பாடல்.654)

எனவரும் பாடலடியின் மூலம் வேடுவர்கள் கோபம் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்.

முடிவுரை

இவ்வாறாக, கண்ணப்ப நாயனார் வாழ்க்கை மூலமாக வேட்டுவர் சமூகத்தின் வாழ்வியல் தொடர்பான உணவு, உடை, தொழில், அணிகலன், அவர்களின் பண்புநலன்கள் முதலான பல செய்திகளைச் சேக்கிழார் மிக நுணுக்கமாகப் பதிவு செய்துள்ளார் என்பதை இக்கட்டுரையின் வாயிலாக காணமுடிகிறது.

துணைநூற் பட்டியல்:

1. பெரியபுராணம் (எளிய நடையில்) புலவர் அ. கி. அழகர்சாமி (உரை.), கற்பகம் புத்தகாலயம், சென்னை.
2. பெரியபுராணம் - கிருபானந்த வாரியார் சுவாமிகள், குகஸ்ரீ வாரியார் பதிப்பகம், சென்னை.
3. பெரியபுராணக் கதைகள் - பாலகுமரன், விசா பப்ளிகேஷன்ஸ், நாமக்கல்.

மலேசியாவில் வேட்டுவர்கள்

ச. சரவணன் த/பெ சண்முகம்
மென்பொருள் பொறியாளர்
(HCLTechnologies, Malaysia)
பெட்டாலிங் ஜெயா,
சிலாங்கூர், மலேசியா.
பூர்வீகம் : பரமத்தி, நாமக்கல்
+60126923264

டாக்டர். க.சுப்பிரமணியம்
த/பெ கருப்பண்ணன்
சுற்றுச்சூழல் சுகாதார பாதுகாப்பு
நிபுணர்,
மலேசியாவின் திறந்த பல்கலைக்கழகம்
+60163092517

வரலாறு:

ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழர்கள் மலேசிய வரலாற்றின் ஒரு பகுதியாக உள்ளனர். மலேசியாவில் இந்தியர்களின் மக்கள் தொகையில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். இதில் வரலாற்றுச் சிறப்புமிக்க இராஜேந்திர சோழன் பதிவுகளைத் தவிர வேறு எந்தப் பதிவுகளும் இல்லை.

வேட்டுவர்களின் கடற்பயணம்

இந்தியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகு இந்தியர்கள் குறிப்பாக - தமிழர்கள் புலம் பெயர்ந்தது வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் வேட்டுவர்கள் புலம்பெயர்ந்த வரலாறு, அவர்கள் இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறை உறவுகளைச் சந்தித்தபோது கிடைக்கப்பெற்றது.

முதலாம் உலகப் போர் காலத்திற்குப் பிறகு (1914-1918) தமிழகத்தில் பசி பட்டினியின் தாக்கம் அதிகமாக இருந்தது. நிறைய வேட்டுவக் குடும்பங்களும் இதனால் பாதிக்கப்பட்டிருந்தது. அன்று 15,

16 வயது உள்ள இளைஞர்கள் முதல், பலர் பிழைப்பு தேடி பல இடங்களுக்கு நகரத் தொடங்கினர். மலேசியாவிற்கு வருகை, ஏறக்குறைய 1920 களுக்குப் பிறகு நடைபெற்றதாக அவர்களின் வாரிசுகள் விவரிக்கின்றனர்.

வேலைதேடி பலர் குழுக்களாகவும், பலர் மனைவி மற்றும் குழந்தையுடனும் புறப்பட்டு மலேசியா வந்துள்ளனர். இந்தியாவிலும், மலேசியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சி என்பதால், அவர்கள் தோட்ட வேலைகளுக்கு மலேசியா அழைத்துச் சென்றனர். எஸ்.எஸ்.ரஜுலா என்ற ஆங்கிலேயக் கப்பல் சென்னை முதல் மலேசியாவின் பினாங்கு வரை போக்குவரத்தில் இருந்தது. பல காலகட்டங்களில் தமிழ்நாட்டின் பல ஊர்களில் இருந்து குழுக்களாக மலேசியாவின் பல இடங்களுக்குத் தோட்ட வேலைகளுக்கு ஆங்கிலேயர்களால் அமர்த்தப்பட்டனர். பலர் அங்கிருந்து வெளியே சென்று தனியாக வேலைதேடத் தொடங்கினர். பெரும்பாலான தோட்டங்களில் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டு குழந்தைகளுக்காகத் தமிழ்ப்பள்ளிகள் உருவாக்கப்பட்டன.

கங்காணி என்ற பதவியில் இருப்பவர் ஒரு ஏஜெண்ட் போலச் செயல்பட்டு இந்தியாவில் இருந்து, குறிப்பாக தமிழகத்தில் இருந்து குடும்பம் குடும்பமாக அழைத்துவந்து மலேசியாவில் ஆங்கிலேயர்களின் இரப்பர் தோட்டங்களில் அமர்த்துவர். இதில் வேட்டுவர் சமுதாயத்தை சேர்ந்தவர் ஊர் என்றும் அறியப்படுகிறார்.

முதல் தலைமுறைத் திருமண உறவானது பெரும்பாலும் சொந்தத்திற்காக, தமிழ்நாட்டின் சொந்த ஊருக்கு வந்து திருமணம் முடித்து அழைத்து வந்ததாகத் தெரிகிறது. மேலும் பலர் கடிதப் போக்குவரத்து மூலம் தாயகத் தொடர்புகொண்டு பலர் மலேசியாவில் உள்ள சொந்தங்களை அறிந்து திருமண உறவை வளர்த்துக் கொண்டனர்.

1940 - முதல் ஜப்பான் ராணுவத்தினரின் “மரண ரயில் பாதை” என அழைக்கப்படும் சயாம் - பர்மா மரண ரயில் பாதை நிர்மாணிப்பதற்காக மலேசியா முழுவதும் இருந்து வீட்டிற்கு ஒரு தமிழ் இளைஞர் ஜப்பானிய இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் வேட்டுவர்க்கும் பெரும் பங்கு உண்டு. இதில் பலர் காணாமல் போனதாக உறவினர்கள் கூறுகின்றனர். பலர் தப்பி வந்து மலேசியாவில் குடும்பத்துடன் சேர்ந்தனர். குலதெய்வ வழிபாடு என்பது பொதுவாக,

தாயகம் செல்லும்போதுதான் இருந்தது. பெரும்பாலான தமிழர்கள் வாழ்ந்த இரப்பர் தோட்டங்களில் அனைத்து மக்களுக்குமான பொதுவான கோவில்கள் கட்டி வழிபாடு செய்தனர்.

இவ்வாறு முதல் தலைமுறையானது பெரும்பாலும் வேட்டுவர்கள் தனித்தனி குழுக்களாக ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாமல் மலேசியாவில் பரவலாக இருந்துள்ளனர். இருப்பினும் பல குடும்பங்களில் குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதி செய்து கொடுத்தனர்.

1957 - ஆம் ஆண்டு மலேசியா சுதந்திரத்திற்குப் பிறகு அனைவருக்கும் மலேசியக் குடிமகன் அந்தஸ்து கிடைத்தது. பெரும்பாலோனோர் இரப்பர் தோட்டங்களை விட்டு வெளியேறி நகரங்களுக்குக் குடியேறினர். இந்தியாவிற்குத் தொடர்பு அதிகரித்ததால் உறவுகளுக்குள் திருமண உறவு அதிகரித்து, மலேசியாவில் ஒருவருக்கொருவர் அறிமுகம் அதிகமாயிற்று. பலர் அரசியலில் ஈடுபட்டுத் தத்தம் பகுதிகளில் “தொகுதி தலைவர்” என்ற பதவியில் இருந்துள்ளனர். மேலும் இளைஞர்கள் படித்துக்கொண்டே வேலைகளுக்குச் சென்று பொருள் ஈட்டி தமது மேற்கல்வியைத் தொடர்ந்துள்ளனர். மருத்துவம், ஆராய்ச்சி, தொழில்நுட்பப் படிப்புகளில் வேட்டுவர்கள் பலர் பட்டம் பெற்றுள்ளனர். மலேசியாவின் இரண்டாம் தலைமுறைப் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டது. பலர் வெளிநாடுகளில் மேற்படிப்பைத் தொடர்ந்தனர். மலேசியாவில் நமது உறவுகளுக்குள் போக்குவரத்து அதிகரித்ததாலும், நமது சமூக அக்கறை கொண்டவர்கள் வேட்டுவ இளைஞர்களின் எதிர்காலம், வாழ்க்கைமுறை, மேம்பட்ட கல்வி மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றில் முன்னேற்றம் காண பல சந்திப்பு க்கூட்டங்களை ஏற்பாடு செய்து விவாதித்தனர். பல வருடச் சந்திப்புகளுக்குப் பிறகு “கொங்குநாடு வேட்டுவக் கவுண்டர் முன்னேற்ற சங்கம் - மலேசியா” என்ற சங்கம் நமக்காக மலேசிய அரசாங்கத்தில் பதிவு செய்ய முடிவு செய்தனர். 2018 - ஏப்ரல் மாதத்தில் மலேசியாவில் உள்ள அனைத்து வேட்டுவக் கவுண்டர்களும் ஒரே இடத்தில் கூடி "வேட்டுவக் கவுண்டர் குடும்பதின விழா” வாகக் கொண்டாட முடிவு செய்யப்பட்டு அனைத்து மலேசியா வேட்டுவக் குடும்பங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

மலாக்கா மாநிலத்தில் நிகழ்ந்த அந்த விழாவில் சுமார் 200 முதல் 250 வேட்டுவர்கள் கலந்து கொண்டு அனைத்துக் குடும்பங்களும்

மேடையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். சிங்கப்பூரில் இருந்து வந்து நமது ஐந்து வேட்டுவக் குடும்பங்கள் பங்களித்தது, அனைவருக்கும் பெருமையாக இருந்தது. இன்று வரை சுமார் 300 முதல் 350 உறவுகள் சங்கத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களாக உள்ளனர். மேலும் 700 -க்கும் மேற்பட்ட வேட்டுவ உறவுகளின் தொடர்புகள் கிடைக்கப் பெற்றுள்ளது. அனைவரையும் ஒன்றிணைக்கும் பணி இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்றும் ஒவ்வொரு வருடமும் வேட்டுவர் குடும்பச் சந்திப்பு விழாவில் அனைத்து உறவுகளும் ஒன்றாகச் சந்திக்கின்றனர்.

மலேசியாவில் புகழ்பெற்ற கல்வியாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் அரசியல்வாதிகள் - அவர்களுக்கு மலேசிய மன்னர் அல்லது அவர்களின் மாநிலத்தின் சுல்தானால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்கள் உள்ளன. டத்தோ, டத்தோ அல்லது டான் ஸ்ரீ போன்ற தலைப்புகள் பிரிட்டிஷ் ‘சார்’ என்பதற்குச் சமமானது, அவை எப்போதும் எழுத்து அல்லது வாய்மொழி முகவரிகளில் பயன்படுத்தப்பட வேண்டும். ஈரோடு மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்ட வேட்டுவ உறவுகள் இருவர் மலேசியாவில் தொழில் துறையில் மாநிலத்தின் சுல்தானால் டத்தோ பட்டம் பெற்றது நமது சமுதாயத்திற்கு ஒரு கௌரவம் ஆகும்.

சான்று : (கள ஆய்வு தகவலாளர் பட்டியல்)

குரல் பதிவு உதவி : சரவணன் சண்முகம்

1. திரு. கருப்பையா, த/பெ ராமசாமி, பூச்சோங் , சிலாங்கூர் (பூர்வீகம்: வாழ நாயக்கன்பாளையம், கொடுமுடி ஈரோடு மாவட்டம்)
2. திருமதி வசந்தி கருப்பையா, (பூர்வீகம்: ஜமீன் இளம்பள்ளி, பரமத்தி-வேலூர், நாமக்கல் மாவட்டம்)
3. திரு. லட்சுமணன், த/பெ கருப்பா, காஜாங், சிலாங்கூர் (பூர்வீகம்: அறச்சலூர் பகுதி, ஈரோடு மாவட்டம்)
4. திருமதி லட்சுமி லட்சுமணன், (பூர்வீகம்: ஜமீன் இளம்பள்ளி, பரமத்தி-வேலூர், நாமக்கல் மாவட்டம்)
5. திரு. மாணிக்கம், த/பெ கோட்டையன், ஸ்ரீ கெம்பாங்கான், சிலாங்கூர் (பூர்வீகம்: சிறுக்கிணத்துப்பாளையம் ,பரமத்தி-வேலூர், நாமக்கல் மாவட்டம்)

6. திருமதி மேனகா மாணிக்கம், த/பெ காளிமுத்து ஸ்ரீ கெம்பங்கான் சிலாங்கூர் (பூர்வீகம்: அமராவதிப்புதூர், ஊஞ்சலூர், ஈரோடு மாவட்டம்)

7. திரு. கருப்பண்ணன், த/பெ ஆறுமுகம், சுபாங் ஜெயா சிலாங்கூர் (பூர்வீகம்: வடகரையாத்தூர் ,பரமத்தி-வேலூர், நாமக்கல் மாவட்டம்)

8. முனைவர் சுப்பிரமணியம் கருப்பண்ணன் , சுற்றுச்சூழல் சுகாதாரப் பாதுகாப்பு நிபுணர், காஜாங், சிலாங்கூர் (பூர்வீகம்: சிறுக்கிணத்துப்பாளையம், பரமத்தி-வேலூர், நாமக்கல் மாவட்டம்)

அகநானூற்றில் வேட்டுவரின் தொழில்கள்

முனைவர் இரா.சிவகுமார்,
இணைப் பேராசிரியர்,
முதுகலை தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி(தன்னாட்சி),
வேலூர்-2.
அலைபேசி: 9843677742.
drrajasivakumar@gmail.com

முன்னுரை

ஆதிமனிதன், மிருகங்கள் வேட்டையாடி உணவு உட்கொள்வதைக் கண்டு தானும் விலங்குகளை வேட்டையாடி, அதனுடைய தசைகளை உணவாக உட்கொண்டு வந்தான். பின் நாகரிகம் வளர வளர தசைகளைச் சமைத்துச் சாப்பிடத் தொடங்கினான். பிறகு விலங்குகளை வேட்டையாடி உண்ணும் வேட்டை வாழ்வியலில் இருந்து, உணவுப் பொருள்களை விளைவித்து உண்டு வாழும் உற்பத்தி வாழ்வியலுக்கு நகர்ந்தான். இருப்பினும் அவன் வேட்டைத் தொழிலைக் கைவிடவில்லை. காட்டில் உலவும் கொடிய விலங்குகளை வேட்டையாடுவதை பெருமையாக எண்ணினான். அதேபோன்று தினைகளை விளைவிக்கும் உற்பத்தி வாழ்விலும் கவனம் செலுத்தி வரகு, சாமை போன்ற தினைகளை விளைவித்தான். வேட்டுவரின் தொழில்களாக வேட்டையும் உழவும் இருந்தமையைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. அந்த வகையில் அகநானூற்றில் வேட்டுவரின் தொழில்களாகக் குறிப்பிட்டுள்ள செய்திகளைப் பின்வருமாறு இக்கட்டுரையில் காண்போம்.

அகநானூறு குறிப்பிடும் வேட்டைச் சமூகம்

அகநானூறு வேட்டுவர்களை வேட்டுவர், கானவர் என்று பதிவு செய்துள்ளதுடன், அவர்களின் வலிமையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. ‘‘கடுங்கைக்கானவன்’’ (அகம்.-88), ‘‘வல்வில் கானவன்’’ (அகம்.-282), ‘‘இரும்பு வடித்தன்ன கருங்கைக்கானவன்’’ (அகம்.-172) போன்ற பாடலடிகளின் மூலம் வேட்டுவரின் வலிமையை நம்மால் அறிய

முடிகிறது. வேட்டுவர்கள், காலில் செருப்பை அணிந்துள்ள செய்தியைத்தொடுதோற் கானவன் சூடுறு வியன் புனம்(அகம்.-368) என்றுமருதனிள நாகனாரின் பாடல் நமக்குக் குறிப்பிடுகின்றது. அந்த வகையில் வேட்டுவர்கள் மிகுந்த வலிமை உடையவர்களாகவும், காலில் செருப்பினை அணிந்தவர்களாகவும் இருந்ததைநம்மால் அறிய முடிகிறது. மேலும், வேட்டுவன் விரைந்து ஓடக்கூடிய நாய்களைத் தன்னுடன் வைத்திருந்ததாக பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரியல் நாயொடு பல் மலைப் படரும்
வேட்டுவற் பெறலொடு அமைந்தனை; (அகம்.-28)

இதன் மூலம் வேட்டுவர்கள் தன்னுடன் வேட்டை நாய்களை வைத்திருந்தது நமக்குப் புலனாகிறது.

வேட்டைத் தொழில்

வேட்டுவர்களின் பண்பாட்டில் வேட்டையையே முதன்மையான தொழிலாகக் கொண்டிருந்தனர். வேட்டுவர்கள்காட்டில் திரியும் கொடிய விலங்குகளையும் கொல்லுகின்ற வலிமையைப் பெற்றிருந்ததை மேற்கூறிய பாடலடிகளின் மூலம் நாம் தெரிந்து கொண்டோம். வேட்டுவன், யானையை வேட்டையாடி, அதன் தந்தத்தைக் கொண்டு வந்து தன் இல்லத்தில் வைத்தலைப் பெருமையாக எண்ணினான். இச்செய்தியை மதுரைப் பாடலாசிரியர் நப்பாலனாரின் பாடலடிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

வாரணம் உரறும் நீர் திகழ் சிலம்பில்
பிரசமொடு விரைஇய வயங்கு வெள் அருவி
இன் இசை இமிழ் இயம் கடுப்ப, இம்மெனக்
கல் முகை விடர்அகம் சிலம்ப, வீழும்
காம்பு தலைமணந்த ஓங்கு மலைச் சாரல்;
இரும்பு வடித்தன்ன கருங் கைக் கானவன்
விரி மலர் மராஅம் பொருந்தி, கோல் தெரிந்து,
வரி நுதல் யானை அரு நிறத்து அழுத்தி,
இகல் அடு முன்பின் வெண் கோடு கொண்டு, தன்
புல் வேய் குரம்பை புலர ஊன்றி,
முன்றில் நீடிய முழவு உறழ் பலவில்,

பிழி மகிழ் உவகையன், கிளையொடு கலி சிறந்து,
சாந்த ஞெகிழியின் ஊன் புழுக்கு அயரும்
குன்ற நாட! (அகம்.-172)

மேலும், கானவன் ஒருவன் வலிய வில்லினால் தொடுத்த அம்பினைக் கொண்டு யானையைவீழ்த்தி, அதன் தந்தத்தினால் பொன்னை அகழ்ந்தெடுத்ததாகஅகநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகின்றது.

பெரு மலைச் சிலம்பின் வேட்டம் போகிய,
செறி மடை அம்பின், வல் வில், கானவன்
பொருது தொலை யானை வெண் கோடு கொண்டு,
நீர் திகழ் சிலம்பின் நன் பொன் அகழ்வோன்,
கண் பொருது இமைக்கும் திண் மணி கிளர்ப்ப,
.... – (அகம்.-282)

கானவர்கள் யானையைவிற்கொண்டு வேட்டையாடுவதைப் பெருமையாக எண்ணினர் என்பதற்குச் சான்றாக அகநானூற்றுப் பாடலடிகள் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். வேடர்கள் யானையை மட்டுமல்லாது பன்றியை வேட்டையாடிய செய்திகளையும் அகநானூறு குறிப்பிடுகின்றது.

வய நாய் எறிந்து, வன் பறழ் தழீஇ,
இளையர் எய்துதல் மடக்கி, கிளையொடு
நால்முலைப் பிணவல் சொலிய கான் ஒழிந்து,
அரும் புழை முடுக்கர் ஆள் குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கி, கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடை செலல் முன்பின் தன் படை செலச் செல்லாது,
அரு வழி விலக்கும் எம் பெருவிறல் போன்ம் என,
எய்யாது பெயரும் குன்ற நாடன் (அகம்.-248)

வேட்டுவன், வீரம் செறிந்த ஆண்பன்றியை தனி ஒருவனாக அடக்கிய செய்தியை கபிலருடைய அகநானூற்று பாடல் நமக்குக் கூறுகின்றது. இப்பாடலின் வழி வேட்டுவர்கள் பன்றியை வேட்டையாடியதும், அவற்றை அடக்கிய செய்திகளும் குறிப்பினால் நமக்குப் புலனாகிறது. அந்த வகையில் வேட்டுவர்கள் மலைகளிலும் காடுகளிலும் திரிகின்ற கொடிய விலங்குகளை வேட்டையாடுவதில்

பெருமை கொண்டிருந்தது அகநானூற்றின் வழியாக நமக்குப் புலனாகிறது.

தினைப்புனம் காத்தல்

வேட்டுவர்கள் வேட்டைத் தொழில் மட்டுமின்றி உற்பத்தித் தொழிலையும் மேற்கொண்ட செய்திகளைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. அந்த வகையில், தினைக்கதிர்களை மேயவரும் பன்றிகளை ஓட்டுவதற்காக, கானவன் பரண் மீது விளக்கினைக் கொளுத்தி வைத்ததாக ஈழத்துப் பூதன் தேவனாரின் பாடல் குறிப்பிடுகின்றது.

.... குறுகும்
புருவைப் பன்றி வரு திறம் நோக்கி,
கடுங் கைக் கானவன் கழுதுமிசைக் கொளீஇய
நெடுஞ் சுடர் விளக்கம் நோக்கி, (அகம்.-88)

இப்பாடலின் மூலம் ஆண்கள் இரவு நேரங்களில் தினைப்புனம் காக்கும் தொழிலை மேற்கொண்டுள்ளது தெரிய வருகிறது. தினைப்புனம் காக்கும் தொழிலை ஆண்கள் மட்டுமல்லாது பெண்களும் செய்துள்ளமையை மதுரை இளம்பாலாசிரியர் சேந்தங்கூத்தனின் பாடல் வரிகள்குறிப்பிடுகின்றன.

.... கை பெயரா,
ஒலியல் வார் மயிர் உளரினள், கொடிச்சி
பெரு வரை மருங்கில் குறிஞ்சி பாட;
குரலும் கொள்ளாது, நிலையினும் பெயராது,
படாஅப் பைங் கண் பாடு பெற்று, ஓய்யென
மறம் புகல் மழ களிறு உறங்கும் நாடன்; (அகம்.-102)

இப்பாடலில்யானையானது தினைக்கதிர்களை மேயாமல்இருக்க கானவனின் மனைவியாகிய கொடிச்சி, குறிஞ்சிப்பண்ணைப்பாடியதாகக் கூறப்படுகிறது. அந்த வகையில் வேட்டுவப் பெண்கள் பகலில் தினைப்புனம் காக்கும் தொழிலை மேற்கொண்டிருப்பது தெரிய வருகிறது. மேலும், கானவர்கள் தினைப்புனம் காக்கும் பொருட்டு, கவணைக் கொண்டு யானையை விரட்டிய செய்திகளைக் கபிலருடைய பாடல் வரிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

.... புலம் படர்ந்து,
இரவின் மேயல் மரூஉம் யானைக்
கால் வல் இயக்கம் ஒற்றி, நடு நாள்,
வரையிடைக் கழுதின் வன் கைக் கானவன்
கடு விசைக் கவணின் எறிந்த சிறு கல்
உடு உறு கணையின் போகி, - (அகம்.-292)

வேட்டுவர்கள், மலையில் வாழும் விலங்குகளை வேட்டையாடியும், மலையில் விளைகின்ற பொருட்களை உண்டும் வாழ்ந்து வந்தமையை அகநானூற்றுப் பாடலடிகளின் மூலம் நமக்குப் புலப்படுத்துகின்றன.

முடிவுரை

மலையில் வாழும் வேட்டைச் சமுதாயம் வில்லினைக் கொண்டு போர் செய்வதில் சிறந்து விளங்கியதை, சங்கப்பாடல் அடிகளின் மூலம் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த வகையில் வேட்டுவரின் வலிமையைக் குறித்தும், அவர்கள் வேட்டை நாய்களை உடன் வைத்திருந்த செய்திகளையும் அகநானூற்றுப் பாடல்களின் வழியே நமக்குத் தெரியவருகிறது. வேட்டுவர்கள், புலியுடன் சண்டையிடக்கூடிய வலிமை மிக்க யானையை வேட்டையாடிய செய்தியையும், யாரும் வேட்டையாட முடியாத ஆண் பன்றியை, வேட்டுவன் ஒருவன் தனியாளாக சென்று வேட்டையாடிய செய்தியும் அகநானூற்றின் வழியே நமக்குப் புலனாகிறது.தினைப்புனம் காக்கும் தொழிலில் ஆண் பெண் இருவருக்கும் இருந்த பங்களிப்பை அறியமுடிகிறது. மேலும், சங்ககால மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்காக வேட்டைத் தொழிலை மேற்கொண்டுள்ளது இக்கட்டுரையின் மூலம் நமக்குப் புலனாகிறது.

நாட்டுப்புறவியலில் வேட்டுவர்கள்

த. சினேகா,
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
தமிழாய்வுத்துறை,
நேரு நினைவுக்கல்லூரி,
புத்தனாம்பட்டி,
மின் அஞ்சல்: sneha018in@gmail.com.

முன்னுரை

நாட்டுப்புறவியலில் வேட்டுவர் என்பவர்கள் முக்கியமானவர் களாகத் திகழ்கின்றனர். இவர்கள் விலங்குகளை வேட்டையாடி உணவு மற்றும் பிற தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பாரம்பரிய வேட்டைத்தொழிலாளர்கள் ஆவார்கள். இந்தச் சமூகம், தங்களது வாழ்வியல், கலாச்சாரம், மற்றும் பழக்கவழக்கங்கள்,ஆகியவற்றின் மூலம் இவர்கள் வேட்டுவர்கள் என்று நம்மால் அறியமுடிகிறது. நாட்டுப்புற மக்களின் அடிப்படைத்தொழிலாக விளங்குவது வேளாண்மை. அதனைச் சுற்றி ஏனைய தொழில்கள் வளர்ந்தனஅதில் வேட்டைத் தொழிலைப் பற்றி இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது.

வேட்டுவர்களின் வாழ்க்கை முறை வேட்டுவர்கள் இயற்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர். வனங்களின் இயல்பை நன்கு அறிந்தவர்களாகவும் இருப்பார்கள். வில், அம்பு,ஈட்டி, போன்ற பாரம்பரிய ஆயுதங்களைப் பயன்படுத்தித்தான் வேட்டையாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உணவு மற்றும் உடை தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை வேட்டையாடுவதன் மூலம் பெற்றுக்கொள்கின்றனர்.

கூட்டுக் குடும்ப முறை

வேட்டுவர்கள் பொதுவாகக் கூட்டுக்குடும்பமுறையைப் பின்பற்றி வாழ்ந்தனர். இது இவர்களுக்குப் பாதுகாப்பையும், ஒற்றுமையையும் அளிக்கிறது.

வேட்டுவர்களின் ஆயுதங்கள்

வில், அம்பு இவை இரண்டும் வேட்டுவர்களின் முக்கிய ஆயுதங்களாக திகழ்ந்தன. வில்லைத் தயாரிப்பதற்கு மரம், நாறு போன்ற இயற்கைப் பொருட்கள் பயன்படுத்தி வில்லைத்தயாரித்தனர். **ஈட்டி:** தங்களுடைய தற்காப்புக்காகவும், வேட்டையாடுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. **கத்தி:** விலங்குகளை வெட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

வேட்டுவர்களின் வாழ்வாதாரம்

வேட்டுவர்கள் வேட்டையாடுதல் மட்டுமின்றி அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் கூடை, பாய், மரப்பாத்திரங்கள் காடுகளில் கிடைக்கும் தேனை எடுத்து விற்பது, காடுகளில் கிடைக்கும் மருத்துவ மூலிகைகளைச் சேகரித்து விற்பனை செய்வது போன்ற தொழிலையும்மேற்கொள்கின்றனர் என்பது குறிப்பிடப்படுகிறது.

வேட்டைத்தொழில்

மனித நாகரிகத்தின் தொடக்கநிலை உணவு தேடல் முறைகளில் ஒன்று வேட்டையாடுதல் ஆகும். இன்றைய காலகட்டங்களில் நாகரிகம் வளர்ந்துவிட்ட நிலையிலும் வேட்டையாடுதலைச் சிலர் பொழுதுபோக்காகக் கொண்டுள்ளனர். நாட்டுப்புறங்களில் பல இடங்களில் வேட்டையாடுதல், விழாச்சடங்குகளில் ஒன்றாக உள்ளது. மலையின மக்களிடமும், நாட்டுப்புற மக்களின் சில இடங்களிலும் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். வேட்டைக்குச் செல்பவர்கள் வேட்டை நாய்களை வளர்க்கும் வழக்கம் உள்ளது. வேட்டை நாய்க்கூட்டம் என்பதுதனிவகை இனமாக உள்ளது.

விலங்குகள்

விலங்குகளை வேட்டையாடுதலை அரசு தடை செய்தாலும் நாட்டுப்புற மக்கள் மலைப்பகுதிகளிலிருந்து விளைநிலங்களில் புகுந்து கேடு விளைவிக்கும் விலங்குகளான காட்டுப்பன்றி, நரி ஆகியவற்றை வேட்டையாடுகின்றனர். காட்டுப்பகுதிகளில் பகலில் முயல், உடும்பு போன்றவற்றை வேட்டையாடி அதன் தோலை, கஞ்சிரா என்னும் இசைக்கருவிக்கும், இறைச்சி மருந்தாகவும் பயன்படுத்தப்படுகிறது.

மீன்பிடித்தல்

ஏரி, குளம், ஆறு, கடல் ஆகியவற்றில் மீன்களை வேட்டையாடி அவற்றை நெருப்பில் காட்டி சமைத்து, தான் மட்டும் உண்ணாமல் மற்றவர்க்கும் கொடுத்து உண்ணும் வழக்கம் வேட்டுவர்களிடம் உள்ளது.

வலை வீசுதல்

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த்தற்று. (குறள் - 274)

இக்குறட்பாவில் வேட்டுவர்கள் புதரில் மறைந்து கொண்டு வலைவீசி பறவைகளை எவ்வாறு பிடிப்பார்கள் என்பதைப் பற்றி கூறுகிறது. அதுபோல ஒன்றுக்கு மேற்பட்ட வேட்டுவர்கள் சேர்ந்துகொண்டு வலைவீசி நீர்நிலைகளில் மீன்களைப் பிடித்து வந்து பகிர்ந்து கொள்வர். வேட்டைக்குச் செல்பவர்கள் பல்வேறு வேட்டைக் கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் வேட்டைத்தொழிலைப் பெருமையாகக் கருதுகின்றனர்.

சடங்குகள்

வேட்டுவர் சமூகம், இயற்கையுடன் நெருங்கி வேட்டையாடுதல், சேகரித்தல் போன்ற தொழில்களை முதன்மைத் தொழிலாகக் கொண்ட இவர்கள், தங்கள் வாழ்வில் பல சிறப்பான சடங்குகளைப் பின்பற்றி வருகின்றனர். இவர்கள் இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, குணப்படுத்துதல் போன்ற தனித்துவமான சடங்குகளைப் பின்பற்றுகின்றனர்.

இயற்கை வழிபாடு

வேட்டுவர்கள் காடு, மலை, நதி, மரம் போன்ற இயற்கைச் சக்திகளைத் தெய்வங்களாக வழிபட்டு இயற்கையின் நிகழ்வுகளுடன் நெருங்கியதொடர்பு கொண்டிருந்தனர்.

முன்னோர் வழிபாடு

வேட்டுவர்கள் முன்னோர்களைத் தெய்வங்களாக வழிபடுவது சமூகத்தின் முக்கியப் பண்பாகும். இதன் மூலம் குடும்ப உறவுகள் பலப்படுத்தப்பட்டு, சமூக ஒற்றுமை பேணப்படுகிறது.

குணப்படுத்துதல்

தாவரங்கள் விலங்குகள் போன்றவற்றைப் பயன்படுத்தி நோய்களை குணப்படுத்தும் பாரம்பரிய முறைகளைப் பின்பற்றுகின்றனர் வேட்டுவர்கள்.

முக்கியமான சடங்குகள்

குழந்தைப் பிறப்புச் சடங்குகள், விவசாயச் சடங்குகள், வேட்டைச் சடங்குகள், முன்னோர் வழிபாட்டுச் சடங்குகள் என உள்ளன. குழந்தை பிறந்தவுடன், குழந்தையையும் தாயையும் தூய்மைப்படுத்தும் சடங்குகள் நடைபெறும், குழந்தைக்குப் பெயர் சூட்டி எதிர்காலம் குழு சிறப்பாக அமைய வாழ்த்துவார்கள்.

விவசாயச் சடங்குகள்

விதைப்பு, அறுவடை போன்ற நிகழ்வுகளின் போது சிறப்புச் சடங்குகள் நடைபெறும்.

வேட்டைச் சடங்குகள்

வேட்டைக்குச் செல்லும்முன் வேட்டை தெய்வங்களை வழிபட்டு, பாதுகாப்பு வேண்டி பிரார்த்தனை செய்வது வேட்டைச் சடங்கு ஆகும்.

முன்னோர் வழிபாட்டுச் சடங்குகள்

முன்னோர்களின் ஆத்மாக்களை நினைவுகூரும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறை சிறப்புத் திருவிழாக்கள் நடத்தப்படும்.

வேட்டையாடுதல்

மனிதர் தொடக்க காலத்தில் உணவிற்காகவும், வீரத்தை வெளிப் படுத்தவும் வேட்டைக்குச் சென்றனர். யானை போன்ற விலங்குகளையும் காடை போன்ற புள்ளினங்களையும் வேட்டையாடினார்கள்.

"வெள்ளி பிரம்பெடுத்து - நீங்க
வேட்டையாட போனீங்கன்னு - நான்
வேட்டை செயிக்குமுனு
வீமர் படை வெல்லுமுனு"...

(நாட்டுப்புறவியல்பண்பாடு பக். 179)

என்னும் பாடலில் வேட்டையாடும் வழக்கம் குறிப்பிடப்படுகிறது. நாட்டுப்புற மக்கள் குக்கிராமங்களில் வாழ்க்கை நடத்துபவர்கள் என்பதனால் உணவிற்காகப் புள்ளினங்களை வேட்டையாடுகின்றனர்.

“யானை வேட்டுவன் யானையும் பெருமே
குறும்பூழ்வேட்டுவன் வறுங்கையும் வருமே”...
(புறம் 214 பாடல்)

இப்பாடலில் யானை வேட்டைக்காரன் யானையைப் பிடிப்பதற்காகச் செய்யும் முயற்சிகள், அதன் விளைவுகள் பற்றிச்சொல்லப்படுகிறது. மிகப்பெரிய விலங்காகிய யானையை வேட்டையாடச் சென்றவன் அதனைப் பெற முடிந்தது. ஆனால், குறும்பூழ் என்னும் சிறிய பறவையை வேட்டையாடச் சென்றவனுக்கு வெறுங்கையோடு திரும்புதலும் உண்டு. அதாவது, வலிமையானவன் பலவீனமானவனை வெல்வது, பயங்கரமானவர்கள் பயந்து ஓடுவது போன்ற பொதுவான வாழ்க்கை உண்மைகளை எடுத்துக் கூறப்படுகிறது.

முடிவுரை

நாட்டுப்புறவியலில் வேட்டுவர்கள் மனித குலத்தின் மிகப் பழமையான வாழ்க்கை முறையின் பிரதிநிதிகள் ஆவார். அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் தொழில், கலாச்சாரம் ஆகியவை இயற்கையுடன் இணைந்து வாழலாம் என்று நமக்குக் கற்றுத் தருகிறது. இவர்களின் வாழ்க்கை முறையும், கலாச்சாரமும் மிகவும் சிக்கலான ஒன்றாகும். அழிந்து வரும் பழங்குடிச் சமூகங்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களது கலாச்சாரத்தைப் பேணிப்பாதுகாப்பதற்கும் மனிதர்கள் எவ்வாறு உதவ வேண்டும்என்பதைப் பற்றியும்,இவர்கள் மனித குலத்தின் தொடக்க காலத்தில் இருந்த இயற்கையுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதைப் பற்றியும், வேட்டுவர்களுக்கு வேட்டைத் தொழில்தான் அவர்களின் வாழ்வாதாரமாக உள்ளது என்பது பற்றியும் இக்கட்டுரை மூலம் அறிந்துகொள்ளமுடிகிறது.

சிலம்பில் காணலாகும் வேட்டுவர்களின் வாழ்வியல்

முனைவர் பா.சீனிவாசன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தட்சசீலா பல்கலைக்கழகம்,
ஓங்கூர், திண்டிவனம்.
அலைப்பேசி எண் : 9943555241
மின்னஞ்சல் : sribalu1986@gmail.com

அறிமுகம்

சிலப்பதிகாரம் தென்னிந்தியாவின் வரலாற்றுப் பெட்டகம் காலங் காலமாய் சிலம்பின் உள்ளுக்குள் கட்டமைத்திருக்கும் நிகழ்வுகளின் மீதான ஆய்வுகள் நிகழ்ந்த வண்ணமிருக்கிறது. அவ்விலக்கியத்தின் கதை மாந்தர்கள் உண்மைத் தன்மையுடையவர்களா என்னும் கேள்வி ஆய்வாளர்களை ஆய்வுக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறது. மனித வாழ்வு குறித்து மானிடர்களுக்கு உணர்த்தி நிற்கும் ஒரு பேரிலக்கியம் சிலப்பதிகாரம். இப்படைப்பின் வழி மண்ணையும் மக்களையும் ஆழமாக உணர்ந்தறிய முடியும் என்பது திண்ணம். ஐந்துநில மக்கள் வாழ்வை இது சங்கத் தமிழ் இலக்கியம் போன்று ஆங்காங்கே பதிவு செய்திருக்கின்றது. அவற்றுள் வேட்டுவர்களின் சிலம்பு எவ்வாறு எடுத்துக்காட்டியிருக்கிறது என்பது குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாழ்விடம்

வேட்டுவர்களின் நிலம் ஐந்திணைகளில் பாலை நிலமாகக் கருதப்பட்டாலும் தொல்காப்பியர் பாலை நிலத்தினை அகத்திணைகள் பற்றிக் குறிப்பிடுகையில் சுட்டவில்லை. உரிப்பொருளில் சுட்டுகின்றார்:

> **“கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> **முற்படக் கிளந்த எழுதிணை என்ப”**[1]

என்றும் அவற்றுள்

**“நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே”[2]**

என்றும் வரையறுக்கிறார். அதாவது கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக முதன்மை பெறுகின்ற ஒழுக்க வகைகள் ஏழு என்றும் அவ்வேழில் குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்ற ஐந்திணைகளுள் நடுவிலிருக்கும் பாலை நீங்கக் கடலால் சூழப்பெற்ற இந்நில உலகத்தைப் பகுத்துக் கொண்டனர் என்று பாலைத்திணை நிலமாகக் கொள்ளப்படாத செய்தி உரையாசிரியர்களால் குறிப்பிடப் படுகிறது. இப்பாலை நிலத்தவர்களுக்கு உரியவர்கள் முதலில் காளை, விடலை என அழைக்கப்பட்டுள்னர். பின்னர் பாலை நில மக்கள் மறவர் மற்றும் எயினர் எனப்பட்டுள்ளனர். இவ்வெயினர்கள் எனப்படும் பாலை நிலத்திற்குரியவர்களென இளம்பூரணர் தொல்காப்பிய அகத்திணையியலில் பாலைக்கு “மக்கட்பெயர் எயினர் எயிற்றியர் என்பதால் மீளி விடலை என்ப”[3] என்று கூறிச் செல்கின்றார். சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி என்னும் பகுதியில்,

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”4 எனக் குறிஞ்சியும் முல்லையும் வளமை கெடும்போது அது பாலையெனப்படும் என இளங்கோவடிகள் கூறுகின்றார். மேலும் அவ்வூரின் எல்லையில் முள்வேலிகள் அமைக்கப்பட்டு நடுவே ஊர்மன்றம் அமைக்கப்பட்டு அதில் அம்மக்கள் கூட்டமாக நட்புணர்வுடன் வாழ்ந்தமையினை

**“இடு முள்வேலி எயினர் கூட்டுண்ணும்
நடுவூர் ... ...
வல்வில் எயினர் மன்று பாழ்பட்டன
மறக்குடி தாயத்து வழி வளம் சுரவாது
அறக் குடிபோல் அவிந் தடங்கினர் எயினரும்”[5]**

என்ற அடிகளில் பதிவு செய்கின்றார். அவர்கள் வேட்டையில் பெற்ற உணவைக் ஒன்றாகக் கூடி பங்கிட்டு உண்ணும் தன்மையும், வேட்டையுணர்வு அவர்களை வலிமையுடையவர்களாக வைத்திருக்கும் பொருத்தப்பாடும்,

“வழங்கு வில் தடக்கை மறக்குடி...”[6]

என்ற மறக்குடி, அறக்குடி எனும் சொல்லாட்சியின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. வேடர்களின் வீடுகள் தனித் தனித்தனியாகக் குடிசைகள் அமைக்கப் பெற்று இருந்ததை ,

"கயமலர் உண் கண்ணாய் காணாய் நின் ஐயர்
அயலூர் அலற எறிந்தநல் ஆனிரைகள்
நயனில் மொழியின் நரை முதுதாடி
எயினர் எயிற்றியர் முன்றில் நிறைந்தன"[7]

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

மகட்பெயர்கள்

இந்நிலத்து மக்கள் மறவர், எயினர், எயிற்றியர், வேடர், கானவர் என்னும் பெயர்களில்,

சங்க இலக்கியங்களில் அழைக்கப்பட்டனர். சிலம்பு சங்க நிகழ்வா அல்லது அதற்கும் முந்தையதா என்னும் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைப் போன்றே இளங்கோவடிகளும் எயினர் கானவர் மறக்குடி வேடர் என, வழங்குவில் தடக்கை மறக்குடி8

"கானவர்"[9]

"வல்வில் எயினர்"[10]

"எயினர்"[11]

"எய்வில் எயினர்"[12]

"வேய்வில் எயினர்"[13]

"எயினர்கள்"[14]

"வல்வில் எயின்"[15]

இப்பாடல் அடிகள் வாயிலாகச் சுட்டுகின்றார்.

தொழில்கள் வேட்டுவர்களுக்கு வேட்டையாடுவது என்பதே முதன்மைத் தொழில். வேட்டையில் பெற்ற உணவை அம்மக்கள் பகிர்ந்து உண்டனர். மருத நிலங்களில் வாழும் உழவர்கள் மழை நீரினை ஆறு, குளம், ஏரி எனச் சேமித்து அதன் மூலம் பயிரை விளைவித்து வாழ்வர். மழைவளம் இல்லாத பாலை வெளியில்

வாழுகின்ற வேட்டுவர்கள், வில்லைக் கலப்பையாகப் பயன்படுத்தி உணவை ஈட்டுவர். கானவர்களின் தொழிலுக்கு முதன்மையான கருவி வில், அம்பு. அதனால்தான் அவர்கள் விற்றொழில் வேடர் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர். வில்லேந்தி விலங்கை வேட்டையாடியும், வழிப்பறியிலும் தங்களுக்குத் தேவையான உணவை எடுத்துக் கொண்டனர் என்பதை,

“மறங்கொ ல் வயப்புலி வா ய்ப்பி ளந்து”[16]

“ஆறெறி பறை”[17]

“இட்டுத்தலை எண்ணும்”[18]

என்ற அடிகளின் வாயிலாகக் காணலாம்.

உணவு வேடர்கள் வேட்டையில் பெற்ற விலங்கினங்களைச் சமைத்து உண்டனர். புலால் உணவினைச் சோற்றில் புழுக்கியும் அவரை,துவரை முதலியவற்றின் அவியலையும் இவர்கள் விரும்பி உண்டனர் என்பதனை,

‘‘புழுக்கலும்நோலையும்விழுக்குடைமடையும்’’[19]

என்ற வரிகள் வாயிலாகக் காணலாம். வேடுவர்கள் கள்ளைவிரும்பி உண்டனர். வேட்டுவக் குலப் பெண்கள் கள்ளை தெருக்களில் விற்றனர் என்ற செய்தியும் பெறப்படுகிறது. அவ்வாறு கள் விற்கும் பெண்களைக் கள்விலையாட்டி என்று அழைத்தனர். இதனை, சிலம்பு,

“கள்விலையாட்டி மறுப்பொறா மறவன் கைவில் ஏந்திப்... ...”[20]

“கள்விலையாட்டி நல்வேய் தெரிகானவன்”[21]

மட்டு உண்வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்”[22]

என்ற வரிகள் வாயிலாகக் வேட்டுவர்கள் கள் உண்ணும் நிகழ்வு, எயிற்றியர் கள் விற்கும் செய்திகளைப் பதிவு செய்கின்றது.

ஆடை அணி கலன்கள்

வேடர்கள் தாங்கள் வேட்டையாடிக் கொன்ற யானை மற்றும் புலியின் தோல்களை ஆடையாக அணிந்திருந்தனர். குமரிக்கு ஆடை அணிகலன் சூட்டும் நிகழ்வில் மறவர்களின் உடையணி முறையை அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை,

"வரியும் புள்ளி யும் மயங்கு வான் புறத்து
உரிவை மேகலை உடீஇப் பரிவோடு"23

என்ற பாடல் வழியும் கொற்றவையின் ஆடையினைச் சுட்டுமிடத்தில்,

"ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரிஉடுத்து"[24]

என்றும் சொல்லி நிற்பது வேடர்களின் ஆதி நாள் ஆடை எது என்பதை அடையாளப்படுத்திக் காட்டுகிறது. மேலும், அணிகலன்களைக் சுட்டும் பொழுது

"சிறு வெள் அரவின் குருளை நாண் சுற்றி
குறு நெறிக் கூந்தல் நெடு முடி கட்டி,
இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளை வெண் கோடு பறித்து, மற்று அது
முளை வெண் திங்கள் என்னச் சாத்த
மறம் கொள் வயப் புலி வாய் பிளந்து பெற்ற
மாலை வெண் பல் தாலி நிரை பூட்டி"[25]

என்ற செய்யுள் வரிகளின் வழியாக இளங்கோவடிகள் புலப்படுத்துகிறார்.

தெய்வம்

வேட்டுவர்களின் கடவு ள் கொற்றவை. இவளைப் போர்க்கடவுள் என்றும் சுட்டுவர். தங்கள் தொழில் வளம் பெருகத் தங்கள் குலதெய்வமாகிய கொற்றவையை வணங்கும் பழக்கம் உடையவர்களாக இவர்கள் விளங்கினர். இத்தெய்வத்திற்கு உயிர்ப் பலி கொடுக்காத நிலையில், தங்களுக்கு வேட்டைப் பலன் கிட்டாதென நம்பினர். இந்த நம்பிக்கையினை,

"நடு ஊர் மன்றத்து அடி பெயர்த்து ஆடி,
கல் என் பேர் ஊர்க் கண நிரை சிறந்தன;
வல் வில் எயினர் மன்று பாழ்பட்டன;
மறக் குடித் தாயத்து வழி வளம் சுரவாது"[26]

என்ற அடிகளில் எடுத்துக்காட்டுகின்றார். கொற்றவைக்குத் தங்கள் தொழில் மேம்பாடு அடைய தங்கள் தலையை அறுத்துப் பலியாகக் கொடுக்கும் தன்மை கொண்டவர்களாக இவ்வேடர்கள் விளங்கினர் என்னும் செய்தியை,

“இட்டுத்தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல் குடிக்குமரியை”[27]

“மிடறு உகு குருதி கொள்விறல் தருவிலையே
... ...
நிணன் உகுகுருதி கொள்நிகர் அடுவிலையே”[28]

என்ற அடிகளில் இளங்கோவடிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றது. ஐயை கோட்டம் என்பது கொற்றவையியின் கோயில். அங்கு வேட்டுவ முதுமகளுக்கு கொற்றவை போல் அலங்காரம் செய்து வண்ணமும் சுண்ணமும், தண்ணறுஞ் சாந்தமும் புழுக்கலும் நிணச் சோறும் எள்ளுருண்டையும் பூவும் புகையும் மேவிய விரையும் படைத்து பறை இசைக்க கொம்பு முழங்க கொற்றவையை வழிப்பட்டதனை,

“சிலை அமர் வென்றி கொடுப்போள் அல்லள்;
மட்டு உண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்
விலைப்பலி உண்ணும் மலர் பலி - பீடிகை,
கலைப் பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி”[29]

என்ற அடிகள் வாயிலாகக் காணலாம்.

இசைக்கருவிகள் வேட்டுவர்கள் துடி, யாழ், பறைமுதலிய இசைக்கருவிகளை இசைக்கும் திறன் படைத்தவர்களாக விளங்கினர். பறை இசை வழிப்போக்கர்களைத் துன்புறுத்தும் பொழுதும் இசைத்தனர். சின்னம் என்னும் இசைக்கருவியை ஊதுவர். கொம்பு, குழிகுழல், மணி ஆகியனவும் வேடர்களின் இசைக்கருவிகளாக இருந்தமை சிலம்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையினை,

“ஆற றி பறையும் சூறைச் சின்னமும்
குழலும் பீடுகெழுமணியும் கணங்கொண்டு துவைப்ப அணங்கு முன்நிறீஇ”[30]

என்ற பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களோடு துடியனும் பாணனும், சேர்ந்து இசைத்தமையை

“கொல்லன் துடியன் கொளைபுணர் சீர்வல்ல நல்லியாழ்ப்
பாணர்தம் முன்றில் நிறைந்தன”[31]

என்ற அடிகள் வாயிலாக அறியலாம்.

முடிவுரை

சிலப்பதிகாரத்தின் ஒரு காதையாக வேட்டுவரி இருந்த பொழுதினும் அகம்ஐந்திணை நிலமக்களுள் ஒரு சாரர் வாழ்வை நுட்பமாகப் பதிவு செய்திருக்கிறது. அவர்களின் வாழ்வியலைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. அவ்வாறே வேட்டுவ வரியில் வேடர்களின் வாழ்வியல் இடம் பெற்றுள்ளது. வேளாண் மக்களாய் பரிணமிப்பதற்கு முன்பு மனிதன் வேட்டை மனிதனாய் இருந்தான் என்பதைக் காணமுடிகிறது.

மேற்கோள் குறிப்புகள்

1. அகத்திணையியல், நூ. 1
2. அகத்திணையியல், நூ. 2
3. அகத்திணையியல், நூ.-24
4. சிலப்பதிகாரம், காடுகாண்காதை, 64-66
5. சிலம்பு .வே.வ.10-15
6. சிலம்பு .வே.வ.6
7. சிலம்பு .வே.வ.கொடை.9-12
8. சிலம்பு .வே.வ.6
9. சிலம்பு .வே.வ.9, கொடை .7
10. சிலம்பு .வே.வ.13
11. சிலம்பு .வே.வ.20, கொடை .12, பலிக் கொடை .6,12
12. சிலம்பு .வே.வ.குலச் சிறப்பு .8
13. சிலம்பு .வே.வ.குலச் சிறப்பு .12
14. சிலம்பு .வே.வ.அவிப் பலி .8
15. சிலம்பு .வே.வ.பலிக் கொடை .2
16. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம்.7
17. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம்.20

18. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம்.1

19. சிம்பு.வே.வ.கொற்றவ கோலம்.18

20. சிலம்பு.வே.வ.வெட்சிப்புறநடை.1

21. சிலம்பு.வே.வ.கொடை.7

22. சிலம்பு.வே.வ.18

23. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம்.10-11

24. சிலம்பு.வே.வ.தாயே.நிற்பாய்.1

25. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம் .2-9

26. சிலம்பு.வே.வ.11-17

27. சிலம்பு.வே.வ.கொற்றவை கோலம் .1-2

28. சிலம்பு.வே.வ.அவிப்பலி .17-18

29. சிலம்பு.வே.வ.கொற்றவைகோலம்.17-22

30. சிலம்பு.வே.வ.கொற்றவைகோலம்.21-23

31. சிலம்பு.வே.வ.கொடை.3-4

32. சிலம்பு.வே.வ.பலிக்கொடை.6-7

துணைநூற் பட்டியல்:

1. அகநானூறு - அகநானூறு : மூலமும் உரையும்- ந.மு.வேங்கடசாமி நாட்டார் (தொகுப்பாசிரியர்), உருத்திரசன்மன் (பதிப்பாசிரியர்), கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம்.2019

2. தொல்காப்பியம் : எழுத்து - சொல் - பொருள் (இளம்பூரணனார் உரை) - இளம்பூரணனார், கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம். 2017

3. சிலப்பதிகாரம் - புலியூர்கேசிகன், அம்சா பதிப்பகம், சென்னை. 2013.

வேட்டுவக் கவுண்டரின மகளிர் நிலை

நெறியாளர்:
பேரா. முனைவர் ம. சுந்தரமூர்த்தி
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11.
அலைபேசி எண்: 80726777960
மின்னஞ்சல்: nalinisubathra@gmail.com

கு. சுபத்ரா,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-11.

ஆய்வுச் சுருக்கம்

வேட்டுவர் இனம் சங்க காலத்திலிருந்தே தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட வேட்டைச் சமுதாயமாகும். இவர்கள் வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டிருந்ததால் இவ்வினக் குழுவிற்கு வேட்டுவர் என்ற பெயரே நிலைத்துவிட்டதெனக் கருதலாம். இவர்களில் பெண்களின் நிலைப்பாடு சமூகத்தில் எவ்வாறு இருந்தது என்பதைச் சில வாழ்வியல் சடங்குகளிலிருந்து உய்த்தறியும் வண்ணம் இக்கட்டுரை அமைகின்றது. சங்ககாலப் பாடல்களில் வேட்டுவக் கவுண்டரினப் பெண்பாற் புலவர்களும் பாடல் பாடியுள்ளனர். கீரன் என்ற வேட்டுவக்கவுண்டர் குலப்பெயரில் புலவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. இக்காலத்திய சடங்குகளில் சில, பெண்களை முதன்மைப்படுத்துகின்றன. அவை தொல் பழங்காலத்தியப் பழங்குடிகளின் பண்பாட்டு எச்சங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறாக வேட்டுவக்கவுண்டரினப் பெண்களின் நிலையை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

முன்னுரை

பண்டைய காலங்களில் காடுகளில் வேட்டையாடித் திரிந்து வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் தங்களுக்கென ஒரு நிலையான வாழிடத்தை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இயற்கையான குகைகளிலும்

மரங்களையும் அண்டி வாழ்ந்தனர். இத்தகைய மக்களுள் தங்களுக்கென ஒரு வாழிடத்தை ஏற்படுத்திக்கொண்ட பின்பே வேளாண்மை படிப்படியாக மலர்ச்சி பெற்றது. உணவுதேடி வேட்டையாடிய மனிதன் தன்னைக் காத்துக்கொள்ள குழுக்களை உண்டாக்கிக் கொண்டான். பிற்காலத்தில் இந்த அமைப்பு குலம், கூட்டம் என்ற அமைப்பாக மாறியது. பிற்கால மன்னர் காலத்தில் ஊரின் தலைவர்களாக இவர்கள் விளங்கியுள்ளனர். இதனடிப்படையிலேயே கவுண்டர் என்ற பட்டப் பெயரினை ஏற்றுள்ளனர். காலப்போக்கில் இவ்வினக்குழு வேளாண்மை செய்து பண்பட்ட வாழ்க்கைமுறையை மேற்கொண்டுள்ளது. இவ்வேட்டுவக் கவுண்டர் இனப் பெண்கள் சங்ககாலத்தில் புலவர்களாகவும் கொடையாளிகளாகவும் திகழ்ந்துள்ளனர். இவர்களுடைய சில சடங்கு முறைகள் ஆதிகுடிகளின் வாழ்க்கை முறையின் எச்சங்களாகத் திகழ்கின்றன. அவற்றை இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்கள்

வேட்டுவக் கவுண்டரின மக்களுள் இரண்டு பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.

1. வெறிபாடிய காமக் கண்ணியார்
2. கழார் கீரன் கொற்றனார்

வெறியாட்டு என்ற சங்ககால சடங்குமுறையைப் பாடிய புலவர் வெறிபாடிய என்ற அடைமொழி பெற்று வெறிபாடிய காமக் கண்ணியார் என்று அழைக்கப்படுகிறார். இவரது பாடல்கள் அகநானூறு குறிஞ்சித்திணையில் 22 மற்றும் 98 - ஆம் பாடல்களாகும். சங்க இலக்கியத்தில்எட்டுப் பாடல்கள் கழார் கீரன் எயிற்றியார் பாடியது. இவரது பாடல்களில் நான்கு குறுந்தொகையிலும் நான்கு அகநானூற்றிலும் இடம் பெற்றுள்ளன.

வழிபாட்டு முதன்மை

வேட்டுவக்கவுண்டரின மக்கள் உன்னதமான செயல் செய்த பெண்களை கடவுளாக மதித்து வணங்குகின்றனர். நமது தமிழரின் மிகப் பழமையான வழிபாடான தாய்தெய்வ வழிபாடு இங்கு நினைவு கூரத்தக்கது. இவ்வகையில் வேட்டுவக்குலத்தின் விடிவெள்ளியாகத் திகழ்பவர் வடிவுள்ள நாயகி. இத்தெய்வத்தை வடிவாம்பாள் என்று அழைக்கின்றனர். கருவூருக்கு மேற்கே அப்பிபாளையம் எனும் ஊரில்

வாழ்ந்த ஆடு மேய்க்கும் சிறுமி சிவபெருமான் மீது கொண்ட தீராத பக்தியால் அவ்விறைவனை மணந்து அவருடன் ஐக்கியம் அடைந்ததாகக் கூறுவர். கருவூர் பசுபதி ஈசர் கோவிலில் அம்மையாக மக்கள் இவரை வணங்கி வருகின்றனர். உண்மையான தெய்வப்பற்று கொண்ட பெண்ணுக்குத் தெய்வ அங்கீகாரம் வழங்கப்படுவதனை இதன் மூலம் அறியலாம்.

வயிற்றில் கருவைத் தாங்கிய நிலையில் ஒரு பெண் இறந்தால் அப்பெண்ணுக்குச் சுமைதாங்கிக் கல் நடப்படுகின்றது. அதைப்போல பூப்படைந்து திருமணமாகாத கன்னிப்பெண்கள் இறந்தால் அவர்களுக்குக் கன்னித்தெய்வ வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட செய்திகள் மக்கள் தம்மோடு வாழ்ந்த மகளிரைத் தெய்வநிலைக்கு உயர்த்தும் பண்பினை உணர்த்துகின்றன.

கல்வெட்டுகளில் மகளிர்

வேட்டுவக்கவுண்டர் பற்றிய கல்வெட்டுகளில் பெண்கள் செய்த கொடை மற்றும் தானங்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நாயக விச்சி நாயன் சிலம்பி தன் கணவன் வேட்டுவர் குறும்பிள்ளரின் காவலன் அரையனுக்காக பிடாரி கோவில் கட்டினார் என்றொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. பல பெண்கள் கோவிலுக்குச் சந்தியா தீபம் வைத்திருக்கின்றனர் என்ற செய்தியைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. பெண்கள் தனித்தும் குடும்பத்துடன் இணைந்தும் கோவில்களுக்குக் கொடையளித்துள்ளனர். இக்கல்வெட்டுகள் 13 - ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சடங்குகள் - மழைச்சடங்கு

ஊரில் உள்ள வயது முதிர்ந்த பெண்கள் சேர்ந்து நீர்நிலைகளில் நீராடி அம்மனை வழிபட்டுப் பின்பு ஊரில் உள்ள அனைவரின் வீடுகளுக்கும் சென்று மடிப்பிச்சை வாங்குவர்; அரிசியைப் பிச்சையாகப் பெற்று அவற்றை வைத்து கோவிலில் பொங்கல் வைத்து அம்மனுக்குப் படைப்பர். இச்சடங்கில் பெண்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

ஈரோடு மாவட்டம் உக்கரம் வட்டார வேட்டுவ இன மக்கள் மழை இல்லாக் காலத்தில் மழை வேண்டி தங்கள் வீடுகளில் இருந்து ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்து அம்மனின் மீது ஊற்றி பூசை செய்வர். அப்பொழுது மழைப்பாடல் பாடுவர்.

கல்லு இல்லாக் காட்டிலதான்
கடலைச்செடி போட்டு வச்சோம்
கடலை செடி வளர ஒரு
கனத்த மழை பெய்ய வேணும்......
பொன்னாலான பூமியில
பொன் போல விளைச்சல் வர
பொட்டு அம்மன் அருள வேண்டும்.

எனப் பாடி பெண்கள் வழிபடுவர். இவ்வாறு வழிபட்டு, பூசை செய்து முடித்து அவரவர் வீடுகளுக்குச் செல்லும் முன்பே மிகவும் கனத்த மழை பெய்தது என்பதைக் கள ஆய்வின் வழி அறிய முடிகிறது.

வேளாண்மைச் சடங்கு

பெண்களை உயிர்களைத் தோற்றுவிக்கும் சக்தியாகவும் வளமைக் குறியீடாகவும் கருதுகின்றனர். இன்றளவும் வேளாண்மை செய்பவர்கள் பயிர் நன்கு விளைய முதல் விதை பெண்கள் கையால் விதைப்பது வழக்கமாக உள்ளது. ‘‘பூப்புக் குருதி செழிப்பின் குறியீடாகக் கருதப்பட்டதன் விளைவாக புராதான சமூகத்தில் பெண் முதன்மைப் படுத்தப்படுகிறாள்.’’ (ஆறு. இராமநாதன்,வாய்மொழி மரபும் எழுத்து மரபும்,ப.159)

‘பொம்பள கையில் தான் பணம் சேரும்’, ‘ஆண் இறந்தா கடன் பாகம் பெண் இறந்தா பொன் பாகம்’ போன்ற பரவலான நாட்டுப்புற வழக்குகள் பெண்களின் சிக்கனப்பண்பை எடுத்துரைக்கின்றன. இனத்தைப் பெருக்குவனவெல்லாம் பெண்ணாகவே இருக்கக் கண்ட மக்கள் தாவர இனப்பெருக்கத்திற்குரிய நிலத்தையும் பெண்ணாகவே கருதினர். எனவே வேளாண்மை சார்ந்த சடங்குகள் பல பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் திணைப்புனக் காவலில் பெண்களே இருந்தனர். வள்ளியரைக் காவல் வைத்தால் வளர்ந்திருமாம் தெனக் கருது என்ற நாட்டுப்புற பாடலும் இக்கருத்தை மெய்ப்பிக்கின்றது.

நேர்த்திக்கடன்

தெய்வத்திடம் வேண்டிக்கொள்ளும் பல நேர்த்திக் கடன்கள் வளமைச்சடங்குடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. மாவிளக்கு எடுத்தல், முளைப்பாரி ஆகிய சடங்குகள் பெண்களால் பின்பற்றப்படுகின்றன.

மாவிளக்கு என்பது பெண் தெய்வங்களுக்குப் பெண்கள் செய்யும் வழிபாடாகும். இதில் சர்க்கரைப்பாகு கலந்த அரிசி மாவினைக் கடவுளுக்குப் படைப்பர். வேட்டுவக் கவுண்டர் மரபினரும் இவற்றைப் பின்பற்றுகின்றனர்.

முளைப்பாரி நவதானியங்களைக் கொண்டு செய்யப்படுகின்றது. திருவிழாக் காலங்களில் அம்மன் கோயில்களில் இச்சடங்கு முக்கிய இடம் பெறுகிறது. பெண்கள் மட்டுமே இச்சடங்கில் பங்கு பெறுகின்றனர். முளைப்பாரி என்பது வளமைக்குறியீடாகவும் வளமைச்சடங்கின் எச்சமாகவும் கருதப்படுகின்றது. பருவகாலங்களில் பயிரிடப்படும் விதைகளைத் தேர்வு செய்வதின் அடிப்படையில் முளைப்பாரி விழா நடத்தப்படுகின்றது. இதன் மூலம் பெண்களே விதைத்தேர்வு செய்து வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர் என்பதை உணர முடிகின்றது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட மக்களிடம் மட்டுமின்றி வேட்டைத் தொழிலில் உள்ளவர்களிடமும் வளமை நம்பிக்கை குடிகொண்டிருந்தது.” (க.கிருட்டிணசாமி,நாட்டார் வழக்காற்றியல்,ப.179)

முதன்முதலில் வேளாண்மைத் தொழிலைக் கண்டுபிடித்தவர்கள் பெண்களே என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆண்கள் வேட்டைத் தொழிலையும் பெண்கள் இயற்கையாகக் கிடைக்கும் உணவுப் பொருள்களைச் சேகரிக்கும் தொழிலையும் புரிந்தனர். தானியங்களைச் சேகரிப்பது பெண்களின் தொழிலாகையால் வேளாண்மை முறையாகப் பெண்களின் கண்டுபிடிப்பாகும். ஏர் உழவுக் காலத்தில்தான் ஆண்கள் வேளாண்மைத் தொழிலில் ஆதிக்கம் செலுத்தினர். ஆனால் வளமை என்பது பெண்களோடு தொடர்பு கொண்டது. எனவே வளம் பற்றிய மந்திரச் செயல்களில் பெண்களே முதன்மைப்படுத்தப்படுகின்றனர்.

பலியிடுதல்

சிறுதெய்வங்களுக்கு உயிர்பலியிடுதல் நாட்டுப்புற மக்களின் வழக்கமாகும். பலியிடும் போது பெண்ணை வளமைக் குறியீடாகவும், உற்பத்தி சக்தியாகவும் கருதுவதால் பெண் உயிரினங்கள் பலியிடப்படுவ தில்லை. சேவல் ஆட்டுக்கிடாய் போன்றவைகளே பலியிடப்படுகின்றன.

ஒப்பாரி

இறப்பு நிகழ்ந்த வீட்டில் இறந்தோரை இறுதியாகக் காண்பதற்கும் இறந்தவரின் குடும்பத்திலுள்ளோர்களுக்கு ஆறுதல் தெரிவிப்பதற்காகவும்

உறவினர் நண்பர்கள் ஆகியோர் வருவர். ஆறுதல் கூறவரும் பெண்கள் கட்டியணைத்து ஒப்பாரி வைக்கும் பண்பு பெண்களுக்கு மட்டுமே உரியது. ஒப்பாரிப்பாடல்களும் பெண்களால் பாடப்படுகின்றன.

முடிவுரை

வேட்டுவக் கவுண்டரினப் பெண்கள் அச்சமூகத்தில் மதித்துப் போற்றத்தக்கவர்களாக இருக்கின்றனர். சடங்குகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. பெண்கள் தானங்கள் அளிக்கும் உரிமை பெற்றிருந்தனர். வேளாண்மைத்தொழிலைப் பெண்களே மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு வேட்டுவ குலப் பெண்கள் நிலை பற்றி இக்கட்டுரையில் காண்டோம்.

துணைநூற் பட்டியல்:

இராமநாதன். ஆறு - வாய்மொழி மரபும் எழுத்து மரபும்
முணிவாசகர் பதிப்பகம்,
சென்னை-600 108,
முதற்பதிப்பு-2018

லூர்து. தே. (தொ.ஆ) க. கிருக்ஷ்ணசாமி(க.ஆ) - நாட்டார் வழக்காற்றியல்
முல்லை நிலையம்
9, பாரதி நகர் முதல் தெரு,
திநகர்,சென்னை-600017,
முதல் பதிப்பு -2011

ஆய்வேடு:சுந்தராம்பாள்.க - ஈரோடு மாவட்டக் கொங்கு வேட்டுவக் கவுண்டர்களின் பண்பாட்டு மரபுகள்,
பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம்- 636011,
பதிப்பு- 2023

வேட்டுவக் குடிகளின் பெருமைகள்

முனைவர் கி. சுமித்ரா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
மல்லுப்பட்டி, பாலக்கோடு, தருமபுரி 636 805.
அலைபேசி: 8531875814
மின்னஞ்சல்: sumithra.phd@gmail.com

வேட்டுவன் எனும் சொல் இலக்கியங்களிலும், ஆவணங்களிலும், கொங்கு வட்டாரப் பகுதியில், சமகால வழக்கிலும் நீடித்து நிற்பது அச்சொல்லின் நீண்ட வரலாற்றுப் பின்புலத்தை வெளிப்படுத்துகின்றது. சங்க இலக்கியங்களில் வேட்டுவன் எனும் சொல் புலமைத்துவத்துடன் ஆளப்பட்டுள்ளது. இக்கட்டுரை சங்ககால வேட்டுவக் குடியினரின் பல்வேறு பெயர்கள், அவர்களின் பணிகள், கல்வெட்டுச் செய்திகள், கொங்குவீர வேட்டுவரின் வரலாறு முதலான வேட்டுவக் குடிகளின் பெருமைகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

வேட்டுவன் - சொல் விளக்கம்

வேட்டுவன் எனும் சொல் வேட்டை எனும் வினையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். இங்கு வேட்டை என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. வேட்டுவன் என்ற சொல் குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் பொதுப்பெயராக வழங்கியதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழித் தெரிந்துகொள்ள முடிகின்றது. மலைக்கும் வேட்டுவனுக்குமான தொடர்பைப் பலவாறு உரைக்கின்றன சங்க இலக்கியங்கள்.

வேர்ச்சொற்கள் - வேட்டு = வேள்வி

வேட்டுவேள்வி; விரும்பி; விருப்பம்; வேட்டுவர் குடி. வேட்டு என்ற வேர்ச்சொல்லில் இருந்து வேட்டுவர் என்ற சொல் உருவானது. போரை விரும்பி (போர் வேட்டு) செய்தவர்களை வேட்டுவர் என்று அழைக்கப்பட்டது. தொல்காப்பியர் இவர்களை வேட்டுவக் குடியினர்

என்று குறிப்பிட்டுள்ளார். சங்க காலத்தில் வேட்டுவக் குடியினரை நாண் உடை மாக்கள், வேள் மாக்கள், வேந்து மாக்கள் என அழைக்கப்பட்டனர்

வேட்டம் = வேட்டை

வேட்டம் (வேட்டை) என்ற சொல் வேட்டைத் தொழிலைக் குறிக்கும் சொல். வேட்டம் என்ற வேர்ச்சொல்லில் இருந்து வேட, வேடர், வேடுவர் போன்ற சொற்கள் பிறந்த.

சங்ககால வேட்டுவக் குடியினரின் பெயர்கள்

- சங்க காலங்களில் வேட்டுவக் குடியினரை வில் எயினர், வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களில் அழைக்கப்பட்டனர்.
- வேட்டுவக் குடியைச் சேர்ந்த போர் வீரர்களை மழவர், மறவர், வயவர், கூளியர் போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டனர்.
- வேட்டுவர் என அழைக்கப்பட்டவர்களை கல்வெட்டுகளில் பூலுவர், காவலன், வேட்டுவர், மாவலியர், வேடர், வேட்டைக்காரன் போன்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். வேட்டுவர் என்ற சொல் ஒரு குடிப்பெயர்.

வேட்டுவக் குடியினரின் பணி

காவலன்

வேட்டுவக் குடியினர் குடிமக்களை களவு, கொலை, கொள்ளை போன்றவற்றில் இருந்து பாதுகாத்தனர். மேலும் ஊரையும், நாட்டையும் பாதுகாத்தனர். இதனால் வேட்டுவக் குடியினரைக் காவலன் என்று அழைக்கபட்டனர். பட்டாலி வேட்டுவக் குடியினர், கரைய வேட்டுவக் குடியினர், செம்ப (செம்பிய) வேட்டுவக் குடியினர் போன்ற வேட்டுவக் குடிகளை காவலன் என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் கூறுகின்றன.

மாவலியர்

தமிழ் மண்ணின் வட பகுதியில் வாழ்ந்த வேட்டுவக் குடியினரைப் பாணர்கள் (பாணம் (அம்பு) என்ற சொல்லில் இருந்து வந்த சொல்) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நான்குவிதப் படைகளிலும் மூர்க்கத் தனமாகப் போர்புரியும் மா வலிமை படைத்தவர்களாக இருந்தார்கள். இவர்களை மாவலியர் என்று கல்வெட்டுகளில் அழைக்கப்பட்டனர்.

பாணர்கள்

சாந்தப்படை வேட்டுவக் குடியினர், உரிமைப்படை வேட்டுவக் குடியினர், வன்னி வேட்டுவக் குடியினர், பூளை வேட்டுவக் குடியினர், புன்னை வேட்டுவக் குடியினர், வேங்கை வேட்டுவக் குடியினர் போன்ற வேட்டுவக் குடியினரைப் ‘‘பாணர்கள்’’ என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உறுதிப்படுத்துகின்றன.

வேடுவர்

வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக மான், முயல் மற்றும் பறவைகளை வேட்டையாடிப் பிடித்தனர். இதனால் வேட்டுவக் குடியினரை வேடர், வேட்டைக்காரன், வேட்டைச் சாதி அல்லது ‘‘வேடுவர்’’ என்று அழைக்கப்பட்டனர்.

பூலுவர்

பூமியை ஆளும் வேட்டுவக் குடியினம் பூலுவர் என்று அழைக்கப்பட்டது. குடுமி வேட்டுவக் குடியினர், வெள்ளை வேட்டுவக் குடியினர் போன்ற வேட்டுவக் குடிகளை பூலுவர் என்று அழைத்தனர். பொதுவர் என்ற சொல்லில் இருந்து பூலுவர் (பொதுவர்-பொலுவர்-பூலுவர்) என்ற சொல் வந்ததாக சில ஆய்வாளர்களால் கூறப்படுகின்றன. வேட்டுவக் குடியினரை காவலன், மாவலியர், பாணர், வேட்டுவர், பூலுவர் முதலான ஐந்து பெயர்களால் அழைக்கபட்டதால் புராணங்கள் வேட்டுவக் குடியில் ஐந்து சாதிகள் இருந்ததாகக் கூறப்படுகின்றன.

கொற்றவை வழிபாடு, ஆட்சி உரிமை

ஆரம்பத்தில் வெட்சிப் போரின் (ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல்) வெற்றிக் கடவுளாக, கொற்றவையை வேட்டுவக் குடியினர் வழிபட்டார்கள்.

ஆயர் குடியைச் சேர்ந்த ஆண் பெயர் ஆயர். வேட்டுவக் குடியைச் சேர்ந்த ஆண் பெயர் வேட்டுவர். ஆயரிலும், வேட்டுவரிலும் உரியவர்கள் ஆட்சி உரிமை பெற்றவர்கள் (வேட்டுவர்), ஆட்சி உரிமை பெறாதவர்கள் (ஆயர்) இருக்கிறார்கள்.

வேட்டுவர் இனத்தைப் பற்றிய கல்வெட்டுகள்

‘...அமர மயங்கற மன்னரையில் பூலுவர் காத்தூண் காணியில் நிலம் இரண்டு மாவும்...’ (S.I.I Vol.No-260, கோவை, பேரூர், கி.பி 13)

'.... பெரும்பழனில் இருக்கும் பூலுவன் மேற்செரி வெள்ளைகளில் ராசன் நிறை உடையனான தொண்டைமான் ...' (S.I.I Vol-1, No-338, கி.பி. 12, பெருமாநல்லூர்)

'...பூலுவன் சோழன் மனைக்கு வடக்கு மேற்பக்கெல்லை குடுமி சிறுவன்..' (கரூர், வேட்டமங்கலம் கல்வெட்டு, பாண்டியர், கி.பி. 13)

பூலுவ வேட்டுவ குலத்தைச் சேர்ந்த சோழன் என்பவனின் நில எல்லைகளும், குடுமி வேட்டுவக் குலத்தைச் சேர்ந்த சிறுவன் என்பவனின் நில எல்லைகளும் கூறப்பட்டுள்ளன. கொங்கு மற்றும் கோனாட்டுப் பகுதிகளில் காணப்படும் கல்வெட்டுக்களில் குடும, குடுமி என்ற சொல் குடுமி வேட்டுவக் குலத்தைக் குறிக்கும்.

முல்லைநில வேட்டுவர்

முல்லை நிலத்தை ஆண்ட வேட்டுவக் குடியினரைப் பற்றி புறப்பொருள் வெண்பாமாலை, வாகைப் படலத்தில் கூறப்பட்டுள்ளது.

"செருமுனை உடற்றும் செஞ்சுடர் நெடுவேல்
இருநிலம் காவலன் இயல்பு உரைத்தன்று"
(புறப்பொருள்.171. அரச முல்லை)

பெரும் பகையை வருத்தும் சிவந்த சோதியாற் பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய நிலத்தை (முல்லை) ஆளுகிற காவலன் (வேட்டுவன்) தன்மையைக் கூறியது.

மூதிற் பெண்டிர், மூதில் மகளிர்

வேட்டுவ குடியைச் சேர்ந்த பெண்களை (வேட்டுவச்சி) சங்ககாலம் மற்றும் காப்பிய கால இலக்கியங்களில் "மூதிற் பெண்டிர்" "மூதில் மகளிர்" என அழைக்கப்பட்டனர். மூதில் மகளிரைப் பற்றி புறநானூறு கூறுகிறது (புறம். 19/15, 279/2, 326, 333).

வேட்டுவன் - புறநானூற்றுப்பாடல்

மாற்பித்தியார் என்ற புலவர் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் 'சொல்வலை வேட்டுவன்' என்று குறித்திருக்கிறார். அப்பாடல்,

"இல் வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே!" (புறம். 252)

என அமைந்துள்ளது. இந்தப் பாடல் இவ்வகைப் பொருளைத் தருகின்றது.

வேடன் வலைவிரித்து விலங்கினைப் பிடிப்பதுபோலச் சொல்லால் வலைவீசிப் பெண்களைத் தன்வசப்படுத்துபவன் என்பதால் 'சொல்வலை வேட்டுவன்' எனப் புலவர் சுட்டியிருக்கிறார். வல்வில் வேட்டுவன் (புறம். 150), யானை வேட்டுவன் (புற. 214) போன்ற சொல்லாட்சிகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன.

வேட்டுவரின் வழக்கங்கள்

வேட்டுவர்களிடமிருந்த அரிய வழக்கங்கள் பற்றிய பதிவுகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிட்ட சில வழங்கங்கள் தற்கால வழக்கிலும் இருக்கின்றன.

காட்டிலுள்ள விலங்குகள் ஊருக்குள் வந்து உயிர், பயிர்களைச் சேதப்படுத்துவதைத் தடுத்துக் காப்பதற்கு விலங்கினைப் பழக்கப்படுத்தி வைத்திருக்கக்கூடிய வழக்கம் மிகப் பழமையானது. இது மிருகத்தினை வைத்தே தாக்கவரும் மிருகங்களைத் தடுத்துக் காத்துக்கொள்ளும் வகையில் மனித சமூகம் ஏற்படுத்திக் கொண்ட தற்காப்பு உத்தி முறையாக நெடுநாட்களாக இருந்து வருகின்றது.

தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கு மட்டுமின்றி மிருகங்களைப் பிடிப்பதற்கும் மிருகத்தைப் பழக்கப்படுத்திப் பயன்படுத்திக் கொள்கின்ற வழக்கம் மனித இனத்திற்கு இருந்திருக்கிறது. இவ்வழக்கம் தற்காலத்திலும் வழக்கிலிருப்பதைக் கள ஆய்வுகளின் வழியாகக் கண்டுணர முடியும். தமிழ்ச் சமூகத்தில் நெடுங்காலமாக இவ்வழக்கம் இருந்துவருவதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது.

காடை, கௌதாரிகளைப் பிடிக்கக் கருதும் வேட்டைக்காரர்கள் கண்ணியை வைத்துவிட்டுச் சற்றுத் தொலைவிலிருந்து காடை, கௌதாரியைப் போன்றே சீழ்க்கை செய்து அழைத்து அவைகளைப் பிடிக்க முயற்சிப்பதுண்டு. இனப் பறவைகள் அழைப்பதாக நம்பி வந்து கண்ணியில் மாட்டிக் கொள்ளும். பறவை இனங்களைப் பிடிக்கும் வேட்டைச் சமூகம் பின்பற்றுகின்ற இந்த வழக்கம் மிருகங்களைப் பிடிக்கும் வழக்கத்திற்கு இணையானதாகக் கருதத்தக்கது.

கொங்குவீர வேட்டுவர்

கொங்கு வீரப் பெருங்குடியினரான வேட்டுவரிடையே பல குலங்கள் (கூட்டப் பிரிவுகள்) ஏற்பட்டன. இவை எத்தனை என்பதை நாம்

அறுதியிட்டு உறுதியாகக் கூற இயலாது. எனவேதான் வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழியும் ஏற்பட்டுள்ளது. நடுகற்கள், கல்வெட்டுகள், செப்பெடுகள், ஓலைச்சுவடிகள், இலக்கியம், சோழர் பூர்வ பட்டயம், சங்க இலக்கியங்கள் ஆகியவை மூலம் அறியப்படுகின்ற குலங்களின் பெயர்கள் இருக்கின்றன.

வேட்டுவர்கள் குலப்பிரிவுகள் அடிப்படையிலும் பல பகுதியாக பிரிந்து வாழ்ந்தனர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடிபெயர்ந்தனரோ அந்த மன்னனின் (ஊரின்) பெயரைத் தமது குலத்திற்கு (கூட்டம்) வைத்துக் கொண்டனர். பலர், கொடை, வீரம், மாண்பு, விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடி, சங்க காலத் தலைவர்கள், பெண்பாற் புலவர்கள், நிலப் பெயர்கள், கடவுள் பெயர்கள், பொருள் பெயர்கள் ஆகியவற்றியையும் தமது குலப்பிரிவுகளாகக் கொண்டனர்.

வேட்டுவர் - புறமண, அகமண முறை

இன குழுவுக்குள் சகோதர உறவுடைய ஒரே கூட்டத்தைச் சார்ந்தவர்கள் தம் கூட்டத்தைச் சார்ந்த பெண்ணைத் தம் சகோதரியாகக் கருதி மண உறவு கொள்வதைத் தவிர்த்து, புறக் கூட்டத்தில் இருந்து பெண் கொண்டனர். இதுவே புறமண முறையாகும். அந்நியரான பிற இன குழுக்களோடு மண உறவு கொள்வதைத் தவிர்த்து தம்மினக் குழுவிற்கு உள்ளாகவே மண உறவு கொண்டனர். இதுவே அகமண முறையாகும்.

காடை, அண்ட வேட்டுவ குலத்தின் பிரிவுகள்

காடை வேட்டுவ குலம் பிளவுபட்டு சிவகாடை வேட்டுவ குலம், குறுங்காடை வேட்டுவ குலம், சாகாடை வேட்டுவ குலம் போன்ற வேட்டுவ குலங்கள் தோன்றி இருக்கின்றன.

அண்ட வேட்டுவ குலம் பிளவுபட்டு அண்டவாணி வேட்டுவ குலம், கரு அண்ட வேட்டுவ குலம் போன்ற வேட்டுவ குலங்கள் தோன்றி இருக்கின்றன.

பண்ண வேட்டுவகுலம்

பண்ண வேட்டுவ குலத்தின் குலதெய்வம் பண்ணை அம்மன் (ஏலூர், நாமக்கல்) ஆகும். இன்று பண்ண வேட்டுவ குலத்தினர், கரடி வேட்டுவ குலத்தோடு இணைந்து விட்டார்கள். இதுபோல பல வேட்டுவ குலங்கள் இருக்கின்றன.

கடவுள் பெயர்தாங்கிய வேட்டுவ குலங்கள்

தேவேந்திர வேட்டுவ குலமும், பள்ளர் சாதியும் ஒரே சாதி கிடையாது. பெருமாள் வேட்டுவ குலம், குமரன் வேட்டுவ குலம், சுப்பரமணி வேட்டுவ குலம், முட்டை வேட்டுவ குலம், மாகாளி வேட்டுவ குலம், மோக்காளி வேட்டுவ குலம், முடகாளி வேட்டுவ குலம் போன்ற வேட்டுவ குலத்தவர்கள் கடவுள் பெயரைத் தமது கூட்டத்திற்கு வைத்து கொண்டனர்.

இசைக்கருவி, நிலம், கரை, கள்ளின் பெயர்தாங்கிய வேட்டுவகுலம்

பறை-இசைகருவி பெயர். இசைக்கருவிப் பெயரைக் கூட்டப் பெயராக வைத்து கொண்டவர்கள்தான் பறை வேட்டுவ குலம். பறை வேட்டுவ குலமும், பறையர் சாதியும் ஒரே சாதி கிடையாது.

பள்ளம்-சம நிலத்தில் இருக்கும் தாழ்ந்த நிலம். நிலத்தின் பெயரை வைத்து கொண்டவர்கள்தான் பள்ள வேட்டுவ குலம், பள்ள வேட்டுவ குலமும், பள்ளர் சாதியும் ஒரே சாதி கிடையாது.

கரைய-காவேரி ஆற்றின் கரை பெயர். இந்தக் காவேரி ஆற்றங்கரைப் பெயரைக் கூட்டப் பெயராகக் கொண்டவர்கள் கரைய வேட்டுவ குலம். இந்தக் கரைய வேட்டுவ குலம் மேலைக் கரைய வேட்டுவ குலம் மற்றும் கீழைக் கரைய வேட்டுவ குலம் என்று பிரிந்து இருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். கரைய வேட்டுவ குலமும், மீன் பிடிக்கும் சாதியும் ஒரே சாதி கிடையாது.

கள்ளை(கள்ள)-கள் என்று பொருள். கள்ளை என்ற பெயரைக் கூட்டப் பெயராக வைத்துக் கொண்டவர்கள் கள்ளை வேட்டுவ குலம். கள்ளை வேட்டுவ குலமும், கள்ளர் சாதியும் ஒரே சாதி கிடையாது.

பார்வை வேட்டுவன்

பழந்தமிழகத்தில், மிருகங்களைப் பிடிப்பதற்குப் பழக்கிய விலங்கினைப் பார்வை மிருகம் என்று அழைத்துள்ளனர். இதுபோன்று பார்வைப் புள் (புள் - பறவை) என்பது பறவை இனத்தைச் சுட்டியிருக் கின்றது. நற்றிணையில் உள்ள குடவாயிற் கீரத்தனார் எனும் புலவர் பாடிய பாடலில் பார்வைப் புள் பற்றிய குறிப்பு வருகின்றது.

"பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ,
நெடுங்கால் கணந்துள்அம் புலம்பு கொள் தெள்விளி"

(நற்றிணை. 212)

இந்தப் பாடலில், தோழி நீ நெடுங்காலம் வாழ்வாயாக! பறவைகளைப் பிடிக்கக் கருதிய வேட்டுவன் பார்வைப் பறவையை வைத்தமைத்த வலையை வீசுவான். கொடிய வலையைக் கண்ட நெடிய கால்களைக் கொண்ட கணந்துள் பறவை அச்சம் கொண்டு தன் துணையை அழைக்கக் கூவும் என்று கூறுவதில் பார்வை வேட்டுவன் என்ற பிரிவு இருந்தது தெரிகின்றது.

மேற்கண்ட பாடலில் வரும் பார்வை என்பது கைப்புள் (வளர்க்கப் பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட பறவை) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. வேட்டுவன் என்றால் வேட்டைக்குச் செல்பவன். பழக்கப்படுத்தப்பட்ட பறவையைக் கொண்டு பிற பறவைகளை வரச்செய்து, வலைக்குள் அவை வந்து அகப்பட்டுக்கொள்ள, அவற்றை எளிதாகப் பிடிப்பது வேட்டையாடுவோர் கொள்ளும் மரபு என்பது தெரிகின்றது.

முடிவுரை

வேட்டுவர்கள் கொங்கு நாட்டின் பூர்விகக் குடிமக்கள். வேட்டுவர் குலத்தவர்கள் போர்த் தொழிலோடு வேட்டையாடுதலைச் செய்தனர். இதனால் வேடர் என அழைக்கப்பட்டனர். வேட்டுவன் என்ற சொல் குறிஞ்சி நிலத்து ஆடவனைக் குறிக்கும் பொதுப்பெயராக வழங்கியுள்ளது. வேட்டு என்ற வேர்ச்சொல்லில் இருந்து வேட்டுவர் என்ற சொல் உருவானது. வேட்டம் என்ற வேர்ச்சொல்லில் இருந்து வேட, வேடர், வேடுவர் போன்ற சொற்கள் பிறந்தது. வேட்டுவர் என அழைக்கப் பட்டவர்களைக் கல்வெட்டுகளில் பூலுவர் (பூமியை ஆள்பவர்), காவலன் (நாட்டை பாதுகாப்பவர்), மாவலியர் (போர்புரிபவர்), வேட்டுவர், வேடர் (வேட்டையாடுபவர்), வேட்டைக்காரன் போன்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். கொற்றவையை வேட்டுவக் குடியினர் வழிபட்டார்கள். வேட்டுவக் குடியைச் சேர்ந்த பெண்கள் (வேட்டுவச்சி) சங்ககாலம் மற்றும் காப்பிய கால இலக்கியங்களில் "மூதிற் பெண்டிர்" "மூதில் மகளிர்" என அழைக்கப்பட்டனர்.

கொங்கு வீர பெருங்குடியினரான வேட்டுவரிடையே பல குலங்கள் ஏற்பட்டன. இவை எத்தனை என்பதை நாம் அறுதியிட்டு உறுதியாகக்

கூற இயலாது. வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி மூலம் வேட்டுவச் சமுதாயத்தின் பெருமைகளை அறிய முடிகின்றது.

துணைநின்ற நூல்கள் :

1. புறப்பொருள் வெண்பாமாலை, ச. திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
2. தொல்காப்பியம், ச. திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், திருவையாறு.
3. நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
5. தென்னிந்திய குலங்களும் குடிகளும், க. ரத்னம் (தமிழாக்கம்), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. http://vettuvarthehuntershistory.blogspot.com
7. https://tamildigitallibrary.in

சங்க இலக்கியங்களில் வேட்டுவர்கள்

மு.செல்வி
தமிழ்த்துறை,
உதவிப்பேராசிரியர்,
மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி),
காளிப்பட்டி.

தொல் இனக்குழுச் சமூகங்களைக் கட்டமைப்பதற்கு ஆதாரமாக இருப்பது சங்க இலக்கியம். வேடர் முதல் வேந்தன் வரையிலான ஒரு சமூகப் படிநிலைகளின் வளர்ச்சியைச் சங்க காலத்தில் பார்க்க முடியும். அதற்கான தரவுகள் பாட்டும் தொகையுமான சங்க இலக்கியத்தில் உள்ளன. அகப்பாடல்களும் புறப்பாடல்களும் வேட்டுவர்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றன. வேட்டுவர் குடியின் வாழ்க்கை முறையை ஆராய்வதன் வழி தமிழ்ச் சமூகத்தின் தொன்மையை உணரலாம்.

வேட்டுவர்கள் இயற்கையின் படைப்பாக இருந்த காட்டு விலங்குகளை வில் - அம்பு கொண்டு வேட்டையாடி உணவாகக் கொண்டனர். வேட்டை உணவைப் பாதுகாத்து வைக்காமல் உபரியைப் பகிர்ந்து கொண்டனர்; எஞ்சியவைகளைக் கள்ளுக்கு விலையாகக் கொடுத்து உண்டு களித்தனர். இவர்கள் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதுடன் நிற்கவில்லை நாட்டினுள் புகுந்து ஆயர்களின் உடைமைப் பொருளாக இருந்த பசுக்களையும் காளைகளையும் வேட்டையாடினர். இதை ஆநிரை கவர்தல் என இலக்கியங்கள் சுட்டுகின்றன. காட்டுப்பகுதியில் வேட்டை விலங்குகள் கிட்டாத சமயத்தில் அவ்வழியே பயணம் செய்யும் வணிகர் வழிப்போக்கர்களிடமிருந்து பொருள்களை அபகரித்தனர். இவ்வாறு உடமைப் பொருள்கள் வேட்டுவர்களின் வேட்டைக்குரிய இலக்குகள் ஆயின.

இரவு நேரங்களில் வேட்டைக்குச் சென்றனர் ஆநிரைகளைக் கவர்ந்தனர், பகலில் ஓய்வு எடுத்தனர், விவசாயம் செய்தனர். வேட்டைபாதி விவசாயம் பாதி எனத் தங்கள் வாழ்க்கை முறைகளைக் கட்டமைத்தனர். போர் வீரர்களாகவும் குறுநிலத் தலைவர்களாகவும்

சமூகத் தளத்தில் உயர்வு பெற்றனர். ஆநிரை கவர்தலில் வெற்றி வீரராகத் திகழ்ந்துள்ளனர். வெச்சி - கரந்தைப் போரில் மரணம் அடைந்த வீரனுக்கு வேட்டுவனுக்கு நடுகல் எடுத்து வழிபாடு செய்துள்ளனர். முதன்முதல் நடுகல் வழிபாடு வேட்டுவர்களிடமிருந்து தோற்றம் பெற்று இருக்கின்றது. இவ்வாறாக அக, புறப் பாடல்கள் வேட்டுவக்குடி மரபினைப் பதிவு செய்து சென்றுள்ளன. வேட்டுவர் குறித்த பதிவுகள் இவ்வாறு இருக்க சங்க இலக்கியங்களில் வேட்டுவர் குடி குறித்த பதிவுகள் இங்கு தொகுத்தாராயப்படுகின்றன.

வேட்டுவர் சொல் பொருள் விளக்கம்

வேட்டையாடும் தொழிலைப் பிரதானமாகக் கொண்டு வாழும் இனக்குழு மக்களை வேட்டுவர் என்ற பொது சொல்லால் குறிப்பர். வேடர், மழவர், மல்லர், கள்வர், மறவர், எயினர், வடுவர் என பல பெயர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆனாலும் வேட்டுவர் என்ற சொல்லே இவ்வினக் குழுவைக் குறிக்கும் பொதுச் சொல்லாகும். குடியைக் குறித்து வரும் பல்வேறு விதமான சொற்றொடர்கள் சங்க இலக்கியப் பிரதியினுள் உள்ளன.

கள்வர், வன்கண் ஆடவர், கொடுஞ்சிலை மறவர்,
துவர்செய் ஆடைச் செந்தொடை மறவர் 1 (நற்.33)

அந்தகக் கள்வர், மழவர், மறவர், வேட்டைக் கள்வர்,
கொடுவில் எயினர் 2 (அகம்.79)

கொடுநோக்கு ஆடவர், கொடுவில் எயினர் 3 (குறு.12)

வலைவர்....4 (கலி.54)

இவ்வாறு காணப்படும் சொற்களும் தொடர்களும் வேட்டுவர்களின் பண்பினை மையமாகக் கொண்டே உருபெற்றுள்ளன.

வேட்டுவர்களின் வாழ்விடம்

சங்ககால வேட்டுவர்கள் காடு, மலை, சிற்றூர் போன்ற இடங்களைத் தெரிவு செய்து அங்கு குடிசைகளை அமைத்து வாழ்ந்துள்ளனர். இவ்விடங்களைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் தாம் செய்யும் தொழிலுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதினர். வேட்டையாடி உணவு சேகரித்தல் வழிப்பறி செய்தல் முதலியவற்றைப் பிரதான தொழிலாகச் செய்தனர். வேட்டையாடி விலங்குகளின் இறைச்சியை

தனியே உண்ணவில்லை; தாங்கள் சேர்ந்து வாழும் இனக்குழுவின் குடியிருப்புகளுக்கு அப்பொருள்களை எடுத்துச் சென்றனர் அங்கு குடும்பமாக அமர்ந்து பகிர்ந்துண்ணல் முறையில் அனைவரும் உண்டு மகிழ்ந்தனர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தொல் இனக் குழுவிடமிருந்து பகிர்ந்துண்ணல் மரபு இன்றும் நம்மிடையே இருந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

மலையும் மலை சார்ந்த இடமும் ஆகிய குறிஞ்சி நிலத்தில் தினை முதலிய பயிர்களைத் தின்னவரும் யானை, பன்றி முதலிய விலங்குகளையும் கிளி முதலிய பறவைகளையும் விரட்டுவதற்காகக் கானவர் உயர்ந்த மரக்கிளைகளில் பரண் கட்டினர்.

குறிஞ்சி நிலத்தில் வேட்டுவர்களின் குடில் மிகத் தாழ்வான சிறிய குடில்களைக் கட்டி அதன்மேல் தினைத்தாளையும், ஐவன நெல்லின் தாளையும் புற்களையும் கூரையாக வேய்ந்துள்ளனர்.

தினைக்கதிர்களை அரிந்துவிட்ட பிறகு கிடைக்கும் தாள்களைக் கொண்டு கூரையாகத் தங்கள் குடிலின்மேல் வேய்கின்றனர். இக்குடில்கள் சிறிய கால்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்பதனை,

இறுவி வேய்ந்த குறுங்காற் குரம்பை
பிணையேர் நோக்கின் மனையோற் மருப்பத்
தேம்பிழி தேறல் மாந்தி மகிழ் சிறந்து.5 (குறி.153-55)

என்ற பாடலில் குறிஞ்சிநில மக்களின் வாழ்க்கை நிலையும் அவர்கள் குடியிருந்த குடிலினையும் அறிய முடிகிறது.

இதைப் போன்று குறிஞ்சிநில மக்கள் வீட்டில் வளர்க்க பெரும் விலங்கு, பறவைகளுக்கும்கூட குடில்களை அமைத்துள்ளனர். தினைப்புனத்தே யானை தின்னாமல் காவல் செய்வோர் இதன் மேல் கட்டின குடிலை ஒப்பச் சிறிதாகக் கட்டப்பட்ட கோழி சேக்கும் கூடு என்பதனை,

வேழம் காவலர் குரம்பை ஏய்ப்பக்
கோழி சேக்கும் கூட்டுடைப் புதவின் 6 (பெரும்.51-52)

என்ற கோழிக்காக கட்டப்பெற்ற கூட்டினை இவ்வரிகள் மூலம் அறியலாம். கழிகளை நட்டுப் புல்லால் வேந்த குடில்களில் சவ்வாது மலை மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது மலைபடுகடாம் மூலம் அறியலாம்,

அகலுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெருகுவீர் .7 (மலைப.438-9)

வேட்டுவர்களின் உடை

மக்கள் பண்டைய காலத்தில் முதல் முதலில் ஆடை இன்றி இருந்தார்கள் பின்பு காலப்போக்கில் தலைகளையும் மரப் பட்டை களையும் உடைகளாக உடுக்கத் தொடங்கினார்கள். விலங்குகளின் தோள்களையும் பயன்படுத்தினார்கள். நெசவுத்தொழிலைக் கண்டறிந்த பின்பே பருத்தி ஆடைகளையும் பட்டாடைகளையும் நெய்யத் தொடங்கினார்கள். மக்களது அறிவு வளர வளர வசதிகள் பெருக பெருக அவர்களுடைய வாழ்க்கை வீடு முதலிய பலவற்றிலும் உயர்ந்தது போலவே உடைவகையிலும் உயரலாயிற்று.

வேட்டுவமகள் மராமரக் கொத்துகளை நடுவே வைத்து, இலையையுடைய ஒளிய பூங்கொத்துக்கள் சுற்றிலும் வைத்துத் தொடுத்த பெரிய அழகிய தலையுடைய ஆடையை உடுத்தினாள்,

செங்கால் மரா அத்த வால்இணர், இடை இடுபு
சுரும்பு உணத் தொடுத்த பெருந்தன் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ...10 (திருமுரு.201-203)

குறிஞ்சிநிலத் தலைமகன் நுண்ணிய வேலைப்பாடமைந்த கச்சையைக் கட்டி இருந்தான்,

நுண்வினைக் கச்சைத் தயக்குஅறக் கட்டி
இயல் அணிப் பொலிந்த ஈகை வான்கழல்...11 (குறி.125)

முடிவுரை

தொல் இனக்குழுச் சமூகத்தில் முதன்மைக் குடியாக வாழ்ந்தவர்கள் வேட்டுவர்களே ஆவார். இவர்கள் வேட்டுவர்கள் வாழ்ந்த நிலப் பகுதியின் தன்மையும், நீரில்லா நிலையையும் குறித்த பதிவுகள் காணப்படுகின்றன. கிடைக்கக்கூடிய பொருட்களை ஊர்ப்பொது மன்றத்திற்குக் கொண்டு வந்து அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். இலை, தழைகளை ஆடையாக அணிந்தார்கள். வேலைப்பாடமைந்த நுண்ணிய கச்சாடைகளையும் அணிந்துள்ளனர். இது போன்று வேட்டுவர்களின் உணவு, உடை, உறைவிடம் ஆகிவற்றை எவ்வாறு பெற்றனர் என்பதைப் புலப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

துணைநூற் பட்டியல்:

1. நற்றிணை
2. அகநானூறு
3. குறுந்தொகை
4. கலித்தொகை
5. பெரும்பாணாற்றுப்படை
6. குறிஞ்சிப்பாட்டு
7. மலைபடுகடாம்
8. திருமுருகாற்றுப்படை

சங்க இலக்கியங்களில் வேட்டுவர்

சொல்லாக்கியன்
கனடா.
dheena.subramanian@gmail.com

முன்னுரை:

சங்க இலக்கியங்களுக்கு எல்லாம் அடித்தளமான தொல்காப்பியத்தில், ஒரே இடத்தில் மட்டும், ‘‘வேட்டுவர்’’ எனும் சொல் பயின்று வருகின்றது. ‘‘ஆயர் வேட்டுவர் ஆடூஉ திணை பெயர்’’- (தொல்காப்பியம், பொருள் அதிகாரம், அகத்திணையியல் நூற்பா 21/1). ஆயர், வேட்டுவர் என இரண்டும் ஆண்திணைப் பெயர்கள், அதாவது ஆண்பால் பெயர்கள்.

‘‘ஆயர்’’ என்பார், ஆ + அர். மாடு + பலர்பால் விகுதி. மாடுகளைக் கொண்டவர், நிரைமேய்ப்பார். ‘‘வேட்டுவர்’’ என்பவர், வேட்டு + அர். வெடி / சத்தம் + பலர்பால் விகுதி.மிகுந்த சத்தம் எழுப்பி, வேட்டைத் தொழில் செய்வார். சிங்கம், புலி, சிறுத்தை போன்ற வனவிலங்குகளைத் துரத்தவும் கொல்லவும், மான், எருமை, பன்றி போன்றவற்றைப் பிடிக்கவும் செய்பவர், வேட்டுவர். எனவே, பல நடுகற்களுக்கும் குத்திக்கற்களுக்கும் உரியவர்கள் வேட்டுவராய் இருக்கலாம். வேட்டுவர், ‘‘எயினர்’’ என்னும் குலப்பெயருடையார் மேல் தொழிற்பெயராகி வந்தது. ஆயர், வேட்டுவர் என இருவரும் முதன்மையாக முல்லைத்திணை மக்களாம்.

எயினர் = எய் + இன் + அர். வீசு + அதன் எனும் பொருள் கொள்ளும் சாரியை + பலர்பால் விகுதி. அம்பு, வேல், ஈட்டி, வலை போன்றவற்றை எய்து, பறவைகள் மற்றும் விலங்குகளைப் பிடிப்பவர்கள், எயினர்.

சங்க இலக்கியங்களில் வேட்டுவர்

சங்க இலக்கியங்கள் எனப்படும் பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகையில், ‘‘வேட்டுவ’’ எனும் சொல் ஒரு முறையும், வேட்டுவர்

எனும் சொல் ஏழு முறையும், "வேட்டுவன்" எனும் சொல் பதின்மூன்று முறையும் வருகின்றன.

1.வேட்டுவ:

"மான் கணம் தொலைச்சிய கடு விசைக் கத நாய்
நோன் சிலை வேட்டுவ நோயிலை ஆகுக."
(புறநானூறு 205.9. பாடியவர்: பெருந்தலைச் சாத்தனார்.
பாடப்பட்டோன்: கடிய நெடுவேட்டுவன்).

மான் கணம் மான் கூட்டம். தொலைச்சிய துரத்திய. கடுவிசை மிகுவேகமாக. கத நாய் ஓடும் நாய். நோன் அசையாத. சிலை வில். வேட்டுவ வேட்டுவனே. நோயிலை துன்பமில்லாமல். ஆகுக இருப்பாயாக.

பொருள்: மான்கூட்டத்தைத் துரத்தும் மிகுவேகமாக ஓடும் நாயைக் கொண்ட, வில்லின் குறி தவறாத வேட்டுவனே, துன்பமில்லாமல் இருப்பாயாக.

இப்பாட்டின் வழி, நாம் அறியும் செய்திகள்:

காட்டு வழிமறிக்கும் மற்றும் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் மான்களைத் துரத்தும் பணிகளிலும் வேட்டுவர் ஈடுபட்டிருந்தனர். (ii) மிக வேகமாக ஓடும் நாய்கள் அவர்களிடம் இருந்துள்ளன. (iii) மான் அல்லாத காட்டெருமை போன்ற பிற விலங்குகளையும் அவர்கள் காட்டுக்குள் துரத்தி இருக்கலாம். (iv) அவர்கள், குறுநில மன்னர்களாக வாழ்ந்துள்ளனர். (v) வள்ளல்தன்மையுடன் இருந்துள்ளனர்.

2. வேட்டுவர்:

(அ) நிரை திமில் வேட்டுவர் கரை சேர் கம்பலை
(மதுரைக்காஞ்சி 116). நிரை வரிசை. திமில் கட்டுமரப்படகு.
வேட்டுவர் மீன்பிடிப்பவர். கம்பலை இரைச்சல்.

பொருள்: வரிசையாக வருகின்ற படகின் மீன்பிடிப்போர் கரையில் இறங்கும் ஓசையும்...

மீன்பிடிப்போரும் வேட்டுவர் எனப்பட்டுள்ளனர்.

(ஆ) காந்தள் அம் கண்ணி கொலை வில் வேட்டுவர்
செம் கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதன் உடை வேழத்து வெண் கோடு கொண்டு
(பதிற்றுப்பத்து 30.9-11)

பொருள்: காந்தள் மாலை அணிந்த, கொல்லும் வில்லைக் கொண்ட வேட்டுவர், செம்மையான கொம்பினையுடைய காட்டுப்பசுவின் இறைச்சியோடு, காட்டிலுள்ள வலிமையான யானைகளின் வெண்மையான தந்தங்களையும் எடுத்துக்கொண்டு...

இறைச்சிக்காக, காட்டுப்பசுவையும், தந்தத்திற்காக யானைகளையும் வேட்டையாடி உள்ளனர், வேட்டுவர்.

(இ) வெள் வாய் வேட்டுவர் வீழ் துணை மகாஅர். (புறம் 324.3).

வெள்வாய் வெளுத்த வாய். வீழ் துணை மனைவி. மகா அர் மகன், மகள்கள். பொருள்: வெளுத்த வாயைக் கொண்ட வேட்டுவர், தம் மனைவி மக்களுடனும்.. வேட்டுவர், தம் மனைவி மக்களுடனும் வேட்டைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

3. வேட்டுவன்:

(அ) உடும்பு கொலீஇ வரி நுணல் அகழ்ந்து

நெடும் கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
எல்லு முயல் எறிந்த வேட்டுவன்
(நற்றிணை.முல்லை.கபிலர் 59.1-3).

பொருள்: உடும்பைக் கொன்று எடுத்துக்கொண்டு, வரிகளையுடைய தேரையை மணலைத் தோண்டி எடுத்துக்கொண்டு, உயர்ந்த உச்சிகளையுடைய புற்றில் இருக்கும் ஈசலையும் கிளறித் தாழியில் பிடித்துக்கொண்டு, பகல்நேரத்து முயலை தடியால் எறிந்து பிடித்துக்கொண்டுவரும் வேட்டுவன்...

உடும்பு, தேரை, ஈசல், முயல் போன்றவைகளும், வேட்டுவரின் வேட்டைப் பொருள்கள்.

(ஆ) பார்வை வேட்டுவன் படு வலை வெரீஇ

நெடும் கால் கணந்துள் அம் புலம்பு கொள் தெள் விளி
(நற்றிணை. பாலை.குடவாயில் கீரத்தனார் 212.1-2)

பார்வை புதிய பறவைகளை ஏமாற்ற வைக்கும் பழக்கிய பறவை. வெரீஇ அஞ்சி. புலம்பு கத்து. விளி அழைப்பு.

பொருள்: பழக்கிய பறவைகளைக்கொண்டு, வேடன் சிக்கவைக்க விரித்திருக்கும் வலையைக் கண்டு அஞ்சி, நீண்ட கால்களையுடைய கணந்துள் பறவை தனித்துக் கத்தும் தெளிந்த அழைப்பு.

பறவைகளை வைத்துப் பறவைகளைப் பிடித்தல், ஒரு வேட்டை நுட்பம்.

(இ) முருகு முரண்கொள்ளும் தேம் பாய் கண்ணிப்
பரியல் நாயொடு பன் மலைப் படரும்
வேட்டுவன் பெறலொடு அமைந்தனை யாழ.
(அகம். குறிஞ்சி. பாண்டியன் அறிவுடைநம்பி. 28.8)

பொருள்: பலவகையான மணங்களும் கமழும் தேன் ஒழுகும் தலைமாலையை உடைய, விரைந்து ஓடும் வேட்டை நாயுடன் பல மலைகளையும் கடந்து செல்லும்வேட்டைக்காரனைப் பெறுவது ஒன்றே போதுமென்று இருக்கிறாய்!

குறிஞ்சித் தலைவிக்கு குறிஞ்சித் தலைவனாக உள்ளவன், வேட்டுவன்.

(ஈ) இரும் புலி வேட்டுவன் பொறி அறிந்து மாட்டிய...
(புறநானூறு. பாடியவர் : குடபுலவியனார். பாடப்பட்டோர்:
தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன்
நெடுஞ்செழியன்.19/5).

பொருள்: பெரிய புலியைப் பிடிப்பதற்காக வேட்டுவன் எந்திரம் அறிந்து மாட்டிவைத்த

விலங்குகளுக்கேற்ற பல்வகை எந்திரங்களை உருவாக்கும் திறனைப் பெற்றிருந்தனர், வேட்டுவர். மேலே உள்ள சான்றுகளில் வரும் செய்திகளே மீண்டும் பயில்வதால், பிற பாடல்கள் எடுத்தாளப்பட வில்லை.

முடிவுரை

இவ்வாறாக, வேட்டுவரின் வாழ்க்கை பல திணைகளில் நிகழ்ந்து வந்துள்ளது. அவர்கள் பன்முகத் திறன்கள் பெற்றிருந்தனர். தமிழ் நிலங்களின் வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் பெரும்பணியாற்றி உள்ளனர். குறிப்பாக, புலிக்குத்திக் கற்கள், வேட்டுவரையே சாரும்.

உதவியவை:

1. முனைவர். ப. பாண்டியராஜாவின் தமிழ் இலக்கியத் தொடரடைவு, http://tamilconcordance.in/concordance_list-B.html

2. சொல்லாக்கியம், சொல்லாக்கியன், கழக வெளியீடு.

வேட்டுவக் கவுண்டர்களின் புழங்கு பொருள்கள்

நெறியாளர்:
முனைவர் ம.சுந்தர மூர்த்தி,
தமிழ்த்துறை, பேரசிரியர்,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11.
ர.தமிழ் தானூ
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம் -11.

ஆய்வுச் சுருக்கம்

காடுகளிலும் மலைகளிலும் வாழும் மக்கள் தங்களுக்கென்று எந்த ஒரு வசதியும் இன்றிகுகைகளிலும், மரங்களின் அடியிலும் வாழ்ந்து வந்தனர்.இவர்கள் ஒரு காலகட்டத்திற்குப்பின் நிலங்களை உழுது வேளாண்மை செய்ய கற்றுக் கொண்டனர். அப்படி இந்த வேட்டுவக் கவுண்டர்கள் வேட்டையாடியும் வேளாண்மை செய்தும் வாழ்ந்து வந்தனர். அவர்களின் வாழ்க்கையில் பயன்படுத்தியபழமையான பொருட்களைப் புழங்கு பொருட்கள் எனலாம். அவற்றைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம்.

முன்னுரை

வேட்டுவக் கவுண்டர்கள் என்பவர்கள் காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்தனர்.அவர்கள் வேட்டையாடுதலேதொழிலாகக் கொண்டிருந்தனர். அதன்பின்வேளாண்மை செய்யகற்றுக் கொண்டனர்.இவர்களின் வில்லாற்றலால் கொங்கு நாட்டில் மன்னர்களின் கீழ் படைத்தலைவர் களாகப் பணியாற்றினார்.வேட்டுவக் கவுண்டர்களில் பல வகையான குலங்கள் அல்லது கூட்டங்கள் உள்ளன.வேட்டுவக் கவுண்டர்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்கள் இதில் கூறப்பட்டுள்ளன.

வேட்டுவர்

வேட்டையாடுதலே முதன்மைத் தொழிலாக இருப்பினும் கொங்கு நாட்டின் பல பகுதிகளில் மன்னர்களாகவும் ஆட்சியாளர்களாகவும் படைத்தலைவர்களாகவும் விளங்கியதற்குப் பல சான்றுகள் உள்ளன. வில் ஆற்றலில் சிறந்த வேட்டுவர்கள் அரசர்களின் படைகளில் படைவீரர்களாக, போர் செய்த செய்திகள் உள்ளன. இதை கொங்கு தேச ராசாக்கள் எனும் நூல் ராஜவேடர்கள் என்று கூறுகிறது.

சங்க கால முதல் மலையும் காடும்சார்ந்த சூழலில் வாழ்ந்தவர்களாக வேட்டுவர் கருதப்படுகின்றனர். அப்பகுதிகளில் வசித்ததால் வேட்டையாடுதலைத் தொழிலாக மேற்கொண்டனர். அதனால் வேட்டுவர் எனப்பெயர் பெற்றனர். இவர்கள் காடுகளில் வாழ்ந்ததன் காரணமாக வேளாண்மையும் செய்து வந்தனர். இவர்களைப் பற்றி பல்வேறு கருத்துகள் உள்ளன. வேட்டுவர்களிடம் பலகுலப் பிரிவுகள் இருந்துள்ளன. உணவு தேடிச் செல்லும்போது அங்கு வசிக்கும் மக்களிடையே குலவகை அறிந்து முறை கொண்டாடியுள்ளனர் என்ற செய்திகள் உள்ளன. அதேபோன்று ஒரே குலம் அல்லது கூட்டத்தைச் சார்ந்த ஆண்கள் பெண்கள் சகோதர சகோதரிகள் என்ற உறவு முறையில் அழைக்கப்பட்டுள்ளனர். வேறுகுலங்களைச் சார்ந்தவர்களிடமே திருமணம் செய்துள்ளனர்.

கவுண்டர்

ஒரு ஊரின் தலைவராக விளங்கி வரிவசூல் செய்து அரசர்களுக்குக் கொடுப்பவர்களை அவ்வரசர்கள் காமிண்டர்கள் என அழைத்துள்ளனர். இது காலப்போக்கில் பல்வேறு மாற்றம் பெற்றது. காமிண்ட– காமுண்ட என்றும், அதன் பின் காவண்ட - கவுண்ட என்றும் அதன் பின் கவண்ட் - கவுண்டர் என மாறியுள்ளது. இப்பொழுது கவுண்டர் என்ற சொல்லே வழக்கில் உள்ளது.

புழங்கு பொருள்கள்

உலகில் வாழும் அனைத்து இன மக்களும் தாங்கள் வாழ்கின்ற சூழலுக்கு ஏற்ப தம்மைச் சுற்றிக் காணப்படும் பொருள்களைக் கொண்டு வாழ்க்கையை அமைத்துள்ளனர். நமக்கு முன் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய பொருள்களைப் புழங்கு பொருள்கள் என்கிறோம். இது தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது எனலாம்.

எந்த ஒரு பொருளாயினும் அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் எனும் போது அதன் காலம், அங்கு வசித்த மக்கள், அந்தப் பொருள் உருவான முறை என அனைத்தையும் கூறுவதாக உள்ளது.

வேட்டுவக் கவுண்டரின் புழங்கு பொருள்கள்

வேட்டையாடுவதற்காக காடுகளுக்குச் சென்ற மக்கள் அங்கு கிடைத்த பொருள்களை வைத்து வாழ்வை அமைத்துள்ளனர். வேட்டுவர்கள் வேளாண்மையும் செய்து வந்தனர். வேட்டையாடு வதற்காக வரும், வேளாண்மை செய்வதற்காகவும் இவர்கள் பயன்படுத்திய பொருள்களை இனிகாணலாம்.

- தொழில் கருவிகள்
- உணவுசார் பொருள்கள்
- அணிகலன்கள்
- அழகுசாதனப் பொருள்கள்

- என்ற அடிப்படையில் காணலாம்.

தொழில்கருவிகள்

வேட்டையாடும் போது பயன்படுத்தும் கருவிகளைத் தொழில் கருவிகள் எனக் கூறலாம்.அவை,

- வலை
- ஈட்டி
- வில், அம்பு கோடாரி
- கலப்பை பரம்புப்பலகை
- பேழை
- கொத்து வலை

வலை என்பது வேட்டையாடும்போது பறவைகளை அல்லது விலங்குகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தியுள்ளனர்.

ஈட்டி

ஈட்டி என்பது கூர்மையான கருவி ஆகும். இது தூரத்தில் உள்ள விலங்குகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தி உள்ளனர்.கூர்மையான கத்திகளும் பயன்படுத்தி உள்ளனர்.

வில்,அம்பு

வில், அம்பு என்பது வேட்டையாடும் போது பயன்படும் கருவி யாகும். தூரத்தில் உள்ள விலங்குகளை வேட்டையாடப் பயன்படுத்தினர்.

கோடாரி வேட்டுவர் மரங்களை வெட்டகோடாரி என்னும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.

கலப்பை

வேளாண்மை செய்யும் பொழுது நிலத்தை உழுவதற்குக் கலப்பை பயன்படுத்தி உள்ளனர்.

பரம்புப் பலகை

நிலத்தை உழும் பொழுது மண்ணைச் சமன்படுத்துவதற்குப் பரம்புப் பலகை பயன்படுத்தி உள்ளனர்.

பேழை

வேட்டையாடியவிலங்குகளைப் பேழைஎன்பதில் போட்டுத் தூக்கிவந்துள்ளனர்.

கொத்து

வேளாண் நிலத்தில் வளர்ந்துள்ளகளை களை நீக்க, கொத்து என்னும் கருவியைப் பயன்படுத்தியுள்ளனர். இது போன்று தொழில் சார்ந்த கருவிகள் உள்ளன.

உணவுசார் பொருள்கள்

காடுகளிலும் நிலங்களிலும் வாழும் மக்கள்தங்கள் உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கு அவற்றைப் பகிர்ந்து உண்ணுவதற்கும் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி உள்ளனர்.அவை,

- உலக்கை
- குடா
- மண்பானை
- குடுவை
- தக்கை
- மண்சட்டி
- வரகு,சாமை,தினை

உலக்கை

உலக்கை என்பது தானியப் பொருட்களில்உள்ளஉமியை நீக்கப் பயன்படுத்தப்படுவதாகும்.

குடா

குடா என்பது தண்ணீர் எடுக்கப் பயன்படுத்தப்பட்ட ஒன்றாகும். இன்று குடம் என அழைக்கப்படுகிறது.

மண்பானை

உணவு சமைத்துச் சாப்பிட மண் பானையைப் பயன்படுத்தி உள்ளனர்.

குடுவை

மூங்கிலின் இரண்டு கணுக்களுக்கு இடையே வெட்டி அதைக் குடுவையாகப் பயன்படுத்தியுள்ளனர்.

தக்கை தக்கை என்பது சமைத்த உணவுப் பொருட்களை வைக்கப் பயன்படுத்தி உள்ளனர்.

மண்சட்டி

மண் சட்டியைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களைச் சமைத்துள்ளனர்.

வரகு, சாமை, தினை

தங்கள் பகுதிகளில் விளைந்தவரகு, சாமை,தினை போன்ற உணவுப்பொருட்களை வைத்துச் சமைத்துச் சாப்பிட்டனர்.

அணிகலன்கள்

அணிகலன்கள் அணிவது என்பது மக்களிடம் நம்பிக்கையாக மாறிவிட்டது எனலாம். இது மக்களின் பண்பாட்டைக் குறிப்பதாகவும் உள்ளது. தமிழர்கள் திருமண முறைகளில் பல்வேறு வகையான அணிகலன்கள் காணப்படுகின்றன. அணிகலன்கள் பெண்களுக்கு மட்டும் என்று இல்லாமல் ஆண்களும் அணிந்துள்ளனர்.

- தாலி
- கிரீடம்

- வளையல்
- தண்டை
- அரைஞாண் கயிறு காதணி
- மோதிரம்

தாலி

காட்டில் கிடைத்த புலியின் பல்லை தாலியில் கோர்த்து அணிந்த வழக்கம் வேட்டுவ மகளிரிடம் இருந்துள்ளது. இது நம்பிக்கையாகவும் கையாளப்பட்டுள்ளது.

கிரீடம்

பெண்கள் புலிப்பல் அணிந்தது போல் ஆண்மக்கள் மயில் தோகையை தலையில் கிரீடம் செய்து அணிந்துள்ளனர் என்ற செய்தி உள்ளது.

வளையல்

பெண்கள் தற்போது வளையல் அணிவது போன்று முன்பும் அணிந்துள்ளனர்.

தண்டை

தண்டை என்பது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனஅனைவரும் அணிந்துள்ளனர்.

அரைஞாண் கயிறு

எருக்கன் செடியின் வேர்ப்பகுதியின் அருகிலிருந்து தோல் உரித்து அதை அரைஞாண் கயிறாகக் குழந்தைகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர். இது குழந்தைக்கு நோய் எதிர்ப்பாகக் கருதப்படுகிறது.

காதணி

குழந்தை பிறந்த ஒன்பது அல்லது பதினொரு மாதங்களில் காதணி விழா என்ற ஒன்று கொண்டாடுகின்றனர். இது ஆண், பெண் என அனைத்துக் குழந்தைகளுக்கும் செய்துள்ளனர்.

அழகு சாதனப் பொருள்கள்

வேட்டுவர்களின் கலைப் புலமையை வெளிப்படுத்தும் விதமாக அழகுசாதனப் பொருள்கள் பயன்படுத்தி உள்ளனர். அவை,

- விசிறி
- தக்கை
- கூடை
- தோரணம்

விசிறி

விசிறி என்பது இன்று அழகுசாதனமாகக் கருதப்படுகிறது. அன்று காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த மக்கள் தங்கள் வேலை நேரங்களில் பொழுதுபோக்காக உருவாக்கிய ஒன்றாகும்.

தக்கை

தக்கை என்பது சவுரிக்கொடி, மூங்கிலின் ஒரு பகுதி கொண்டு தயாரித்து குடம், உணவு பாத்திரங்களை அதன் மீது வைக்கப் பயன்படுத்தினர். இது தற்போது சில்வரில் வந்துவிட்டன.

கூடை

சுபநிகழ்ச்சிகளில் கூடைகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. இது மூங்கிலில் செய்யப்படுவதாகும்.

தோரணம்

தோரணம் என்பது வரவேற்கும் பண்பினை உடையது. இது கிருமிகளை வீட்டினுள் நுழைய விடாது என்ற கருத்து மக்களிடையே இன்றளவும் நிலவுகிறது.

முடிவுரை

காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த மக்கள் வேட்டுவக் கவுண்டர்கள் எனவும் வேடர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். காலச் சூழலுக்கு ஏற்ப வேட்டுவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை எவ்வாறு தயாரித்தனர் என்பது கட்டுரையில் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் இன்று நம் வழக்கில் பாதி மறைந்து விட்டன எனலாம். ஆனால் அப்பொருள்கள் பற்றிய தகவல்கள் நம்மிடையே இன்றளவும் உள்ளது. அவையே புழங்கு பொருள்கள் என அழைக்கப்படுகின்றன.

பார்வை நூல்:

1. ராமச்சந்திர செட்டியார், கொங்குதேச ராசாக்கள், திகேசரி பிரிண்டர்ஸ், டி நகர், சென்னை.

வேட்டுவரின் பரிணாமமும் சங்க இலக்கியமும்

சு.தமிழ்ச் செல்வன்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் கலைக்கழகம், திருவாரூர் 610005.
vstamil481@gmail.com.

முன்னுரை

உணவு, உடை, உறைவிடம், மூன்றும் மனித வாழ்க்கைக்கு முக்கியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்று. இதில் உணவு என்பதே மனிதனின் முக்கியத் தேவை. அன்றாட வாழ்வில் உணவுக்காக மனிதன் ஓடி உழைக்க வேண்டியுள்ளது. சங்க காலத்தில் மனிதனின் உணவு வேட்டையாடுதலில் மூலமாகவே நிவர்த்தியடைந்துள்ளது. குளிர்காலங்களில் மாமிச உணவுகளை உண்ட மனிதனே உயிர்பிழைத்து வந்துள்ளான், மாமிச உணவுகளே உடலுக்கு வெப்பத்தையும் ஆற்றலையும் தந்துள்ளது. குறிஞ்சிநில மக்களின் உணவுத் தேவையை வேட்டையாடுதலே பூர்த்தி செய்துள்ளது. இதனைச் சங்க இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகிறது. வேட்டையாட தேவையான இரும்புக் கருவிகள், புழங்கு பொருள்கள் முதலியவற்றை இலக்கியங்களும் கல்வெட்டுகளும் நமக்குத் தெரிவிக்கின்றன. வேட்டுவர்கள் வாழ்வைச் சங்க இலக்கியம் வாயிலாக இக்கட்டுரை விளக்குகிறது.

வேட்டுவரின் உணவு முறைமை

வேட்டையாடிய விலங்குகளின் மாமிசத்தைப் பச்சையாக உண்டு செறித்த மனிதனுக்கு, தீயில் சுட்டு உண்ணும் பழக்கம் தோன்றக் காரணமாக அறிவியலாளர் கருதுவது, காட்டுத் தீயில் இறந்த விலங்குகள் இறைச்சியை உண்டு சுவை உணர்ந்த மனிதன் மீண்டும் தீயில் சுட்டு

உண்ணும் படியாக பரிணாமம் அடைந்திருப்பான் என்கின்றனர். பின்பு இதுவே பொறி வைத்து உயிருடன் பிடித்து நன்கு வளர்த்து உண்ணும் முறையைத் தோற்றுவித்து இருக்கலாம். பன்றிக்கு நெல்லை இடித்து உணவாகக் கொடுத்து அதனைப் பெண் பன்றியுடன் புணர விடாமல் தவிர்த்துப் பெரிய குழியில் தனியாக இட்டு வளர்த்தனர். இவ்வாறு பலநாட்கள் வளர்க்கப்பட்ட பன்றியின் இறைச்சியைச் சமைத்து அதனோடு கள்ளையும் உண்டனர்(புழுங்கு ப 18) இப்போதுகூட ஆட்டுக் கிடாவைக் காயடித்து வளர்த்து உண்ணுவதுண்டு. இவ்வாறு மனித வளர்ச்சி பரிணாமம் கண்டுள்ளதை நாம் அறியலாம். இதற்கு மரபுவழி தொடர்புள்ளது. இதனையே டார்வின் தனது கூற்றில் மாறுதல்களோடு கூடிய மரபுவழி வருகையே பரிணாமம்(ஆப்ரகாம் ப 2) எனவே, மாறுதல் என்பதே மரபின் தொடர்ச்சி என்பதை உணர்ந்து இன்றைய நவீனத்துவச் சிந்தனை மரபின் தொடர்ச்சியாக உள்ளதை அறியலாம். உணவு உண்பதில் ஆரோக்கியத்தைப்பேண முயன்ற மனிதன் சத்தான உணவாக உண்டு களிக்க பல முயற்சிகளைச் செய்துள்ளான். இதற்காக, பன்றியை மலம் திண்ணாது வளர்த்ததைச் சங்கப் பாடல் கூறுகிறது.

“கள்ளரு மகளீர் வள்ள நடக்கிய
வசர்த்து குன்னீர் வழிந்த குழம்பி
னீர் குஞ்சே நாடிய விரும்பம் சூட்டிப்
பன் மயிர்ப் பிணவொரு பாயம் போகாது
றென்மா வல்சி கீற்றிப் பண்னாட்
குழிநிறுத் தோம்பின் குறுந்தா நேற்றைக்
கொழுநிணத் தடியோடு கூர்நாறுப் பெறுகுவீச்”

(புழங்கு ப -19)

இயற்கையாகக் கிடைக்கும் காய், கனி, கிழங்கு, மற்றும் வேட்டையாடிய விலங்கு மாமிசம் உண்டு நாடோடியாக வாழ்ந்த மனிதன் வேளாண்மை செய்து நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழத் தொடங்கிய பின் விலங்குகளை வேளாண்மைக்கும் வேட்டைக்கும் பாதுகாப்புக்கும் பயன்படுத்தினான். இதன்மூலமாக மலைமுகடுகளில் வாழ்வதைத் தவிர்த்து வைக்கோல் குடில்களை அமைத்து வாழத் தொடங்கினான்.

வேட்டுவர் கருவிகளும் சங்க இலக்கியமும்

வேட்டையாடத் தேவையான கருவிகளை மனிதன் முதலில் கற்களைக் கொண்டும் மரக்கிளைகளைக் கொண்டுமே உருவாக்கினான். பின்பே இரும்பு கண்டறிந்து அதனைப் பயன்படுத்தத் தொடங்கினான். இதற்கான சான்றுகளை சங்க இலக்கியத்தில் காணலாம். இரும்புக் கருவிகளைச் செய்வோரை கொல்லன் என்றுள்ளனர். கத்திரிக்கை (பொறுநர்-172), களைக்கொட்டு (குறுந் 392), தோட்டி (முருகு78), கவைமுட்கருவி, சம்மட்டி (முல்லை35,59), உளி, தொடைவாள், கத்தி (மது-635), இருப்புத்தகடு (பெரும்-222), ஊசி (அகம்-199), பெரிய கோடாரி (புறம் 36), நெடுவேல் (புறம்- 180) முதலியவற்றைச் சங்க இலக்கியம் வாயிலாக அறியலாம்.

“உறிக்கா வூர்த்த மறுப்படு மயிர்ச்சவல்” (பெரும் 171)

எலியைப் பிடிக்க உறி செய்து பயன்படுத்தியதை அறியலாம் மற்றும் தேனெடுக்க, தேனீக்களை விரட்ட புகைபோடுதல் முதலியவை உடனே நிகழ்ந்தவையல்ல; பல தலைமுறை மரபுத் தொடர்ச்சியில் இத்தகைய அறிவு மனிதனுக்குத் தோன்றியது.

“கையிடாலோடு விந்ததொரு முட்டியும்
கைப் பெருப் போடு விந்ததொரு முட்டியும்
வியப் பூட்டோடு வீந்ததொரு முட்டியும்
ஊற்றுளியப் பூட்டோடு வீந்ததொரு முட்டியும்
வல வள்ளி டாலோடு வீந்ததொகு முட்டியும்
நாயினோடு நாயாட்டோடு வீந்ததொரு முட்டியும்
கம் போறு நாவறு ணல்லாம் எரிஞ்சற்று நிக்கனது.”
(புழங்கு ப -65)

வேட்டையாடுதலில் உள்ள அடிப்படைத் தத்துவம் என்னவெனில் வலிமை உடையதே உயிர்ப்பிழைக்கும் போர்தான் அடுத்த நூற்றாண்டு யுத்தம்தான் மிருக வாழ்க்கை மனிதனுக்குத் திரும்பும் வலிமை உள்ளது மட்டுமே தப்பிக்கும் அன்பு-அறம்-எல்லாம் அன்றில் -அன்னம்-பட்டியலில் காணாமல் போகும் (தண்ணீர் தேசம் ப-16) வேட்டுவர் வாழ்வே அனைத்து உயிருக்கும் அடிப்படையாகும்.

வேட்டுவர் இனக்குழுச் சமூகம்

வேட்டுவர்கள் கவண், வில், அம்பு, கண்ணி, முதலிய கருவிகளைக் கொண்டு குழுவாக வேட்டையாடிய நிலையில் இவர்களை வில்லோர் உழவர், பழையர் போன்ற பெயர்களில் அழைத்துள்ளனர். வேட்டுவர் வேட்டையாடிய உணவுகளைச் சேகரிப்பதில் பெண்களின் பங்கு முக்கியமானது. இதனைக் கூறும் குறுந்தொகை,

"புறங்குழி அகழ்ந்த தலைவன் கிழங்கினோடு
கண்ணகன் தூமணி பெறூஉம் நாடன்" (குறுந் 379)

கூட்டுழைப்பு வேட்டையாடுதலில் முக்கியமானது குழுவாகச் சேர்ந்தே விலங்குகளை வேட்டையாட முடியும், வேட்டையாடிய மாமிசத்தைப் பங்கிடுவதைப் பாதீடு என்ற சொல் மூலம் அறியலாம்.

முடிவுரை

வேட்டுவர் பரிணாமத்தை, சங்க இலக்கியம் வாயிலாக, மரபுத் தொடர்ச்சியாக வந்துள்ளதை இக்கட்டுரை விளக்குவதுடன், உணவுமுறை பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளதையும், இரும்புக் கருவிகளைக் கண்டறிந்ததையும், இனக்குழு வாழ்வின் கூட்டுழைப்பு, முதலியவற்றையும் விளங்கிக் கொள்ள முடிகிறது. சங்க இலக்கியம் வேட்டுவர் வாழ்வியலைத் தொடர்ச்சியான வரலாறாகக் காட்டுகிறது. இதன்மூலம் பரிணாமம் அடைந்த வேட்டுவர் நிலையை அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்:

1. இராசு.செ, வேட்டுவர் சமூக ஆவணங்கள், ப- 2008,காயத்திரி ஆப்செட், ஈரோடு 638001.
2. சாமிநாதையர்.உ.வே. குறுந்தொகை, எட்டாம் பதிப்பு 2020, சென்னை 6000077.
3. பக்தவத்சல பாரதி, இலக்கிய மானிடவியல், இ.ப 2020, அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம் 621310.
4. ரெஜித்குமார்.த, புழங்குபொருள் பண்பாடு, இ.ப 2023,காவ்யா வெளியீடு, சென்னை 600024.
5. வைரமுத்து, தண்ணீர் தேசம், மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம்.

பெரியபுராணத்தில் வேட்டுவரின் வாழ்வியல்

ச.திரிஷா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
தமிழாய்வுத் துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி,
அலைப்பேசி : 6379983995.

முன்னுரை

சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் திணைப் பாடல்களில் வேடர்களின் வாழ்வியல் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது வேடர்களின் வாழ்வியலை விரிவாக அறிந்து கொள்வதற்கான எந்த ஒரு நூலும் இல்லை. ஆனால்,சேக்கிழார் பெரியபுராணத்தில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளைக் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் சமுதாய வாழ்க்கையை குறிப்பாகப் புலப்படுத்தி உள்ளார் எனினும், கண்ணப்ப நாயனார் புராணத்தில்,, கண்ணப்பர் பிறந்த வேடுவ குலத்தின் வாழ்வியலை எடுத்துக்கூறுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வேட்டுவர்களின் தோற்றம்

வரலாற்றுச் சிறப்புமிக்க ஊரான பொத்தப்பி என்ற ஊரைச் சார்ந்து இருந்தது உடுப்பூர். அவ்வூரில் பிறந்தவர் கண்ணப்பர் (திண்ணனார்). உடல் வலிமை மிக்க வேடர்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர்.வேடர்கள் பெரும்பாலும் மலைப்பகுதியில் வாழ்ந்து வந்தனர். அவர்களைக் குன்றவர் என்றும் 'மலையர்' என, சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

வேடர்கள் கரிய நிறத்தை உடையவர்கள்,
மைசெறிந்து அனைய மேனி (2) (பெரியபுராணம் -656)

என்று அவர்களுடையதோற்றத்தைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

வேடர்களின் வீடுகளுக்கு முன் விளாமரங்களில் வேட்டை நாய்கள்,புலி, கரடி, பன்றி போன்ற விலங்குகள் கட்டப்பட்டிருக்கும். வேடர்களிடம் அச்சம் என்பதும்அருள் என்பதும் இல்லை, வேடர்களின் குழுத் தலைவன் ஆண்சிங்கம்போன்ற நாதன் என்பவன்,பெண் சிங்கம் போன்ற நாகனின் மனைவி தத்தை. இவ்விருவருக்கும் பிறந்தவர் கண்ணப்பர் ஆவார். சிவபெருமானால் அழைக்கப்பட்ட சிறப்புப் பெயரை கண்ணப்பா! ஆகும்.

தொழில்

விலங்குகளை வேட்டையாடுவது இவர்களின் முக்கியத் தொழிலாகும். நீர்நிலைகளில் உள்ள மீன்களைப் பிடித்தும் காட்டில் உள்ள விலங்குகளை வேட்டையாடுவதும் இவர்களின் தொழிலாகும்.

உடை

வேட்டுவர்கள் வலிமை வாய்ந்த தோலாடையை ஆடையாக அணிந்திருப்பார்கள்.

அணிகலன்கள்

வேட்டுவகுலத் திருமணமானபெண்கள் புலிப்பல்லைத் தாலியாக அணிந்து கொள்வர். அதில் இடை இடையே மனவு எனப்படும் சங்கு மணிகளைக் கோர்த்திருப்பர். வேட்டுவ குலக் குழந்தையின் பெயர் சூட்டும் விழா அன்று குழந்தைக்குப் பல அணிகலன்களை அணிவிப்பார்கள். மறவர்கள் காலில் கழல் அணிந்திருப்பார்கள். பெண்கள் தம் கொண்டையில் மயில் பீலியையும் தளிர்களையும் பூக்களையும் அணிவார்கள்.

ஆயுதங்கள்

வேட்டுவர்கள் பெரும்பாலும் வில்லினைப் பயன்படுத்தியே வேட்டையாடுவார்கள்.

> **“....நச்சழல்பகழிவேடர்க்கு**
> **அதிபதிநாகன்என்பர்.”** (பெரிய புராணம் -656)
>
> **“விற்றொழில்விறலின்மிக்கான்”**(2) (பெரிய புராணம் -657)

என்ற தொடர்களின் மூலம் வேட்டுவர்களுக்கு ஆயுதமாக வில் மற்றும் அம்பு பயன்பட்டது என்பது அறியமுடிகிறது.

உணவு

வேட்டுவர்கள் மலைத்தேனோடு ஊன்கலந்தசோற்றையும் வேட்டையாடும் விலங்குகளை நெருப்பில் வேகவைத்தும், உணவாகக் கொண்டனர். இறைச்சியை நெருப்பில் வதக்கி அதில் தேனைப் பிழிந்து கலந்து உண்பர். காலையில் சிறுவர்களுக்குப் புலால் கலந்த உணவை உண்ணக் கொடுப்பர்.இறைச்சித் துண்டுகளைக் சேர்த்து நெருப்பில் வதக்கவும் அம்பு பயன்படுத்தப்படுகிறது.

விருந்துணவு

திண்ணனார் கையில் ஏந்தப் போகும் வில்லுக்கு விழா எடுத்தார்கள், அவ்விழாவின்போது மறவர்கள் அனைவரும் தேனும் தினைமாவும் சேர்த்து உண்டனர். மலை நெல், புல்லரிசி,திணை, மூங்கிலரிசி முதலியவற்றால் சோறு சமைப்பர். ஈசல் உணவை விருப்பத்தோடு உண்பர்.எயினரும் எயிற்றியரும் பலவகையான மது வகைகளை அதிகமாக அருந்தி மயங்கி கழிப்பர். இறந்த விலங்குகளின் ஈரலைச் சிலர் உண்டனர்; சிலர் பானைகளில் இருந்த கள்ளைக் குடுவையால்மொண்டு குடித்தனர்; புளித்த கள்ளை உண்டவர்கள் பானையின் கழுத்தில் கட்டி உள்ள இஞ்சித் துண்டுகளைக் கடித்துக் கொண்டு மேலும் மேலும் கள்ளைக் குடித்தனர்.

இறைவழிபாடு

வேட்டுவர்கள் குறிஞ்சி நிலக் கடவுளான முருகனை வழிபடுவர். அவர்களுக்குக் குலதெய்வம் முருகன் ஆவார். முருகனுக்குச் சேவற் கோழிகளையும்,நீல மயில்களையும், காணிக்கையாக விட்டனர். குரவைக்கூத்தாடி முருகனுக்கு விழா எடுக்கும் வழக்கமும் உண்டு. இதனைப் பெரிய புராணத்தில்,

"வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை".(2)

- (பெரிய புராணம் -660)

விழாக்கள்

தமது தலைவனுக்குக் குழந்தை பிறந்தபோது மக்கள் அனைவரும் பெருவிழா எடுத்து மகிழ்ந்தனர்.

வில் விழா

வேடர்களுக்கு அடையாளமாகத் திகழ்வது வில் ஆகும். வேடன் பதினாறு வயது நிரம்பிய பின் வில்லேந்துவான்.இந்த விழாவானது ஏழு நாள் நடைபெறும். ஏழாம் நாளில் மக்கள் மங்கள வாழ்த்து கூற, பல இசைக்கருவிகள் முழங்க, வில்லாசிரியர் மாணவனிடம் (வேடன்) வில்லை அளிப்பார். இதனை பெரியபுராணத்தில்,

“....வென்றி வில் விழவினோடும்
விருப்புடை ஏழாம் நாளாம்
அன்று இரு மடங்கு செய்கை
அழகு உற அமைத்த பின்றை”(2) (பெரிய புராணம் -688)

“வெங் கதிர் விசும்பின் உச்சி
மேவிய பொழுதில், எங்கும்
மங்கல வாழ்த்து மல்க,
மருங்கு பல்லியங்கள் ஆர்ப்பத்
தங்கள் தெல் மரபின் விஞ்சைத்
தனுத் தெழில் வலவர்தம்பால்...”(2) (பெரிய புராணம் -689)

என்று சேக்கிழார்குறிப்பிடுகின்றார்.

அந்த வில்லிற்குத் திருக்காப்பு செய்பவர், வலிமை உடைய புலி நரம்பில் செய்த நாணாகிய கயிற்றை வில்லில் காப்பாகக் கட்டுவர்; வில்வித்தை கற்போருக்கும் காப்பு கட்டும் வழக்கமும் உள்ளது.

வேட்டையாடுதல்

வேடன்என்பவன் வில்வித்தையிலும், வேட்டையாடுவதிலும் சிறந்தவனாக இருத்தல் வேண்டும். முதன்முதலில் வேட்டையாடு வதைக்கன்னி வேட்டை என்பர். கன்னி வேட்டைக்கு வேடன் செல்லும் போது வனதேவதைக்குப் பலி கொடுப்பர், வேடனைத் தேவராட்டி வாழ்த்தி கன்னி வேட்டைக்கு வழி அனுப்புவார் துடிப்பறையை முழங்கிக் கொண்டு வேடர்கள் வேட்டைக்குச் செல்வர்கள்.

முடிவுரை

கண்ணப்பரின் வாழ்க்கை மூலம், வேட்டுவ சமுதாயத்தின் வாழ்வியல் கூறுகளான,தொழில்,உடை,அணிகலன்கள், ஆயுதங்கள், உணவு, விருந்துணவு, இறைவழிபாடு, வில் விழா, வேட்டையாடுதல் போன்ற செய்திகளை நுணுக்கமாக அறிய முடிகின்றது.

துணை நூற்பட்டியல்:

1. தமிழ் இலக்கிய வரலாறு - பேரா. சி. கி. இலச்சுமணன் உரை. கிருட்டிணா வெளியீடு, 7, பிரகாஷ்நகர், திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி.
2. பெரிய புராணம் -வ.த. இராம சுப்பிரமணியம் உரை, திருமகள் நிலையம், எண் 16, வெங்கட் நாராயணன் தெரு, தியாகராயநகர் சென்னை.

கம்பராமாயணத்தில் குகன்

முனைவர் ச.திவ்யபாரதி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
சேனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் 05.
அலைபேசி : 8220878580
divyajaganathan8@gmail.com

முகவுரை

காலத்தை வென்று நிற்கும் தமிழ் பெறும் நூல்களுள் கம்பராமாயணமும் ஒன்று. இது மனிதத் துவத்தை விவரிக்கும் வாழ்க்கைச் சித்திரமாகும். வைணவக் கடவுளான இராமபிரானைக் கதைத் தலைவனாகவும் சீதாபிராட்டியைக் கதைத் தலைவியாகவும் மேலும் இலட்சுமணன் அனுமன் குகன் போன்ற பல்வேறு கதாபாத்திரங்களை உள்ளடக்கி மனித வாழ்வின் போராட்டங்களையும் இன்ப துன்பங்களையும் மற்றும் இன்றி சகோதரத்துவம் நட்பு இல்லறம் துறவறம் என அனைத்தையும் காட்சிகளாக்கி நமக்கு அளித்துள்ளார்

கம்பர். இராமனின் நாமத்தையே மனதில் சுமந்து வாழ்ந்தவன் குகன், இராமன் வனத்திற்கு வந்துள்ளதை அறிந்ததும் மிக்க மகிழ்ச்சியோடு அவரைச் சந்திக்க ஓடி வந்தான். குகன் இராமனுக்குக் கையுறை வழங்கலும், தேன், மீன் போன்ற அன்பின் பொருட்டு வழங்கப்பட்ட கையுறைப் பொருள்களை இராமன் ஏற்றலும், இராமனைச் சந்தித்த மகிழ்ச்சியையும் கடந்து அவரது வனவாசத்தில் குகன் அடைந்த துன்பமும், இராமனை விட்டுப் பிரிய மனமின்றி அவரோடு தங்கியிருந்த காட்சிகளும், மறுநாள் இராமனுக்காக குகன் நாவாய் செலுத்துதலும், அவரைத் தன்னுடனேயே தங்கி இருக்குமாறு கண்ணீர் விடுதலும், இறுதியாக இராமனைப் பிரிய மனமில்லாமல் குகன் பிரிந்து செல்லுதலும் என்ற அனைத்துக் காட்சிகளும் குகப்படலத்தில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, வேடர் குலத் தலைவனான குகனின் தோற்றம் கூறப்பட்டுள்ள விதம் மற்றும் அவனது தன்மைகள் பற்றிக் கூறுவதோடு, தன்னுடைய

உயரிய பண்புகளால் இராமனது மனதில் நீங்காத இடம் பிடித்த குகனது வாழ்க்கையையும் ஆய்வு செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

குகனின் தன்மைகள்

கம்பராமாயணத்தில் இராமன் மனதில் நீங்கா இடம் பிடித்தவன் குகன். இவனை ஆயிரம் நாவாய்களுக்குத் தலைவன். புனித நீரான தூய கங்கையில் நெடிய காலமாகப் படகுவிடும் தன்மையன். பகைவரை நடுங்கச் செய்யும் வில்லினை உடையவன். மலை போன்ற வலிமைமிக்க திரண்ட தோள்களை உடையவன். போர் தொழில் புரிவதில் வல்லவன். இவ்வாறாக வேடர் குலத் தலைவனான குகனைப் பற்றி கூறும் விதமாக,

"ஆய காலையின், ஆயிரம் அம்பிக்கு
நாயகன் போர்க்குகன் எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல்திறள் தோளினான்"

-கம்பராமாயணம் 1953

என்ற பாடல் வரிகள் அமைந்துள்ளன. மேலும், வேடர்களின் தலைவனான குகன், துடி என்னும் பறையைக் கொண்டிருப்பவன். வேட்டையாடும் நாய்களை உடையவன். தோலாலான மிதியடிகளை அணிந்த பெரிய பாதங்களைக் கொண்டவன். இவன் தன்னுடைய பெருஞ் சேனைப் படைகளோடு நெருங்கி வரும் போது, நீர் பொழிகின்ற மேகம் இடியோடு கூடி கிளம்பியது போன்ற தன்மையை கொண்டவன்.

இங்கு குகன் வேட்டுவராதலால் பறை, நாய் முதலியவை கொண்டுள்ளான் என்பது விளக்கப்பட்டுள்ளது. பறைகளில் இங்கு பல வகைகள் காட்டப்படுகின்றன. அவை துத்தரி, பம்பை என்று அழைக்கப்படும் இருதலைப்பறை போன்றனவாகும். வேட்டுவர்கள் பறையோடு ஊதுகொம்பு, சங்கு, ஒலிக்கின்ற பெரிய முரசு, இவ்வாறான பல வாத்தியங்கள் நிரம்பிய சேனைப்படையை உடையவர்கள் என்பதை,

கொம்பு துத்தரிகோடு அதிர் பேரிகை
பம்பை பம்பு படையினன் -மேலது 1955

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

ஆடை அணிகலன்கள்

“காழம்” என்று அழைக்கப்படும் சிறிய காற்சட்டையை அணிந்திருப்பவன். அதாவது, இடுப்பிலிருந்து தொடை வரை அணியப்படும் ஒருவகை ஆடையாகும். அம்பு முதலியவற்றைத் தீட்டுவதற்காகச் சிவப்புநிறத் தோலாகிய வார்ப்பட்டையை இவன் இடுப்பிலிருந்து கீழே தொங்க விட்டிருப்பான். மேலும் இவன் தனது இடையில் புலியின் வாலை ஒன்றோடு ஒன்று சேர்த்து கட்டியவன் என்றும் வீரத்திற்கு அடையாளமாக விளங்கும் வீரக் கழலினைக் கற்களை ஒன்று சேர்த்து கட்டியது போன்று திடமாக அணிந்திருப்பவன். மேலும்,

> **“அல் தொடுத்தன்ன குஞ்சியன் ஆளியின்**
> **நெற்றொடு ஒத்து நெரிந்த புருவத்தான்” -மேலது 1957**

என்ற வரிகளில், இருளினை ஒன்று சேர்த்துக் கட்டியது போன்ற கரிய தலை மயிரினை உடையவன் என்றும் ஆளிச் செடியின் உலர்ந்த அடர்த்தியான காயினைப் போன்ற அடர்த்தியான புருவத்தை உடையவன் என்றும் மேற்கண்ட வரிகளால் அறிய முடிகிறது.

மேற்கண்ட செய்திகள் குகனின் காட்சியை மட்டும் இன்றி வேடர்களின் வாழ்க்கை முறையையும் உணர்த்துவதாக உள்ளன. வீர மரபினராக வேட்டுவரின் செயல்களை,

> **“இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது**
> **சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக் குமரியைச்**
> **சிறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி,**
> **இளஞ்சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து**
> **வளைவெண் கேடு பறித்து”**
> **சிலப்பதிகாரம் - வேட்டுவவரி 20-25 வரிகள்**

என்ற வரிகள் மூலம் இளங்கோவடிகள் விளக்குகிறார். வீர மரபினராகிய வேட்டுவர்கள் பலியிட்டு தனது தலையை எண்ணுவார்களே அன்றி நோயில் பட்டு இறத்தலை அவர்கள் ஒரு நாளும் விரும்பியதில்லை. அத்தகைய வீர மரபினர் தம் குடிப்பெண் ஒருத்தியைக் கொற்றவைக் கோலம் செய்தனர். அவர்கள் அவளது சுருண்ட கூந்தலை இறுகக் கட்டி, வேலியைத் தாண்டி தோட்டப் பயிரை அளித்த பன்றியைக் கொன்று அதன் கொம்பினைப் பிடுங்கி பிறைச் சந்திரனாக நினைத்து அவளது

தலையில் சூட்டினர். பின்னர் வீரம் கொண்ட புலியின் பற்களைக் கோர்த்து தாலியாக அமைத்து அவளுக்கு அணிவித்தனர். புலித்தோலினை அவளுடைய இடையில் மேகலையாக உடுத்தினர் என்பதை,

“முளைவெண் திங்கள் என்னச் சாத்தி,
மறம்கொள் வயப்புலி வாய்ப்பிளந்து பெற்ற
மாலை வெண்பல் தாலிநிரை பூட்டி
வரியும் புள்ளியும் மயங்கு வான்புறத்து
உரிவை மேகலை”

சிலப்பதிகாரம் - வேட்டுவவரி 25-30 வரிகள்

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. மேற்கண்ட சான்றுகளால் வேடுவர்களின் வீரம் மட்டுமின்றி அவர்களின் ஆடை அணிகலன்கள் பற்றிய குறிப்பும் நன்கு தெளிவாகிறது.

நிறைவுரை

வேடர்களின் வாழ்க்கைமுறை மிகவும் வியக்கத்தக்கது. அவர்கள் காட்டில் விலங்குகளோடும், மரங்களோடும், செடி கொடிகளோடும் இயற்கையைச் சார்ந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர் என்பதற்கான குறிப்புகள் நம் இலக்கியங்கள் வாயிலாகக் கிடைக்கின்றன. குகன் வேடர்குலத் தலைவன். இராமபிரான் மீது கொண்டிருந்த அளவுகடந்த அன்பும், கள்ளம் கபடம் அற்ற பாசமும் நாயன்மார்களுள் ஒருவரான கண்ணப்ப நாயனாரை நமக்கு நினைவுபடுத்துகிறது. மேலும், குகனின் உடல் தோற்றம் மற்றும் அவனுடைய ஆடை அணிகலன்கள் அணியும் முறைகள் ஆகியவற்றை நோக்கும்போது சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் கூறப்பட்டுள்ள வேடுவர்களின் வாழ்க்கை முறை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாக உள்ளது. இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாக, கம்பராமாயணத்தில் குகனின் வாழ்க்கையை மையப்படுத்தி வேடர்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், பண்புகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளன.

முதன்மை ஆதாரம்

1. இராசுப்பிரமணியம் வ.த - கம்பராமாயணம் திருமகள் நிலையம், 55, வெங்கட நாராயணா தெரு, தி.நகர்

சென்னை 600 017,
முதற்பதிப்பு ஜுன் 2007.

துணைமை ஆதாரங்கள்

1. தங்க. பழமலை - திருக்குறள் நயவுரை, அருள்மொழி வெளியீடு, 150, தெற்குத் தெரு, திருக்கேவலூர் - 605 757.

2. இராசுப்பிரமணியம் வ.த - சிலப்பதிகாரம் மூலமும் உரையும், திருமகள் நிலையம், 55, வெங்கடநாராயணா தெரு, தி.நகர், சென்னை 600 017.

3. இளம்பூரணர் - தொல்காப்பியம் - சாரதா பதிப்பகம், ஜி-4 சாந்தி அடுக்ககம் 3, கிருஷ்ணாபுரம் தெரு ராயப்பேட்டை, சென்னை - 14.

வேட்டுவரின் புலம் பெயர்வும் வாழ்வியலும்

இரா. நிவேதா
முதுகலைத் தமிழ், இரண்டாமாண்டு,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி,
nivethasri9898@gmail.com

முன்னுரை

வேட்டுவர்கள் இயற்கையோடு இணைந்து வாழும் பழங்குடி மக்கள் ஆவர். இவர்கள் பறவைகள்விலங்குகளைவேட்டையாடி காடுமற்றும் மலைகளின் வளங்களை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்கள். வேட்டுவர்களின் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், புலம் பெயர்வு, சமூகத்தோடு பழகுவது போன்ற விவரங்கள் சங்க இலக்கியங்கள் காப்பியங்களிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. அதனை இங்கு காண்போம்.

வேட்டுவர்களின் புலப்பெயர்வு

வேட்டுவர்கள் வாழ்ந்த நிலம் பெரும்பாலும் காடுகள் மலைகள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களாக இருந்தன.ஆனால் சில காரணங்களால் அவர்கள் புலக்க்ம் பெயர்வைமேற்கொண்டனர்.

காடுகளின் வளமானது குறையும்போது உணவு மற்றும் வாழ்வாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேட்டுவர்கள் புதிய இடங்களை நாடிச் சென்றனர்.

தொழில் முறைகள்

குறிஞ்சிநில மலைப்பகுதியில் வாழ்ந்த வேட்டுவர்கள் மீன் பிடித்தல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர். குறிஞ்சி நிலத்தில் இருந்து முல்லை நிலத்திற்கு வேட்டுவர்கள் தனது வேட்டையாடும் தொழிலை மேற்கொண்டனர்.

குறிஞ்சியும் முல்லையும் வளம் இழந்து பாலையாக மாறும். இதனைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் யில் திரிந்து நல்இயல்பு இழந்து நடுங்குது துயர் உறுத்துப் பாலைஎன்பதோர் படிவம் கொள்ளும்"[1] எனக் குறிப்பிடுகிறார். குறிஞ்சியும் முல்லையும் பாலையாக மாறும் போது அங்குள்ள வேட்டுவர்கள் ஆறலைக்கள்வர்களாக மாறிவழி வழிப்பறி செய்து வாழ்ந்தனர்.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர் பற்றிய செய்திகள்

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்க்கும் அரசனுக்கும் உள்ள தொடர்பினை,

> **"மலையார் நெடுமலை வேட்டுவன் தோழன்**
> **புலியின் தோல் போர்த்திய புலம்பாடும் வேந்தர்"[2]**

இதில் மலையர் என்பது வேட்டுவர்களைக் குறிக்கிறது. வேட்டுவர்கள் தங்கள் உடலில் விலங்குத் தோல்களை அணிந்து அரசனுக்கு நெருங்கிய துணையாகவும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர் என்ற செய்தியை சிலப்பதிகாரத்தின் வழியாக அறிய முடிகிறது.

தொல்காப்பியத்தில் வேட்டுவர் பற்றிய செய்திகள்

> **"ஆயர் வேட்டுவர் ஆடுவுத்திணைப்பெயர்ஆவையின்**
> **வரூஉம் கிழவரும் உளரே"[3]**

முல்லை நிலத்தில் வாழும் வேட்டுவர்களை ஆடவர், ஆயர் என்ற பெயரால் அழைத்தனர் என்ற செய்தியை, தொல்காப்பியர் எடுத்துரைப்பதன் மூலம் அறிய முடிகிறது. தொழில்களின் அடிப்படையில் வேட்டுவர் என்று பெயர் பெற்றனர்.

வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள்

வேட்டுவர்கள் வேட்டையாடுவதற்காகப் பலவகைக் கருவிகளை உருவாக்கினர். முதலில் கூர்மையான கற்கள் மற்றும் மரத்தின் குச்சிகளைக் கருவிகளாகப் பயன்படுத்தினார்கள். பின்பு வேல், தூண்டில், கவண், கற்கள், வில், அம்பு போன்ற கருவிகளை உருவாக்கி வேட்டைத் தொழிலுக்குப் பயன்படுத்தினார்கள்.

“வயங்கு வெள்அருவிய குன்றத்துக் கவாஅண்
கயந்தலை மடப்பிடி இனம் ஏமார்ப்ப”[4]

கவண் கற்களைப் பயன்படுத்தி யானையை வேட்டுவன் விரட்டினான் என்ற செய்தியானது அகநானூற்றுப் பாடலின் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

வேட்டுவர்களின் வீடுகள்

வேட்டைத் தொழில் செய்யும் வேட்டுவர்கள் காடுகளில் உயரமான மலைப் பகுதியில், மரங்களில் பரண்களை அமைத்து வாழ்ந்தனர். பின்னர் காடுகளின் வளமானது குறையும்போது, தனது வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்ய வேறு இடத்திற்குப் புலம்பெயர்வு செய்தார்கள்.

புழங்குபொருள் பயன்பாடு

மக்கள் தங்களின் அன்றாடத் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட பொருள்கள் மற்றும் உணவுப் பழக்க வழக்கம், தொழில்கருவிகள் போன்றவை புழங்கு பொருள்கள் ஆகும். இவை பண்பாட்டினைப் பிரதிபலிக்கக் கூடியவை. வேட்டையாடுவதற்கு வேல் கருவியைப் புழங்கு அறிய முடிகிறது.

உணவு முறைகள்

வேட்டுவர்கள் எவ்வாறெல்லாம் வேட்டையாடி உணவினை உண்டனர் என்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடலில்,

“கானுறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் போரில் அரிவயர்”[5]

வேட்டை நாய்களை உடைய வேடன் ஓலைப் பெட்டியில் மான் தசையும் தயிரும் கொண்டு வந்து புலவர் குலப் பெண்களிடம் கொடுத்தனர் என்ற செய்தியின் வழியாக வேட்டுவரின் உணவு முறையை அறிந்துகொள்ள முடிகிறது.

முடிவுரை

வேட்டுவர்களின் புலம் பெயர்வு அவர்களின் வாழ்வியலின் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தன. இயற்கை சார்ந்த பழங்குடி

வாழ்க்கையிலிருந்து இடம் பெயர்ந்த வேட்டுவர்கள் புதிய சமூகவியல் சூழலில் தங்களது வாழ்வை அமைத்தனர். புழங்கு பொருள்கள் மூலம் அவர்களின் வாழ்வியல் கூறுகளை அறியமுடிகிறது. அவ்வகையில், சங்க இலக்கியங்கள், காப்பியங்கள்மூலம் வேட்டுவர்கள் பற்றிய செய்திகள் அறிந்து கொள்ள முடிகிறது.

சான்றெண் விளக்கம்:

1. சிலப்பதிகாரம், உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகர், பக்.64-66
2. சிலப்பதிகாரம், உரையாசிரியர் ஞா.மாணிக்கவாசகர்
3. தொல்காப்பியம் பொருளதிகாரம்ச. திருஞானசம்பந்தம், நூற்பா-23
4. அகநானூறு, பாடல் எண்- 202
5. புறநானூறு, அ.ப. பாளையன். பாடல் எண்-33
6. சிலப்பதிகாரம், ஞா. மாணிக்கவாசகர், பக்.456.

இலக்கியங்களில் வேட்டுவர்

ப.நிவேதா,
முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு,
தமிழ்த்துறை, புத்தனாம்பட்டி.
செல்: 9790610481
மின்னஞ்சல் : nive21nmc@gmail.com

முன்னுரை

வேள் என்ற சொல்லின் அடிப்படையில் இருந்து வேட்டுவர் என்ற சொல் உருவானது. வேட்டுவர் என்பதன் பொருள் வேடன், வேட்டைக்காரன், வேட்டைக்குச் செல்பவன் ஆகிய பெயர்களால் குறிப்பிடப்படுகிறார்கள். வேட்டைக்காரன் சமுதாயமாகவே மனிதன் வெகுகாலம் வாழ்ந்து வந்திருக்கிறான். அதாவது வேட்டையாடி மிருகங்களை உணவாகக் கொள்ளுதல் வேட்டுவனின் தொழிலாகும். வேட்டுவர் சமுதாயம்தான் பழங்குடி மக்களாக இருந்திருப்பார்கள். வேட்டுவ இனம் பற்றிய செய்திகளைப் பார்த்தால் புராண இதிகாசங்களில் குறிப்பாக வரலாறுகளில் வேட்டைக்குச் செல்லாதவர்களே இல்லை என்கின்ற நிலையினைப் பார்க்கலாம். இலக்கியங்களில் வேட்டுவர் பற்றியச் செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

வேட்டுவரின் பிற பெயர்கள்

வேட்டையாடுதலைத் தமது முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்கள் வேட்டுவர்கள். வேடர் என்ற சொல்லே வேட்டுவர் என்று ஆயிற்று. இவர்கள் வேடன், வெற்பன், சிலம்பன், எயினன், ஊரன், வேட்டைக்காரன், வேட்டுவன், வேட்டுவதியரையன், ஊராளி மற்றும் நாடாழ்வான் முதலான பெயர்களாலும் அழைக்கப்பட்டனர். இவர்கள் கவுண்டர், காடவராயன், மன்றாடியார், பல்லவராயர், காங்கயமன், நாயக்கர், முத்தரையர், காடுவெட்டி ராயர், வள்ளல், கொங்கு ராயர், ஊர்க்கவுண்டர், கங்கதிராயர், மற்றும் பிள்ளை முதலான பட்டங்களைப் பெற்றிருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளால் அறியலாம். வேட்டுவ

வேந்தர்களோ பல்லவராயர், பூவலராயர், சந்தனராயர் மற்றும் நரசிங்கராயர் முதலான பட்டப் பெயர்களை கொண்டிருந்தனர் என்பதன் குறிப்பு நாட்டுச் செப்பேடுகளால் அறியலாம்.

காலந்தோறும் வேட்டுவர்

சங்க காலத்திலும் அதற்கு முன்பும் கொங்கு நாட்டில் வேட்டுவர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதனைச் சங்க இலக்கியச் சான்றுகளால் அறியலாம். அக்காலகட்டத்தில் இவர்கள் வேட்டையாடுதலையே தமது தொழிலாகக் கொண்டிருந்தனர். பின்னர் இவர்களது வாழ்வில் மாற்றம் ஏற்பட்டது.

கல்வெட்டுகள்

வீரத்திலும், வேட்டுவர் சிறந்திருந்தனர் என்பதனை மன்னர் களுக்குப் படையுதவி அளித்தல், ஆநிரை மீட்டல், கள்ளர்களை அடக்குதல், நாட்டிற்காக வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல் போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அரசர்களுடைய கடமைகளில் ஒன்று காட்டை அழித்து நாட்டை உருவாக்குவதும், கொடிய மிருகங்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதும்தான். இன்றைக்கும் கல்வெட்டுகளில் புலிக்குத்திமேடு என்ற இடத்தில் எழுந்து நிற்கின்ற புலியைக் கையினால் குத்தி ஒருவன் போராடி வெல்வது போன்ற காட்சிகள் இருக்கின்றன.

இலக்கியங்களில் வேட்டுவர்

சிங்கத்தோடும் புலியோடும் மனிதர்கள் போராடி இருக்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் வெறுங்கையோடும் போராடியிருக்கிறார்கள். ஒரு முறை அரிச்சந்திரனிடம் மக்கள் வந்து முறையிடுகிறார்கள்; என்னவென்றால் காட்டுக்குள் மிருகங்கள் வந்திருக்கின்றன. நீங்கள் வேட்டைக்கு வர வேண்டும் என்று சொன்னதும் அரிச்சந்திரன் வேட்டைக்குச் சென்ற சமயத்தில்தான் விசுவாமித்திரர் சூழ்ச்சியால் அவனுக்கு வஞ்சகம் செய்கிறார். அரிச்சந்திர மகாராஜா வேட்டைக்குச் சென்றதையும் பார்க்கிறோம். அதேபோல மன்னர்கள் எல்லாரும் வேட்டைக்குச் செல்கின்ற முறையயும் வைத்திருந்தார்கள்.

கடவுளே வேட்டைக்கு வந்திருந்த செய்திகளைப் பார்க்கின்றோம். அதாவது, சிவபெருமான் தன்னை நோக்கி தவம் இருந்த அர்ஜுனனுக்குப்

பாசுபத அஸ்திரம் அளிப்பதற்காக வேட்டைக்காரன் போல வேடம் அணிந்து வந்ததாகவும், பின்னாடி பார்வதி தேவி, உங்களுடன் நானும் வந்து பார்க்கிறேன் நீங்க சண்டை போடுவதைக் காண்பதற்காக குழந்தையாகிய முருகனைக் கையில் தூக்கிக்கொண்டு போனதாகவும் வில்லி பாரதத்தில் வில்லிபுத்தூரார் கூறியிருக்கின்றார். கிருஷ்ண பரமாத்மாவோட வாழ்க்கையிலும் கடைசியில உட்கார்ந்து இருந்தபோது ஒரு வேடன் அவரை மான் என்று நினைத்து அவருடைய பெருவிரலில் அம்பு எய்தான். முருகப்பெருமான் வள்ளியை மணம் புரிவதற்காக வேலன், வேடன் விருத்தன் போன்ற பல்வேறு வடிவங்களில் வந்ததாகவும் கூறப்படுகிறது.

காளத்தி வேடனும் கங்கை வேடனும்

தமிழ்நாட்டுக் காளத்தி மலையிலே தோன்றினான் ஒரு வேடன். வடநாட்டுக் கங்கைக் கரையிலே பிறந்தான் மற்றொரு வேடன். அவ்விருவராலும் வேடர் குலம் பெருமையுற்றது. காளத்தி வேடனைக் கண்ணப்பன் என்றும் கங்கை வேடனைக் குகன் என்றும் இலக்கிய உலகம் போற்றும். இருவரும் உயரிய அன்பு நெறியைக் கடைபிடித்து அழியாப் புகழ் பெற்றனர்.

குல முதல்வராக கண்ணப்பர்

பக்திச் சிறப்புடைய கண்ணப்பரையே தம் குல முதல்வராக வேட்டுவர் கொண்டுள்ளனர். ஒரு நாள் திண்ணன்(கண்ணப்பர்) நாணன், காடன் ஆகிய நண்பர்களோடு வேட்டையாடச் சென்றார். வேட்டைக்காக விரித்த வலைகளை அறுத்துக்கொண்டு ஒரு பன்றி மட்டும் ஓடியது. விடாது துரத்திச் சென்று, புதருள் மறைந்த அந்தப் பன்றியைத் திண்ணன் தம் குறுவாளால் வெட்டி வீழ்த்தினார். இதனைக் கண்ட நண்பர்கள் வியந்து, திண்ணனின் (கண்ணப்பரின்) வலிமையைப் பாராட்டினார்கள். அருகே ஓடும் பொன்முகலி ஆற்றையும் வானாளாவ நிற்கும் காளத்தி மலையையும் கண்டு வியந்தார் திண்ணன். இதனைக் கண்ணுற்ற நாணன் இம்மலையின் மீது குடிமித் தேவர் இருக்கிறார். அவரைக் கும்பிடலாம் வா என்றான். மலை ஏறும் போது திண்ணனுக்கு மட்டும் புதுவிதமான இன்பமும் உணர்வும் ஏற்பட்டன. குடுமித் தேவருக்கு, சிவ கோசரியார் என்பவர் ஆகம விதிமுறைப்படி பூசை செய்வதனை நாணன் மூலம் அறிந்தார்.

மலையேறிய திண்ணன் குடுமித்தேவரைக் கண்டவுடன் அவரை வணங்கியும், கட்டித் தழுவியும் ஆடினார்; பாடினார்.

நண்பன் காடன் ஆற்றங்கரையில் தீயிலிட்டுப் பக்குவப்படுத்திய இறைச்சியைத் தன்னுடைய ஒரு கையில் எடுத்துக் கொண்டார். மறுகையில் வில் இருந்ததால் வாய் நிறைய ஆற்று நீரையும், அருகில் இருந்த மரத்தின் மலர்களைத் தலையில் சொருகியும் கொண்டு வந்தார். குடுமித் தேவருக்குத் திருமஞ்சனமாகத் தன் வாய் நீரையும், அமுதமாகப் பன்றி இறைச்சியினையும் தலையில் சூடிய மலரை வழிபாட்டு மலராகவும் இட்டு மகிழ்ந்தார் திண்ணனார். பின் இரவு முழுவதும் வில்லேந்திக் காவல் புரிந்தார். காலையில் குடுமித்தேவருக்கு திருவமுது தேடிவரப் புறப்பட்டார்.

வழக்கம் போல பூசை புரிய வந்த சிவகோசரியார் இறைவன் மீது இருந்த இறைச்சி முதலானவற்றைக் கண்டு வருந்தினார்; புலம்பினார். பின் அவற்றை நீக்கித் தூய்மை செய்து பூசை புரிந்து சென்றார். அடுத்து திண்ணனாரும் வந்து இறைச்சி முதலானவற்றை வைத்து வழிபட்டார். மறுநாளும் இறைச்சி முதலானவை இருப்பது கண்டு வருந்திய சிவகோசரியார் இறைவனிடம் முறையிட்டு வீட்டிற்குச் சென்று உறங்கினார். அவரது கனவில் சிவபிரான் தோன்றித் திண்ணனாரின் அன்பு வழிபாட்டை நாளை மரத்தின் மறைவில் நின்று பார்ப்பாயாக என்று கூறி மறைந்து அருளினார்.

ஆறாம் நாள் திருக்காளத்தி நாதர் திண்ணனாரின் அன்பின் பெருமையைக் காட்ட, வலக்கண்ணில் இருந்து உதிரம் பெருகும்படிச் செய்தார். அதனைக் கண்ட திண்ணனார், செய்வது அறியாமல் திகைத்தார். பின் தம் கைகளால் துடைத்தாலும் பச்சிலை இட்டாலும் நிற்கவில்லையே என வருந்தி நின்றபோது ஊனுக்கு ஊன் என்ற பழமொழி அவரது நினைவுக்கு வந்தது. உடனே தம் வலக்கண்ணை அம்பினால் அகழ்ந்து எடுத்து அப்பினார். உதிரம் நின்று விட்டது. இதைக்கண்டு மகிழ்ந்து ஆடினார். சிவபெருமான் இடக்கண்ணிலும் உதிரம் பெருகும்படி செய்தார்.

தம் இடக் கண்ணையும் பெயர்த்து எடுத்து அப்பினால் உதிரம் நின்றுவிடும் என்று உணர்ந்தார். தம் மறு கண்ணையும் பெயர்த்து விட்டால் இறைவனின் இடக்கண்ணைச் சரியாகக் கண்டறிய முடியாது

என்பதால், அடையாளத்துக்காகத் தம் காலின் பெருவிரலை இறைவனின் உதிரம் பெருக்கும் கண் மீது ஊன்றிக்கொண்டார். அம்பினால் தம் இடக்கண்ணைப் பெயர்க்கத் தொடங்கினார். உடனே காளத்திநாதர் நில்லு திண்ணப்பா என்று மூன்று முறை கூறி திண்ணனாரைத் தடுத்து அருளினார்.

இதனைக் கண்ட சிவகோசரியார் தம்மை மறந்து சிவன் அருளில் மூழ்கித் திளைத்தார். அன்று முதல் இறைவனுக்கே தன் கண்ணைப் பிடுங்கி அப்பியதால் திண்ணனார் கண்ணப்பர் என்று அழைக்கப்பட்டார்.

முடிவுரை

வேட்டைக்காரச் சமுதாயமாக மனித இனம் இருந்தது என்பதை நாம் வரலாற்றிலே படித்தாலும் கூட இலக்கியங்களிலும், புராணங்களிலும் மனிதர்களும், அரசர்களும், கடவுளர்களும் வேட்டையாட வந்திருக் கிறார்கள். வேட்டுவர்களுடைய வரலாறு என்பது இலக்கியத்திலும், புராணத்திலும், மனித வாழ்க்கையிலும் இணைந்து வருகின்ற ஒரு அற்புதமான பாத்திரமாகத் தோன்றுகிறது. வில், அம்பு, ஈட்டி வைத்துக்கொண்டு வேட்டையாடுவது ஒருவகை; வெறுங்கையிலேயே வேட்டையாடுவது மற்றொருவகை என்று பலவகையாகப் பிரிக்கலாம். வேட்டையாடுவது என்பது வீர விளையாட்டுகளில் ஒன்றாக இருக்கிறது. அவ்வாறு இலக்கியங்களில் வேட்டுவர் இனம் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் வாயிலாக அறிய முடிந்தது.

பழங்குடி வேட்டை வாழ்வியலில் பகிர்வுப் பண்பாடு

முனைவர் வே. நெடுஞ்செழியன்
முதல்வர் - பணிநிறைவு,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஜம்புகுளம், இராணிப்பேட்டை (மா).

முன்னுரை

பழங்குடி என்ற சொல்லை, "பதியெழுவறியாப் பழங்குடி" என்று முதன்முதலாக, மலைபடுகடாம், மண்ணின் பழமையான குடி என்ற பொருளில் கையாண்டுள்ளது (மலைபடு. அடி.479). ஒரே விதமான, பழமையான வாழ்க்கை முறையைப் பின்பற்றி ஓர் இடத்தில் காலங்காலமாக வாழும் சமூகம் என்று பொருள் தருகிறது க்ரியா தற்காலத் தமிழகராதி. (ப.694) இப்புவியின் இயற்கை வளத்துக்கு யாதொரு கேடும் சூழாது நிலமும் நீரும் இணைந்து இயற்கையை வளப்படுத்தும் பல்லுயிரிகளின் தொட்டிலாகிய மலைக்காடுகளில் வாழும் இயல்பினர் பழங்குடி எனப்படுகின்றனர். உழைப்பும் பகிர்வுமே இவர்தம் வாழ்வின் அடிப்படை. உணவுக்காக வேட்டையாடுதலும் இருத்தலுக்காகப் போராடுதலும் அடிப்படைப் பண்பாடாகும். தாங்கள் வேட்டையாடியும் போராடியும் பெற்ற பொருள்களை உடைமையாகக் கொள்ளாது, உழைப்பின் பங்களிப்புக்கேற்பப் பகுத்துண்ணும் பகிர்வுப்பண்பாடே அவர்களைப் பழங்குடிகளாக நிலைநிறுத்துகிறது. இப்பழங்குடி வாழ்வியலின் கூறாக அமைந்த பகிர்வுப் பண்பாடு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

பழங்குடி வாழ்வியலின் அடிப்படைக் கோட்பாடுகள்

இயற்கையோடு இணைந்த வாழ்வில் இயற்கையை உற்றுநோக்கி நிலமும் காலமும் இணைந்து இயக்கும் சூழலியலை உணர்ந்து இயைந்து வாழ்தலைத் திணைவாழ்க்கை என்று சங்க இலக்கியங்கள்

குறிப்பிடுகின்றன. திணைசார் இனக்குழுக்களின் உற்பத்திசார் நாகரிக வளர்ச்சி நோக்கிய வாழ்விற்குள் தங்களை ஒப்படைக்காமல் வேட்டை மற்றும் சேகரிப்பு வாழ்வியலையே கோட்பாடாகவும் பண்பாடாகவும் கட்டமைத்துக்கொண்டு பழங்குடிகள் வாழ்ந்தமையைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றன.

பழங்குடி வாழ்வியலின் அடிப்படைக் கோட்பாடுகள் இரண்டு. ஒன்று இன்றில் வாழ்தல் கோட்பாடு. மற்றொன்று உடைமை மறுப்பு. இவ்விரண்டுமே பகிரும் உணர்வுக்கும் பகுத்துண்ணும் பண்புக்கும் அடிப்படைகளாகின்றன. பழங்குடி மாந்தர் உணவுத்தேவையைத் வேட்டைத்தொழில் வழியே அன்றன்றே நிறைவேற்றிக் கொள்வதை இயல்பாகக் கொண்டிருந்தனர். அவர்கள் உணவாகக் கொண்டவை பெரும்பாலும் உயிரினங்களின் இறைச்சியும் காய்கனிகளும் ஆகிய அழுகும் இயல்புடையவை. மேலும் கையில் வில்லும் வேலும் இருந்தால் கண்ணெதிரே உணவு என்ற காட்டுச்சூழலில் வாழ்ந்தவர்கள். வேட்டை என்பது கூட்டுழைப்பாக நிலவியது. எனவே, ஒரு விலங்கு உணவாகக் கிடைத்தநிலையில் அதனை அப்போதே தம்கூட்டத்தாரோடு பங்கிட்டுப் பகுத்துண்டனர்.. சான்றாக, இரவில் பன்றியை வேட்டையாடுவதற்காகக் மழைநீர் சேகரிப்புக்காக வெட்டப்பட்டிருந்த குழிகளுக்குள் மறைந்து காத்திருந்து பன்றி கிடைக்காத போது, சோர்ந்துவிடாது, பகலில் தாமரைஇதழ் போன்ற காதுகளைக் கொண்ட முயல்களை நாய்களைக்கொண்டு புதருக்கு விரட்டி வலைபட்ட அம்முயல்களைக் கூறுபோட்டு அப்போதே பங்கிட்டு உண்டனர் என்று கூறும் பெரும்பாணாற்றுப்படை இப்பகுத்துண்ணும் கோட்பாட்டை, **“கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும் அருஞ்சுரம்”** என்று குறிப்பிடுகிறது. (பெரும்பாண். அடி.115-116).

பழங்குடி மக்கள் கூட்டுச்சமூகமாக வாழ்ந்தனர். மகப்பேறு என்பது தாயின் வழியே உருவான கூட்டுச் சமூகத்தின் உற்பத்தி. தாயின் வயிற்றிலிருந்தே உலகில் உயிர்கள் தோன்றகின்றன. ஆணையும் இம்மண்ணில் பெற்றெடுப்பவள் தாய். பாலூட்டி வளர்ப்பவளும் தாய் அந்தத் தாயே தம்மைக் காத்து வழிநடத்துவாள் என்ற பார்வையில் தந்தையாளுமை உருவாகாத நிலை. காலப்போக்கில் தாயாளுமையின் இயங்கும் செயல் தலைமை ஆணுக்கு வழங்கப்பட்டது. ஆயினும் அது தாய்வழிப் பெற்றதாகவே அமைந்தது. மலைமகள் மகனே மாற்றோர்

கூற்றே வெற்றி வெல்போர்க் கொற்றவைச் சிறுவ (திருமுருகு.அடி. 257-258) என்று திருமுருகாற்றுப்படை தாய்வழித் தலைமையைச் சுட்டுவதைக் காணலாம். எனவே, கூட்டுச்சமூக வாழ்வில் குடும்பம் தலைமுறை என்கிற உடமைப் பார்வையின்றி வாழ்ந்தனர். அதனால் உணவுநுகர்வு மற்றும் இன்பநுகர்வு தவிர பிற பொருள்கள் யாவும் இவர்களுக்குத் தேவையில்லாதன. இதனை மணிமேகலையில் ஆதிரை பிச்சையிட்ட காதை விளக்குகிறது. தமக்கு அறவுரைகளை வழங்கிய சாதுவனிடம், நாகர் தலைவன் எங்களுக்குத் தேவையான அறவுரைகளை எமக்களித்தாய். இதோ எமக்குத் தேவையில்லாது இங்குக் குவிந்திருக்கும் உடைமைகளை நீயே எடுத்துக்கொள்.

“ஈங்கு எமக்கு ஆகும் இவ்வறம் செய்கேம்
ஆங்குஉனக்கு ஆகும் அரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலம்கவிழ் மாக்களை
உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்குஇவை”
(ஆதிரை. அடி.118-121)

என்று கூறுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இந்த நோக்கில் ஒப்பிட்டுப் பார்த்தால், மலைபடுகடாஅத்தில் நிலந்தினக் கிடக்கும் நிதியம் (மலைபடு. அடி.575) உடைமையைக் கருதாத பழங்குடி வாழ்வியல் கோட்பாட்டைப் புலப்படுத்தும்.

வேட்டுவர் பழங்குடி

தொல்காப்பியர் திணைக்கோட்பாட்டை விளக்குமிடத்து உயர்திணையாகிய மாந்தரைக் கருபொருளுள் அடக்காது, தனியே குறிப்பிடுகின்றார். நானிலம் வாழ் ஐந்திணை மாந்தருள்,, முல்லைத்திணைக்கு மட்டும் ஆயர் வேட்டுவர் என்று இருபிரிவினரான மாந்தரைக் குறிப்பிட்டுள்ளார்.

“ஆயர் வேட்டுவர் ஆயிரு திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”
(தொல்.பொருள்.அகத்.நூ.23)

ஆயர் என்பவர்கள் கால்நடையை உடைமையாக அடையாளம் கண்டு அவற்றின் பால்படு பொருள்களை வணிகம் செய்து வாழும் நாகரிகம் கண்டவர்கள். விலங்குகளோடு விலங்காக வேட்டையாடுதல் வழி அழித்தல் நிகழ்த்தாமல் பால்படு பொருள்கள் வழியே ஆக்கம்

வளர்த்தனர். விலங்குகளில் பயன்நல்குவன அறிந்து அவற்றை உடைமையாக்கிக் கொள்வதன் வழி கொலைத்தன்மை விடுத்து, நேசிப்பையும் வழிநடத்தலையும் உணர்ந்து மெல்லியல்பினராக நடத்தை மாற்றம் கொண்டனர். ஆனால் வேட்டுவர்கள் இவ்வுடைமை உணர்வை ஏற்காதவர்கள்.

விலங்கியல்பான வேட்டை இயல்பைக் கைவிடாது வன்கண்மை உடையவர்களாகவே வாழ்வர்கள். இயற்கையின் படைப்பில் அனைத்தும் பொது என்ற கோட்பாட்டு உணர்வினர். எனவே, காட்டில் இயல்பாகத் திரியும் மாடுகளை ஆயர்கள் உடைமையாக்குதல் கண்டு, அவ்வுடைமைக்கு எதிரான போரில் ஆநிரைகளை தமக்கான நுகர்வுப்பொருளாக்க் கவர்ந்து செல்கின்றனர். எனவே, ஆயர் திணைசார் இனக்குழுவில் நாகரிகம் பெற்ற உடைமைமாந்தர் ; வேட்டுவர் உடைமை சாராத பழங்குடியினர் என்பதைத் தொல்காப்பிய நூற்பா உணர்த்துகிறது,

இன்றில் வாழ்தல் கோட்பாடு

இவ்வுலகில் உள்ள அனைத்தும் அனைவருக்குமானது. நாளும் வளரும் இயற்கையை நாளை என்ற தேவையை முன்னிறுத்தி அழித்துவிடாமல், தேவைக்கேற்பப் பயன்கொள்ளுதல் அதன் மூலம் இயற்கையின் சமநிலை குலையாமல் காப்பதே பழங்குடியினர் அறம். அதன் அடிப்படையில் அவர்கள் கடைப்பிடிப்பது இன்றில் வாழும் கோட்பாடு. நாளை குறித்த எந்த அச்சமும் கற்பனையும் இன்றி இன்றின் தேவையை மட்டும் எதிர்கொள்ளுதல். இன்றின் தேவை என்பது வயிற்றுப் பசிக்கு வேட்டையாடிய விலங்கின் இறைச்சியைப் பகிர்ந்துண்ணலும் உழைப்பின் வெற்றியைக் கொண்டாட, கள்ளுண்டு களித்தலும்.ஆகும். நாளை என்ற சுமை அவர்களுக்கு இல்லை. எனவே உயிர்வாழ்தல் குறித்த அச்சமும் அவர்களுக்கு இல்லை. இன்றில் வாழ்தல் என்ற இருப்பிற்கான போராட்டமே அவர்களை இயக்குகிறது.

உடைமை மறுப்புக் கோட்பாடு

நாகரிக உலகமோ, நாளை என்ற தேவையில் இயற்கையின் வளங்களைச் சூறையாடுகிறது. அவ்வளங்களை உடைமையாகக் குவிப்பதற்கு உழைக்கும் மக்களான இந்த பழங்குடிகளையே அடிமையாக்குகிறது. உடைமை குவிக்கும் பேராசையில், இயற்கையின்

சமநிலையைக் குலைத்து, இயற்கையின் மடியில் வாழ்வோரை வறுமைக்குள்ளாக்கி அலைவுறுத்துகிறது. எனவே, தமது இன்றில் வாழும் வாழ்வைச் சிதைக்கும் உடைமைக்கு எதிராகப் பழங்குடியினர் உடைமையாளரோடு போரிட்டு உடைமைகளைப் பொதுவாக்கும் நோக்கில் உடைமை மறுப்பைக் கோட்பாடாகக் கொண்டனர்.

மலைக்காடுகளில் பொதுவாகத் திரியும் மாடுகளை ஆயர்கள் உடைமையாக்கி ஒரு இடத்தில் பொதுவாகக் குவித்து வைக்கும்போது, தமக்கான உணவைத் தேடி அலைதல் இன்றி பட்டிகளை நேரடியாகத் தாக்கி எடுத்துக் கொள்ளுதல்வழி, உணவுக்கு உணவுமாயிற்று. உடைமைச் சிதைவுமாயிற்று. வேனிலில் உணவும் நீருமின்றி வாடும் வேட்டுவக்கூட்டம் தம் பாலைவழியில் வணிகக் குழுக்கள் இயற்கைத் தந்த வளங்களை, உடைமைக்குவிப்பாக எடுத்துச்செல்லும் போது, அவ்வணிகக் கூட்டத்தை அலறத்தாக்கிக் கொன்று, அவற்றைக் கைப்பற்றிக்கொள்ளும் போரும் உடைமைச் சிதைவுக்கானதாக அமைகிறது. அவற்றில் தமது உணவுத் தேவைக்கானதை மட்டும் நுகர்ந்துகொண்டு, பிற பொருள்களை பயன்பாடின்றி வறிதே நிலத்தில் போட்டுவிடுதல் பழங்குடி வாழ்வியலின் காட்சியாகும்.

பகிர்தல் கோட்பாடும் பண்பாடும்

இவ்விரு கோட்பாடுகளின் அடிப்படையில், பகிர்ந்து கொடுத்தல், பகுத்து உண்ணுதல் என்பன அகத்தில் உணவுக்கான வேட்டையாகவும் புறத்தில் உடைமையைச் சிதைக்கும் போராகவும் இணைந்து அழைக்கப்பெறும் இப்பழங்குடியினரின் பகிர்தல் பண்பாடாக உருக்கொண்டுள்ளது.

வேட்டைப் போரும் பகுத்தல் பண்பாடும்

தினைப்புனத்தை தன் துணையுடன் தின்றழித்த கொழுத்த ஆண்பன்றியை பாறைபொருந்திய சிறுவழியிடத்தே கொன்று கொண்டுவந்த கானவன் மனையோளிடம் கொடுக்க, அவள் அப்பன்றியை அறுத்து தன் குடிகளுக்கெல்லாம் பகுத்துக்கொடுத்தாள் என்பதை கபிலர்

பிணர்ச் சுவற் பன்றி தோல்முலைப் பிணவொடு
கணைக் கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்,

கல் அதர் அரும் புழை அல்கி, கானவன்,
வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை,
புனை இருங் கதுப்பின் மனையோள் கெண்டி,
குடி முறை பகுக்கும் நெடு மலை நாட! (நற். 336:1-6)

என்று எடுத்துரைத்துள்ளார்.

உடைமை மீதான போரும் பகிர்தல் பண்பாடும்

வேட்டுவர்களாகிய இக்கானவர்கள், ஆயர்களின் உடைமைகளாக விளங்கும் மாட்டுக்கூட்டத்தை உடைமைக்கெதிரான கொள்கையோடு கவரத் தலைபடுகின்றனர். அதற்கான தகுந்த நேரம் பார்த்து. இரவில் காட்டரண்களைத் தாக்கி அழித்து, ஆநிரைகளைக் கவர்ந்து கொள்வர். அவ்வாறு கவர்ந்தபின், அவற்றை உடனடியாக தம் கூட்டத்தாருடன் பங்கிட்டுக்கொள்வர். . அகநானூற்றில் அவ்வாறு பகுத்துக்கொண்ட மறவர்கள், பெரிய கற்பாறையின்கண் அவற்றின் தசைகளை அறுத்துத் தின்னும் இயல்புடையவர்கள் என்பதை,

இரவுக்குறும் பலற நூறி நிரைபகுத்
திருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் (அகநா. 97:4-6)

என்று எடுத்துரைத்துள்ளது.

பாதீடும் பகிர்ந்துண்ணலும்

உலகின் முதல்போரே இந்த உணவுக்கும் உடைமைக்கும் இடையே நிகழ்ந்த போர்தான். இதனையே **வெட்சிதானே குறிஞ்சியது புறனே** என்கிறார் தொல்காப்பியர். (தொல். பொருள். புறத்.நூ.59) வெட்சி குறிஞ்சிக்குப் புறனாகும் என்பது இவர்கள் கானவர்கள் என்பதை நிறுவுகிறது. எனினும் இவ்வினத்தின் தொடர்ச்சியாகவே முல்லை நிலத்து வேட்டுவரும் உள்ளனர். இக்குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து இயல்பிழந்த நிலையில் உருவான பாலைநிலத்தின்கண் வாழும் மறவர் இனமும் இக்கானவர் வேட்டுவரின் தொடர்நிலையே. இவர்கள் யாவருமே வேட்டையிலும் உடைமை மீதான போரிலும் கிடைத்தவற்றை உடனடியாகப் பகுத்துக் கொள்ளும் பண்பாட்டினர். இப்பகுத்தலையே தொல்காப்பயிர் பாதீடு என்கிறார்.

வெட்சித்திணையின் துறைகளுள் ஒன்று பாதீடு.(தொல்.பொருள். புறத். நூ61:7) நுவல்வழித் தோற்றம், தந்துறை, பாதீடு,உண்டாட்டு என்ற வரிசையில் இடம்பெறும் இப்பாதீடு, வெட்சியாரின் காட்டரணை அழித்துக் கவர்ந்துகொண்ட ஆநிரைகளைத் தங்கள் கூட்டத்தாரோடு பங்கிட்டுக் கொள்ளுதல் ஆகும். அவ்வாறு பங்கிட்டுக்கொண்ட ஆநிரைகளைக் கொன்று அறுத்து உணவாகக் கொள்ளுதலே உண்டாட்டு ஆகும்,

பகுத்துண்ணலும் கள்ளும்

உடைமை மறுத்து இன்றில் வாழும் பழங்குடி வாழ்வில் கள் என்பது உணவுப் பொருள்களுள் ஒன்று. வயிற்றுக்கு இறைச்சி. மகிழ்வுக்குக் கள் என்பது அவர்தம் உணவுப் பகிர்தல் கோட்பாடு. கள் என்பது உணர்வின்பம் நல்கி, அறிவை மயக்கி நடத்தைக் கேட்டினை விளைவிக்கக் கூடியது. தன்னறம் இழந்து களவு, காமம் சார்ந்த குற்றங்களை எளிதில் நிகழ்த்தத் தூண்டுவது. செயத்தக்கன கடியத்தக்கன அறியாதது. விளைவை ஆராயாது எண்ணியதைச் செய்யக்கூடியது ஆகிய காரணங்களால் கள்ளுண்ணுதல் குற்றம் என்கிறது உடைமை வர்க்கம்.

இயற்கையின் முன் அனைவரும் இயற்கையில் படைக்கப்பட்ட அனைத்தும் சமம் என்பதை மாற்றி, எளியோர் அதிகாரத்தின் கீழ் அடங்கி உழைப்பதற்கேற்ப அறங்களைக் கட்டமைத்தது உடைமை வர்க்கம். கள்குடி அவ்வறங்களிலிருந்து வெளியேறி சமத்துவம் நோக்கி வினாக்களை எழுப்பினால் சமூகத்தில் அமைதிக் குலைவை ஏற்படுத்தும்; உடைமை இருப்பு கேள்விக்குள்ளாகும் என்ற காரணங்களால் கள்ளுண்ணாமையை முதன்மையான அறமாக முன்னிறுத்துகிறது

இன்றின் வாழ்வியல் சார்ந்த இயற்கை அறத்தை மட்டுமே பின்பற்றுபவர்கள் பழங்குடிகள். உடைமையின்மையும் கூட்டுச்சமூக வாழ்முறையும் பின்பற்றிய காரணத்தால் பூட்டிவைத்துப் பாதுகாக்கும் சுமை இல்லாதவர்கள். எனவே பொய்ம்மைக்கும் இடமில்லாதவர். எனவே, அவற்றைப் பாதுகாப்பதற்காக ,உடைமைவர்க்கம் உருவாக்கி வைத்துள்ள கருத்தாக்கக் கற்பிதங்களும் அறக்கோட்பாடுகளும் அவர்தம் இன்றின் வாழ்வில் தேவை இல்லை. எனவே, உணவு சார்ந்தோ உறவு சார்ந்தோ இருப்பு சார்ந்தோ மறைப்பேதும் இல்லாத வாழ்வில் கள் இன்பம் நல்கும் ஒன்றே தவிர இயல்பு வாழ்வைக் குலைப்பதில்லை என்பது பழங்குடிகளின் வாழ்வியல் கொள்கை.

இன்றில் வாழும் வேட்டைச்ச மூகத்தினருக்கு அவர்தம் உழைப்பினால் ஏற்படும் அலைவுறு வாழ்வின் சோர்வைப் போக்கக்கூடியதாவும் கொண்டாட்ட மனநிலைக்கு உரியதாகவும் கள் திகழ்கிறது. எனவே, தம் உழைப்பில் வேட்டையாடியும் போரிட்டும் கவர்ந்து பங்கிட்டுக்கொண்ட மாட்டினைக் கூறபோட்டு உண்ணும்போது உடன் நுகர்வாகக் கள் இடம்பெறுகிறது.

உடைமைவர்க்கத்தோடு உடன்பாட்டில் கள்ளுண்ணல்

பின்னாளில், இயற்கை வளத்தை வணிகப்படுத்திய உடைமை வர்க்கம், பழங்குடியினரின் இந்த வேட்டைப் பண்பையும் கள்மீதான ஈர்ப்பையும் உடன்பாட்டின்வழி தமது உடைமைக் குவிப்புக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

வலம் சுரி மராஅத்துச் சுரம் கமழ் புது வீச்
சுரி ஆர் உளைத் தலை பொலியச் சூடி,
கறை அடி மடப் பிடி கானத்து அலற,
களிற்றுக் கன்று ஒழித்த உவகையர், கலி சிறந்து,
கருங் கால் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து,
பெரும் பொளி வெண் நார் அழுந்துபடப் பூட்டி,
நெடுங் கொடி நுடங்கும் நியம மூதூர்,
நறவு நொடை நல் இல் புதவுமுதற் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி

கல்லா இளையரான வேட்டுவர், சுரிந்த மயிர்க்கற்றைகளில் வெண்கடம்ப மலர்களைச் சூடிக்கொண்டு, கானம் அலற, பெண்யானையிடமிருந்து கன்றினைப் பிரித்து, வெண்கடம்பின் கிளைபிளந்து உருவாக்கிய நாரினால் அழுந்தக் கட்டி, நெடுங்கொடிகள் அசையும் வணிகவீதிகளைக் கொண்ட மூதூரின் கண் அமைந்த கள்விற்கும் அமைந்த கள்விற்கும் நல்லில் வாயிலில் பிணித்து, அதற்கு ஈடாக, கள்ளை விலையாக்கி உண்டு மகிழ்வர் என்கிறார் கல்லாடனார். இங்கு, அரசுசார் உடைமையாளருக்குத் தேவையான மலைக்காட்டின் பொருள்களை விற்கின்ற உடன்பாட்டினராக விளங்குவதையும் அதன்வழியே பழங்குடியிலிருந்து அரசு சார் உடைமை வர்க்கத்திற்குத் துணையாகும் இனக்குழுவினராக உயர்ந்தனர் என்பதை வேங்கடப்பகுதியை ஆண்ட பெருமகனாக வேடர்தலைவன் புல்லியைக் குறிப்பிடுவதிலிருந்து அறியமுடிகிறது.

இதன் தொடர்ச்சியிலேயே, இப்பழங்குடியினர் அரசு சார் உடைமை வர்க்கத்திற்குப் போர்க்களத்தில் உதவி, இனக்குழுத்தலைவர் என்ற அடையாளம் பெற்று, அதன் வழிப் பெற்ற செல்வங்களைத் தனக்கெனக் கொள்ளாது, தன்னை நாடிவந்த பாணர் முதலியோருக்கு வாரி வழங்குவதோடு. பகுத்துண்ணல் கொள்கையின்படி, கள்ளும் ஊனும் வழங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு சீறூர் இனக்குழுத்தலைவன் தன்னை நாடி வந்தவருக்கு வழங்க உணவுக்கு வழியின்றி,

நெருநை வந்த விருந்திற்கு மற்றுத் தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்; (புறநா.316)

தன் வாளையும் யாழையும் அடகு வைத்த செய்தியைக் காணும் போது உதவிக்கு வெளியிலிருந்து அழைத்த அந்த உடைமை வர்க்கம். இப்போது மலைக்காடுகளின் அருகிலேயே வணிகக் கடைகளை விரித்திருப்பதை அறிய முடிகிறது. இவையே மலைக்காடுகளின் பொருள்களுக்காகச் சந்தை விரித்திருக்கும் மூதூர்களில் அமைந்த அங்காடிவீதிகள். ஈடுவிலையாக கள்ளுக்கடைகள். இன்றும் பழங்குடியினர் நகர நாகரித்தில் முற்றிலுமாகத் தம்மை இணைத்துக் கொள்ளாமல், தமது மலைபடு பொருள்களையும் மரபுசார் பொருள் களையும் அங்காடிகளுக்கு அனுப்புதலைச் செய்தவாறு, உடைமை ஆசையின்றி, இன்றில் வாழ்தலையும் பகுத்துண்ணலையுமே வாழ்வின் அடையாளமாகக் கொண்டுள்ளனர் என்பதே அவர்களைப் பழங்குடிகளாகவே நிலைநிறுத்துகின்றது.

நிறைவுரை

பழங்குடியினர், வேட்டையாடுதலைத் தம் தொழிலாகக் கொண்டு, உடைமைக்கு எதிரான கொள்கையோடு தமக்குக் கிடைத்த உணவைத் தம்கூட்டத்தாரோடு பகுத்துப் பகிர்ந்துண்ணும் பண்பாட்டினர் சங்க இலக்கியத்தில் இப்பழங்குடியினர். வேட்டுவர், கானவர், மறவர் என்றவாறு அழைக்கப்பட்டனர். மலைக்காடுகளில் வாழும் இப்பழங் குடியினரின் பகுத்துண்ணல் கோட்பாடு உடைமைக்குவிப்புக்கு எதிராக விளங்கியதையும், பின்னாளில் அவர்களின் இவ்வேட்டை இயல்பையும் போரியல்பையும் உடைமையாளர்தம் தேவைக்கு உதவுதற்காக உடன்பட்டமையையும் இன்றும் உடைமையாளரொடு வணிக உறவு

கொண்டுள்ளனரேனும், உடைமை மீது ஆசையின்மை மற்றும் பகுத்துண்ணல் ஆகிய கோட்பாடுகளை இழக்காது வாழும் பண்பாட்டினர் என்பது இவ்வாய்வின் மூலம் பெறப்பட்டது.

துணைநின்ற நூல்கள்

1. அகநானூறு, கோவிலூர் மடாலயம், மதுரை, முதற்பதிப்பு, 2003
2. க்ரியாவின்,தற்காலத் தமிழகராதி, பா.ரா. சுப்பிரமணியன் (பதி.) சென்னை, முதற்பதிப்பு, 1992.
3. தமிழ் லெக்சிகன், தொகுதி 4, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1982.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், கு,வெ. பாலசுப்பிரமணியம் (உரை). நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல்பதிப்பு, 2019
5. நற்றிணை, கோவிலூர் மடாலயம், மதுரை, முதற்பதிப்பு, 2003
6. பத்துப்பாட்டு, கோவிலூர் மடாலயம், மதுரை, முதற்பதிப்பு, 2003
7. மணிமேகலை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, இரண்டாம பதிப்பு, 2000.

பக்தி இலக்கியங்களில் வேட்டுவர்

புலவர் சோணாமதியழகன்,
தமிழாசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கீழக்குறிச்சி, நாகப்பட்டினம்
அலைப்பேசி:9487889233

முன்னுரை

"அன்பு- உயிரின் உறைவிடம் என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுவார்".

"அன்பின் வழியது உயிர் நிலை" என்ற கூற்றிற்கு ஏற்ப உயிர்களிடத்துக் காட்டுகின்ற அன்பு ஒன்றே இறைநிலையைப் பெற்றுத்தரும் என்ற கொள்கையுடையவராகவே சேக்கிழார் விளங்கக் காணலாம். அவர் வழங்கிய பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் அன்பு உள்ளத்தினைக் காணமுடிகிறது. அந்த அடியவர் கூட்டத்தில் ஒருவராய் கல்வியறிவு இல்லா எளியவராய் வில் ஏந்திய வேந்தராய் கண்ணப்ப நாயனார் அறிமுகமாகிறார். இறைவனை எவ்வாறு வழிபடுவது. எங்ஙனம் வேண்டிக் கொள்வது என்று எதுவுமே அறிந்திடாதவராய் வந்து வணங்கியவர் கண்ணப்பர். அத்தகையவரை இறைவன் எப்படி ஆட் கொண்டார்? என்பது ஆராயத்தக்கதாகும். கண்ணப்ப நாயனாரின் பக்திச் சிறப்பினையும் அவர் மேற்கொண்ட இறையருள் நெறிகளையும் பின்வருவனவற்றுள் காண்போம்.

வேடர் குலத் தென்றல்

இயற்கை வளமும் உயர்ந்தோங்கிய மலைகளும் சூழ்ந்தது பொத்தப்பி நாடு. உடுப்பூர் பகுதியின் தலைவனாக விளங்கியவன் நாகன். "புதல்வர் பேறு" வேண்டி நீண்ட நாட்களாக மனைவி தத்தையுடன் "செவ்வேல் முருக வேளை" வணங்கினார்கள். நேர்த்திக் கடன் முடித்து ஆண் மகவைப் பெற்றுக் கொள்கிறார்கள். குழந்தையைக்

கையில் ஏந்திய நாகனுக்குப் பிள்ளை கணமாகத் தோன்றியதால் திண்ணன் என்று பெயர் சூட்டுகிறான்.

> **“அண்ணலைக் கையில் ஏந்தற்கு அருமையால் உரிமைப் பேரும் திண்ணன் என் றியம்பும் ..”**பா-17

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். வேடர் குலச்சூழலில் வளர்ந்த திண்ணனார். உரிய பருவம் வந்ததும் வில் வித்தையில் தேர்ச்சி பெறுகிறார். தந்தையின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்கிறார்.

திருக்காளத்தி நாதன்

திண்ணப்பர் வேட்டைக் கோலம் கொண்டு வேடர்களுடன் வனத்திற்குச் சென்று வேட்டையாடுகிறார். அங்கே வலையை அறுத்துக் கொண்டு மிக வேகமாக ஓடிய பன்றியை விரட்டிச் செல்கிறார். மலையருகே மர நிழலில் அப்பன்றியைக் குத்தி இருதுண்டாக்குகிறார். உடன் ஓடி வந்த நாணனும் காடனும் திண்ணனாரை வியந்து வணங்கி நிற்கிறார்கள். நீண்ட தூரம் வந்த களைப்பால் பசி வருத்தம் தோன்ற நீர் வேண்டி பொன்முகலி ஆற்றினை வந்தடைகிறார்கள். திண்ணனார் எதிரே உள்ள காளத்தி மலையினைப் பார்த்து “அங்கே போகலாம்” என்கிறார். மலைமேலே குடுமித்தேவர் இருப்பதைக் கூறி நாணன் அழைத்துச் செல்ல காடன் இறைச்சியைத் தீயிலிட்டுக் காய்ச்சத் தொடங்குகிறான். மலைமீது ஏறுகையில் தம் மீதுள்ள பாரம், குறைவதைப் போல் உணர்கிறார் திண்ணனார். திருக்காளத்தி நாதனைக் கண்டவுடனே அவரது அருள் பார்வையால் திண்ணனார் அன்புருவமாகிறார். சுவாமியைத் தழுவிக் கொள்கிறார். முத்தமிட்டு மகிழ்கிறார். இந்த இறைவன் தமக்கு அகப்பட்டது ஆச்சரியம் என்று சொல்லி ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

அன்பில் தனை மறந்தார்

இறைவன் திருமுடியிலே நீரை வார்த்து பச்சிலையும், பூவும் வைத்தது யார்? என்று திண்ணனார் கேட்க அந்தணன் ஒருவர் இவ்வாறு செய்து உணவு ஊட்டி சில வார்த்தை சொல்லியதை ஒருமுறைக் கண்டேன் என்று நாணன் தெரிவித்தான். இறைவனை இவ்வாறுதான் வணங்க வேண்டும் என்று அறிந்து கொண்ட திண்ணனார். சுவாமி பசித்திருப்பரே என்று எண்ணி பிரியமனமின்றி பிரிந்து காடன் காய்ச்சி வைத்த இறைச்சியினைத் தம் வாயில் இட்டு

மென்று இனிமையானதைத் தேக்கிலைத் தொன்னையில் வைத்து எடுத்துக் கொண்டு வாயில் நீரும் தம் தலையில் பூவும் வில்லும், அம்பும் எடுத்துக் கொண்டு மலையேறி வந்தான். சுவாமியின் தலைமீதுள்ள பூவைத் தம் கால் செருப்பால் அகற்றி வாயில் இருந்த நீரைத் திருவடியில் உமிழ்த்து பூவை சூட்டி, இறைச்சியைப் படைத்து உண்ண வேண்டினார். நாணனும் காடனும் செய்வதறியாது வேடருடன் திரும்பிச் சென்றனர். இரவு வந்தது இறைவனுக்குக் காவல் இருந்தார்.

பொழுது புலர்ந்தது திண்ணனார் வேட்டைக்குச் சென்றார் அந்தணர் சிவகோசரியார் அங்கு வந்தார். இறைச்சியும் எலும்பும்கண்டு நடுங்கி மனம்வருந்தி தூய்மைசெய்து மீண்டும் இவை நிகழாதிருக்க வேண்டி வழிபாடு செய்து சென்றார். நாணன் காடனால் செய்தியறிந்த பெற்றோர் மலைமேலே வந்து பல வகையால் முயன்றும் திண்ணானரை அழைத்துச் செல்ல இயலாது திரும்பினார். பகலில் வேட்டையாடி இறைச்சி படைப்பதும் இரவில் காவல் செய்வதுமாக நாள் பல கழிந்தன. திண்ணனார் தம்மை மறந்து இறையன்பில் திளைத்திருந்தார்.

கண்ணப்பனாரின் சிவத்தொண்டு

சிவகோசரியார் மனவருத்தத்தைப் போக்கும் பொருட்டு ஐந்தாம் நாள் இரவில் அவரது கனவில் தோன்றிய இறைவன் “அவனை வேட்டுவன் என்று நினையாதே. அவனது செயல் அனைத்தும் எனக்கு உகந்ததே. அன்பினால் நம்மைத் தவிர வேறு ஒன்றையும்அறியான். அவனது அன்பினை உனக்கும் காட்டுவோம். நீ நாளைக்கு நம்மருகில் ஒளிந்திருந்து பார்” என்று சொல்லி மறைந்தார். சிவகோசரியார் விழித்தெழுந்து தம் சிறுமை நினைத்து வருந்தி காலத்தே சென்று பூசை செய்து மறைந்திருந்தார்.

திண்ணனார் வேட்டையாடினார்

திண்ணனார் வேட்டையாடித் திரும்பினார். தீய சகுனங்கள் கண்டார். என் சுவாமிக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ என்று கலங்கி நடுநடுங்கி மிக வேகமாக வந்தடைந்தார். இறைவன் தனது வலக் கண்ணில் இரத்தம் சொரியச் செய்தார். இதனைக் கண்ட திண்ணனார் பதறி அழுதார். கைகளால் துடைத்தார். இரத்தம் நிக்காதது கண்டு மயங்கி விழுந்தார். பிறகு தௌ?ந்து இப்படிச் செய்தது யார்? என்று வில்லேந்தி அலைந்தார். ஒருவரையும் காணாது செய்வது அறியாது திகைத்துப் பச்சிலை பறித்து வந்து கண்களில் சாறு பிழிவார். இரத்தம் நிற்காதது

கண்டு ‘‘ஊனுக்கு ஊனிடல் வேண்டும்’’ என்று அறிந்து தம் கண்ணைத் தோண்டி இறைவன் கண்ணில்அப்பினார் இரத்தம் நின்றது.

மகிழ்ச்சியில் திளைத்தவர் மீண்டும் தமது மறு கண்ணிலும் இரத்தம் சொறியச் செய்தார். அஞ்சாத திண்ணனார் தமது இன்னொரு கண்ணையும் தோண்டி இறைவனின் கண்ணில் அப்ப எண்ணி அடையாளத்திற்காகத் தம் செருப்புக் காலைக் கண்ணருகில் ஊன்றிக் கொண்டு கண்ணைத் தொட்டபோது ‘‘கண்ணப்பா நில்’’ என்று அருளி திருக்கரத்தால் திண்ணனாரின் கையினைப் பற்றிக் கொண்டார்.

‘‘குறையற்ற பக்தியுடைய கண்ணப்பா! நீ நம்முடைய வலப்பக்கத்தில் நில்’’ என்று திருவருள் புரிந்தார். மேற்கண்டவாறு பெரியபுராணத்தில் இடம் பெற்ற திண்ணனார் கண்ணப்பனார் என்பதை வரலாற்றின் மூலம் புலப்படுகிறது.

உள்ளுணர்வில் திளைத்தார்

திண்ணனார் பொன்முகலி ஆற்றைக் கடந்து காளத்தி மலைமேல் ஏறுகையில் தம் மேலுள்ள பாரம் குறைவது போல் தெரிகிறது என்கிறார். இதனை

> **‘‘ஆவதன்? இதனைக் கண்டிங் கணைதொறும் என்மேற் பாரம்;**
> **போவதொன் றுளது போலும்’’**

என்ற பெரிய புராண வரிகளால் அறியலாம். இக்காட்சியினை அறிஞர் விளக்குகையில்

‘‘சாதாரண மனிதர்களுக்குரிய புலன்கள் ஆக்கிரமிப்பால் ஏற்படுகின்ற மனச்சுமையே ஆகும். அது உடற்சுமை அன்று மனச்சுமை என்பதைக் கூட வேறுபடுத்திக் காணமுடியாத ஓர் அப்பாவியாக இருக்கிறார் திண்ணனார்’’சேக்கிழார் தந்த செல்வம் ப.300

தன்னிலை கருதாதார்

திருகாளத்தி நதரைக் கண்ட நாள் முதலாகவே இரும்பு பொன்னானது போல் கொலையுருவாம் வேடர் நிலை மாறி அன்புருவாம் இறைநிலை அடைந்தார் திண்ணனார்.

இறைவனை எங்ஙனம் வழிபடுவது என்பதை அறியாத இவர் அருள் நிலையை வேண்டி நிற்காமல் வீடு பேற்றினைக் கேட்டு

அழுகாமல் கன்றுக்கு இரங்கும் தாய்பசு போன்ற இவரது செயல்கள் அமையக் கானலாம்.

பகலில் வேட்டையாடி இறைச்சியைப் படைப்பதும் வில்லேந்திக் காவல் காப்பதுமே இவரது பணியாகிறது. இவை அனைத்தும் தன்னலன் கருதாது பரோபகாரச் செயலாகவே வெளிப்படுவதை உணர முடிகிறது. இதன் அடையாளமாக இறைவன் கண்களில் இரத்தம் சொறிந்தபோது திண்ணா?ர் தம் கண்ணையே தோண்டி எடுத்து அப்பச் செய்த அருள் நிலையைப் பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது.

அமுது படைத்தார்

இறைவனுக்கு அமுது படைக்க வேண்டும் என்பதை அந்தணர் செயலால் அறிந்திருந்தார் திண்ணனார். காளத்திநாதரைக் கண்ட சிறிது நேரத்திலேயெ ஐயோ! இவருக்கு அமுது செய்வதற்கு இறைச்சி கொடுப்பார் ஒருவரும் இல்லையே!, இவர் இங்கே தனியே இருக்கிறாரே! இவரைப் பிரிந்து செல்லவும் மனமில்லை இவரது பசிபொறுக்கவும் மனம் சம்மதியேன் என்று தவிக்கிறார். சுவாமியைப் பிரிவதும் வந்து அணைத்துக் கொள்வதுமாகச் செய்வதறியாது தடுமாறுகிறார். ஒருவழியாகத் தௌ?ந்து இறைச்சி அமுது படைக்கிறார்.

“பசியால் சீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும், கேட்டபோதும் அறிந்த போதும் ஆன்ம உருக்கம் உண்டாகுமென்று அறிய வேண்டும் ஆன்ம உருக்கமே சீவகாருண்யம்”-உரைநடைப் பகுதி ப.81

முடிவுரை

சேக்கிழார் வழங்கிய பெரியபுராணத்தில் கண்ணப்பநாயனாரின் வரலாற்றை உற்றுநோக்குகையில் அவரது பக்திச் சிறப்பின் மேன்மையை அறிந்துகொள்ள முடிகிறது.

திண்ணனார் சுவாமிக்கு அமுது படைக்க மேற்கொண்ட முயற்சியில் அவருக்குள் மலர்ந்த “ஜீவகாருண்யம்” வெளிப்படக் காணலாம். திருக்காளத்தி நாதனைக் கண்டு அருட்காட்சி பெறும் வரையில் திண்ணனார் இறையருளால் சத்விகார உள்ளுணர்வில் திளைத்திருந்தார் என்று அறிய முடிகிறது.

கண்ணப்ப நாயனாரின் அருள் நிறைந்த வாழ்க்கையோடு சுத்த சன்மார்க்க நெறியினைப் பொருத்திப் பார்க்கையில் வேதாகம நெறிகடந்த ஒப்புயர்வற்ற இறையருள் நிறைந்த உள்ளுணர்வில் திளைத்த சன்மாக்கியாகவே கண்ணப்ப நாயனார் காட்சிதரக் காணலாம்.

துணைநின்ற நூல்கள்:

1. முனைவர்த.கோ.பரமசிவம், பெரியபுராணம் ஆய்வு மாலை, பதிப்பு நவம்பர்-2001, யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ், 101, மைலாப்பூர்- 600 004.
2. திரு.வி.கல்யாணசுந்தரனார்,மா. பாலசுப்பிரமணியர், சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம், பதிப்பு செப்டம்பர்-1999, கங்கை புத்தக நிலையம், கீதையாளு தெரு, தியாகராய நகர், சென்னை- 600 017.
3. ச. சுப்பராய நாயக்கர், பெரியபுராணம், 2018-நவம்பர், சிவாலயம், சென்னை- 600 004.
4. வ.த. இராமசுப்பிரமணியம், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் மூலமும், உரையும், டிசம்பர்-2002, திருமகள் நிலையம், சென்னை- 600 017.
5. புலவர்பி.ரா.நடராசன், பெரியபுராணம் மூலமும், உரையும், டிசம்பர்-2006, உமா பதிப்பகம், சென்னை- 600 001.

சங்க இலக்கியங்களில் வேட்டுவர் வாழ்வியல்

முனைவர் கொ.பரிமளம்
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர்
கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர் 641 014.
parimalamtamil@srcw.ac.in

முன்னுரை

சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் என்பது இயற்கையைச் சார்ந்தே அமைந்தது ஆகும். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்த நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு தங்களுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டனர். மேலும் நிலப்பரப்பின் தன்மைக்கேற்ப தொழில், உணவு முறை, வாழும் இடம், முதலானவைகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலம் சார்ந்த வாழ்வியல் முறையினுள் மக்களும் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து வாழ்ந்து வந்தனர். சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் வகையினருள் வேட்டுவர் என்ற இன மக்களின் முக்கியத்துவம் குறித்து சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது.

கொங்குநாட்டு வேட்டுவர்

வேட்டுவர் இனத்தைச் சேர்ந்த மக்கள் கொங்கு நாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பதற்கு இலக்கியங்கள் சான்றளிக்கின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களிலும் கல்வெட்டுகள், செப்பேடுகள், பாறை ஓவியங்கள் மற்றும் குகை ஓவியங்கள் கொங்கு வட்டார ப்பகுதிகளில் கிடைக்கின்ற சான்றுகள் மூலம் வேட்டுவ மக்கள் கொங்கு நாட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை அறியமுடிகின்றது.

வேட்டுவ வீரமகளிர்

வேட்டுவ இனமக்கள் வேட்டையாடும் தொழிலினை முதன்மையாகக் கொண்டனர். வீரமும் துணிவும் மிக்க மனவன்மை கொண்ட பண்பினைக் கொண்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

வேட்டுவர்கள் வீரகுணம் கொண்டு வேட்டைத் தொழிலில் ஈடுபட்டு வீரமிக்க ஆளுமைகளாகத் திகழ்ந்துள்ளனர் என்பதற்கு நற்றிணையின் இப்பாடல் சான்றாகத் திகழ்கின்றது:

கோடு துவையா கோள் வாய் நாயொடு
காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு
வயவர் மகளிர் என்றி ஆயின்
கோடு துவையா கோள் வாய் நாயொடு - நற்றிணை - 276

பகல்பொழுதில் தன்னைக் காணவந்த தலைவனிடம் உலக இயல்பைக் கூறி அவனது ஊருக்குச் செல்லுமாறு, தலைவி கூறுவதாக அமைந்த இப்பாடலில் வேட்டுவ மகளிரின் வீரத்தைக் குறமகளிர் உயர்த்திக் கூறுவதாக விளக்குவது மேலும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ளது. கொம்பை ஊதிக்கொண்டு இறையை கௌவிப் பிடிக்கும் நாயுடன் காட்டில் அலைந்து மானை வேட்டையாடும் வீரமிக்க வேட்டுவரின் மகளிர் அல்ல; மலைகளில் வாழ்கின்ற எங்களைக் கொடிச்சியர் என்று அழைப்பர் எனத் தலைவனிடம் வேட்டுவரின் வீரம் உயர்த்திக் கூறப்பட்டுள்ளது.

வேட்டைத்தொழில்

வேட்டுவர்கள் வேட்டையாடுதல், விவசாயம் முதலான தொழில்களைச் செய்து வந்துள்ளனர். ஆயினும் வேட்டையாடுதல் என்பது முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். வேட்டுவர்கள் என்ற அடையாளமே காட்டிற்குள் வேட்டை நாய்களுடன் சுற்றித் திரிந்து வேட்டையாடும் வழக்கத்தைக் கொண்டவர்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களின் பல பாடல்கள் மூலம் அறியலாம்.

...கல்கெழு சிறுகுடி எய்திய பின்றை
ஊதல் வேண்டுமால் சிறிதே வேட்டொடு
வேய் பயில் அழுவத்துப் பிரிந்த நின்
நாய் பயிர் குறி நலை கொண்ட கோடே! - அகநானூறு - 318

தலைவியைக் காண இரவு நேரத்தில் வந்த தலைவனைப் பகலில் காணும்படி கூறுவதாக அமைந்த இப்பாடலில் தலைவன் வரும் பாதையில் விலங்குகளும் வருகின்றன. இதனால் தனியே காட்டு வழியில் வரும் தலைவனுக்கு ஊறு நேர்ந்து விடுமோ? என்ற அச்சத்தில்

தலைவியைக் காண வேண்டுமெனில் பகல் பொழுதில் வருவாயாக; இரவு நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும் என அறிவுறுத்துகிறாள். மேலும் இன்று தலைவியைக் கண்டுவிட்டு ஊருக்கச் சென்றவுடன் நீ வேட்டைக்குச் செல்லும் போது மூங்கில் காட்டில் பிரிந்துசென்ற உன்னுடைய வேட்டை நாய்களைத் திரும்ப அழைப்பதற்காகப் பயன்படுத்தும் கொம்புக் கருவியை ஊதவேண்டும். அதன் ஒலிகேட்டு நீ பாதுகாப்பாகசச் சென்று விட்டாய் என்பதை நாங்கள் உணர்ந்து கொள்கிறோம். அதனால் வேட்டைக்குப்பயன்படுத்தும் கொம்புக்கருவியை ஊதுவாயாக என்று தலைவனிடம் தோழி கூறுவதாக அமைந்த இப்பாடலில் வேட்டுவரின் வேட்டைத்தொழில் நுட்பத்தை அறிய முடிகின்றது.

வேட்டைக்கருவிகளை உருவாக்குதல்

வேட்டுவர்கள் வேட்டைத் தொழிலில் சிறந்து விளங்கியதோடு வேட்டைக்குத் தேவையான கருவிகளையும் செய்யும் அறிவுத்திறம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பதற்குப் புறநானூற்றுப் பாடல் சான்றாக அமைந்துள்ளது.

வெருக்கு விடை அன்ன வெகுள் நோக்குக் கயந்தலை
புள் ஊன் தின்ற புலவு நாறு கய வாய்
வெள் வாய் வேட்டுவர் வீழ் துணை மகாஅர்
சிறியிலை உடையின் சுரையுடை வால் முள்
ஊக நுண் கோல் செறித்த அம்பின்
வலாஅர் வல்வில் குலாவரக் கோலி
பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்
புன்புலம் தழீஇய அம் குடிச் சீறூர்... - புறநானூறு - 324

என்ற பாடலில் வேட்டுவர்கள் தன்மையும் கருவி செய்யும் திறமையும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. வேட்டுவர்கள் காட்டுப்பூனை போன்ற வெகுண்ட நோக்கும் பார்வையையும் யானைக் குட்டியைப் போன்ற தலையினையும் வெளிர் நிறம் கொண்ட வாயினையும் உடையவர்கள் என்று அவர்களுடைய தோற்றம் வர்ணிக்கப்பட்டுள்ளது. சிறிய இலைகளைக் கொண்ட உடைமரத்தினைக் கொண்டு வேட்டைத் தொழிலுக்குத் தேவையான வில்லையும் அம்பையும் செய்வர். இந்த அம்பில் கூர்மையான வெண்ணிற முள் இருக்கும். இந்த அம்பின் நுனியில் உடைமுள்ளைச் சொருகி வைத்திருப்பர். இவர்கள் உருவாக்கும்

இந்த அம்பினை நாணாத்தட்டை என்று அழைப்பர். வலார் எனப்படும் நிமிர்ந்து வளையக்கூடிய வில்லினையும் உருவாக்கினர் என்று புறனாநூற்றுப் பாடல் விளக்குகின்றது.

வேட்டுவரின் பண்டமாற்று முறை

சங்ககாலத்தில் ஒரு பொருளுக்காக இன்னொரு பொருளைப் பரிமாற்றிக் கொள்ளும் வழக்கம் இருந்தது. சங்கத் தமிழர்கள் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, மீன், பால், தயிர், தேன், இறைச்சி போன்ற பொருட்களைப் பணம் கொடுத்து வாங்காமல் பொருள்களை மாற்றிக்கொள்வர். இம்முறையைப் பண்டமாற்றுமுறை என்று அழைப்பர்.

காந்தள் அங்கண்ணி கொலையில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்
குன்றுதலை மணந்த புன்புல வைப்பும் - பதிற்றுப்பத்து - 30

வேட்டுவர்கள் காந்தள் பூவைத் தலையில் சூடிக்கொள்ளும் பழக்கம் உடையவர்கள். வேட்டுவர்கள் வேட்டையாடிய விலங்குகளான வளைவில்லாத கொம்புகளை உடைய ஆமான் என்னும் காட்டாட்டுக் கறியையும் யானையின் வெள்ளைத் தந்தங்களையும் கொண்டுவந்து ஊரின் கடைத்தெருவில் விற்று பிழி என்னும் பழச்சாற்றினை வாங்கியுள்ளனர். இப்பதிற்றுப்பத்துப் பாடலின் மூலம் சங்ககால மக்களின் வாழ்வியலில் பண்டமாற்று முறைக்கென, கடைத்தெருக்கள் இருந்ததையும் அவ்விடத்தில் வேட்டுவர்கள் பண்டமாற்று செய்துள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

பூந்தொடை விழா

வேட்டுவர்கள் நாட்டின் போர்களிலும் பெரும்பங்கு வகித்துள்ளனர். வீரம் உறைந்த மனமும் பயமறியாத செயலும் போர்களில் வெற்றி வாகையைச் சூடும் வல்லமையைப் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர். பூந்தொடை விழா என்பது போரில் வென்றவுடன் வெற்றியைப் பறைசாற்றும் விதமாகவும் வில்வித்தைகளைக் கற்றுத்தேர்ந்த இளம் வில்வீரர்களின் அரங்கேற்ற விழாவாகவும் நடைபெற்று வந்துள்ளது என்பதனைச் சங்க இலக்கியங்களின் மூலம் அறிய முடிகின்றது.

தெம் முனைசிதைத்த கடும்பரிப்புரவி
வார் கழற் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்
புலம்புறும் கொல்லோ தோழி! - அகநானூறு - 187

வேட்டுவர்கள் சிறந்த குதிரை வீரர்களாகத் திகழ்ந்துள்ளனர். காலில் வீரக்கழல் அணியும் வழக்கம் கொண்டிருந்தனர். பகைநாட்டினரைப் போர் முனையில் வென்று வெற்றி முழக்கம் செய்வர். வெற்றியின் பொருட்டு விழாக்கொண்டாட்டத்தின் முதல் நாளில் பூந்தொடை விழா எடுப்பர். முற்றத்தில் புதுமணல் பரப்பி விழா ளாக கொண்டாடப்படும் என்பதனை இப்பாடல் மூலம் அறியலாம்.

முடிவுரை

வேர்வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி உள்ளது. காப்பியங்கள், சங்க இலக்கியங்கள், நடுகற்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகிய வரலாற்றுச் சான்றுகள் மூலம் வேட்டுவர்களின் வாழ்வியல் முறைகைளயும் நாகரிக மாற்றத்தையும் அறியமுடிகின்றது. காட்டுப் பகுதியில் வேட்டைத் தொழிலைத் தொடங்கி ஓரிடத்தில் நிலைத்து வாழும் வாழ்வியல் முறையை முன்னேற்றி உணவைத் தேடும் நிலையிலிருந்து முன்னேற்றம் அடைந்து உணவை உற்பத்தி செய்யும் நிலைக்குச் சென்றனர். சமவெளிகளில் வேளாண்மையைச் செய்து தன் இனத்தில் புரட்சியை ஏற்படுத்தினர். காலந்தோறும் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப தன் இனத்தின் வீரம், அறிவு, குழுவாக வாழும் பண்பு முதலான தன்மைகளை உயர்த்திக் கொண்டனர் என்பது வேட்டுவர் இனத்தின் வெற்றியாகும்.

துணைநூற் பட்டியல்

1. அகநானூறு பொ. வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. நற்றிணை பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. புறநானூறு ஔவை துரைசாமி தமிழ் மண் பதிப்பகம், சென்னை.

புறநானூறு கூறும் வேட்டுவக் கடையெழு வள்ளல்களின் வீரம்

செ. பிரபாகர்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-10.
அலைபேசி: 8111074997
prabakargowda1999@gmail.com.

முன்னுரை

தமிழின மக்களே உலகில் தோன்றிய முதற்குடிகளாகக் கருதப்படுகின்றனர். இத்தமிழின மக்கள் வீரத்தையும் கொடையையும் தம் இரு கண்களாகப் போற்றி வந்தனர். தமிழ் இன மக்களிடையே உள்ள பல்வேறு வகையான தொல்குடி மக்களில் வேட்டுவர்களும் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். மனிதன் இயற்கையாகக் கிடைக்கும் பொருட்களின் மூலம் உணவைப் பெற எடுத்த முதல் முயற்சியானது வேட்டையாடுதல் ஆகும். இவ்வாறு வேட்டையாடக் கருதுகோளாக வீரமே முதன்மையாக இருந்தது. இந்த வகையில் பயமறியா வீரர்களாக வேட்டையாடிய சமூக மக்களே வேட்டுவர் என அழைக்கப்பட்டனர். வேட்டுவர்களின் வீரத்தைக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் வெளிப்படுத்தியுள்ளன. மேலும் இவ்வேட்டுவர்களின் வாழ்வியலைச் சங்க இலக்கியங்களும் புராணங்களும் குறிப்பிடுகின்றன. இந்த வகையில் புறநானூறு கூறும் வேட்டுவ குறுநில மன்னர்களான கடையெழு வள்ளல்களின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

பேகனின் வீரம்

மலைநாட்டை அரிய ஆற்றல்மிக்க வீரனான பேகன் ஆண்டான். இவன் தன் மலைநாட்டில் குளிரால் மயில் நடுங்கிக் கொண்டிருக்கிறது என்று தன்னுடைய கலிங்கத்தை (போர்வையை) போர்த்திய கொடை

குணம் கொண்டவன் என்று (சிறுபாணாற்றுப்படை84-87) அடிகள் குறிப்பிடுகின்றன. இவன் வெற்றிவேல் கொண்டவனாகவும் மதயானையையும் செருக்கு மிகுந்த குதிரையும் உடையவன் என்று வெண்வேல் அண்ணல் காணா ஊங்கே; கடாஅ யானைக் கலிமான் பேகன். (பு.நா-141) பாடல் குறிப்பிடுகிறது.

காரியின் வீரம்

மலையமான் திருமுடிக் காரி வீரக்கழலினை அணிந்தநெருப்பு போன்ற சினத்தைக்கொண்டவன். பகைவர் அஞ்சும்படியான நீண்ட வேலையுடையவன். வெண்மைப்பிடரி குதிரையின் மீதேறி இரவலர்க்குக் கொடை வழங்கினான் என்பதைச் சிறுபாணாற்றுப்படை அடிகள் (92-95) குறிப்பிடுகின்றன. மேலும், வீரக்கழல் அணிந்த காரியின்நாட்டைக் கைப்பற்ற பகைவர்யாரும் நினைப்பதும் இல்லை. மூவேந்தர்களில் ஒருவர் ‘எனக்குத் துணையாக வருக’ என காரியைக் கெஞ்சிக்கொண்டே இருப்பர். இவர்கள் தரும் பொருளே இவனது செல்வமாக இருந்தது என்பதை, கடல் கொளப் படாஅது உடலுநர் ஊக்கர், கழல்புனை திருந்து அடிக் காரி! நின் நாடே! வீயாத் திருவின் விறல் கெழு தானை! மூவருள் ஒருவன் ‘துப்பாக்கியர்’ என, ஏத்தினர் தெருவும் கூலே நம் குடி. (பு.நா-122) எனக் குறிப்பிடுகிறது. மேலும்,

ஒன்னார் யானை ஓடைப் பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத்தைஇ,
வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை உரவோன்மருக!
அண்ணல் யானையோடு வேந்து களத்து ஒழிய. (பு.நா-126)

இப்பாடலடிகள் பகைவர் நாட்டு யானையின் பட்டத்துப்பொன்னை பொற்றாமரைப் பூவாக்கி பரிசிலர்க்குச் சூட்டியவராகவும்பொண்ணையாரு பாயும் நாட்டுத் தலைவனும் முள்ளூர் நாட்டை தனதாக்கிக் கொண்டவனாகவும், போரிடும் வேந்தர்களின் யானைகளை அழித்து அவற்றைத் தடுத்து வெற்றி கொண்டவனாகவும் காரியைக் குறிப்பிடுகின்றன.

ஆய் அண்டிரனின் வீரம்

வேள் ஆய்வில்லைத்தாங்கிய வலிமையுடைய தோள்களைக் கொண்டவன். சிவபெருமானுக்கு மகிழ்வோடு நாகம் என்ற

நீலமணியையும் ஆடையையும் கொடுத்தவன். பொதினி மலையை ஆண்டவன் எனச் சிறுபாணாற்றுப்படை அடிகள் (96-99) குறிப்பிடுகின்றன. இவன் நாட்டிற்கு ஆடிச் செல்லும் பெண் மகள் செல்ல இயலுமேயன்றி வலிமையுடைய மாற்றரசர் நெருங்கவும் இயலாத தன்மை கொண்ட வீரனாகவும் இருந்தான்.இதனை ஆடுமகள் குறுகின் அல்லது, வீடு கேளு மன்னர் குறுகலோ அரிதே (பு.நா-128) பாடல் மூலம் அறியலாம்.

நள்ளியின் வீரம்

குளிர்ச்சி பொருந்திய தோட்டி மலையை ஆண்டவன் நள்ளி. இவன் போர்முனையில் தன் ஆற்றல் விளங்கும் பெருமை பொருந்திய கைகளை உடையவன். தன்னை அண்டி வருவோருக்குத் தேவையானவற்றை எல்லாம் தன்னை உணராது கொடுப்பவன் என்பதைச் சிறுபாணாற்றுப்படை அடிகள் (104-107) குறிப்பிடுகின்றன. இவன் வில்போர் செய்யும் ஆற்றல் கொண்ட வேட்டுவன்என்பதைச் செல்வத் தோன்றல் ஓர் வல்வில் வேட்டுவன் (பு.நா-149) பாடல் குறிப்பிடுகிறது.

ஓரியின் வீரம்

வல்வில் ஓரி (ஆதன் ஓரி) கொல்லிமலைத் தலைவன் ஆவான். இவன் தன் நாட்டைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்தவன். காரி குதிரையை உடைய மலையமான் திருமுடிக் காரியுடன் போரிட்ட ஓரி, குதிரையுடைய ஓரி என்பனவற்றைச் சிறுபாணாற்றுப்படை அடிகள் (98-111) குறிப்பிடுகின்றன. ஓர்த்தல்- சிந்தித்தல், ஓர்மம் - மனவலி, சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி வில்லாற்றலைப் பெற்ற வீரன். வன்பரணர் இவரின் வீரத்தைக்கண்டு இவரை விடச்சிறந்த வேட்டுவர் இல்லை எனப் புகழ்ந்திருக்கிறார். யானைகளைப் பழக்கி போர் செய்வதில் வல்லமை பெற்றவன். இவன் வேட்டையாடிய அம்பானது யானையை விழச்செய்துவிட்டு, புலியைக்கொன்று விட்டு, மானை உருண்டு விழச்செய்து விட்டு, பன்றியை வீழ்த்திவிட்டு அருகே புற்றில் இருந்த உடும்பின் மீது பாய்ந்து நின்றதாம். இதனை வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி, பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப், புழல்தலைப்பு கர்க்கலை உருட்டி உரல்தலைக், கேழற்பன்றி வீழ அயலது, ஆழற்புற்றத்து உடும்பில் செற்றும் (பு.நா-152) எனக் குறிப்பிட்டுள்ளது.

பாரியின் வீரம்

பறம்பு மலைக்குத் தலைவனான பாரிமுல்லைக்கொடி கொழு கொம்பு இன்றிபடரத் தவித்த போது தன் பெரிய தேரையே கொடிபடரக் கொடுத்தவன் என்று சிறுபாணாற்றுப்படை அடிகள்(88-91) குறிப்பிடுகின்றன. மூவேந்தர்கள் பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்ட போது கபிலர் அவர்களிடம் பாரியின் வீரத்தைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, பறம்பு மலையின் ஒவ்வொரு மரத்தின் கீழும் உங்கள் போர் யானைகளை நிறுத்தி வைத்தாலும் இடமெங்கும் தேரை நிறுத்தினாலும் உங்கள் போர் முயற்சியினால் அதனைப் பெறமுடியாது. வாள் வீசிப் போரிட்டாலும் அவன் தரமாட்டான், இதனை மரந்தொறும் பிணித்த களிற்றினர் ஆயினும்,புலந்தோறும் பரப்பிய தேரினிர் ஆயினும், தாளின் கொள்ளலிர்; வாளின்தாரலன்; (பு.நா-109) பாடல் குறிப்பிடுகிறது. வீரர்கள் புறமுதுகிட்டு ஓடுவதை அக்காலத்தில் பெரும் இழிவாக கருதினர். எப்படியான நிலையிலும் புறமுதுகிட்டு ஓட செய்தான் என்பது பாரியின் பெரும் வீரத்தை பறைசாற்றுகிறது.

அதியமான் நெடுமானஞ்சியின் வீரம்

அதியன், அஞ்சி தகடூரை ஆட்சி செய்தான். இவன் தமிழ்ப் புலவர் ஔவைக்கு நெல்லிக்கனியைக்கொடுத்து தமிழைக் காத்தவன். வலிமையும் சினமும் நன்னெறியும் ஒளிபொருந்திய நீண்ட வேலையுடைய ஆரவாரம் உடைய கடல் போன்ற படைகளை உடைய அதியமான் என்பதை, சிறுபாணாற்றுப்படை அடிகள் குறிப்பிடுகின்றன. ஒரு நாளைக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாதம் கூடி செய்த தேர்க்காலைப் போன்ற அழகும் வலிமையும் உடைய வீரன் அதியன் என்பதைப் புறநானூற்றுப் பாடல்-87 குறிப்பிடுகிறது. இவன் உயர்ந்த வலிமை உடைய பூண்அணிந்த பரந்த மார்பனும், வேல்படை மறவற்குத் தலைவன், களவேள்வி ஆற்றிச் சிறந்த நல்ல போரைச் செய்யும் முழவு போன்ற தோள்களை உடையவன் என்பதை(பு.நா-88) பாடல் குறிப்பிடுகிறது. தன் நாட்டில் அடிக்கும் கோலுக்கு எதிரே சீறி எழும் பாம்பு போன்ற வலிமையுடைய படை மறவர்களைக் கொண்டிருந்தான் என்பதையும், முழவிலே காற்றுவீசி எழும் ஓசையைக் கேட்டு போர்ப்பறை என்று மகிழ்ந்து போரிடும் தன்மை கொண்டவன் அதியன், என்பதைப் (பு.நா-89) பாடல் சுட்டுகிறது. அதியன் புலி, சூரியன், மதில்தாழ் போன்று வில்லைக்கொண்ட வீரனாகவும் முழந்தாள் வரை

நீண்ட வலிமையான கைகளை உடையவனாகவும் இருந்தான் என்பதைப் (பு.நா-90) பாடல் குறிப்பிடுகிறது.

அதியனின் யானைகளும் குதிரைகளும் போரில் செயல் படுவதைக் கண்டு பகைவர்கள் பயந்து கதவுத் தாழ்களை இட்டும் வேலியைப் போட்டும் இருந்தனர் என்றும் வாள் மற்றும் வேல் கொண்டு போர் புரியும் அதிகனைப் பார்த்து பகைவர்கள் தங்களின் கருவிகளை எடுக்க அஞ்சினர் என்றும் புறநானூற்றின்98- ஆம் பாடல் குறிப்பிடுகிறது. மேலும் கோவலூரை வென்ற வேலின் பெருமையையும்,ஏழு அரசர்களை வென்று அவர்களின் தலை பொறித்த காட்சியை ஆரமாக அணிந்த வீரனும் அஞ்சியாவான் என்பதை, பு.நா-99 ஆம் பாடல் குறிப்பிடுகிறது. புலியுடன் சண்டையிட்ட பிறகும் யானையின் சினம் அடங்காதது போல போரில் வென்று வந்தும் சிவந்த கண்ணுடனே இருக்கும் அதியன் வீரத்தை பு.நா - 100 பாடல் குறிப்பிடுகிறது.வீட்டுக் கூரையில் செருகி வைத்திருக்கும் தீக்கடைக் கோல் போல அடங்கி இருக்கவும் தெரிந்தவன்; அது தீ பற்றிக் கொண்டு காட்டை எரிக்கும் போல் போர்க்களத்தில் பகைவரை எரிக்கவும் வல்லவன் அஞ்சி என்பதை பு.நா-315 ஆம் பாடல் குறிப்பிடுகிறது.

முடிவுரை

தமிழ்நாட்டுக் குறுநில வேட்டுவ மன்னர்களான கடையெழு வள்ளல்கள் வீரத்திலும் கொடையிலும் சிறந்து அறநெறியோடு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல் :

1. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், தொகுதி ஏழு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -10.

2. தமிழகப் பழங்குடிகள், பக்தவச்சல பாரதி, அடையாளம் பதிப்பகம்- 2017.

3. புறநானூறு - மூலமும் உரையும்.

4. சிறுபாணாற்றுப்படை - மூலமும் உரையும்.

வேட்டுவக் குலத்தின் பிரிவுகள் ஒரு பார்வை

முனைவர் ஏ. பிரேமா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோயம்பேடு, சென்னை - 600 107
epremavenkat@gmail.com

முன்னுரை

வேர் வகையை எண்ணினாலும் வேட்டுவர் வகையை எண்ண முடியாது எனும் முதுமொழி உண்டு. நடுகற்கள், கல்வெட்டுககள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், இலக்கியம், சங்க இலக்கியங்கள் ஆகியவை மூலம் அறிப்படுகின்ற குலங்களின் பெயர்கள் இருக்கின்றன. வேட்டுவர்கள் குலப்பிரிவுகள் அடிப்படையில் பல பகுதியாகப் பிரிந்து வாழ்ந்தனர். சிலர் தாம் எந்த ஊரிலிருந்து குடிப்பெயர்ந்தனரோ அந்த மண்ணின் (ஊரின்) பெயரைத் தம் குலத்திற்கு (கூட்டம்) வைத்துக் கொண்டனர். பலர், கொடை, வீரம், மாண்பு, விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடி, சங்ககாலத் தலைவர்கள், பெண்பாற் புலவர்கள், காட்டின் பெயர்கள், பொருள் பெயர்கள் ஆகியவை பற்றியும் தமது குலப்பிரிவுகளாகக் கொண்டனர். வேட்டுவர் கலிவெண்பா, வேட்டுவர் சமுதாயக் கூறுகளை அதன் பெருமைகளுடன் தொகுத்துக் கூறுகிறது.

வேட்டுவக் குலப் பிரிவுகள்

அந்தி வேட்டுவக்குலம் பிளவுபட்டு அண்டவாணி வேட்டுவக் குலங்கள் தோன்றி இருக்கின்றன. கீர வேட்டுவக்குலமும் ஆந்தை வேட்டுவக்குலமும் இணைந்து கீரந்தை வேட்டுவக்குலம் தோன்றி இருக்கிறது. பூச்சன் வேட்டுவக்குலமும், ஆந்தை வேட்டுவக்குலமும் இணைந்து பூச்சந்தை வேட்டுவக்குலம் தோன்றி இருக்கிறது. இதுபோல பல வேட்டுவக்குலங்கள் இருக்கின்றன.

கொங்கு வேட்டுவக் கவுண்டர்கள் என்போர் ஆரம்ப காலத்தில் வேட்டைத் தொழிலையும் வேளாண்மையையும் செய்து வந்தனர். 63 நாயன்மார்களுள் ஒருவரான கண்ணப்பருடன் வழிவந்தவர்கள்

இச்சமூகத்தினர். இவர்கள் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் குறிப்பிடப்படும் அளவில் வசித்து வருகிறார்கள். இவர்கள் தற்போது சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளிலும் குடியேறி வசித்து வருகிறார்கள்.

இச்சமூகத்தினர், தமிழ்நாட்டில் சேலம், நாமக்கல், ஈரோடு, மதுரை, கரூர், திருச்சி, கோயம்புத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பெருமளவில் வசித்து வருகிறார்கள்.

வேட்டுவர் பொருள்

- செந்தமிழ் இயற்கை சிவனிய குறிஞ்சி நிலத்தில் ஒரு குறிப்பிட்ட மாந்தர் மக்கமார்.
- செந்தமிழ் இயற்கை சிவனிய குறிஞ்சி நிலத்தின் ஆடுசத்தினைப் பெயர்.
- செந்தமிழ் இயற்கை சிவனிய நிலத்தின் குறிஞ்சி முதலிய நிலங்களில் வாழும் மக்கட்கு வழங்கும் பெயர்.
- வேட்டுவர் ஆடு உத்தரனை பெயர்.
- வேட்டு + அர் = வேட்டு+வ்+அர்=வேட்டுவர்.
- வேட்டைக்காரன், வேடன், வேட்டுவன், புள்சிமிழ்த்தற்று (குரல் 274).
- வேட்டைக்குச் செல்பவன், யானை வேட்டுவன். யானையும் பெறுமே (புறம். 214).

மனித வர்க்கம் படிப்படியான வளர்ச்சி நிலையை அடையும் முன்னர், உலகில் உள்ள அனைத்து மக்களுமே ஒரு காலகட்டத்தில் வேடர்களாக இருந்து வளர்ச்சி நிலையை அடைந்தவர்கள் என்றே கருதப்படுகிறது. காடுகளில் வேட்டையாடிப் புசிக்கத் தொடங்கிய மனிதன், முதல் படிநிலையாக ஆற்றங் கரைகளில், விவசாயம் செய்யும் குடிகள் அமைத்து வாழவும், செல்லப் பிராணிகளை வளர்க்கவும் துவங்கினர் என்றும் அதன் பின்னரே கிராமங்கள் தோற்றம் பெற்று கிராமங்களாக எண்ணிக்கை அதிகரித்து நகரங்களும், நாடுகளும் தோற்றம் பெற்றன என மனிதனின் படிநிலை வரலாறு காட்டுகிறது.

பண்ண வேட்டுவக் குலத்தின் குலதெய்வம் பண்ணை அம்மன் (ஏலூர், நாமக்கல்) ஆகும். இன்று பண்ண வேட்டுவக்குலத்தினர், கரடி

வேட்டுவக்குலத்தோடு இணைந்து விட்டார்கள். இதுபோல பல வேட்டுவக் குலங்கள் இருக்கின்றன.

தேவேந்திர வேட்டுவர் குலமும் பள்ளர் சாதியும் ஒரே சாதி கிடையாது. பெருமாள் வேட்டுவர்களும், குமரன் வேட்டுக்குலம், சுப்பிரமணி வேட்டுவக்குலம், முட்டை வேட்டுவக்குலம், மாகாளி வேட்டுவக்குலம், முக்காளி வேட்டுவக்குலம், முடகாளி வேட்டுவக்குலம் போன்ற வேட்டுவக் குலத்தவர்கள் கடவுள் பெயரைத் தமது கூட்டத்திற்கு வைத்து கொண்டனர். பறை இசைக் கருவிப் பெயரைப் கூட்டப் பெயராக வைத்துக் கொண்டவர்கள்தான் பறை வேட்டுவக்குலம். பறை வேட்டுவக்குலமும் பறையர் சாதியும் ஒரே சாதி கிடையாது.

கரைய வேட்டுவக்குல மக்களின் பிரிவுகள்

கரைய என்பது காவேரி ஆற்றங்கரைப் பெயர். இந்தக் காவேரி ஆற்றங்கரைப் பெயரை, கூட்டப் பெயராகக் கொண்டவர்கள் கரைய வேட்டுவக்குலத்தினர். இந்த கரையவேட்டுவக்குலம், மேல் கரைய வேட்டுவக்குலம் மற்றும் கீழ் கரைய வேட்டுவக்குலம் என்று பிரிந்து இருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

கரைய வேட்டுவக்குல மக்களும் மீன் பிடிக்கும் மக்களும் ஒரே இனம் கிடையாது. வன்னி வெட்டுவான் குலத்திற்கும், பள்ளி (வன்னியர்)க்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

கள்ளை என்ற பெயரைக் கூட்டப் பெயராக வைத்துக் கொண்டவர்கள் கள்ளை வேட்டுவக்குலம். கள்ளை, (கள்ள) கள் என்று பொருள். கள்ளை வேட்டுவக்குலமும் கள்ளர் சாதியும் ஒரே சாதி கிடையாது.

உடையார் இனத்தில் மலையன் என்ற பெயரில் கல்வெட்டு இருக்கிறது. இதுபோல வேட்டுவர் இனத்தில் மலைய வேட்டுவக்குலம் இருப்பதைக் கல்வெட்டு கூறுகிறது. உடையார் இனமும் வேட்டுவ இனமும் ஒரே சாதி கிடையாது.

வேட்டுவர் நடுகற்கள்

ஆந்தை வேட்டுவர் குலம் (கீரனூர் ஆந்தை வேட்டுவக் குலம், கீரந்தை வேட்டுவக்குலம்). “ஆந்தை பொன்னி மகன் மோடையன் தொறுமீட்டு பட்ட நடுகல்”. கி.பி. 911. செங்கம் அய்த்தாம்பாளையம் ஆந்தைப் பாடி ஊர், கி.பி. ஏழாம் நூற்றாண்டு. செங்கம் தண்டம்பட்டி ஆந்தை வேட்டுவக்குலப் படை வீரர்கள், போர்ப் பாசறை (பாடி வீடு)

அமைந்த ஊர், ஆந்தைப் பாடி என அழைக்கப்பட்டது. ஆந்தை வேட்டுவக்குலத்தைக் "குகைக் குலம்" என வேட்டுவக் கலிவெண்பா கூறுகிறது.

பெரும்பானபாடி நாட்டை, தமிழ் மண்ணின் வடபகுதியைச் சேர்ந்த நரசிங்கராயர், சந்தனராயர், பல்லவராயர், பூவளவராயர் போன்றவர்கள் ஆண்டனர். இந்த நால்வரும் சேர, பாண்டிய மற்றும் வேட்டுவ அரசர்களுக்குப் படை உதவி அளித்தனர். அதனால் அந்த அரசர்கள், இந்த நால்வருக்கும் குறிப்பு நாட்டில் இருந்த 32 கிராமங்களை ஆட்சி செய்வதற்கு அதிகாரம் அளித்தனர் என்று "குறிப்பு நாட்டுச்" செப்பேடு கூறுகிறது.

வேட்டுவ குலத்தவர்களை "குரு குலத்தவர்கள்" என்று புராணங்கள் கூறுகின்றன. இந்த நான்கு பேரும் ஆந்தை வேட்டுவக்குலத்தைச் (கீரந்தை, கீரனூர், ஆந்தை) சேர்ந்தவர்கள். இவர்கள் தமிழ் மண்ணின் வடபகுதியில் இருந்து கொங்கு நாட்டுக்கு வந்தவர்கள். மூலம் "சுபமஸ்து ஈஸ்வரி அம்மன் மகாமண்டலேஸ்வானரிய தனவிபாடன், பாசைக்கரித்தப்பு வராத கண்டன், யெம்மண்டலம் திரி கொண்ட அருளிய ராஜாதிராஜன் ராஜ பரமேஸ்வரன் ராஜ மார்த்தாண்டன் ராஜ கம்பீரன் ராஜ புங்கரன் சேரன் சோழன் பாண்டியன் மூவரசர்களும் ஆறிலோரு கடமை கொண்டு அசையா மணிக்கட்டி ராஜ்ய பரிபாலனம் பண்ணுகின்ற சாலி வாகன சகாப்தம் 1815, இதன் மேல் பகுத்தற பாரம் பரிகதையாய் சுகமே இருக்கும் படிக்கு இந்நாள் வரைக்கும் பட்டாபிஷேகம் பண்ணி நாட்டார்றென்றும், பட்டக்காரர் என்றும் பாளையக்காரர் என்றும் நிலைநாட்டுப் பண்ணி வச்சிருக்கிறோம்" காடை வேட்டுவக்குலம்.

கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் காகட சிற்றன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு, பல்லவக் கம்பவர்மன் காலம். இன்று வாழ்ந்து வருகிற காடை வேட்டுவக் குலத்தினரை, "குறுந்தாடை வேட்டுவக்குலம்" என கல்வெட்டுகளில் அழைக்கப்பட்டது. இன்னும் காடை வேட்டுவக் குலத்தினரைக் குறுங்காடை வேட்டுவக்குலம், சாகாடை வேட்டுவக்குலம் என அழைக்கப்படுகிறது. சாகாடை வேட்டுவக்குலத்தைச் சில காடைகளும் என வேட்டுவக் கலிவெண்பாவில் பிழையாக எழுதப்பட்டிருக்கிறது.

வேட்டுவரும் பதினெண் குடிமக்களும்

வேட்டுவருக்குப் பணி செய்த மக்கள் பற்றி காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் சாசனங்கள் கூறுகின்றன:

தொண்டை மண்டல வரிசை மூவாறு குடிமக்கள் சுருதி நாள் முதலாகவே துங்கமிகு நாவிதன் குயவர் வண்ணான் ஓலை சொன்னபடி ஒச்சன் கண்தகம் மாலர்வகை ஐவர் வானியர் மூவர் கந்தமலர் மாலைக்காரர் கலைமீது சார் ஓட்டும் பாணன் தலை காவல் புரி பள்ளி வலையன் பண்டு முதல் ஊரன் மரிக்கும் இடையன் விருது பல கூறும் வீர உடையான் பதினென்குடி மக்கள் அனைவரும் வேட்டுவர் பணி செய்து பல முறைமையும் கொண்டு பரிவட்டமும் கட்டியே வருவார். இக்குவலையே மதிக்கவே தான் கூற்றிய கட்சிவாய் ஏகாம்பரர் ஆலய குளத்தில் இந்த லிபியோ நாவிதன் கணவர் புலவர் வண்ணான் வலையர் போன்ற மக்கள்கள் வேட்டுவ இனத்திற்கு பணி செய்ததால் வேட்டுவனாவிதன், வேட்டுவ கணக்கர், வேட்டுவக் குலவர், வேட்டுவ வண்ணான், வேட்டுவ வலையர் போன்ற பெயர்களில் இன்னும் அழைக்கப்படுகிறார்கள் இதுபோல 15 - குடி மக்களும் வேட்டுவ இனத்திற்குப் பணி செய்த மக்கள் ஆவார்கள். வேட்டுவக்குலத் தலைவருக்கு, இடையர்கள் பணி செய்ததைச் சங்க இலக்கியம் கூறுகிறது. வேட்டுவ மன்னர்கள் ஆண்ட பகுதியில் உழவுத் தொழில் செய்தவர்கள் பண்டு முதல் ஊரான் என்பார்கள்.

முடிவுரை

ஓரிடத்தில் நிலையாகத் தங்காமல், அலைந்து திரிந்து வேட்டைத் தொழிலை மேற்கொண்ட வேட்டுவருள் பலர் சிலகாலம் சென்ற பின்னர், ஒவ்வொரு இடத்தில் நிலைத்து வாழ்ந்தனர். உணவு தேடும் நிலையை விட்டு உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு முன்னேறினர். சமவெளிகளில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். இதுவே வேட்டுவர் வாழ்வில் நிகழ்ந்த மாபெரும் புரட்சி எனலாம். வரலாற்றுத் தொடக்க காலத்தில் வேட்டைத் தொழிலில் ஈடுபட்ட இவர்கள் இடைக்காலத்தில் வேளாண்மையில் நாட்டம் கொள்ளும் அளவிற்கு உயர்ந்தனர்.

துணைநூற் பட்டியல்:

1. தமிழ்மண் பதிப்பகம் வெளியீடு, எண்: இரண்டு சிங்காரவேலர் தெரு, தியாகராய நகர், சென்னை 600017.
2. பாவாணர் அறக்கட்டளை, தலைவர், நிறுவனர், வே. கரு. கோவலன் கண்ணனார்.

குறிஞ்சிக்கலியில் வேடுவர்

ம.ரஞ்சிதா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த),
மதுரை - 625002.
அலைபேசி : 9677484765
ranjitha4765@gmail.com

முன்னுரை

கற்றறிந்தோர் ஏத்தும் கலி என்ற பழங்காலச் சான்றோரின் மதிப்பீடு மிக மிகப் பொருந்துவதனைச் சொல்லுக்குச் சொல், கருத்துக்குக் கருத்துச் சுவைக்கனியும் தமிழ் தேறலாகக் கலித்தொகை நூல் அமைந்துள்ளது. அக்கலித்தொகையில் கபிலர் படைத்த குறிஞ்சிக் கலியைக் களமாகக் கொண்டு வேடுவர் வாழ்வியல் இவ்வாய்வுரையில் நோக்கப்படுகிறது.

குறிஞ்சிக்கலி

ஐந்திணையையும் தனித்தனிப் புலவர்கள் படைத்துள்ளனர். அவற்றுள் கபிலர் 29 - பாடல்களில் குறிஞ்சிக்கலியைப் படைத்துள்ளார். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் உரிப்பொருளாக அமையும் இக்குறிஞ்சிக்கலிப் பாடல்களில் வேடர் வாழ்வின் பதிவுகளை ஒன்றின் ஒன்றாகக் காண்போம்.

குறிஞ்சிக்கலியில் வேடுவர் சொல்லாட்சி

வேட்டுவன்' எனும் சொல் 'வேட்டை' எனும் வினையடியைக் கொண்டுள்ள சொல்லாகும். வினை என்பது தொழிலைக் குறித்து வருமென்பதால் 'வேட்டை' என்பது வேட்டையாடும் தொழிலைக் குறித்து நிற்கின்றது. குறிஞ்சித் திணையில் வாழும் ஆடவனைக் குறவர், வேடர், கானவன் வேடுவர், மறவர், எயினர், வேட்டுவன் எனப் பல பெயர்களில் குறிப்பிடுவதை இலக்கியங்களில் காண்கிறோம். கபிலர் குறிஞ்சிக் கலியில் வேடுவரை "கானவர்" என்னும் சொல்லால் கூறுகிறார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

வேடுவரின் வேட்டைத்திறன்

குறிஞ்சிக்கலியில் உள்ள குன்ற மகளிர் பாடியாடும் குரவைக் கூத்தும் வள்ளைப்பாட்டும் இனக்குழுச் சமூகங்களில் தோன்றி நாட்டுப்புறக் கூத்து வடிவில் வாய்மொழியாக வந்தவை. மகளிர் பாடும் வள்ளை என்கிற உழைப்புப் பாடலின் பாடுபொருள் அகம் சார்ந்ததாகக் காணப்படுகிறது. ஆரம்ப காலத்தில் மகளிர் உழைப்புப் பாடலான வள்ளைப்பாட்டு காதற்பாடலாக இருந்திருக்கலாம். உழைப்புச் சந்தர்ப்பச் சூழலோடு சம்பந்தம் கொண்டதாகவே இருந்துவந்ததை மறுக்க முடியாது. இவ்விதத்தில் வாய்மொழி மரபில் வள்ளைப்பாட்டு, மலை, மலைநாடு, மலைநாட்டுத் தலைவன், மலையுறை தெய்வம் என்ற பொருள்களைப் பற்றிய மகளிர் உழைப்புப் பாட்டாக இருந்ததைக் குறிஞ்சித் திணையில் அறியலாம்.

யானைக் கொம்பாலும் சந்தன மரத்தாலுமான உலக்கையால் ஐவன வெண்நெல்லைப் பாறை உரலுள் போட்டு இடித்ததை,

"பாடுகம் வா வாழிதோழி - வயக்களிற்றுக்
கோடு உலக்கையாக நற்சேம்பின் இலை சுளகா
ஆடுகழை (மூங்கில்) நெல்லை அறை(பாறை)
உரலுள்பெய்து இருவாம்
பாடுகம் வா வாழிதோழி நல்தோழி பாடுற்று" (கலி : 41:1-4)

என்ற பாடலின் மூலம் கபிலர் எடுத்துரைக்கிறார்.

இரவில் யானையின் காலடி ஓசையைக் கேட்ட கானவன் ஓசை வந்த திசை நோக்கிக் கவண் கல்லை வீசினான். அந்தக் கல் வேங்கைப் பூச்சிதறி, ஆசினிப் பழத்தை உதிர்த்து, தேன் கூட்டைத் துளைத்து, மாவின் கொத்தினை உழக்கி, மடல் கிழித்து, பலாக்கனியும் தீண்டியதை,

"நெடுவரை ஆசினிப் பணவை ஏறி
கடுவிசைக் கவணையில் கல்கை விடுதலின்
கடுவிசைக் கவணையில் கல்கை விடுதலின்

இறுவரை வேங்கை ஒள்வீ சிதறி
ஆசினி மென்பழம் அளிந்தவை உதிராஆசினி
மென்பழம் அளிந்தவை உதிரா,

தேன்செய் இறாஅல் துளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துணர் உழக்கி
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியா
பலவின் பழத்துள் தங்கும் "

"பலவின் பழத்துள் தங்கும் 2025"
"பலவின் பழத்துள் தங்கும்" (கலி 41:9-16)

என்ற பாடல் வழி அறியலாம்.

இவ்வாறு கவண் கல் விசையாகச் சென்று மூன்று இலக்குகளைச் சிதைத்ததாகவும், ஆறு இலக்குகளைச் சிதைத்ததாகவும் வரும் பாடல் - புறநானூறு:

வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇ,
புழல் தலைப் புகர்க்கலை உருட்டி,
உரல்தலைக் கேழற் பன்றி வீழ, அயலது
ஆழல் புற்றத்து உடும்பில் செற்றும், (புறம் :152:1-5)

என்ற பாடல் ஓரியின் அம்பின் வேகம் பற்றி உள்ளது. அவன் அம்பு உழுவையை (புலி) கொன்று, கலைமாலை உருட்டி உரல்போல் தலையுடைய ஆண் பன்றியை வீழ்த்தி, புற்றில் உறையும் உடும்பில் தைத்து நின்றது என வந்துள்ளதை உற்று நோக்கும்போது கானவனின் கவண் ஆற்றலையும், ஓரியின் அம்பின் வேகத்தையும் ஒத்துள்ளதைக் காண முடிகிறது.

குறிஞ்சி மகளிர் கற்பும் வேட்டைத்திறன் பற்றிய நம்பிக்கையும்

குறவர் கூத்துப் பாடலைப் புலவன் கலிப்பாவில் புணர்க்கும்போது தொல்குடிகளின் நம்பிக்கையை - குறிப்பாக வேட்டை, விளைச்சல், தேன், கிழங்கு எனும் வடிவங்களில் எழுந்த செழிப்பு சார்ந்த நம்பிக்கையை, கணவனைத் தெய்வமாகத் தொழும் கற்பின் வல்லமையோடு இணைக்கும் வைதீகச் செருகலைச் செய்கிறான். அவர்கள் தங்கள் உணவுக்கு ஆதாரமான இயற்கையோடு கொண்டிருந்த புராதனமான - உடல்சார்ந்த இணக்கத்திற்கு ஊறுவிளைவித்தால் வள்ளிக்கிழங்கு முளைக்காது, மலையில் தேன் கொடுக்காது, கொல்லையில் தினைக்கதிர் விடாது என்ற நம்பிக்கையில் வாழ்ந்தார்கள். உணவு சேகரிப்பும்.

கொல்லைப் பயிரும், வேட்டையும் இயற்கையின் செழிப்பு வெளிப்பாடு. இது மனிதனுக்கு உயிரை வளர்க்கும் அம்சமாகும். மனிதனின் செழிப்பிற்கு இயற்கை காரணம். இயற்கையின் செழிப்பிற்கு மனிதன் காரணம். ஒன்றை மற்றது தூண்டிவிடவல்லது. இந்தச் சமனிலையில் குலைவு வராமற் பார்ப்பதுவும், வளத்தை அதிகரிப்பதுவும் மனிதரின் செழிப்புச் சடங்கு சார்ந்த செயல்பாட்டினால் சாத்தியமாவதாக நம்பினர். இதை,

'காந்தள்கடி கமழும் கண்வாங்கு இருஞ்சிலம்பின்
வாங்குஅமை மென்தோள் குறவர்மட மகளிர்
தாம்பிழையார் கேள்வர்த் தொழுது எழலால் தம்ஐயரும்
தாம் பிழையார் தாம் தொடுத்த கோல்' (கலி :37:15-18)

என்ற பகுதியில், கணவரைத் தெய்வமாகத் தொழும் குறவர் பெண்களின் கற்பின் வலிமையால் ஆண்களின் அம்பு குறிதவறாமல் வேட்டையைச் சாய்க்கும் என்று பெண்ணின் கற்புக்கும், வேட்டை உணவிற்கும் இடையில் புலவன் உறவுபடுத்துகிறார். இதனை உள்ளார்ந்து பார்த்தால் பெண்ணின் தொடர்பால் மண் செழிப்படையும், விளைச்சல் (வேட்டை) உண்டாகும் என்ற தொன்மையான நம்பிக்கை சார்ந்த உளவியலைக் காணலாம். இதன் மூலம் வேட்டைக்கும் விளைச்சலுக்கும். கற்பையும், அறத்தையும் கற்பித்ததை அறிந்துகொள்ள முடிகிறது. இதனை,

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை' (குறள்.55)

என்ற குறளில் பிற தெய்வங்களைத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுது வாழும் மனைவி பெய் என்று சொன்னால் மழை பெய்யும் என்பதும் குறவர் மகளிரின் கற்பும் வேட்டைத்திறன் பற்றிய நம்பிக்கையும் தெரிய வருகிறது.

மரங்களும் ஆறுகளும் பூமியின் நீர் நிலைகளும், இயற்கையின் செழிப்பின் முகவர்கள். இவை பெண்களுக்குக் கருவளத்தை ஏற்படுத்துகின்றன. மழை, ஆறு ஆகியவை கன்னியரைக் கருவுறச் செய்யும். இதேபோலக் கன்னியரின் கருவளம் மழையை ஆற்று வெள்ளத்தைத் தரும். கன்னியரை அணங்கு பற்றுதல் என்பது இதை ஒட்டிய நம்பிக்கையே ஆகும். பழந்தமிழ் அகவல் குறிஞ்சிப் பாடல்களில் தினைப் புனத்தருகே மரக்கிளையில் ஊஞ்சல் கட்டிக் கன்னிப் பெண்கள்

ஆடியது வெறும் விளையாட்டு மட்டுமன்று ஆடுகிறபோது அவள் நிழல்படுகிற பூமிப் பரப்பெல்லாம் தினைப்புனம் எல்லாம் வளம் பெற்று விளைச்சலைத் தரும் என்ற நம்பிக்கையை,

ஏனல்
இனக் கிளியாம் கடிந்து ஓம்பும் புனத்து அயல்
ஊசல் ஊர்ந்து ஆட ஒரு ஞான்று வந்தானை (கலி :35:12-14)

என்னும் பாடலின் ஏனலில் கிளைகளை விரட்டிக் காவல் காத்துவந்த தலைவி தினைப் புனத்தின் அருகில் ஊஞ்சல்கட்டி ஆடுவதைக் கபிலர் குறிப்பிடுவதன் மூலம் செழிப்பும் விளைச்சலும் நம்பிக்கையின் அடிப்படையில் உண்டாகிறது என்பதே குறிஞ்சிக்கலிப் பாடல் சுட்டிக் காட்டுகிறது.

ஆய்வு முடிவுகள்

குறிஞ்சிக் கலியில் வேடுவர் கானவர் என்றே சுட்டப்படுகிறது. மேலும் வேடுவனின் வேட்டைத் திறனை 41,43 பாடலில் பண்டைக் காலத்து இசையோடு பாடும் இசைப்பாட்டாகக் கபிலர் கூறுவதே அறியலாம். குறிஞ்சிநில மகளிர் கற்பும் வேட்டைத்திறன் பற்றிய நம்பிக்கையும் அவர்களிடம் இருப்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல் :

1. ராஜ்கவுதம் - கலித்தொகை - பரிப்பாடல் (ஒரு விளிம்பு நிலைநோக்கு) விடியல் பதிப்பகம், முதற்பதிப்பு - 2011.
2. புலியூர்க்கேசிகன் - அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்.
3. புலியூர்க்கேசிகன் - புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்.
4. இரா. இளங்குமரன் - திருக்குறள் கருத்துரை, வெளியீடு - திருவள்ளூர் தவச்சாலை, பதிப்பு - 1997.

இலக்கியங்களில் வேட்டுவர் தொழில்கள்

முனைவர் மா. ரமாதேவி
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
கிண்டி, சென்னை 600 032.

திருமதி. சு. ஈஸ்வரி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை 600 095.
(பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்)
கைபேசி : 9840849793
நளறயசைஅநசஉல@பஅயடை.உடிஅ

முன்னுரை

சங்ககால மக்கள் தங்கள் வாழ்வாதரங்களுக்காக அவரவர் நிலைக்கு ஏற்ற தொழில்களைப் புரிந்தனர். அதில் எயினர்கள் வேட்டையாடுவதைத் தன்னுடைய தொழிலாகக் கொண்டனர். இதில் சில தந்திரங்களைப் பின்பற்றி விலங்குகளை வேட்டையாடினர். இதன்மூலம் அவர்கள் வாழ்க்கையை நடத்தினர்.

வேட்டுவரின் குறிப்பு

**“ஆயர்வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்
ஆவயின் உருஉம் கிழவரும் உளரே” (தொல்.அகம்.21)**

ஆயர் குடியைச் சார்ந்த ஆணினுடைய பெயரை ஆயர் என்றும், வேட்டுவக் குடியைச் சார்ந்த ஆணினுடைய பெயரை வேட்டுவர் என்றும் அழைத்தனர். இதில் ஆட்சி உரிமை பெற்றவர்கள் வேட்டுவர்எனவும், ஆட்சி உரிமை பெறாதவர்கள் ஆயர்கள் எனவும் அழைக்கப்பட்டனர்.

“மேம்படவெறுத்த அவன் தொல்திணை மூதூர்” மலைபடு.401)

திணை என்பதற்கு குடி அல்லது குலம் எனப் பொருள்படும்.

வேட்டுவர்களின் சிறப்புப் பெயர்கள்

வில் எயினர், வில் கானவர், வில்லர் எனச் சங்க காலத்தில் வேட்டுவர்களை அழைத்தனர். வேட்டுவக் குடியைச் சார்ந்த போர் வீரர்களின் பெயர்களை மழவர், மறவர், வயவர், கூளியர் என சங்க காலத்தில் அழைத்துள்ளனர்.

சங்க இலக்கியத்தில் வேட்டுவர் என அழைக்கப்பட்டவர்களைக் கல்வெட்டுகளில், 'பூலுவர்' என்றும் 'காவலன்' என்றும் 'வேட்டுவர்' என்றும் 'மாவலியர்' என்றும் 'வேடர்' அல்லது 'வேட்டைக்காரன்' என்றும் அழைத்தனர். மேலும் வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக உடும்பு, முயல், மான், பன்றி, முள்ளம்பன்றி, புலி, யானை போன்ற விலங்குகளை வேட்டையாடிப் பிடித்தனர். ஆதலால் இவர்கள் வேடர் அல்லது வேட்டைக்காரன் அல்லது வேடுவர் எனவும் அழைக்கப்பட்டனர்.

புலியை வேட்டையாடுதல்

வேட்டுவர் புலியை வேட்டையாடியதாகச் சங்கஇலக்கியங்கள் மூலம் அறியலாம். வேட்டுவர் புலி வேட்டைக்குச் சென்றபோது, கோபமடைந்த புலியானது வேட்டுவரின் மார்பைக் கிழித்து மிகவும் புண்ணாக்கியது. அந்தக் கொடிய புண்ணினுடைடைய வலி தெரியாமல் இருக்க எயிற்றிய குலப்பெண் ஒருவர் தன் கணவருக்காகப் பாடலைப் பாடினர். அப்பாடலின் இனிய ஓசையானது காடெல்லாம் பரவியதாக மலைபடுகடாம் கூறுகின்றது:

> **"கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்**
> **நெடுவசி விழுப்புண் தணிமலர் காப்பென**
> **அறல்வாழ் கூந்தல் கொடிச்சியர் பாடல்"** (மலைபடு.302-304)

யானையை வேட்டையாடுதல்

ஒரு யானை தன் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்து கானவர்களின் தினைப்புனத்தில் உண்பதற்காக வந்தது. கானவர் மலைமேல் பரண் அமைத்து தினைப்புனம் காத்தபோது அந்த யானையைப் பிடிப்பதற்காகக் கூடி முயன்று பெரிய ஆரவாரமான ஒலியை எழுப்பினர். அவ்வொலி யானது காடெங்கும் எதிரொலிக்கும்படி கேட்டதாக மலைபடுகடாம் பாடல் கூறுகிறது.

“விலங்கில் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக்கு உண்ணும் புரிவளைப் பூசல்” (மலைபடு-298-299)

பன்றியை வேட்டையாடுதல்

உணவுக்காக எயினர் பன்றிகளை வேட்டையாடினர். பன்றியை வேட்டையாடுவது எளிதானதல்ல; கடினமான செயலாகும். வேடர்கள் வேட்டைக்காக விரட்டும்போது அதனுடைய வளைந்த கொம்பால் மோதித் தாக்கிவிடும். ஆதலால் சில தந்திரங்களைக் கையாண்டு எயினர் பன்றிகளை வேட்டையாடினர். இன்றளவும் பன்றிகளை யாரும் வளர்க்கும் நிலையில் இல்லை. ஆகையால் மழை இல்லாதபோது வறண்டுபோன கடுமையான கோடைக் காலத்தில் விலங்குகள் நீர் இல்லாமல் மயங்கி விழும் நிலையும் இருக்கின்றது. நீர் தேடி வரும் பன்றிகளின் காலடித் தடங்கள் வழிகளில் காணப்படும் கானவர்கள் நீர் நிற்பதற்காகக் குளங்கள் அமைத்தனர். அங்குள்ள குளத்தின் அருகில் (பந்துக்குழி) மட்டுக் குழியையும் அமைத்தனர். அக்குளங்களுக்கு நீர் அருந்துவதற்காகப் பன்றி முதலிய விலங்குகள் வரும். அவ்வாறு வரும்போது வேட்டுவர் அவற்றைக் கொள்வதற்காக மட்டுக் குழிகள் எனப்படும் குழிகளை அமைத்தனர். வேட்டுவர் அமைத்த அக்குளம் தனி மனிதருக்கானது அல்ல. அச்சமூகத் தேவைக்காகச் சமூகத்தார் அமைத்த குளமாகும்.

“மானடி பொறித்த மயங்கு அதர் மருங்கில்
வான் மடி பொழுதில் நீர் நசைஇக் குழித்த
அகழ் சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கிப்
புகழாவாகைப் பூவின் அன்ன
வளை மருப்பு ஏனம் வரவு பார்த்திருக்கும்
அரைநாள் வேட்டம் அழுங்கின் பகல்நாள்
பகுவாய் ஞமலியொடுபைம்புதல் எருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள் அரைத் தாமரைப் புல் இதழ் புரையும்
நெடுஞ் செவக் குறுமுயல் போக்கறவளைஇக்
கடுங்கண் கானவர் கடறு கூட்டுண்ணும்
அருஞ்சுரம்” (பெரும்பாண்.106-117)

தினைக் கதிர்கள் நன்கு விளைந்து முற்றிய தினைப்புனத்தில் பன்றிகள் இரவு நேரங்களில் வந்து அத்தினைக் கதிர்களை மேய்த்து அழிக்கும்.

அதனைத் தடுப்பதற்காகவே வேட்டுவர்கள் தினைப் புனங்களில் பன்றிகள் வரும் பாதையில் பெரிய பொறிகளை அமைத்து வைத்தனர். அங்கு தினைப் புனத்தை மேயவரும் பன்றிகள் அக்கற்பொறிகளில் அகப்பட்டுவிடும்; அப்பொழுது அங்கு எயினர் காத்திருந்து சமயம் பார்த்துப் பன்றிகளைக் கொல்வர். இக்கற் பொறிகளை 'அடார்' என்று அழைப்பர்.

உடும்பினை வேட்டையாடுதல்

எயினர் வேட்டையாடுவதில் உடும்பும் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதை எயினர் விரும்பி வேட்டையாடினர். உடும்பினுடைய சதை சத்தானதாகச் சங்ககால மக்கள் கூறுகின்றனர்.இதை உண்பதால்சத்து உடலில் சேரும் என்பது நீண்ட காலமாக மக்கள் நம்பிக்கையாகும். இது பற்றிய மக்களின் பழமொழி ஒன்று உள்ளது."கால் கோழி, அரை ஆடு, முக்கால் காடை, முழு உடும்பு" என்பதாகும். வேட்டையாடுபவர்கள் இன்றளவும் உடும்பை விரும்பி வேட்டையாடுகின்றனர்.

"களர்வளர் ஈந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூல் உடும்பின்
வறைக்கால் யாத்தது வயின்தொறும் பெறுகுவிர்"
- (பெரும்பாண்.130-133)

எயினர்கள் வருபவருக்குக் களர் நிலத்தில் விளைந்த ஈச்ச மரத்தினது விதைபோன்று, அது மேட்டு நிலத்தில் பயிரான, சிவப்பான நெல்லரிசியால் ஆக்கிய சோற்றை,நாய்கள் கடித்துக் கொண்டு வந்த மணிபோல முட்டையிடும் உடும்பினது பொறியலைச் செய்து, வீடுகளில் உண்ணத் தருவார்கள் என்பதன் மூலம் எயினர்கள் உடும்பினை வேட்டையாடினர் என அறிய முடிகிறது.

முடிவுரை

சங்க காலத்தில் மக்கள் வேட்டையாடுதலைத் தங்களின் தொழிலாகச் செய்தனர். இதில் புலி, மான், யானை, முள்ளம்பன்றி, பன்றி, உடும்பு, முயல் போன்றவற்றை வேட்டையாடினர். இதில் எயினர்கள் எவரும் தனி ஒருவராக இத்தொழிலைச் செய்ததில்லை. அவர்களுடைய சமூகத்திற்காகக் கூட்டு முயற்சியாகவே எயினர்கள் இவ்வேட்டையாடுதல் தொழிலைச் செய்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கம்பராமாயணத்தில் வேட்டுவர்கள்

செ. லைலா,
தமிழாய்வுத்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி,
9384431498.

முன்னுரை

கம்பராமாயணம் இதிகாசங்களில் ஒன்றாக விளங்குகிறது. வேட்டையாடுதலை மூலத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் வேட்டுவர்கள் ஆவர். க் சங்க இலக்கியத்தில் வேட்டுவர்கள் வில்லர், எயினர், வேடர், என்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். சிறந்த பண்பு நலன்களைக் கொண்ட வேட்டுவர்கள் பற்றி கம்பராமாயணத்தில் காணப்படும் செய்திகளை இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிகின்றது.

வேட்டுவர்களின் தோற்றம்

வேள் என்னும் சொல்லில் இருந்துதான் வேட்டுவர்கள் என்னும் சொல் வந்தது என்று தமிழ் அறிஞர்கள் பலர் குறிப்பிடுகின்றனர்.

> **“ஆயர் வேட்டுவர் ஆடூஉத்**
> **திணைப்பெயர்**
> **ஆவயின் வரூஉம் கிழவரும்**
> **உளரே”**

என்று தொல்காப்பியர் முல்லை நிலத்தில் வாழும் மக்கள் ஆயர் மற்றும் வேட்டுவர்கள் என்று குறிப்பிடுகின்றார். மனிதன் அவன் தோன்றிய காலம் முதலே வேட்டையாடுதலைச் செய்து வருகிறான். எனவே, ஆதிகாலத்திலிருந்தே வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

கம்பராமாயணத்தில் வேட்டுவர்கள்

கம்பராமாயணம் ஒரு தழுவல் நூலாக இருப்பினும் கம்பர் தனது கற்பனை நயத்தின் வெளிப்பாடாக, வேட்டுவத் தலைவனின் கதாபாத்திரத்தை ஒரு சிறப்புக் கதாபாத்திரமாகக் கூறி வேட்டுவர்களைச் சிறப்பித்துக் காட்டியுள்ளார். அயோத்தியா காண்டத்தில் உள்ள குகப்படலம் வேட்டுவர்களின் வாழ்வியல், பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்கள் போன்றவற்றை எடுத்து இயம்புவதாகக் காணப்படு கின்றது

வேடனின் தோற்றம்

ஒரு மனிதனின் மதிப்பை உணர்த்துவது அவனின் உடலமைப்பு, ஆடை, அணிகலன்கள் போன்றவை ஆகும்.

“துடியன் நாயினன் தோற்கும் ஆர்த்தப் பேர்
அடியன் அல் செறிந்தன்ன நிறத்தினான்
நெடிய தானை நெருங்கலின் நீர்முகில்
இடியினோடு எழந்தாலன்ன ஈட்டினான்”[2]

என்ற கம்பராமாயண வரிகளின் மூலம் வேட்டுவ குலத் தலைவனான குகனின் மேனியமைப்பு, அவன் அணிந்து உள்ள அணிகலன்கள், அவனிடம் உள்ள வேட்டை நாய்கள் போன்றவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

கம்பராமாயணத்தில் வேட்டுவக் கருவிகள்

வேட்டுவத் தொழிலில் கருவிகள் மிக முக்கியயமானதாகவஹ் திகழ்கின்றது.

“காயும் வில்லினன்”[3]

இதிலிருந்து வேட்டுவர்களது வில்லின் பயன்பாடு அறியப்படுகிறது. மேலும்,

“வில் துறந்து அரை வீக்கிய
வாள் ஒழித்து”[4]

என்ற கம்பராமாயண வரிகளின் மூலம் வேட்டுவத் தொழிலில் வில் மட்டுமல்லாமல் வாளின் பயன்பாடும் இருந்ததை அறிந்துகொள்ள முடிகின்றது.

வேட்டுவர்களின் பிற தொழில்கள்

வேட்டுவர்கள் வேட்டுவத் தொழிலை மட்டும் செய்யாமல் பிற தொழில்களையும் செய்துள்ளனர்.

“தூய கங்கை துறை விடும்
தொன்மையான்”[5]

என்ற கம்பராமாயண வரிகளின் மூலம் கங்கை நதியில் ஓடம் வைத்து, குகன் தொழில் செய்ததைக் காணமுடிகின்றது. மேலும்,

“நாவாய் வேட்டுவன்”[6]

என்று கம்பராமாயணத்தில் குகன் ராமனிடம் தன்னை ஓடங்களைச் செலுத்தும் வேடன் என்று அறிமுகப்படுத்தினான். மேலும்,

“ஏற்று நீர்க் நாவாய்க்கு இறை”[7]

என்று கம்பராமாயணத்தின் வாயிலாக, கங்கை நதியில் செல்லும் ஓடங்களுக்குத் தலைவனாக, குகன் காணப்படுகின்றான் என்பதை அறிய முடிகின்றது. வேட்டுவர்கள் வேட்டையாடுதல் மட்டுமின்றி பிற தொழில் களையும் செய்துள்ளனர் என்பதனை இதன் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

வேட்டுவர்களின் இறை வழிபாடு

வேட்டுவத் தொழிலைச் செய்யும் வேட்டுவர்கள் இறைவன் மீது மிகுந்த பக்தியுடன் காணப்பட்டனர்.

“மண் உறப் பணிந்து,
மேனி வளைத்து வாய் புதைத்து நின்றான்”[10]

என்ற கம்பராமாயண வரிகள் மூலம் இராமனைக் கடவுளாகக் கண்ட குகன் தன் கருமை நிற முடிகள் கீழே தரையில் படுமாறு விழுந்து வணங்கி, பின்னர் உடல் வளைத்து, வாயினைத் தன் கைகளால் பொத்திக் கொண்டு பணிவோடு வணங்கினான் என்பது அறியப்படுகின்றது. மேலும்,

“இன்னலின் இருக்கை நோக்கித் தீர்கிலேன்; ஆனது ஐய!
செய்குவேன் அடிமை என்றான்”[11]

என்ற கம்பராமாயண வரிகள் மூலம் இராமன் மீது குகன் கொண்ட மிகுந்த அன்பின் காரணமாகப் பல சேவைகளைச் செய்தது பற்றி இங்கு அறிய முடிகின்றது.

வேட்டுவனின் காவல்

வேட்டையாடுதலை மட்டும் செய்யும் வேட்டுவர்கள் பிறரைக் காவல் செய்யும் காவல் வீரர்களாகவும் இருந்துள்ளனர்.

"மணிநீரும் மண்ணும் மலையும்
அணிநிழற் காடும் உடையது அரண்"[12]

என்று வள்ளுவர் இக்குறட்பா மூலம் அரண் (காவல்) பற்றிக் குறிப்பிடும் உயர்வான கருத்துக்களை அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும்,

"அடிதொழுது உவகை தூண்ட அழைதனன், ஆழி அன்ன
துடியுடைச் சேனை வெள்ளம், பள்ளியைச் சுற்ற ஏவி,
வடிசிலை பிடித்து, வாளும் வீக்கி, வாய் அம்பு பற்றி
இடியுடை மேகம் என்ன இரைத்து அவன் காத்து நின்றான்"[13]

என்ற கம்பராமாயண வரிகள் மூலம் இராமன், இலக்குவனன், சீதை ஆகிய மூவரையும் குகன் மற்றும் அவனின் சேனைகள் எவ்வாறெல்லாம் காவல் செய்தனர் என்பதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

வேட்டுவர்கள் வாழுமிடம்

வேட்டுவர்களின் வாழ்விடமாக மலைகள் மற்றும் காடுகள் இருந்தன.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்"[14]

என்ற தொல்காப்பிய வரிகளின் மூலம் மலைப்பகுதி என்பது குறிஞ்சி என்றும் அப்பகுதியின் கடவுள் முருகன் என்றும் மற்றும் காடு என்பது முல்லைநிலப் பகுதி என்றும் அதன் கடவுள் திருமால் என்றும் அறிய முடிகின்றது. மேலும்,

"பொய்ம் முழை இலரால் எம் புகல் இடம் வனமே யால்"[15]

என்ற கம்பராமாயண வரிகள் மூலம் குகன் காட்டுப்பகுதியில்தான் வாழ்ந்தான் என்பதை அறிய முடிகின்றது.

முடிவுரை

வேட்டையாடுதலை மூலத் தொழிலாகக் கொண்ட வேட்டுவர்கள் பண்டையகாலம் முதல் இன்றைய காலம் வரையில் இம்மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். கம்பராமாயணத்தில் குகன் என்னும் வேட்டுவத் தலைவனின் தோற்றம், கருவிகள், தொழில்கள், விருந்தோம்பல், இறை வழிபாடு, காவல், வாழும் இடம், உணவு என பலவற்றைப் பற்றி இக்கட்டுரையில் கண்டோம்.

சான்றெண் விளக்கம்:

1. தொல்.பொருள்.அகம்.நூ.23.
2. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1954
3. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1953
4. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1962
5. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1953
6. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1963
7. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1964
8. திருக்.விருந்து.கு.எண்.84
9. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1966
10. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1965
11. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1969
12. திருக்.அரண்.கு.எண்.742
13. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1971
14. தொல்.பொருள்.அகம்.நூ.4
15. க.ராமாயணம்.அயோத்.குகன்.பா.எண்.1980

புறநானூற்றில் வேட்டுவர்

இரா.விக்னேஷ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
லதா மாதவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கிடாரிப்பட்டி, மதுரை-01
அலைபேசி:8940565896
vikeyab2@gmail.com

முன்னுரை

தமிழ்ச் சமுதாயத்தின் கலங்கரை விளக்கமாகவும் செம்மாந்த தமிழர்களின் சிறப்பான வாழ்க்கையை எடுத்துரைக்கும் வரலாற்று ஆவணமாகவும் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழன் நிலத்தை ஐந்து வகையாகப் பகுத்து அதற்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைத் தேர்வுசெய்து வாழ்ந்துள்ளமைக்கு மிகப்பெரிய சான்றுகள் இலக்கியங்களே ஆகும். அவ்வகையில் பண்பாட்டுக் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூற்றில் வேட்டுவர் தொடர்பான செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

புறநானூறும் வேட்டுவரும்

புற ஒழுக்கங்களைப் பற்றிக் கூறும் இலக்கியம் புறநானூறு இந்நூல், 400 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூல் 157 புலவர் பெருமக்களால் பாடப் பெற்றதாகும். புறநானூற்றில் வேட்டுவர் பற்றிய செய்திகளும் வேட்டையாடுதல் பற்றிய செய்திகளும் உள்ளன. சங்க காலங்களில் வேட்டுவக் குடியினரை வில் எயினர், வில் கானவர், வில்லர் போன்ற சிறப்புப் பெயர்களிலும் வேட்டுவக் குடியைச் சேர்ந்த போர் வீரர்களை மழவர், மறவர், வயவர், கூளியர் போன்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டனர். வேட்டுவர் என்ற சொல் ஒரு குடிப்பெயர். வேட்டுவக் குடியினர் தங்களது உணவுக்காக மான், முயல் மற்றும் பறவைகளை வேட்டையாடி உண்டனர். இதனால் வேட்டுவக் குடியினர் வேடர் அல்லது வேட்டைக்காரன் அல்லது வேடுவர் என்று அழைக்கப்படுகின்றனர்.

வேட்கை-வேட்டை

ஒரு மனிதன் ஒரு பொருளின் மீது அவா கொண்டு அதனை அடைவதற்குப் பெயர் வேட்கை எனலாம். இந்த வேட்கை என்பதுதான் வேட்டை என்று மானுடவியல் அறிஞர். A.L.Kriber கூறுவர். மேலும், ராபர்ட் ஹென்றி என்பவர் உலக வேட்டைக்காரர்கள் என்ற நூலில் கொடிய விலங்குகளைப் பார்த்து மனிதர்கள் எவ்வாறு அச்சப்படு கிறார்களோ அதே போல விலங்குகளும் மனிதர்களைப் பார்த்து அச்சம் கொள்ளும். வேட்டையாடுதல் என்பது அனைத்து நிலத்திற்கும் பொதுவானதாகும். இருந்தாலும், முதன்மை நிலமான குறிஞ்சித் திணைக்கே உரித்தான தொழில் வேட்டையாடுதல். Encyclopaedia of the social science எனும் நூலில் வேட்டைத் தொழிலே பழமையான தொழில் என்ற குறிப்பு உள்ளது.

பண்டைய மனிதன் முதன் முதலாக வேட்டையாடுதலையே தம் பணியாகக் கொண்டிருந்தான். குறிஞ்சிநிலப் பொது மக்களின் தொடக்க காலத்தில் முக்கிய உணவு வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியே. தாம் கண்ட விலங்குகளின் மீது விருப்பம் கொள்வது வேட்கை. சங்க காலத்தில் வாழ்ந்த மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தென்கடல் வளாகம் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமையோனைக் குறிப்பிட்டு விட்டு தாழ்ந்த எல்லையில் இருப்பவனுக்கு,

நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமா பார்க்கும் கல்லா ஒருவருக்கும் - (புறம்.189)

என்று வேட்டுவனைக் குறிப்பிடுகிறார். மக்கள் கூட்டமாகச் சேர்ந்து வேட்டையாடும் தன்மை காணப்படுகின்றது. காரணம்புலி, சிங்கம், யானை, காட்டுப்பன்றி போன்றவை மனிதனைக் காட்டிலும் ஆற்றல் மிக்கவை என்பதையும் ஓடி மறையும் தன்மை கொண்டவையாகவும் உள்ளதனை பின்வரும் புறநானூற்று அடிகள் மெய்யப்பித்துக் காட்டுவதை,

அதன் எறிந்தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்த்தலும் கூடுமன் (புறம்.193)

என்னும் பாடல் அடிகளின் வாயிலாக அறிய முடிகிறது.

வேட்டுவன் வகைகள்

- கதநாய் வேட்டுவன் (புறம்.33)
- வல்வில் வேட்டுவன் (புறம்.150)
- கோ வேட்டுவன் (புறம்.152)
- வெட்சிக் கானத்து வேட்டுவன் (புறம்.202)
- யானை வேட்டுவன் (புறம்.214)
- குறும்பூழ் வேட்டுவன் (புறம்.214)
- சொல்வலை வேட்டுவன் (புறம்.252)
- கைமான் வேட்டுவன் (புறம்.320)
- வெல்வாய் வேட்டுவன் கடுவிசைக் (புறம்.324)

என்று வேட்டுவன் பற்றிய வகைகளைக் காணமுடிகிறது.

நாயும் வேட்டுவனும்

வேட்டைத்தொழில் செல்லும் பொழுது கைகளில் வில், கொம்பு, கால்களில் செருப்பு போன்றவை வைத்திருப்பதனோடு நாய்களை வேட்டை தொழிலிற்கு ஏற்றவாறு பழக்கப்படுத்தி தங்களுடனே அழைத்துச் சென்றுள்ளனர் என்பதை,

கானுற வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும் (புறம்.33)

மான் கணம் தொலைச்சிய கதநாய்
நோன் சிலை வேட்டுவ (புறம்.205)

எனும் அடிகள் மூலம், காட்டிலே வாழும் வேட்டுவன் வேட்டைத் தொழிலுக்கு நாய் பயன்படுத்தியுள்ளான். அது வேட்டைநாய் என்று குறிப்பிடப்படுகிறது.

வேட்டுவரும் பண்டமாற்றமும்

கான் உறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான் தசை சொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும், நிறைய,
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்

குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப, உகந்தனர் பெயரும் (புறம்.33)

இவ்வூர் மக்கள் உழவர். இவர்களின் பெருங்குடி மகள் நெல்லைப் பண்டமாற்றாகத் தருவாளாம். வேட்டுவன் நாய்த்துணையுடன் வேட்டையாடிக் கொண்டுவந்த மான் தசையைக் கொடுத்துவிட்டு நெல்லைப் பெற்றுச் செல்வானாம். ஆயர் குடிமகள் மந்தையில் கொண்டுவந்த தயிரைக் கொடுத்துவிட்டு நெல்லைப் பெற்றுச் செல்வாளாம்.

தயிரும் வேட்டைக் கறியும்

அருமிளை இருக்கை இதுவே *மனைவியும்*
வேட்டச் சிறா அர் சேட்புலம் படராது.
புடமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்குநிணம் பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு, ஓராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள்: கிழவனும்
அருஞ்சமம் ததையத் தாக்கிப், பெருஞ்சாமத்து
அண்ணல் யானை அணிந்த
பொன்செய் ஓடைப் பெரும்பரி சிலனே. (புறம்.326)

காட்டரண் மீளையை உடையது அவன் ஊர். வல்லாளன் மனைவி அவ்வூர்ச் சிறுவர் நெடுந்தொலைவு வேட்டைக்குச் செல்லாமல் தாம் விரும்பிய உடும்பை அவ்வூர்ப் படப்பை நிலத்திலேயே பெறுவர். அதன் தசையைத் தயிரில் ஊற வைத்து உண்பர். இப்படி உண்பதை விருந்தாக வரும் பாணர்களுக்கும் பகிர்தளித்து உண்பதில் வல்லாளன் மனைவிக்கு விருப்பம் அதிகம். அந்த வல்லாளன் போரில் எதிராளி வேந்தனின் தலைமையான யானையைக் கொன்று அதன் நெற்றியில் இருந்த ஓடையைத் தன் அரசன் கையால் பரிசிலாகப் பெற்றவன்.

இப்பாடலில், யானையை வேட்டையாடுதல் இருந்துள்ளது என்பதனை அறிய முடிகின்றது. இதனை பொன்முடியார் கூறும் கடமைகளில்,

களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

எனும் அடியில் ஒப்பு நோக்கத்தக்கது.

வேட்டைப் பொருள்கள்

வேட்டுவர்கள் வேட்டைக்குச் செல்லும் பொழுது நாய், வில், தடி, வார்செருப்பு போன்ற பொருள்களை வைத்திருப்பதனை அறியமுடிகிறது.

நோன் சிலை வேட்டுவ (புறம். 205)

வேட்டையாடிய பொருள்கள்

வேட்டையாடிய பொருள்களாக உடும்பு, யானை, பறவை, மான், முளவு மான் (முள்ளம் பன்றி), வெருகு (காட்டுப்பூனை), புளி (காய்) போன்ற அனைத்தையும் வேட்டையாடி உள்ளனர் என்பதற்கு,

யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் (புறம்.214)

புளிச்சுவை வேட்ட செங்கண் ஆடவர் (புறம்.177)

எயினர் தந்த எய்ம்மான் எறித் தசை (புறம். 177)

மான்கணம் தொலைச்சிய குருதியம் கழற்கால் (புறம்.150)

இல் வழங்கு மடமயில் பிணிக்கும் (புறம். 252)

சிலைபாற் பட்ட முளவுமான் கொழுங்குறை (புறம். 374)

வெருக்கு விடை அன்ன வெருள் நோக்கு (புறம். 324)

போன்ற பாடலடிகள் சான்றாக உள்ளதனை அறியமுடிகிறது.

முடிவுரை

தமிழரின் பண்பாட்டுக் கருவூலம் என்று அழைக்கப்படும் புறநானூறு பல்வேறு வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளது. வேட்டுவர் என்பவர்கள் வேட்டையாடி உணவு உண்பவர்கள் என்பதையும் அவர்களை மன்னர்களாக இருந்துள்ளதையும் புறநானூற்றுப் பாடல்கள் மூலம் அறியப்படுகிறது. மேலும்,

- வேட்டுவன்(ர்) என்ற சொல்-9 பாடல்களிலும்
- வேட்ட, வேட்டுவ என்ற சொல்-29 பாடல்களிலும்
- வேட்டை நாய் பற்றிய செய்திகள்-2 பாடல்களிலும்
- வேட்டைக்கறியும் தயிரும் - 2 பாடல்களிலும்

ஆகிய செய்திகள் இக்கட்டுரையில் வெளிக் கொணரப்படுகிறது. மேலும், வேட்கையாடுதலே பின்னாளில் வேட்டையாடுதல் என்று மருவியுள்ளது. புறநானூற்றின் பல்வேறு பாடல்களில் வேட்ட, வேட்டுவ என்ற சொற்களானது விருப்பம் என்ற பொருளிலே அமைவதனை அறியமுடிகிறது.

படைவீடு - நடுகற்களில் வேட்டுவர் வாழ்வியல்

பா. விஜய்
முதுகலை மாணவர்,
முதுகலை & தமிழாய்வுத்துறை,
முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி (த), வேலூர் 02.
அலைபேசி: 6369814610
vipvijay582@gmail. Com

முன்னுரை

நீரினால் சூழப்பட்ட இவ்வுலகத்தில் உயிரினங்கள் தோன்றியது முதல் ஒவ்வொரு உயிரினத்திற்கும் உயிர் வாழ்வதற்கு உணவு அவசியம் தேவைப்படுகிறது. இவ்வாறு உயிரினங்கள் உணவுப் பொருள்களைத் தாவரங்களிடமிருந்தும் அல்லது பிற உயிர்களைக் கொன்று அதனை உட்கொள்கின்றன. சூழ்நிலைக்கு ஏற்றவாறு எந்த ஒரு உயிரினம் வலிமையாக உள்ளதோ அதுவே நிலைத்து நிற்கும். சூழ்நிலை மாற்றத்தினால் மனித இனம் பரிணாம வளர்ச்சியின் காரணமாக முதலில் பிற விலங்குகளை வேட்டையாடத் தொடங்கினான். பிறகு மனித அறிவின் வளர்ச்சியின் காரணமாக நிலங்களைப் பண்படுத்தியும் நிலங்களை உழுதும் தாவரங்களை உற்பத்தி செய்து உணவை உட்கொண்டான். இருப்பினும் வேட்டையாடுதல் எனும் தொழிலைப் பல நூற்றாண்டுகள் கடந்தும் செய்து வருகின்றனர். இவ்வாறு மனிதன் வேட்டையாடுதல் பற்றிய கல்வெட்டுகள், குகை ஓவியங்கள், செப்பேடுகள், நடுகற்கள் போன்ற தொல்லியல் கூறுகள் காணப்படுகின்றன. இவற்றில் நடுகற்களில் வேட்டைத் தொழில் செய்தல் மற்றும் வழிபாடு, பெண்களின் பங்கு, உடைகள், ஆயுதம் பற்றிய செய்திகளைப் படைவீட்டு நடுகற்கள் வழியே கட்டுரையில்காண்போம்.

தொல்காப்பியம் காட்டும் நடுகல் வழிபாடு

தொல்காப்பியம் இறந்த வீரர்கள் பொருட்டு எடுக்கப்படுகின்ற நடுகல்லிற்குரிய மரபுகளைப் பின்வருமாறு பதிவு செய்கிறது:

காட்சிகால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று மரபில் கல்லொடு புணர...

என்று புறத்திணை நூற்பா விளக்குகிறது.

படைவீடு அமைவிடம்

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் ஆரணியிலிருந்து (மேற்கு) 22 கி.மீ. தூரத்திலும் வேலூரிலிருந்து தெற்கு கி.மீ. தூரத்திலும் போளூருக்கு (வடக்கே) 22 கி.மீ. தூரத்திலும் (இவற்றிற்கு மத்தியில்) சந்தவாசலுக்கு உள்ள 7 கி.மீ.தூரத்தில் அமைந்துள்ளது படைவீடு.

படைவீடு நிலவியல் அமைப்பு

“காடு படர்ந்து பசுந்தழை போர்த்து நிற்கும் குன்றுகளின் அடியில் மணல் பரந்த ஆற்றங்கரையில் நின்று திகழும் இவ்வூர் படைவீடு என்று பெயர் தாங்கியிருப்பது மிகவும் பொருத்தமே என்பதை நேரிற் சென்று காண்பவர் நினையா தொழியார்” (ஔவை துரைசாமிப் பிள்ளை, நந்தா விளக்கு) என்று படைவீடு குறித்து புகழ்ந்துரைப்பது பொருத்தமுடையது. வெளியில் இருந்து காண்பவர்க்கு இப்படியோர் எழில்மிகு ஊரிருப்பதே தெரியாத வகையில் நாற்புறமும் உயர்ந்து நிற்கின்ற மலைகளும் காடுகளும் படைவீட்டைப் பாதுகாக்கும் காவலரண்களாகத் திகழ்கின்றன. இவ்வூருக்கு மேற்கே உள்ள ‘இராஜகம்பீரன் மலை’யிலிருந்து (ஜவ்வாதுமலை) ஒடிவரும் கமண்டல நதி படைவீட்டுக்கு முக்கிய நீராதாரமாகும்.

இம்மலையின் மீதிருந்து இந்நகருக்கு உள்ளே நுழைய வரும் எதிரிகளைக் கண்காணிப்பது எளிது. அத்துடன் இங்குள்ள மலைகளை இணைத்து தடுப்பரண் அமைத்து விட்டால் எதிரிகள் யாரும் உள்ளே வர முடியாது; வந்தவர் எவரும் எளிதில் வெளியே செல்லவும் இயலாது. இத்தகு, நிலவியல் அமைப்பு இந்நகருக்கு இன்றும் உண்டு

வரலாற்றில் படைவீடு

இந்நகரத்திலும் இதைச் சுற்றியுள்ள மலை மற்றும் நிலப்பகுதி களிலும் வரலாற்றுக்கு முற்பட்ட மனிதர்கள் பயன்படுத்திய கற்கருவிகள், பானை ஓடுகள் முதுமக்கள் ஈமத்தாழிகள் மற்றும் பெருங்கற்படைச்

சின்னங்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு இப்பகுதியில் மக்கள் வசித்துள்ளனர்'' என்பதை அறிய முடிகிறது.

சங்ககாலத்தில் இந்நகரம், 'அருவாநாடு' என்றழைக்கப்பட்ட நாட்டின்ஒரு பகுதியாக இருந்துள்ளது. பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தபோது தொண்டை மண்டலத்தின் ஒரு பகுதியாக படைவீடு இருந்துள்ளது. பின், பல்லவர்களுக்கும் சோழர்களுக்கும் இடையே 'திருப்புறம்பியம்' என்ற இடத்தில் நடைபெற்ற போரில் பல்லவர்கள் தோற்றதினால் படைவீடு சோழர்களின் ஆட்சிப் பகுதியாயிற்று. சோழர் ஆட்சியின் போது இப்பகுதி, செயங்கொண்ட சோழ மண்டலம் என்ற பெயருடன் 24 கோட்டங்களாகவும், 179 நாடுகளாகவும், 1900 நத்தங்களாகவும் பிரிக்கப் பட்டிருந்தது. இப்பிரிவுகளில் படைவீடு பல்குன்றக் கோட்டத்தின் ஒரு பிரிவாகிய 'மேயூர் நாட்டைச் சேர்ந்ததாகும்.'' 'இப்பல்குன்றக் கோட்டம் 'இராசகம்பீரன் கோட்டம் என அழைக்கப்பட்டதை கி.பி.1528 -இல் எழுதப்பட்ட கல்வெட்டொன்று கூறுகிறது.'' பிற்காலச் சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின், இத்தகு இயற்கை அரண் கொண்ட இடத்தைத் தெரிவு செய்து 'சம்புவராய அரசர்கள் தங்களின் படை நகரத்தை, அரண்மனையை, கோட்டையை, மதிலரணை அமைத்தனர்.

நடுகற்களில் வேட்டுவர்கள்

1. நடுகல் பற்றி விளக்கம்

படைவீடு - தேவனாங்குளம் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயில் வளாகத்தின் கிழக்குமதில் சுவர் உட்புறம் அருகில் சுமார் 3 அடி உயரம், 21/2 அடி அகலம் கொண்ட பன்றிக்குத்திக்கல் ஒன்றுஉள்ளது. இதில் உள்ள வீரன் தெய்வ உருவை ஒத்துக்காணப்படுகிறான். வலது கையில் தண்டாயுதம் ஏந்தியுள்ளான். இடது கையில் உள்ளவாள், அருகில் உள்ள பன்றியின் முதுகில் பாய்ந்துள்ளது. தலையில் பின்புறமாகச் சரிந்த ஜடாமுடிக்கோலமும் காதில் வட்டமானபத்ர குண்டலமும் உள்ளன. கைகளில் காப்பு; கைவளை மற்றும் கழுத்தில் மாலையும் காணப்படுகின்றன. மார்பில் முப்புரி நூலும், வலது தோளுக்குக் கீழே ஆடை சரிந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. இடுப்பின் வலது புறம் உறைவாள் உள்ளது. இடுப்பில் ஆடையும் தொடைகளில் முப்புரி ஆடையும் உள்ளது. கால்களில் தண்டை, கால்வளை; பாதவளை

போன்றவை காட்டப்பட்டுள்ளன. இடது காலை நன்றாக ஊன்றியும் வலது காலைச்சற்று மேலே உயர்த்தியும் காட்டப்பட்டுள்ளது. பன்றியின் முதுகில் வாள்பாய்ந்த நிலையில் பன்றி முன்னங்கால் இரண்டையும் தூக்கியும் பின்னங்கால் இரண்டையும் தரையில் ஊன்றி நின்ற நிலையிலும் உள்ளது.

2. நடுகல் - விளக்கம்

சந்தவாசல் அருகில் 'பாளைய ஏகாம்பர நல்லூர்' சாலை பிரிகிற இடத்திற்கு மேற்கில் மலையடிவாரத்தில் பன்றி வேட்டையில் உயிர்நீத்த வீரன், அவனுடன் இறந்து போன அவனது மனைவி வேட்டை நாய்கள் போன்றவற்றின் நினைவாக எடுக்கப்பட்ட நடுகல் ஒன்று காணப்படுகிறது. இக்கல் சுமார் 215 அடி உயரம் 3 அடி நீளம் கொண்டுள்ளது. காட்டுப்பன்றியை வேட்டையாடுவது கடினமான செயல் என்பதையும் இச்சிற்பம் நமக்கு வலியுறுத்துகிறது.

இக்கல்லில் வீரன் ஒருவன் பன்றியின் முகத்தில் நீண்ட ஈட்டியால் குத்துகிறான், பன்றியின் முகத்தில் குத்தும் ஈட்டியின் கூர்மையான முனை முகத்தைத் துளைத்துக் கொண்டு வெளியே வருகின்ற காட்சி அற்புதமாகப் பன்றியின் கழுத்து ஓரமாகக் காட்டப்பட்டுள்ளது. வீரனுக்குப் பக்கத்தில் ஒரு பெண் நின்றிருக்கிறாள். இவர்களுடன் பன்றியின் பின்னங்காலைக் கவ்வியபடி ஒரு நாயும் முதுகைக் கவ்வியவாறு ஒரு நாயின் உருவமும் காட்டப்பட்டுள்ளன. பன்றி வேட்டைக்கு வீரன் பழக்கிய நாய்கள் இவை எனக்கருத முடிகிறது.

இப்பன்றிக் குத்திக்கல்லில் உள்ள வீரனின் தலையில் பின்பக்கம் பெரிய கொண்டை, கழுத்தில் கழுத்தணி, கைகளில் காப்பு மணிக்கட்டில் கைவளை மற்றும் இடுப்பில் அரையாடை போன்றவை காட்டப்பட்டுள்ளன. இடுப்பில் கட்டப்பட்டுள்ள அரையாடையின் ஒரு பகுதி கீழ் நோக்கிச் சரிந்து இருகால்களுக்கு மத்தியில் விசிறி போன்று மிக அழகாகக் காணப்படுகிறது. கால்களில் பெரிய தண்டைகள் உள்ளன. பன்றியைக்குத்தும் நீண்ட ஈட்டியை இருகைகளிலும் ஏந்தியுள்ளான், முன்னங்காலை நன்றாகத் தரையில் ஊன்றிய படியும் பின்னங்கால் தரையை விட்டுச்சற்று உயர்த்தியவாறும் காணப்படுகிறது.வீரனின் அருகில் நிற்கும் பெண்ணின் தலையில் பின்புறமாகக் கொண்டை உள்ளது. கழுத்தில் கழுத்தணி மற்றும் மார்பில் கச்சை கட்டப்பட்டுள்ளது. கீழே முழுங்கால் வரை நீண்ட ஆடையுள்ளது. ஈட்டி பாய்ந்த நிலையில்

பன்றியின் வலியைக்காட்ட பன்றி தனது முன் இடது காலைத் தூக்கியபடி உள்ளது. பின்புறம் நின்று நாய் கவ்விய நிலையில் பன்றியின் வால்மேல் நோக்கியபடி மிக அழகாக ஒரு வேட்டையின் உணர்வினை இந்நடுகல் வெளிப்படுத்துகிறது.

வழிபாடும் தெய்வங்களும்

வேட்டுவர்கள் பெரும்பாலும் காடுகள் மற்றும் மலைகளை வழிபாடு செய்து வந்தனர். பிறகு உயிர்நீத்த முன்னோர்கள்மற்றும் வீரம் கொடை செல்வம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தலைவன் ஆகியோரை வழிபாடு செய்தனர். சங்க இலக்கியங்களில் பெரும்பாலும்தான் வேட்டையாடிய உணவை கொற்றவைத் தெய்வத்திற்குப் படையல் போடும் செய்திகள் காணப்படுகின்றன.

முடிவுரை

படைவீடு நடுகல்லின் வாயிலாக, வேட்டுவர்கள் தனித்தும் அல்லது ஒரு குழுவாகவும் வாழ்ந்துவந்தனர் என்று அறிய முடிகிறது.ஒரு குழுவின் தலைவன் உணவுக்காகக் கூட்டமாகவோ, தனித்தோ சென்று காட்டு விலங்குகளை வேட்டையாடுவதும், வேட்டையாடுதலின் போது ஏற்படும் இன்னல்கள் காரணமாக உயிரிழக்க நேரிடும். அவ்வாறு மக்களுக்காக உயிர் நீத்ததலைவனுக்கும் அல்லது மக்களுக்கும் நடுக்கல் நட்டு உடையின் தன்மை, ஆயுதம், வீரம் ஆகியவற்றையும், வேட்டையாடுதலுக்கு உதவிய விலங்குகளை நன்றி உணர்வுடன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் உயிர்நீத்த வீரன் மற்றும் பெண் மக்கள் தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். பல காலங்கள் சென்றாலும் நடுகற்கள் வாயிலாக வேட்டுவர்களின் வாழ்வியலைப் பற்றி இக்கட்டுரையின் மூலம் நமக்குத் தெரியவருகிறது.

துணை நூல்கள்:

1. செவ்விலக்கிய வழிபாட்டு மரபு : படைவீடு நடுகற்கள் முனைவர் அமுல்ராஜ், அருதிபதிப்பகம், பாரதி சாலை , சென்னை-600021
2. வென்று மண் கொண்டான், முனைவர் அமுல்ராஜ், திரௌபதி பதிப்பகம், பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600021
3. தமிழக வரலாறு மக்களும்பண்பாடும், டாக்டர் கே.கே.பிள்ளை.

நற்றிணையில் வேட்டுவர் வாழ்வியல்

ஆய்வாளர் : **வெ.விஷ்ணு**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை & தமிழாய்வுத் துறை,
முத்துரங்கம்அரசினர்கலைக் கல்லூரி (தன்னாட்சி), வேலூர்-2
அலைபேசி: 6383254221,
vishnuvenktesan9786@gmail.com.

நெறியாளர் : **முனைவர் இரா.சிவகுமார்,**
இணைப் பேராசிரியர் &நெறியாளர்,
முதுகலை &தமிழாய்வுத் துறை,
முத்துரங்கம்அரசினர்கலைக் கல்லூரி (தன்னாட்சி),வேலூர்-2
அலைபேசி: 9843677742.
drrajasivakumar@gmail.com

முன்னுரை

ஆதி மனித சமூகம் வேட்டை வாழ்வியலில் இருந்து உற்பத்தி வாழ்வியலுக்குநகர்ந்தது. மலை காடுகளில்வேட்டையாடிதிரிந்தவன் மரங்களை எரித்து, நிலங்களைச் சமன்செய்து உணவுப் பொருள்களை விளைவித்தான். நிலத்தில் விளைந்தபொருள்களைக் கொண்டுசென்று விற்று, அப்பொருளுக்குஊடாககிடைக்கின்ற நெல், உப்பு, பால், மோர் போன்றவற்றைக் கொண்டு வந்து சுற்றத்தாறுடன் பகிர்ந்து, தன் வாழ்வினை நடத்தி வந்தான்.வேட்டை வாழ்வியலும், உற்பத்தி வாழ்வியலும் கலந்த சமூகமாகச் சங்ககால வேட்டைச் சமூகம் இருந்துள்ளதைச் சங்க இலக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. அந்த வகையில் சங்க இலக்கியங்களில் ஒன்றான நற்றிணையில் வேட்டுவர்களின் வாழ்வியல் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

நற்றிணையில் வேட்டுவர்

காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் அச்சம் தரக்கூடிய விலங்கு களைக் கொன்று, அவற்றின் தசைகளை உணவாக உட்கொண்டு வாழ்ந்து வருபவர்கள் வேட்டுவ சமூகத்தினர்ஆவர். இவர்களை, சங்க இலக்கியங்கள் வேட்டுவர், கானவர் என்று குறிப்பிடுகின்றன.

வேட்டுவர்கள் விலங்குகளைக் கொல்லுகின்ற வலிமை உடையவர்கள் என்பதை “வன்கை கானவன்” (நற்.-285) என்று வெண்ணாகனார் பாடல் குறிப்பிடுகின்றது. மேலும், வேட்டுவனுடைய கையில் கொள்ளுகின்ற தொழிலை உடைய வில்லினைவைத் திருந்தமையை “கொடுவிற்கானவன்” (நற்.-75) என்று நற்றிணைப் பாடலடிகள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

வேட்டுவர்கள், வேட்டைத் தொழிலுக்குக் கருவிகளை மட்டுமல்லாது, பறவைகளையும் விலங்குகளையும் பயிற்சி கொடுத்துத் தம்முடன் வைத்திருந்ததை நற்றிணைப் பாடலடிகள் தெரிவிக்கின்றன. வேட்டைக்கு நாய்களையும் பழக்கிவைத்திருந்ததுஅம்மல்லனாரின் பாடல் வழி புலனாகிறது.

சிறு கட் பன்றிப் பெருஞ் சின ஒருத்தல்
சேறு ஆடு இரும் புறம் நீறொடு சிவண,
வெள் வசிப் படீஇயர், மொய்த்த வள்பு அழீஇ,
கோள் நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடியானே (நற்.-82)

இப்பாடலில் ஆண் பன்றியை வேட்டை நாய்கள் சூழ்ந்து வேட்டையாடியமை கூறப்பட்டுள்ளது. அந்த வகையில், வேட்டுவர்கள் விலங்குகளையும் பறவைகளையும் வேட்டைக்காகப் பயன்படுத்தி யுள்ளமை தெரியவருகிறது. வேட்டுவர்கள் வலிமை உடையவராகவும், கையில் வில்லினைக் கொண்டவர்களாகவும் தன்னுடன் நாய்களையும் பறவைகளையும் வைத்திருந்ததையும் நற்றிணைப் பாடல்களின் மூலம் நமக்குத்தெரிய வருகிறது.

வேட்டுவரின் தொழில்கள்

வேட்டுவர்கள் வேட்டை வாழ்விலும், உற்பத்தி வாழ்விலும் ஈடுபட்டுள்ளமையைச் சங்க இலக்கியங்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. வேட்டுவர்கள் மலை மற்றும் காடுகளில் திரியும் விலங்குகளைக் கொல்லுகின்ற வேட்டைத் தொழிலை மேற்கொண்டு வந்துள்ளனர். யானை, பன்றி, முயல், புறா போன்றவற்றை வேட்டையாடியமையை நற்றிணைப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

புலியோடு போர் செய்யும் வலிமையுடையயானையை அம்பு எய்தி வீழ்தி அதன் தந்தத்தைக் கானவன் கொண்டு வந்ததாகக் கபிலருடைய பாடல் கூறுகின்றது.

புலியொடு பொருத புண் கூர் யானை
நற் கோடு நயந்த அன்பு இல் கானவர்
விற் சுழிப்பட்ட நாமப் பூசல்
உருமிடைக் கடி இடி கரையும்
பெரு மலை நாடனை “வரூஉம்” என்றோளே (நற்.-65)

வேட்டுவர்கள் உடும்பு, ஈயல், முயல் போன்றவற்றையும் வேட்டையாடியுள்ள செய்திகளைகபிலருடைய பாடல் நமக்குத் தெரிவிக்கின்றது.

உடும்பு கொலீஇ, வரி நுணல்அகழ்ந்து,
நெடுங்கோட்டுப்புற்றத்துஈயல்கெண்டி,
எல்லுமுயல்எறிந்தவேட்டுவன்சுவல
பல் வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து,
இரு மடைக்கள்ளின் இன் களி செருக்கும்
வன்புலக் காட்டு நாட்டதுவே (நற்.-59)

வேட்டுவர்கள்விலங்குகளைமட்டுமல்லாதுபறவைகளையும்வேட்டையாடிய செய்திகளைநற்றிணைப்பாடலடிகள் தெரிவிக்கின்றன.

கொலை வல்வேட்டுவன் வலை பரிந்து போகிய
கானப்புறவின் சேவல் வாய் நூல்
சிலம்பிஅம் சினை வெரூஉம்,
அலங்கல் உலவை அம் காடு இறந்தோரே? (நற்.-189)

வேட்டுவர்கள், வேட்டைத் தொழிலை மட்டுமின்றி உழவுத் தொழிலையும் மேற்கொண்டு வந்ததை நற்றிணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அந்த வகையில்கானவர்கள் மிகுந்த வலிமை உடையவர்களாகவும், அறிய செயல்களைச் செய்தவர்களாகவும் விளங்கிய செய்திகளை நற்றிணைப் பாடல்களின் வழி நாம் அறியலாகிறது.

வேட்டை வாழ்வில் பெண்களின் பங்கு

சங்ககால வாழ்வியலில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களை வைத்திருந்தமை அனைவரும் அறிந்த ஒன்றாகும் அதுபோல வலிமையுடைய வேட்டுவரின் வாழ்விலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் இருந்துள்ளமையை நற்றிணைப் பாடல்களின் வழி பின்வருமாறு காண்போம்:

வேட்டுவன்வேட்டையாடிக் கொண்டுவந்த கறியை, அவனுடைய மனைவியாகியகொடிச்சி, தன் சுற்றத்தாருக்குப் பகிர்ந்து கொடுப்பதாக நற்றிணைப்பாடல்கள்தெரிவிக்கின்றன:

கானவன்எய்தமுளவு மான் கொழுங் குறை,
தேம் கமழ் கதுப்பின்கொடிச்சி, கிழங்கொடு
காந்தள்அம்சிறுகுடிப்பகுக்கும்
ஓங்கு மலை நாடன், நின் நசையினானே (நற்.-85)

..................................கானவன்,
வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை,
புனை இருங்கதுப்பின்மனையோள்கெண்டி,
குடி முறை பகுக்கும்நெடு மலை நாட! (நற்.-336)

மேற்கண்ட பாடல்களின் மூலம் வேட்டை வாழ்வியலில் ஆண், பெண் இருவருடையபங்கும்இருந்ததை நம்மால் அறிய முடிகிறது. வேட்டை வாழ்வியல் மட்டுமின்றி உற்பத்தி வாழ்வியலிலும் பெண்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

தந்தை வித்தியமென் தினை பைபயச்
சிறு கிளி கடிதல் பிறக்குயாவணதோ-
''குளிர் படு கையள்கொடிச்சிசெல்க'' என,
நல்ல இனிய கூறி, மெல்லக்
கொயல்தொடங்கினரேகானவர்; (நற்.-306)

இப்பாடலில் தினைப்புனம் காக்கும் பொருட்டு கிளிகளை ஓட்டுவதற்காக கொடிச்சி கையில் தட்டை என்னும் கருவியை வைத்திருந்தாள் என்று கூறப்பட்டுள்ளது. இச்செய்தியின் மூலம் உற்பத்தி வாழ்வியலிலும்பெண்களின் பங்குஇருப்பதனை நம்மால் அறிய முடிகிறது. அந்த வகையில்வேட்டைச்சமூகத்தில் பெண்களின் பங்கு முக்கியமானதாகஇருந்ததனைநற்றிணைப்பாடல்களின் வழி நம்மால் அறியமுடிகிறது.

சடங்குகளும் நம்பிக்கைகளும்

வேட்டைச் சமுதாய மக்கள் தெய்வம் சார்ந்த சடங்குகளில் நம்பிக்கை கொண்டவர்களாகஇருந்துள்ளதைச்சங்கப்பாடலடிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. அந்தவகையில் நற்றிணையில் இடம் பெற்றுள்ள பாடல்களில் வேட்டுவருடைய தெய்வம் சார்ந்த நம்பிக்கைகள், சடங்குகள் குறித்துப் பின்வருமாறு காண்போம்.

கானவருடைய இல்லற வாழ்வினை முருகனுடன் கூடிய வள்ளியோடு ஒப்பிடுவதாக அம்மல்லனாரின் பாடல் அமைகின்றது.

நோயும் நெகிழ்ச்சியும் வீடச்சிறந்த
வேய்வனப்புற்ற தோளை நீயே,
என் உயவு அறிதியோ, நல் நடைக்கொடிச்சி!
முருகுபுணர்ந்து இயன்ற வள்ளி போல, நின்
உருவு கண் எறிப்ப நோக்கல் ஆற்றலெனே-
போகியநாகப் போக்கு அருங் கவலை,
சிறு கட்பன்றிப்பெருஞ் சின ஒருத்தல்
சேறு ஆடு இரும் புறம் நீறொடுசிவண,
வெள் வசிப்படீஇயர், மொய்த்தவள்புஅழீஇ,
கோள் நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடியானே.(நற்.-82)

இதன் மூலம், கானவர்களுடைய தெய்வம் முருகன் என்பது நமக்குப் புலனாகிறது. மலையில் வாழும் வேட்டை சமூகத்தின்பண்பாட்டு வாழ்வில் ஒரு பகுதியே வெறியாட்டு ஆகும். வேட்டுவனான தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்பட்ட நோயைத் தீர்ப்பதற்காக நற்றாய் வேலனை அழைத்து வெறியாட்டு நிகழ்த்துவதாக நல்லூர்ச்சிறு மேதாவியார் பாடல் கூறுகின்றது.

தோடு அமை செறிப்பின் இலங்கு வளை ஞெகிழ,
கோடு ஏந்து அல்குல் அவ் வரி வாட,
நல் நுதல் சாய, படர் மலிஅரு நோய்
காதலன் தந்தமை அறியாது, உணர்த்த,
அணங்குறுகழங்கின் முது வாய் வேலன்
கிளவியின்தணியின், நன்றுமன்-சாரல்
அகில் சுடு கானவன்உவல் சுடு கமழ் புகை,
ஆடு மழை மங்குலின், மறைக்கும்
நாடு கெழுவெற்பனொடு அமைந்த, நம் தொடர்பே? (நற்.-282)

வேட்டையின்போது குறி தப்பினால், அதனைத் தெய்வ குற்றம் என்று வேட்டுவர்கள் நம்பினர். அதன் பொருட்டு தெய்வத்திற்குப் பூசையிட்டுப் பலி கொடுத்ததாகநற்றிணைப் பாடல் குறிப்பிடுகின்றது.

அமர்க் கண் ஆமான்அரு நிறம் முள்காது
பணைத்தபகழிப் போக்கு நினைந்து, கானவன்,
''அணங்கொடு நின்றது மலை, வான் கொள்க''எனக்
கடவுள் ஓங்கு வரை பேண்மார், வேட்டு எழுந்து,
கிளையொடுமகிழும்குன்றநாடன்
அடைதரும்தோறும், அருமை தனக்கு உரைப்ப,
''நப்புணர்வு இல்லா நயன்இலோர் நட்பு
அன்னஆகுக''என்னான்;
ஒல்காது ஒழி; மிகப் பல்கினதூதே.(நற்.-165)

வேட்டுவர்கள்காட்டுப்பசுவின் மீது எய்திய அம்பு குறி தவறியதால் மலையில் உறையும் தெய்வத்திற்குப் பலி கொடுத்து, வழிபாடு செய்ததாகஇப்பாடல் தெரிவிக்கின்றது.

இதன் மூலம் வேட்டுவர்கள்தங்களுக்குத் தீங்கு ஏதாவது நேர்ந்தால் அது தெய்வத்தினால் வந்தது என்ற நம்பிக்கையை கொண்டிருந்தனர் என்பதையும், அதன் பொருட்டு, அவர்கள் தெய்வதிற்குப் பலி கொடுத்துப் பூசைகள் நிகழ்த்திய செய்திகளையும் நம்மால் அறிய முடிகிறது.

முடிவுரை

சங்ககாலத்தில் இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்வியலை வேட்டுவர் மேற்கொண்டுள்ளனர் என்பதை நற்றிணைப் பாடல்களின் வழியே நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. வேட்டுவர்கள் வலிமையுடையவர்கள் என்றும், அவர்கள் காட்டில் திரியும் கொடிய விலங்குகளைக் கொன்று, அதன் தசைகளைஉண்டு வாழ்ந்து வந்தனர் என்றும் இக்கட்டுரையின் மூலம் நமக்குப் புலனாகிறது. மேலும், அவர்கள் வேட்டைத் தொழிலை மட்டுமல்லாது உழவுத் தொழிலையும் மேற்கொண்டது நமக்குத் தெரியவருகிறது. வேட்டுவ வாழ்வியலில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது என்ற செய்தியையும் நம்மால் அறிய முடிகிறது. மலையில் வாழும் வேட்டைச்சமுதாய மக்கள், தெய்வம் சார்ந்த சடங்குகளில் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்ததும், வேட்டுவச் சமூகத்தின் பண்பாட்டு வாழ்வில் ஒரு பகுதியாக வெறியாட்டு இருந்துள்ளதையும் நற்றிணைப் பாடல்களின் வழியே நமக்குத் தெரியவருகிறது.

தொல்குடி வேட்டுவர்களின் வரலாறும் வாழ்வியலும்

முனைவர் சொ. அருணன்,
உதவிப் பயிற்றுநர், தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 3.

முன்னுரை

தமிழ் மரபு தொன்மைச் சிறப்புடையது; பல பரிமாணங்களையும் கொண்டது. அவற்றுள் ஒன்று திணைவழிக் கோட்பாடாகும். ஐந்திணைகளாக நிலங்களைப் பகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய மக்களையும் உடன் வாழும் உயிரினங்களையும் வாழ்வியலாகப் பகுத்தது தமிழ் இலக்கண இலக்கியங்கள். இத்திணைகளுக்குள் மயக்கங்களும் உண்டு. தொழில்முறை வாழ்வியலில் ஒரு திணையுள்ளோர் மறுதிணைகளிலும் விரவினர். அவ்வாறு குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய முத்திணைகளிலும் பரவியவர்கள் வேட்டுவர்கள் எனப்படும் தொல்குடி மரபினர் ஆவர். இவர்களின் வரலாற்றினையும் வாழ்வியலையும் இக்கட்டுரை சுருக்கமாக எடுத்தியம்புகிறது.

வேட்டுவ குலத்தின் தொன்மை

சங்க காலத்தில் எழுந்த தொல்காப்பிய இலக்கண நூலில் தமிழ்ச் சமுதாயத்தை விளக்கும் வண்ணம் எண்ணற்ற கருத்துகள் காணப்படுகின்றன.

ஆயர், வேட்டுவர், ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல்.-பொருள்-அக.-23)

(ஆயர்-முல்லை நில மக்கள் பெயர்; வேட்டுவர்-குறிஞ்சி நில மக்கள் பெயர்; ஆடுஉ-ஆண்; கிழவர்-தலைவர்.)

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் ஆயர், வேட்டுவர் போன்ற பிரிவினர் வாழ்ந்து வந்தனர் என்பது இதன் வழியாக நமக்குக் கிடைக்கின்றது. ஆதலால் வேட்டுவர் என்னும் சொல் தொல்குடி மரபினர் என்பதை மெய்ப்பிப்பதாக அமைகிறது. ஆயினும் வேட்டைத் தொழில் குறிஞ்சியில் மட்டும் நிகழாமல் முல்லையிலும் நிகழ்ந்திருக்கிறது என்பதனையும் காணலாம். ஆதலால் வேட்டுவ மக்களைக் குறிஞ்சி மக்கள் என்றும் முல்லை மக்கள் என்றும் இருநிலத்திற்கும் உரியதாக்கினர்.

“ஆயர்” என்பது முல்லை நில மக்களுக்குத் திணைப் பெயராகும். அதுபோல், வேட்டுவர் என்பதும் முல்லைநில மக்கட் பெயரென்று இளம்பூரணரும், குறிஞ்சிநில மக்கட் பெயரென்று நச்சினார்க்கினியரும் கூறுவர். இவருள் இளம்பூரணர் கூற்றுப் பொருட் சிறப்புடையது "மாயோன் மேய" என்னும் முன் 5 - ஆவது சூத்திரத்தில் திணை நிலங்களில் முதலில் வைத்தெண்ணிய முல்லை நில மக்களுக்குரிய பெயர்களுள் ஆயரென்னும் நிலப் பெயரும் வேட்டுவரென்னும் வினைப் பெயரும் அந்நிலத்தான் மக்களின் திணைப் பெயர்களாக இச்சூத்திரத்தில் தொல்காப்பியர் எடுத்துக் காட்டினாரெனக் கொள்வதே - 'பெயரும் வினையு' மென்னும் மேற்சூத்திரக் கருத்தை விளக்குதற்கு அடைவுபட அமைவதாகும். வேட்டுவரென்பது முல்லைத் திணை மக்களின் 'வேட்டு' வினை சுட்டுந் திணைப் பெயராகும். அதனால், இந்நூலார் மேலே "திணை நிலைப் பெயர் பெயரும் வினையுமென்றா யிருவகைய" எனத் தொகுத்துக் கூறியதை இச்சூத்திரத்தில் வகுத்து மெய்ந்நிறுத்து விளக்கினார்” (ஆ.சிவலிங்கனார், தொல்காப்பிய உரைவளம்) என்பதன் மூலம் அறியலாம்.

வேள் வேளிர் வேடர் வேட்டுவர்

வேட்டுவர் என்பது பெயர்ச்சொல்லா அல்லது வினையாலணையும் பெயரா என்பதைக் குறித்தும் ஆய்வுகள் உண்டு. வேட்டு என்னும் சொல் வேள் என்பதிலிருந்து தோன்றியிருத்தல் வேண்டும் என்று அறிஞர்கள் சுட்டுவர்.

லகர, ளகர மெய்களை ஈற்றிலே கொண்ட சொற்கள், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவின மெய்களை முதலாகக் கொண்ட வருமொழிகளோடு புணரும் முறையைப் பொதுவிதி கொண்டும், சிறப்புவிதி கொண்டும் நன்னூலார் விளக்குகிறார்.

நிலைமொழி இறுதியில் உள்ள லகர, ளகர மெய்கள், வேற்றுமைப் புணர்ச்சியில், வருமொழி முதலில் வல்லினம் (க, ச, த, ப) வந்தால் முறையே றகர மெய்யாகவும், டகர மெய்யாகவும் திரியும். அதாவது லகர மெய் றகர மெய்யாகவும், ளகரமெய் டகர மெய்யாகவும் திரியும். அவ்வாறு காணின் வேள் என்பது வேட் என்று ஆகும். ஆதலால் வேள் வேளிர் வேடர் வேட்டுவர் என்று ஆகியிருத்தல் வேண்டும். இந்த வேள் வெள் என்றும் குறிலிலிருந்தும் தோற்றம் பெற்றிருக்கலாம். இதனையும் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

வேளிர் வேட்டுவரின் சிறப்பு

பண்டைத் தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களின் சிறப்புகளோடு ஒத்தவர்களாக வேளிர் எனப்படும் வேட்டுவத் தொல்குடி மரபினர் திகழ்ந்துள்ளனர். இதனை,

‘‘செந்தமிழ் வளர்த்த பெருமையிற் சோ சோழ பாண்டியர்க்கு எவ்வளவு பாகமுண்டோ, அதற்கு அதிகமில்லாமற் போயினும், அவ்வளவு சமபாகம் பெற்றுத் திகழ்கின்ற ஒரு பெருங்கூட்டத்தார் முற்காலத்தே தமிழ்நாட்டில் விளங்கியிருந்தனர். பண்டையிலக்கியங் களை ஆராயுமிடத்து, மூவேந்தர் படைத்த தமிழ்ப் பெருமையளவு தாமும் படைக்கின்ற ஒரு கூட்டத்தார் தமிழகத்தே விளக்கமுற்றிருந்த செய்தி வெளியாகும். இன்னோர் தாம் வேளிர் (வேளிர், வேள் என்பதன் பன்மைச்சொல்: கேள் கேளிர் என்றாற்போல.) என்றழைக்கப்படுவார்கள். இரவாமலிந்த கடையேழுவள்ளல்களிற் பலர் இவர்களே. (பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்ற எழுவர்.) (இராகவையங்கார். மு.வேளிர் வரலாறு,ப.1) என்று மு. இராகவையங்கார் குறிப்பிடுவதை ஒத்துக் காணலாம்.

பழைய சங்கநூல்களிலே, வேளிர் என்ற ஒரு கூட்டத்தார், தமிழ்ப் பேரரசர்களாகிய சேர சோழ பாண்டியரை அடுத்துப் பல விடங்களிலுங் கூறப்படுகின்றனர்; இதனை,"பண்கெழு வேந்தரும் வேளிரும்" எனப் புறநானூற்றினும், "இருபெரு வேந்தரொடு வேளிர்" என மதுரைக் காஞ்சியினும், "வேந்தரும் வேளிரும்" எனப் பதிற்றுப்பத்திற் பலயிடங்களிலும் வருதலால் அறியலாம். இதனால், மூவேந்தரை யுமடுத்து முற்காலத்தே தமிழ்நாட்டில் மதிக்கப்பட்ட சிற்றரசருள், இவ்வேளிரே முற்பட்டவர் என்பது விளங்கும். அன்றியும் "தொன்முதிர் வேளிர்" (அகம் 218; புறம் 24) "தாற்பத்தொன்பது வழிமுறைவந்த

வேளிர்'' (புறம்-201) ''இருங்கோவேள் மருங்கு'' (பட்டினப்பாலை) "எவ்விதொல்குடி" (புறம்- 22) என நூல்களிற் காணப்படுதலின், இன்னோர் பண்டைக்கால முதலே தமிழ்நாட்டில் விளங்கியிருந்தவர் என்பதும் தெளியப்படுகின்றது என்றும் அவர் உறுதி கூறுகின்றார்.

வேட்டுவர்களின் நாடுகாக்கும் நற்றொழில்

வேட்டை என்பது பன்முனைத் தொழிலாகத் திகழ்ந்த ஒன்று. பயிர்த்தொழிலைக் காத்தல் பொருட்டு மிகுந்து விளங்கும் விலங்கு களையும் பறவைகளையும் அவற்றின் தொல்லைகளிலிருந்து காக்கத் துரத்துவதற்கும் கொல்லுவதற்கும் வேட்டை அவசியமானது.

பெரும்பாலும் அவற்றை அச்சுறுத்தி கட்டுக்குள் வைப்பதே வேட்டையின் நோக்கமாக இருந்தது. ஆதலால் வேளாண் தொழிலோடு இணைந்து வேட்டுவத் தொழிலும் திகழ்ந்தது. இந்த வேட்டைத் தொழில் காடு, கழனிகளைக் காப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. நாட்டைக் காக்கும் நற்றொழிலிலும் வேட்டுவர் தலைநின்றனர்.

''வீரத்திலும் வேட்டுவர் சிறந்திருந்தனர் என்பதனை மன்னர் களுக்குப் படையுதவி அளித்தல் ஆநிரை மீட்டல் கள்ளர்களை அடக்குதல் நாட்டிற்காக வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடுதல், போன்ற பலவகை வீரதீரச் செயல்களில் ஈடுபட்டிருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. (இராசு. செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், ப.7)

இவற்றோடு, கொங்கு வரலாற்று ஆவணங்களிலும், வேட்டுவர், சமூகம் பற்றிய செப்பேட்டுச் செய்திகள் குறிக்கப்பட்டுள்ளன. ''தீர்த்தகிரிச் சர்க்கரைப் பட்டயத்தில்'', தீரன் சின்னமலையின் தந்தை இரத்தினச் சர்க்கரைக்கு நிலம் அளித்தவர், குமாரவலசு வேட்டுவர் குமார சின்னய கவுண்டர்'', எனும் செய்தி இடம்பெற்றுள்ளது.

காலந்தோறும் இலக்கியப் பதிவுகள்

தொல்காப்பியம் தொடங்கிக் காலந்தோறும் இத்தொல்குடி மக்களைக் குறித்த பதிவுகள் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன. வேள், வேளிர், வேளாளர், வேடர், வேட்டுவர், கொங்கர் என்ற சொற்களின் மூலம் இவர்கள் அவ்வக் காலங்களில் சுட்டப்பட்டு வந்துள்ளனர்.

சைவ சமய நூல்களில் தொன்மையான திருமூலரின் திருமந்திரத்தில் ''தமிழ் மண்டலம் ஐந்து'' என்று கூறுகின்றது. எனவே

இந்த மண்டலங்களில் கொங்கு மண்டலம் தனிப்பகுதியாகவே இருந்துள்ளது. இந்தக் கொங்கு மக்கள் "கொங்கர்" என்று சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். "வராகமித்தரர்" தன் நு?லில் கொங்குநாடு தனிநாடு என்று குறிக்கின்றார். அசோகன் கல்வெட்டில் தனி அரசனாகக் குறிக்கப்பெறும் சத்தியபுத்திரன் கொங்கு நாட்டு மன்னன் "அதியமான்" என்பதை ஜம்பைக் கல்வெட்டு ூலம் உணர முடிகிறது. தொன்று தொட்டு, கொங்கு நாட்டை "வேளிர்" என்ற சிற்றரசர்கள் தமக்குள் பகையின்றி ஆண்டு வந்தனர். கொங்கு நாட்டை நிர்வாகம் செய்து 24 உள்நாடுகளாகப் பிரித்து ஆட்சி செலுத்தியுள்ளனர். உதாரணமாக கொங்கு மண்டலம் 20 கோட்டங்கள், 24 தீர்த்தங்கரர் போன்ற கொங்கு நாட்டையும் 24 உட்பிரிவுகளாகப் பிரிக்கின்றனர் என்கிறார் தொல்லியல் ஆய்வாளர் ஸ்ரீதர். (ஸ்ரீதர்,தி, முனைவர் இ.ஆ.ப. (ப.ஆ) ஈரோடுூமாவட்டத்ூதொல்லியல் ூகையேடு ப.2)

சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரியும், திருத்தொண்டர் புராணம் எனப் போற்றப்படும் சேக்கிழார் பெருமான் அருளிய பெரிய புராணத்தில் கண்ணப்ப நாயனார் புராணமும் வேட்டுவரின் தொன்மைச் சிறப்புக்குப் பெருஞ்சான்றாக அமைவது யாவரும் அறிந்ததேயாகும்.

சிற்றிலக்கியங்களும், வேட்டுவர் பற்றிய செய்திகளை விளக்கியுள்ளன. 'திங்களூர் அருள்மலை முருகன் மீது அவிநாசிப் புலவர், திங்களூர் நொண்டிச் சிந்து எனும் நூலைப் பாடியுள்ளார். இந்நூலைப் பாடியமைக்காக 'வேட்டுவர் சமூகத் தலைவர் ஆண்டமுத்துக் கவுண்டர் அப்புலவருக்குப் பொன்பரிசு' கொடுத்துப் பாராட்டிய செய்தி அந்நூலிலேயே குறிக்கப்பட்டுள்ளது.

அப்பச்சிமாரயன் குறவஞ்சியில் திங்களூர் பற்றி எழுதப்பட்ட முதல்பாட்டு மட்டுமே கிடைத்துள்ளது. வேட்டுவர் கலிவெண்பாவில் வேட்டுவர் குலங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை நீங்கலாக அப்பச்சிமார் காவியம், கபிலமலைக் கோவை, கோப் பண்ணன் கோவை, காணிப்பாடல்கள் ஆகிய இலக்கியங்களிலும் வேட்டுவர் பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. வேட்டுவ மகளிர் கல்வியறிவு உடையவர்களாகவும்?, பொருளாதார சுதந்திரம்?பெற்றவராகவும்?, கோயில் கட்டித்தருமளவிற்குப் பக்தியும் செல்வமும் உடையவர்களாகத் திகழ்ந்தனர் (இராசு. செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், பக்.7-8) என்பதை இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

வேட்டுவர் குறித்த செப்பேட்டுச் சான்றுகள்

மதுரைத் திருமலை நாயக்கர்?காலத்தில்?வடகரை ஆற்றூரில் அல்லாளன் இளையா நாயக்கர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் வேட்டுவர் சமுதாயத்தில் பரமத்திச் சீமை முளை கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்று செப்பேடு கூறுகிறது. நாயக்கர் என்பது மதுரை நாயக்கர் வேட்டுவர்களுக்கு அளித்த பட்டப்பெயர்.

காவிரியாறு கொங்கு நாட்டின் வழியாகச் சென்றாலும் அந்த ஆற்றால் கொங்கு நாட்டுக்கு ஒரு பயனும் இல்லை. கொங்கு நாட்டில் காவிரி பள்ளத்தில் ஓடுகிறது. நிலம் மேடாக உள்ளது. யார் முயன்றும் காவிரி நீரைக் கொங்கு நாட்டில் பாசனத்திற்குப் பயன்படுத்த முடியவில்லை.

ஆனால் அல்லாளன் இளையா நாயக்கர் காவிரியின் கிழக்குக் கரையில் சேடர்பாளையம் என்னும் இடத்தில் காவிரி நீரைப் பாய்ச்சும் வகையில் அணை கட்டி வாய்க்கால் வெட்டி ஏற்பாடு செய்தார். அந்த வாய்க்கால் ராசவாய்க்கால் என்னும் பெயரில் இன்றும் நல்ல பயன்பாட்டில் உள்ளது. ராசாவாக ஆட்சியுரிமை பெற்று ஆட்சி செய்த அல்லாளன் இளையா நாயக்கர் பணி காரணமாக இன்றும் அவ்வாய்க்கால் ராசவாய்க்கால் என்ற பெயரோடு விளங்குகிறது (இராசு. செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள், ப.8) என்பதைச் செப்”படு உறுதிப்படுத்துகிறது.

முடிவுரை

ஆதித்தொல்குடி மக்களாகக் குறிஞ்சியிலும் முல்லையிலும் மருதத்திலும் நிரவி வாழ்ந்த வேட்டுவர் குலமக்கள் கால, சூழல் மாற்றங்களுக்கேற்பத் தங்கள் வாழ்வியலை மேம்படுத்திக் கொண்டனர். மூன்று நிலங்களையும் வளம்பெறச் செய்யும் பெரும் பொறுப்பு அவர்களுடையதாக இருந்தது. அதுமட்டுமின்றி, நாடுகாக்கும் வேந்தர்களுக்கு உற்றுழி உதவியும் உறுபடை வழங்கியும் தம் வீரத்தினை வெளிப்படுத்தியிருக்கின்றனர். தமிழ்மரபின் மேன்மைக்குக் காலந்தோறும் தங்களின் பங்களிப்பினை அளித்துவரும் வேட்டுவகுல மக்களின் வாழ்வினை ஆழ்ந்து ஆராய்வது மேலாய்வுகளுக்கு வழிவகுக்கும்.

துணைநூற் பட்டியல்:

1. இராகவையங்கார்., மு., வேளிர் வரலாறு, செந்தமிழ்ப் பிரசுரம், தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரைத் தமிழ்ச் சங்கம், 1913
2. இராசு. செ., வேட்டுவர் சமூக ஆவணங்கள் , ஸ்ரீ கண்ணப்பர் கல்வி அறக்கட்டளை. 34, மின்ன வேட்டுவபாளையம் ரோடு சலங்கபாளையம் (அ.நி), கவுந்தப்பாடி - 638 455 பவானி வட்டம், ஈரோடு மாவட்டம். 2008
3. இராமாநுசக் கவிராயர், நன்னூல் மூலம், சுயவெளியீடு, மு.ப.1847
4. சிவலிங்கனார், ஆ., (தொ.ப.) தொல்காப்பியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப.1994.
5. புலியூர்க் கேசிகன், புறநானூறு: மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, மு.ப.2010
6. ஸ்ரீதர்,தி, முனைவர் இ.ஆ.ப. (ப.ஆ) ஈரோடு -மாவட்டத் தொல்லியல் கையேடு, தமிழ்நாடு அரசுத் தொல்லியல்துறை, சென்னை 600 008. 2011.

திருமுருகாற்றுப்படையில் வேட்டுவர் வழிபாடு

செல்வி ம.கங்கா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த),
அலைபேசி: 8754632623
gangaannalakshmi1511@gmail.com

முன்னுரை

தமிழ்க்கடவுள் என்று அழைக்கப்படும் முருகப்பெருமானைப் பற்றி எடுத்துரைக்கும் சங்க இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்டது திருமுருகாற்றுப்படை ஆகும். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை முருகனின் அறுபடை வீடுகள் மற்றும் முருகன் எழுந்தருளியிருக்கும் முறைமை குறித்து விளக்குவதாக அமைந்த நூலாகும். இக்கட்டுரை திருமுருகாற்றுப்படையில் இடம்பெறும் வேடர்களின் வழிபாட்டு முறைமைகளை ஆராய்வதாக அமைகிறது.

வேட்டுவர்

வேட்டைத் தொழிலை முதன்மைத் தொழிலாகக் கொண்டவர்களை வேட்டுவர் என்ற பெயரால் அழைக்கிறோம். மழை வளம் நிறைந்த மருத நிலங்களில் வாழும் உழவர்கள் கலப்பை கொண்டு ஏர் ஓட்டி, பயிரை விளைவித்து வாழ்வர். மழைவளம் இல்லாத பாலை நிலத்தில் வாழுகின்ற வேடுவர்கள், வில்லைப்பயன்படுத்தி உணவை ஈட்டுவர். கானவரின் தொழிலுக்கு வில் முதன்மையான கருவி. விற்றொழில் வேடர் என்றெல்லாம் அழைக்கப்பெற்றமை வில்லேந்தி விலங்கை வேட்டையாடியும், தேனெடுத்தும், வழிப்பறியிலும் ஈடுபட்டு உணவைத் தயாரித்துக் கொண்டார்கள் எனலாம்.(சிலப்பதிகாரத்தில் வேடர்கள், ப.5) இதனை, ‘‘மறங்கொல் வயப்புலி வாய்பிளந்து’’, ‘‘ஆறெறி பறை’’, ‘‘இட்டுத்தலை எண்ணும்’’(சிலம்பு. வே.வ. கொற்றவை கோலம். 7,20,1) என்ற சிலப்பதிகாரத் தொடர்கள்

மறவர்களின் வேட்டையும் வீரமும் பதிவு செய்யப்பெற்றுள்ளது. வேட்டைப் பொருளைப் பெண்கள் பகுத்துச் சிறுகுடியினருக்கு அளித்தல் (நற்:85) என்பது பாதிட்டு மரபைக் காட்டுகின்றது. (சித்ரா.சி. சங்க இலக்கிய ஆய்வு நெறிகள் ப.13)

வேட்டுவர் வழிபாட்டில் வெறியாடலும் பலியிடுதலும்

குறிஞ்சி நிலம் என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாகும். அந்நிலத்தில் வாழும் மக்கள் வேடுவர்கள் எனப்படுவர். மலைவாழ் மக்களிடையே "வெறியாடல்"என்ற சடங்குமுறை இருந்து வந்துள்ளது. வெறியாடல் என்பது சங்க இலக்கியங்களில் காமத்தால் பீடிக்கப்பெற்ற பெண் மீது முருகன் இறங்கியுள்ளதாகக் கூறி, அம்முருகனை வெளியேற்றும் பொருட்டு நிகழ்த்தப்படுவதாகும். முருகன் வந்திறங்கிய வேலன்(பூசாரி) என்பான் நடத்தும் ஒரு விதச் சடங்கு என்று பொருள் கொள்ளப்படுகிறது. இதனை,"வேலன் ஏத்தும் வெறியும் உளவே" (பரி:16) என்ற பரிபாடல்த் தொடர் விளக்குகிறது. அங்ஙனம் வெறியாடல் நிகழ்த்தப்பெறும் போது, குறிஞ்சி நிலத்திலே விளையக்கூடிய தினையரிசியைப் பூக்களுடன் கலந்து பிறப்பரிசியாகப் படைத்து, ஆட்டுக்குட்டியையும் வழிபாட்டின் போது பலியிடுவர் என்பதை, "சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து"(திருமுருகு:218)என்ற தொடர் குறிக்கிறது.

மேலும், மிகவும் வலிமையான நிலை பெற்றிருக்கிற பருத்த கால்களையுடைய ஆட்டுக் கிடாயினை அறுத்து அதன் இரத்தத்துடன் வெள்ளரிசியைக் கலந்து படையலிட்டு வழிபட்டனர் என்பதை, "மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி" (திருமுருகு: 232,232) என்ற திருமுருகாற்றுப்படைத் தொடர்கள் பதிவு செய்கிறது. இதனையே, "உருவச் செந்தினை குருதியொடு தூஉய்" (அகம்: 22-10) என்ற அகநானூற்றுத் தொடரும் புலப்படுத்துகிறது. இதன் வழி, வேடுவர்கள் முருகப் பெருமானுக்குப் பலியிடும் வழக்கம் இருந்ததென்பதையும், பழந்தமிழர்களிடம் பலியிட்டு வணங்குவதன் மீதிருந்த நம்பிக்கையும் எண்ணத்தக்கதாகும்.

பழந்தமிழர் ஒன்றுகூடிக் குறிப்பிட்ட தெய்வத்தைக் கொண்டாடினர். (சாமி. சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும் ப.33) கொண்டாடக் கூடிய அத்தெய்வத்தையும் முறையாக வழிபட்டனர் எனலாம். சிறிய பசுமஞ்சளொடு சந்தனமும் மற்றும் பிற மணக்

கலவைகளையும் சேர்த்து, வழிபடக்கூடிய இடமெங்கும் தெளிப்பர் என்பதை, ‘‘சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்’’(திருமுருகு: 235) என்ற தொடர் விளக்குகிறது.

இதன் மூலம் கொடுந்தொழில் புரிந்த வேடர்களாயினும் வெறியாடலின் வழிபாட்டின்போது முறைப்படி, அதாவது படையலிட்டு மலர்கள் தூவி, இசை எழுப்பி வழிபட்டனர் என்பது அறியப்படுகிறது.

வேடர்களின் வழிபாட்டில் கூத்தும் இசையும்

பண்டைத் தமிழ் மக்கள் தனித்தனியே அவரவர்கள் விரும்பிய தெய்வங்களை வணங்கி வந்தனர். (சாமி. சிதம்பரனார் மேலது ப.33) அதுபோல் போரில் தோற்ற அசுரனின் தலையைக் கிள்ளி எடுத்து, அதன் கண்ணைத் தோண்டித் தின்று, அத்தலையைக் கையில் ஏந்தி முருகனின் வெற்றியைப் பாடி பேய் மகளிரோடு சேர்ந்து துணங்கைக் கூத்து ஆடுகின்றனர் என்பதை, ‘‘வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா; நிணந்தின் வாயள் துணங்கை தூங்க’’ (திருமுருகு: 55-56) என்ற தொடர்கள் விளக்குகிறது. இதன்வழி துணங்கைக் கூத்தாடி முருகனை வழிபட்டனர் என்பதை அறியலாம். இதனையே, ‘‘நின்வாய்ப் பெய்த பேய்மகளிர் இணையொலியிமிழ் துணங்கைச்சீர்’’(மது.காஞ்சி. 15-6) என்ற மதுரைக்காஞ்சித் தொடரும் சான்றாக விளக்குகிறது.

குன்றத்தில் வாழ்ந்த குறமகளிர் முருகனை வாழ்த்திக் குரவைக் கூத்தாடினர்(சாமி. சிதம்பரனார் மேலது ப.41) ‘‘குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து; தொண்டகச் சிறுபறைக் குரவை அயர’’(திருமுருகு 190-197) என்ற திருமுருகாற்றுப்படைத் தொடர்கள் வழி, குன்றுகளிலே வாழும் வேடர்கள் மார்பிலே சந்தனம் பூசிக்கொண்டு தலை மாலையை அணிந்து நீண்ட மூங்கில் குழாய்களில் தேனாலாகிய மதுவைத் தம் சுற்றத்தாருடன் அருந்தி, தொண்டகம் என்ற சிறுபறையை முழக்கி, குரவைக் கூத்து ஆடி மகிழ்ந்தனர் என்ற செய்தி பெறப்படுகிறது. முருகனுக்கு வேடர்கள் விழாவெடுக்கும்போது தம் சுற்றத்தாராகிய அயலூரில் வாழ்வோரயும் அழைத்து அவரோடு கள்ளுண்டு மகிழ்ந்து குரவை ஆடுதல் வழக்கமாகும் என உரையாசிரியர் உரைப்பர்.

மனிதன் தன்னுடைய பக்தி உணர்வை, நன்றியை அவனவனுக்குத் தெரிந்த வகையிலே புலப்படுத்தல் என்பது இயற்கை. (சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்., திருமுருகாற்றுப்படை சுட்டும் வழிபாட்டு

மரபு ப.3). சூரர மகளிர் என்று சொல்லப்பட்ட அழகான அசுர மகளிர் முருகனின் கோழிக்கொடியைப் புகழ்ந்துப் பாடி மகிழ்ச்சியாக ஆடுகின்றனர் என்பதை, ‘‘சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி; சூரர மகளிர் ஆடும் சோலை (திருமுருகு: 38-41) என்ற தொடரின் வழி அறியலாம்.

சூரர மகளிர் கூத்தும் இசையும் போன்றதொரு கலையின் மூலம் முருகனை வாழ்த்தி வழிபடுகின்றனர் என்ற கருத்து புலப்படுகின்றது.

வேட்டுவ மகளிர் வழிபாடு

வேட்டுவ வழிபாடு மரபு சார்ந்தாக இருந்துள்ளது. சேவல் கொடியை ஏற்றி, அலங்காரம் செய்து கோயில் வாசலில் நெய்யையும் வெண்சிறுகடுகையும் சேர்த்து அப்புகிறாள். இரண்டு நிறங்களை உடைய உடைகளை உடுத்திக் கொண்டு, கையில் சிவந்த நூலைக் காப்பாகக் கட்டியிருக்கிறாள் என்றும், முருகனுக்கு விருப்பமான துடி, தொண்டகம், சிறுபறை முதலான இசைக்கருவிகளில் குறிஞ்சிப் பண்ணை இசைத்து வேட்டுவ மகளிர் வழிபடுவர் என்பதை, ‘‘முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க!முருகு ஆற்றுப் படுத்த உருகெழு வியல்நகர்’’(திருமுருகு: 239-44) என்ற திருமுருகாற்றுப்படைத் தொடர்கள் பறை சாற்றுகின்றன. மேலும், தெய்வ மகளிர் எனும் சூரர மகளிர் குவளையோடு காந்தளை ஒன்றிணைத்துக் கட்டி மாலையாகச் சூட்டி முருகவேள் வழிபாட்டில் ஈடுபட்டதை, ‘‘மலரொடு காந்தள்.......பெருவரை அடுக்கம் பொற்பச் சூர்மகள்’’ (நற்:34) என்ற நற்றிணைத் தொடர் விளக்குகிறது.

வேட்டுவமகள் மேல் முருகன் ஆவேசித்து மக்கள் அறிவாற் காணப்படாத எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறக்கேட்டுக் அஞ்சி வழிபட்டனர் என்று திறனாய்வாளர் உரைப்பதன் மூலம் வேட்டுவ மகளிரின் வழிபாடு மரபு சார்ந்த பண்பாட்டோடு தொடர்புடையது என அறியலாம்.

தொகுப்புரை

திருமுருகாற்றுப்படையில் முருகன் தலைவனாக உள்ளார். அவரே வழிபடும் தெய்வமாகவும் இருக்கிறார். அங்கு வாழ்ந்தவர்கள் வேடுவர்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். வேடுவரின் வழிபாட்டில் வெறியாடுதல் இருந்தாலும் பலிகொடுப்பதையும் செய்கின்றனர். கூத்தும் இசையும் அவர்களின் வழிபாட்டில் குறிப்பிடத்தக்கதாக இருந்தது.

துணை நூல்கள்:

1. சிதம்பரனார் சாமி., பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், சாய்ராம் பதிப்பகம், 2018.
2. சித்ரா.சி., சங்க இலக்கிய ஆய்வு நெறிகள், பிரடாக் பிரிண்ட் அச்சகம் இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2009.
3. சோமசுந்தரனார் .பொ.வே.(உ.ஆ) திருமுருகாற்றுப்படை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், நவம்பர் 1969.
4. சோமசுந்தரனார் .பொ.வே.(உ.ஆ) மதுரைக்காஞ்சி,சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், நவம்பர் 1969.
5. பின்னத்தூர் நாராயணசாமி (உ.ஆ) நற்றிணை நானூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1952
6. புலியூர்க்கேசிகன் (உ.ஆ)., திருமுருகாற்றுப்படை, சாரதா பதிப்பகம், 2013.
7. புலியூர்க்கேசிகன் (உ.ஆ)., சிலப்பதிகாரம், பாரி நிலையம், 1958.

தொல்குடி வேட்டுவர்களின் இன்றைய நிலை

ஞா.பூமிகா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி,
அலைபேசி: 8754174006
boomikaseelan@gmail.com

முன்னுரை

தொல்குடி வேட்டை என்பது பண்டைய காலங்களில் மனித குலம் தன் உணவு மற்றும் உடை போன்ற தேவைகளுக்காகப் பின்பற்றிய ஒரு முக்கிய வாழ்க்கை முறையாகும். வேட்டுவர் நிலத்தில் வேட்டையாடியும் நீர் நிலைகளிலும்வேட்டையாடியும் வாழ்ந்துவந்தார்கள் என்பதற்கான காரணங்கள் அறியப்படுகின்றன. சங்க காலங்களில் மன்னராகவும் இருந்தனர் என்றும் தற்போதைய காலகட்டத்தில்அவர்களின் வாழ்க்கை முறையும் தற்போதைய நிலையில் அதற்கான கருத்தினையும் வழிநின்று நோக்கியுள்ளது இக்கட்டுரை.

தற்போதைய வாழ்வியல் நிலை

நாகரிகம் வளர்ந்து வரும் தொழில்நுட்பம் மேம்படுத்தும் தொல்கொடி வேட்டையின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது. பெரும்பாலான நாடுகளில் தொல்குடி வேட்டை கடுமையான சட்டக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகிறது. சில இனங்களில் அழிந்து வரும் நிலையில் இருப்பதால் அவற்றை வேட்டையாடுவது முற்றிலும் தடை செய்யப்படுவதாக உள்ளது.

பழங்குடிச் சமூகங்கள் இன்றும் வேட்டையாடுவதைத் தங்களது வாழ்வாதாரமாக நம்புகின்றனர். ஆனால் வாழ்வை விடச் சிதைவுக் காலநிலை மாற்றம் போன்ற காரணங்களால் அவர்கள் வாழ்க்கை முறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.அளவுக்கு அதிகமான வேட்டையாடுதலால் விலங்கினங்கள் அழிந்து வருகின்றன. இது உணவுச் சங்கிலியில் பெரும்

பாதிப்பை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் சமநிலையைக் குறைக்கிறது என்பதனை அறிய முடிகிறது.

பழங்குடிச் சமூகங்கள் இன்றும்வேட்டையைத் தங்களது வாழ்வாதாரமாக நம்புகின்றனர். ஆனால் வாழ்வுச்சிதைவு, காலநிலை மாற்றம் போன்றகாரணங்களால் அவர்கள் வாழ்வின் முறையைப் பெரிதும் பாதிப்பதாக உள்ளது.

வேள் வினை - போர் வேட்டுவினை

வேல் என்ற சொல்லின் அடிப்படையில் இருந்து வேட்டுவர் என்ற சொல் உருவானது. வேடன் (வேட்டை) என்ற சொல் உருவானது என கூறுவது தவறான கருத்துகள் ஆகும்.

> **“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்**
> **ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”[(2)] (தொல் அகம் 21)**

வேட்டுவர்களின் வாழ்வியல் நிலைகளையும் அவர்களைப் பற்றிய குறிப்புகளையும் இலக்கியங்களிலும் புராணங்களிலும் தெளிவான முறையில் அவர்களின் புகழ்ச்சியையும் வழங்கி இருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன.

சங்கு, பேரிகை ஊதிக்கொள்ளல்

அவினாசியிலுள்ள ஈஸ்வரன் கோயிலுக்கு உரிமையுடைய கொல்லன், தச்சன், தட்டான் ஆகியோர் நல்ல நிகழ்வுகளுக்கும் தீய நிகழ்வுகளுக்கும் பேரிகை கொட்டிக்கொள்ளவும் சங்கு ஊதிக்கொள்ளவும் அரசன் உரிமை அளித்துள்ளான். இதனை,

> **“இவர்கள் நன்மைத் தீமைக்கு**
> **பேரிகையும் புகுந்து கொட்டி சங்கும்**
> **ஊதக் கடவதாகவும் இவர்கள்மக்கள்**
> **மக்கள் சந்திராத்த வரைக்கும்”[(3)]**

என்ற வரிகள் மூலம் அறியமுடிகின்றன.பேரிகை என்பது தகவல் தெரிவிக்கப் பயன்படும் ஓர் இசைக்கருவியாகும். இந்த இசைக்கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அரசனுடைய கட்டளைச் செய்தி, திருமணச் செய்தி, ஊர்வலம் முதலிய தகவல்களை நகரில் இருப்பவர்களுக்கு அறிவிக்க இந்த இசைக் கருவியைப் பயன்படுத்தியிருக்கின்றனர். சங்கு என்பது

காற்று இசைக்கருவி. தமிழர் மற்றும் இந்திய இசையிலும் கோயில் வழிபாட்டின் போதும் பயன்படுகிறது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகள் அவர்களின் தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைச் சந்திரனும் சூரியனும் உள்ளவரை எனக் குறிப்பிட்டுள்ளனர். இக்கல்வெட்டில் அரசன் பெயர் குறிக்கப்பெறவில்லை. ஆனால், மன்னனிடம் உரிமை பெற்றபிறகே செயல்படக்கூடிய சூழலை நோக்கும்போது மக்கள் தாங்களாக எவற்றையும் செய்ய இயலாத சூழல் நிலவியுள்ளது.

கம்மாளர்களுக்கு உரிமை அளித்தல்

கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் அரசர், கம்மாளர்களுக்குச் சிலஉரிமைகளை வழங்கியுள்ளார். அவை, நன்மை, தீமைகளுக்கு இரட்டைச் சங்கு ஊதிக்கொள்ளவும் பேரிகை வைத்துக்கொள்ளவும் தங்கள் புறப்பட்டுச் செல்லும் இடங்களுக்குக் காலணி அணிந்து கொள்ளவும் வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடித்துக்கொள்ளவும் அரசர் உரிமை அளித்துள்ளதை,

"நன்மை தீமைக்கு இரட்டைச்
சங்கும் ஊதி
பேரிகை உள்ளிட்டனவும்
கொட்டிவித்து கொள்ளவும்
தாங்கள் புறப்படவேண்டும்
இடங்களுக்குப்
பாத ரசஷ கோத்துக்
கொள்ளவு தங்கள்
வீடுகளுக்குச் சாந்திட்டுக்"[4]

இச்சான்றுகள் வழி உணரமுடிகின்றது. இவற்றை நோக்கும் போது சாதாரணமாக வீடுகளுக்குச் சுண்ணாம்பு அடித்துக் கொள்வதற்குக் கூட ஆரம்ப காலகட்டத்தில் உரிமை பெறவேண்டிய சூழலும் கட்டாயமும் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

சிறப்பு உரிமைகள்

சில தேவரடியார்கள் மற்றும் அரசுக் கருவூலத்தில் பொருளை வைத்த பார்ப்பனச் சான்றோர்கள் மட்டுமே சிறப்பு உரிமைகளைப்

பெறுகின்றனர். வீரராசேந்திர சோழனின் பதினைந்தாவது ஆட்சியாண்டில் கி.பி.1222 - இல் வடபரிசார நாட்டைச் சேர்ந்த பார்ப்பார் சான்றோர்க்கு அரசன் கொடுத்த ஓலையாவது பார்ப்பார் சான்றோர்கள் அரசன் பண்டாரத்தில் (கருவூலம்) பொருள் வைத்ததன் காரணமாக, இவர்களுக்குச் சில உரிமைகளை அளித்துள்ளார். அவை,

- குதிரையின் மீது ஏறிக்கொள்ளும் உரிமை
- சீனக்குடை பிடித்துக் கொள்ளும் உரிமை
- சேகண்டிஅடித்துக்கொள்ளும்
- வீட்டிற்குச் சுண்ணாம்பு அடித்துக் கொள்ளும் உரிமை
- இரட்டைத் தலைக்கடை (வாயிற்படி) வைத்துக்கொள்ளும் உரிமை
- பச்சை நிறப் பட்டால் ஆன மேலாடை போர்த்துக் கொள்ளும் உரிமை
- படைகள் சூழ மன்னவன் உலா வரும்போது இவர்களும் அப்பொழுது பொன்னராம் பூண்டு உடன் வரும் உரிமை
- தங்கள் மக்களுக்குப் பொன்னாலான காறை என்னும் கையணி அணிவிக்கும் உரிமையைப் பெறல்
- திருமணத்திற்குக் கட்டணங்கட்டி ஏரி ஊர் சூழ யானை, பல்லக்கு போன்ற உயர்வகை ஊர்தியில் ஏறி ஊர்வலம் வரும் உரிமை
- திருமணத்திற்குக் கட்டணம் செலுத்தி ஊர்தியைப் பயன்படுத்தும் மரபு அக்கால கட்டத்திலிருந்துள்ளதை அறியமுடிகின்றது.

இவ்வுரிமைகளுக்கு எல்லாம்இவர்கள் சந்ததியனர் சந்திரனும் சூரியனும் உள்ளவரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசர் உரிமையளித்துள்ளார்.[5]

அரசனின் கருவூலத்தில் பொருள் வைக்கக்கூடிய அளவுக்குச் செல்வந்தராக இருக்கும் சூழலில் மட்டுமே இவ்வுரிமையைப் பெறக்கூடிய நிலையைப் பெறுகின்றனர் எனும்போது அக்காலகட்டத்தில் நிலவிய சூழலை உணரமுடிகின்றது.

கோயிலில்பணிபுரியஉரிமையளித்தல்

வீரராசேந்திரனின் ஐந்தாவது ஆட்சியாண்டான கி.பி.1212 - இல் குறுப்பு நாட்டிலுள்ள உகாப்பாடி ஊரார் இராசராசபுரத்துச் சிவப்பிராமணர்

ஆலங்காட்டுப் பாண்டி உடையானான சைவ சிகாமணிபரியன், விசைய மங்கலம் ஆத்ரேய கோத்திரம் ஆளவந்தி ஆகிய இருவருக்கும் அரசர் உரிமைகள் அளித்துள்ளார். அவை, இவ்வூரிலுள்ள தேவகோயிலுக்கும், பிள்ளையார் கோயிலுக்கும் உரிமையளித்து இவர்கள் பெறக்கூடிய உரிமைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளனர் என்பதை,

> **“இவிருவற்கும் கங்காணி செய்து குடுத்த**
> **பரிசாவது எங்களூர்த் தேவக்கோயிலும்**
> **பிள்ளையார் கோயிலும் மற்றும்(6)**
> **ஏழுவநமுனைப்பநவும் இவளுக்கு காணிசெய்து**
> **குடுத்தோமான்.”**

என்ற வரிகள் மூலம் அறியமுடிகின்றது.

உரிமைஅளித்தல்

வீரபாண்டியனின் பதினைந்தாவது ஆட்சியாண்டான கி.பி.1280 - இல் காங்கயநாட்டிலும் பூந்துறைநாட்டிலும் கம்பளர்களுக்குச் சில தடைகள் இருந்தன. அவற்றை நீக்கக் காரணமாக இருந்த அலுவலர் காளிங்கராயர் ஆவார். இதனை இக்கல்வெட்டின்கீழ் கையொப்ப மிட்டுள்ளதின்வழி அறியலாம். நீக்கப்பட்ட தடைகள் அறியலாம்.

> **“இரட்டைச் சங்கும்**
> **ஊதிப் போதிகை உள்ளிட்டன கட்டுவித்துக்**
> **கொள்ளவும் தாங்கள்**
> **புறப்பட வேண்டுமிடங்களுக்குப்**
> **பாதரச கோத்துக் கொள்ளவு வீடுகளுக்குச்சா**
> **சாந்திட்டுக் கொள்ளவும் சொன்னோம்”**(7)

தேவைப்படும் காலங்களில் இரட்டைச்சங்கு ஊதிக்கொள்ளுதல், போதிகை உட்பட்ட பிற கருவிகளையும் கொட்டுவித்துக் கொள்ளுதல், தாங்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் காலணிகளை அணிந்து கொள்ளுதல் வீடுகளுக்குச் சாந்திட்டு வைத்துக் கொள்ளுதல் போன்ற உரிமைகளை அரசர் அளித்துள்ளதை மேற்கண்ட கல்வெட்டு வரிகள் மூலம் அறிய முடிகின்றது. பன்னிரெண்டாம் நூற்றாண்டுவரை ஒரு குறிப்பிட்ட பிரிவினர் அடிப்படைத் தேவைகளைக்கூட அரசனிடம் உரிமைபெற்ற பிறகே செய்யக்கூடிய கட்டாயத்தில் இருந்துள்ளனர்.

முடிவுரை

வேட்டுவகுல மக்களின் வாழ்வாதாரங்களையும் அவர்களுக்கான உரிமைகளையும் சார்ந்த செய்திகளும், சங்ககாலஇலக்கியங்களிலும் வேட்டுவர்கள் சிறந்து விளங்கியதையும் தற்போதைய நிலைகளில் வேறுபட்டதற்கான முறைகளையும் கல்வெட்டுகள் பற்றிய சிறப்பான செய்திகளையும் இந்தக் கட்டுரைநின்று நோக்கியுள்ளது.

சான்றெண்விளக்கம்:

1. புறம் (அகம்): பாடல் 181
2. தொல்(அகம்): பாடல் 21
3. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1: பக்-24
4. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1: பக்-249
5. கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-1: பக்-6
6. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-3: பக் 17
7. ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-3: பக் - 90

சிலப்பதிகாரத்தில் வேடுவர்

முனைவர் அ.யோகேஸ்வரி,
கவுரவ விரிவுரையாளர்,
முதுகலை மற்றும் தமிழ் உயராய்வு மையம்,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர்
கலைக் கல்லூரி (த), மதுரை -2.
அலைப்பேசி : 99528 41364
yogeswari602@gmail.com

முன்னுரை

சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கு முதன்மை தருகிறது. குடிமக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு படைக்கப்பட்ட இக்காப்பியம் பாமரர் முதல் படித்தவர் வரை அறிந்து கொள்ளும் காப்பியமாக உள்ளது. சிலப்பதிகாரத்தில் ஆயர், வேட்டுவர் எனும் இனக்குழு மக்களின் பழமையை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிலப்பதிகாரத்தில் வேட்டுவர்

ஆயர் வேட்டுவர் ஆகுஉத் திணைப்பெயர்
ஆவயின் வருஉம் கிழவரும் உளரே (தொல்.அகம் :867)

என்ற நூற்பா ஆயர் வேட்டுவர் என்ற இனமக்களும், பழங்குடி மக்களும் தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்தனர் என்பதை உறுதி செய்கின்றது. தொல்காப்பியர் காலத்தில் மட்டுமின்றி,

குன்றக்குறவன் ஆர்ப்பின் எழிலி நுண்பல்
ஆழிதுளி பொழியு நாட (ஐங்கு : 25)

என்ற பாடலிலும் சான்றாக அமைகின்றது. ஆயமகள் இல்லத்தில் பாலும் பால்சோறும் மிகுதியாகக் காணப்பட்டன என்ற குறிப்பும் உள்ளது.

சிலப்பதிகாரத்தில் இனவரைவியல்

தொல்காப்பியர் காலத்திலேயே இனவரைவியல் போக்கு காணப் பட்டது. எனினும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இனவரையில் கூறுகளைப் பதிவு செய்துள்ளார்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைப் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என மூன்று காண்டங்களாகப் பிரித்துள்ளார். இக்காண்டங்களில் மதுரைக் காண்டத்தில் இடம்பெறும் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை என்பன வேட்டுவர், ஆயர் இன மக்களையும், வஞ்சிக் காண்டத்தில் உள்ள குன்றக்குரவை குறவர் இன மக்களையும் பேசுகின்றன.

சிலப்பதிகாரத்தில் சுற்றுச்சூழல்

அறிவுத்துறைகள் எவையும் தோன்றி வளராத தொல்பழங் காலத்தில் மக்கள் இயற்கைச்சூழல் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றைத் தமது அனுபவ எல்லையின் வழியில் புரிந்துகொள்ள முனைந்தனர். இவ்வாறான நம்பிக்கை வயப்பட்ட புரிதல்கள், பழங்கால மக்களின் சமயமாக வழிபாட்டுச் சடங்குகளாக அமைந்தன.

சூழலுக்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட தாவரம் அல்லது விலங்கினைக் குறிப்பிட்ட காலத்தில் உணவாக உட்கொள்ளுவது, விலக்குவது, இனவிருத்திக்காகச் சடங்கியற்றுதல், அவ்வுயிர்களைப் பாதுகாத்தல், இனக்குழுவின் அடையாளச் சின்னமாக ஆக்கிக் கொள்ளுதல் முதலிய கூறுகள் சுற்றுச்சூழலியலுடன் தொடர்புகொண்டு சிறப்பான அணுகு முறைகளை உருவாக்குகின்றன. இவ்வாறான சூழலியல் சார்ந்த அணுகுமுறைவழி தொல்காப்பியர் சுட்டும் சமயமும் கடவுளர்களும் அமைகின்றனர் எனலாம். இக்கருத்தின் அடிப்படையில்,

கொற்றவையின் பலி பீடத்தின் முன்னால், சிவந்த பொன் போன்ற பூக்களை, வேங்கை மரங்கள் சொரிந்தன. கொம்புகளில் பூத்துக் குலுங்கிய நல்ல பூக்களை இலவ மரங்கள் குவித்தன. வெள்ளைப் பொரி போன்ற பழம் பூக்களைப் புங்க மரங்கள் அங்கே உதிர்த்தன. பிறை நிலவு சூடியிருக்கும் சடைமுடி உடைய பெருமாட்டியின் கோயில் - பலிபீடத்தின் முன்னால் இப்படி மரங்கள் மலர்களைத் தூவின என்பதை,

செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்

கொம்பல் நல் இலவங்கள் குவிந்தன கொம்பல் நல்
இலவங்கள் குவிந்தன கொம்பல் நல் இலவங்கள் குவிந்தன

பொங்கர் வெண் பொரி சிந்தின புன்குஇளம்

திங்கள் வாழ் சடையாள் திருமுன்றிலே திங்கள்
வாழ் சடையாள் திருமுன்றிலே (கொற்றவை :2)

என்ற வரிகளின் வழியாக அறிய முடிகிறது.

வேட்டுவர் குடியிருப்பு முறை

வேட்டுவர்கள் தங்கள் ஊரினைச் சுற்றி முள் வேலிகளைச் சுற்றியிருப்பார்கள் என்பதையும், ஆயர்களின் குடியிருப்புகள் காட்டுப் பகுதிகளில் அமைந்திருந்ததையும், மலையில் தங்கள் குடியிருப்புகளை அமைத்திருந்தனர் என்பதையும் சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துரைக் கின்றது.

வாழ்க்கைப் பொருளாதாரம்

வேட்டுவச் சமுதாயப் பெண்கள் செல்வ வளத்துடன் தாங்கள் விருப்பம் போல் செலவுகளைச் செய்யும் பொருளாதாரச் சுதந்திரத்துடன் வாழ்ந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை, சிலப்பதிகார வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

வேடுவர்கள் பாலை வழியில் செல்லக் கூடியவர்களிடம் உள்ள பொருட்களைக் கொள்ளையடித்துக் கிடைக்கும் பொருட்களை ஆதாரமாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். ஆயர்கள் பசுக்களில் கரந்த பாலினைத் தயிராக்கி வெண்ணணெய், நெய் எடுத்து அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்து வாழ்ந்தனர்

கடை கயிறும் மத்தும் கொண்டு

இடை முதுமகள் வந்து தோன்றுமன்
இடை முதுமகள் வந்து தோன்றுமன் (ஆய். குரவை : 9-10)

வேட்டுவர்கள் மலையில் கிடைத்த தேன் கிழங்கு வேட்டையாடிக் கிடைத்த இறைச்சி போன்றவற்றின் மூலம் தங்களது வாழ்க்கையை மேற்கொண்டனர் என்ற செய்தியை சிலம்பின் மூலம் உணர முடிகிறது.

சமய நம்பிக்கைகள்

சிலப்பதிகார வேட்டுவ வரி கொற்றவை வழிபாட்டைச் சித்திரிக் கின்றது. இவ்வழிபாட்டில் மந்திரமும் கலந்து காணப்படுகின்றது.

"கலை அமர் செல்வி கடன் உணின் அல்லது,
சிலை அமர் வென்றி கொடுப்போள் அல்லள்"
(சிலம்பு வேட்டுவவரி - 16-17)

என்ற வரிகள் இதனை உறுதிசெய்கின்றன. குன்றக்குரவையில் தலைவியின் பெற்றோர் தன் மகளின் மெலிவிற்கு வேலன் வெறியாட்டு நிகழ்த்தினால் சரியாகும் என்று நம்புகின்றனர் என்ற செய்தியின் வழியாக அக்காலப் பழங்குடி இன மக்கள் சமயம் சார்ந்த நம்பிக்கையில் மிகுந்த ஈடுபாடு உடையவர்களாக இருந்துள்ளனர் என்பது வெளியாகின்றது.

சிலப்பதிகாரத்தில் கூத்து

இயல், இசை, நாடகம் என்பது முத்தமிழின் மூன்று பிரிவுகள். நாடகம் என்பதைக் கூத்து என்றும் கூறுவர். சங்க இலக்கியங்களில் கூத்துக் கலைவல்ல கூத்தர் குறிக்கப் பெறுகின்றனர். வேட்டுவர் சமூகத்தில் பலர் "கூத்தன்" என்று பெயர் பெற்றுள்ளனர். கூத்துக் கலையில் தேர்ந்த வேட்டுவர்கள் கொடை, வீரம், பக்தி எனும் முப்பெரும் நிலைகளிலும் சிறப்புற்று இருந்தனர் என்பதனை வேட்டுவ வரியிலும் ஆய்ச்சியர் குரவையிலும் கூறுவதை உற்று நோக்க முடிகிறது.

இசை மனிதனின் வாழ்வில் முக்கிய அங்கமாகத் திகழ்கின்றது. இசைக்கு மயங்காதவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை என்றே கூறலாம். இறைவனை ஆடியும் பாடியும் வழிபட்டுள்ளனர்.

"அசுரர் வாட, அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்து உள்படுமே"
- (சிலம்பு வேட்டுவவரி - 114-115)

என்ற வரிகள் கொற்றவை அசுரர்கள் தோற்றுப் போகவும், தேவர்கள் வெற்றி பெறவும், வெற்றிக் கூத்தினை ஆடினாள் என்பதை விளக்குகிறது.

முடிவுரை

சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை என்னும் காதைகளின் வழியாக வேடுவரின் இன வரைவியலை இளங்கோவடிகள் சுட்டுகிறார். வேடுவரின் குடியிருப்பு முறையையும், பொருளாதாரத்தையும் ஆய்ச்சியர் குரவையில் எடுத்துரைக்கிறார். மேலும் வேட்டுவர்களிடம் சமயம் சார்ந்த நம்பிக்கை வழிபாடுகள்

இருந்துள்ளன என்பதைக் கொற்றவை வழிபாட்டின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. அவர்களின் வழிபாட்டில் கூத்தும், இசையும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

துணைநூற் பட்டியல் :

1. தமிழண்ணல் - தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.
2. புலியூர்க் கேசிகன் - ஐங்குறுநூறு மூலமும் கருத்துரையும்.
3. ஞா.மாணிக்கவாசகன் - ஞா. 3. ஞா.மாணிக்கவாசகன் - மாணிக்கவாசகன் 3.ஞா.மாணிக்கவாசகன் - சிலப்பதிகாரம் தெளிவுரை.
4. முனைவர் யாழ் சு.சந்திரா - இலக்கியமும் சூழலியலும்.

குறிஞ்சிநில வேட்டுவ மக்களின் உணவுகள்

சி. ஜீவா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு,
தமிழாய்வுத் துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.
அலைபேசி: 9360339955

முன்னுரை

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதன்மையாக விளங்குவது உணவு ஆகும். உணவு இல்லையேல் உயிர்வாழ முடியாது. மனிதனின் ஆதாரமே உணவுதான். ஆதிமனிதனின் முதல் தேடலே உணவுத் தேடலாக தான் இருந்தது. காய்கனிகளையும் வேட்டையாடிய இறைச்சிகளையும் உணவாகப் பயன்படுத்தினான். பின்பு நாகரிகம் வளர அதற்கு ஏற்றார் போல் உணவினைப் பகுத்து உண்ணக் கற்றுக் கொண்டான். அதுவே பண்டையகால வேட்டுவ மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் நிலத்தின் தன்மையை ஒட்டி அமைந்திருந்தன.

நில அடிப்படையில் உணவுப்பெயர்கள்

காடுகளில் கிடைக்கக் கூடிய உணவினைக் குறிஞ்சிநில மக்கள் உண்டனர். குறிஞ்சிநில வேட்டுவர்கள் வேட்டையாடுவது மட்டுமின்றி தேன், தினை, கிழங்குகள், பழங்கள், ஊன்என இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருளை இயல்பாகவே உண்டு வாழ்ந்து வந்தார்கள்.

> **“தேனினார் கிழங்கினர் ஊனார் வட்டியர்”** (4)
>
> **- (மலைபடுகடாம்:பாடல் வரி:152)**

குறிஞ்சிநில மக்கள் இயற்கையாகவே நிலத்தில் விளையும் உணவுப் பொருள்களைப் பயன்படுத்தி அவற்றை உண்டு வந்தார்கள் என்று மலைபடுகடாம் சுட்டிக்காட்டுகின்றது.

வேட்டுவ மக்களின் இயற்கை உணவுகள்

மனிதர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் இயற்கை, மனிதர்களுக்குத் தருகின்ற அன்பளிப்பாகும். குறிஞ்சிநில வேட்டுவ மக்களின் பெரும்பான்மையான உணவு இயற்கை உணவாகவே அமைந்திருந்தது. குறிஞ்சித் திணையின் வேட்டுவ மக்களின் இயற்கை உணவுப் பொருள்களான மூங்கிலரிசிச்சோறு, உடும்பின் இறைச்சி,கடமான் இறைச்சி, தினை, பன்றியின் இறைச்சி, நெற்கள், தேன், கிழங்கு வகைகள் போன்றவற்றை உணவுப் பொருட்களாகஉண்டு வாழ்ந்தனர்.பழுத்த கனிந்த மிளகுகள் உதிர்ந்து பாறைகளின் மீது சிதறியும் நீண்ட சுனையில் பெரிய அடியினை உடைய மாமரத்திலிருந்து மாங்கனிகள் உதிர்தலும்பழங்கள் வெடித்துச் சிதறுதலும் குறிஞ்சி நிலத்தின் இயல்பானது என்பதைக் குறிஞ்சிப்பாட்டின் அடிகள் மூலம்,

பழமிளகு குக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புல்ளெறி பிரசமொடு ஈண்டி, பலவின்
நெகிழ்ந்துகு நறும்பழம் விளைந்த தேறல்[2]
- (குறிஞ் பா . பாடல் வரி 186-189)

எனக் குறிஞ்சிப் பாட்டின் அடிகள் விளக்கி நிற்கிறது.மேலும் கிழங்கை இறைச்சியுடன்உண்ட செய்தியை,

தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்லது துடற்றுநர் இல்லை[3]
- (மலைபடுகடாம் பாடல் வரி: 425 *ஶி* 426)

மலைபடுகடாம் பாடல் வழியாக மலைநாட்டைக் காவல்செய்த வீரர், இறைச்சியையும் கிழங்கையும் உண்டு வாழ்ந்தனர் என்று மலைபடுகடாம் விளக்குகிறது.

தினைச்சோறு

குறிஞ்சிநில மக்கள் தினையைப் பயிரிட்டும் அவற்றை விலங்கு களிடமிருந்து பாதுகாத்தும்வந்தனர். தினைச் சோற்றையும் அவற்றுடன் நெய்யில் இறைச்சியை வேகவைத்தும் மலைவாழ் வேட்டுவமக்கள் உணவாக உண்டனர் என்றும் தினைச்சோற்றுடன் ஊனைக்கலந்து

உண்ணுதல் சிறந்த சுவை உடைய உணவாகக் கருதப் பெற்றன . இவற்றை,

பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக் ணிறடிப் பொம்மல்பெறுகுவீர்.[4]
- (மலைபடுகடாம் பாடல் வரி: 168 - 169)

சங்க இலக்கியத்தில் 'இறடி'என்ற சொல்லும் தினையைக் குறிக்கப்பயன்பட்டது என மலைபடுகடாம் கூறுகின்றது தினையை இடித்து உண்டனர் என்ற செய்தியையும் இப்பாடல்மூலம் காண முடிகின்றது.

தேன்

தேனீக்கள் பூக்களில் உள்ள பூந்தேனே உறிஞ்சித்தன் தீனிப் பையிலிட்டுக்கொண்டு வருபவை மேலும் அவற்றைக் கூட்டில் சேகரித்து வைத்துக் கொள்ளும் இதனை வேட்டுவ மக்கள் உணவாகவும் மருந்தாகவும் அவற்றை எடுத்து பயன்படுத்தினர். 'பெருஞ்சினை தொகுத்த கொழுங்கன் இறால்' என்ற நற்றிணைப் பாடல் வரிகள் கூறுகின்றன.

மூங்கிலரிசிச் சோறு

குறிஞ்சிநில மக்களின் முக்கியமான ஒன்றான மூங்கிலரிசியை மலைவாழ் மக்கள் உணவாகப் பயன்படுத்தியும் அவற்றை உண்டும் வந்தனர். மூங்கிலரிசிச்சோற்றைப் பலவகையான ஊன்களோடு கலந்து உணவாக உண்டு வாழ்ந்தனர்.

இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து
வழையமை சாரல் கமழ்த் துழைஇ(5)
நறுமலர் அணிந்த...
- (மலைபடுகடாம்: பாடல் வரி:179 - 185)

குறிஞ்சிநில வேட்டுவ மக்கள் இயற்கை உணவுகளுடன் இறைச்சி, மூங்கிலரிசிச்சோறு ஆகியவற்றை உணவாக உண்டனர். விலங்குகளை வேட்டையாடி அவற்றைக் கொன்று உணவாக்கி உண்ணத் தொடங்கியதில் இருந்து உணவுப் பொருள்கள் பற்றிய இவர்களது அறிவு தெளிவுபட ஆரம்பித்தது.

வேட்டுவமகள் வேட்டையாடிக் கொண்டு வந்த உடும்பின் இறைச்சியையும் , கடமான் இறைச்சியும், பன்றியின் இறைச்சியை உண்டும், மூங்கில் குழாயிலிட்டு கள்ளை அருந்தியும் பிறகு அம்மகள் சமைத்தமூங்கிலரிசிச்சோற்றை உணவாக உண்டனர்.

மான் இறைச்சி

வேட்டுவர்கள் மரைமான்,கடமான் ஆகியவற்றின் இறைச்சியைச் சுட்டுப் பதப்படுத்தி உணவாக உண்டு வந்தனர். மன்னன் தான் வேட்டையாடிய மானின்இறைச்சியைப் புழுக்கி அதனை நெய் போன்ற மதுவுடன் வன்பரணருக்குக் கொடுத்தான் என்ற செய்தியை;

...வேட்டத்தில்
தானுயிர் செகுத்த மானிணப் புழக்கோ(6)
டானுருக் கன்ன வேரியை நல்கி.
- (புறநானூறு பாடல்-152: பாடல் வரி 25 *ம்* 27)

காய்ந்த ஊனையும், மூங்கில் நெல்லின் அரிசியையும், தயிரையும் சேர்த்து வெண்சோறு ஆக்கி அதைத் தேக்கின் இலையில் வைத்து உண்டதாக;

இரும்புலி துறந்த ஏற்றுமான் உணங்கல்
நெறிசொல் வம்பலர் உவந்தனர் ஆங்கண்
ஒலிகழை நெல்லின்... (7)
- (அகநா : பா எண்-107: பாடல்வரி 5 -10)

என்னும் அகநானூற்று வரிகள் மூலம் மான் இறைச்சியினையும் அவற்றை உண்ணப்பட்ட முறையினையும் குறிப்பிடுகிறது.

உடும்பின் இறைச்சி

ஊர்வனவற்றில் விரைவாக ஓடும் தன்மை உடையது உடும்பு. இதன் இறைச்சியைச் சுட்டும் புழுக்கியும் பொரித்தும் பயன்படுத்தி யுள்ளனர். இறைச்சி வகைகளுள் உடும்பின் இறைச்சியையும் பழந்தமிழ் மக்கள் சிறந்ததாகக் கருதினர். உடும்பின் கொழுப்பைத் தயிருடன் பெய்து புளிச்சோறு சமைப்பதுண்டு .

இவ்வகையான புளியஞ்சோற்றைச் சிறந்த உணவாக மதித்து வேட்டுவர் தம் விருந்தினருக்கு விருந்துண்ணப்படைப்பதும் உண்டு. இதனை,

...குறுந்தாள் உடும்பின்
விளக்கு நிணம்பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு(8)
வருவிருந் அயரும் விரும்பினள்.
- (புறநானூறு:பாடல்- 326: பா..வரி 10-12)

என்ற புறநானூறு இயம்புகிறது. மேலும்,

நாய்கடித்துக் கொண்டு வந்த அக்குமணி போன்ற முட்டைகளை உடைய உடும்பின் பொரியலைச் சோற்றுடன் கலந்து பாணர்கள் உண்ட செய்தினை,

.......செவ்வவீழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்(9)
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவீர்.
- (பெரும் படை: பக். 30 : பாடல்வரி : 131 - 133)

எனப் பெருமபாணாற்றுப்டையின் மூலம் சிவந்த நிறமுடைய மணி போன்ற முட்டைகளை உடைய உடும்பின் பொரியலைச் சோற்றுடன் கலந்து உண்டதாகஇப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

முடிவுரை

குறிஞ்சிநில மக்கள் இயற்கையில் கிடைக்கின்ற உணவுகளைச் சமைக்காமலும் வேட்டையில் கிடைத்த மான் இறைச்சி, பன்றி இறைச்சி, உடும்பின் இறைச்சி போன்ற மாமிச உணவுகளைச் சமைத்தும் உண்டுள்ளனர். அதேபோல் வேட்டையாடிய உணவுகளையும் பங்கிட்டு உண்டனர். குறிஞ்சிநில மக்களின் உணவு முறையினையும், உணவு உற்பத்தி திறனையும் வரையறுப்பதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

சான்றெண் விளக்கம்

1. கதிர் முருகு மலைபடுகடாம் பக் 34 - பாடல் வரி 152
2. கதிர் முருகு குறிஞ்சிப்பாட்டு பக் 42 பாடல் வரி:186 - 189
3. கதிர் முருகு மலைபடுகடாம் -பக்-59 பாடல் வரி: 425-426
4. மேலது, பக்கம்: பக் 35 பாடல் வரி : 168 169

5. மேலது, பக்கம்: பக் 36 பாடல் வரி : 179- 185

6. புறநானூறு பாடல் எண் 152 - பாடல் வரி: 25-27

7. வ.த.இராமசுப்பிரமணியம்: அகநானூறு, பாடல் எண் 107 - பாடல் வரி: 5-10

8. புறநானூறு பாடல் எண் 326 - பாடல் வரி: 10-12 கதிர் முருகு பெரும்பாணாற்றுப்படை பக்கம் எண்.30 பாடல் வரி: 131 - 133

குறவஞ்சியும் வேட்டுவர் வாழ்வும்

முனைவர் ப.ஜெயசெல்வி,
உதவிப் பேராசிரியர்,
எத்திராஜ் மகளிர் கல்லூரி,
சென்னை -600 008
9940137282
jayaselviprakash@gmail.com

முன்னுரை

மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தான்; மலைகளிலும் காடுகளிலும் தங்கினான்; தன் உணவிற்காக விலங்குகளை வேட்டை யாடினான்; கிழங்குகளையும் கனிகளையும் பறித்து உண்டான். விலங்குகளிடமிருந்து தன்னை காத்துக் கொள்ள ஆயுதங்களைப் பயன்படுத்தினான். குறவஞ்சி 96வகை சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. குற்றாலக் குறவஞ்சி, தமிழரசிக் குறிஞ்சி என்ற இரு நூல்களில் வேட்டுவர்கள் எவ்வாறு வாழ்ந்து வந்தனர்என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வேட்டுவ இனத்தவர்

வேட்டுவர்கள் குறிஞ்சி நிலத்தை மையமாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். இவர்களைப் பற்றி அக்காலத்திலேயே ‘‘கட்டினும் கழங்கினும் வெறி’’ (தொல்.கள.24) என்ற நூற்பாவழி குறவஞ்சி இலக்கியத்தைப் பற்றி அறிய முடிகிறது. வேட்டுவர்கள் தேன் எடுத்தலையும் வேட்டையாடுதலையும் கிழங்கு எடுத்ததலையும், தங்கள் தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். படிக்கவும், நடிக்கவும் சிறந்த நூலாகக் குறவஞ்சி இலக்கியம் திகழ்கிறது. இவர்கள் தங்களுடைய தாலிக்குப் பதிலாக பாசிமணி மாலை போடும் வழக்கமும் இருந்ததாக அறிய முடிகிறது.வேட்டுவமகள் பிறை போன்ற நெற்றியினை உடையவளாய் அதில் திருநீறு பூசிக்கொண்டு, கண்ணில் மைவைத்து கருமை நிறமுடியினைச்சீவி, குன்றிமணி, பாசிமணி

அணிந்து கொண்டது மட்டுமல்லாமல் நித்தில மாலையும் அணிந்து கொண்டாள் எனத் தமிழரசிக் குறவஞ்சி கூறியுள்ளது. இதே கருத்தினைக் குற்றாலக் குறவஞ்சியும் கூறுகிறது. இதனை,

தேவர்கள் தம்பிரான் திருவருள் பாடி

இலகு நீறணிந்து திலகமும் எழுதிக்
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து (திருக்.குற்றா:18-20)

என்ற பாடல் அடிகளின் மூலம் அறியமுடிகிறது. இடையிலே கூடை, வலக்கையிலே மாத்திரைக் கோல், சொல்லுக்குச் சொல் பாசாங்குமாக இருந்தாள். உருவம் அரம்பையோ, தேவ மாதர்களின் அழகு அடங்குமாறு அழகு பெற்றவளாக உள்ளாள். ஆண்களுக்கு வலது கையும், பெண்களுக்கு இடது கையும் கைரேகையால் நடக்க விருப்பதையும் இமைப்பொழுதில் உரைப்பவளாக வஞ்சி காணப்பட்டாள். இதனை

வலக்கையாண் களுக்கு மாதர்க் கிடக்கையின்
இரேகையி னவகோ ளிருப்பிடங் கண்டு
கூறுதல் வல்ல ..... (தமிழரசி.குற.60)

பாடல் எடுத்துரைக்கிறது. இன்றும், அனைவரும்பாசிமணி மாலை, பவள மணிமாலை போன்றவற்றை நகரங்களில் அதிகம் அணிவதைக் காணமுடிகிறது. குன்றிமணிமாலை அவள் கொங்கையில் அசைந்து கிடந்தது. மூக்கில் முத்துப் பல்லாக்கு காணப்பட்டது. தோடி, முரளி, வராளி பயிரவி போன்ற ராகத்தில் வஞ்சி பாடினாள். பெரிய மலையினிலே மயில்கள் ஆடுவதைப் போல ஆடியவளாக வந்தாள். கன்னங் கரேலென கூந்தலை உடையவளாக இருந்தாள். இதனை,

முன்னம் கிரிவளைத்த முக்கணர்குற்றாலவெற்பில்
கன்னங் கரியகுழற் காமவஞ்சி தன்மார்பில்
பொன்னின் குடம் போல புடைத் தெழுந்த பாரமுலை
இன்னும் பருத்தால் இடைப் பொறுக்க மாட்டாதே
- (திருக்.குற்றா:5)

பாடல் எடுத்துரைக்கிறது. அழகு மிகுந்தவளாக வஞ்சி காணப்பட்டாள் என்பதைக் குற்றாலக் குறவஞ்சியும், தமிழரசிக் குறவஞ்சியும் வேட்டுவ மகளுடைய அழகை வருணித்துள்ளது.

மக்கள் நான்கு வகையான நிலங்களிலும் சூழ்நிலைக்குத் தக்க தொழில்களை அமைத்துக் கொண்டனர். ஒவ்வொரு நிலத்தில் இருப்பவர்களும் உற்பத்திப் பொருள்களைப் பண்டமாற்றுமுறை செய்து கொண்டனர். நீர் வசதியைப் பொருத்து வீடுகள் அமைத்தனர். வளமுடைய பூமிக்குள்ளே முதன்மை பெற்று விளங்குவதும்,சகல தேவர்களும் அன்பு உடையவர்களாக விளங்கும் தெய்வீக நாடாகவும் திகழ்கிறது. சிவத் துரோகம் தீமை அறவே நீங்கிய நாடு, இளந்தென்றல் உலவுகின்ற நாடாக எங்கள் நாடு உள்ளது. இங்கு மும்மாரி மழையும், மூன்று போக விளைச்சலும் குறும்பலா மரத்தினை உடைய நாடு எங்கும் நித்யம், நைமித்திகம், காமியம் ஆகிய மூன்று வகைச் சிறப்புகளும் பிறப்பு, வாழ்வு, இறப்பு எனும் மூன்று நிலைகளிலும் நன்மைகளைக் குறிக்கும் சிவநாடு. அரி, அயன், அரன் என மூன்று உருவமாக இருக்கின்ற குற்றாலநாதரின் நாடே எங்கள்நாடு எனக் கூறி நாட்டுச் செழுமையினை,

நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்
தூங்கக் காண்பது பூந்தயிர் மத்து
சுழலக் காண்பது பூந்தயிர் மத்து (திருக்.குற்றா:8)

எனக் கூறியுள்ளாள்.இரண்டு குறவஞ்சி நூல்களிலும் பாடல் வரி ஒத்து ஒரே மாதிரியாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

பண்டைய வேட்டைச் சமுதாயத்தில் காய்,கனி வேர்,கிழங்கு இவை முதலியன உணவாகக் கொள்ளப்பட்டன. குறிஞ்சி நிலத்தில் உணவு சேகரித்து வாழ்வோருக்கு வள்ளிக்கிழங்கு உணவாக அமைந்தது. உணவுக்கு ஆதாரமான வள்ளிக்கிழங்கு பின்னாளில் வள்ளி தெய்வமாகக் வேட்டுவரால் கொண்டாடப்பட்டது.ஏராளமாகக் கிடைத்த வள்ளிக்கிழங்கை உணவு சேகரிப்புச் செழிப்பிற்கு அறிகுறியாக அதனையே குலக்குறியாகக் கொண்டிருக்கலாம். காலப்போக்கில் வள்ளிக்கிழங்கு வள்ளி தெய்வமாக மாற்றமடைந்தது (சுப்பிரமணியன் 1987: 55).

சிங்கனின் அன்புள்ளம்

சிங்கன் நீண்ட நேரமாகச் சிங்கி வராததால் துன்பமுற்றான். அதனால் இறைவனிடம் வேண்டுகிறான். அவள் தனக்குக்கிடைத்தால்

எல்லாவற்றையும் இறைவனுக்குத் தருவேன் என இறைவனிடம் கூறுவதை,

வாடைமருந்துப் பொடியும் அம்மியூர்
மரப்பாவை பின்தொடர மாயப்பொடியும்
கூடியிருக்க மருந்தும் இருபொழுதும்
கூடியிருப்பார்கிளைக்குறளி வித்தை
கண்கட்டு வித்தைகளும் காட்டித் தருவேன்

........,..,...

வெற்பிலுறை சிங்கிதனைக் காட்டாய ஐயே!

- (திருக்.குற்றா:36)

இறைவா எனக்குச் சிங்கியைக் காட்டுவாயாக என இறைவனிடம் வேண்டுவதைக் காணமுடிகிறது. இதன்மூலம் சிங்கன், சிங்கிமீது கொண்ட அன்பை அறிய முடிகிறது. இன்றும் பொருள் ஏதாவது தொலைந்து விட்டால் காணிக்கை செலுத்துவதாக வேண்டுவதைக் காண முடிகிறது.

வேட்டுவர்களின் திருமண வாழ்வு

வேட்டுவர் இனத்தில் மணக்கும் உரிமை தாய்மாமனுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவர்கள் தங்கள் குலத்திற்கு உள்ளேயே திருமணம் செய்துக் கொள்கின்றனர். இதனை,

ஒரு குலத்தில் பெண்கள் கொடோம் ஒரு குலத்திற்கொள்ளோம்
உறவுபிடித் தாலும்விடோம் குறவர் குலம் நாங்கள்
வெருவிவருந் தினைப் புனத்திற் பெருமிருகம் விலக்கி
வேங்கையாய் வெயில் மறைத்த பங்குதனை குறித்தே
அருளிலஞ்சி வேலர்தமக்கு ஒருபெண்ணைக் கொடுத்தோம்

- (திருக்.குற்றா.24)

என்ற பாடல்வழி அறியமுடிகிறது. வேலனுக்குப் பெண் கொடுத்தோம். எங்களிடம் உள்ள மலைகள் எல்லாவற்றையும் பெண் கட்டியவனுக்குச் சீதனமாகக் கொடுத்தோம். சூரியன், நிலவு என வலம்வரும் மலையைத் துருவனுக்குக் கொடுத்தும் எனக் கூறுவதின் மூலம் பெண் பிடித்து விட்டால் மாப்பிள்ளைக்காகச்சீதனம் கொடுக்கும் வழக்கத்தை வேடர்குல இனத்தவரிடம் காணமுடிகிறது.பெண் பிடித்து விட்டால் பூ வைத்தல் என்ற சடங்கை வேடர்கள் இன்றும் நடத்துகின்றனர்.உறவுக்குள்ளேயே

திருமணம் செய்தல் இன்றும் சில குலங்களில் சொத்து பிரியக்கூடாது என்பதற்காக உறவு உள்ளேயே திருமணம் செய்வதைக் காணமுடிகிறது. ஒரு முறை பெண்ணையீ பிடித்து இருந்தால் அவர்கள் உறவை எப்போதும் பிரித்துக் கொள்ளாத குணம் உடையவர்களாக வேடர்குல இனத்தவர் இருந்தனர்.

முடிவுரை

குறவஞ்சி இலக்கியம் பொருள்,சந்தம்,உவமை ஆகியவற்றால் படிக்கவும் நடிக்கவும் சிறப்புப் பெற்ற இலக்கியமாகத் திகழ்கிறது. குறிஞ்சிநில வளம், மலை வளம், தொழில் போன்றவற்றை அறிந்து கொள்ள இந்நூல் உறுதுணையாக அமைந்துள்ளது.

துணைநூற் பட்டியல்:

1. சுப்பிரமணியன்ச.வே., தொல்காப்பியம் தெளிவுரை மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,சென்னை- 21, 1998
2. புலியூர்கேசிகன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், திருக்குற்றாலக் குறவஞ்சி மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை -14, 2009.

ஐங்குறு நூற்றுக்குறிஞ்சித் திணையில் வேட்டுவர் வாழ்வியல்

ஆ. பாண்டிச் செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)மதுரை -02.
அலைபேசி: 8489278588
apandiselvi95@gmail.com

முன்னுரை

சங்க இலக்கியத்தில் ஐந்திணைகளுள் முதலாவதாக இடம் பெறுவது குறிஞ்சித் திணையாகும். மலையும் மலை சார்ந்த பகுதியில் வசிக்கக் கூடியவர்களை வேட்டுவர், கானவர், கொடிச்சியர் என்றும் அழைத்தனர். அவ்வகையில் ஐங்குறுநூற்றின் குறிஞ்சித்திணையில் வேட்டுவர் வாழ்வியலைப் பற்றி இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

ஐங்குறுநூற்றில் வேட்டுவர் சொல்லாட்சி

ஐங்குறுநூற்றில் குறிஞ்சி நிலமானது உயர்ந்த மலைகளும், மரங்களும், அருவியும், சுனையும், நீர்வளமும் நிறைந்ததாகக் காணப்படுகிறது. அந்நிலத்தில் வாழும் வேட்டுவர்களை வேட்டுவர், கானவர், கொடிச்சியர் எனப் பல சொல்லாட்சிகளில் குறிப்பிடுவர்.

வேட்டுவர்களின் வாழிடம்

வேட்டுவர் மலைமுகடுகளிலும், சரிவுகளிலும், மலையைச் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்தனர். இலக்கியத்தில் வேட்டுவர் வாழிடங்களாக இல், மனை, நகர், குன்றில், முற்றம், குரம்பை, மாடம், வகைப்புக் குழல் என்று பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகின்றன எனத் திறனாய்வாளர் கூறுவது எண்ணத்தக்கதாகும்.

இக்கருத்தோடு ஐங்குறுநூற்றின் குறிஞ்சித்திணையில் வேட்டுவர் குன்றத்தில் வேயப்பட்ட - குடிசையைப் புனைந்தனர் என்ற செய்தி,

"குன்றக் குறவர் புல்வேய் குரம்பை" (ஐங்.252)

எனும் பாடலின் வழி புலனாகிறது.

வேட்டுவர்களின் உணவு

வேட்டுவர்கள் ஜவன நெல்லும், திணையும், வரகும், மூங்கிலரிசியும் கிழங்கு வகைகளும்,பழுங்களும், தேன் இறைச்சி போன்றவற்றை உணவாக உண்டனர் என்பதை,

"தேன்மயங்கு பாலினும் இனிய எவர்நாட்டு
நீர்வலம் உவலைக் கூவற் கீழ்
மானுண் பெஞ்சிய கலிழி நீரே!"(ஐங்.203)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் வேட்டுவர்கள்தேன் கலந்த பாலினைப் பருகி வந்தனர்.

கிழங்குகளை உண்ணும் வேட்டுவர் நெய்யில் உழுந்து மாவைப் பிசைந்துஉண்டனர் என்பதை,

"கிழங்ககழ் கேழல்" (ஐங்.270)

"நெய்யொடு மயக்கிய உழுந்து" (ஐங்.211)

என்ற தொடர்களின்வழி வேட்டுவர்களின் உணவு சுட்டப்படுகிறது.

இக்கருத்திற்கு இணங்க, நற்றிணையில் வேட்டுவர்களின் உணவாக,

"நெய்களி குறும்பூழ் காயமாக
ஆர்பதம் பெறுக" (நற்: 389)

என்ற பாடலின் மூலம் நெய்யில் பொரித்த குறும்பூழின் இறைச்சியைச் சோற்றுடன் சேர்த்துண்டனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

வேட்டுவர்களின் தொழில்

குறிஞ்சித்திணையில் வாழும் வேட்டுவர்கள் மலையில் கிடைத்த பழுங்களையும், காய்களையும் உண்போராக இருந்தனர். நீராதாரங் களுக்கு அருகில் அமைக்கப்பட்ட இடங்களில் பயிர் செய்யும் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்கள் சோளம், நெல், தினை போன்ற தானியங்களைப் பயிரிட்டனர். பயிரிடுவதற்கு நிலத்தை உழுது பண்படுத்தினர். காடுகளை அழித்துப் புதிய தினைப்பயிர்களை

உருவாக்கினர். காடு திருத்தி பயிர் செய்வதை,

"இன்றைய நவீன சமநிலை வேளாண்மை தொடக்கத்தில் காட்டெரிப்பு வேளாண் முறையாக இருந்து வளர்ச்சி பெற்றது. இவ்வகை வேளாண்மையில் காட்டுப்பகுதியில் வாழும் பழங்குடியினர் அவர்களின் குடியிருப்புப் பகுதயில் ஓர் இடத்தைத் தேர்வுசெய்து அங்குள்ள காட்டினை அழித்து வெட்டிய மரங்களைத் தீயிட்டுக் கொளுத்துவர். இவ்வாறு தயார் செய்யப்படும் நிலத்தில் மூன்று, ஐந்தாண்டுகள் பயிரிடுவர். அதன்பின், வேறொரு புதிய இடத்தைத் தேர்வுசெய்து மீண்டும் பழையபடி காட்டை அழித்து, அதனை எரித்து அங்கு பயிரிடுவர்" எனக் குறிப்பிடுகிறார். (பக்தவச்சல பாரதி.சீ., தமிழகப் பழங்குடிகள்; ப.23)

ஐங்குறுநூற்றின் வெறிப்பத்தில், "புன்புலம் வித்திய புனவர் புணர்த்தி" (ஐங்.246:3) என்ற தொடரின் வழி மலைநிலத்தின், புன்செய்க் கொல்லையில் திணைப்பயிரை விதைத்த குறவர் எனும் தொழிலைச் சுட்டுகிறது.

குறிஞ்சித்திணையில் உயிரினங்கள்

குறிஞ்சித்திணையில் வாழும் வேட்டுவர்களுக்கு இக்கேழல்கள் ஒருவகையில் உதவியாகவும் பல வழிகளில் பகையாகவும் இருந்துள்ளன. திணைப்புனங்களில் திணை விதைப்பதற்குமுன் இக்கேழல் அப்புனத்தில் புகுந்து காந்தள் முதலியவற்றின் கிழங்குகளை அகழ்ந்து உண்ணும், அதனால் தினைப்புனம் முழுவதும் உழுததுபோல் காணப்படும். அதனால் கானவர்கள் உழாமலேயே தினை விதைத்துப் பயிரிடுவர். திணையும் அவ்வழியே நன்கு வளர்ந்து விளைந்து சிறக்கும் என்பதை ஐங்குறுநூற்றின் கேழல் பத்தில்,

"கிழங்ககழ் கேழல் உழுத சிலம்பில்
தலைவிளை கானவர் கொய்தனர்" (ஐங்.270)

என்ற பாடலின் மூலம் கேழல் தினைப் புனத்தில் கிழங்கினை அகழ்ந்து உண்பது வெளிப்படுகிறது. இதனையே, புறநானூற்றுப் பாடலும்,

"கொழுங்கிழங்கு மிளிரக் கிண்டிக்கிளையொடு
கருங்கக் கேழல் உழுதபூமி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாது வித்திய சிறுதினை" (புறம்.1108)

இக்கருத்தோடு ஒத்து அமைவது பொருத்தமுடையதாகும்.

வேட்டுவர் வழிபாடு

ஐங்குறுநூற்றின் குறிஞ்சித்திணையில் குன்றக் குறவர்கள் வழிபாடுகளை வெறியாடல், வெறியயர்தல் என்ற பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகவும் வேட்டுவர் வழிபடும் குல தெய்வமாகவும் முருகன் என்பர். குன்றக் குறவன் தெய்வத்தைத் தேன் சொரிந்தும் பூவிட்டு வழிபட்டனர். வேட்டுவர் குலத்தில் திருமணம், நல்ல நிகழ்வு, மழை வேண்டியும் வழிபாடு செய்யப்படுவர் அந்நாளில் தெய்வமான முருகனையும், முன்னோர்களையும் வழிபடுவது அவர்களின் வழக்கமாக இருந்தது என்பதை,

“மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுட் குலமுதல்வழுத்தி” (ஐங்: 259)

என்ற பாடலின்வழி வேட்டுவர் வழிபாடு எனச் சுட்டுகிறார்.

நீர் வளம்

கேழற்பன்றி நீரைத் தன் பெண் பன்றியோடு கூடிச் சென்று அருந்துவதை,

“இளம்பிளை யன்ன கோட்ட கேழல்
களங்கனி யன்ன பெண்பாற் புணரும்
அயந்திகழ் சிலம்ப கண்டிகும்” (ஐங்:264)

என்ற பாடலின் மூலம் வேட்டுவரும் கூடி அன்புசெய்து வாழ்ந்தனர் என்பதை

“அருவி ஆர்க்கும் அயந்திகழ் சிலம்பு” (நற்:365)

எனும் பாடலின் வரிகளில் அமையும் கருத்தானது ஒத்து அமைந்துள்ளது.

தொகுப்புரை

1. ஐங்குறுநூற்றில் வேட்டுவர் கானவர், கொடிச்சியர், வேட்டுவர் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர்.
2. குறிஞ்சித்திணையில் பதினேழு பாடல்களில் வேட்டுவர் பற்றிய செய்திகள் உள்ளன.

3. அவர்களின் உணவில் ஐவன நெல்லும், தேனும், கிழங்கும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.

4. குறவர்களின் வழிபாட்டில், வெறியாடல், வெறியயர்தலில் மழைவேண்டி வழிபடுவதைக் காணலாம்.

துணை நூல்கள்:

1. துரைசாமிப் பிள்ளை ஔவை.சு. (உ.ஆ), ஐங்குறுநூறு மூலமும் உரையும், பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு: 2017.

2. துரைசாமிப் பிள்ளை ஔவை.சு., (உ.ஆ) புறநானூறு மூலமும் உரையும், சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை, முதற் பதிப்பு: 1947. சோமசுந்தரனார் .பொ.வே.(உ.ஆ) திருமுருகாற்றுப்படை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், நவம்பர் 1969.

3. பக்தவச்சல பாரதி. சீ., தமிழகப் பழங்குடிகள்., அடையாளம் பதிப்பகம்., முதற்பதிப்பு: 2018.

4. பின்னத்தூர் நாராயணசாமி (உ.ஆ) நற்றிணை நானூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1952

5. வித்தியானந்தம். சு., தமிழர் சால்பு, பாரி புத்தகப் பண்ணை, முதற்பதிப்பு: 1971.